ஸ்ரீ மஹாபாரதம்.

விராடபர்வம்.

கும்பகோணம், கோபாலவிலாஸ புஸ்தகசாலைத்தலைவர்
மத்வசாஸ்த்ரஸம்பூர்ணர்,
ப்ரம்மஸ்ரீ - அ. வேங்கடேசாசார்யர்
அவர்களால்
மொழிபெயர்க்கப்பெற்று,
திருப்பனந்தாளாதீனம்
மஹாகனம்பொருந்திய
ஸ்ரீலஸ்ரீ - காசிவாசி,
சோமசுந்தரத்தம்பிரான் அவர்கள்
உதவியைக்கொண்டு,
கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்
ம. வீ. இராமாநுஜாசாரியரால்
பதிப்பிக்கப்பெற்றது.

159

விலை ரூபா 2-0-0; தபால்சார்ஜ் ரூபா 0-4-0.

Madras:
PRINTED AT THE VAIJAYANTI PRESS,
32, MOUNT ROAD.

1912.

(All Rights Reserved.)

ஸ்ரீ:

முகவுரை.

பலஅரியவிஷயங்களைத் தன்னிடத்துக்கொண்டிருக்கிற இந்தப் பெருநூலை வடமொழிக்கு ஸரியாக மொழிபெயர்த்து வெளியிடுவதி லுள்ளச்ரமம், அறிவுடையோர்களுக்குத் தெரிந்ததேயாதலால், நான் இங்கு அதனை அதிகமாக விவரிக்கவில்லை. இவ்விஷயத்தில் எனக் குண்டானகவலை எல்லையில்லாமலிருந்தது. அது ஸ்ரீ கண்ணபிரா னுடையதிருவருளால் ஒருவாறுநீங்கித் தைர்யம்அடைகிறேனென் பதைக்கேட்கிறஆஸ்திகஸஜ்ஜனர்கள் த்ருப்தியடைவார்கள். மொழி பெயர்ப்பு அனேகமாகப்பூர்த்தியாயிற்றென்றே சொல்லலாம். உலகத் தில்வழங்கும்பலபாஷைகளிலுமுள்ள நூல்களுள்ளும் இவ்வளவுபெரி யதும் அரியதும் ஹிந்துமதஸம்பந்தமான எல்லாவிஷயங்களையும் தெரிவிப்பதுமான நூல்வேறில்லை என்பது எழுத்தாலும் சொல்லா லும் எல்லாரும் ஒப்புக்கொண்டது. எதிர்பாராத பல அஸௌகர்யங் களால் சிலசிலஸமயங்களில் ஸஞ்சிகைகள் காலத்தில் வெளிவாராமற் போயின. பெரியோர்கள், கார்யத்தின்ச்ரமத்தையும் பெருமையை யும்உத்தேசித்து க்ஷமிப்பார்களென்றுநம்புகிறேன். இனி ஸஞ்சிகை களைக் காலத்தில்வெளியிடவேண்டுமென்று மிக முயற்சிசெய்துவரு கிறேன்.

இந்தமஹாபாரதம் பூர்த்தியானபிறகு, விரிவான முகவுரையொ ன்று எழுதப்பெறுமாகையால், இந்தப்பெருங்கார்யத்துக்குவேண்டிய உதவிகளைச்செய்து ஆதரித்துவருகிறவித்வான்கள் ப்ரபுக்கள்முதலிய வர்கள் பெயர்களைப் பின்பு வெளியிடுவேன். அவச்யம் தெரிவிக்க வேண்டிய சிலவிஷயங்களைமாத்ரம் இங்கே தெரிவிக்கிறேன்.

தேசாபிமானமும் பாஷாபிமானமுமுள்ளதனவான்கள் கையொப் பம்செய்து உத்தமோத்தமமான இந்தஸத்கார்யத்தில் என்னை உத்

ஸாஹப்படுத்திவருகிறதற்கு நான் அவர்கள்விஷயத்தில் மிக்க நன்றி யறிவுள்ளவனுகவிருக்கிறேன்.

திருப்பனந்தாள்ஆதீனம், மஹாகனம்பொருந்திய ஸ்ரீலஸ்ரீ, காசிவாசி, சோமசுந்தரத்தம்பிரானவர்கள், நான், இதனைத் தொடங்கியதுமுதல், அடிக்கடி விசாரித்து ஆதரித்து, எனக்கு மனத்தளர்ச்சியுண்டாகாமல் ஊக்கமளித்துவருவதோடு பாரதத்துள் *ஸாரமானவிராடபர்வத்தை விரைவில்வெளியிடவேண்டுமென்று வற்புறுத்திச்சொல்லி, அதற்குவேண்டும் பொருளுதவியும்செய்தார்கள். அவர்கள்செய்தஇப்பெருநன்றியை நான் எந்நாளும் மறவேன்.

"செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது."

என்றபடி அவர்கள்செய்யும்பேருதவிக்கு யான்செய்யும் கைம்மாறு யாதுளது?

இந்நூலின்பெருமையையும் எனதுசிறுமையையும்பார்த்து, என்னவிதமானகுற்றங்களிருப்பினும் க்ஷமித்து, தெரிவிக்கவேண்டியவைகளைத்தெரிவித்து, என்னைத்திருத்தி ஆதரித்து, இக்கார்யம்பூர்த்தியாகும்படி செய்யவேண்டுமென்று பெரியோர்களை நிரம்ப வேண்டுகிறேன்.

இடையூறுசிறிதுமின்றி, இஃது இனிதுநிறைவேறும்படி செய்வித்தருளவேண்டுமென்று எல்லாம்வல்ல ஸர்வேச்வரனை ப்ரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்,

ம. வீ. இராமானுஜாசார்யன்.

* 'விராடோத்யோகஸாரவாஂ' என்பது பாரதத்திலுள்ளவாக்யம்.

ஸ்ரீ:

ஸ்ரீ மஹாபாரதம்.

விராடபர்வம்.

விஷயஸூசிகை.

பாண்டவப்ரவேசபர்வம்.

அத்யாயம்.		பக்கம்.
1	கடவுள்வணக்கம்	1
	ஜனமேஜயர் பாண்டவர்களுடைய அஜ்ஞாதவாஸத்தை வினவியது	1
	யுதிஷ்டிரர் அரணிமுதலியவற்றை ப்ராம்மணருக்குக் கொடுத்தது	2
	தௌம்யர் பாண்டவர்களுக்குத் தேறுதல்சொல்லியது ...	3- 4
	யுதிஷ்டிரர், தம்முடனிருந்த தபஸ்விகளிடம் அஜ்ஞாதவாஸத்துக்கு அனுமதிகேட்டது	5
2	பாண்டவர்கள் அஜ்ஞாதவாஸம்செய்யும் இடத்தைநிச்சயித்தது.	6- 7
	தர்மபுத்ரர், தாம் அஜ்ஞாதவாஸம்செய்யும்விதத்தை ப்ரதிஜ்ஞைசெய்தது	7- 8
3	பீமன், தான் அஜ்ஞாதவாஸம்செய்யும்விதத்தை ப்ரதிஜ்ஞைசெய்தது	9- 10
	அர்ஜுனன், தான் அஜ்ஞாதவாஸம்செய்யும்விதத்தை ப்ரதிஜ்ஞைசெய்தது	12- 13
4	நகுலன், தான் அஜ்ஞாதவாஸம்செய்யும்விதத்தை ப்ரதிஜ்ஞைசெய்தது	14
	ஸஹதேவன், தான் அஜ்ஞாதவாஸம்செய்யும்விதத்தை ப்ரதிஜ்ஞைசெய்தது	15
	த்ரௌபதி, தான் அஜ்ஞாதவாஸம்செய்யும்விதத்தை ப்ரதிஜ்ஞைசெய்தது	16- 17
5	தர்மபுத்ரர், தௌம்யர்முதலியோர் வஸிக்கவேண்டியஇடங்களைக் கூறியது	17
	தௌம்யர், அரசர்களிடத்து ஒழுகவேண்டியமுறையை உபதேசித்தது	18- 24
	தௌம்யர், பாண்டவர்களை ஆசீர்வதித்தது	24
6	பாண்டவர்கள், மத்ஸ்யதேசத்திற்குச் சென்றது	25

அத்யாயம்.		பக்கம்.
7	பாண்டவர்கள், தங்கள்ஆயுதங்களை ஒருவன்னிமரத்தில் கட்டியது	27- 32
	தர்மபுத்ரர், தங்களுக்கு ஸங்கேதப்பேர்களை வைத்துக்கொண்டது	32
8	தர்மபுத்ரர், துர்க்காதேவியைத் துதித்தது	33- 35
9	தர்மபுத்ரர், தர்மதேவதையை வேண்டியதும், அவருக்கு ஸந்யாஸிரூபம் வந்ததும்	36- 37
	பீமன்முதலியோர், அஜ்ஞாதவாஸத்திற்குரியரூபத்தைத் தரித்தது	37
	தர்மபுத்ரர், விராடஸபையை அடைந்ததும், விராடன் எதிர்சென்று வணங்கியதும்	37- 39
	தர்மபுத்ரரும் விராடனும் ஸம்பாஷித்ததும், அவர், அவன் ஸபையில் தலைவரானதும்	39- 42
10	பீமன், விராடஸபையையடைந்ததும், சமையற்காரர்களுக்குத் தலைவனாக அமர்ந்ததும்	42- 45
11	அர்ஜுனன், விராடனிடம்சென்றதும், உத்தரைமுதலியோருக்குப் பாதம்கற்பிக்க அமர்ந்ததும்	46- 49
12	நகுலன், விராடனைஅடைந்ததும், அச்வரக்ஷகனாக அமர்ந்ததும்	49- 51
13	ஸஹதேவன், விராடனைஅடுத்ததும், பசுக்காத்தலை மேற்கொண்டதும்	51- 54
14	த்ரௌபதி ஸுதேஷ்ணையைஅடைந்ததும் ஸைரந்த்ரியாக அமர்ந்ததும்	54- 62

ஸமயபாலனபர்வம்.

15	பாண்டவர்கள், மறைவாக ஒருவருக்கொருவர் உதவிக்கொண்டது	63
	பீமன், சங்கரமஹோத்ஸவத்தில் மல்லனைஜயித்துப் பரிசுபெற்றது	63- 67
	பீமன்முதலியோர், தம்தம்செய்கைகளால் விராடனை மகிழ்வித்தது	67

கீசகவதபர்வம்.

16	கீசகன், த்ரௌபதியைக்கண்டு மோஹித்ததும், தன்கருத்தை ஸுதேஷ்ணையிடம் வெளியிட்டதும்	68- 69
	கீசகன் த்ரௌபதியைப்புகழ்ந்து தன்கருத்தை அவளுக்குத் தெரிவித்தது	69- 71
17	த்ரௌபதி, கீசகன்வேண்டுகோளை மறுத்தது ...	71- 72

அத்யாயம்.		பக்கம்.
	கீசகன் மறுபடியும் வேண்டியதும் த்ரௌபதி கடிந்துசொல்லியதும்	72- 73
18	கீசகன் த்ரௌபதியைத் தன்னிடம் அனுப்பும்படி ஸுதேஷ்ணையிடம் வேண்டியது	74
	ஸுதேஷ்ணை கீசகனுக்குப் புத்திகூறியது	74- 75
	கீசகன்பிடிவாதத்தால் ஸுதேஷ்ணை த்ரௌபதியை அவனிடம் அனுப்ப ஸம்மதித்தது	75- 76
	ஸுதேஷ்ணை, த்ரௌபதியைக் கீசகனிடம் மத்யம்வாங்கிவரச்சொல்லியதும், த்ரௌபதி மறுத்ததும் ...	77
	ஸுதேஷ்ணை த்ரௌபதியை வற்புறுத்தியது ...	78
	த்ரௌபதி தேவதைகளையும் தன்மாமனாரையும் ப்ரார்த்தித்தது.	78
19	த்ரௌபதி ஸூர்யனை ப்ரார்த்தித்ததும், அவன் அவளைக்காக்க ஒரு ராக்ஷஸனை அனுப்பியதும்	79
	த்ரௌபதி, கீசகன்வீடுசென்றது	79
	கீசகன், த்ரௌபதியைப் பலாத்காரம்செய்ததும், அவள் விராடன் ஸபைக்கு ஒடியதும்	80
	கீசகன், த்ரௌபதியை உதைத்ததும், ராக்ஷஸன் அவனைக் கீழேதள்ளியதும்	80
	பீமன், கீசகனைக் கொல்லயத்தனித்ததும், தர்மபுத்ரர் குறிப்பால் அவனைத் தடுத்ததும்	81
	த்ரௌபதி, விராடனிடம் முறையிட்டது	82- 84
	ப்ரம்மதேவர், இந்த்ரனுக்குத் தர்மோபதேசம் செய்தது ...	83
20	த்ரௌபதி, விராடனிடம் மறுபடியும் புலம்பியது ...	84- 85
	விராடன், பராமுகமாயிருந்ததும், த்ரௌபதி புலம்பியதும்...	85- 86
	ஸபையிலுள்ளோர், த்ரௌபதிவிஷயத்தில் அனுதாபப்பட்டது	87
	தர்மபுத்ரர், த்ரௌபதியை ஸமாதானம்செய்தது ..	88- 89
	ஸ்த்ரீகள், ஸ்வதந்த்ரமில்லாதவர்களென்பது	88
	த்ரௌபதி, ஸுதேஷ்ணையிடம்சென்றதும், அவள் கபடமாக வினவியதும்	90
	த்ரௌபதி, கீசகனைக் கந்தர்வர் கொல்வரென்றது ...	90- 91
21	கீசகனுடைய பிறப்புமுதலியவரலாறு	92- 94
	ஸூதஜாதிவிவரம்	92
	உபகீசகர்களின்வரலாறு	93
	ஸுதேஷ்ணையின்பிறப்பும் விவாஹமும்	93
	உத்தரன் உத்தரைபிறப்பு	93
	விராடன், கீசகனை ஸேனாதிபதியாக்கியது	94
	பொறுமையின்சிறப்பு	94

அத்யாயம். பக்கம்.

த்ரௌபதி, கீசகனைச் சபியாததின்காரணம் 94
22 த்ரௌபதி, இரவில் பீமனிடம் சென்றது 95
பீமன், த்ரௌபதியை வினவியது 96- 97
த்ரௌபதி, கீசகனால் தனக்குநேர்ந்ததுன்பங்களைக்குறித்து முறையிட்டது 97-105
23 த்ரௌபதி, தன்மேம்பாட்டையும் தனக்குவந்ததாழ்வையும் கூறிக் கீசகவதத்தை வற்புறுத்தியது 107-108
24 பீமன், கீசகனைக்கொல்வதாகச் சொல்லி த்ரௌபதியைத் தேற்றியது 109-111
த்ரௌபதி, கீசகனைக் கொல்லும்படி திரும்பவும் வற்புறுத்தியது 111-113
25 பீமன், கீசகனைக்கொல்வதற்கு உபாயம்சொல்லியது ... 113-114
கீசகன், த்ரௌபதியை மறுபடியும் விரும்பியது ... 114-115
த்ரௌபதி, இணங்குவதுபோலக்காட்டி இடம்குறிப்பிட்டது 115
த்ரௌபதி, கீசகனிடம்நடந்ததைப் பீமனுக்குச் சொல்லியது 116-117
பீமன், கீசகவதம்செய்வதாக ப்ரதிஜ்ஞைசெய்தது ... 117
த்ரௌபதி, கீசகவதம் மறைவாயிருக்கவேண்டுமென்றது ... 117-118
26 பீமன், நடனசாலையில் ஒளித்திருந்தது 118
கீசகன், நடனசாலைக்குவந்து பீமனை த்ரௌபதியென்று நினைத்து அவனிடம் பேசியது 119
பீமன், த்ரௌபதிபோலக் கீசகனிடம் பேசியது ... 119-120
பீமனுக்கும் கீசகனுக்கும் மல்லயுத்தம் 120-121
கீசகவதம் 121
பீமன், த்ரௌபதியிடம் விடைபெற்றுச் சென்றது ... 122
த்ரௌபதி, இறந்தகீசகனை ஸபைக்காவலாளர்க்குக் காட்டியது 122
27 உபகீசகர்கள், த்ரௌபதியைக் கீசகனுடன் தஹனம்செய்ய யத்தனித்தது 123-124
த்ரௌபதி, முறையிட்டதும் பீமன் உபகீசகரைக்கொன்று அவளைமீட்டதும் 124-126
பீமன் த்ரௌபதிக்குச் சிரோமணியின்கதையைச் சொல்லியது 126-127
28 நகரவாஸிகள் த்ரௌபதியை நகரத்தைவிட்டு விலக்கும்படி விராடனிடம் தெரிவித்தது 128-129
விராடன் த்ரௌபதியைத் துரத்தும்படி ஸுதேஷ்ணைக்குச் சொல்லியது 129
நகரவாஸிகள் த்ரௌபதியைக்கண்டு அஞ்சியது ... 129-130

அத்யாயம். பக்கம்.

த்ரௌபதியும் பீமனும் குறிப்பாகப் பேசிக்கொண்டது ... 130
அர்ஜுனனுக்கும் த்ரௌபதிக்கும் ஸம்பாஷணம் ... 130-131
ஸுதேஷ்ணை த்ரௌபதியை வெளிப்படும்படி சொல்லியதும் த்ரௌபதியின் மறுமொழியும் 131-132

கோக்ரஹணபர்வம்.

29 பாண்டவர்களைத்தேடச்சென்ற தூதர்கள், கீசகவதத்தைத் துர்யோதனனுக்குத் தெரிவித்தது. 133-135
30 துர்யோதனன், பாண்டவர்களைக் கண்டுபிடிக்கும்உபாயத்தை ஆலோசித்தது 136
கர்ணனும் துச்சாஸனனும் சொல்லினவை 136-137
31 த்ரோணர் சொல்லியது 138-139
பீஷ்மர் சொல்லியது 139-142
32 க்ருபர் சொல்லியது 143-144
துர்யோதனன், பாண்டவர்கள் விராடநகரத்திலிருப்பதை ஊஹித்தது 144-145
ஸுசர்மா, விராடனைவெல்வது அவச்யமென்றது ... 146
கர்ணன், விராடதேசத்தின்மீது படையெடுப்போமென்றது. 146-147
துர்யோதனன், விராடதேசத்தின்மீது படையெடுக்குமுறையைத் துச்சாஸனனுக்குக் கூறியது 147-148
33 ஸுசர்மா, விராடனுடையபசுக்கூட்டத்தைக் கவர்ந்தது ... 148-149
விராடன், போருக்கு ஆயத்தமானது 149-150
பாண்டவர்கள் போர்த்துணையாகச் சென்றது .. 151
34 விராடன்ஸேனைக்கும் ஸுசர்மாவின்ஸேனைக்கும் யுத்தம் ... 153-155
35 ஸுசர்மா, விராடனைக் கட்டியது 156
தர்மபுத்ரர், விராடனைக்காக்கும்படி பீமனுக்குச் சொல்லியது. 157
பீமன், விராடனைமீட்டதும் ஸுசர்மாவைக் கட்டியதும் ... 158-160
பாண்டவர்கள், விராடன்பசுக்களைத்திருப்பியதும், ஸுசர்மாவை அடிமையாக்கி விடைகொடுத்ததும் ... 160-161
36 விராடன், பாண்டவர்களைப் புகழ்ந்தது 161-162
தூதர், விராடநகரில் ஜயகோஷம்செய்தது 163
37 துர்யோதனன்முதலியோர் விராடனுடையபசுக்களைக்கவர்ந்தது 164
இடையன், உத்தரனிடம் முறையிட்டது 164-165
38 உத்தரன், ஸ்த்ரீகளின்முன்னிலையில் தன்னைப் புகழ்ந்துகொண்டது 166
அர்ஜுனன், தான் ஸாரதியாவதற்கு முயற்சித்தது ... 167-168
உத்தரன், அர்ஜுனனை ஸாரதியாக்கிக்கொண்டது ... 168-171

விஷயஸூசிகை.

அத்யாயம். பக்கம்.

உத்தரன் அர்ஜுனனுக்குக் கவசமுதலியனகொடுத்தது ... 171-172
உத்தரைமுதலியோர், பகைவர்களின் ஆடைமுதலியவற்றைக் கொணரும்படி, அர்ஜுனனுக்குச் சொல்லியது ... 172
39 உத்தரன், கௌரவஸேனையைக்கண்டு பயந்து முறையிட்டது. 174-175
அர்ஜுனன், உத்தரனுக்குப் புத்திகூறியது 175-176
உத்தரன், ரதத்தினின்று குதித்தோடியது 176
த்ரோணர், அர்ஜுனனைத்தெரிந்து கௌரவர்களுக்குச் சொல்லியது 176-177
கர்ணனும் க்ருபரும் கூறியவை... 177
துர்யோதனன் பேடியைக்கொல்வேனென்றது ... 177-178
அர்ஜுனன், உத்தரனைப்பிடித்ததும், உத்தரன், தன்னைவிட்டுவிட்டால் பரிசளிப்பேனென்றதும் 178-179
அர்ஜுனன், உத்தரனை ஸாரதியாயிருக்கச் சொல்லியது ... 179-180
40 த்ரோணர், உத்பாதமுதலியவற்றைக்கூறி அர்ஜுனன்வரவைப் பீஷ்மருக்குக் குறிப்பித்தது 180-181
த்ரோணர், துர்யோதனனிடம் அர்ஜுனனைப் புகழ்ந்தது ... 181-182
அர்ஜுனன் உத்தரனை வன்னிமரத்திலிருந்த ஆயுதத்தை எடுக்கச்சொல்லியது... 183-185
41 உத்தரன், ஆயுதங்களைக்கண்டு வியந்து வினவியது ... 185-187
42 அர்ஜுனன், ஆயுதங்களின்விவரம்கூறியது 187-190
43 உத்தரன், பாண்டவர்களிருக்குமிடத்தை வினவியதும், அர்ஜுனன் மறுமொழியும் 190-191
அர்ஜுனன், தன்பத்துப்பெயர்களையும் அவற்றின்பொருளையும் பதினோராவது பெயர்வந்தகாரணத்தையும் கூறியது. 192-194
44 உத்தரன், அர்ஜுனனை க்ஷமிக்கும்படி வேண்டியது ... 195
அர்ஜுனன், தனக்குப் பேடிரூபம்வந்தவரலாற்றைக்கூறியது. 197
உத்தரன், தான் தேரோட்ட இணங்கியது 197
45 அர்ஜுனன் யுத்தஸந்நாஹம்செய்தது 200
அர்ஜுனன் சங்கநாதத்தைக்கேட்டு உத்தரன்மூர்ச்சித்ததும், அர்ஜுனன், அவனைத்தேற்றியதும் 200-202
46 த்ரோணர், அர்ஜுனனோடுபோர்புரியவேண்டியவிதத்தைத் துர்யோதனனிடம் கூறியது... 202-204
47 துர்யோதனன், த்ரோணரை அவமதித்து ஸேனையை உத்ஸாஹப்படுத்தியது... 204-207
48 கர்ணன், தன்னைப்புகழ்ந்ததும், அர்ஜுனனை இகழ்ந்ததும், பொய்ப்ரதிஜ்ஞைசெய்ததும் 207-210
49 க்ருபர், அர்ஜுனனைப்புகழ்ந்து கர்ணனை இகழ்ந்து, அர்ஜுனனைவெல்லும்விதத்தைக் கூறியது 210-212

அத்யாயம். பக்கம்.

50 கர்ணன், க்ருபரை நிந்தித்தது 212-213
அச்வத்தாமா, கர்ணனையும் துர்யோதனனையும் இகழ்ந்துகூறியது 213-215
51 பீஷ்மர், துர்யோதனனைக்கண்டித்து அச்வத்தாமாவை ஸமாதானஞ்செய்தது 216-217
52 பீஷ்மர், பாண்டவர்களுடன் ஸந்திசெய்வது நலமென்று துர்யோதனனுக்குச் சொல்லியது 218-219
அதிமாஸவிவரணமும் பாண்டவர்களின்ப்ரதிஜ்ஞாகாலநிர்ணயமும் 218
துர்யோதனன், பாண்டவர்களுக்கு எதையும் கொடேனென்றது 219-220
பீஷ்மர், ஸேனையைஅணிவகுத்தது 220-221
53 இந்த்ரன்முதலியதேவர்கள் அங்கு யுத்தத்தைப்பார்க்கவந்தது. 221-222
54 அர்ஜுனன், த்ரோணர்முதலியோரை அம்புகளால் வணங்கியது 223
த்ரோணர் அர்ஜுனனைப் புகழ்ந்தது 223-224
55 அர்ஜுனன் துர்யோதனனைத் தேடிச்சென்றது ... 226
பீஷ்மர், ஸேனையுடன் அர்ஜுனனைப் பின்தொடர்ந்தது ... 226-227
அர்ஜுனன், கௌரவர்களோடு போர்புரிந்தது ... 227-228
இடையர்கள், பசுக்களுடன் ஸ்வதேசம் சென்றது ... 228
56 அர்ஜுனன், உத்தரனுக்கு த்ரோணர்முதலியோருடைய கொடிஅடையாளத்தால் அவர்கள்பெயரையும் வல்லமையையும் தன்தேர்நடத்தும்விதத்தையும் சொல்லியது ... 229-231
57 அச்வத்தாமா கர்ணனை இகழ்ந்தது 231
கர்ணன் வீரவாதம்பேசியது 231-232
துர்யோதனன், அறியாமையால் பசுமந்தையைக்கவர்ந்தோமென்று கர்ணனுக்குச் சொல்லியது 232
த்ரோணர்முதலியோர் அர்ஜுனனுடன் போர்புரிந்தது ... 232-236
58 அர்ஜுனனுக்கும் விகர்ணன்முதலியோருக்கும் யுத்தம் ... 238-244
சத்ருந்தபன்மரணம் 239
ஸங்க்ராமஜித்தின்மரணம் 239
கர்ணன் தோற்றோடியது 244
59 த்ரோணருக்கும் அர்ஜுனனுக்கும் யுத்தமும், த்ரோணர் தோற்றதும் 247-252
60 அர்ஜுனனுக்கும் அச்வத்தாமாவுக்கும் யுத்தமும் அர்ஜுனன் மேலானதும் 253-254
61 அர்ஜுனனுக்கும் க்ருபருக்கும் யுத்தம் 254-257
சந்த்ரகேதுமுதலியோர் மரணம் 255

அத்யாயம். பக்கம்

அர்ஜுனன், ஒரேஸமயத்தில் பீஷ்மர்முதலியஎல்லாருடனும் போர்புரிந்து ரக்தநதியை உண்டாக்கியது... ... 257-259
62 வ்ருஷஸேனனும் துச்சாஸனன்முதலியோரும் அர்ஜுனனை எதிர்த்துத் தோற்றோடியது 260
அர்ஜுனனும் பீஷ்மரும் போருக்காக ஸந்தித்ததும், தேவர்கள் அவர்களைப் புகழ்ந்ததும்... 261-262
63 அர்ஜுனனுக்கும் பீஷ்மருக்கும் யுத்தமும், பீஷ்மர் தோற்றதும் 262-267
சித்ரஸேனன், அர்ஜுனனையும் பீஷ்மரையும் புகழ்ந்தது 265
64 அர்ஜுனன், ஒரேஸமயத்தில் த்ரோணர்முதலிய ஐந்துமஹாரதர்களோடு போர்புரிந்தது 268
65 அர்ஜுனன், பீஷ்மர்முதலியோர்இருக்குமிடத்துக்குத் தேரைச்செலுத்தும்படி உத்தரனுக்குச்சொல்லி, தன்பராக்ரமத்தையுங்கூறியது 269-271
துச்சாஸனன்முதலியோர், அர்ஜுனனைஎதிர்த்துத் தோற்றோடியது 271-274
66 அர்ஜுனனுக்கும் துர்யோதனனுக்கும் யுத்தமும், துர்யோதனன் தோற்றுப் பீஷ்மர்முதலியோரைச் சரணமடைந்ததும் 276-278
அர்ஜுனன் துர்யோதனனைப் பரிஹஸித்தது ... 278-279
67 துர்யோதனன், திரும்பவும் அர்ஜுனனுடன் போர்புரிந்தது. 280-281
அர்ஜுனன், துர்யோதனன்முதலியோர்மீது ஸம்மோஹனாஸ்த்ரப்ரயோகம்செய்து, உத்தரனை அவர்கள் ஆடைமுதலியவற்றைக் கவரும்படி ஏவியது 281-282
உத்தரன், துர்யோதனன்முதலியோர் ஆடைமுதலியவற்றைக் கவர்ந்ததும், அர்ஜுனன் நகைத்ததும் ... 282
துர்யோதனன், மயக்கந்தெளிந்ததும், பீஷ்மர், ஆடைகளை அர்ஜுனன் கவர்ந்தானென்றதும் 282-283
அர்ஜுனன், ஆசார்யர்களைவணங்கி விடைபெற்றுத் துர்யோதனனை மகுடபங்கம்செய்தது 284
68 அர்ஜுனன், போரில்தோற்று ஒளித்த வீரர்களுக்கு அபயமளித்தது 285-286
அர்ஜுனன், உத்தரனை வெற்றி தனதென்றுசொல்லும்படி செய்து, ஆயுதங்களை வன்னிமரத்தில்வைத்து, ப்ருஹந்நளையாகித் தேரோட்டியது... 286-287
உத்தரன் தன்வெற்றியைத்தெரிவித்தற்குத் தூதனுப்பியது. 287
69 விராடன் த்ரிகர்த்தர்களைவென்று திரும்பிவந்து உத்தரனைக் காப்பதற்காக ஸேனையை ஏவியது... 288-289

விஷயஸூசிகை.

அத்யாயம். பக்கம்.

தர்மபுத்ரர், ப்ருஹந்நளையை ஸாரதியாகக்கொண்டவன் கௌரவர்களை வெல்வானென்றது 289

தூதர், உத்தரன்வெற்றியை விராடனுக்கு அறிவித்ததும், விராடன் அவர்களுக்குப் பரிசளித்ததும் 289-290

விராடன், நகரலங்கரித்து உத்தரனை எதிர்கொள்ளும்படி ஏவலாளர்க்குக் கட்டளையிட்டது 290

70 விராடன் தர்மபுத்ரரைச் சூதுக்கழைத்ததும், அவர் மறுத்ததும், அவன் வற்புறுத்தியதும் 291-292

சூதுதீதென்பது 292

விராடனும் தர்மபுத்ரரும் சூதாடியதும், விராடன் அவரைப் பாச்சிகையால் அடித்ததும் 292-294

த்ரௌபதி தர்மபுத்ரரின்ரக்தத்தை முன்றானையிலேந்தியதும், விராடன் காரணம்கேட்க, அவள்சொல்லியதும் ... 294-295

71 தேவர்கள், அர்ஜுனனைப் புகழ்ந்து சென்றது . 296

ஸேனைகள் உத்தரனை எதிர்கொண்டு புகழ்ந்தது ... 296-297

72 உத்தரன் விராடனுக்குத் தன்வரவைத்தெரிவித்ததும், தர்மபுத்ரர், உத்தரன்மட்டும் வரட்டுமென்று தூதனுக்குச் சொல்லியதும் 299-300

உத்தரன், தர்மபுத்ரர்காயத்தைக்கண்டு பயந்து வினவியதும், விராடன் விடைகூறியதும் 300-301

உத்தரன், தர்மபுத்ரரிடம் க்ஷமைகேட்கும்படி விராடனுக்குச் சொல்லியதும், அவன் அவ்வாறேசெய்து, உத்தரனைப்புகழ்ந்து வினவியதும் 301-303

உத்தரன் கௌரவர்களை ஒருதேவகுமாரன் ஜயித்தானென்றது 303-304

அர்ஜுனன் உத்தரைமுதலியோருக்கு ஆடைமுதலியவற்றைக் கொடுத்தது 305

73 அர்ஜுனன் யுதிஷ்டிரரிடம்வந்து காயம்பட்டகாரணத்தை வினவியதும், அவர் விடையளித்ததும் 305-306

பீமார்ஜுனர், விராடனைப் பரிவாரத்தோடு கொல்லயத்தனித்ததும், தர்மபுத்ரர் தடுத்ததும்... 306-307

வைவாஹிகபர்வம்.

74 தர்மபுத்ரர்முதலியோர் ஸிம்மாஸனங்களில் வீற்றிருந்ததும், விராடன் கோபித்ததும் 307-308

அர்ஜுனன், தர்மபுத்ரர் ஸிம்மாஸனம்ஏறுவது தகுமென்று அவரைப்புகழ்ந்து அவரை வெளியிட்டது 308-310

75 அர்ஜுனன் பீமன்முதலியோரையும், பீமன் அர்ஜுனனையும் விராடனுக்குத் தெரிவித்தது 310-311

அத்யாயம். பக்கம்.

உத்தரன் பாண்டவர்களைத் தன்பிதாவுக்குத் தெரிவித்து, அர்ஜுனனுடையவல்லமையையும் கூறியது ... 311-313
விராடன் தர்மபுத்ரரைத் தன்ராஜ்யததிற்கு அரசராக்கியது. 313
76 உத்தரன் உத்தரையை அர்ஜுனனுக்குக் கொடுத்துப் பாண்டவர்களை க்ஷமைகேட்கும்படி விராடனுக்குச் சொல்லியது. 314
விராடன் மந்த்ரிமுதலியவர்களுடன் தர்மபுத்ரரைச் சரணமடைந்து, தனது அரசாட்சிமுதலியவற்றைக் கொடுத்தது. 314-315
77 விராடன், உத்தரையை அர்ஜுனனுக்குக் கொடுப்பதாகத் தர்மபுத்ரரிடம் கேட்டதும், அர்ஜுனன் மருமகளாக்க அங்கீகரித்ததும் 316
அர்ஜுனன் உத்தரையை, மனைவியாகக்கொள்ளாததின் காரணம் 316-317
விராடனும் அர்ஜுனனும் க்ருஷ்ணன்முதலியோருக்குத் தூதனுப்பியது 317
துர்யோதனன், திரும்ப வனம்செல்லும்படி தர்மபுத்ரருக்குத் தூதனுப்பியது 318
தர்மபுத்ரர் ப்ரதிஜ்ஞாகாலநிர்ணயத்தைப் பீஷ்மரிடம் தெரிந்துகொள்ளும்படி மறுமொழி அனுப்பியது .. 318
பீஷ்மர், பாண்டவர்களின்ப்ரதிஜ்ஞாகாலம் நிறைவேறியதென்று துர்யோதனனுக்குச் சொல்லியது 319
78 பாண்டவர்கள் உபப்லாவ்யநகரத்தில்வஸித்ததும், க்ருஷ்ணன் முதலியோர் அவர்களிடம்வந்ததும் 320
தர்மபுத்ரர்முதலியோர் க்ருஷ்ணனை எதிர்கொண்டு பூஜித்தது 320-321
க்ருஷ்ணன் துர்யோதனுதியரைக் கொல்வதாக த்ரௌபதியிடம் சபதம்செய்தது 321
த்ருபதன்முதலியோர் உபப்லாவ்யநகரம்வந்தது ... 321-322
அபிமன்யுவுக்கும் உத்தரைக்கும் விவாஹமும், விராடன் சீர்கொடுத்ததும் 322-324

விராடபர்வம் விஷயஸூசிகை முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீ க்ருஷ்ணாய வாஸுதேவாய நம:.

ஸ்ரீ க்ருஷ்ணத்வைபாயனாய நம:.

ஸ்ரீ மஹாபாரதம்.

விராடபர்வம்.

முதலாவது அத்யாயம்.

பாண்டவப்ரவேசபர்வம்.

நாராயணம் நமஸ்க்ருத்ய நரஞ்சைவ நரோத்தமம்|
தேவீம் ஸரஸ்வதீம் வ்யாஸம் ததோ ஜயமுதீரயேத்||

(யுதிஷ்டிரர், ம்ருகத்தினால் கவரப்பட்ட அரணிகளையும் பாத்ரத்தையும் ப்ராம்மணனுக்குத் திருப்பிக்கொடுத்ததும், துக்கிக்கின்ற யுதிஷ்டிரருக்குத் தௌம்யர் ஸமாதானம் கூறியதும், பாண்டவர்கள் தௌம்யரோடு மந்த்ராலோசனை செய்வதற்காக ஓரிடத்தில் உட்கார்ந்ததும்.)

ஜனமேஜயர் வைசம்பாயனரைப்பார்த்து, "ப்ராம்மணரே! என்னுடைய தந்தையின் பாட்டன்மார்கள் துர்யோதனனிடத்திலிருந்து உண்டான பயத்தினால் துன்பமடைந்து விராடநகரத்தில் ஒருவருக்கும் தெரியாமல் எவ்வாறு வாஸஞ்செய்தனர்? பதிவ்ரதையும் மஹாபாக்யமுள்ளவளும் எப்பொழுதும் ஸுகத்தை அனுபவித்தவளுமான அந்தத்ரௌபதியானவள் துக்கத்தை அடைந்து எவ்விதமாக அஜ்ஞாதவாஸஞ்செய்தாள்? அந்தப்ராம்மணச்ரேஷ்டர்களும் பரிசாரகர்களும் ஸூதர்களோடும் சமையற்காரர்களோடும் எப்படி அஜ்ஞாதவாஸம்செய்தார்கள்?" என்று வினவ, வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினர்.

---

1 உரைவிசேஷத்தை ஆதிபர்வம் முதலாவது பக்கம் குறிப்பிற்காண்க.

"அரசரே! உம்முடைய ப்ரபிதாமஹர்கள் விராடநகரத்தில் எவ்வாறு அஜ்ஞாதவாஸம் செய்தார்களென்பதை முழுதும் சொல்லுவேன்; அதைக்கேளும். தர்மராஜாவான அந்தயுதிஷ்டிரர் அவ்விதமாக அந்தவரங்களைப்பெற்றுக்கொண்டு ஆச்ரமத்தைஅடைந்து தம்முடையவ்ருத்தாந்தத்தை ப்ராம்மணர்களுக்குத் தெரிவித்தார். யுதிஷ்டிரர் ப்ராம்மணர்களுக்கு அந்தவ்ருத்தாந்தமனைத்தையும் தெரிவித்து (ம்ருகத்தினால்அபஹரிக்கப்பட்ட) அரணிகளுடன் பாத்திரத்தை அந்தப்ராம்மணனுக்குக் கொடுத்தார். பாரதரே! பிறகு உறுதியானவ்ரதத்தையுடையவரும் குந்திபுத்ரருமான யுதிஷ்டிரமஹாராஜர் தம்பிமார்களையெல்லாம்அழைத்து, "(ஸஹோதரர்களே!) நாம் (துர்யோதனன்முதலானவர்களால்) கபடத்தினால் ராஜ்யத்தை அபஹரிக்கப்பட்டோம்; பெரும்பாலும் தரித்திரர்களாகச்செய்யப்பட்டுப் பன்னிரண்டுவர்ஷகாலம் தேசத்தைவிட்டு வெளியில் ஓட்டவும் பட்டோம்; பன்னிரண்டுவர்ஷகாலம் கானகத்தில்வஸித்ததுபோலவே பதின்மூன்றாவதுவர்ஷம் மறைந்து அஜ்ஞாதவாஸஞ்செய்வோம்" என்றுகூறினர். தர்மராஜரால் அனுமதிகொடுக்கப்பட்டவர்களும் ஸத்யமான பராக்ரமமுள்ளவர்களும் பதின்மூன்றாவதுவர்ஷம் மறைந்து அஜ்ஞாதவாஸஞ்செய்யப்போகின்றவர்களும மஹாத்மாக்களும் வ்ரதமுடையவர்களுமான பாண்டவர்கள், கற்றறிந்தவர்களும் [1]ஸ்நாதகர்களும் கடுமையானவ்ரதமுள்ளவர்களும் வனவாஸஸமயத்தில்ஸஹாயர்களாக அங்கிருந்தவர்களுமானப்ராம்மணர்களையும் வனவாஸகாலத்தில் தங்களிடம்பற்றுதலுள்ளவர்களாக வாஸஞ்செய்த தபஸ்விகளையும்நோக்கி அருகில்உட்கார்ந்து இருகைகளையும்குவித்துக்கொண்டு அஜ்ஞாதவாஸஞ்செய்வதில் அவர்களை அநுமதிகொடுக்கும்படி செய்யவேண்டி மனக்கிளர்ச்சியுடன் வசனிக்கலானார்கள். "ப்ராம்மணோத்தமர்களே! நாங்கள் த்ருதராஷ்ட்ரகுமாரர்களால் கபடத்தினால் கவரப்பட்டராஜ்யத்தையுடையவர்களும் பலவிதத்தாலும் தரித்திரர்களாகச்செய்யப்பட்டவர்களும் பன்னிரண்டுவர்ஷம் காட்டிலுண்டானவைகளை ஆஹாரமாகக்கொண்டவர்களுமாக உங்களோடுசேர்ந்தே காட்டில்வஸித்தோமென்பது உங்களுக்கு முற்றிலும்தெரிந்திருக்கிறது.

---

[1] குருகுலவாஸஞ்செய்து வேதாத்யயனத்தையும் ப்ராஜாபத்யமுதலிய வ்ரதத்தையும் சாஸ்த்ரமுறைப்படிமுடித்து ஸ்நாநம்செய்தவர்கள். இவர்கள், வ்ரதத்தைஅனுஷ்டியாமல் வித்யையைமாத்ரம் அப்யஸித்தவர் வித்யாஸ்நாதகரென்றும், வித்யையைஅப்யஸியாமல் வ்ரதத்தைமாத்ரமுடித்தவர் வ்ரதஸ்நாதகரென்றும், விதயையையும்அப்யஸித்து வ்ரதத்தையுமுடித்தவர் உபயஸ்நாதகரென்றும் மூவகையாவர்.

மிச்சமான இந்தப்பதின்மூன்றாவதுவர்ஷமானது அஜ்ஞாதவாஸஸமயம்; ஆதலால், நாங்கள் மறைந்துவஸிக்கப்போகின்றோம். அதற்கு நீங்கள் அனுமதிகொடுக்கவேண்டும். தகுந்தசாரர்களையுடையவர்களும் ஸ்வஜனங்களுடைய பொருள்களைக்கவர்வதில் முயற்சியுள்ளவர்களும் எங்களிடத்தில் மிக்கவைரமுள்ளவர்களுமான துஷ்டமனத்தையுடைய துர்யோதனனும் சகுனியும் கர்ணனும் அறிவார்களானால் தீங்கைவிளைவிப்பார்கள். துராத்மாக்களான அவர்கள்விஷயத்தில் எவன்தான் விசுவாஸத்தைஅடைவான். நாங்கள் எங்களுடைய ராஜ்யத்தில் நிலைபெற்று பராம்மணர்களோடுசேர்ந்து எல்லாத்தேசங்களிலும் ஆட்சிசெய்வோமென்பது திரும்பவும எங்களுக்குக் கிடைக்குமா?" என்றார்கள். சுத்தரும் தர்மராஜனுடையபுத்ரரும் ராஜாவுமானயுதிஷ்டிரர் இவ்வாறுமொழிந்து துககத்தினாலும் சோகத்தினாலும் பீடிக்கப்பட்டவராகவும் பாஷ்பத்தினால் தடுமாறுகின்றகுரலுள்ளவராகவும் அப்பொழுது மூர்ச்சைஅடைந்தார். பிறகு, அந்தயுதிஷ்டிரரைத் தம்பிமார்களோடுசேர்ந்து ப்ராம்மணர்களனைவர்களும் தேறுதலடையச்செய்தார்கள். அப்போழுது ராஜாவானயுதிஷ்டிரர் மூர்ச்சைதெளிந்து துக்கத்தாலும் மோஹத்தாலும் பீடிக்கப்பட்டுப் பாஷ்பத்தினால் தழுதழுத்தகுரலுள்ளவராகித் தார்மிகர்களுள் உத்தமரான தௌம்யரைப் பார்த்தார். பிறகு அந்தத்தௌம்யர் ப்ராம்மணர்களுடன் அப்பொழுது ராஜாவான அந்தயுதிஷ்டிரரையும் அவருடைய தம்பிமார்களையும் ஸமாதானஞ்செய்து அரசரைநோக்கிச் சிறந்தபொருளுள்ள வாக்யத்தை உரைக்கலானார்.

"ராஜரே! நீர் கற்றறிந்தவர்; மனத்தைஅடக்கினவர்; ஸத்யஸந்தர்; ஐம்பொறிகளையும்வென்றவர். இப்படிப்பட்டதீரர்கள் ஒருவிதமானஆபத்திலும் மதிமயக்கங்கொள்ளார்கள். பகைவர்களைவெல்வதின்பொருட்டு அந்தஅந்தஸமயங்களில் மறைந்திருக்கின்றவர்களும் மஹாத்மாக்களுமான அநேகதேவர்களாலும் ஆங்காங்கு ஆபத்துகள் அடையப்பட்டிருக்கின்றன. திதியினுடையபுத்ரர்களால் ராஜ்யமானது கவர்ந்துகொள்ளப்பட்டபொழுது தேவராஜன் மிகவுந்துக்கித்து, ப்ரம்மதேவரை ஸந்தோஷப்படுத்துவதற்காக ப்ராம்மணவேஷந்தரித்து நிஷததேசத்தைஅடைந்து கிரிப்ரஸ்தமென்னும் பட்டணத்தில் மறைந்துவாஸஞ்செய்து பகைவர்களுடையபலத்தைஅழிப்பதற்குரிய கார்யத்தைச்செய்தான். ராஜரே! இந்த்ரன் ப்ரம்மதேவருடையஅனுக்ரஹத்தினால் மஹாபலசாலிகளும் பகைவர்களுமான திதியினுடையபுத்ரர்களைப் பலத்தினால்ஜயித்து உலகங்களை

மறுபடியும் பாதுகாத்தான். விஷ்ணுவானவர் தைத்யர்களைக் கர்ப்பத்தில்வதஞ்செய்வதின்பொருட்டுத் திதியினிடத்தில் வஸிக்கவேண்டி அப்பொழுது அச்மகிரியை அடைந்து ஒருவராலும் அறியப்படாமல் நெடுங்காலம்வாஸஞ்செய்தார். அவர் தம்மிடம்விட்டு வேறிடம்சென்று வாமனரூபத்தால்மறைந்து ப்ரம்மசாரியாகிப் பலியினிடமிருந்து ராஜ்யத்தை [1]விக்ரமங்களால் அபஹரித்தாரென்பது உம்மால்கேட்கப்பட்டிருக்கிறது. ஐயா! துடையில்மறைந்துவாஸஞ்செய்யும் ப்ரம்மரிஷியானஔர்வரால் அப்பொழுது உலகங்களில்செய்யப்பட்டகார்யத்தையும் முழுவதும் நீர்கேட்டிருக்கிறீர். எல்லாஇடங்களிலும் மறைந்திருக்கின்றவராயிருந்தாலும் விஷ்ணுவினால் வ்ருத்ரனை அழிக்கும்விஷயத்தில் இந்த்ரனுடையவஜ்ராயுதத்தில்ப்ரவேசித்துச் செய்யப்பட்டகார்யத்தையும் நீர் கேட்டிருக்கிறீர். அக்னி ஜலத்தில் நுழைந்து மறைந்துவஸித்ததையும் தேவர்கள்விஷயத்தில் செய்தகார்யத்தையும் நீர் கேட்டிருக்கிறீர். ஐயா! பூமியில் அனேக வர்ஷகாலம் மறைந்துவஸிக்கின்றவனும் உத்தமமானதேஜஸ்ஸையுடையவனுமான ஸூர்யனால் எவ்வாறு சத்ருக்களனைவரும் எரிக்கப்பட்டார்களென்பதும் உம்மால்கேட்கப்பட்டிருக்கிறது. இம்மண்ணுலகத்தில் தசரதருடையஅரண்மனையில் (மானிடவேஷத்தினால்) மறைந்துவஸித்தவரும் யுத்தத்தில்பயங்கரமானசெய்கையுடையவருமான விஷ்ணுவினால் ராவணன்கொல்லப்பட்டான். இவ்வாறு இந்தமஹாத்மாக்கள் அவ்வவ்விடங்களில் மறைந்தவர்களாயிருந்துகொண்டு பகைவர்களுள்தலைவர்களை வென்றார்கள். அப்படியே நீரும் வெல்லப்போகிறீர்" என்றார்.

தர்மங்களை அறிந்தவரான அந்தயுதிஷ்டிரர் தௌம்யரால் இவ்வாறானவாக்யங்களால் மனக்களிப்பை அடையும்படிசெய்விக்கப்பெற்று, மறுபடியும் சாந்தமானபுத்தியையடைந்து அசைவற்றிருந்தார். பிறகு பலசாலிகளுள்சிறந்தவனும் பெரியகைகளையுடையவனும் மிக்க பலமுள்ளவனுமான பீமஸேனன், ராஜாவானயுதிஷ்டிரரை வாக்கினால் மிகவும்ஸந்தோஷிக்கச்செய்து, "மஹாராஜரே! பாரும்; காண்டீவத்தையில்லாதவுடைய உம்முடையஸஹோதரனால் 'தர்மத்தையும் அர்த்தத்தையும் ப்ரதானமாகக்கொண்டிருக்கின்றபுத்தியினால்' ஒருவிதமான ஸாஹஸமும்செய்யப்படவில்லை. அந்தத்துர்யோதனன் முதலானவர்களை நாசஞ்செய்வதில்சக்தியுள்ளவர்களும் பகைவர்களைக்கொல்லுகிறவர்களும் பயங்கரமானவன்மையுள்ளவர்களுமான நகு

[1] அடிவைப்பு.

லனும் ஸஹதேவனும் என்னால் எப்போதும்தடுக்கப்பட்டிருக்கின்றார்கள். நீர் எங்களை எந்தவழியில்சேர்ப்பிக்கிறீரோ அந்தவழியை விட்டு நாங்கள்விலகமாட்டோம்; ஆதலால், நீர் எல்லாவற்றையுங்கட்டளையிடும். விரைவாகப் பகைவர்களைஜயிப்போம்" என்றுகூறினான். இவ்வாறு பீமஸேனனால்சொல்லப்பட்ட தர்மராஜாவானயுதிஷ்டிரர் கற்றறிந்தவர்களோடும் கடுமையானவ்ரதமுள்ள தபஸ்விகளோடும் ஸஹமாகவீற்றிருந்தார். மிகக்கற்றறிந்தவரும் வ்ரதத்தையுடையவருமானயுதிஷ்டிரராஜர், அஞ்சலிசெய்துகொண்டு அந்தவனவாஸத்தில் தங்களிடத்தில்பற்றுதலுடனிருந்த சிஷ்டர்களானதபஸ்விகளை அந்தஅஜ்ஞாதவாஸவிஷயத்தில் அநுமதிகொடுக்கச்செய்வதற்காகச் சொல்லத்தொடங்கினார். நாங்கள்அனைவர்களும் த்ருதராஷ்ட்ரபுத்ரர்களால் ஆலோசனைசெய்து ராஜ்யம்கவரப்பட்டும் பெரும்பாலும் தரித்ரர்களாக்கச்செய்யப்பட்டும் அப்படியே பன்னிரண்டுவர்ஷகாலம் கஷ்டத்துடன் வனத்தில்வஸித்தோமென்பது உங்களுக்குத்தெரிந்திருக்கிறது. மிகுதியிருக்கின்ற பதின்மூன்றாவதுவர்ஷமானது அஜ்ஞாதவாஸகாலம். ஆதலால், ஓரிடத்தில்மறைவாகவஸிக்கப்போகிறோம். அதற்கு நீங்கள் அநுமதிகொடுக்கவேண்டும்" என்றனர். இவ்வாறுதர்மராஜர்சொல்ல, ப்ராம்மணர்கள் உத்தமமானஆசீர்வாதங்களைச்செய்து பரதகுலத்தில்பிறந்தவர்களானபாண்டவர்களிடத்தினின்று விடைபெற்றுக்கொண்டு தங்கள்வீடுகளைநோக்கிச் சென்றார்கள். வேதங்களைஅறிந்தவர்களும் ச்ரேஷ்டர்களுமான எல்லாஸந்யாஸிகளும் மஹரிஷிகளும் அப்பொழுது முறைப்படி ஆசீர்வாதங்களைச்செய்து மீண்டும்அவர்களைப் பார்ப்பதில்விருப்பத்துடன் தங்கள் தங்கள்இருப்பிடம் சேர்ந்தார்கள். அந்தவேலைக்காரர்களும் தூதர்களும் சிற்பிகளும் பரிசாரகர்களும் (பாண்டவர்களிடத்தினின்று) முறைப்படிவிடைபெற்றுக்கொண்டு மீண்டும் (அவர்களைப்)பார்ப்பதில் விருப்பத்துடன் தங்கள்தங்கள்இருப்பிடம் சென்றார்கள். பாரதரே! கற்றறிந்தவர்களும் வீரர்களுமான அந்த ஐந்துபாண்டவர்களும் த்ரௌபதியைஅழைத்துக்கொண்டு எழுந்திருந்து தௌம்யருடன் சென்றார்கள். புருஷச்ரேஷ்டர்களும் தனித்தனியாய்ச் சாஸ்த்ரங்களைவிசேஷித்தறிந்தவர்களும் மந்த்ராலோசனையில்ஸமர்த்தர்களும் ஸந்திவிக்ரஹங்களுடைய உண்மையைஅறிந்தவர்களுமான அந்தப் பாண்டவர்களனைவர்களும் மறுதினத்தில் அஜ்ஞாதவாஸஞ்செய்யும் முயற்சியுடன் அந்தஇடத்தினின்று நல்லசகுனத்துடன் ஒருக்ரோசதூரம்சென்று மந்த்ராலோசனையின்பொருட்டு உட்கார்ந்தார்கள்.

இரண்டாவது அத்யாயம்.

பாண்டவப்ரவேசபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர், தம்பிகளுடன்ஆலோசித்து விராடநகரத்தில்வஸிக்க நிச்சயித்ததும், தாம் ஸந்யாஸிவேஷம்பூண்டு விராடனுடைய ஸபைத்தலைவராகஇருப்பதைக்கூறியதும்.)

வனவாஸத்தைநிறைவேற்றினவர்களும் ஸத்யஸந்தர்களும் மனோதைர்யமுள்ளவர்களுமான அந்தப்பாண்டவர்கள் தௌம்ய ருடன் மறுபடியும் மந்த்ராலோசனைசெய்யலானார்கள். பிறகு, தர்ம ராஜரும் குந்திபுத்ரரும் குருகுலத்திலுதித்தவருமான யுதிஷ்டிரர், ஸஹோதரர்களையும் த்ரௌபதியையும் தௌம்யரையும் பார்த்து, "குந்திபுத்ர! அர்ஜுன! நாம் இந்தப்பன்னிரண்டுவர்ஷகாலமாக ராஜ் யத்தினின்றும்தூரத்தப்பட்டோம். ப்ரயாஸமிருப்பதனால் வஸிப்ப தற்கு மிகவும்அஸாத்யமான இந்தப்பதின்மூன்றாவதுவர்ஷம்வந்து விட்டது. இனிவஸிக்கத்தகுந்தஇடத்தை நன்றாகஆலோசிப்பாயாக. அர்ஜுன! வந்திருக்கின்றஇந்தப்பதின்மூன்றாவதுவர்ஷம், நாமனை வரும் த்ரௌபதியுடன்த்ருதராஷ்ட்ரபுத்ரர்களால் அறியப்படாதவர் களாக எங்குவாஸஞ்செய்வோம்?" என்றுவினவ, அர்ஜுனன், "மஹாராஜரே! பரதச்ரேஷ்டரே! அந்தத்தர்மதேவதையினால் அளி க்கப்பட்டவரத்தினாலேயே நாம் மனிதர்களால்அறியப்படாமல் ஸஞ் சரிக்கப்போகிறோம். வாஸஞ்செய்வதற்கு ரமணீயமானவைகளும் ரக்ஷிக்கப்பட்டவைகளும் நான்எடுத்துச்சொல்லப்போகின்றவைகளு மான சிலதேசங்களுள்ஒன்றை நீர் விரும்பும். குருதேசங்களுக்கு நாலுபக்கங்களிலும் மனத்துக்கினிமையானபலவகைப்பட்டபாஞ்சா லநாடுகளும் மத்ஸ்யதேசங்களும் ஸால்வம், வைதேஹம், பாஹ்லிகம், தசார்ணம், சூரஸேனம், கலிங்கம், மாகதம்என்கிற நாடுகளுமிருக்கின் றன. சத்ருக்களை அழிப்பவரே! விராடநகரமும் அழகுள்ளதும் ஜனங் களால் நாலுபக்கங்களிலும்சூழப்பட்டதும் ஸுபிக்ஷமுள்ளதும் ஐச் வரியத்தினால்பெருத்ததும்மாயிருப்பதாகக் கேட்கிறோம். அரசரே! மற் றும்அனேகமான பற்பலதேசங்களும் கேட்கப்படுகின்றன. எந்தத் தேசத்தில் உமக்குவிருப்பமிருக்கிறதோ அங்கு நாம் செல்வோம். மஹாராஜரே! இவைகளுள் எந்தத்தேசத்தில் நீர்வஸிக்கப்போகிறீர்? ராஜ்யத்தினின்றுதவறிவிட்டோமென்று ஓரிடத்திலும் உம்முடைய மனமானது துக்கத்திற்குட்பட்டதாகச்செய்யத்தக்கதன்று" என்

றான். யுதிஷ்டிரர், "மிக்கபுஜபலமுள்ளவனே! மஹிமைபொருந்திய வரும் ப்ரபுவும் எல்லாப்பிராணிகளுக்குமீச்வரருமான அந்தத்தர்ம தேவதைசொன்னது அவ்விதமேயாகும். அது வேறுவிதமாகாது. நாமனைவரும் ஒன்றுசேர்ந்து நன்குஆலோசித்து, வஸிப்பதின்பொரு ட்டு ரமணீயமானதும் மங்களகரமானதும் ஸுகமானதும் ஓரிடத் தினின்றும் பயமில்லாததுமான ஒருஸ்தானத்தை அவச்யம்பார்ப் போம். மத்ஸ்யதேசாதிபதியானவிராடன் மிகுந்தபலமுடையவன்; மேலும் பாண்டவர்களானநம்மிடத்தில் அதிகப்பற்றுதலுள்ளவன்; தர்மசீலன்; நன்கொடையுடையவன்; வயதுசென்றவன்; ஸாதுக் களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவன்; குணங்களையுடையவன்; உலகத் தில்ப்ரஸித்திபெற்றவன்; உறுதியானபக்தியுடையவன்; இந்த்ரியங் களைஜயித்தவன். பார்த்த! தோஷமற்றவனே! அந்தமத்ஸ்யதேசத் தில் விராடராஜனுடையஅருகில் வாஸஞ்செய்வது எனக்கு ப்ரிய மாயிருக்கின்றது. ஐயனே! உனக்கும் ப்ரியமிருந்தால் விராடநகரத் தில் இந்தப்பன்னிரண்டுமாஸங்களும் அவனுக்கு வேலைகளைச்செய்து கொண்டு வஸிப்போம். குருநந்தன! அவனுடைய எந்தஎந்தக்கார் யத்தைச்செய்வதற்கு நாம்சக்தியுள்ளவர்களாவோமோ, எவனெவன் எந்தஎந்தக்கார்யத்தைச்செய்யமுடியுமோ அவனவன் அந்தஅந்தக் கார்யத்தைச்சொல்லவேண்டும்" என்றுசொல்ல, அர்ஜுனன் "வேந் தரே! அந்தவிராடனுடையராஜ்யத்தில் எவ்விதமானகார்யத்தை நீர் செய்யப்போகிறீர்? அரசரே! விராடனுக்கு எந்தக்கார்யத்தைச்செ ய்துமகிழ்வீர்? நீர் கபடமற்றவேஷம்தரித்தவர்; தர்மத்தில்நிலைபெற் றவர்; பொறுமையில்லாதவர்; உமக்கு க்ரூரமும் கபடமுமானசெய் கைபொருந்தாது; நீர் ஸத்யமானவாக்கையுடையவர்; யஜ்ஞங்களை அனுஷ்டித்தவர்; பேராசையாலும் கோபத்தாலும் விடுபட்டவர்; மெல்லியதன்மையுடையவர்; பெருங்கொடையுடையவர்; அகார்ய த்தில் வெட்கமுடையவர்; தர்மத்தையே ப்ரதானமாகக்கொண்டவர்; உண்மையானபராக்ரமமுடையவர். அரசரே! தவத்தினால்வாட்ட முற்றிருக்கின்றநீர் அந்தவிராடனிடத்தில் எவ்வாறு கார்யத்தைச் செய்யப்போகிறீர்? ராஜரே! கெட்டகார்யத்தில் புத்தியைச்செலுத் தினவனுக்குத்தக்கதான துக்கமானது உமக்குச் சிறிதும் தகாது. அப்படிப்பட்டநீர் கோரமான இந்தஆபத்தைஅடைந்து எவ்வாறு தாண்டப்போகிறீர்" என்றுகூறினன். அர்ஜுனன் இவ்வாறுசொ ல்ல, யுதிஷ்டிரர், "குருநந்தன! நான் செய்யப்போகிறகார்யத்தை நீகேள். மத்ஸ்யதேசவாஸிகளானஜனங்களை ஆனந்தப்படுத்துகின்ற

வனும் ராஜாவுமானவிராடனை அடைந்து அவனுக்கு ஸபைத்தலைவனுவேனென்பது என்னுடையஎண்ணம். அக்ஷவித்யையை அறிந்தவனும் நன்றாகச்சூதாடுகிறவனுமானநான் கங்கன்என்றபெயரைச்சொல்லிக்கொண்டு வைடூர்யம் தங்கம் தந்தம் ஸ்படிகம் வெள்ளி இவைகளால்செய்யப்பட்டவைகளும் கறுப்புநிறமுள்ளவைகளும் சிவப்புநிறமுள்ளவைகளும் மனத்துக்குஇன்பத்தைஉண்டுபண்ணத்தக்கவைகளும் மங்களகரங்களும் அரசன் பசு இவர்களுடையஅடையாளங்களுடன்கூடியவைகளும் பார்க்கஅழகானவைகளும் நல்லகாந்தியுள்ளவைகளுமான [1]சாரிகைகளைவைத்துப் [2]பாச்சிகைகளைஉருட்டப்போகிறேன். அப்பா! சிவப்புநிறமுள்ளவைகளும் மாகதத்தினுல்செய்யப்பட்டவைகளும் அழகியவைகளும் ஸபைக்குஆனந்தத்தைஉண்டுபண்ணுகின்றவைகளும் ஸமர்த்தர்களால் நன்றாகச்செய்யப்பட்டவைகளுமானகாய்கள் எனக்குப் பொருள்களாயிருக்கின்றன. மனிதர்கள் இவைகளைக் கையினுல்தொட்டாலும் மிக்கமனக்களிப்பை அடைவார்கள். அந்தக்காய்களை நான் ஸமமானதும் ரமணீயமானதும் புழுதியில்லாததுமானஇடத்தில் உருட்டி இஷ்டப்படி சூதாடுவேன். அஃது எனக்கு விளையாட்டாயிருக்கும். ஜ்யோதிஷத்திலும் பக்ஷிசகுனங்களை அறிவதிலும் நிமித்தத்தை அறிவதிலும் ஸாமர்த்தியத்தோடு பாச்சிகையாடுவதிலும் என்னுல் அத்தியயனஞ்செய்யப்பட்டதும் ப்ரம்மஸ்வரூபத்தைநிரூபணஞ்செய்கின்றதுமான வேதத்திலும் எல்லாவேதாங்கங்களிலும் தர்மார்த்தகாமமோக்ஷங்களிலும் நீதிசாஸ்த்ரங்களிலும் கரைகண்டவனுனநான், கங்கன் என்கிறபெயருள்ளஸந்யாஸியாகி விராடனுடையஸபாத்யக்ஷனுகஇருந்துகொண்டு, (விராடனுல்) கேட்கப்படுவேனுனல் அவனுக்கு மிக்கப்ரியமானவார்த்தையைச்சொல்வேன். அவன் என்னைக் கேட்டால், அவனைநோக்கி, 'நான் முன்பு யுதிஷ்டிரருக்கு ப்ராணனுக்கொப்பான தோழனுயிருந்தேன்' என்றுசொல்வேன். விராடநகரத்தில் இவ்வாறு நான் எப்பொழுதும் மறைந்திருந்துகொண்டு ஜாக்ரதையுடன்வாஸஞ்செய்வேன். நான் எவ்விதம்ஸஞ்சரிப்பேனென்பது இவ்விதம்ப்ரதிஜ்ஞை செய்யப்பட்டது" என்றுகூறினர்.

---

[1], [2] சூதாடுகருவிகள்.

மூன்றாவது அத்யாயம்.

பாண்டவப்ரவேசபர்வம். (தொடர்ச்சி.)

(பீமனும்அர்ஜுனனும் விராடநகரத்தில்தாம் வஸிக்கும்விதத்தைக்கூறியது.)

இவ்வாறு தர்மநந்தனர் தம்மைக்குறித்துச்சொல்லிப் பெருமூச்சுவிட்டு,வெப்பமுள்ளதும் மனவருத்தத்தினால்உண்டானதுமான கண்ணீரைச்சொரிந்து, பீமஸேனனைப்பார்த்து, "பீமஸேன! மத்ஸ்யராஜனுடையதேசத்தில்எவ்விதமானகார்யத்தை நீ செய்வாய்? அந்தக் கந்தமாதனபர்வதத்தில் க்ரோதவசர்களையும் யக்ஷர்களையும் கோபத்தினால் மிகவும்சிவந்தகண்களையுடையராக்ஷஸர்களையும் நீ வல்லமையினால்கொன்று பாஞ்சாலகன்னிகைக்கு அநேகம் தாமரைப்பூக்களைக் கொண்டுவந்துகொடுத்தாய். குந்திபுத்ர! பகைவர்களை அடக்குபவனே! ராக்ஷஸராஜனும் பயங்கரனும் மனிதர்களைப்பக்ஷிப்பவனுமான பகாஸுரனை ப்ராம்மணருக்காகக் கொன்றாய். அந்தஏகசக்ரநகரியானது உன்னால்அபயங்கொடுக்கப்பட்டு க்ஷேமமுள்ளதாகச்செய்யப்பட்டது. மிக்கபுஜபலமுள்ளவனே! மஹாவீர்யமுள்ளவனான ஹிடிம்பனையும் [1]கிர்மீரனென்கிறராக்ஷஸனையும்கொன்று உன்னால் காடானது பகைவாற்றதாகச்செய்யப்பட்டது. ஆபத்தையடைந்தவளும் அழகானசிரிப்புள்ளவளுமான த்ரௌபதியும் நாங்களும் ஜடாஸுரனைக் கொன்று விடுவிக்கப்பட்டோம். ஐயனே! வ்ருகோதர! வீர்யத்தினால் நிறைந்தவனும் அதிககோபமுள்ளவனும் சிறந்தபலமுடையவனுமானநீ மிக்கதுர்ப்பலனான அந்தவிராடனுடையநகரத்தில் மத்ஸ்யராஜனிடத்தில் எவ்விதமானகார்யத்தைச்செய்துகொண்டு வஸிக்கப் போகிறாய்?" என்றுவினவ, பீமன், "மனிதர்களுக்கதிபதியே! நான்[2]வலலனென்னும்பெயருடன் [3]ஸூபகாரனென்னும்சமையற்காரனாக ராஜாவானவிராடனை அடைவேன்; இதைத்தான்விரும்புகிறேன். நான் மடைப்பள்ளிவேலையில் ஸமர்த்தனாயிருக்கிறேன். பற்பலவிதமானரஸங்களையும் அவ்வாறே ருசியும் மதுரமுமானபருப்புகளையும் செய்வேன். நான்இந்தவிராடனுக்கு ப்ரீதியை உண்டுபண்ணிக் கொண்டு நல்லதேர்ச்சியுள்ளவர்களால் எவ்விதமான வ்யஞ்சனங்கள் முன்செய்யப்பட்டனவோ அவைகளையும் கீழ்ப்படுத்துவேன். நான்

---

1 கிம்மீரனென்றும்பாடம். 2 வல்லவனென்றும்பாடம்.

3 பருப்புமுதலியவைகளைச்சமைப்பவன்.

அந்தவிராடனால் முன் புஜிக்கப்படாதவைகளும் ரஸங்களுடனும்குணங்களுடனும்கூடியவைகளுமான அன்னபானாதிகளைச் செய்வேன். ருசியுள்ளவ்யஞ்சனத்தைப்புஜித்து மத்ஸ்யராஜன் ப்ரீதியுடையவனாவான். பிளக்கப்பட்டிருக்கின்றமரங்களை நான் நூறுநூறாகக்கொண்டு வருவேன். அரசன் என்னுடையசெய்கைகளைக்கண்டு என்னை அலக்ஷியஞ்செய்யமாட்டான். நான், யுத்தங்களில்ஜயிக்கப்படாதவர்களும் பலவாறு தங்கள்ப்ரதாபத்தைவெளியிட்டவர்களும் பலத்தில் அரசனுக்குநம்பிக்கையையுண்டுபண்ணினவர்களும் [1]ரங்கஸ்தலத்தை அண்டிப்பிழைக்கின்றவர்களும் பகைவர்களுக்குப்பயத்தையுண்டுபண்ணுகின்றவர்களுமான அவ்வரசனுடைய பெரியமல்லர்களனைவரையும்அடித்து அரசனுக்கு ப்ரீதியையுண்டுபண்ணுவேன். அவர்களோடுயுத்தம்பண்ணுகின்றநான் அவர்களை யமலோகத்துக்குஅனுப்பப்போகிறதில்லை. அந்தமல்லர்கள் துன்பத்தையடைந்தவர்களாக ஜீவித்திருக்கும்படி அவர்களைத் துன்பஞ்செய்யப்போகிறேன். எருதோ எருமைக்கடாவோ அறுபதுவருஷம்சென்றயானையோ ஸிம்மமோ புலியோ (எதுவானாலும்) ஸம்சயமில்லாமல் என்னால் பிடிக்கத்தக்கதாகும். மற்றவர்களால் பிடிக்கமுடியாதவைகளும் ஸர்ப்பங்களுடையவிஷத்துக்கொப்பானவைகளுமான அவைகளெல்லாவற்றையும் மத்ஸ்யராஜன் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே நான் பலாத்காரமாய்ப்பிடிப்பேன். விராடனுடைய மடைப்பள்ளியில் சமையற்காரர்களாகவும் மாம்ஸங்களைபாகஞ்செய்கின்றவர்களாகவும் ஏவப்பட்டிருக்கிறமனிதர்களையும் என்னுடையசெய்கையினால் ஸந்தோஷப்படுத்துவேன். நான் யுதிஷ்டிரரிடத்தில் சமையற்காரனும் மதங்கொண்டபெரியகாளைகளைப்பிடித்துஅடக்குகின்றவனும் பருப்பு பக்ஷணமுதலானவைகளைச் செய்கின்றவனும் மல்லயுத்தஞ் செய்கின்றவனுமாகஇருந்தேனென்று ஜனங்களுக்குச்சொல்வேன். ராஜரே! என்னை நானே காப்பாற்றிக்கொண்டு ஸஞ்சரிப்பேன். விராடநகரத்தில் விராடராஜனுக்கருகில் நான் எவ்விதம்மறைந்துவஸிக்கப்போகிறேனென்பது என்னால்இவ்விதம் ப்ரதிஜ்ஞைசெய்யப்பட்டது" என்றுகூறினான்.

யுதிஷ்டிரர், "அக்நியானவன் ப்ராம்மணவேஷத்தால் மறைந்து 'அர்ஜுனா! அதிகஆஹாரத்தைவிரும்புகின்றவனும் ப்ராம்மணனுமாயிருக்கின்றஎன்னைக் காண்டவவனத்தில்விட்டுவிடு' என்று உணவுக்காகவேண்டினான். தர்மபுத்தியுடையவனும் பெரும்புகழுள்ள

---

[1] மல்லயுத்தம்செய்வதற்குத்தகுதியானஒருவிதஸமதரை.

வனுமான அர்ஜுனன் ப்ராம்மணரூபமுள்ள அந்த அக்நிபகவானுக்கு ப்ரதிஜ்ஞைசெய்து ஒருரத்தத்தினாலேயே இந்த்ரனைஜயித்து ஸர்ப்பங்களையும் ராக்ஷஸர்களையும்கொன்று அந்தக்கார்யத்தைநிறைவேற்றினான். தேவர்களையும் மனிதர்களனைவர்களையும் ஒருதோளியாகவே வென்றவனும் பயங்கரமானவில்லையுடையவனும் வெண்மையான குதிரைகளையுடையவனுமான பாண்டவன் என்னசெய்யப்போகிறான்? வ்ருகோதர! ஸர்ப்பத்துக்கொப்பான ஸ்பர்சத்துடன்கூடின இந்த அர்ஜுனன், [1]ஸர்ப்பங்களுள் வாஸுகிபோலவும் பாம்புகளுள்கண்ணில் விஷமுள்ளபாம்புபோலவும் தேஜஸ்விகளுள் அக்நிபோலவும் நதிகளுக்கு ஸமுத்ரம்போலவும் மலைகளுள் இமயம்போலவும் தேவர்களுள் மஹேந்த்ரன்போலவும் அஸுரர்களுள் பலிபோலவும் சிறந்தயானைகளுள் ஸுப்ரதீகமென்கிறதிக்கஜம்போலவும் நுகத்தடியைவஹிக்கின்றவைகளுள் குதிரைபோலவும் யக்ஷர்களுள் குபேரன்போலவும் ம்ருகங்களுள் ஸிம்மம்போலவும் ராக்ஷஸர்களுள் ராவணன்போலவும் தைத்யர்களுள் சம்பரன்போலவும் ருத்ரர்களுள் காபாலிபோலவும பலமுள்ளவர்களுள் விஷ்ணுபோலவும் ஸர்ப்பங்களுள் ரோஷமும் பொறுமையுமுள்ள தக்ஷகன்போலவும் பறவைகளுள் வாயுவைப்போல் வேகத்தாலும் பலத்தாலும் நடுங்கச்செய்கின்ற கருடன்போலவும் தபிக்கச்செய்கிறவர்களுள் ஸூர்யன்போலவும் மனிதர்களுள் ப்ராம்மணன் போலவும் மடுக்களுள் பாதாளம்போலவும் கர்ஜிக்கின்றவைகளுள் மேகம்போலவும் ஆயுதங்களுள் உத்தமமானவஜ்ரம்போலவும் பசுக்களுள் திமிலுடன்கூடியசிறந்தகாளைபோலவும் நாகங்களுள் த்ருதராஷ்ட்ரன் போலவும் யானைகளுள் ஐராவதம்போல்வும் ப்ரியமுள்ளவஸ்துக்களுள சிறந்தபுத்ரன்போலவும் ஸுஹ்ருத்துக்களுள் உத்தமியானமனைவி போலவும் மலைகளுள் ச்ரேஷ்டமானமேருகிரிபோலவும் தேவர்களுள் மதுஸூதனர்போலவும் க்ரஹங்களுள் உத்தமமானசந்த்ரன்போலவும் தடாகங்களுள் மாநஸஸரஸ்போலவும் சிறந்தவனாயிருக்கிறான். இவைகள் தத்தம்ஜாதிகளில் சிறந்திருப்பனபோலவே யௌவனமுள்ளவனான [2]குடாகேசன் எல்லாவில்லாளிகளுள்ளும் சிறந்தவன். பாரத! அப்படிப்பட்ட இந்த அர்ஜுனன், இந்த்ரனையும் வாஸுதேவரையும் காட்டிலும் சிறந்தவன். ப்ரம்மசாரியும் வ்ரதத்தில்பற்றுள்ளவனும் சஸ்த்ரதாரிகளனைவர்களுள்ளும்உத்தமனும் அஸ்த்ரங்களையறிந்தவனும் எல்லாமறிந்தவனும் எல்லோராலும்ஏற்றுக்கொள்ளப்பட்டவ

[1] பாம்பின்வகைகள்

[2] ஆலஸ்யமற்றவன் அல்லது சுருட்டையானகேசமுடையவன்.

னும் பேசுகிறவர்களுள்சிறந்தவனுமான இந்தஅர்ஜுனன் இந்த்ர னுடையஅரண்மனையில் ஐந்துவர்ஷகாலம்வாஸஞ்செய்து வேகமுள் ளதும் ஸூக்ஷ்மமும் விசித்ரமும் சாச்வதமுமானஅஸ்த்ரத்தைப்பெற் றுத் தேவராஜனிடம்அநுமதிபெற்று த்ருதராஷ்ட்ரபுத்ரர்களுடைய விநாசத்தின்பொருட்டும் பாண்டவர்களுடையஜயத்தின்பொருட்டும் மீண்டு பூலோகத்துக்கு வந்தான். எவனைப் பன்னிரண்டாவதுருத்ர னென்றும் பதின்மூன்றாவதுஸூர்யனென்றும் [1]ஒன்பதாவதுவஸு வென்றும் எட்டாவதுகுலாசலமென்றுமஎண்ணுகிறேனோ, எவனு டையஇடக்கைவலக்கைகளிரண்டும் நீண்டவையும், ஒரேஅளவுள்ள வையும், நாண்கயிறுஉரைவதினால்தழும்புபட்டவையும், காளைகளு டையமுன்கால்கள்போன்றவையும, கையுறை விரலுறை இவைக ளோடு எப்பொழுதும் சேர்க்கைபெற்றவையும்,கஜராஜனுடையதுதிக் கைக்கொப்பானவையும், பருத்தவையும், பரிகாயுதங்கள்போன்றவை யும், ம்ருதுவானவையும் சிவப்பானவையுமானஉள்ளங்கைகளுடன் கூடியவையும்,மங்களகரமுமாகவிளங்குகின்றனவோ,கறுத்தநிறமுடை யவனும் யௌவனமுள்ளவனும் வளைந்திருக்கின்றகேசங்களுடைய வனும் அழகியதோற்றமுடையவனும் பாண்டுபுத்ரனும் காண்டீவம் என்கிறவில்லையுடையவனும் வெண்குதிரைகளையுடையவனும் கிரீடத் தைத்தரித்தவனும் வானரக்கொடியுள்ளவனும் [2]பீபத்ஸுவும் பயங் கரமானவில்லையுடையவனும் குந்திபுத்ரனுமான அந்தஅர்ஜுனன் எந்தரூபத்தைவடுத்து எவ்விதகொள்கையுடன் எவ்விதச்செய்கை யுள்ளவனாகவும் எதைப்ரதானமாகக்கைப்பற்றினவனாகவுமிருந்துகொ ண்டு எதைச்செய்வான்? விராடனுக்கு எந்தக்கார்யத்தைச்செய்து இனிதுவஸிப்பான்?" என்றுவினவ, அர்ஜுனன் "பாதச்ரேஷ்டரே! நாண்கயிற்றின்உரைதலினாலும் கையுறையினுடையஉரைதலினாலும் தழும்புபட்டிருக்கிற இந்தஇரண்டுகைகளையும் எப்பொழுதுமே சட் டையினால்மறைப்பதற்கு நான்விரும்புகிறேன். வேறுவிதத்தால்மறை ப்பதற்கு என்னால்முடியாது. ஆதலால், கார்யநிமித்தம் இந்தஇழி வானதொழிலை நான்செய்யப்போகிறேன். நாண்கயிறுஉரைதலால் உண்டுபண்ணப்பட்ட பெரிதானதழும்பினால் அடையாளமிடப்பட் டிருக்கின்ற என்னுடைய இரண்டு பெரியகைகளையும் வேறுவிதத்தி னால்மறைப்பதற்கு நான்விரும்பவில்லை. இரண்டுசங்குவளையல்களையும் தொங்குகின்றகுண்டலங்களையும்அணிந்து, பின்னிவிடப்பட்டிருக் கிறதலைமயிருடன் ப்ருஹன்னளை என்று பெயருடையவனாயிருப்பேன்.

[1] இரண்டுசொற்கள்விடப்பட்டன. [2] அவன்பெயர்களுள்ஒன்று.

ஸ்த்ரீகளுக்குரியஸ்வபாவத்தினாலேயே மறுபடியும் மறுபடியும் கதையைப்படித்துக்கொண்டும் ப்ரஜைகளுடையநடக்கையைப் பலவிதமானபரிஹாஸத்துடன் எடுத்துச்சொல்லிக்கொண்டும் விராடராஜனையும் அந்தப்புரத்திலுள்ள மற்றஜனங்களையும் ஸந்தோஷப்படுத்துவேன். ராஜரே! விராடநகரத்தில் ஸ்த்ரீகளுக்கு அற்புதமும் அவ்வாறே பற்பலவிதமுமான நர்த்தனத்தையும் கானத்தையும் வாத்யத்தையும் கற்பிப்பேன். ராஜேந்த்ரரே! ஸ்த்ரீகளுடையதன்மைக்குரியநடக்கையினாலும் நாட்டியம் கானம் கதைஇவைகளைப்பற்றினசெய்கைகளாலும் என்னை நான் கபடத்தினால்மறைத்துக்கொள்ளப்போகிறேன். 'யுதிஷ்டிரருடைய அரண்மனையில் அவரால்ஒப்புக்கொள்ளப்பட்டவளாகவும் த்ரௌபதியினுடையபரிசாரிகையாகவும் வஸித்துவந்தேன்' என்றுசொல்லிக்கொள்வேன். ராஜரே! உர்வசியினுடையசாபத்தினால் நான் நபும்ஸகத்தன்மையடைந்திருக்கிறேன். இந்த்ரனுடைய அநுக்ரஹத்தினால் பதின்மூன்றுவது வர்ஷத்துக்கு மேல் சாபத்தினின்றுவிடுபடுவேன். நான் எவ்வாறுவஸிப்பேனென்பது இவ்விதம் என்னால் ப்ரதிஜ்ஞைபண்ணப்பட்டது. ராஜேந்த்ரரே! இப்படிப்பட்ட [1]க்ருத்ரிமமானவேஷத்தால் நளன்போல்மறைந்தவனாகி விராடநகரத்தில் ஸுகமாகவஸிக்கப்போகிறேன்" என்று மறுமொழிகூறினான்.

யுதிஷ்டிரர், "உலகத்தில் கீர்த்தியினாலும் பராக்ரமத்தினாலும் வாஸுதேவருக்கொப்பானவனும் பரதச்ரேஷ்டனும வஜ்ரம்போல உறுதியான [2]முஷ்டியுள்ளவனுமான இந்த அர்ஜுனன், மஹாமேரு மறைக்கப்படுவதுபோல் விராடராஜ்யத்தில் விராடனுடைய அரண்மனையில் மறைந்துவஸித்துக்கொண்டு, 'நான் நபும்ஸகனென்றுசொல்லப்போகிறேன்' என்று ப்ரதிஜ்ஞைசெய்தது பாதகமன்றோ" என்று கூறினார்.

நான்காவது அத்யாயம்.

பாண்டவப்ரவேசபர்வம். (தொடர்ச்சி.)

(நகுலனும் ஸஹதேவனும் த்ரௌபதியும் தாம்வஸிப்பதைக்குறித்து ப்ரதிஜ்ஞைசெய்தது.)

புருஷர்களுள்சிறந்தவீரனும் தார்மிகர்களுள்ச்ரேஷ்டனுமான அர்ஜுனன் இவ்வாறு வார்த்தைசொல்லிவிட்டுப் பேசாமலிருந்தான். ராஜாவானயுதிஷ்டிரர் மற்றொருப்ராதாவைப்பார்த்து மறுபடியும்சொ

---

1 செய்துகொண்டது. 2 வில்லைப்பிடித்தல்.

ல்லலானார். "ம்ருதுவானதேஹமுள்ளவனும் சூரனும் பார்க்கத்தகுந்தவனும் ஸுகானுபவத்துக்கேற்றவனும் துக்கத்தை அனுபவிப்பதற்குத்தகாதவனும் பாலனும் எப்பொழுதும் லாலனஞ்செய்யப்பட்டவனுமான இந்தநகுலன் எவ்விதமானதொழிலேயும் எவ்விதமானஒழுக்கத்தையுமுடையவனாகஇருக்கப்போகிறானோ? துன்பமுற்றவனும் அமைதியுள்ளவனுமான அப்படிப்பட்ட இந்தநகுலன இந்தஸமயத்தில் எந்தவேலையைச்செய்யவிரும்புவானோ? அப்பா! நகுலா! விராடராஜனுடையராஜ்யத்தில் நீ எந்தக்கார்யத்தைச்செய்துகொண்டு வஸிக்கப்போகிறாய்? அந்தக்கார்யத்தை எனக்குச்சொல்வாயாக" என்றார்.

நகுலன், "குருராஜரே! நான் தாமக்ரந்தியென்கிறபெயருடன் விராடனுடையகுதிரைகளுக்குத் தலைவனாவேனென்பது என்எண்ணம். இந்தச்செய்கை எனக்கு மிக்கவிருப்பமானது. (குதிரைகட்டுகிற) கயிற்றுவேலையில் ஸமர்த்தனும் தாமக்ரந்திஎன்றபெயரால் அறியப்பட்டவனுமானஎன்னை ஜனங்கள் இப்புவியில் ஓரிடத்திலும் ஒருபொழுதும் அவமதிக்கமாட்டார்கள். குதிரைகளைப்பழக்குவதிலும் அவ்வாறே அவைகளுக்குவைத்யம்செய்வதிலும் நான் ஸமர்த்தனாயிருக்கிறேன். உமக்கு எவ்வாறு குதிரைகள் ப்ரியமுள்ளவைகளோ அவ்வாறே எனக்கும் எப்பொழுதும் ப்ரியமுள்ளவைகள். குதிரைக்குட்டிகளும் அவ்வாறே பெண்குதிரைகளும் என்னை அவமதிக்கமாட்டா. என்னை அடைந்திருக்கின்ற குதிரைகள், அவைகளின்முதுகில் ஏறுவதிலும் தேரில்கட்டுவதிலும் துஷ்டத்தனமுள்ளவைகளாகமாட்டா. ஐயா! விராடநகரத்தில் என்னைப்பார்க்கிறஜனங்களுக்கு, 'நான் முன்பு பாண்டுகுமாரரால் குதிரைகள்விஷயங்களில் அதிகாரம்கொடுக்கப்பெற்றிருந்தேன்' என்று இவ்விதமாகச்சொல்லிக்கொண்டு ஸுகமாகஸஞ்சரிப்பேன். ராஜரே! இவ்வாறு அந்தவிராடனுடையநகரத்தில் மறைந்துஸஞ்சரிக்கப்போகிறேன். எவ்விதமாக நான்வஸிப்பேனென்பது உங்களிடத்தில் ப்ரதிஜ்ஞைசெய்யப்பட்டது" என்று மறுமொழிகூறினான்.

நகுலன் இவ்வாறுசொல்லியதைக்கேட்ட தர்மராஜர், "இந்த ஸஹதேவன் புத்தியில் ப்ருஹஸ்பதிக்குஒப்பானவனும் நீதியில்சுக்ரனுக்குஸமானனும் பற்பலமந்த்ராலோசனைகளில் ஸமர்த்தனும் வழியைவிட்டுவிலகாத நற்செய்கைகளில்நிலைபெற்றவனும் நன்றாகப்பழக்கப்பட்டவனும் நல்வழியில்நிற்பவனுமாகி ராஜதந்த்ரத்தை அறிந்திருக்கிறான். அந்தராஜநீதியை அறிந்திருக்கிறஜனங்கள் கொஞ்சமேனும் இவனிடத்தில் தவறுதலைக்கண்டார்களில்லை. ஏ! ஸஹதேவ! நல்ல

ராஜநீதியை அறிந்தவனும் சூரனும் எல்லாமந்த்ரங்களிலும்ஸமர்த்த னும் நம்முடையதாயானகுந்திக்கு எப்பொழுதுமே அதிகமான அன்புக்குவிஷயமானவனுமான நீ அந்தவிராட்ராஜனுக்கு எவ்வித மானதொழிலைச்செய்யப்போகிறாய். அப்பா! நீ எந்தக்கார்யத்தைச் செய்துகொண்டு மறைந்துஸஞ்சரிக்கப்போகிறாய்?" என்றுவினவ, ஸஹதேவன் "(ராஜரே!) நான் பசுக்களுக்குத்தீனிபோட்டுப்போ ஷிப்பவனும் கறக்கிறவனுமாகி விராடனுடையபசுக்களைக் காப்பவனு யிருக்கலாமென்பது என்விருப்பம். நான்பசுக்களுடையஸ்வபாவத் தை அறிவதில் ஸமர்த்தன். என்பெயர் தந்த்ரீபாலனென்று நான் சொல்லிக்கொள்வேன். என்றால் அப்பொழுது விராடநகரத்தில் காக்கப்பட்டபசுக்கள் நோயற்றவைகளும் எண்ணிக்கையினால்அதி கப்பட்டவைகளும் புஷ்டியுள்ளவைகளும் பாலுள்ளவைகளும் அநேக கன்றுகளையுடையவைகளும் நல்லபலமுள்ளவைகளும் நன்றாகப்போ ஷிக்கப்பட்டவைகளும் ஜ்வரமும்தோஷமும்அற்றவைகளும் திருடர் பயமில்லாதவைகளும் எப்பொழுதுமே வியாதிகளாலும் புலிகளாலும் விலக்கப்பட்டவைகளும் நன்றாகஒன்றுகூடினவைகளும் மனத்துயா மற்றவைகளும் துன்பமில்லாதவைகளுமாகப்போகின்றன. நான் இவ் விஷயத்தில் ஸமர்த்தனாயிருப்பேன். இதில் எனக்கு அதிகமான ப்ரீதியிருக்கிறது. நான் முற்காலத்தில் உம்மால் எப்பொழுதுமே பசுக்காத்தலில் ஏவப்பட்டிருந்தேன். ராஜரே! அதில் எனக்கு ஸம் பூர்ணமான ஸாமர்த்யமுண்டு. அரசரே! பசுக்களுடையசுபமான லக்ஷணமும் நடையும் மற்றுமுள்ளயாவும் என்னால் நன்றாய் அறியப் பட்டிருக்கின்றன. வேந்தரே! எந்தக்காளைகளுடைய மூத்ரத்தை மோந்துபார்த்து மலட்டுப்பசுவும் கன்றையீனுமோ அப்படிப்பட்ட உயர்ந்தலக்ஷணத்தையுடையகாளைகளையும் நான் அறிவேன். அத்த கைய நான் இவ்வாறு ஸஞ்சரிக்கப்போகிறேன். எனக்கு இவ்விஷ யத்தில் ப்ரீதியானது அதிகமன்றோ? நான் விராடநகரத்தில் அச்செ ய்கையினால் மறைந்துகொண்டு மகிழப்போகிறேன். தோஷமற்றவரே! விராடராஜனை நான் ஸந்தோஷப்படுத்துவேன். உமக்குக் கவலைவே ண்டாம். ராஜரே! என்னைப் பகைவன் அறியமாட்டான். (ஆதலால்,) அச்செய்கையானது உமக்குவிருப்பமாயிருக்கலாம். எவ்வாறு நான் ஸஞ்சரிப்பேனென்கிறஇந்தவிஷயமானது உங்களிடத்தில் என்னால் ப்ரதிஜ்ஞைபண்ணப்பட்டது" என்று மறுமொழிசொன்னான்.

யுதிஷ்டிரர், 'த்ருபதராஜகுமாரியாகிய க்ருஷ்ணையானவள் எவ் விதமானகார்யத்தைச்செய்துகொண்டு விராடநகரத்தில் வஸிக்கப்

போகிறாள்? ஸாமான்யஸ்த்ரீகளைப்போல த்ரௌபதியானவள் கார்யம் யாதொன்றையும் செய்வதற்கு அறியாள். இவள் [1]பிறந்தநாள் முதல் புஷ்பமாலைகள் சந்தனங்கள் அலங்காரங்கள் பற்பலவஸ்த்ரங்கள் இவைகளைமாத்ரமே அறிவாள். பதிவ்ரதையும் மஹாபாக்யமுள்ளவளுமான இந்தப்பாஞ்சாலியானவள் எவ்வாறு ஸஞ்சரிக்கப்போகிறாள்? இவளோ நமக்கு ப்ரியமானமனைவி; ப்ராணனைக்காட்டிலும் சிறந்தவள்; தாய்போலக் காப்பாற்றத்தக்கவள்; மூத்தஸஹோதரிபோலப் பூஜிக்கத்தக்கவள். மென்மையான தேஹமுள்ளவளும் நல்லஇயற்கையுடையவளும் கீர்த்தியுள்ளவளும் மங்களத்தைச்செய்பவளும் பதிவ்ரதையுமாயிருக்கிற ராஜபுத்ரியானவள் விராடநகரத்தில் எவ்வாறுவஸிக்கப்போகிறாள்?" என்றார்.

த்ரௌபதி, "ராஜேந்த்ரரே! ராஜரே! என்னிமித்தமானசோகம் உமக்குவாராவண்ணம் நான் வஸிப்பேன். நீர் மனக்கவலையற்றிரும். ராஜரே! ப்ரபுவே! என்னைப் பிறர் அறியாவண்ணம் எதை நான்செய்வேனென்பதைக் கேளும். ராஜரே! நான் மறைந்து வாஸஞ்செய்யப்போகிறேன். ஒருவரும் என்னை அறியமாட்டார்கள். அவ்விதமானநடக்கையையும் நான்சொல்லுகிறேன். உமக்கு ஸுகமுண்டாகட்டும். மஹாராஜரே! நற்குலத்தில்பிறந்தவளானநான் [2]ஸைரந்த்ரிஎன்கிறபெயருடன் வ்ரதத்தை அனுஷ்டிப்பவளாக விராடனுடைய அரண்மனையில் வஸிக்கப்போகிறேன். இஃது என்னுடையஎண்ணம். பாரதகுலத்தில்உதித்தவரே! ஸைரந்த்ரிகள் ஸ்த்ரீகளுக்குப் பரிசாரிகைகளாக ரக்ஷிக்கப்படுகிறார்கள். இந்தஸ்த்ரீகள் ஒருபர்த்தாவையுடையவர்களென்பது உலகத்துக்குநிச்சயம். அப்படிப்பட்டநான் தலைபின்னுவதில்ஸாமர்த்தியமுள்ள ஸைரந்த்ரிஎன்றும் உலகத்தில் தேசாந்தரம்போயிருக்கின்றபுருஷர்களுடையஸ்த்ரீகளை ஸமாதானஞ்செய்கின்றவளென்றும் சொல்லிக்கொள்ளப்போகிறேன். பாரதரே! அரசன் என்னைக்கேட்பானாகில், 'நான் யுதிஷ்டிரருடைய அரண்மனையில் த்ரௌபதிதேவிக்கு ஊழியஞ்செய்துகொண்டு வாஸஞ்செய்துவந்தேன்' என்றுசொல்லுவேன். நீர் என்னை எதைப்பற்றிக்கேட்டீரோ அவ்விஷயத்தில் என்னுடையஸ்வரூபத்தை நானேமறைத்துக்கொண்டு ஸஞ்சரிக்கப்போகிறேன். ராஜரே! நான் அந்தராஜக்ருஹத்தில்

---

1 வேறுபாடம்.

2 பிறருடையவீட்டில்வஸித்துக்கொண்டு ஸ்வாதந்த்ர்யத்துடனும் கற்புடனும் ராஜஸ்த்ரீமுதலானவர்களுக்குத் தலைபின்னுதல் விசித்ரமானபடம் எழுதுதல்முதலானசில்பங்களைச்செய்பவள்.

போஷிக்கத்தகாதவளாகமாட்டேன். நான் எப்பொழுதும் வ்ரதத்திலேயே என்னைக்காப்பாற்றிக்கொண்டு கீர்த்தியுடையவளும் ராஜபத்னியுமான ஸுதேஷ்ணையை அடையப்போகிறேன். அவள் (தன்னிடம்) வந்திருக்கின்ற என்னைக் காப்பாற்றுவாள். உமக்கு இவ்விதமான துயரம் வேண்டாம். மேலும், அவ்விடத்தில் வஸிக்கின்றவளானநான் உங்களால் பாதுகாக்கப்பட்டவளாகவே ஸஞ்சரிப்பேன். நான் எவ்விதமாதவாஸஞ்செய்யப்போகிறேனென்பதை இவ்விதம் உங்களிடத்தில்ப்ரதிஜ்ஞைசெய்துவிட்டேன்" என்று மறுமொழி கூறினள்.

யுதிஷ்டிரர், "ஏ! கல்யாணி! கெட்டஎண்ணமுடையவர்களும் பாபிகளுமாயிருக்கின்றநம்முடையசத்ருக்கள் மறுபடியும் ஸுகமுடையவர்களாகாமலும், அவர்கள் நம்மைக்கண்டறியாமலும் நீசெய்வாயாக. க்ருஷ்ணையே! நற்குலத்திலுதித்தவளுக்கு எதுதகுந்ததோ அவ்வித மங்களகரமான வார்த்தையைப்பேசுகிறாய். பதிவ்ரதையும் நல்லொழுக்கத்தில் நிலைபெற்றவளுமான நீ ஒருபாபத்தையும்அறியாய்" என்றார்.

ஐந்தாவது அத்யாயம்.

பாண்டவப்ரவேசபர்வம். (தொடர்ச்சி.)

(பாண்டவர்கள் இந்த்ரஸேனன்முதலானவர்களை த்வாரகை முதலானஇடங்களுக்குப்போகும்படிஏவியதும், தௌம்யர் ராஜக்ருஹத்தில் வஸிக்கவேண்டிய முறைகளைப் பாண்டவர்களுக்குக்கற்பித்ததும்.)

யுதிஷ்டிரர், "உங்களால் எந்தக்கார்யங்கள்சொல்லப்பட்டனவோ அந்தக்கார்யங்களை நீங்கள் அனுஷ்டித்துவாருங்கள். எனக்கும் நிச்சயத்தினால் உசிதமானஒருபுத்திஉண்டாயிருக்கின்றது. நம்முடையபுரோகிதரானஇந்தத்தௌம்யர் த்ருபதனுடையஅரண்மனையில் ஸூதர்களோடும் சமையற்காரர்களோடுங்கூட அக்னிஹோத்ரங்களைப்பாதுகாக்கட்டும். இந்த்ரஸேனனைமுதன்மையாகக்கொண்ட இவர்கள் வெற்றுரதங்களைநடத்திக்கொண்டு சீக்ரம் த்வாரகையை அடையவேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது. த்ரௌபதியினுடைய பரிசாரிகைகளானஇந்தப்பெண்களனைவர்களும் ஸூதர்களோடும் சமையற்காரர்களோடும் பாஞ்சாலதேசத்துக்கேசெல்லட்டும். எல்லாரும், 'மஹாத்மாக்களானபாண்டவர்களனைவர்களும் நடு

நிசியில் எங்களையும் பிக்ஷையெடுத்துப்புஜிக்கின்றப்ராம்மணர்களையும் விட்டுவிட்டு த்வைதவனத்தினின்றும் எங்கேயோபுறப்பட்டுப்போய் விட்டார்கள்; அறியக்கூடவில்லை' என்றுசொல்லவேண்டும்'' என்று ஆஜ்ஞாபித்தார். இவ்வாறு அந்தப்பாண்டவர்கள் தனித்தனியாக அவ ரவர்களுடையசெய்கைகளை எடுத்துக்கூறிப் பரஸ்பரம் விடைபெற்றுக் கொண்டு, பிறகு, தௌம்யரிடம்விடைபெற்றுக்கொண்டார்கள். ராஜ ரே! தர்மத்தில்மனத்தைச்செலுத்தினவரும் எல்லாத்தர்மங்களின் விசேஷங்களையும்அறிந்தவரும் புரோஹிதருமான அந்தத்தௌம்ய ரும் புருஷச்ரேஷ்டர்களான அந்தப்பாண்டவர்களுக்கு நீதியைஉப தேசிக்கத்தொடங்கினர்.

"ராஜரே! உலகத்திலுள்ளஇந்தநடக்கையெல்லாம் எவ்விதமா யிருக்கின்றதென்பதைநீர் அறிந்திருக்கிறீர். அறிந்திருந்தாலும் நண் பர்கள் ப்ரீதியினால்சொல்லத்தக்கதே. ஆதலால், நான் (உங்களுக்குச் சிலவிஷயங்களைச்) சொல்லப்போகிறேன். காரணத்தைமாத்ரம்அறி ந்துகொள்ளுங்கள். ஓ! ராஜபுத்ரர்களே! எவ்வாறுஅயல்தேசம் சென்று ராஜக்ருஹத்தைஅடைந்துஸஞ்சரிப்பவன் கெடுதியடையாம லிருப்பனோ அவ்விதமான இந்தராஜக்ருஹத்தில்வஸிக்கும்உபாயத் தை உங்களுக்கு நான்அன்பினால்சொல்லுகிறேன். குருகுலத்தில்உதி த்தவரே! கௌரவிக்கத்தக்கவரே! கௌரவர்களுடையஅரண்மனை யில் பிறந்தஒருவன் கௌரவிக்கப்படாமல் ஒருவருஷகாலம் மறைந்து வாஸஞ்செய்வதென்பது மிக்ககஷ்டமே. உள்ளேவரலாமென்று அனு மதிபெற்றுக்கொண்டு அரசனைப்பார்க்கவேண்டும். அரசர்களுடைய பொருள்களில் நம்பிக்கைவைக்கலாகாது. தன்னைக்கேளாமலிருக் கையில் அரசனுக்கு ஒருபொழுதும் நீதிசொல்லக்கூடாது. பேசாம லிருந்துகொண்டே அவனைஉபாஸிக்கவேண்டும். தகுந்தஸமயத்தில் அவனைப்புகழவேண்டும். பொய்சொல்லுகின்ற ஜனங்களிடத்தில் அரசர்கள் அஸூயைப்படுவார்கள். அவ்வாறே பொய்சொல்லுகின்ற மந்த்ரியை அரசர்கள் அவமதிப்பார்கள். மிகவும்அல்பமாயினும் கார் யங்களை அரசனிடத்தில்தெரிவித்துச்செய்யவேண்டும். இவ்வாறுஅர சனிடத்தில்பழகுபவனுக்கு ஒருபொழுதும்குறைநேரிடாது. ஏ! பா ண்டவரே! உலகத்தில் ப்ராணிகளை (உணவுமுதலியவற்றால்) போஷிக் கின்றவனும் (ஆபத்தினின்று) காப்பாற்றுகின்றவனும் எல்லாச்சஸ்த் ரங்களாலும்நிறைந்தவனுமான அரசன் புருஷவடிவங்கொண்ட ஒரு பெருநெருப்பு. அரசனை அடுத்திருப்பவனை எவ்விதத்திலும் தோஷம் எவ்வாறு அணுகாதோ அவ்வாறான அவனுடையசரித்ரத்தைத் தெரி

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY

ந்துகொள்ளுங்கள். புத்திசாலியான ஒருவன், க்ஷத்ரியனையும் ஸர்ப்பத்தையும் அதிகமாகக்கற்றறிந்தப்ராம்மணனையும் அசக்தர்களாயிருந்தாலும் ஒருபொழுதும்அலக்ஷியஞ்செய்யக்கூடாது. இம்மூவரும் அவமதிக்கப்பட்டால் மனிதனைஎரிப்பர். ஆதலால், கற்றறிந்தவர்கள் எப்பொழுதும் அரசனை முயற்சியுடன்பூஜிக்கவேண்டும். அரசனால் ஸம்மதிக்கப்பட்டபுருஷன் வரம்புகடந்து செல்லக்கூடாது. பண்டிதர்கள் உலகத்தில் (அவனவனுக்குரிய) மர்யாதையைத்தான் வ்யவஹாரமென்று அறிந்திருக்கிறார்கள். பகைவர்களை அடக்குபவரே! அரசர்கள், புத்ரனானாலும் பேரனானாலும் ஸஹோதரனானாலும் வரம்பு கடந்துநடப்பவனைப் புகழமாட்டார்கள். அரசனால் ஒருவித அதிகாரங் 'கொடுக்கப்பட்டவன்' மிக்கசெல்வத்தையடைந்திருந்தாலும் தனக்குரியநிலைமையை ஆலோசித்துப் பிறவிக்குருடனைப்போலத் தன்னைக் கருதவேண்டும். அரசனிடத்தில்பழகுபவன் தைர்யசாலியாக எப்பொழுதும்வாயிலைப்பார்த்துக்கொண்டு அரசர்களிடத்தில்நம்பிக்கையில்லாதவனாயிருக்கவேண்டும். அரசர்களிடத்தில் நம்பிக்கைவைக்கக் கூடாது. எந்தஆஸனத்தில் பிறன்ப்ரியம்வைக்கமாட்டானோ அந்த ஆஸனத்தையே விரும்பவேண்டும். ராஜக்ருஹத்தில்வஸிக்கின்றபுருஷன் எந்தஆஸனத்தில்உட்கார்ந்தால் மிக்கபலவானான ஒருவனுடைய மனம்வருந்தாதோ அந்த ஆஸனத்தை விரும்பவேண்டும். ராஜக்ருஹத்தில்வஸிப்பவன் எந்தஇடத்தில் எவ்வாறு உட்கார்ந்திருந்தால் இவன் துஷ்டகார்யம்செய்கிறவனென்று மற்றவன்ஸந்தேஹிப்பானோ அந்த இடத்தில் அவ்வாறுஒருபோதும்உட்காரக்கூடாது; தனக்குரியஇடத்தில் இஷ்டப்படிஇருக்கலாம்; அல்லது, அரசனுடையஸமீபத்தில் நிற்கலாம்; பிறனுடையஆஸனத்தை ஒருபொழுதும் விரும்பவே கூடாது. வேறொருவனுடையஆஸனத்தில் உட்கார்ந்தால் இவனை அவனுடையவேலைக்காரர்கள் ஸபையில்இழுத்துவிடுவார்கள்; சத்ருக்களால் பரிஹஸிக்கப்படுவான். வேலைக்காரன் தனத்துக்காக அரசனை அடைந்திருத்தலால் எப்பொழுதும் அரசனுக்கு முன்னிலையிலிருப்பதுகூடாதென்று (நீதிமான்கள்) எண்ணுகிறார்கள். ராஜரே! கற்றறிந்தவன், அரசனுடையவலப்பக்கத்தையோ இடப்பக்கத்தையோ அடைந்து விநயமுள்ளவன்போல் நிற்கவேண்டும். அரசனுக்கு முன்புறத்திலாவது பின்புறத்திலாவதுநிற்கக்கூடாது. பின்புறத்திலுள்ள இடமானது அரசனைக்காப்பாற்றும்ஆயுதபாணிகளுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. மனிதர்களைவசப்படுத்துவதின்பொருட்டுத் தாய்வம்சத்திலாவது தகப்பன்வம்சத்திலாவதுள்ள (பெரியோர்

களுடைய) நாமதேயத்தையும் நன்னடக்கையையும் எப்பொழுதும் சொல்லவேண்டும். அரசனால் பூஜிக்கப்பட்டும் எந்தமனிதன் அவ்வரசனுக்கு ப்ரதிபூஜைசெய்யவில்லையோ அந்தமனிதனை அரசன், ஆசார்யன்சோம்பேறியானசிஷ்யர்களைக்கௌரவியாததுபோல, ஒருபொழுதும் கௌரவப்படுத்தமாட்டான். ராஜக்ருஹத்தில்வஸிப்பவன் 'நான்அரசனுடைய அன்புக்குப்பாத்ரமாயிருக்கிறேன்' என்று அரசனுடையவாஹனத்திலாவது கட்டிலிலாவது ஆஸனத்திலாவது ரதத்திலாவது ஏறக்கூடாது. எந்தமனிதன், வீட்டினின்றுவெளிப்பட்டுச் செய்யவேண்டியகார்யத்தை நினைத்துக்கொண்டு அபிவ்ருத்தியில்உறுதியானஎண்ணமுள்ளவனும் சோம்பலற்றவனும் மனத்தை அடக்கினவனுமாகி, பசிதாகங்களால்வருத்தப்பட்டாலும் ரோதனஞ்செய்யாமல், கஷ்டத்தினால் ஸுகத்தையடையவேண்டுமென்று விரும்புவனோ அவன் ராஜக்ருஹத்தில்வஸிக்கவேண்டும். (அரசனால்) மற்றவர்கள் ஏவப்படும்போது 'நான்செய்வேன்' என்று தைர்யத்துடன் எந்தமனிதன்முற்படுவனோ அந்தமனிதனே அரசர்களிடங்களில்ஸித்தியைப்பெறுவான். எந்தமனிதன் வெய்யிலிலோ குளிரிலோ பகலிலோ இரவிலோ ஏவப்பட்டால்ஆலோசியாமல் கார்யங்களைச்செய்வனோ அவன் அரசர்களிடங்களில் ஸித்தியை அடைகிறான். ராஜக்ருஹத்திலிருக்கும் ஸமர்த்தனானமந்த்ரியை ஒருபொழுதும் அவமதிக்கக்கூடாது. கௌரவப்படுத்தப்பட்டாலும் ஸந்தோஷிக்கக்கூடாது. அவமானப்படுத்தப்பட்டாலும் மனவருத்தமடையக்கூடாது. எவன்ருஜுபுத்தியுள்ளவனும் ம்ருதுஸ்வபாவமுள்ளவனும் உண்மைபேசுபவனுமாயிருக்கிறானோ அவன் அரசர்களிடங்களில் கார்யஸித்தியைப்பெறுகிறான். ராஜக்ருஹத்தில்வஸிப்பவன் லாபத்தினால்ஸந்தோஷமடையக்கூடாது. அவமதிக்கப்பட்டாலும் மனவருத்தமடையக்கூடாது. (ஸுகதுக்கங்களில்) சரியானநிறையாரமுள்ள தராசுபோல்ஸமனாயிருக்கவேண்டும். ராஜரே! ராஜக்ருஹத்தில்வஸிப்பவன் அதிகஆசையில்லாதவனும் தைர்யமுள்ளவனும் நிழல்போல எப்பொழுதும் அரசனை அனுஸரிப்பவனும் ஸமர்த்தனும்அதிகமான ஈகையுடையவனும் பண்டிதனுமாயிருக்கவேண்டும். ராஜக்ருஹத்தில்வஸிப்பவன் இதிஹாஸங்களையும் புராணங்களையுமறிந்தவனும் நல்லகதைகளைச்சொல்வதில்ஸாமர்த்தியமுள்ளவனும் மிக்ககொடையுள்ளவனும் ஸத்யவாக்குள்ளவனுமாயிருக்கவேண்டும். ரஹஸ்யத்தில்சொல்லப்பட்டஅரசனுடையவார்த்தையை மனிதர்களிடம் வெளிப்படுத்தக்கூடாது. அரசர்கள், எவனிடத்தில் அஸூயையைப்பா

ரர்ட்டுகிறார்களோ அவனைப்பற்றிப் பேசக்கூடாது. அரசர்களுடைய காரியங்களில்ஏவப்பட்டவன் கொஞ்சமேனும் (குடிகளிடங்களிலிருந்து) பரிதானத்தைவாங்கக்கூடாது; வாங்குகின்றவன் சிறைச்சாலையையோ, . அல்லதுமரணத்தையோ அடைவான். 'ஸமமாகச்சேவகத்துக்குவந்திருக்கின்றநான் மற்றொருவன் எங்கள்இருவர்களுள் என்னைக்காட்டிலும் குறைந்தமற்றவனை அரசன்போஷிக்கிறான்; பார்!' என்று அறிவுள்ளவன் மயக்கமடையக்கூடாது. ஒவ்வொருகாரியத்திலும் அரசர்கள் மிகச்சிறந்தஅறிவுள்ளவனைவிட்டுவிட்டு அதிகமாகக் கீழ்நிலைமையிலிருப்பவனை ஏற்படுத்துவார்கள். அரசர்களுடையஸ்வபாவம் அப்படிப்பட்டது. ராஜக்ருஹத்தில்வஸிக்கின்ற கற்றறிந்தவனானமனிதன் அரசர்களின்மனைவிகளிடம் எவ்விதத்தாலும் நேசம் பாராட்டக்கூடாது. அந்தஸ்த்ரீகளைக் காக்கும்வேலையையும்தான் ஏற்றுக்கொள்ளக்கூடாது. அரசன் தன்ஸ்த்ரீகளோடுசேர்ந்துநிற்கின்ற வேலைக்காரனைக் கண்ணால்பார்க்கும்பொழுது அரசனுடைய புத்தியானது கலங்கும். அரசன் ஸந்தேஹப்பட்டாலும்படுவான். தன்நிலைமையிலுள்ளவனும் (க்ரோதத்தினால்) பலாத்காரம்செய்யப் பட்டவனுமான அரசன் ஸ்த்ரீவிஷயத்தில் ஸந்தேஹத்துக்கிடமுள்ள எந்தவேலைக்காரனுடைய உயிர்வாழ்க்கையை நல்லதென்று நினைப்பான்? ராஜக்ருஹத்திலிருக்கின்ற ஸந்தோஷத்துக்கேதுவான சிலவஸ்துக்கள்விஷயங்களில் தான் அதிகமாக ஸந்தோஷம்பாராட்டக் கூடாது. அந்தவஸ்துக்களையே அரசனிடத்தில் புகழவேண்டும். புத்திக்குறைவுள்ளமனிதன் ஸந்தோஷத்தினால் தன்இஷ்டப்படி கெட்ட காரியத்தைச் செய்துவிடுவான். ஆதலால், அந்தப்புரத்தில் இவனுடையநடக்கையை அரசன் கவனித்துப்பார்ப்பான். அந்தப்புரத்தையடைந்து கபடவேஷமின்றியிருக்கின்றஇந்தவேலைக்காரனை ஸ்த்ரீகளும் எல்லாநபும்ஸகர்களும் ஸம்சயமில்லாமல் அலக்ஷ்யம்செய்வார்கள். ஆதலால், தன்னைக் கம்பீரஸ்வபாவமுள்ளவனாக ஏற்படுத்திக்கொண்டும் ஸந்தோஷத்தை உள்ளடக்கிக்கொண்டும் அரசனுடைய அந்தப்புரத்தில் நாள்தோறும் நடக்கும் வ்ருத்தாந்தத்தைவெளியிடாமலுமிருக்கவேண்டும். மிகச்சிறந்தமந்த்ராலோசனையானது வெளிப்பட்டால் ஸுகத்தைக்கெடுப்பதுபோலவே அந்தப்புரத்திலுள்ளவ்ருத்தாந்தமானது வெளியிலுள்ளவர்களால்கேட்கப்பட்டால் ஸுகத்தைக்கெடுத்துவிடும். அந்தரங்கர்களும் வெளியிலுள்ளவர்களுமான அரசனை அண்டிப்பிழைக்கும் இரண்டுவகைவேலைக்காரர்களுடைய வ்ருத்தாந்தத்தையும் நீ கேள். வெளியிலுள்ளவனாவது உள்ளிலுள்ளவனா

வது ஒருபொழுதும் ஸ்த்ரீகளை நினைக்கக்கூடாது. அரசனேவென்றால் அந்தவேலைக்காரர்களுக்கு அதிகமானபயத்தை உண்டுபண்ணுவான். அரசனல்லாத கற்றறிந்தஒருவன் தன்னை அரசனுக்கு ப்ரியனென்றுஎண்ணிக்கொண்டு அரசன்அணியத்தக்க உத்தமரத்னங்களை அரசனைப்போலத் தான்உபயோகிக்கக்கூடாது. அரசனுக்கு ப்ரியமானரத்னங்களை அரசனைப்போல்அனுபவிக்கின்ற அரசனல்லாத மனிதனை அரசன் உயிரோடுவைப்பதற்குப் பொறுக்கமாட்டான். ஆதலால், ஐச்வர்யத்தைவிரும்புகின்றமனிதன் ப்ரகாசமில்லாதபோகத்துடன்கூடியவனாக ஸுகங்களை அனுபவிக்கவேண்டும். ராஜாவானவன் தனக்குச்சமமான போகத்துடன் கூடினவேலைக்காரனைக் கோபத்துக்காளாக்குவான். அரசனுடையபுத்ரனோடு எவ்விதகாரணத்தினாலும் நேசம்பாராட்டக்கூடாது. அரசனால் அவமதிக்கப்பட்டவனையும் பயனற்றவனையும் சத்ருவையும் தூரத்தில்விலக்கவேண்டும். இந்த நான்குவிதமானமனுஷ்யஸ்திதியை அனுஸரிக்கின்றராஜஸேவகனிடத்தில் அரசனுடையப்ரீதிக்குக்காரணமானது இரண்டாகத்துண்டிக்கப்படுகிறது. இந்தநராதமர்களைக்காட்டிலும் வேறானவர்களும் இதற்கு மாறானநிலைமையை அனுஷ்டிக்கிறவர்களுமான மனிதர்களோடு சேர்க்கையை அடையவேண்டும். விரோதத்தை எவ்விதத்தினாலும்அடையக்கூடாது. ராஜபந்துக்களோடும் பலமுள்ளவர்களான மனிதர்களோடும சேர்க்கையை நல்லதாகஎண்ணவேண்டும். எவ்விதத்தினாலும் விரோதத்தைத்தேடிக்கொள்ளக்கூடாது. முற்கூறப்பட்ட இரண்டுவிதமானநிலைமைகளுக்கும் விரோதமாகநடக்கும் பலக்குறைவுள்ளஒருமனிதனுக்கு முதலில் ராஜப்ரீதிக்கு எதுமூலமோ அது துணிக்கப்படும்; இரண்டாவது பயமும்நேரும். கர்வமுள்ளவர்களுடையவேஷத்தையும் கபடமுள்ளவர்களுடையவேஷத்தையும் அரசனுடையவேஷத்தையும் வெளிப்படையாகத்தரிப்பவன் வ்ருத்தியடையமாட்டான். ராஜவேஷந்தவிர மற்றஇரண்டுவேஷங்களையும்தரிப்பவன் பந்துக்களால்பரிஹாஸஞ்செய்யப்படுவான். புருஷர்களல்லாத புருஷர்களோடும் ஸ்த்ரீகளோடும் ஸ்த்ரீகளைப்பார்க்கின்றஸ்வபாவமுள்ளபுருஷர்களோடும், கூடுமானால், ஓரிடத்திலும் ஒருபொழுதும் ஸம்பாஷணஞ்செய்யக்கூடாது. இம்மூவர்களோடும்பேசுகின்றஅறிவற்றமனிதன், கழுகானது மாம்ஸத்தைஅபஹரிப்பதுபோலத் தன்னுடையஐச்வர்யத்தை [1]அபஹரிக்கிறான். (காரணமில்லாமல்) காரணமிருப்பதுபோல் அரசனிடமிருந்துஸம்மானத்தைப்பெறுகிறவர்க

[1] இழந்துவிடுவானென்பதுகருத்து.

ளோடும் சிற்றரசர்களுடையதூதர்களோடும் ஒருபொழுதும் சேர்க்கைபெறலாகாது. ராஜக்ருஹத்தில்வஸிக்கின்ற புத்திசாலியான மனிதன் அரசனால்உத்தரவளிக்கப்படாமல் மற்றொருவனுடையஸ்தானத்தைஅடையக்கூடாது. அரசர்கள்முன்னிலையில் தற்புகழ்ச்சி செய்யக்கூடாது. அப்படிப் புகழ்வதானது தரித்திரர்களுக்கும் அதிகமான அப்ரியத்துக்குக்காரணமாகும். பொருளில்ஆசைகொண்டு எந்தஸ்த்ரீ அரசனை அடைந்திருக்கிறாளோ அப்படிப்பட்டவளை அவனுடன்பார்க்கின்றவேலைக்காரன் கெடுதியையடைவான். ஆதலால், அவ்விதமாகஅடுத்திருக்கின்றஸ்த்ரீயை ஸமர்த்தன் உற்றுப்பார்க்கக்கூடாது. அவ்வாறே தும்மலையும் அபானவாயுவையும் காறி எச்சிலுமிழ்வதையும் மெதுவாகச்செய்யவேண்டும். பரிஹாஸவார்த்தைகளில் ஒருபொழுதும் சிரிக்கக்கூடாது. அப்படிச்செய்வதானது அறிவீனனுடையசெய்கையென்று எண்ணப்படுகிறது. (அரசனுடைய) ப்ரீதியினாலுண்டான சிரிப்பை மெதுவாக வெளியில்காட்டவேண்டும். ஒருகாலத்தும் [1]உதடுகளை அசைக்கக்கூடாது. கைகளையும் ஆட்டக்கூடாது. அரசனுடையவார்த்தையை ஆக்ஷேபிக்கக்கூடாது. குறுக்காகப்பார்க்கவும்கூடாது. நன்றாகக் கண்களால் பார்க்கவேண்டும். அரசனுக்கருகில் புருவத்தைநெரிக்கலாகாது. கட்டைவிரல்களால் பூமியைக்கீறலாகாது. ஒருபொழுதும் நன்றாகக் கொட்டாவிவிடக்கூடாது. அந்தஅரசனுடையமுன்னிலையில் ப்ரியர்களும் ஹிதர்களும் புகழப்பட்டாலும் இகழப்பட்டாலும் தான் புகழவுங்கூடாது; அஸூயையைபாராட்டவுங்கூடாது. ப்ரியர்களையும் ஹிதர்களையும்பார்க்கும்பொழுதும (அவர்களுடைய) வாக்யங்களைக் கேட்கும்பொழுதும் அம்ருதம்போல்அவர்களை வர்ணிக்கவேண்டும். அரசனுக்கு ப்ரதிகூலகார்யங்களைச் செய்பவன் புத்ரனானாலும் ப்ராதாவானாலும் அரசனுக்குச்சமானனானாலும் ஸுகமுடையவனாகான். புத்திசாலியானவன் ஜாக்ரதையுடன்அரசனைப்பூர்ணமானநல்லஒழுக்கத்தாலும் முயற்சியினாலும் பற்பலவிதமானசுத்தியினாலும்ஆனந்தப்படுத்தவேண்டும். ஸ்நானஞ்செய்வதும் சுத்தவஸ்த்ரம்தரிப்பதும் சரீரஸம்பந்தமானசுத்தியென்று சொல்லப்படுகின்றன. அற்பமான வஸ்துக்களில்பற்றுதலற்றிருப்பது இரண்டாவதுசுத்தியென்றுசொல்லப்படுகிறது. எவன் ராஜா, போஜன், விராட், ஸம்ராட், க்ஷத்ரியன், பூபதி, ந்ருபன் என்றஇவ்விதசப்தங்களால்புகழப்படுகிறானோ அவனை எவன்தான் பூஜிக்கத்தக்கவனல்லன்? ஆதலால், புத்தியுள்ளவன்,

[1] வேறுபாடம்.

பக்தியுள்ளவனும் உண்மைபேசுகிறவனும் இந்த்ரியங்களை அடக்கின வனும் மேதாவியும் தைர்யமுள்ளவனுமாக அரசனை ஆச்ரயிக்கவேண்டும். நன்றியறிவுள்ளவனும் கற்றறிந்தவனும் அல்பஸ்வபாவமில்லாதவனும் உறுதியான அன்புள்ளவனும் இந்த்ரியங்களை அடக்கினவனும் வ்ருத்தியடைகின்றவனும் நல்லநிலைமையிலிருக்கின்றவனுமான அரசனை அடுக்கவேண்டும். பார்த்தரே! ராஜஸேவகர்கள் ஐச்வர்யத்தைப் பெறுவதற்குரிய நல்லொழுக்கமானது சாஸ்த்ரமுறைப்படி உங்களுக்குஎன்னால்உரைக்கப்பட்டது. இந்தஒருவர்ஷமுழுமையும் இவ்விதமானஸ்வபாவமுள்ளவர்களாயிருங்கள். அதற்குப்பிறகு உங்களுடைய தேசத்தையடைந்து இஷ்டப்படி வஸிப்பீர்கள்" என்றுகூறினார்.

சத்ருக்களைத்தபிக்கச்செய்கின்றபார்த்தர்கள் கீர்த்தியுடையவரும் பிதாவுக்கொப்பானவருமான அந்தத்தௌம்யரைப்பார்த்து 'அவ்வாறேஆகட்டும்' என்றுசொல்லி ஸந்தோஷமுடையவர்களாக அவரை வந்தனஞ்செய்து புறப்பட்டார்கள். ப்ராம்மணரான தௌம்யர்புறப்படும்அவர்களுக்குமங்களத்தின்பொருட்டும் ராஜ்யலாபத்தின்பொருட்டும் வீர்யத்தின்பொருட்டும் விஜயத்தின்பொருட்டும் மந்த்ரங்களை ஜபித்தார். பிறகு, அந்தப்ராம்மணர், அவர்கள் த்ரவ்யங்களை மீண்டு அடைவதற்கும் சத்ருக்களுடையவிநாசத்திற்கும் ஆசீர்வாதங்களைச் செய்து, "உங்களுக்கு க்ஷேமமுண்டாகட்டும்; வழியானது மங்களகரமாகட்டும். மறுபடியும் திரும்பிவருகின்றஉங்களை நான் பார்ப்பேன்." என்றவார்த்தையைச்சொன்னார். புத்திமானான அந்தத்தௌம்யாசார்யர் இவ்வாறுசொல்ல, யுதிஷ்டிரரைத் தலைவராகக்கொண்ட பாண்டவர்களனைவர்களும் ஸந்தோஷமடைந்தமனத்துடன் செல்லத் தொடங்கினார்கள்.

ஆறாவது அத்யாயம்.

பாண்டவப்ரவேசபர்வம். (தொடர்ச்சி.)

(பாண்டவர்கள் தௌம்யரைவிட்டு விராடநகரத்தை அடுத்தது.)

அந்தப்பாண்டவர்களனைவர்களும் அக்நியையும் புரோஹிதரானப்ராம்மணரையும் ப்ரதக்ஷிணஞ்செய்து நமஸ்கரித்துப் பிறகு புறப்படஆரம்பித்தார்கள். யுதிஷ்டிரர் தௌம்யரைப்பார்த்து, "(ப்ராம்மணோத்தமரே!) 'உம்மால் நான்கட்டளையிடப்பட்டேன். உமக்கு மங்களமுண்டாகட்டும். மாதாவானகுந்தியையும் புகழுள்ளதந்தை

யையும்தவிர எங்களுக்கு இவ்விதமான உபதேசத்தைச்செய்பவர் ஒரு வருமில்லை. துக்கத்தைத்தாண்டுவதற்கும் (அஜ்ஞாதவாஸத்துக்காகப்) புறப்படுவதற்கும் க்ஷேமத்திற்கும் எது அடுத்துச்செய்யத்தக்கதோ அதை நீர்சொல்லவேண்டும்" என்றார். பிறகு, அந்தப்பாண்டவர்கள் ப்ரயாணப்படும்பொழுது தௌம்யர் மந்த்ரங்களாலும் ஹவ்யங்களாலும்பூஜிக்கப்பட்ட அக்நியை நன்றாகஜ்வலிக்கச்செய்து எல்லா இடையூறுகளையும்போக்கக்கூடியனவும் அவ்வாறே எல்லாக்கார்ய ஸித்திகளையும் உண்டுபண்ணக்கூடியனவுமான மந்த்ரங்களை ஜபித்தார். பிறகு மஹாரதர்களானபாண்டவர்களனைவர்களும் ஆயுதங்களைத்தரித்துக்கொண்டும் த்ரௌபதியைமுன்னிட்டுக்கொண்டும் ஒருவனத்தினின்று மற்றொருவனத்துக்குத் தௌம்யருடன்வேகமாகச்சென்றார்கள். கட்டப்பட்டகத்தியுள்ளவர்களும் விற்களையும்அம்புகளையும் தூணீரங்களையுமுடையவர்களும் பயங்கரமானவில்லுள்ளவர்களுமான அந்தப் பாண்டவவீரர்கள் காம்யகவனத்தினின்று புறப்பட்டுத் தசார்ணதேசத்துக்குவடபுறமாகவும் பாஞ்சாலநாட்டுக்குத்தென்புறமாகவும் யக்ருல்லோமதேசம் சூரஸேனதேசம் இவைகளின்நடுவாகவும்சென்று யமுநாநதியைவந்தடைந்தார்கள். பிறகு அவர்கள் காலால்நடந்து யமுனையினுடையதென்கரையைஅடைந்து காடுவிட்டுக்காடுபுகுந்து மேற்குமுகமாகச்சென்றார்கள். வில்லாளிகளானபார்த்தர்கள் ரமணீயமான வனதுர்க்கங்களிலும் அழகானசிறியதடாகங்களிலும் நதிகளுடைய ஸங்கமஸ்தலங்களிலும் பற்பலவிதமானவடிவங்களுள்ளவைகளும் பற்பலகொடிகளால்சூழப்பட்டவைகளும் புஷ்பங்களால்நிறைந்தவைகளும் மனத்துக்குப்ரியமானவைகளும் நல்லவாஸனையுள்ளவைகளும் மனத்துக்கின்பமானவைகளும் புஷ்பங்களால் விளங்குகிறவைகளுமானமரங்களைப்பார்க்கின்றவர்களும், மனத்துக்கின்பமானபுஷ்பவாஸனைகளையும் பழங்களுடையவாஸனைகளையும் மோந்துபார்க்கின்றவர்களுமாக வஸித்துக்கொண்டிருந்தார்கள். பெரியவில்லையேந்தியவர்களும் மஹாபலசாலிகளும் சத்ருக்களுடையபட்டணங்களை ஜயிக்கும் தன்மையுடையவர்களுமான பாண்டவர்கள் ம்ருகஸமூஹங்களை அடித்துக்கொண்டு பன்னிரண்டுவர்ஷகாலம் வனவாஸஞ்செய்துவிட்டு, அப்பொழுது தங்களை வேடர்களென்றுசொல்லிக்கொண்டு மத்ஸ்யராஜனுடையதேசத்திற்ப்ரவேசித்தார்கள். பெரியவில்லுள்ளவர்களான பாண்டவர்கள் அவ்விடத்தில் தௌம்யரை விட்டுவிட்டார்கள். அந்தத்தௌம்யரும் ஓர்ஆச்ரமத்தில் அக்நிஹோத்ரத்தைச்செய்துகொண்டு ஒருவருக்குந்தெரியாமல் வஸித்துவந்தார். மஹாத்மாக்களான

அந்தப்பாண்டவர்கள் சென்றபிறகு இந்த்ரஸேனன்முதலானவர்கள் தர்மபுத்ரர்சொற்படி த்வாரகையையடைந்து தேர்களையும் குதிரைகளையும் காப்பாற்றிக்கொண்டு மனக்கவலையற்று ஸுகமாக மறைந்துவஸித்துக்கொண்டிருந்தார்கள். பிறகு த்ரௌபதியானவள் விராடதேசத்தைபடைந்து ராஜாவைப்பார்த்து, "ராஜரே! வயல்கள் பசுமந்தைகளிருக்கும் இடத்தை அடைந்திருக்கின்ற ஒற்றையடிப்பாதைகள் காணப்படுகின்றவற்றைப் பாரும். கிராமங்களுடையவும் நகரத்தினுடையவுமான பூந்தோட்டங்களிலுள்ள மரங்களையும் பாரும். விராடனுடையராஜதானியானது தூரத்திலிருக்குமென்பது வெளியாகிறது. இவ்விடத்தில் இந்தப்பின்னிரவுமுழுமையும் வாஸஞ்செய்வோம். எனக்கு ச்ரமம் அதிகமாயிருக்கிறது" என்றுதெரிவித்தாள்.

யுதிஷ்டிரர், "மாத்ரீபுத்திர! நகுல! தாமரையிதழ்போன்றகண்களையுடையவளான இந்தத்ரௌபதியைக் கைகளால்தூக்கிக்கொண்டு ஒருமுகூர்த்தகாலம் நடந்துபோ. ஓ! பாரதச்ரேஷ்ட! பிறகு, விராடனுடையநகரமானது ஸமீபிக்கப்போகிறது. ராஜதானியில் வஸிப்போம். வனம் நம்மால் விடப்பட்டது போலும்" என்றுநியமிக்க, நகுலன், "ராஜரே! முற்பகலில்வேட்டையாடிக் கானகத்தில் ம்ருகங்கள் என்னால்கொல்லப்பட்டன. ம்ருகங்களைக்கொல்வதில் விருப்பமுற்றவனும் வேகமாகஓடுகின்றவனுமான நான் மேடுபள்ளமுள்ளதும் எவ்விதத்தாலும் ப்ரவேசிக்கமுடியாததுமான காட்டில் வெகுதூரம் நடந்திருக்கின்றேன். அதிகவெய்யிலால்மிக்கதாபத்தையடைந்திருக்கிறநான் இவளைஎடுத்துச்செல்வதற்குச் சக்தியற்றவன்" என்று மறுமொழிகூறினான். யுதிஷ்டிரர், "ஓ! ஸஹதேவ! நீ த்ரௌபதியை எடுத்துக்கொண்டு ஒருமுகூர்த்தகாலம் செல். விராடராஜதானியில் வஸிப்போம். வனம் நம்மால் விடப்பட்டதுபோலும்" என்றுநியமிக்க, ஸஹதேவன், "(ராஜரே!) நானும் தாகமுள்ளவனும் பசியினால்துன்பமுற்றவனுமாயிருக்கிறேன்; அதிகச்ரமத்தை அடைந்திருக்கிறேன். உமக்கு மங்களமுண்டாகட்டும். நான் இவளைஎடுத்துக்கொண்டுசெல்வதற்குச் சக்தியற்றவனாயிருக்கிறேன்" என்று மறுமொழிகூறினான். யுதிஷ்டிரர், "ஓ! வீரனே! அகன்றகண்களையுடையவனே! அர்ஜுனா! நீ தாமரைப்பூவின்இதழ்போன்றகண்ணையுடையவளும் த்ருபதராஜனுடையகுமாரியுமாகிய இந்தத்ரௌபதியை வீரஸிம்மம்போல இரண்டுகைகளாலும் தூக்கிக்கொண்டு ஒருமுகூர்த்தகாலம் க்ஷேமமாகச்செல். ராஜதானியில் வஸிப்போம். வனம் நம்மால்விடப்பட்டதுபோலும்" என்றுநியமித்தார். பிறகு, குருவான

தர்மபுத்ரருடையவார்த்தையைக்கேட்டு மிக்கமனக்களிப்புற்றவனும் பொறிகளை அடக்கினவனும் சிறந்தகைகளுள்ளவனுமான அர்ஜுனன், தோஷமற்றவளும் இனியதோற்றமுடையவளுமானராஜகுமாரியை இரண்டுகைகளாலும்தூக்கிக்கொண்டுசென்றான். ஜடையுடையவனும் மரவுரியுடுத்தவனும் அம்புகளையும் அம்பறாத்தூணிகளையும் வில்லையும்தரித்தவனுமான அர்ஜுனன், ச்ரேஷ்டமான [1]இடையையுடையவளும் சிறுமியும் நீண்டகண்களையுடையவளுமான த்ரௌபதியைத் தோளில்தூக்கிக்கொண்டு விராடநகரத்தின் அருகில்வந்து இறக்கினான்.

ஏழாவது அத்யாயம்.

பாண்டவப்ரவேசபர்வம். (தொடர்ச்சி.)

(பாண்டவர்கள், தங்கள் ஆயுதங்களைக்கட்டிவைத்ததும், தங்களுக்கு ஸங்கேதமான பெயர்களைவைத்துக்கொண்டதும்.)

அந்தத்தர்மராஜர், விராடராஜதானியை அடைதலும், அர்ஜுனனைப்பார்த்து, "ஓ! புருஷச்ரேஷ்ட! பாரத! இந்தஆயுதங்கள் எவ்விடத்தில்வைக்கத்தக்கன? இவைகளைப்பாதுகாப்பது எவ்விதம்? அப்பனே! நாம் ஆயுதங்களோடுகூடியவர்களாகவே பட்டணத்தில் ப்ரவேசிப்போமானால் இந்தநகரத்துஜனங்களுக்கு ஸந்தேஹமின்றிப் பயத்தைஉண்டுபண்ணுவோம். நரச்ரேஷ்ட! காண்டீவமோ மூவுலகங்களிலும் ப்ரஸித்திபெற்றது. ஐய! இந்தவில்லைஎடுத்துக்கொண்டு ஜனங்களுள்ளபட்டணத்தில் நாம்ஸஞ்சரிப்போமானால் த்ருதராஷ்ட்ர புத்ரனான துர்யோதனனுக்கு எவ்வாறு தெரிவிக்கப்படாதவர்களாவோம்? ஸம்சயமில்லாமல் மனிதர்கள் நம்மை விரைவாக அறிவார்கள். அஜ்ஞாதவாஸகாலத்தைத்தாண்டாமல் நம்முள் எவனாவது அறியப்பட்டால் மறுபடியும் நாம் பன்னிரண்டுவர்ஷகாலம் வனத்தில்ப்ரவேசிக்கவேண்டும். ஆதலால், சஸ்த்ரங்களையெல்லாம் ஏதாவது ஓரிடத்தில் மறைத்துவைத்துவிட்டு உத்தமமான இந்தப்பட்டணத்தில் ப்ரவேசிப்போம். அப்படிச்செய்தால் நன்குசெய்யப்பட்டதாகும்" என்றுகூறினார். மஹாகீர்த்தியுள்ளவனும் சத்ருவீரர்களைக்கொல்லுகின்றவனுமான அர்ஜுனன், அஜாதசத்ருவினுடையவார்த்தையைக் கேட்டு அவரைப்பார்த்து, "ராஜரே! பயங்கரமூனகிளைகளுள்ளதும்

---

[1] 'வராரோஹா' என்பதுமூலம்.

ஏறமுடியாததும் பெரிதுமான ஒருவன்னிமரமானது இதோ கானகத்
தில் சுடுகாட்டினருகில் காணப்படுகிறது. இந்தமரமானது வழியை
விட்டுவிலகியஇடத்தில் முளைத்திருப்பதால் மனிதர்களால் அடையப்
படுகிறதில்லை. இது விசாலமானதும் நான்குபக்கத்திலும்பரவியிருக்
கின்றகிளைகளுள்ளதும் காக்கைகளால் அடையப்பட்டதுமாயிருக்கி
றது. இந்தவன்னிமரத்தை [1]ஸ்நேஹத்தோடுகூடியதாகவும்ஏறமுடி
யாததாகவும் நான் காண்கிறேன். இந்தச்சுடலையினருகில் விசேஷமாக
யாதொருவீட்டையுங்காணோம். ராஜரே! இந்தமரத்திலஆயுதங்க
ளைக்கட்டிவைத்துவிட்டு நாம் நகரத்தில்ப்ரவேசிப்போம். பார்த்தரே!
இந்தவன்னிமரத்தினிடத்தில் மனிதர்கள் ஒருவரும்நாடமாட்டார்கள்.
தோல்மயிர்எலும்புஇவைகளால்மூடப்பட்டதும், வில்லினுடையநாண்,
கயிற்றினுல்சுற்றப்பட்டதுமான ஒருபுருஷஸ்வரூபத்தை விறகளால்
அமைத்துக் கழுத்தில்சுருக்கிட்டு உயிரைவிட்டவன்போல் மரத்தில்
கட்டி ஆயுதங்களை இதில் இவ்வாறுவைத்துவிட்டு நாம் நகரத்தில்ப்ர
வேசிப்போம். இவ்வாறு செய்தால் வனத்தில்ஸஞ்சரிக்கின்றமனிதர்
கள் இம்மரத்தைஅணுகமாட்டார்கள். மனிதர்கள்யாவரும் இவ்வி
டத்தில் ஆயுதமிருக்கிறதென்பதை அறியமாட்டார்கள்" என்றான்.
பாரதச்ரேஷ்டரே! அந்தத்தனஞ்சயன் தர்மாத்மாவானராஜாவைப்பார்
த்து இவ்வாறுசொல்லிவிட்டுச் சஸ்த்ரங்களைவைப்பதற்குஆரம்பித்
தான். ஐநதுமலைகளுக்கொப்பானஐநதுபாண்டவர்களும் அந்தஎல்லா
ஆயுதங்களையும் தூணீரங்களையும் நிகரற்றஒளிபொருந்தியகத்திகளை
யும்சேர்த்துக்கட்டினார்கள். பிறகு யுதிஷ்டிரராஜர் ஸஹதேவனைப்பார்
த்து, "ஏ! வீரனே! நீ இந்தவன்னிமரத்திலேறி இதில் நம்முடைய
ஆயுதங்களை வை" என்றுசொன்னார். இவ்வாறு குந்திபுத்ரரும் பரத
ச்ரேஷ்டருமான யுதிஷ்டிரர், அந்தஸஹதேவனைப்பார்த்துக் கட்டளை
யிட்டு ஆயுதங்களை அந்தமரத்தில்வைப்பதற்காக மறுபடியும் தனஞ்சய
னைப்பார்த்துச்சொல்லினர். சத்ருக்களைத்தபிக்கச்செய்பவனும் குரு
நந்தனனுமான அர்ஜுனன், தேவர்களையும் மனுஷ்யர்களையும் பிசா
சங்களையும் ஸர்ப்பங்களையும் ராக்ஷஸர்களையும் நிவாதகவசர்களையும்
பௌலோமர்களையும் ஒருவராலும்ஜயிக்கமுடியாதவர்களான காலகே
யர்களையும் இன்னும்மற்றவர்களையும் ஒற்றைத்தேராளியாகவேஜயித்த
தும் செல்வத்தால்மிகுந்த மற்றத்தேசங்களையும்ஜயித்ததும் உக்ர
ஸ்வரூபமுள்ளதும் மஹாகோரமானதும் சத்ருக்களுடையகூட்டங்
களை அழிக்கும்ஸ்வபாவமுள்ளதும் பயங்கரமுமானகாண்டீவத்தை

---

1 வளப்பம், தைலம், புஷ்டி.

நாண்கயிறற்றதாகச்செய்தான். வீரரும் சத்ருக்களைத்தவிக்கச்செய்ப வரும் அரசர்களுள்உத்தமரும் அதிகமானதேஜஸுள்ளவரும் தர்ம நந்தனரும் பாண்டுபுத்ரருமானயுதிஷ்டிரர், குருக்ஷேத்ரத்தைக்காப் பாற்றினதும் எல்லாஉலகங்களையும்வசப்படுத்துவதும் ஸர்ப்பத்தி னுடையஉடல்போன்றதும் மணிகளாலும் ஸ்வர்ணங்களாலும்அலங்க ரிக்கப்பட்டதும் எப்பொழுதும்அஸுரர்களையும் ராக்ஷஸர்களையும் பய மடையும்படிசெய்கின்றதும் உத்தமமுமானவில்லை நிமிர்த்தபின்வைப் பதற்காக நிமிர்த்தார். கோபமுள்ளவனும் பாண்டுபுத்ரனுமானபீமஸே னன் ஒருவனுகவே முன்பு திக்விஜயகாலத்தில் யுத்தத்தில் பாஞ்சாலர் களைஜயித்ததும், அநேகசத்ருக்களைத்தடுத்ததும், வஜ்ரத்தால்பிளக் கப்பட்டமலையின்ஒலிபோன்றநாணொலியைக்கேட்கச்செய்து பகை வர்களைத்துரத்திபதும், ஸிந்துராஜனைஜயித்துப்பிடித்ததும், கந்தமா தனபர்வதத்தில் க்ரோதவசர்களைக்கொன்றதும், அத்புதமானசெங் கழுநீர்மலரை அபஹரித்துவந்ததும், போரில்த்ரிகர்த்தர்களைஜயித்து த்ரிகர்த்தராஜனைவசபபடுத்தியதுமானவில்லினுடைய இந்த்ரனுடைய வஜ்ராயுதத்தையொத்தஸ்பர்சமுள்ளதும் வஜ்ரங்களாலும்ஸ்வர்ணங்க ளாலும்அலங்கரிக்கப்பட்டதுமான நாண்கயிற்றைஅந்தப்பீமஸேனன் அவிழ்த்தான். மஹாராஜாவானயுதிஷ்டிரர்,மறுபடியும் நகுலனை அழை த்து, " எதனுல் யுத்தத்தில் எல்லாச்சத்ருக்களையும் நீ கொல்லவிரும்பு கிறாயோ, எந்தவில்லினுல் நல்லதேசங்களைஜயித்தாயோ அப்படிப் பட்டதும் சார்ங்கத்துக்கும்காண்டீவத்துக்குமொப்பானதும் ஸ்வர் ணத்திணுல்சித்ரவேலைசெய்யப்பட்டதும் உறுதியுள்ளதும் இந்த்ரா யுதத்துக்குஒப்பானதும் உத்தமமானதும் உனக்குத்தகுந்ததும் நன் ருகச்செய்யப்பட்டதும் அலங்கரிக்கப்பட்டதுமான இந்தத்தனுஸை வைப்பதற்காக நாண்கயிற்றைஅவிழ்த்துக்கொண்டுவா" என்றார். மாத் ரீபுத்ரனும் நீண்டகைகளையுடையவனும் சிவந்தமுகத்தையுடையவ னும் மிதபாஷியும் பாண்டவனும் குலத்திலும்ரூபத்திலும்தனக் குஸமானனில்லாததுபற்றி நகுலனென்றுசொல்லப்பட்டவனும் யுத் தத்தில் (சத்ருக்களை) அலறச்செய்கின்றவனும் சூரனுமான அந்த நகுலன் எந்தவில்லினுல் மேற்குத்திசையைஜயித்தானே அந்தவில்லி னுடைய நாண்கயிற்றைஅவிழ்த்தான். தர்மநந்தனர் ஸஹதேவனைப் பார்த்து மறுபடியும் சொல்லலானுர். " சத்ருக்களை அழிப்பவனே! யுத் தத்தில் ஸாமர்த்தியமுள்ளவனுனநீ பகைவர்களான களிங்கர்களையும் தென்னுட்டுவீரர்களையும் மகதவீரர்களையும் எதனுல்யுத்தத்தில் கொ ளுத்தினயோ அந்தவில்லை நாணைததளர்த்தி வைப்பதற்குக் கொண்

டுவா" என்ருர். ப்ரபுவும் சிறந்தஒழுக்கமுள்ளவனும் வீரனுமான ஸஹதேவன் எந்தவில்லிஞல் தென்திசையைவென்ருரே அந்த வில்லை நாணை அவிழ்த்துவிட்டான். பாண்டவர்கள் ஒளிபொருந்திய வைகளும் (பகைவர்களைத்) துண்டிக்கும்திறமையுள்ளவைகளும் மிகக உறுதியுள்ளவைகளும் மிக்ககூர்மையுள்ளவைகளும் ஸ்வர்ணமயமான பிடிகளுள்ளவைகளும பற்பலவிதங்களுமானகத்திகளையும் நாராசங் களையும் முபபது அஙகுலத்துக்குமேல்நீண்டிருக்கின்ற கத்திகளையும அம்புகளையும் அம்பருத தூணிகளையும கதாயுதங்களையும் ஒன்ருகச சேர்த்துவைத்தார்கள். பிறகு பகைவர்களைவாட்டுகின்றவரான தர்ம ராஜர், ஸஹதேவனைப்பார்த்து, "வீரனே! இந்தவன்னிமரத்தின் மீதேறி இநதமரத்தில் நம்முடையஆயுதங்களை வை. வீர! இதோ ஸமீ பத்தில் பசுஎன்கிறஒருமருகமானது உயிரைஇழந்து அறிவற்றிருக் கிறது. இதை அறுத்து (இதன்தோலிஞல்) நம்முடையதனுஸுகளை நாற்புறத்திலுஞ்சுற்று" என்றுகட்டளையிட்டார். இவ்வாறு சொல்லப் பட்டவனும் மிக்கபாஹுபலமுள்ளவனுமான ஸஹதேவன் தர்மபுத் ரர்கூறியபடியே வன்னிமரத்திமேலேறி விரைவாக் வில்லுகளை (அதில் கட்டி மாட்டுத்தோலிஞல்) நன்ருகச்சுற்றிஞன். பகைவர்களால்ஜயிக் கமுடியாதவனும் வீரனுமானஸஹதேவன் குளிர் காற்று வெய்யில் களிஞலுண்டாகும்பயத்தினின்றும் மழையினின்றும் ஒருவிதமான கெடுதியும் நான்குபக்கத்திலுமுண்டாகாமல் பாதுகாக்கவேண்டுமெ ன்று எண்ணங்கொண்டு மறுபடியும் மறுபடியும் அந்தஆயுதங்களை நன்ருகச்சுற்றி நல்லமூட்டமுள்ளவைகளாகச்செய்து மழைபெய்யும் பொழுது எந்தஇடத்தில் குறுக்காகமழைச்சாரல் அந்தஆயுதங்களில் அடிக்குமென்றுஎண்ணிஞரே அந்தஇடத்தில் அந்தஆயுதங்களை உறுதியுள்ளகயிற்றிஞல் நன்ருகக்கட்டி இறுக்கிஞன். பிறகு பாண் டவர்கள் [1]ப்ராயோபவேசத்திஞல் உலர்ந்ததும் நரம்புஎலும்புதோல் இவைகளோடுகூடியதும் ஸமீபத்திலிருக்கின்றதுமான உஞ்சவ்ருத்தி செய்கிறவனுடைய (உயிரில்லாத) ஒருசரீரத்தைக்கொண்டுவந்து வில்லுகளின்மத்தியில் கட்டிஞர்கள். உபாயத்தில்ஸமர்த்தரான அவர் களனைவர்களும் உரக்கக்கர்ஜித்துக்கொண்டு, "கட்டப்பட்டிருக்கின்ற இந்தச்சவத்திஞடைய துர்க்கந்தத்திஞல் வனத்தில்ஸஞ்சரிக்கின்ற மனிதர்கள், 'இநதவன்னிமரமானது சவத்துடன்கூடியது' என்று தூரத்திலிருந்து விலக்கிவிடுவார்கள்" என்று சொல்லிக்கொண்டார் கள். பிறகு தர்மபுத்திரயுள்ள அந்தயுதிஷ்டிரமஹாராஜர் ஸஹதேவ

[1] ஆஹாரமில்லாமல்பூமியில்படுத்தலாகியஒருவ்ரதம்.

ளைப்பார்த்து, "ஓ! பாண்டவ! நல்லறிவுள்ளவனே! இந்தப்ராம் மணசரீரத்தைக் கயிறுகளால்இறுக்கிக்கட்டி இந்தமரத்தில் விஸ்தார மானவையும் அடியில்உறுதியுள்ளவையுமானகிளைகளின்மீது நன்று கக்கட்டிவிடு" என்று சொன்னார். ஸஹதேவன் அந்தவார்த்தையைக் கேட்டு அந்தப்பிணத்தை அவ்விடத்தில்கட்டினான். யுதிஷ்டிரர், சுத்த ராயிருந்துகொண்டு, "வரன்களைக்கொடுக்கின்றப்ராம்மதேவனையும் இந்த்ரனையும் குபேரனையும் வருணனையும் வாயுவையும் ருத்ரரையும் யமனையும் விஷ்ணுவையும் சந்த்ரஸூர்யர்களையும் தர்மதேவதையை யும் பூமியையும் ஆகாசத்தையும் திக்குக்களையும் அவ்வாறேமூலைத் திசைகளையும் வஸுக்களையும் மருத்துக்களையும் அதிகதேஜஸுள்ள அக்நியையும் மனத்தினால்நமஸ்கரித்தும் இவ்வுலகத்தில் பகலிலும் இரவிலும் ஸஞ்சரிக்கின்றவைகளாகச்சொல்லப்பட்ட ப்ராணிகளைநமஸ்கரித்தும் நல்லவ்ரதத்தையுடையமற்றவர்களையும் நமஸ்கரித்தும் அவர்களை நான் சரணமடைந்தேன். அதிகபலமுள்ளவைகளான எல்லாஆயுதங்களையும் மஹாதேவர், வாயு, வனஸ்பதிகள், மலைகள், சந்த்ரன், ஸூர்யன் இவர்களிடத்தில் நான் அடைக்கலமாகக்கொடுத்திருக்கிறேன். இவை பதின்மூன்றுவதுவர்ஷம்முடிந்தவுடனே என்னிடத்திலாவது அர்ஜுனனிடத்திலாவது கொடுக்கத்தக்கன பீமனிடத்தில் கொடுப்பதுகூடாது. இந்தவ்ருகோதரன் கோபமுள்ளவன்; த்ருதராஷ்ட்ரருடையபுத்ரர்களிடத்தில் பொறுமையினால் எப்பொழுதுமே கோபங்கொண்டவன். கோபத்தினாலுண்டான மாத்ஸர்யத்தையுடைய அவன், குறித்தகாலம் நிறைவேறுவதற்குள்ளாகவே த்ருதராஷ்ட்ர குமாரர்களை அடிப்பான். அதனால் எமக்கு மறுபடியும் எப்பொழுதும் வனவாஸஞ்செய்யும்படி நேரிடும். அந்தக்காலம் நிறைவேறினபிறகு தார்த்தராஷ்ட்ரர்களைக் கொல்லப்போகிறோம். இப்படிச்செய்வது தர்மமும் அர்த்தமும் காமமும் கீர்த்தியும் நிறைந்தபுகழுமாகும். இவையனைத்தும் உயிரும் என்னுடையஅதீனமாகஇருக்கின்றன; ஸம்சயமில்லை" என்றுகூறினார். சத்ருக்களைத்தபிக்கச்செய்பவரே! தேவதைகளைநமஸ்கரித்து வன்னிமரத்தையும்ப்ரதக்ஷிணஞ்செய்து நகரத்தைக் குறித்துச்செல்வதற்குப் புறப்பட்டிருக்கின்றவர்களும் தர்மத்தை அறிந்தவர்களும் ப்ராதாக்களுமான அவர்களனைவர்களும் ஒன்றுசேர்ந்து மாட்டிடையன்முதல் ஆட்டிடையன்வரையிலுள்ள வேளாண்மைத் தொழில்செய்பவர்களுள் யாராவதுஒருவன் தற்செயலாய் அந்தஇடத்தில்வருவனேயாகில் அவனைப்பார்த்து அடிக்கடி (அந்தவன்னிமரத்தைக்) காட்டி, "நூற்றெண்பதுபிராயமுள்ளவளும் வெகுகாலம் ஜீவி

த்திருந்தவளுமான எங்களுடையதாயானவள் இதோ ஸமீபத்தில் ம்ருத்யுவுக்குவசமானாள். (எங்களுடைய) குலதர்மப்படி இவள் அக்னிஸம்ஸ்காரஞ்செய்யப்படவில்லை. எங்களுடைய குலதர்மம் இப்படிப்பட்டது" என்று இவ்விதம் சொன்னார்கள். அவர்கள் ஸந்தோஷமுடையவர்களாக, "துக்கங்களால்பீடிக்கப்பட்ட எங்களுடையஇந்தத்தாயானவள் இந்தஇடத்தில் ஸ்வர்க்கத்தை அடைந்துவிட்டாள். மரித்தவளை அக்னிஸம்ஸ்காரஞ்செய்யாமல் இவ்வாறு மரத்தில்கட்டுவது, கானகத்தில்ஸஞ்சரிக்கின்ற காட்டாள்களும் வேடர்களுமானஎங்களுக்கு, முன்னோர்களால் பண்டைக்காலம்தொட்டு அனுஷ்டிக்கப்பட்டுவருகின்ற குலதர்மமாயிருக்கின்றது" என்கிற வார்த்தையை எல்லோரும் கேட்கும்படி சொல்லிக்கொண்டு திசையனைத்தையும் எதிரொலிஇடும்படிசெய்தார்கள். இவ்வாறு அவர்கள் ஆயுதங்களை நன்றாகக்கட்டி அந்தவன்னிமரத்தில்வைத்து நான்குபக்கத்திலும் கோஷித்துக்கொண்டு விராடநகரத்தினருகில் வந்தார்கள். பிறகு பீமஸேனனும், அர்ஜுனனும், மாத்ரீபுத்ரர்களான நகுலஸஹதேவர்களும், யுதிஷ்டிரரும், ராஜபத்னியும் அழகியஇடையுள்ளவளுமான க்ருஷ்ணையும் அப்பொழுது முன்சொல்லிக்கொண்டதுபோல விராடநகரத்தில் ப்ரவேசித்தார்கள். யுதிஷ்டிரர், விராடதேசத்தில் மத்ஸ்யராஜனை விராடனுடையஸமீபத்தில் பதின்மூன்றாவதுவர்ஷம் அஜ்ஞாதவாஸஞ்செய்வதற்காக விரைவாகத் தங்களுக்கு ஜயன், ஜயேசன், விஜயன், ஜயத்ஸேனன், ஜயத்பலன் என்கிற மறைவானபெயர்களையிட்டார். 'ஆபத்துநேருங்காலங்களில் இந்தப்பெயர்களாலேயே நாம் பரஸ்பரம் அழைத்துக்கொள்வோம்' என்றும் வரையறைபண்ணினார். பிறகு, பாண்டவர்கள் பதின்மூன்றாவதுவர்ஷம் விராடநகரத்தில் அஜ்ஞாதவாஸஞ்செய்வதாக ப்ரதிஜ்ஞைபண்ணினபடி பெரிதான விராடநகரத்தில் புகுந்தார்கள்.

எட்டாவது அத்யாயம்.

பாண்டவப்ரவேசபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர் துர்க்காதேவியை ஸ்தோத்ரம்செய்தது.)

மனோஜ்ஞமானவிராடநகரத்தைக்குறித்துச்செல்லுகின்ற யுதிஷ்டிரர், மூவுலகங்களுக்கும்ஈச்வரியும் யசோதையின்கர்ப்பத்தில்தோன்றியவளும் நாராயணருடைய உத்தமமானப்ரீதிக்குப் பாத்ரமான

வளும் நந்தகோபருடையக்ருஹத்தில்உதித்தவளும் மங்களகரியும் வம்சத்தைவ்ருத்திசெய்கின்றவளும் கம்ஸனைஓட்டினவளும் அஸுரர்களுக்குநாசத்தைஉண்டுபண்ணுகின்றவளும் (கம்ஸனால்) கல்லில் மோதப்பட்டுஆகாயத்தைநோக்கிச்சென்றவளும் வாஸுதேவருக்கு ஸஹோதரியும் திவ்யபுஷ்பமாலைகளால் அலங்கரிக்கப்பட்டவளும் திவ்யவஸ்த்ரமுடுத்தியவளும் (சத்ருஸம்ஹாரத்தால்) விளையாடுகின்றவளும் கத்திகேடயங்களைத்தரித்தவளுமான துர்க்காதேவியை மனத்தினால் ஸ்தோத்ரஞ்செய்தார். எவர்கள் எப்பொழுதும் மங்களஸ்வரூபிணியாயிருக்கின்ற துர்க்காதேவியைப் பாபங்களுடையபாரத்தை இறக்குவதற்காகவும் புண்யத்தின்பொருட்டும் நினைக்கிறார்களோ அவர்களை, அவள், சேற்றிலகப்பட்ட பலஹீனமான பசுவைக் கரையேற்றுவதுபோலப் பாபத்தினின்றுகரையேற்றுகிறாள். யுதிஷ்டிரமஹாராஜர் துர்க்காதேவியைஅழைத்து தம்இளையஸஹோதரர்களோடு ப்ரத்யக்ஷமாகத்தர்சிப்பதில் விருப்பமுற்றவராக மறுபடியும் பற்பல விதமானஸ்தோத்ரங்களுக்காகஏற்பட்டிருக்கிற நாமங்களாலே புகழத்தொடங்கினார்.

"வரன்களைக்கொடுப்பவளே! கறுத்தநிறமுடையவளே! நித்யயௌவனமுள்ளவளே! வேதத்தில்ஸஞ்சரிப்பவளே! பாலஸூர்யனுக்கொப்பான வடிவமுடையவளே! பூர்ணசந்த்ரனுக்கொப்பான முகத்தையுடையவளே! நான்குகைகளையுடையவளே! நான்குமுகங்களையுடையவளே! பருத்திருக்கின்ற [1]ஸ்தனங்களையுடையவளே! மயிலுடைய தோகையின்நிறம்போன்ற கங்கணங்களையுடையவளே! கடகங்களையும் தோள்வளைகளையும்த்ரித்தவளே! உனக்கு நமஸ்காரம். ஏ! தேவி! ஸ்ரீமந்நாராயணருக்குப் பத்னியாயிருக்கின்ற ஸ்ரீமஹாலக்ஷ்மிபோலவிளங்குகிறாய். ஏ! ஆகாசத்தில்ஸஞ்சரிப்பவளே! உன்னுடையஸ்வரூபமும் ப்ரம்மசர்யமும் நிர்மலமானவை. நீ நீலமேகம்போலக் கறுத்தநிறமுடையவளும் ஸங்கர்ஷணருடையமுகம் போன்ற முகமுடையவளுமாக இருக்கிறாய். இந்த்ரத்வஜம்போல் நீண்டும் பருத்துமிருக்கின்ற இரண்டுகைகளைத்தரித்தவளாகவும் பாத்ரத்தையும் தாமரைப்பூவையும் மணியையும் பாசத்தையும் வில்லையும் மஹாசக்ரத்தையும் இன்னும்பற்பலவிதஆயுதங்களையும் தரித்துப் புவியில் பரிசுத்தஸ்த்ரீயாகவுமிருக்கிறாய். தேவி! நீ குண்டலங்களால் நிறைந்தகாதுகளால்அலங்கரிக்கப்பட்டவளாகவும் சந்த்ரனுக்கொப்பானமுகமுள்ளவளாகவும் விளங்குகிறாய். விசித்ரமானமகுடத்தோ

[1] ஒருசொல்விடப்பட்டது.

டும் அழகிய முடியப்பட்டுள்ள கூந்தலோடும் விளங்குகிறாய். ஸர்ப்பத்தினுடைய உடல்போன்றதும் ப்ரகாசிக்கின்றதுமான கடிஸூத்ரத்தோடுகூடிய நீ வாஸுகியினுடைய தேகத்தினால்சுற்றப்பட்டிருக்கின்ற மந்தாபர்வதம்போல இப்புவியில்விளங்குகிறாய்; மயில்தோகைகளால்செய்யப்பட்டதும் உயரத்தூக்கிக்கட்டப்பட்டதுமான கொடியினாலும் விளங்குகிறாய். தேவி! கௌமாரவ்ரதத்திலிருந்துகொண்டு தேவலோகமானது உன்னால் பரிசுத்தமாக்கப்பட்டது. ஆதலால், நீ தேவர்களால் ஸ்தோத்ரம்செய்யப்படுகிறாய்; பூஜிக்கவும்படுகிறாய். மூவுலகங்களையும்ரக்ஷிப்பதற்காக மஹிஷாஸுரனைக்கொன்றவளே! எனக்கு நீ ப்ரஸன்னையாகவேண்டும். தேவர்களுள் மேன்மைபெற்றவளே! நீ கருணைபுரியவேண்டும். நீ மங்களத்தை உண்டுபண்ணுகிறவளாகவேண்டும். நீ ஜயஸ்வரூபிணியாகவும் விஜயஸ்வரூபிணியாகவுமிருந்து யுத்தத்தில் ஜயத்தைக்கொடுப்பவளாகவிளங்குகிறாய். வரங்களைக்கொடுப்பவளானநீ இப்பொழுது எனக்கும் விஜயத்தைக்கொடு. ஏ! காளீ! காளீ! மஹாகாளீ! சாராயத்திலும் மாம்ஸத்திலும் பசுக்களிலும் ப்ரியமுள்ளவளே! பர்வதங்களுள் ச்ரேஷ்டமானவிந்த்யபர்வதமானது உனக்குச்சாச்வதமான வாஸஸ்தானம். நீ பூதங்களால்அநுஸரிக்கப்பட்டவள்; இஷ்டங்களைக்கொடுப்பவள்; இஷ்டப்படி ஸஞ்சரிப்பவள். எந்தமனிதர்கள் கஷ்டத்தைநீக்கிக்கொள்வதன்பொருட்டு உன்னைநினைக்கிறார்களோ, புவியில் எந்தமனிதர்கள் விடியற்காலத்தில் உன்னைநமஸ்கரிக்கின்றார்களோ அவர்களுக்குப் புத்ரர்கள் ஐச்வர்யமுதலியஎல்லாம் கிடைப்பது அரிதன்று. துர்க்காதேவி! நீ துர்க்கத்திலிருந்து (ப்ராணிகளைக்) கரையேற்றுவதினால் ஜனங்களால் துர்க்கைஎன்றெண்ணப்பட்டிருக்கிறாய். அரண்யங்களில்கஷ்டப்படுகிறவர்களும் மஹாஸமுத்ரத்தில்மூழ்குகின்றவர்களும் திருடர்களால் வழிமறிக்கப்படுகிறவர்களுமான மனிதர்களுக்கு நீ, உத்தமகதியாயிருக்கிறாய். ஏ! மஹாதேவி! ஜலத்தைத்தாண்டும்ஸமயத்திலும் அரண்யங்களிலும் ப்ரவேசிக்கமுடியாதமலைக்காடுகளிலும் எந்தமனிதர்கள் உன்னைநினைக்கிறார்களோ அவர்கள் கஷ்டத்தை அடையார்கள். நீயே கீர்த்தி; ஸ்ரீதேவி; தைர்யலக்ஷ்மி; கார்யஸித்தி; [1]ஹ்ரீ; கல்வி; ஸந்ததி; புத்தி; ஸந்த்யை; ராத்ரி; ஒளி; உறக்கம்; நிலவு; காந்தி; பொறுமை; தயை. நீ பூஜிக்கப்படுவையேயாகில் மனிதர்களுடையபந்தத்தையும் மோஹத்தையும் புத்ரநாசத்தையும் தனக்ஷயத்தையும் வ்யாதியையும் ம்ருத்யுவையும் பயத்தை

---

[1] அகார்யத்தில்உண்டாகும் வெட்கம்.

யும் விலக்குவாய். ஏ! தேவி! தேவர்களுக்கெல்லாம்தலைவியே! ராஜ்யத்தினின்று தவறியிருக்கின்ற அப்படிப்பட்டநான் உன்னைச்சரணமடைந்தேன்; உன்னை முடியினால்வணங்கினேன். தாமரையிதழ்போன்ற கண்களையுடையவளே! என்னை நீ பாதுகாப்பாயாக. ஏ! ஸத்யஸ்வரூபிணி! நீ எங்கள்விஷயத்தில் ஸத்யமாயிருப்பாயாக. ஏ! துர்க்கையே! பக்தர்களைக்காப்பாற்றுபவளே! பக்தரிடத்தில் அன்புடையவளே! நீ என்னை ரக்ஷிப்பாயாக" என்று ஸ்தோத்ரம்செய்தார். இவ்வாறு ஸ்தோத்ரஞ்செய்யப்பட்ட அந்தத்தேவியானவள் பாண்டுபுத்ரரான யுதிஷ்டிரராஜருக்குத் தன்ஸ்வரூபத்தைக்காண்பித்து அருகில் வந்து அவரைப்பார்த்துப் பின்வருமாறுசொல்லலானாள். "ராஜனே! மிக்கபராக்ரமபலமுள்ளவனே! ப்ரபுவே! என்வார்த்தையைக்கேள். யுத்தத்தில் சீக்ரம் உனக்கு விஜயமுண்டாகப்போகிறது. என்னுடையஅநுக்ரஹத்தினால் கௌரவஸேனையைக்கொன்று ஜயித்து ராஜ்யத்தில் சத்ருக்கள்இல்லாமல்செய்து மறுபடியும் பூமியைஅநுபவிக்கப்போகிறாய். ராஜனே! ப்ராதாக்களோடுகூடிப் பூர்ணமான ப்ரீதியை அடையப்போகிறாய். என்னுடையஅநுக்ரஹத்தினால் உனக்கு ஸௌக்யமும் ஆரோக்யமுமுண்டாகும். உலகத்தில் தோஷமற்றவர்களானஎவர்கள் என்னைஸ்தோத்ரம்செய்வார்களோ அவர்கள் விஷயத்தில் நான் த்ருப்தியடைந்து அவர்களுக்கு ராஜ்யத்தையும் ஆயுளையும் சரீரத்தையும் புத்ரனையும்கொடுப்பேன். ராஜனே! உன்னால் நான் எவ்வாறு நினைக்கப்பட்டேனோ, இவ்விதமாக எவர்கள் தேசாந்தரத்திலும் நகரத்திலும் அல்லது யுத்தத்திலும் சத்ருக்களால் ஸங்கடம்நேர்ந்தகாலத்திலும் காட்டிலும் பிரவேசிக்கமுடியாதகானகத்திலும் ஸமுத்ரத்திலும் கொடிகளாலும் செடிகளாலும் அடர்ந்தமலையிலும் நினைப்பார்களோ அவர்களுக்கு இவ்வுலகில் கிடைக்க அரிதானவஸ்து ஒன்றும்இராது. ஏ! பாண்டவர்களே! இந்தஉத்தமமானஸ்தோத்ரத்தை எவன் பக்தியோடுகேட்பனோ, அல்லது படிப்பனோ அவனுடையகார்யங்களெல்லாம் ஸித்தியை அடையும். என்னுடையப்ரஸாதத்தினால் விராடநகரத்திலிருக்கின்ற உங்களனைவர்களையும் கௌரவர்களோ அல்லது அங்குவஸிக்கின்றமனிதர்களோ அறியமாட்டார்கள்" என்றாள். வரங்களைக்கொடுப்பவளான துர்க்காதேவியானவள் சத்ருக்களைஸம்ஹரிக்கும் திறமையுள்ளயுதிஷ்டிரரைப்பார்த்து இவ்வாறுசொல்லிவிட்டுப் பாண்டவர்களுக்கு ரக்ஷையைச்செய்து அவ்விடத்திலேயே மறைந்தாள்.

ஒன்பதாவது அத்யாயம்.

பாண்டவப்ரவேசபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரர், ஸந்யாஸிவேஷம்தரித்து விராடனுடையஸபையில் ப்ரவேசித்ததும், மர்யாதைசெய்யப்பெற்று அங்கேவஸித்ததும்.)

பிறகு, அந்தப்பாண்டவர்கள் பரிசுத்தஜலமுடையதும் மங்களத்தைஉண்டுபண்ணுகின்றதும் தோஷமற்றதும் மஹரிஷிகளாலும் கந்தர்வர்களாலும் அடையப்பட்டஜலமுள்ளதும் மூவுலகங்களுக்கும் மனோஜ்ஞமானதும் ஜஹ்நுமஹர்ஷியினுடையபுத்ரியுமான கங்கையில்இறங்கி ரிஷிகளையும் தேவர்களையும் பித்ருக்களையும் (மந்த்ரத்துடன்கூடினதீர்த்தத்தினால்) த்ருப்திசெய்வித்தார்கள். ராஜாவானயுதிஷ்டிரர், (தமதுபிதாவான தர்மராஜர்) கொடுத்திருக்கின்றவரத்தைநினைத்து அக்நிஹோத்ரஸாதனமான ஹவிஸை ஹோமஞ்செய்து மங்களகரமானஜபங்களைச்செய்து இந்த்ரனைத்தேவதையாகக்கொண்டகீழ்த்திசையைநோக்கிக் கைகளைக்குவித்துக்கொண்டு (தம் பிதாவான) தர்மராஜாவைச் சரணமடைந்து மெதுவாகஅழைத்துச் சொல்லுகிறார். "வரங்களைக்கொடுப்பவரும் ப்ரஜைகளுக்குப்பதியும் எனக்குப்பிதாவுமாயிருக்கின்ற தர்மதேவர் ப்ரஸன்னமானமனத்துடன் எனக்குவரத்தைஅளித்தார். தாகங்கொண்டு ஜலத்தைவிரும்பிய என்னுடையஸஹோதரர்கள் என்னால் ஏவப்பட்டு ஒருதடாகத்தில்ப்ரவேசித்தார்கள். அவர்கள், மஹாயுத்தத்தில் வஜ்ரபாணியான இந்த்ரனால் அஸுரர்கள் தள்ளப்பட்டதுபோல உத்தமரான ஒருயக்ஷரால் வனத்தில் தள்ளப்பட்டார்கள். நான் சென்று அவருடையஎல்லாவினாக்களுக்கும் விடைசொல்லி, வரன்களைக்கொடுப்பவரும் (எனக்குப்) பிதாவுமானஅவரை ஸந்தோஷப்படுத்தினேன். மஹிமையுடையவரான அவர் ப்ரஸன்னராகி எனக்கு வரனை அளித்தார். அவ்வாறே நேசத்துடன் என்னைக்கட்டிக்கொண்டு, 'பாண்டுநந்தன! நீ விரும்புகிறதைப் பெற்றுக்கொள். ஆகாயத்தில்நிற்கிறேன்; வரனைக்கொடுப்பவனாயிருக்கிறேன். என்னைப்பார்' என்று சொன்னார். நான், வரதரும் பிதாவும் ப்ரபுவுமான அவரைப்பார்த்து, 'ப்ரபுவே! என்னுடையபுத்தியானது எப்பொழுதும் தர்மத்தில்பற்றுள்ளதாயிருக்கவேண்டும். என்னுடையஇந்தஇளைய ஸஹோதரர்கள் பிழைக்கவேண்டும். அவ்வாறே நாங்கள் (அஜ்ஞாதவாஸத்துக்குரிய) ஸ்வரூபத்தையும் ஜயத்தையும்அடையக்கடவோம். விரும்பியபடி எங்களுக்குப் பொறுமையும் கீர்த்தியும் உண்டாகவேண்

டும். எங்கள்வ்ரதமானது ஸத்யமாக நிறைவேறவேண்டும்' என்று வேண்டினேன். அந்தவரம் கேட்கப்பட்டபடி எனக்கு இப்பொழுது கிடைக்கவேண்டும். அந்தத்தேவச்ரேஷ்டர்சொன்னது பொய்யாகாது" என்றுசொன்னார். தர்மாத்மாவானயுதிஷ்டிரர் இவ்வாறு சொல்லிவிட்டுத் தர்மதேவதையையே த்யானஞ்செய்தார். அப்பொழுதே அவர்அநுக்ரஹத்தினால் யுதிஷ்டிரருக்கு ஒருரூபம் தானாகவே உண்டாயிற்று. அப்பொழுது அந்தயுதிஷ்டிரர் நல்லயௌவனமுடையவரும் த்ரிதண்டங்களைப் பிடித்தவரும் கமண்டலுவையும் தலைப்பாகையையும்தரித்தவரும் நன்றாகச்சிவந்திருக்கின்றதும் உத்தமமுமானகாஷாயவஸ்த்ரத்தைத்தரித்தவரும் குடுமியுள்ளவரும் பவித்ரத்தைக்கையிலணிந்தவருமான ப்ராம்மணராகக்காணப்பட்டார். அப்படித்தோற்றியது ஆச்சர்யமாயிருந்தது. ராஜரே! தர்மத்தைஅநுஷ்டிப்பவர்களும் மஹாத்மாக்களும உத்தமமானதர்மத்தினுடைய உயர்ந்தபலத்தைவிரும்புகின்றவர்களுமான அந்தப்பீமஸேனன்முதலானவர்களுக்கும் அவ்விதமாகவே ஒருக்ஷணத்தினுள் (அஜ்ஞாதவாஸத்துக்குத்) தக்கபூஷணங்களும் வஸ்த்ரங்களும் மாலைகளும தோன்றிவிட்டன. புதியஉருவமுள்ளவரும் ப்ரதாபசாலியுமான யுதிஷ்டிரமஹாராஜர் [1] அதர்வரூபத்தினால் விளங்கினார். பிறகு, முதலில், அந்தஅரசர் வைடூர்யமிழைக்கப்பட்டவைகளும் வெண்ணிறமுடையவைகளும் தங்கத்தால்செய்யப்பட்டவைகளுமான பாச்சிகைகளைத் துணியால் சுற்றிக்கொண்டு, நிறைந்ததேஜஸுள்ளவனும் மிக்ககாந்தியால்விளங்கும் அக்நிபோன்றவனும் கடுமையானவிஷமுள்ளஸர்ப்பம்போல நெருங்கமுடியாதவனுமானவிராடனைத் தூரத்திலிருந்துபார்த்தார். அப்பொழுது அவர், ஸபையில்வீற்றிருப்பவனும், கைகளைக்குவித்துக்கொண்டிருப்பவர்களும் விசித்ரமாயும்பற்பலவிதமாயுமிருக்கின்ற சஸ்த்ரங்களைக்கையில்பிடித்தவர்களுமான மனிதர்களால் சூழப்பட்டவனும், சிக்ஷையையும் அக்ஷரங்களையும மந்த்ரங்களையும் அறிந்தவர்களும் காணிக்கைக்குவியல்களோடு ப்ரவேசிக்கின்றவர்களுமானப்ராம்மணர்களால்சூழப்பட்டவனும, யானைகளாலும்குதிரைகளாலும் சூழப்பட்டவனும், ம்ருகங்களாலும் யானைகளாலும் சூனர்களுடையகூட்டங்களாலும் நான்குபக்கங்களிலும்சூழபபட்டவனும், வெண்ணிறமுள்ளதும் உயர்ந்ததுமான தலைப்பாகையினால்மறைக்கப்பட்டிருக்கின்ற தலைமயிருள்ளவனும், விசித்ரமானவைடூர்யத்தினாலிழைக்கப்பட்டகுண்டலங்களையுடையவனுமான விராடனை, தேவலோகத்தில் ப்ருஹஸ்பதி

[1] 'ப்ராம்மணரூபத்தினால்' என்பது பழையஉரை.

இந்திரனை அடைவதுபோல் வந்தடைந்தார். மனிதர்களுக்கதிபனான அந்தவிராடராஜன், வருகின்ற அந்தப்பாண்டவரைக் கண்களிக்க நன்றாகப்பார்த்து அவரைக்குறித்து அப்பொழுது தன்னுடையஸபையிலிருந்த ப்ராம்மணர்களைப் பலமுறை கேட்கலானான்.

"ப்ராம்மணர்களே! காந்தியினால் குபேரன்போன்றவரும் சிறந்த ரூபத்தால்பூமியைவிளங்கச்செய்பவரும் என்னுடையஸபையை நாடி வருகின்றவரும் யௌவனமுள்ளவருமான இந்தப்ராம்மணருடையதர்சனத்தை யாராவது இதற்குமுன் அறிந்ததுண்டா? சிறந்தஸிம்மம் போன்றவரும் யானைக்கூட்டத்தலைவன்போன்றவருமானஇவர் ஸுவர்ணபர்வதம்போல விளங்குகிறார். அக்னிபோலவும் ஸூர்யன்போலவும் சந்த்ரனுடனும் நக்ஷத்ரங்களுடனும்கூடின கிரணங்களுள்ள க்ரஹம்போலவும் விளங்குகிறார். இவருக்கு வேலைக்காரனும்,யானையும்,உயரத் தூக்கிப்பிடிக்கப்பட்டதும ஸூர்யனைமறைக்கக்கூடியதுமான குடையும் காணப்படவில்லை. இவருக்குக் குண்டலமும் தோள்வளையும் மாலைகளும்இல்லை. நாலுகுதிரைகளுள்ளதும் விசித்ரமான அவயவங்களுள்ளதுமான ரதமுமில்லை. சிறந்தயானைக்கும் புலிக்கும் பெரிய காளைக்குமொப்பாயிருக்கிற இவர் க்ஷத்ரியரூபத்தை நன்கு தரிக்கிறார். நமக்குளதிரில்வரும் இவர் அலங்காரமில்லாதவராயிருநதும் உதித்திருக்கிற பாலஸூர்யன்போல விளங்குகிறார். இவர் எல்லாவிதத்திலும் க்ஷத்ரியராகவே தோன்றுகிறார். இநத்ரனுக்குஸமானராயிருக்கிற இவர் இப்போது நான்குஸமுத்ரத்திற்குட்பட்ட பூமியையும் ஆளத்தகுதியுள்ளவராயிருக்கிறார். இவர் நிச்சயமாய் க்ஷத்ரியர்தாம். இவர் ராஜ்யாபிஷேகஞ்செய்துகொண்டவராக எனக்குத் தோன்றுகிறார். ஏனெனில், இவருடையரூபம யானைக்கும ஸிம்மத்திற்கும ரிஷபத்திற்கும் ஒப்பாயிருக்கிறது. இநத பராம்மணர் எநதஇஷ்டத்தைத் தேடுகிறாரோ இவருடைய அந்தஇஷ்டத்தையெல்லாம் நிச்சயமாய் நிறைவேற்றவேண்டும். இப்படிப்பட்டபுருஷருடையதர்சனம் எனக்கு மிகவும்ப்ரியமானது. இவர் என்னுடையப்ரதானமானப்ராம்மணர்களிலும் அதிதிகளிலும் பொருள்களிலும் ரத்னங்களிலும் பசுக்களிலும் வீடுகளிலும் இஷ்டபபடித தடையின்றி ஸஞ்சரிக்கட்டும்" என்று இவ்விதம் அந்தயுதிஷ்டிரரைக்குறித்துச் சொன்னான். அரசன் அளவிடக்கூடாத தேஜஸுடன்விளங்குகிறவரும் த்ரிதண்டத்தையும் கமண்டலத்தையும் அங்குசத்தையும் உறியையும்தரித்தவரும் வேறு வேஷத்துடன்ஸமீபத்தில்வருகிறவருமான அவரைப்பற்றி இவ்வாறு சொல்லிக்கொண்டு பரபரப்புடன எழுந்திருந்தான். ஸபையில்வந்த

வரும் ராஹுவினுடையமுகத்தினின்றுவெளிப்பட்டுக் கிரணங்களால் தபித்துக்கொண்டிருக்கிற ஸூர்யன்போன்றவருமான அந்தயுதிஷ்டிரரைப்பார்த்து விராடராஜனுடன்கூடியதும் ப்ராம்மக்ஷத்ரியவைச்ய சூத்ரர்களால்நிரம்பினதுமான அந்தஸபையானது எழுந்திருந்தது. ப்ராம்மணவேஷமுள்ளவரும் ஜயமடையத்தக்கவருமான அந்தயுதிஷ்டிரரால், 'இவ்வுலகில் உமக்கு ஜயமுண்டாகட்டும்' என்று முதலில் சொல்லப்பட்டவனும் வெற்றிபெற்றுவ்ருத்தியடைந்தவனுமான அந்த விராடராஜன் கைகூப்பிக்கொண்டு எதிர்சென்று அவரைநமஸ்கரித்தான். பூமியில் ப்ரஸித்தனான அந்தவிராடராஜன் கைகூப்பிக்கொண்டு அவரைப்பார்த்து மதுரமான அக்ஷரங்களுள்ளவார்த்தையைச் சொல்லத்தொடங்கினான்.

"ஓ! பகவானே! நீர் எவ்விடமிருந்துவந்தீர்? எதனைவிரும்புகிறீர்? எங்கேபோகிறீர்? ப்ராம்மணரே! நான் உமக்கு என்னசெய்யவேண்டும்? நீர் எனக்கு உம்முடையகல்வியையும் சீலத்தையும் குலத்தையும் கோத்ரத்தையும் அப்படியே பெயரையும் தேசத்தையும் சொல்லும். ஸாதுக்கள் உண்மையான ப்ரதிஜ்ஞையுள்ளவர்களாகவேயிருப்பார்கள். ஸந்யாஸிகளானப்ராம்மணர்கள் விசேஷமாய் மெய்யே சொல்லுவார்கள். நான் உமக்குத்தகுந்தபடி நடந்துகொள்ளுகிறேன். உம்மை அவமானப்படுத்துகிறதில்லை. உம்முடையவார்த்தையைமீறி நடக்கிறதில்லை. ஏனெனில், அக்னிக்குச்சமமான ப்ராம்மணர்கள் பூஜிக்கப்படாவிட்டால் விஷத்துடன்கூடிய ஸர்ப்பங்கள்போலக் குலத்தை நீறுக்கிவிடுவார்கள். ப்ராம்மணச்ரேஷ்டரே! பூமிமுழுமையையும் உமக்குக்கொடுக்க ஸித்தனாயிருக்கிறேன். ஸேனைகளும் பொக்கசங்களுமுள்ள பட்டணத்தையும் உமக்குக் கொடுக்கிறேன். நீர் எந்த அரசனுடைய தேசத்தினின்று இவ்விடம் வருகிறீர்? இவ்விடத்தில் என்னகார்யம்செய்கிறீர்" என்று வினவினான். யுதிஷ்டிரர், இங்ஙனம் வினவிய அந்தஅரசனைப்பார்த்து, அடிக்கடி தர்மத்தைக்கவனித்து, "ராஜரே! இந்தஸபையில் வார்த்தைசொல்வதற்கு எவன்தான் தைர்யமுடையவனாவான். ஆயினும், ப்ரதிஜ்ஞைசெய்தபடி நான் உண்மையைச்சொல்லுகிறேன்; கேளும். என்னுடையகல்வியையும் சீலத்தையும் குலத்தையும் செய்கையையும் பிறப்பையும் தேசத்தையும்கேளும். குருவின்உபதேசத்தினாலும் நியமத்தாலும் எனக்கு இந்தவ்ரதமானது ஏற்பட்டிருக்கிறது. குலமுறையை அனுஸரிப்பதற்காகப் பித்ருக்கள் எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார்கள். ப்ரபுவே! ப்ராம்மணனாயிருக்கின்ற நான் வ்ரதத்தைஅநுஷ்டிப்பதற்காக க்ஷௌ

ரஞ்செய்துகொண்டும் ஸந்யாஸஞ்செய்துகொண்டும் த்ரிதண்டத்தைப் பிடித்துக்கொண்டுமிருக்கிறேன். இது, நானே செய்துகொண்டதன்று. ஐந்துபூதங்களாலும் சூழப்பட்டிருக்கின்ற என்னுடைய இந்த மானிடசரீரத்தைப் பாரும். இவ்வுலகில் என்னுடைய ஐந்து இந்த்ரியங்களையும் சரீரத்தையும் பார்க்கின்றவர்கள் ஐந்துபேர்களையே பிதாக்களாகச் சொல்லுகிறார்களென்று கேள்வி. அந்தஐவர்களும் மனுஷ்யர்களாயிருப்பார்களென்று நான் எண்ணவில்லை. நான் ஸ்வபாவத்தினால் பித்ருக்களுக்குச் சமானனாகவுமிருக்கவில்லை. ராஜரே! நான் வ்ரதஞ்செய்துகொண்டிருக்கிற ப்ராம்மணன். எனக்கு, 'கங்கன்' என்றுபெயர். உம்முடையதேசத்திற்குவந்திருக்கிறேன். நான் என்னுடையகர்மாவினால் சொக்கட்டானாடி வறுமையுற்றிருக்கிறேன்; இப்பொழுது ஸத்யவசனமுள்ள தபஸ்வியாக ஸஞ்சரிக்கிறேன். நான் முந்தி யுதிஷ்டிரருக்கு ஸ்நேஹிதனாகஇருந்தேன். அவர் வீட்டில் வஸித்துக்கொண்டு அவருடைய சரீரமாகவேயிருந்தேன். நான் அவருடையவீட்டில் ஸுகமாக வஸித்துக்கொண்டிருந்தேன்; முன் அவருடையநகரத்திற்கு ராஜாவாகவேயிருந்தேன். அவருடையவீட்டில் ஸ்த்ரீகள் என்னுடையஉத்தரவுப்படி நடந்தார்கள். எனக்கு ப்ரீதியையுண்டுபண்ணுகிறதற்காகக் குதிரைகள் அடங்கியிருந்தன. நான் முன் அவருடையபட்டணத்தில் எதைச்செய்தேனோ அதை ஒருபோதும் ஒருவனும் மாற்றினதில்லை. முன் அவருக்குஒப்பான பிராயமுள்ள ஸ்நேஹிதனாயிருந்த நான் மிக்கதுக்கத்துடன் பூமிமுழுதும் ஸஞ்சரித்தேன். நான் ஓரிடத்திலும் மனம் ஸமாதானமடையவில்லை. வ்ரதஉபதேசத்தினாலும் நியமத்தினாலும் பாரத்தைவஹித்துக்கொண்டிருக்கிறேன். ராஜரே! நான் "வ்யாக்ரபாதர்' என்னும் ரிஷியினுடைய கோத்ரத்தில்பிறந்தவன். நான் யுதிஷ்டிரரிடமடைந்த) அந்த ஸௌக்யத்தையே தேடுகிறேன். ஆத்மாவுக்குஸமமான யுதிஷ்டிரருடையநடக்கையை நான் நன்றியறிவுள்ளவனாயிருப்பதால் உமக்குச் சொன்னேன். இந்தஸந்யாஸாச்ரமத்தை அடைந்திருக்கும் எனக்கு யுதிஷ்டிரரும் நீரும் ஸமமானகுணமுடையவர்களே. எனக்குத் தாயில்லை; தகப்பனில்லை; பந்துக்களில்லை; ரூபமில்லை; ஸுகமில்லை; ஸந்ததியில்லை. எனக்கு இப்போது ஸுகமும் துக்கமும் விருப்பும் வெறுப்பும் போகிறதும் வருகிறதும்

1 புலிபோல்பாய்வதால் யமனுக்கு 'வ்யாக்ரபாத' என்றுபெயர்; ஆகையால், தாம் 'வ்யாக்ரபாத' என்னும் யமனுடைய புத்ரரென்பது உண்மைப்பொருள்.

ஸமமாகவேயிருக்கின்றன. நான ஆசையினாலும் தனத்தினாலும்விடப் பட்டவனாயிருக்கிறேன். இப்போது உம்முடையக்ருஹத்தில்வஸிப் பதற்காக இவ்விடம் வந்தேன். ஒருவராலும் செய்யமுடியாதகார்யத் தைச்செய்யும் என்னுடைய இந்தவ்ரதமோ இவ்விடத்தில் ஒருவர் ஷத்தோடும்முடிவுபெறும். பிறகு, நான் என்னுடையசெய்கைகளால் உம்மை ஸந்தோஷமுள்ளவராகச்செய்து மறுபடியும் எவ்விடத்திற் குப்போக எனக்குவிருப்பமிருக்குமோ அவ்விடத்திற்குப்போவேன். நான் எப்போதும் பாச்சிகைகள் ஆடுவதில் திறமையுள்ளவன். பக்ஷி களின்சப்தங்களையும் ம்ருகங்களுடைய [1]சப்தங்களையும் அறிந்தவ னைநான் அபஜயமடைந்து ஆச்ரயமற்று ஸந்யாஸம்பெற்று பிக்ஷு ஞனாகஇருக்கிறேன்" என்றுசொன்னார்.

அவர் இவ்விதம் வார்த்தைசொன்னவுடன் விராடராஜன் கை கூப்பிக்கொண்டு அந்தஸந்யாஸியைப்பார்த்து ஸந்தோஷமுள்ளமனத் துடன் மங்களகரமான அக்ஷரங்களுள்ளதும் மனத்திற்குஇசைந்ததும் ஸபைமுழுவதும் பாவியதுமானவார்த்தையைச் சொல்லத்தொடங்கி னன். "நீர் அபேக்ஷிக்கிறவரத்தை நான் உமக்குக் கொடுக்கிறேன். உமக்குவிருப்பமிருந்தால் மத்ஸ்யதேசத்தை ஆண்டுகொண்டிரும். அக்ஷவித்யையை அறிந்திருக்கின்றசூதாடிகள் எனக்கு ப்ரியமானவர் கள். நீரும் சூதுவிளையாடுகிறவராயிருக்கிறீர். ஆகையால், நீர் என்னு டையராஜ்யத்தைஅடைவதற்குத் தக்கவராயிருக்கிறீர். சக்ரவர்த்திக் கொப்பானவரே! வாஹனத்தையும் ஆஸனத்தையும் வஸ்த்ரத்தையும் போஜனத்தையும் அநேகமாலைகளையும் ஆபரணங்களையும் வாஸனை த்ரவ்யங்களைஅணிதலையும், நீர் எப்பொழுதும் என்னோடுஸமானமாக வே அனுபவிக்கத்தக்கவர். உம்மை எப்பொழுதும் பார்த்துக்கொண் டிருப்பதை நான் ப்ரியமாகஎண்ணுகிறேன். அனர்த்தங்களால்பீடிக் கப்பட்ட உத்தமப்ராம்மணர்களாவது இதரஜனங்களாவது (தங்க ளுக்குநேர்ந்திருக்கின்றகஷ்டத்தை நிவ்ருத்திசெய்வதற்காக) உம்மி டத்தில் ஓடிவருவார்களானல், நீர்விரும்புகிறபடி அவர்களுக்குச் செய்யவேண்டியகார்யங்களனைத்தையும் நான் செய்வேன். எனக்கு இந்தவிஷயத்தில் ஸம்சயமில்லை. எவன் என்பக்கத்தில் உமக்குஅப்ரி யத்தைச்செய்வனே அவனைக்கவனித்து நாட்டைவிட்டு ஓட்டுவேன். ஜிதேந்த்ரியரானநீர் எனக்குள்ளபொருள்களுக்குத் தலைவராயிருந்து கொண்டு இவ்விடத்தில் வாஸஞ்செய்யும்" என்றுகூறினன்.

யுதிஷ்டிரர் சொல்லத்தொடங்கினர். "இதைக்காட்டிலும் என க்குமேலான இஷ்டம் ஒன்றும்இல்லை. என்னால்ஜயிக்கப்பட்டபொரு

[1] இங்குஒருசொல்விடப்பட்டது.

லைச் சிறிதும் நான்வைத்துக்கொள்ளுகிறதில்லை. யாதொருவிதமான போஜனத்தையும் நான்தீண்டேன். நான் ஹவிஸைப் புஜிப்பவன்; இரவில் தரையில்படுப்பவன். வ்ரதத்தின்உபதேசத்தை அநுஸரித்து உறுதியுள்ள ப்ரதிஜ்ஞை என்னால்செய்யப்பட்டிருக்கிறது. ராஜரே! ஒருவர்மேலும் நான் கோபமடையத்தக்கவனல்லன். ராஜரே! இவ்விதமான ப்ரதிஜ்ஞையுடன் இங்குவஸிப்பதில் எனக்கு எண்ணமிருக்கிறது; வேறுவிதமாகஇல்லை. மத்ஸ்யராஜரே! மாசற்றவரே! இவ்விதவரத்தை நீர்கொடுக்கவேண்டுமென்று நான்வரிக்கிறேன். இந்த வரத்தினால் நான் தன்யனாவேன்” என்றுகூறினர்.

இவ்வாறு மத்ஸ்யராஜனுக்கும் யுதிஷ்டிரருக்கும் முதன்மையானசேர்க்கையானது உண்டாயிற்று. விஷ்ணுவுக்கு வஜ்ரபாணியான இந்த்ரனோடுசேர்க்கையுண்டானதுபோல, விராடராஜனுக்கு அந்தயுதிஷ்டிரரோடு சேர்க்கையுண்டாயிற்று. ஆஸனத்தில்வீற்றிருப்பவரும் ப்ரியமானரூபமும் காட்சியுமுள்ளவருமான அவரைப்பார்த்த அரசனுக்கு (போதுமென்கிற) த்ருப்திஉண்டாகவில்லை. யுதிஷ்டிரரும் இந்த்ரன் தன்னுடையகாந்தியினால் ஸ்வர்க்கத்தை விளங்கச்செய்வதுபோல அந்தஸபையை விளங்கச்செய்துகொண்டிருந்தார். ராஜாவும் புருஷச்ரேஷ்டரும் வீரருமான அந்தயுதிஷ்டிரர் இவ்விதம் அப்பொழுது விராடராஜனோடுசேர்க்கைபெற்று விசேஷமாகப் பூஜிக்கப்பட்டு ஸுகமாக வாஸஞ்செய்துவந்தார். அவருடைய அவ்விதஒழுக்கத்தை ஒருவரும்அறியவில்லை.

பத்தாவது அத்யாயம்.

பாண்டவப்ரவேசபர்வம். (தொடர்ச்சி.)

(பீமன் சமையற்காரவேஷந்தரித்து விராடஸபையில் ப்ரவேசித்ததும், விராடன் அவனைச் சமையல்அதிகாரத்தில் நியமித்ததும்.)

பிறகு, பயங்கரமானதோற்றமுடையவனும் ஸிம்மத்தினுடைய பராக்ரமம்போன்ற பராக்ரமத்தையுடையவனுமான பீமன் சாணை பிடிக்கப்பட்டிருக்கின்ற இரண்டு சிறந்தகத்திகளை (இடையில்) கட்டிக்கொண்டும் கரண்டியையும் மத்தையும் கையில்பிடித்துக்கொண்டும் (த்ராக்ஷாரஸமுதலான ஐந்துரஸங்கள்சேர்த்துச்செய்யப்பட்ட பஞ்சஸாரம்என்கிற பானகத்தினாலும்) (தேன் சர்க்கரைமுதலான மதுரவஸ்துக்களின் சேர்க்கையினாலுண்டுபண்ணப்பட்ட) ராகம்என்

கிற ரஸத்திலும் ஷாடபமென்கிறரஸத்திலும் நன்றாக நனைக்கப் பட்டதும் நன்றாகப் பதம்செய்யப்பட்டதுமான பசுமாட்டுத்தோலை யும் இஞ்சி [1]ரஸத்தோடுகூடின [2]ஸம்புடத்தையும் இருப்புப்பாத்ரத் தையும் கையில்பிடித்து மேற்குத்திசையில் காணப்பட்டான். கம்பீர மானரூபமுள்ளவனும் கறுத்தஆடை உடுத்தவனும் பர்வதராஜனு டைய பலம்போன்றபலமுடையவனுமான அவன் சிறந்ததேஜஸினால் ஸூர்யன்போல இவ்வுலகத்தை ப்ரகாசிக்கச்செய்துகொண்டு மத்ஸ்ய ராஜனை அடைந்து நின்றான். யானைக்கூட்டத்தலைவன்போன்றவனும் ஆயிரங்கண்களையுடைய இந்த்ரனுக்கு இளையஸஹோதரனான உபேந் த்ரனுக்கும் யமனுக்கும் ஒப்பானவனும் மூவுலகங்களுக்கும் தலைவர் களான இந்த்ராதிதேவர்களுக்கு அதிபதியான ஸ்ரீமந்நாராயணனைப் போன்றவனுமான பீமன், சந்த்ரன் இரவைவிளங்கச்செய்வதுபோல விராடனுடையஸபையை விளங்கச்செய்துகொண்டு வந்தான். வரு கின்றவனும் யானைக்கூட்டத்தலைவன்போன்றவனும் பாலஸூர்யன் போன்ற காந்தியுள்ளவனுமான அவனைப்பார்த்த விராடராஜன் மனத் தில் பயத்தினால் கலக்கத்தையும் துக்கத்தையுமடைந்து அடிக்கடி எல்லாத்திக்குக்களையும் நன்றாக உற்றுப்பார்த்துக்கொண்டு நல்லநிலை மையினின்றும் தவறினான். அவன், ஒரேஆடையுடுத்தவனும் பகை வர்களுடையபடைகளைத் தடுப்பவனும் ராஜகுமாரனுமான அந்தப் பீமனை ஸபைக்குக் கொஞ்சதூரத்தில் கண்டு மனததளர்ச்சிஅடைந் தான். அங்குள்ளஜனங்களும் மிக்கபயமுற்றவர்களாக மெள்ள நான்கு பக்கத்திலுஞ்சென்றார்கள். பிறகு, மத்ஸ்யதேசத்தாருக்குப் பதி யான விராடன் மிகுந்த துன்பத்தையடைந்து உஷ்ணமாகப் பெரு மூச்சுவிட்டுக்கொண்டு ஸபையிலுள்ளவர்களைப் பார்த்து, "ஓ! ஜன ங்களே! என்னுடைய இந்தஸபையை நோக்கி வருகின்றவனும் கஜ ராஜனுக்கு ஒப்பானவனும் யௌவனமுடையவனுமான இவன் யார்? அகன்றமார்பும் தோள்களுமுள்ளவனும் ம்ருகராஜன்போலப் பலத் தால் மேம்பட்டவனும் ஸிம்மத்தையும் புலியையும்போல நடப்பவ னும் திவ்யபுருஷன்போல ப்ரகாசிப்பவனுமான இவனை என்னைச் சேர்ந்தவர் யாராவதுஒருவர் இதற்குமுன் பார்த்ததுண்டோ? பொன் மலையினுடைய ஒளிபோன்ற ஒளியுடையவனான இவன் ராஜலக்ஷ்மி யினால் ஓர்அரசன்போல விளங்குகிறான். நிச்சயமாகவே இவன் க்ஷத் ரியனாக இருக்கவேண்டும். ஏனென்றால், இவன் ஆயிரங்கண்களை யுடையவனான மஹேந்த்ரனுக்கு ஸமானனாயிருக்கிறான். ரூபத்தால்

1, 2, வேறுபாடம்.

ஒப்பற்றவனான இந்த மஹாபுருஷன் இந்த்ரனைப்போல இந்தப்பூமியை ஆளுவான். இவன் ஆகாயத்தில் பெருஞ்செல்வத்திலிருந்து நழுவி விழுந்த நஹூஷனுடைய புத்ரனான யயாதிபோல ஐச்வர்யத்தினின்றுதவறின ஓர் அரசனோ என்றும் என்னுடையஎண்ணம்" என்றான். அந்தவிராடன், பலவிதமாக ஊஹித்துக்கொண்டிருக்கும்பொழுதே, பாண்டுபுத்ரனான வ்ருகோதரன், ஸபையைத்தாண்டி அரசனைப்பார்த்து, "ஜயமடைவாயாக" என்றுசொல்லியும், ஸபைத்தலைவனையும் ஸபையிலுள்ளவர்களையும் ஸுகப்ரச்னம்செய்தும் ஸந்தோஷிக்கச்செய்தான்.

பிறகு, பாண்டுநந்தனன், (அரசன்) எவ்வாறு தன்னிடத்தில் நாளடைவில் கருணையுள்ளவனாவனோ அவ்வாறானவாக்யத்தை அவனை நோக்கி உரைக்கலானான். "சத்ருக்களைக்கொல்பவரே! நான் உம்மை அண்டிப் பிழைப்பதற்காக வந்திருக்கிறேன். நீரே உலகத்தில் சிறந்த ஆதாரம். ஓ! ராஜரே! நான் சூத்ரன்; [1]நாலாவதுவர்ணத்தைச் சார்ந்தவன்; குருவினுடையஉபதேசத்தால் பரிசாரகத்தொழிலைச்செய்பவன்; நல்லபருப்புக்களையும் சிறந்தரஸங்களையும் செய்யும்விதத்தை அறிவேன்; நல்லமாம்ஸங்களையும் பக்ஷணங்களையும் பழங்களைச்சார்ந்த பலவிதமான ரஸாயனங்களையும் பக்வஞ்செய்வேன். மடைப்பள்ளியில் எனக்கு ஸமமான சமையற்காரன் இல்லை" என்று கூறினான். மத்ஸ்யராஜன் அவனைப்பார்த்து மிகுந்த ஸந்தோஷமுள்ளவன்போல, "குபேரனும் சந்த்ரனும் இந்த்ரனும் ஸூர்யனும்போல ப்ரகாசிப்பவனே! உன்னிடத்தில் ஒருவிதமான சூத்ரத்தன்மையையும் நான் காணவில்லை" என்று வணக்கத்துடன் ப்ரியமாயும் கம்பீரமாயும் மதுரமாயுமிருக்கின்ற வார்த்தையைச் சொன்னான். "அக்நிக்கும் ஸர்ப்பத்துக்குநிகரான தேஜஸுள்ள உனக்கு மடைப்பள்ளியில் இவ்விதமானதொழில் தகுந்ததன்று. கருடனுக்கும் கந்தர்வனுக்கும் மஹாஸர்ப்பத்துக்கும் ஒப்பானவனே! நீ சமையற்காரனாக இருப்பதற்குத் தகுந்தவனல்லை. நீ இப்பொழுது என்னுடைய ஸேனைத்தலைவனாகவும் த்வஜமுடையவனாகவும் ரதத்தின்மீதேறினவனாகவும் என்னுடைய யானைப்படைகளுக்குத் தலைவனாகவும் இருப்பாயாக. நீ இழிவானதொழிலைச் செய்வதற்குத் தகுந்தவனல்லை. நீ இந்தப்பூமியை ஆளுவதற்குத் தகுந்தவனாயிருக்கிறாய்" என்று கூறினான். பீமன், "உக்ரமான ஆஜ்ஞையுடையவரே! நான் நான்

[1] 'பீமஸேன' என்கிற நான்கு அக்ஷரங்களடங்கிய பெயருடையவனென்பது உண்மைப்பொருள். வர்ணம்=ஜாதி, எழுத்து.

காவதுவர்ணத்தைச் சேர்ந்தவனுயிருக்கிறேன். உம்மிடத்தினின்று இவ்விதமான பதத்தை நான் விரும்பவில்லை. நான் ஜாதியில் சூத்ரன்; வலலனென்று பெயருடையவன். உம்முடையதேசத்தை அண்டிப் பிழைக்கவேண்டுமென்று எண்ணங்கொண்டு வந்தவன். நான் முற்காலத்தில் யுதிஷ்டிரருடைய மடைப்பள்ளியில் (எல்லோருக்கும்) அன்னபானங்களைக்கொடுப்பவனும் எல்லாச் சமையற்காரர்களுக்கும் தலைவனுமாயிருந்தேன். அரசரே! ஆயினும், என்னை நீர் ஏற்றுக் கொள்ளாவிட்டால் நான் வந்தபடியே இவ்விடத்தினின்று திரும்பிப் போவேன். ஏ! நரதேவரே! நீர் என்னை அன்னங்களை நன்றாகப் பக்வஞ்செய்யும் தொழிலில் ஏவும். நான் உமக்குச் சமையற்காரனு யிருக்கிறேன். ராஜரே! பலத்திலை எனக்கு ஸமானமாக ஒருவனும் இல்லை. நான் எப்பொழுதும் கைச்சண்டைசெய்வதையே ஸ்வபாவமாகக் கொண்டவன். ஓ! மாசற்றவரே! நான் யானைகளையும் ஸிம்மங்களையும் எதிர்த்து எப்பொழுதும் உமக்கு ப்ரியத்தைச்செய்வேன். ஓ! ப்ரபுவே! பலங்குறைநதவனும் இழிவானசெய்கையுடையவனுமான என்னைப்போன்றவன் உம்முடையஸேனைக்குத் தலைவனுயிருக்கக்கூடாது. ராஜரே! நாங்கள் எங்களுக்குரியதொழில்களால் த்ருப்தியடைகிறவர்கள். உமக்கு விருப்பமானுல் சமையற்காரனுடையஸ்தானத்தில் எனக்கு அதிகாரங்கொடும். பலத்தினுலும் வீர்யத்தினுலும் (உலகத்தாரால்) ஒப்புக்கொள்ளப்பட்ட மல்லர்களோடு உம்முடையு ப்ரீதியின்பொருட்டுப் போர்புரிவேன்" என்றுசொன்னுன்.

பீமஸேனன் இங்ஙனம்கூற, மத்ஸ்யதேசாதிபதியான விராடராஜன், அவனைப்பார்த்து மிகுந்தமனக்களிப்புற்றவன்போல மறுமொழிகூறலானுன். "நான் அந்தத்தொழிலானது உனக்குத்தகுந்ததென்று எண்ணவில்லை. நீ கடல்சூழ்நதபூமியை ஆளுவதற்குத் தகுந்தவனுயிருக்கிருய். நீ மூவுலகங்களையும் ரக்ஷிக்கிறவன்போல விளங்குவதுடன் இப்பொழுது எனக்கு விஷ்ணுபோலவும் அதிகமாக விளங்குகிருய். உன்விருப்பம் நிறைவேற்றப்பட்டது. என்னுல் மர்யாதைசெய்யப்பட்டவனுக என்னுடையமடைப்பள்ளியில் இரு. அவ்விடத்தில் என்னுல் எப்பொழுதும் நன்குமதிக்கப்பட்டிருக்கின்ற என்னுடையமனிதர்கள் இருக்கிருர்கள். நீ இப்பொழுது என்னுல் அவர்களுக்குத்தலைவனுக ஏற்படுத்தப்பட்டவனுக இரு" என்றுன். ராஜரே! அந்தப்பீமன் விராடராஜனுடையமடைப்பள்ளியில் அவ்விதமாகஏற்படுத்தப்பட்டு அவனுடையஅன்புக்குஉரியவனுக வாஸஞ்செய்துவந்தான். அவனைப் பாமாஜனங்கள் ஒருவரும் அறியவில்லை; அவனுடையவேலைக்காரருள்ளும் ஒருவரும்அறியவில்லை.

பதினோராவது அத்யாயம்.

பாண்டவப்ரவேசபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் நபும்ஸகவேஷம்தரித்து விராடனுடையஸபை யில்ப்ரவேசித்ததும், அவன் விராடனால்பெண்களுக்கு நாடயம்கற்பிக்கும்படி ஏவப்பட்டதும்.)

பிறகு, சிறந்தநிறமுள்ளவனும் யௌவனமுள்ளவனும் ஸ்த்ரீ வேஷம்பூண்டவனும் மிகஅலங்கரிக்கப்பட்டவனும் பவளங்களால் விசித்ரமான இரண்டுகுண்டலங்களையும், அங்குமிங்குமாக அசைந்து ஆடிக்கொண்டிருக்கின்ற இரண்டுசங்குவளைகளையும் அணிந்தவனும், கறுப்பும்சிவப்புமான இரண்டுவஸ்த்ரங்களைத்தரித்தவனும் சிறந்தசரீரத்தையுடையவனும் சுக்ரனுக்கும் ப்ருஹஸ்பதிக்குமொப்பான ஒளி பொருந்தியவனும் மிகுதியானநீண்ட கூந்தல்களை விரித்துக்கொண்டவனும் பெரியகைகளையுடையவனும் மதங்கொண்டபெரியயானையி னுடைய வல்லமைபோன்ற வல்லமைபொருந்தினவனுமான மற்றொருவன் காணப்பட்டான். அவன் நடையினால் அப்பொழுது பூமியைநடுங்கும்படி செய்கின்றவனாக ஸபையின்அருகில் விராடனை அடைந்து ஆகாயத்தில [1]க்ரஹத்தால் ஆக்ரமிக்கப்பட்டசந்த்ரன் போல நபும்ஸகவேஷத்தினால் விளங்கியும விளங்காமலுமஇருந்தான். ஸபையில் வந்திருக்கின்றவனும் [2]கபடத்தால மறைக்கபபடாதவனும் சத்ருக்களை மர்த்தனஞ்செய்கின்றவனும் நன்றாக விளங்குகிறவனும் தேவராஜன்போன்ற காந்தியுள்ளவனும் தேவராஜனுடைய புத்ரனும் சிறந்தயானைபோன்ற பராக்ரமமுடையவனுமான அவனை அரசன் பார்த்துத் தன்ஸமீபத்திலுள்ள எல்லாரையும்நோக்கி, "இவன் எவ்விடமிருந்துவருகிறான்? முன் நான் இவனைப்பற்றிக் கேள்வியுற்றதில்லை" என்றுவினவினான். அப்பொழுது அங்குள்ளமனிதர்கள் அவனை அறிந்ததாகச்சொல்லவில்லை. அரசன் வியபபுற்று இவ்விதமானவாக்யத்தைச் சொல்லலானான். "கஜேந்த்ரனுடைய லீலைபோன்ற லீலையுடையவனும் ஸிம்மம்போன்றநடையுடையவனும் காளையினுடையகண்கள்போன்ற கண்களையுடையவனும் தேவகுமாரன்போல உக்ரமான தேஜஸையுடையவனும் பருத்ததோள்களையும் கைகளையுமுடையவனும் ஸ்வர்ணம்போல் சுத்தனுமான இந்தமனிதன்யார்,

[1] ராஹுகேதுஸ்வரூபங்களானசாயாக்ரஹங்கள்.

[2] செயற்கையாலன்றி இயற்கையாகவே பேடிவடிவமடைந்தவன்.

எனதுங்காத்தில் ப்ரவேசித்திருக்கிறான்? இவனைப்பார்த்து, தேவேந்த்ரனுடையகுமாரனோ ப்ரம்மாவினுடையபுத்ரனோ ப்ரம்மதேவன் தானோ பார்வதிபுத்ரனோ குபேரனுடையபுத்ரனோ என்று எனக்கு ஸந்தேஹம் உண்டாயிருக்கின்றது" எனமொழிந்தான். சத்ருக்களை அழிப்பவனும் இந்த்ரனுக்குஒப்பானவனுமான அந்தஅர்ஜுனன், ஸபையிலுள்ள அனேகர்கள்பார்க்கையில், ஸபையைத்தாண்டி அரசனிடம்வந்து, "ராஜரே! நான் ப்ருஹன்னளைஎன்னும் பெயருள்ளவள்; நாட்யமாடுகிறவள். நான் பின்னலை நன்றாகப் பின்னுவேன்; அழகானகுண்டலங்களை இடுவேன்; மாலைகளைத் தொடுப்பேன்; உடைகளை ஸித்தஞ்செய்வேன்; ஸ்நானஞ்செய்விப்பேன்; கண்ணாடியைத் துடைக்குவைப்பேன். திலகங்களிடுவதிலும் எனக்கு ஸாமர்த்தியமஉண்டு. நபும்ஸகர்களுக்கும் பாலர்களுக்கும் மற்றுமுள்ள ஜனங்களுக்கும்நர்த்தனம்பழக்குவதிலும்வித்யாப்யாஸமுறைகளைக்கற்பிப்பதிலும் எனக்குத் திறமைஉண்டு; பின்னல்களில் பூக்களைத்தைப்பேன். அந்தச்செய்கையில் ஸ்த்ரீகள் என்னைக்காட்டிலும் ஸாமர்த்தியத்தில் மேலாயிருக்கமாட்டார்கள்" என்று சொன்னான். அர்ஜுனன் இவ்வாறு தன்னுடையசெய்கையை விதிப்படி கம்பீரத்துடனே விராடராஜனிடத்தில் தெரிவித்துநின்றான். அதிககீர்த்தியுள்ளவனான விராடராஜன், தன்ஸமீபத்தில்வந்திருக்கின்றவனும உயர்ந்தவனுமான அவனைக்கண்டு ஆச்சர்யமடைந்து, "அஸாரமான இந்தவேஷம் உனக்குத் தகாது. சிங்கம்போன்ற அரசனே! ஆண்மையில்லாமலிருப்பது உனக்குத் தகாது. ப்ரபுவே! உன்னுடையமேனியானது பூதபதியினுடையமேனிபோல மங்களகரமானவேஷங்களாலும் பூஷணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. மேகங்களால்அடர்ந்து வியாபிக்கப்பட்டிருக்கிறஆகாயத்தில் கிரணக்கூட்டங்களையுடைய ஸூர்யனுடைய வடிவம்போல உன்னுடையவடிவம் விளங்குகிறது. பருத்தும் மிக நீண்டுமிருக்கின்ற உன்னுடைய இருகைகளையும் வில்லானதுபிடிக்கப்பட்டால் விளங்கச்செய்யுமென்று நான் எண்ணுகிறேன். உனக்குத் தகுந்ததான வில்லைப்பிடித்து மிகவும் உறுதியுள்ளவனாக இப்பொழுது இந்தத்தேசத்தையும் இந்தப்பட்டணத்தையும் காப்பாற்றுவாயாக. ப்ருஹன்னளையே! நீ என்னுடைய புத்ரனுக்குஒப்பாக இரு. நான் பிராயமுதிர்ந்தவனாயிருக்கிறேன்; உனக்குப பொருளைக் கொடுக்கிறேன். ப்ரபுவே! என்னுடைய இந்தப்பட்டணமுழுதையும் நீ காப்பாயாக. நான் உனக்கு ஒருவிதமான நபும்ஸகத்தன்மையையும் காணவில்லை. நீ மத்ஸ்யதேசத்தை விரைவாக வ்ருத்தியடையச்செ

ய்து ஆண்டுவருவாயாக. நான் உண்மைசொல்லுகிறேன். நான் உனக்கு ராஜ்யத்தைக்கொடுக்கிறேன்" என்றான். அந்த அரசன் இவன் என்ன செய்யப்போகிறானென்று அறியவிருப்பம்கொண்டு அவனுடைய முன்னிலையில் நீண்டவைகளும் வர்ணமுள்ளவைகளும் நாண்கயிறுள்ளவைகளும் பலமுள்ளவைகளுமான தன்னுடைய் அநேக விற்களை அவனுக்குக் கொடுத்தான். பிறகு அர்ஜுனன், "ப்ரபுவே! என்னால் இவ்விதமானவில்லானது எடுக்கப்பட்டதில்லை; இப்படிப்பட்ட வில்லானது ஓரிடத்திலும் பார்க்கப்பட்டதுமில்லை. என்னைப்போன்ற [1]வில்லாளிகளும் பூமியில் இல்லை. நான் நாட்யமாடுவேன்; பாடுவேன்; வாத்யங்களை வாசிப்பேன். நர்த்தனசிக்ஷை செய்விக்கும் விஷயத்தில் எனக்கு விசேஷமான ஸாமர்த்தியமுண்டு. ஆதலால், ராஜரே! உத்தரைக்கு நர்த்தனத்தைக் கற்பிக்கிறதற்காக என்னை ஏற்றுக்கொள்ளும். நான் தேவிக்கு நர்த்தனத்தைக் கற்பிக்கிறவளாவேன்" என்று மிக்க ஆண்மையற்ற வார்த்தையைச் சொன்னான். விராடராஜன், "ப்ருஹன்னளையே! உனக்கு அவ்விதமானவரத்தைத் தருகிறேன். என்பெண்ணையும் என்பெண்ணைப்போன்ற மற்றுமுள்ள ஸ்த்ரீகளையும் நாட்யமாடும்படிசெய்" என்று சொல்லிவிட்டு, பிறகு அழகியஇடையையுடையவளும் அழகியவளுமான தன்புத்ரியைத் தானே அழைத்துச் சந்தோஷமுள்ள மனத்தோடு அவளைப்பார்த்து, "அழகிய சரீரமுடையவளே! ப்ருஹன்னளையென்கிற இவள் உனக்குத் தோழியாயிருக்கட்டும். பெண்ணே! இவள் மிக்க ப்ரீதியால் நன்குகட்டப்பட்ட ஸ்நேஹமுள்ளவளாகவும் எப்பொழுதும் உனக்கு உயிருக்கு ஒப்பாகவும் வேண்டியபக்ஷணங்களையும் ஆபரணங்களையும் வஸ்த்ரங்களையுமுடையவளாகவும் மங்களகரியாகவும் எல்லாஜனங்களிடங்களிலும் தடையற்றவளாகவும் ஸஞ்சரிக்கட்டும். கெட்ட குலத்தில்பிறந்தவர்களுக்கு இவ்விதமான வடிவம்இராது. இப்படிப்பட்ட ஒருத்தி நடைத்தவறுதலுள்ளவளாயிருக்கமாட்டாள்" என்று கூறினான். அரசன் தன்னுடைய பற்பல மந்த்ரிகளோடு ஆலோசித்து அந்த அர்ஜுனனை ஸ்த்ரீகளைக்கொண்டு விரைவாகப் பரீக்ஷிக்கச்செய்து (அந்தஸ்த்ரீகளால்) அவனுடைய உறுதியான நபும்ஸகத்தன்மையையும்கேட்டுப் பிறகு அவனைக் கன்னிகையினுடைய அந்தப்புரத்திற்கு அனுப்பிவிட்டான். ப்ரபுவான அந்தத்தனஞ்சயன் விராடனுடைய குமாரிக்குக் கானத்தையும் வாத்தியம்வாசிப்பதையும் கற்பித்தான். அவ்வாறே அந்தஉத்தரையினுடைய தோழிகளுக்கும்

---

[1] இது, குறிப்புமொழியாகக் கொள்ளவேண்டும்.

பரிசாரிகைகளுக்கும் கற்பித்தான். அந்தப்பாண்டவன் அந்தஉத்தரையினுடைய ப்ரீதிக்கும் உரியவனானன். சிறந்த கோட்பாடுகளையுடைய அந்தத்தனஞ்சயன் அவ்வாறு அவர்களுக்கு ப்ரியத்தைச் செய்துகொண்டு அவர்களோடு அந்த அந்தப்புரத்திலேயே வாஸஞ் செய்துவந்தான். அவ்விடத்தில் அந்தநிலைமையை அடைந்திருக்கின்ற அர்ஜுனனை வெளியிலிருக்கும் ஜனங்களாவது மற்ற ஜனங்களாவது அறியவில்லை.

பன்னிரண்டாவது அத்யாயம்.

பாண்டவப்ரவேசபர்வம். (தொடர்ச்சி.)

(நகுலன் விராடனை அடைந்து தனக்கு அச்வசாஸ்த்ரத்திலுள்ள ஸாமர்த்தியத்தைக்கூறியதும், விராடன் நகுலனுக்குக் குதிரைகளை ரக்ஷிக்கும்அதிகாரத்தைக்கொடுத்ததும்.)

பிறகு, விராடராஜன் குதிரைகளைப்பார்த்துக்கொண்டிருக்கும் பொழுது ப்ரபுவானமற்றொரு பாண்டுகுமாரன் காணப்பட்டான். வருகின்றவனான அந்தப்பாண்டவனை ஸாமான்யஜனங்கள் மேகத்தினின்று விடுபட்டிருக்கின்ற சந்த்ரமண்டலத்தைப்போலக் கண்டார்கள். அவன் இங்குமங்கும் அந்தக் குதிரைகளைப்பார்த்தான். பார்க்கின்ற அந்தநகுலனை மத்ஸ்யராஜன் கண்டான். பிறகு, அந்தவிராடன் குருகுலோத்தமனான அந்தநகுலனைப்பார்த்து அப்பொழுது ஸபையிலிருக்கின்றவர்களையெல்லாம் வினவினான். '"யௌவனமுள்ளவனும் என்னுடையஸபையைநோக்கி வருகிறவனுமான இவனை யாராவது இதற்குமுன் பார்த்ததுண்டா? இவன் எனக்கு ப்ரியனாயிருக்கிறான். இவனுடையதர்சனமும் என்மனததுக்குப் பிடித்திருக்கிறது. யாராவது ஒருவன் இவனைப்பார்த்திருந்தால் சொல்லட்டும். இவன் என்னுடைய குதிரைகளை அடிக்கடி பார்க்கிறான். ஆதலால், நிச்சயமாக இவன் குதிரைகளுடைய ஸ்வபாவங்களை அறிந்தவனாகவும் ஸமர்த்தனாகவுமிருக்கவேண்டும். இவன் விரைவாக அருகில்ப்ரவேசிக்கும்படி செய்யப்படலாம். இந்தவீரன் தெய்வம்போல விளங்குகிறான்" என்றான். மத்ஸ்யராஜன் இங்ஙனம் ஆலோசித்துக்கொண்டிருக்கும் பொழுதே கௌரவர்களுள் சிறந்தவனான நகுலன் ஸபையை விரைவாக அடைந்தான். பிறகு, கௌரவர்களுள் உத்தமனான நகுலன், விராடராஜனைநமஸ்கரித்து அருகில்வந்து அவனைப்பார்த்து, "ராஜரே!

நான் சம்பளத்தையும் போஜனத்தையும்விரும்பிப் பிழைக்கவேண்டு மென்று எண்ணங்கொண்டு இப்பொழுது உம்முடையபட்டணத்தை வந்து அடைந்தேன். நான் உம்முடையகுதிரைகளைக் கட்டுகிறவனும் உம்மால் நன்றாகப் போஷிக்கப்பட்டவனுமாயிருக்க விரும்புகிறேன். உமக்கு இஷ்டமிருந்தால் என்னைக் குதிரைகளுக்குத் தலைவனாகஏற் படுத்தும்" என்றுசொன்னான். விராடன், "நான் உனக்கு வாஹ னங்களையும் பொருள்களையும் சம்பளத்தையும் கொடுக்கிறேன். நீ குதிரைக்காரனாயிருப்பதற்குத் தகுந்தவனல்லன். நீ எவ்விடத்திலிரு ந்து வருகிறாய்? நீ யாரைச்சார்ந்தவன்? நீ எவ்வாறு இங்கு வந்தாய்? உன்னிடத்தில் எவ்வித சில்பவித்யையிருக்கிறது? சொல்" என்று வினவ, நகுலன், "பாண்டுபுத்ரர்கள் ஐவருள்ளும் ராஜாவானயுதிஷ்டி ரர் ஜ்யேஷ்டர். பகைவர்களை அழிப்பவரே! அவரால் நான் முற்கா லத்தில் குதிரைகள்விஷயத்தில் அதிகாரம் கொடுக்கப்பெற்றிருந் தேன். நான் குதிரைகளுடைய ஸ்வபாவத்தை அறிவேன்; பலவித மான அச்வசிக்ஷையையும் துஷ்டக்குதிரைகளை அடக்கும்விதத்தை யும் குதிரைகளுக்குச் செய்யத்தக்க எல்லாச் சிகித்ஸையையும் அறி வேன். என்னிடமிருக்கும் குதிரைகள் பயப்படமாட்டா. பெண் குதிரைகளும் என்னிடத்தில் துஷ்டத்தனம்செய்யா. அவ்வாறிருக்க, ஆண்குதிரை எவ்வாறு துஷ்டத்தனஞ்செய்யும்? என்னுடையதிற மையை அறிந்தே அந்தப்பாண்டுபுத்ரரான யுதிஷ்டிரர் 'க்ரந்திகன்' என்றே என்னைப் பேரிட்டுஅழைப்பர். 'தேவராஜனுக்கு மாதலி போலவும் தசரதமஹாராஜனுக்கு ஸுமந்த்ரர்போலவும் ஜமதக்னியி னுடையகுமாரரான பரசுராமருக்கு ஸுமஹன்போலவும் நான் உம க்கு ஸாரதியாயிருந்து உம்முடையகுதிரைகளைப் பழக்குகிறேன். மஹாராஜரே! மனிதர்களுக்கெல்லாம் ராஜாவான யுதிஷ்டிரருடைய கட்டளையினால் நான் லக்ஷக்கணக்காகவும் கோடிக்கணக்காகவுமுள்ள குதிரைகளுக்கு ரக்ஷகனாகஇருந்தேன்" என்றுகூறினான்.

விராடன், "என்னிடத்திலுள்ளவாஹனங்களான குதிரைகளெல் லாம் இப்பொழுதே உனக்கு அதீனமாயிருக்கட்டும். மேலும், என்னு டைய குதிரைவீரர்களும் ஸாரதிகளும் உனக்குஸ்வாதீனர்களாயிருக் கட்டும். தேவதைக்குஒப்பானவனே! இவ்விதமான உன்னுடைய இஷ்டம் நிறைவேற்றப்பட்டது. மற்றும் உன்னால் எதிர்பார்க்கப் பட்டிருக்கின்றவரத்தைச் சொல். குதிரைத்தொழில் உனக்குத் தகுதி யாகக்காணப்படவில்லை. நீ அரசன்போலவிளங்குகிறாய். உனக்குக்

1 கட்டி அடக்குகிறவன்.

குதிரைத்தொழில் தகாது. பார்ப்பதற்குஇனியவனே! எனக்கு உன்னுடையஇந்தத்தர்சனமானது யுதிஷ்டிரருடைய தர்சனத்துக்கு ஒப்பானதாகவேயிருக்கிறது. இகழத்தகாதவரான அந்தப்பாண்டவர் வேலைக்காரர்களைவிட்டுநீங்கி எவ்வாறு கானகத்தில் ஸஞ்சரிக்கிறாரோ? எப்படி ஸுகமாகவஸிக்கிறாரோ?'' என்றான். உத்தமனானகந்தர்வனுக்கு ஒப்பானவனும் யௌவனமுள்ளவனுமான அந்தநகுலன், ஸந்தோஷமுற்றவிராடராஜனால் அவ்வாறு பூஜிக்கப்பட்டான். ப்ரியமாகவும் நேர்த்தியாகவும் வஸித்துவருகின்றநகுலனை அஜ்ஞாதவாஸகாலத்தினிடையில் எவ்விதத்தினாலும் யாரும் அறியவில்லை.

பதின்மூன்றாவது அத்யாயம்.

பாண்டவப்ரவேசபர்வம். (தொடர்ச்சி.)

(ஸஹதேவன் இடையனுடையவேஷம்தரித்து விராடநகரத்தில்சென்றதும், விராடன் ஸஹதேவனுக்குப் பசுக்களைரக்ஷிக்கும் அதிகாரம் கொடுத்ததும்.)

பிறகு, சந்த்ரன்போன்றவனும் யாகத்தில் ஹவிஸுகளால் ஹோமம்செய்யப்பட்ட அக்னிபோன்றவனுமான மற்றொருவன் காணப்பட்டான். அவன் உலகத்தைவிளங்கச்செய்கின்ற பாலஸூர்யன் போல அழகியதோற்றமுள்ளவனாகக் காணப்பட்டான். வருகின்ற அந்தஸஹதேவனை, முந்தியிருக்கின்றவிராடராஜன் உடனே கண்டான். எல்லாருடையமனத்தையும் கவரும்காந்தியுள்ளவனும், யௌவனமுள்ளவனும், பகைவர்களை அழிக்கும்திறமையுடையவனும், மேகத்தினின்று விடுபட்ட சந்த்ரமண்டலம்போன்றவனும், (ஸபையை நோக்கி) வருகின்றவனும், அளவுள்ள கோலுள்ளவனும், அழகிய தோற்றமுள்ளவனும், தும்புகளையும் அணைகயிற்றையும் நாண்கயிற்றையும் நீண்டதும் ப்ரகாசமுள்ள அனேகமயிர்களாலே நன்றாகச் சேர்த்து முறுக்கப்பட்டதுமான சாட்டையும் பின்புறத்தில் கட்டிக்கொண்டிருப்பவனுமான அந்தஸஹதேவனை அந்தஸபையிலுள்ள ஜனங்கள் தனித்தனியாகக் கூடிக்கொண்டு பார்த்தார்கள். வீர்யவானான அந்தஸஹதேவனும் அரசனைநோக்கி, "ராஜரே! என்னைப் பசுக்களுக்குத் தலைவனாக ஏற்படுத்தும். என்னால் காப்பாற்றப்பட்ட உம்முடைய பசுக்கள் தெளிவான நித்ரையுள்ளவைகளாயிருக்கும். நான் திறமையுள்ளஇடையன். (என்னால் நன்றாகப்போஷிக்கப்படும்

உம்முடைய பசுக்களுக்கு) துஷ்டம்ருகங்களிடமிருந்தும் ரோகத்தினிடமிருந்தும் காட்டுத்தீயினிடமிருந்தும் திருடனிடமிருந்தும் பயமுண்டாகாது. ராஜரே! உம்முடையபசுக்கள் அதிகப்பாலுள்ளவைகளும் எண்ணிக்கையினால் அதிகப்பட்டவைகளும் பிணியற்றவைகளும் நல்ல புஷ்டியுள்ளவைகளுமாகும" என்று கூறினான். அரசன், ஸஹதேவனுடைய வார்த்தையைக்கேட்டு, அவனைப்பார்த்து ஸந்தோஷித்துப் புகழ்ந்து, "வீர! உன்னிடத்தில் இடையர்களின்தன்மையை நான் பார்க்கவில்லை. உறுதியுள்ள உன்னுடையசரீரமானது தைர்யத்தினால் க்ஷத்ரியனுடைய சரீரம்போலவும் குருவம்சத்தில்பிறந்தவனுடைய சரீரம்போலவும விளங்குகிறது. உன்னுடையசரீரமானது பாண்டித்யமில்லாததாகக் காணப்படவில்லை. நீ இந்தராஜ்யத்தில் எனக்கு ஆலோசனைசொல்லுகிற மந்த்ரிஸ்தானத்தை வஹித்துக்கொண்டிரு. ப்ருஹஸ்பதியானவர் இந்த்ரனுடன்கூடின தேவர்களைப்போல நீ அரசர்களோடு கூடின இந்த மத்ஸ்யதேசத்தை ஆண்டுகொண்டிரு. அழகிய வேஷமுள்ளவனே! நீ என்னுடைய எல்லாச்சேனைகளையும் காப்பாற்று. உனக்குத் தகுதியான கத்தியை எடுத்துக்கொள். ஸேனையை ரக்ஷிக்கிற பாரத்தைப்பொறுத்து, என்னுடைய ஸைன்யத்துக்கு நீ தலைவனாயிரு. வில்லைக் கையில்எடு" என்று ஸந்தோஷமுள்ள மனத்தோடு கூறினான். விராடராஜனால் (இப்படிச்) சொல்லப்பட்டவனும் குருவம்சத்தில் பிறந்தவர்களுள் உத்தமனும் அதிபுத்திசாலியுமான ஸஹதேவன் மத்ஸ்யதேசத்தில் மிகச்சிறந்தவனான விராடராஜனைப் புகழ்ந்து நமஸ்காரஞ்செய்து, "ராஜரே! ஸாரமான என்னுடைய வாக்யத்தைக் கேளும். நான் சிறுவன்; ஒருவிதஜாதியால் தோஷமுள்ளவன். நீதிகளில் தகுந்தஆலோசனையுடன் கூடியிருக்கும் தன்மை எனக்கு இப்பொழுது எவ்வாறு உண்டாகும்? தோஷமற்றவரே! அரசரே! நாங்கள் எங்கள்ஜாதிக்குரிய தொழில்களாலேயே ஸந்தோஷமடைகிறவர்கள். (ஆதலால்,) பசுக்களைக் காக்கும்விஷயத்தில் எனக்குக் கட்டளை இடும். நான் வைச்யன். எனக்கு அரிஷ்டநேமியென்று பெயர். நான் குருச்ரேஷ்டர்களான பாண்டவர்களுடைய பசுக்களைக் காக்கும் அதிகாரத்தில் இருந்தேன். ராஜச்ரேஷ்டர்களான அந்தப்பாண்டவர்கள் இருக்குமிடத்தை நான் அறியவில்லை. ப்ரஜைகளுக்குத் தலைவரே! உம்மிடத்தில் வாஸஞ்செய்ய விருப்பமுற்றிருக்கிறேன். ப்ரபுவே! இதைத் தவிர வேறுதொழிலால் ஜீவிப்பதற்கு என்னால் முடியாது. உம்மைத் தவிர வேறொருவரும் என் மனத்துக்கு ப்ரியமில்லை" என்றுசொன்

னன். விராடன், "சத்ருக்களை அழிப்பவனே! நீ ப்ராம்மணனோ? அல்லது ராஜாவோ? ஸமுத்ரம்சூழ்ந்த பூமியையாளும் அரசனுடைய ரூபமுடையவனாக இருக்கிறாய்; உண்மையைச்சொல். உன்னிடத்தில் இடைச்தன்மையானது பொருத்தமாயில்லை. எந்த அரசனுடைய ராஜ்யத்திலிருந்து இவ்விடம் வந்திருக்கிறாய்? எவ்விதமான சிறந்தசில்பம் உன்னிடத்திலிருக்கின்றது? நீ எங்களிடததில் எவ்விதமாக எப்பொழுதும் வஸிக்கப்போகிறாய்? உனக்கு இங்கு என்ன [1]வேதனம் வேண்டும்; சொல்" என்று வினவ, ஸஹதேவன், "ராஜரே! பாண்டு புத்ரர்கள் ஐவருள்ளும் யுதிஷ்டிராஜர் ஜ்யேஷ்டர். அவருக்கு எட்டு லக்ஷம் பசுக்களுடைய வர்க்கங்கள் நூறுநூறாகஇருந்தன. வேறு பதினாயிரம் பசுக்களுமிருந்தன. அபபடியே இன்னும் வேறான இருபதினாயிரம் பசுக்களும் இருந்தன அவைகளுக்கெல்லாம் நான் இடையனாக இருந்தேன். என்னைத் தந்த்ரீபாலனென்று எல்லோரும் சொல்வார்கள். (நான் இருக்குமிடத்துக்குச்) சுற்றிலும் பத்து யோஜனைதூரம்வரையில் ஓரிடத்திலாவது பசுக்களைபபற்றியனவான சென்றதும் நிகழ்வதும வருவதும் மறறதுமான ஒன்றும் என்னால் அறியப்படாததாக இராது. மஹாத்மாவான அந்தயுதிஷ்டிரருடைய குணங்கள் என்னால் நன்றாய் அறியப்பட்டிருநதன. குருதேசத்தரசரான அந்தயுதிஷ்டிரரும் என்னால் ஸந்தோஷப்படுத்தப்பட்டவரானார். என்னால் எண்ணப்பட்டிருக்கின்ற பசுக்கள் கணக்கிட்டு அறியமுடியாதவைகளும் மிகப்பெரியவைகளும் அதிகப்பாலுள்ளவைகளும் அநேகங்களும் கன்றுகளுள்ளவைகளும் நல்லஸ்வபாவமுள்ளவைகளுமாகின்றன. பசுக்கள் (என்னால் பாதுகாக்கப்பட்டால்) விரைவில் அதிகமாகின்றன. அபபசுக்களிடத்தில் இப்புவியில் ஒருவிதமான ரோகமும் உண்டாகிறதில்லை. அந்தஅந்தஉபாயங்களால் என்னால் இஃது அறியப்பட்டிருக்கின்றது. இவைகள்தாம் என்னிடத்திலுள்ள சில்பங்கள். ராஜரே! எந்தக்காளைகளுடைய மூத்ரத்தை மோந்து பார்த்து மலட்டுப்பசுவும கன்றையீனுமோ அவ்விதமான உயர்ந்த லக்ஷணமுள்ள காளைகளையும் நான் அறிவேன்" என்று மறுமொழி கூறினன்.

மத்ஸ்யதேசாதிபதியான விராடன், ஸந்தோஷத்தினால் குளிர்ந்த மனத்துடன் மாத்ரிபுத்ரனான பாண்டவனைப்பார்த்து, "இழிவான தொழிலை உனக்கு (ஏற்படுத்த) நான் ஸம்மதிக்கவில்லை. இந்தப்பூமி முழுமையையும் நீ ரக்ஷிப்பதற்குத்தகுந்தவனாயிருக்கிறாய். ப்ரபுவே!

1 சம்பளம்.

அல்லது உனக்கு இப்பொழுது விருப்பமிருந்தால் இஷ்டப்படி எனது பசுக்கூட்டத்தை நீ பாதுகாத்துவா. என்னுடைய பசுக்கள் உன்னிடத்தில் ஒப்பிக்கப்பட்டவைகளாகட்டும். இடையர்களுடன் கூடப் பசுக்களை உனக்கு நான் தருகிறேன். ஒவ்வொருநிறத்திலும் தனித்தனியாக லக்ஷக்கணக்கான பசுக்கூட்டங்களிருக்கின்றன. உன்னால் விரும்பப்பட்ட வரத்தை நான் உனக்குக்கொடுக்கிறேன். என்னுடையபசுக்கள் உன்னிடத்தில் ஒப்பிக்கப்பட்டவைகளாகட்டும்" என்றுசொன்னான்.

மஹாத்மாவும் பாண்டுபுத்ரனுமான ஸஹதேவன் இவ்வாறு விராடனோடு சேர்க்கைபெற்று இஷ்டப்படி பசுக்களுக்கு ரக்ஷகனாயிருக்கும் நிலைமையை அடைந்து, அஸ்தகிரியில் ப்ரவேசித்திருக்கின்ற ஸூர்யன்போல, அஜ்ஞாதவாஸஞ்செய்துகொண்டு வஸித்தான். பழுதற்றபராக்ரமமுள்ள பாண்டவர்கள் கடலால் சூழப்பட்ட பூமியை ஆள்வதற்கு முயற்சியுள்ளவர்களாக, உள்ளபடி அஜ்ஞாதவாஸத்தை அநுஷ்டிப்பதற்காக ப்ரதிஜ்ஞைசெய்தபடியே இவ்விதமாக விராடனிடத்தில் வஸித்துவந்தார்கள்.

பதினொன்காவது அத்யாயம்.

பாண்டவப்ரவேசபர்வம். (தொடர்ச்சி.)

(த்ரௌபதியானவள் ஸைரந்த்ரீவேஷந்தரித்து ஸுதேஷ்ணையினுடைய அரண்மனையில் வஸித்தது.)

பிறகு, அழகியகூந்தலையுடையவளும் பார்க்கத்தகுந்தவளும் சுத்தமான சிரிப்புடையவளும் பருத்த வட்டமான கொங்கைகளையுடையவளும் மங்களமுள்ளவளும் கறுத்தகண்களையுடையவளும் கறுத்தநிறமுடையவளும் க்ருஷ்ணையென்கிற பெயருடையவளும் பயந்தவளுமான அந்தத்ரௌபதியானவள் ம்ருதுவான பின்னல்மயிர்களை உயரத்தூக்கி முடிந்து வலப்பக்கத்தில் மறைத்துக்கொண்டும் அதிகமாக அழுக்கடைந்ததும் பெரிதுமான ஒருவஸ்த்ரத்தை உடுத்துக்கொண்டும் ஸைரந்த்ரியினுடையவேஷத்தைத் தரித்துக்கொண்டும் விராடநகரத்தில்புகுந்து துயரத்தை அடைந்தவள்போலச் [1]சென்றாள். அவளைப் பார்ப்பதற்காக அங்குள்ளபுருஷர்களும் ஸ்த்ரீகளும் நான்குபக்கத்திலிருந்தும் ஓடிவந்து அவளைப்பார்த்து, "பெண்ணே! நீ யார்? எதைச்செய்ய விரும்புகிறாய்?" என்று வினவினார்கள். ராஜேந்த்ரரே!

---

1 'ஸைரந்த்ரீவேஷ ஸம்யுதா' என்பது விடப்பட்டது.

அந்தத்ரௌபதியானவள் அவர்களைநோக்கி, "(ஓ! நகரவாஸிகளே!) வந்திருக்கின்றநான் ஸைரந்த்ரி; என்னைக் காப்பாற்றுகிறவனுக்கு ஊழியத்தைச் செய்யவிரும்புகிறேன்" என்று மறுமொழிகூறினாள். அந்த த்ரௌபதியினுடைய ரூபத்தினாலும் வேஷத்தினாலும் இன்சொல்லாலும், சோற்றுக்காக வந்திருக்கிறவளாக அவளை ஜனங்கள் நம்பவில்லை. கேகயராஜகுமாரியும் விராடராஜனுடைய மனத்துக்கு இனிய மனைவியுமான ஸுதேஷ்ணையானவள், உப்பரிகையிலிருந்து நான்கு பக்கத்திலும் பார்க்கின்றவள் தற்செயலாக த்ரௌபதியைக்கண்டாள். விராடனுடையமனைவியான அந்த ஸுதேஷ்ணாதேவியானவள் அவ்விதரூபத்தையுடையவளும் நாதனற்றவளும் ஒற்றைவஸ்த்ரத்தை உடுத்தியவளும் ஸ்தரீகளாலும் புருஷர்களாலும் நான்குபக்கத்திலும் சூழப்பட்டவளுமான அவளைக்கண்டு காருண்யத்தினால் உண்டான பரபரப்புடன், "அவளிடத்தினின்று ஜனங்களை விலக்கி, நீங்களெல்லோரும் அவளை இங்கே அழைத்துவாருங்கள். பதிவ்ரதையான அந்தப் பெண்ணைப் பார்த்தபொழுதே என்மனம் நடுங்குகிறது. ஆதலால், உங்களுக்கு இஷ்டமிருந்தால் அந்தப்பெண்ணை விரைவாக இங்கு அழைத்துவந்து (எனக்குக்) காண்பியுங்கள்" என்று சொல்லி, தன்பக்கத்திலுள்ளவர்களான ஸ்த்ரீகளையும அவளை அழைத்துவருவதில் விருப்பமுள்ளவர்களான வ்ருத்தஸ்த்ரீகளையும அனுப்பினாள். அவ்வாறு சொல்லப்பட்ட அந்தஸ்த்ரீகள் ஒருங்குசேர்ந்து த்ரௌபதியினுடைய அருகில்சென்று அவளை அழைத்துவந்து அவளைப்பார்த்து எல்லா விதத்தாலும் மதுரமான அக்ஷரங்களுடன்கூடின வாக்யத்தை உரைக்கலானார்கள். "ஏ! கல்யாணி! உப்பரிகையிலிருக்கின்ற ஸுதேஷ்ணாதேவி உன்னைப்பார்க்க எண்ணங்கொண்டு உனக்காக எங்களையனுப்பினாள். அவளைப்பார்க்க உனக்கு இஷ்டமிருந்தால் எங்களால் நீ பாதுகாக்கப்பட்டவளாக உன்னிஷ்டப்படி இப்பொழுது வா" என்று சொன்னார்கள். (பிறர்களுடைய) சொற்களின் பொருள்களை அறிவதில் ஸமர்த்தையான த்ரௌபதி அவர்களுடைய அவ்விதமான வார்த்தையைக்கேட்டு, தன்னால் விரும்பப்பட்ட கார்யத்தினுடைய அதிகலாபத்தினால் ஸந்தோஷமடைந்து, அரண்மனையைநோக்கி வந்தாள். த்ரௌபதியானவள், எந்தஇடத்தில் ப்ரதான ராஜஸ்த்ரீ இருக்கிறாளோ அந்த ராஜமாளிகையைஅடைந்து, கீர்த்தியுள்ளவளும் ராஜபத்னியுமான ஸுதேஷ்ணையை வந்தடைந்தாள். கறுத்த நீண்டகண்களையுடையவளும் நாணமுள்ளவளும் இளங்கொடிபோல நடுக்கமுற்றவளும் அழகிய இடையுள்ளவளும் மங்களமுள்ளவளும்

எல்லாலக்ஷணங்களும் பொருந்தியவளுமான அந்தத்ரௌபதியான வள், கறுத்தநிறமுடையவைகளும் மெல்லியவைகளும் நீண்டவைக ளும் சுருண்டு மென்மையாயிருக்கின்ற நுனிகளையுடையவைகளும் அழகியவைகளுமான கூந்தல்களை உயரஎடுத்து முடித்துக்கட்டி வல ப்பக்கத்தில் மறைத்துக்கொண்டு விராடனுடைய அந்தப்புரத்தில் நுழைந்து எதிரில்சென்று, ரத்னங்களாலிழைக்கப்பட்ட விரிப்புடன் கூடின ஸ்வர்ணபீடத்திலிருப்பவளும் சிவந்ததும் மெல்லியதுமான ஆடையையுடுத்தவளும் மேகத்திலுள்ள மின்னல்கொடிபோன்றவ ளும் பற்பலநிறங்களுள்ள (ரத்னகாந்திகளால்) விசித்ரமாயிருப்பவ ளும் எல்லாஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டவளும் அழகியபுரு வங்களும் கூந்தல்களும் இடையுமுள்ளவளும், கூனர்களுக்கும் குள் ளர்களுக்கும் மத்தியிலிருப்பவளும், யாகத்தில் அநேகபுஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட பூமியிலுள்ள யாகமேடைபோன்றவளும் எல்லா அலங்காரங்களாலும் அலங்கரிக்கப்பட்டவளும் ஐச்வர்யமுள்ளவளும் அனேக ராஜபுத்ரிகளால் சூழப்பட்டவளும் ராஜமஹிஷியுமான ஸு தேஷ்ணையைக் கண்டாள். அந்த உத்தமஸ்த்ரீகளெல்லாரும் த்ரௌ பதியைப்பார்த்து மனவருத்தமடைந்து ஆஸனத்திலிருந்து விரைவாக எழுந்திருந்து நான்குபக்கத்திலும் (த்ரௌபதியைவந்து) சூழ்ந்து கொண்டார்கள். அவர்களெல்லாரும் (தேவலோகத்திலிருந்து) வந் திருக்கின்ற தேவியான இந்த்ராணியைப்போல அந்தத்ரௌபதியைப் பார்த்தார்கள். மறைந்திருக்கின்ற கணுக்கால்களையுடையவளும், உத் தமமான [1]இடையையுடையவளும், சிவந்தும் நீண்டுமிருக்கின்ற கண்க ளையுடையவளும், எல்லாவிதத்திலும் மேன்மைபெற்றவளும், தோஷ மற்றஅங்கங்களையுடையவளும், வணங்கின சரீரத்தையுடையவளும், அழகிய இடையையுடையவளும், அதிக குறுமையும் நெடுமையுமில்லா தவளும், அனேகம் புற்களால்அடர்ந்த காட்டிலுள்ள பெண்மான் போன்றவளும், இகழத்தகாதவளும், அழகிய கூந்தலையுடையவளும், மான்போன்றவிழியையுடையவளும, பயந்திருக்கின்ற பெண்மான் போன்றவளும், கூட்டத்திலிருந்து தவறியிருக்கின்ற பெண்யானை போன்றவளும், லக்ஷ்மிதேவிபோன்றவளும், அகன்ற கண்களையுடைய வளும், கீர்த்திபொருந்திய விதையைபோனறவளும, நக்ஷத்ரங்களுள ரோஹிணிபோன்றவளும், ஜ்வலிக்கின்ற அக்னிஜ்வாலைபோன்றவளும், ருத்ரபத்னியாகிய பார்வதிபோன்றவளும், மஹோததியினுடைய கரை போன்றவளும், நககன்னிகைகளுள் ஸுலபைபோன்றவளும், பெண்

[1] மூலத்தில் வேறு.

மான்களுள் கின்னரிபோன்றவளும், கங்கையைப்போல் பரிசுத்தமான அங்கங்களுடையவளும், சாத்காலத்தைச்சேர்ந்த ராத்ரிபோன்றவளும், உலகத்தில் (இவ்விதமான ஸ்வரூபமுடையவளென்று) எண்ணத்தகாதவளும், இளாதேவிபோல் உத்தமமான கீர்த்தியைப்பெற்றவளும், ஸாவித்ரியைப்போல (எவ்விதத்தினாலும்) அவமதிக்கத்தகாதவளும், ப்ரம்மதேஜஸோடு கூடியவளும், ஸீதையைப்போல் பதிவ்ரதையும், அருந்ததிபோல் சுத்தையும், ப்ரியமுள்ளவளுமான அந்த த்ரௌபதியை ஸுதேஷ்ணையானவள் ஆச்சர்யத்தினால் மலர்ந்தகண்களையுடையவளாகப் பின்வருமாறு கேட்கலானாள்.

"தோஷமற்ற எல்லா அங்கங்களையுமுடையவளே! நீயார்? நீ எவ்விடத்தினின்று இங்கே வந்திருக்கிறாய்? நீ எவனைச்சார்ந்தவள்? விசாலமான கண்களையுடையவளே! நான் உனக்கு எதைச் செய்யக்கடவேன்? மறைந்திருக்கின்ற கணுக்கால்களுடையவளும், (நீண்டும் குறுகியுமில்லாமல்) ஸமமான இரண்டு துடைகளையுடையவளும், (சப்தம், புத்தி, நாபிஇம்) மூன்றுகளிலும் ஆழ்ந்தவளும், (மூக்கு இரண்டுகண்கள் காது நகங்கள் ஸ்தனங்கள் பிடரி இந்த) ஆறுகளிலும் உன்னதமாயிருப்பவளும், சிவந்திருக்கின்ற (உள்ளங்கை உள்ளங்கால், கடைக்கண், உதடு, நா, நகம் இந்த) ஐந்துஇடங்களிலும் பளபளப்புள்ளவளும், ஹம்ஸம்போல் கத்கதஸ்வரத்துடன் பேசுபவளும், அழகிய கூந்தலையுடையவளும், அழகிய குரலுடையவளும், யௌவனத்தின் மத்தியிலிருப்பவளும், பருத்திருக்கின்ற [1]கொங்கைகளுள்ளவளும், குடிலமான இமைமயிர்களுள்ள கண்களையுடையவளும், கோவைப்பழம்போன்ற உதட்டையுடையவளும், மெலிந்த இடையுள்ளவளும், சங்கம்போன்ற கழுத்தையுடையவளும், மறைந்திருக்கின்ற நரம்புகளையுடையவளும், பூர்ணசந்த்ரனுக்கொப்பான முகத்தையுடையவளும், விலாஸங்களுடன்கூடியவளுமான நீ, அஸுரஸ்த்ரீயோ? கின்னரியோ? கந்தர்வஸ்த்ரீயோ? வனதேவதையோ? அப்ஸாஸ்த்ரீயோ? நாககன்னிகையோ? தாரையோ? அலம்புஸையோ? மிச்ரகேசியோ? புண்டரீகையோ? மாலினியோ? நீயார்? அந்தஅந்த லக்ஷணத்துடன்கூடின காச்மீரதேசத்தில் பிறந்த பெண்குதிரையைப்போல விளங்குகிறாய். நீ இந்த்ராணியோ? ருத்ரபத்னியோ? ஸ்வதையோ? ரதிதேவியோ? ஏ! தேவி! தேவர்களுள் ப்ரஸித்திபெற்றவளான எந்தத் தேவஸ்த்ரீ, இங்கு வந்திருக்கின்றாய்? சொல். உன்னுடைய ரூபமானது பூஷணங்களால் விடுபட்

[1] ஒருசொல்விடப்பட்டது.

டிருந்தாலும் ஒப்பற்றதாக விளங்குகிறது. லோககர்த்தாவான ப்ரம்மதேவர் உன்னைப் படைத்துவிட்டு (வேறு ஸ்த்ரீகளைப்படைப்பதினின்று) ஒழிந்திருப்பாரென்று நான் எண்ணுகிறேன். உன்னைப் பார்த்து ஸ்த்ரீகளே த்ருப்திபெறுகிறார்களில்லை. புருஷர்களுக்கு எவ்வாறு ஆசையுண்டாகாமலிருக்கும்? தளிர்களாலும் புஷ்பங்களாலும் பூங்கொத்துகளாலும் நான்குபக்கத்திலும் நிறைந்த வனதேவதைகளும் உன்னுடைய ரூபத்தின் நிறைவினால் வியப்புற்று உன்னையே பார்க்கின்றார்கள். ஏ! கல்யாணி! அந்தப்புரத்திலுள்ள ஸ்த்ரீகளும் ம்ருகங்களும் பக்ஷிக்கூட்டங்களும் புருஷர்களும் எல்லாரும் மிக்க வியப்புற்று உன்னையே பார்க்கின்றார்கள். மூவுலகங்களிலும் உன்னைப்போன்ற ஒரு ஸௌந்தரியானவள் இதற்குமுந்திப் பார்க்கப் படவுமில்லை; கேட்கப்படவுமில்லை. நீ அழகிய கண்ணுள்ளவளாயிருக்கிறாய்" என்று கூற, த்ரௌபதியானவள் (பின்வருமாறு) மறுமொழி கூறலானாள்.

"நான் தேவஸ்த்ரீயுமல்லேன்; கந்தர்வஸ்த்ரீயுமல்லேன்; யக்ஷஸ்த்ரீயுமல்லேன்; கின்னரஸ்த்ரீயுமல்லேன்; நான் ஸைரந்த்ரிஜாதியைச் சேர்ந்தவள்; காட்டிலுள்ள கிழங்குகளையும் பழங்களையும் உண்பவள். என் கணவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே நான் ஏதோ ஒரு காரணத்தினால் (ஒருவனால்) கூந்தலில் பற்றி இழுக்கப்பட்டு, பயந்துகொண்டு கானகம் சென்றேன். அழகிய புருவங்களையுடையவளே! நான் ஓரிடத்திலும் நிலையற்றவளாகவும் காட்டிலுள்ள கிழங்குகனிகளைப் பக்ஷிக்கின்றவளாகவும் பன்னிரண்டுவர்ஷகாலம் அந்தக் காட்டில் ஸஞ்சரித்துக்கொண்டிருந்து உன்னருகில் வந்தடைந்தேன். நான் அழகாகக் கூந்தலைப் பின்னவும் விசித்ரமான மணிகளைக் கோக்கவும் அறிவேன்; மல்லிகைகளையும் கருநெய்தல்களையும் தாமரைப்பூக்களையும் சேர்த்து மாலைகளைத்தொடுக்க அறிவேன்; ஸிந்துவாரகபுஷ்பங்களாலும் ஜாதிபுஷ்பங்களாலும் தலையலங்காரங்களை ஒழுங்காகச் செய்வேன்; கஸ்தூரியினாலும் காரகில் சாந்தினாலும் பத்ரலேகனத்தையும் செய்வேன்; சிறந்த சந்தனத்தைச் சேர்ப்பேன். பற்பலவிதமும் மிக்க மங்களகரமுமான மாலைகளையும் தொடுப்பேன். க்ருஷ்ணனுக்கு ப்ரியமுள்ள பார்யையான ஸத்யபாமையை நான் ஆராதித்தேன். அவ்வாறே பாண்டவர்களின் பார்யையும் ஸ்த்ரீகளுள் உத்தமியுமான த்ரௌபதியையும் ஆராதித்தேன். அழகிய புருவங்களையுடையவளான அந்த த்ரௌபதிதேவியினால் எனக்கு வேண்டிய வஸ்துக்களைக்கொடுத்து மிகவும் ஸந்தோ

ஷப்படுத்தப்பட்டேன். த்ரௌபதிதேவியானவள் எனக்கு மாலினி யென்று தானே பெயரிட்டாள். தாமரைப்பூவிதழ்போன்ற கண்ணை யுடையவளான அந்தக்ருஷ்ணையானவள் எனக்கு உயிருக்கொப்பான தோழி. மங்களகரமான முகமுள்ளவளே! நான் ஓரிடத்திலாவது நெடுங்காலம் வஸிப்பதற்கு விரும்பமாட்டேன். இதுதான் எங்களுடையவ்ரதம். இப்படிப்பட்ட இந்தச் செய்கையானது எங்களுடையகுலதர்மம். எவன் எங்களுடையபொருளையும் தேசத்தையும் ஆடையையும் கவர்வனோ, அவன்விஷயத்திலும் எங்களால் கோபம் பாராட்டத்தக்கதில்லை. (ஏனென்றால்,) எங்களுடையகுரு மிக்ககோபமுள்ளவர். அப்படிப்பட்ட நான் பர்த்தாக்களுடைய சோகத்தினால் ஆக்ரமிக்கப்பட்ட அங்கங்களையுடையவளும் பர்த்தாக்களோடு ஸமானமாக வ்ரதத்தை அனுஷ்டிப்பவளுமாயிருந்து எவ்விடத்தில் ஸூர்யாஸ்தமனமாகிறதோ அவ்விடத்தையே இருப்பிடமாகக்கொண்டு செல்லமுடியாத காடுகளிலும் தீர்த்தங்களிலும் தடாகங்களிலும் பற்பலவிதமானவைகளும் மனத்துக்கு இனியவைகளுமான மலைகளிலும் ஸமுத்ரகாமிகளான நதிகளிலும் ப்ரவேசிக்கமுடியாத பூமியிலும் ஸஞ்சரிக்கிறேன். இனியசொல்லையுடையவளே! என்னுடையபதிகள் ஸஞ்சரித்துக்கொண்டிருக்குங்கால் வீரர்களைப் பதியாகக் கொண்டவளும் தேவியுமான நான் தெய்வச்செயலால் குழந்தைகளைவிட்டுப் பிரிக்கப்பட்டபொழுது உன்னுடைய பர்த்தாவினுடைய நன்னடக்கையைக் கந்தமாதனபர்வதத்திலிருந்தே கேட்டிருக்கிறேன். ப்ராம்மணர்களிடமிருந்து மஹிமையைக்கேட்டு அந்தக் கந்தமாதனபர்வதத்தினின்றே உன்னை அடைவதற்கு நான் விருப்பமுற்றேன். ஆதலால், நான் இவ்விடம் வந்தேன். எனக்குத் தர்மராஜனும் வாயுவும் இந்த்ரனும் அவ்வாறே அச்வினீதேவர்களும் குருக்கள். அவர்களுடைய அனுக்ரஹத்தினால் என்னை ஒரு புருஷனாவது அவமதிக்கச் சக்தியுள்ளவனாகான்" என்று கூறினாள். த்ரௌபதியானவள் இவ்வாறு அந்த ஸுதேஷ்ணையைப்பார்த்துச் சொல்லிவிட்டுக் கைகளைக் குவித்துக்கொண்டு நின்றாள்.

ஸுதேஷ்ணுதேவியானவள், ஸ்த்ரீகளுள் சிறந்த த்ரௌபதியைப்பார்த்து வியப்புற்று, "கல்யாணி! உன்னை நான் போஷிக்கமாட்டேன். எனக்கு ஸந்தேஹம் உண்டாயிருக்கின்றது. இந்தராஜா உன்னைப்பார்த்தால் (உன்னிடத்தில்) கெட்டஎண்ணம் கொள்வார். (ஆதலால்) நீ இந்தஅரண்மனையில் வஸிப்பதற்குத் தகுந்தவளல்லையென்று நான் எண்ணுகிறேன். அழகிய இடையுள்ளவளே! இங்கு

வஸிப்பதில் இவ்வித தோஷமிருக்கிறது. பயந்தவளே! நீ எவ்விதம் எண்ணுகிறாய்? சிறந்த ஒளிபொருந்தியவளே! ராஜக்ருஹத்திலும் என்னுடைய க்ருஹத்திலுமிருக்கிற ஸ்த்ரீகளெல்லாரும் உன்னொருத்தியையே ஆச்சர்யத்தோடு பார்க்கின்றார்கள். என்னுடைய வாஸஸ்தானத்தில் ஸமீபத்திலிருக்கிற இந்தமரங்களையும் நீ பார். உன்னைப்பார்த்து இந்தமரங்களும் வணங்குகின்றன. நீ எந்தப்புருஷனைத்தான் ஆவலுள்ளவனாகச் செய்யமாட்டாய்? நீ மனிதர்களுக்குரிய ரூபத்தை மீறினதும் ஆச்சர்யகரமும் உத்தமமுமான ரூபத்தைத் தரிக்கிறாய். இகழத்தகாத அங்கங்களுடையவளே! உன்னுடைய ரூபத்தை விலங்குஜாதியில் சேர்ந்தவைகளும் ஆச்சர்யத்துடன் உற்றுப் பார்க்கின்றன. (அவ்வாறிருக்க,) பூமியிலுள்ள மனிதர்கள் உன்னை ஆச்சர்யத்துடன் பார்ப்பார்களென்பதில் ஸம்சயமென்ன இருக்கின்றது? அழகிய இடையுடையவளே! [1]விராடராஜர் உன்னுடைய உத்தமமான சரீரத்தைப்பார்த்து, என்னை விட்டுவிட்டு முழுமனத்துடனும் உன்னையே அடைவார். நீண்டகண்களையுடையவளே! தோஷமற்ற அங்கங்களையுடையவளான நீ மனமகிழ்ந்து எந்தமனிதனைப் பார்ப்பாயோ அவன் காமனுக்கு வசப்பட்டவனாவான். நல்ல மங்களஸ்நானஞ்செய்து அலங்காரங்களை அணிந்து, எந்தமனிதனை நீ பார்ப்பாயோ அவனுக்கு வாட்டமாவது துக்கமாவது ஆலஸ்யமாவது தோல்வியாவது உண்டாகாது. தோஷமற்ற எல்லா அங்கங்களையுமுடையவளே! நீ நன்றாக அலங்கரித்துக்கொண்டு எவனை அடைவாயோ அவனுக்குச் சோகமாவது மனக்கொதிப்பாவது கோபமாவது உண்டாகாது. நான் பொய்சொல்லவில்லை. அழகிய புருவங்களையுடையவளே! உத்தமியான நீ எவனுக்குடன்பட்டு மடியின்மீது ஏறினவளாவையோ அவனுக்குப் பிணியும் மூப்பும் பசியும் தாகமும் உண்டாகா. தகுந்த உன்னுடைய இருகைகளாலும் எவனை நீ கட்டி அணைவாயோ அவன் மரித்தவனானாலும் பிழைத்துவிடுவானென்பது என்னுடைய எண்ணம். எவனுக்கு நீ மனைவியாவையோ, ஸந்தோஷத்தோடு எவனைக் கட்டிக்கொள்வாயோ அவன் எல்லாத்தேவர்களுள்ளும் மஹேந்த்ரன்போல மேன்மைபெற்று வாழ்வான். அழகிய துடைகளையுடையவளே! ஒருமனிதன் ஒருமாத்தின்மீதேறி அந்த மாத்தையே வெட்டுவதுபோல ராஜக்ருஹத்தில் நீ எனக்கு ஆவாய். அழகிய புருவங்களையுடையவளே! பெண்நண்டானது எவ்வாறு கர்ப்பத்தைத் தனக்கு ம்ருத்யுவாகத் தேடிக்கொள்ளுகிறதோ அவ்வாறே

[1] இங்கு ஒருசொல் விடப்பட்டது.

உன்னுடைய சேர்க்கையை நான் எண்ணுகிறேன். ஸைரந்திரி! உன்னைக் கேட்டுக்கொள்ளுகிறேன். எவ்விதத்தாலும் நான் உன்னை அவமதிக்கவில்லை. கல்யாணி! என் கணவனுடைய சீலத்தினிடமிருந்து உண்டான பயத்தினால், நீ என்னிடம் வஸிப்பதை நான் விரும்பவில்லை” என்றாள்.

த்ரௌபதி, “(தேவி!) நான் விராடராஜராலாவது வேறொருவராலாவது தேவகந்தர்வயக்ஷர்களாலாவது கெட்டஎண்ணத்துடன் பார்ப்பதற்குமுடியாதவள். நற்குலத்திற்பிறந்தவர்களும் நல்லவ்ரதமுள்ளவர்களும் தேவாதிதேவர்களுககுப் புத்ரர்களும் ஸூர்யனுக்கும் அக்னிக்கும் ஒப்பான காந்தியுடையவர்களுமான ஐந்துகந்தர்வர்கள் என்னைக் காக்கின்றார்கள். கெட்ட ஸ்வபாவமுள்ள எந்தமனிதன் கெட்டஎண்ணத்துடன் என்னைத் தொடுவனோ அவன் அந்த இரவிலேயே உலக்கைகளால் அடிக்கப்பட்டு விரைவாக விழுவான். அகன்றகண்களையுடையவளே! எவன் கெட்டஎண்ணமுள்ளவனாகி என்னைப் பார்த்துப் பேசுவனோ அந்தமனிதனுக்குப் பந்துக்கள் பூர்ணமாக நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் ஆயிரக்கோடிக்கணக்காகவும் இருந்தாலும் அவன் உன் முன்னிலையிலேயே மாண்டு போவான். அப்படிப்பட்ட மனிதனை என்றும் முப்பதுவயதுப்பருவநிலையைப்பெற்ற தேவர்களாவது அஸுரர்களாவது பன்னகர்களாவது அந்தக் கந்தர்வராஜர்களிடமிருந்து பாதுகாக்கமாட்டார்கள். ஸம்சயமில்லை. ஸுதேஷ்ணையே! நீ என்னை ஸ்வஜனங்களுள்ளாவது பந்துக்களுள்ளாவது ஒருத்தியாக எண்ணி என்னிடத்தில் நம்பிக்கை வை. நான் மனிதர்களால் பார்க்கத்தக்கவளல்லேன். என்னுடைய நடக்கை இவ்விதமானதன்று. எவன் எனக்கு எச்சிலைக்கொடுக்கமாட்டானோ, எவன் என்னைத் தன்கால்களைக் கழுவும்படிசெய்யமாட்டானோ அந்த மனிதனுடைய அருகில் வாஸஞ்செய்வதினால் என்னுடைய கணவர்களான கந்தர்வர்கள் ப்ரீதியடைவார்கள். எந்தமனிதன் மற்ற ஸாமான்யஸ்த்ரீகளைப்போல என்னை விரும்புவனோ அந்த மனிதன் அன்றிரவிலேயே வேறுசரீரத்தில் ப்ரவேசிப்பான். ராஜபத்னீ! நான் ஒருவராலும் (நல்லொழுக்கத்தினின்று) தவறச்செய்வதற்கு முடியாதவள். (துஷ்டர்களுக்கு) துன்பத்தை விளைவிக்கும் தன்மையுடையவர்களும் பலசாலிகளுமான அப்படிப்பட்ட கந்தர்வர்கள் எனக்கு ப்ராணநாதர்கள். இவ்வாறு (கந்தர்வர்களால் ரக்ஷிக்கப்பட்டு) வஸித்துவருகின்ற என்விஷயத்தில் உனக்குப் பயமே வேண்டாம்” என்று மறுமொழிகூறினாள்.

ஸைரந்த்ரி இப்படிச் சொல்லியதைக்கேட்ட ஸுதேஷ்ணையானவள், "கல்யாணி! உன் ஒழுக்கம் இவ்விதம் இருக்குமானால் நீ என்னிடத்தில் இங்கு வாஸஞ்செய். பெண்ணே! எந்தப்புருஷன் தான் போஜனம்செய்த மிகுதியை உனக்குக் கொடுப்பான்? புத்திமானான எந்தமனிதன் லக்ஷ்மியைப்போன்ற உன்னைப் பார்த்துக் கால்களை நீட்டுவான்? இவவாறு ஆசாரத்தால் நிறைந்தவளும் இவ்விதமாகத் தேவர்களைக் கதியாகஉடையவளுமான நீ ப்ராம்மணர்களுக்கு ஸாவித்ரிபோல ப்ராணிகளுக்கு ரக்ஷிக்கத்தக்கவளாயிருக்கிறாய். கல்யாணி! தேவதைபோல் பூஜிக்கப்பட்டவளாகவும உத்தமமான தேஜஸுள்ளவளாகவும் என்னிடத்தில் ப்ரீதியுள்ளவளாகவும் வாஸஞ்செய். பெண்ணே! ஸர்வாபீஷ்டங்களாலும் ஸிரம்பஸந்தோஷமுள்ளவளாகவும் மனக்கலக்கமற்றவளாகவும ஸுகமாக வாஸஞ்செய். எனக்கு உன்னிடத்தில் ப்ரீதியிருக்கின்றது" என்று சொன்னாள். ஸுதேஷ்ணையினால் இவ்வாறு சொல்லப்பட்ட அநக த்ரௌபதியானவள் மிக்க ப்ரீதியுடையவளாகவும் அழகிய சிரிப்புடையவளாகவும் ஸந்தேஹமற்றவளாகவும் விராடனுடைய அந்தப்புரத்தில் ஸுகமாக ப்ரவேசித்தாள். ஜனமேஜயமஹாராஜரே! பணிவிடைசெய்யப்படத் தகுந்தவளான த்ரௌபதியானவள, ஸுதேஷ்ணைக்கு ஊழியம்செய்துகொண்டு மிகுந்தகஷ்டத்துடன் (அங்கு) வாஸஞ்செய்தாள். இவ்வாறு பாண்டவர்கள், ஒருவருக்குந்தெரியாமல் வாஸஞ்செய்யக்கருதி அடக்கப்பட்ட மனத்துடனும சாம்பலில் மறைந்திருக்கின்ற அக்னிபோல மூடப்பட்ட தேஜஸுடனும விராடனிடத்தில் வஸித்தார்கள். அவ்வாறே மங்களஸ்வரூபிணியான க்ருஷ்ணையும் அந்தப்புரத்தையடைந்து வாஸஞ்செய்தாள்" என்று கூறினர்.

பாண்டவப்ரவேசபர்வம் முற்றிற்று.

பதினைந்தாவது அத்யாயம்.

ஸமயபாலனபர்வம்.

(பாண்டவர்கள் தங்களுடையசெய்கைகளால் விராடனை ஸந்தோஷிக்கச்செய்ததும், பீமன் மஹாமல்லனைக்கொன்றதும்.)

ஜனமேஜயர், "இப்படி விராடநகரத்தில் வஸிப்பவர்களும் உண்மையான பராக்ரமமுள்ளவர்களும் புருஷோத்தமர்களுமான பாண்டவர்கள் அதற்குமேல என்னசெய்தார்கள்?" என்றுவினவ,

வைசம்பாயனர் சொல்லத்தொடங்கினார். "இங்ஙனம் அந்தவிராட நகரத்தில்மறைந்துவாஸஞ்செய்கின்றவர்களும் குருகுலத்தில்உதித்தவர்களுமான அந்தப்பாண்டவர்கள் விராடராஜன் த்ருப்தியடையும்படி எந்தக்கார்யத்தைச்செய்தார்களென்பதைக்கேளும். வேந்தரே! ஸபாத்யக்ஷரானயுதிஷ்டிரர் ஸபையிலுள்ளவர்களுக்கும் அவ்வாறே புத்ரர்களையுடையவிராடனுக்கும் அன்புடையராயிருந்தார். சூதின் ரஹஸ்யத்தை நன்கு அறிந்தவரும் பாண்டுபுத்ரருமான அந்த யுதிஷ்டிரர் கயிற்றினால் கட்டப்பட்ட பக்ஷிகளைப்போலச் சூதினால் கட்டப்பட்டிருக்கின்ற விராடன்முதலான ஸபையிலுள்ளவர்களைத் தம் இஷ்டப்படி சூது விளையாடச்செய்தார். புருஷச்ரேஷ்டரான தர்மராஜர் (சூதாட்டத்தில்) பொருள்களை ஜயித்து விராடனுக்குத் தெரியாமல் ஸஹோதரர்களுக்கு யதேஷ்டமாகக் கொடுத்துவந்தார். பீமஸேனனும் மத்ஸ்யராஜனால் கொடுக்கப்பட்ட மாம்ஸங்களையும் பற்பல பணியாரங்களையும் விற்பவன்போல ப்ராதாக்களுக்குக் கொடுத்துவந்தான். அர்ஜுனன் அந்தப்புரத்தில் கிடைத்த பழையவஸ்த்ரங்களை விற்பவன்போலப் பாண்டவர்களுக்கெல்லாம் கொடுத்துவந்தான். நகுலனும் குதிரைகளுக்குத்தகுந்தகார்யத்தைச்செய்து, ஸந்தோஷமடைந்த அந்தவிராடராஜனிடத்திலிருந்து பொருளைப்பெற்றுப் பாண்டவர்களுக்குக் கொடுத்துவந்தான். பாண்டுபுத்ரனான ஸஹதேவனும் இடையர்களுடைய வேஷத்தைத்தரித்துத் தயிரையும் பாலையும் நெய்யையும் பாண்டவர்களுக்குக் கொடுத்துவந்தான். துக்கிக்கத்தக்கநிலைமையையுடையவளும் கோபமுள்ளவளுமான த்ரௌபதியும், ப்ராதாக்களான அந்தப் பாண்டவர்களனைவர்களையும் பார்த்துக்கொண்டு பிறர்களால் அறியப்படாமல் வஸித்துவந்தாள். மஹாரதர்களான அவர்கள் அப்பொழுது ஒருவருக்கொருவர் இவ்வாறு உபகாரஞ்செய்துகொண்டு மறுபடியும் கர்ப்பத்தில்வஸிப்பவர்கள் போல (மிக்க கஷ்டத்தோடு) விராடநகரத்தில் வஸித்துவந்தார்கள். வேந்தரே! பாண்டுபுத்ரர்கள் அப்பொழுது த்ருதராஷ்ட்ரகுமாரனான துர்யோதனனிடத்தில் உண்டாயிருக்கின்ற பயத்தினால் மனக்கவலையுற்று க்ருஷ்ணையைப் பாதுகாத்துக்கொண்டு மறைந்து வாஸஞ்செய்துவந்தார்கள்.

பிறகு, நான்காவதுமாஸத்தில் மத்ஸ்யதேசத்தில் புருஷர்களுக்கு மிகவும் ப்ரியமாயுள்ளதும் ஸம்ருத்தியுள்ளதுமான சங்கரமஹோத்ஸவமானது வந்தது. அரசரே! அந்த மஹோத்ஸவத்தில், பருத்ததேஹமுள்ளவர்களும் அதிகவீர்யமுள்ளவர்களும் காலகேய

ர்களென்கிற அஸுரர்கள்போன்றவர்களும் வீர்யத்தினால் அதிக மதங்கொண்டவர்களும் பலத்தினால் மேலாயிருப்பவர்களும் ராஜாவி னால் ஸம்மானஞ்செய்யப்பட்டவர்களும் ஸிம்மம்போன்ற தோளையும் இடையையும் கழுத்தையுமுடையவர்களும் நல்ல சுத்தஸ்வபாவமுள் ளவர்களும் உதாரமான மனத்தையுடையவர்களும் அடிக்கடி ரங்க ஸ்தலத்தில் அரசனுடைய ஸந்நிதானத்தில் (சண்டைசெய்து) ஜயி த்தவர்களுமான மல்லர்கள், ஆயிரக்கணக்காக நான்கு திக்குக்களினு மிருந்தும் அந்த விராடநகரத்துக்கு வந்தார்கள். அந்த மல்லர்களுள் ஒருவன் மஹாபலிஷ்டனாயிருந்தான். அவன் அங்குள்ள மல்லர்க ளனைவர்களையும் சண்டைக்கு அழைத்தான். அங்குநிற்கும் அவன், கர்ஜனஞ்செய்து, கம்பீரமாக நடந்து (தனது கர்வந்தோன்றத்) துள் ளுகிறவனாகக் காணப்பட்டான். அந்த மல்லர்களனைவர்களும் மனஞ் சலித்துப் புத்தியையிழந்து தலைகுனிந்து பயமுற்று (துக்கத்தினால்) மனமழிந்தவர்களானார்கள். மனவருத்தங்கொண்ட இன்னும் சில மல்லர்கள் உயிரைஇழப்பதை விரும்பினார்கள். சிலர் பூமியில்புக விரும்பினார்கள். சிலர் ஆகாயத்தில் செல்வதற்கு எழுந்தார்கள். விராடராஜனுடைய அந்த மல்லர்களனைவரும் மல்லராஜனால் அடிக் கப்பட்டுப் பயந்தவர்களும் அமைதியுள்ளவர்களும் துன்பமுற்ற அங் கங்களையுடையவர்களும் சப்தமற்றவர்களும் சஞ்சலமானபார்வை யையுடையவர்களும் கர்வத்தையும் ஒளியையும் இழந்தவர்களுமாகி ஒன்றுஞ் சொல்லாமலிருந்துவிட்டார்கள். மல்லராஜன், அந்த மல் லர்கள் பயந்திருப்பதைக்கண்டு, (அரசனைநோக்கி,) "ஓ! வேந்தரே! (இவ்விடம்) வந்திருக்கிற என்னை அகண்டபூமண்டலத்தில் ஸிம்மக் கூட்டங்களோடும் புலிக்கூட்டங்களோடும் சேர்ந்து விளையாடுகின்ற மல்லராஜனென்று அறியும்" என்றுசொன்னான். விராடன், பலமும் கொழுப்புமுள்ள மல்லராஜனுடைய வார்த்தையைக்கேட்டுப் பயந்தி ருக்கின்ற அந்த மல்லர்களைப் பார்த்து, "(ஓ! மல்லர்களே!) இந்த மல்லனோடு எந்தமனிதன் சண்டைசெய்வதற்கு வல்லமையுள்ளவன்?" என்று வினவினான். ஓ! மன்னரே! விராடன் இவ்வாறு சொல்லிய தைக்கேட்ட அந்த மல்லர்களெல்லாம் பேசாமலிருந்து விட்டார்கள். பிறகு, அரசன் கோபமடைந்து, 'இந்த மல்லர்களுக்கு விட்டிருக் கின்ற மான்யக்ராமங்களையும் ஏற்பட்டிருக்கிற சம்பளங்களையும் நான் நிறுத்திவிடப்போகிறேன்' என்றுசொன்னான். பிறகு, யுதிஷ் டிரர் விராடராஜனுடைய வார்த்தையைக்கேட்டு, "மஹாராஜரே! முன்பு நான் யுதிஷ்டிரரிடத்தில்பார்த்த ஒரு மல்லனிருக்கிறான். ராஜ

ரே! அவன் இந்த மல்லனோடு போர்புரிவதற்கு வல்லமைபொருந்தியவன். அரசரே! யுதிஷ்டிரருடைய பட்டணத்தில் நான் முற்காலத்தில் பார்த்த அந்தமல்லன் இப்பொழுது உம்முடைய மடைப்பள்ளியில் வஸிக்கிறான்'' என்றார். யுதிஷ்டிரருடைய வார்த்தையைக்கேட்டு விராடராஜன், 'இப்பொழுது இந்தமல்லனோடு போர்புரிவதற்கு அவனும் விரைவாக அழைக்கப்படலாம்' என்று வெளிப்படையாகச் சொன்னான். விராடனால் அழைக்கப்பட்டு அவ்வாறு (மல்லயுத்தத்தின் பொருட்டு) ஏவப்பட்ட பீமஸேனன், (அரசனைப்பார்த்து,) ''ஓ அரசரே! நான் (மல்லனோடு) போர்புரிவதற்கு வல்லமையுள்ளவன். புருஷச்ரேஷ்டரே! ராஜேந்த்ரரே! உம்முடைய ப்ரபாவத்தினாலும் ஐச்வர்யத்தினாலும் வல்லமையினாலும் ஆஜ்ஞையினாலும் இந்த மல்லனோடு போர்புரிவதற்குச் சக்தியுள்ளவனாயிருக்கிறேன். அரசரே! [1] உம்முடைய ஐச்வர்யத்தினாலும் மஹாதேவருடைய பக்தியினாலும் நான் இந்தமல்லனைக் கீழேதள்ளுவேன்'' என்றுசொன்னான். (ராஜாவினால்) ஏவப்பட்ட வீரனான பீமஸேனன் இரண்டுகைகளிலும் புழுதியை எடுத்துப் பூசிக்கொண்டு மல்லனை யுத்தத்துக்கழைத்து ஜனக்கூட்டங்களுடைய மத்தியில் போர்புரிவதற்காக ஆயத்தமாகநின்றான். பீமன் மத்தகஜம்போலப் பகைமல்லனோடு போர்புரிவதற்கு ஆரம்பித்தான். பிறகு, மத்ஸ்யராஜன் சமையற்காரனானவல்லனோடு அந்த மல்லனைப் போர்புரியும்படிசெய்வித்தான். அப்பொழுது பீமன், (விராடனால்) தூண்டப்பட்டவனாகி அவனைப்பார்த்து, ''ராஜரே! நான் (யுத்தஞ்செய்ய) சக்தியற்றவனாயிருந்தாலும் ராஜாவானஉங்கள்கட்டளையைமறுப்பதற்குக் கூடாதவனாயிருக்கிறேன்'' என்று வருத்தத்தோடு (மல்லயுத்தம்செய்வதில்) மனத்தைச்செலுத்தினவன்போலப் பாராட்டினான். பிறகு, புருஷச்ரேஷ்டனான அந்தப்பீமஸேனன், புலிபோல மெதுவாகப்பதுங்கிஸஞ்சரித்து விராடராஜனைஸந்தோஷிக்கச்செய்து விசாலமானயுத்தரங்கத்தில் ப்ரவேசித்தான். பிறகு குந்திபுத்ரன் அங்கிருக்கும் ஜனங்களை ஸந்தோஷிக்கச்செய்து கச்சையைஇறுக்கிக்கட்டிக்கொண்டான். பிறகு, பீமன், மல்லர்களுள் ப்ரஸித்தமானபராக்ரமமுள்ளவனும் வ்ருத்ராஸுரனுக்கொப்பானவனுமான ஜீமூதன்என்கிற அந்தமல்லனை அவ்விடத்தில் சண்டைக்குஅழைத்தான். பிறகு, பீமன் அந்தமல்லனைக் கக்ஷத்தில்பிடித்துக்கொண்டு ஸிம்மம்போல மிகவும்கர்ஜித்தான். அவ்விருவர்களும் அதிகஉத்ஸாஹத்துடன்கூடியவர்கள். இருவர்களும், பருத்ததேஹமுள்ளவர்களும் அறுபது

[1] இரண்டுசொற்கள் விடப்பட்டன.

வயதுசென்றவைகளுமான இரண்டுமதயானைகளைப்போலப் பயங்கரமானபராக்ரமமுள்ளவர்கள். பிறகு, நரச்ரேஷ்டர்களும் வீரர்களும் மிகுந்தமனக்கிளர்ச்சியுள்ளவர்களும் ஒருவனை மற்றொருவன் ஜயிப்பதில் விருப்பமுற்றவர்களும் பலத்தினால் மிகுந்தஸந்தோஷமுடையவர்களும் புருஷர்களுக்கு இருக்கக்கூடியபலத்தைமீறியிருக்கின்ற பலமுடையவர்களும் ஒருவனுக்குமற்றொருவன் துன்பத்தைவிளைவிக்கக்கூடிய ஸமயத்தைஎதிர்பார்க்கின்றவர்களும் பரஸ்பரம் ஜயத்தில் விருப்பமுள்ளவர்களுமான அவ்விருவர்களும் பற்பலவிதமான [1]க்ருத [2] ப்ரதிக்ருதங்களாலும் பலத்தினால்அதிகரித்திருக்கின்ற கைகளாலும் [3] ஸந்நிபாதம், [4]அவதூதம், [5]ப்ரமாதம், [6]உன்மதனம், [7]க்ஷேபணம், [8] முஷ்டி, [9]வராஹோத்தூதம், [10]நிஸ்வனம் இவைகளாலும் உள்ளங்கை அறைதல்களாலும் [11]வஜ்ரநிபாதங்களாலும் அவ்வாறே [12]ப்ரஸ்ருஷ்டைகளாலும் [13]சலாகாபாதங்களாலும் [14]நகபாதங்களாலும் பயங்கரமான [15]பாதோத்தூதங்களாலும் முழங்கால் இடிகளாலும் [16]அச்மநிர்கோஷங்களாலும் தலைஇடிகளாலும் ஒருவரோடொருவர் மல்லயுத்தஞ் செய்தார்கள். உத்ஸவத்தில் வந்திருக்கின்ற சூரர்களுடைய கூட்டத்துக்கு எதிரில் ஆயுதமில்லாமலே புஜபலத்தாலும் தேஹபலத்தாலும் மனோபலத்தாலும் அந்த யுத்தமானது கோரமாக நடந்தது. ராஜரே! வ்ருத்ரனும் இந்த்ரனும்போன்ற பலசாலிகளான அவ்விருவர்களுடையயுத்தத்தில் எல்லாஜனங்களும் பெருங்கூச்சலுடனும் ஸிம்மநாதத்துடனும் எழுந்திருந்துநின்று மிகக்களிப்புற்றார்கள். அவ்விருவர்களும் [17]ப்ரகர்ஷண [18]ஆகர்ஷணங்களில் அப்யாகர்ஷ விகர்ஷணங்களால் பரஸ்பரம் இழுத்தார்கள். முழங்கால்களால் இடித்துக்கொண்டார்கள். பிறகு, அகன்றமார்பும் நீண்ட கைகளுமுடையவர்களும் கைச்சண்டையில் ஸமர்த்தர்களுமான அவ்விருவர்களும் மிகஆரவாரித்து ஒருவரையொருவர் உறுக்கி இருப்புமயமான பரிகாயுதங்கள்போன்றகைகளால் கட்டி இறுக்கினார்கள். பிறகு, பீமன் வேகத்தோடு மேலேகிளம்பி அந்தமல்லனைக் கக்ஷத்தில்பிடித்தான்; கையினால், அவனை விலாப்பக்கத்தில்பிடித்து வீழ்த்தினான். சத்ருக்களைக்கொல்லுகின்றபீமன் அந்தமல்லனை இருகைகளாலும் மேலேதூக்கி அவனைப்பார்த்து அட்டஹாஸஞ் செய்துகொண்டு புலியானது யானையைஇழுப்பதுபோல இழுத்தான். சிறந்தகைகளுள்ளவனும் வீர்யமுள்ளவனுமானபீமன் அந்தமல்லனைத் தூக்கிச் சுழற்றினான். பிறகு, அங்குள்ளமல்லர்களும் மத்ஸ்ய

1, 2, 3, 4. 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18 மல்லயுத்தத்தின்வகைகள்.

தேசத்திலுள்ளஜனங்களும் அதிக ஆச்சர்யத்தையடைந்தார்கள். மஹாபாஹுவான வ்ருகோதரன், பலத்தைஇழந்தவனும் ப்ரஜ்ஞை யற்றவனுமான அந்தமல்லனை நூறுதடவைசுழற்றிப் பூமியில்போட் டுத் தேய்த்தான். உலகத்தில்ப்ரஸித்திபெற்ற ஜீமூதனென்கிற அந்த மல்லவீரன் கொல்லப்பட்டவுடனே விராடன் பந்துக்களோடு அதிக ஸந்தோஷத்தையடைந்தான். பெரியமனமுள்ளவிராடராஜன் மிக்க ஸந்தோஷத்தினால் அந்தப்பெரியஅரங்கத்தில் வலலனுக்குக் குபே ரனைப்போல அதிகமான பொருளைக் கொடுத்தான். இவ்வாறு அந் தப்பீமன் அநேகமல்லர்களையும் மிக்கபலமுள்ளவர்களான அநே கபுருஷர்களையும் கொன்று மத்ஸ்யராஜனுக்கு அதிகப்ரீதியைஉண்டு பண்ணினான். விராடன், எப்பொழுது இந்தப்பீமனோடு (சண்டை செய்வதற்கு) ஸமானனான ஒருமனிதன் அங்குஇல்லையோ அப்பொ ழுது புலிகளோடும் சிங்கங்களோடும் யானைகளோடும் பீமனைப் போர்புரியச்செய்தான். அந்தப்பீமன், விராடனால் கொடுக்கப்பட்ட வைகளும் விசித்ரமும் பற்பலவிதமுமானபொருள்களை அங்குள்ள மனிதர்களுக்குக் கொடுத்துவிட்டுத் தன்இருப்பிடம்சென்றான். அந் தவ்ருகோதரன் மறுபடியும் அந்தப்புரத்தைஅடைந்து ஸ்த்ரீகளுடை யமத்தியில் விராடனுடைய மஹாபலமுள்ள யானைகளோடும் சிங் கங்களோடும் போர்புரிந்தான். பாண்டுகுமாரனான அர்ஜுனனும் பாட்டினாலும் ஆட்டத்தினாலும் விராடனையும் அந்தப்புரஸ்த்ரீக ளெல்லாரையும் ஸந்தோஷிக்கச்செய்தான். நகுலன் நன்றாகப்பழக் கப்பட்டவைகளும் வேகமுள்ளவைகளும் ஆங்காங்கு ஒன்றாகக்கூட் டப்பட்டவைகளுமான குதிரைகளால் ராஜச்ரேஷ்டனான விராட ராஜனை ஸந்தோஷப்படுத்தினான். விராடராஜன் ப்ரீதியுடன் அந்த நகுலனுக்குக்கொடுக்கத்தக்கபொருள்களை மிகுதியாகக்கொடுத்தான். புருஷச்ரேஷ்டனானவிராடன், ஸஹதேவனால் நன்றாகப்பழக்கப்பட்ட வைகளும் அவனுக்கு நான்குபக்கத்திலும்இருக்கின்றவைகளுமான எருதுகளைக்கண்டு அவனுக்குப் பற்பலபொருள்களைக்கொடுத்தான். ராஜரே! த்ரௌபதியானவள் வருத்தமுற்றவர்களும் மஹாரதர்களு மான அவர்களனைவர்களையுங்கண்டு அதிகஸந்தோஷமில்லாத மனத் தையுடையவளாகப் பெருமூச்சுவிட்டுக்கொண்டிருந்தாள். இவ்வாறு அந்தப்புருஷச்ரேஷ்டர்களான பாண்டவர்கள் அந்தவிராடராஜனுக்கு அப்பொழுது ஊழியங்களைச்செய்துகொண்டு மறைந்துஅந்தவிராட நகரத்தில் வாஸஞ்செய்துவந்தார்கள்.

ஸமயபாலனபர்வம் முற்றிற்று.

பதினாறாவது அத்யாயம்.

கீசகவதபர்வம்.

(கீசகன், த்ரௌபதியின்மீது தனக்குள்ள காதலை ஸுதேஷ்ணைக்கும் த்ரௌபதிக்கும் தெரிவித்தது.)

ஜனமேஜயமஹாராஜரே! மஹாரதர்களான பார்த்தர்கள் மத்ஸ்யராஜனுடைய நகரத்தில் அப்பொழுது மறைந்து வஸித்துவருங்கால் பத்துமாஸங்கள் சென்றன. பணிவிடை செய்யப்படத்தக்கவளான த்ரௌபதியும் ஸுதேஷ்ணைக்குப பணிவிடைசெய்துகொண்டு மிகுந்தகஷ்டத்தோடு வஸித்துவந்தாள். அவ்வாறு ஸுதேஷ்ணையினுடைய அரண்மனையில் வஸிக்கின்ற பாஞ்சாலியானவள் அந்த ஸுதேஷ்ணாதேவியையும் அந்தப்புரத்திலுள்ள ஸ்த்ரீகளையும் ஸந்தோஷமடையும்படி செய்தாள். அந்த வர்ஷமானது அனேகமாகச் சென்றபோது, மஹாபலசாலியும் விராடனுக்கு ஸேனாபதியுமான கீசகனானவன் த்ரௌபதியைக் கண்டான். தேவகன்னிகைபோல விளங்குகின்றவளும் பூமியில் ஸஞ்சரிக்கின்ற தேவதைபோன்றவளுமான அவளைக் கண்டு கீசகன் மன்மதபாணங்களால் பீடிக்கபபட்டு அவளை விரும்பினான். காமாக்னியினால் மிகவுமவாட்டபபட்டவனும் ஸேனாபதியுமான அவன் ஸுதேஷ்ணையிடம்வந்து அட்டஹாஸத்துடன் பின்வருமாறு வசனிக்கலானான். "இந்த விராடனுடைய அரண்மனையில் மங்களமுள்ளவளான இந்த ராஜஸ்த்ரீ இதற்குமுன் என்னால் ஒருபொழுதும் பார்க்கப்பட்டதில்லை. நல்ல வாஸனையுடன் உண்டாக்கப்பட்ட கள்ளானது மதிமயக்கத்தை உண்டுபண்ணுவதுபோல இந்தப்பெண் ரூபத்தினால் எனக்கு அதிக மதிமயக்கத்தை உண்டுபண்ணுகிறாள். ஓ! மங்களமுள்ளவளே! தேவதையினுடைய ரூபம்போன்ற ரூபமுடையவளும் மனத்துக்கு இன்பமுள்ளவளுமான இவள் யார்? மங்களஸ்வரூபியே! இவள் எவனைச்சார்ந்தவள்? எவ்விடமிருந்து இங்கு வந்திருக்கின்றாள்? எனக்குச் சொல். என்னை மனங்கலங்கச்செய்து தன்வசமாக்கிக்கொள்ளுகிறாள். இவ்விஷயத்தில் வேறுமருந்து இருப்பதாக நான் எண்ணவில்லை. ஆச்சர்யம்! மங்களமுள்ளவளான உன்னுடைய இந்த வேலைக்காரியானவள் புதியரூபமுடையவளாக எனக்குத் தோன்றுகிறாள். இவள் நிலைமைக்குத் தகாததான தொழிலையன்றோ உன்னிடத்தில் செய்துவருகிறாள்? இவள் என்னையும் என்னிடத்திலுள்ள பொருள்களையும் ஆளட்டும். அதிகமான யானை

களும் குதிரைகளும் ரதங்களுமுள்ளதும் மஹிமையுள்ள ஜனங்களால் நிறைந்ததும் ஐச்வர்யமுள்ளதும் பற்பலவிதமான பானபோஜனங்களுடையதும் மனத்துக்கு இன்பமானதும் பொன்மயமான நானாவித பூஷணங்களுள்ளதும் பெரிதுமான என்னுடையவீட்டை இவள் விளங்கச்செய்யட்டும்" என்றான். பிறகு, கீசகன், ஸுதேஷ்ணாதேவியினிடத்தில் விடைபெற்று, ராஜபுத்ரியான த்ரௌபதியினிடம் வந்து, காட்டில் ஒருநரியானது பெண்சிங்கக்குட்டியைப் பார்த்துப் பேசுவதுபோல அப்பொழுது அவளை நல்வார்த்தைகளால் மனச்சமாதானமடையும்படி பின்வருமாறு சொல்லலானான்.

"கல்யாணி! நீ யார்? யாவனைச் சார்ந்தவள்? சிறந்த முகமுள்ளவளே! நீ எவ்விடமிருந்து விராடநகரத்தை வந்தடைந்தாய்? மங்களமுள்ளவளே! உண்மையை உரைப்பாய். உன்னுடைய ரூபமானது சிறந்தது; அவ்வாறே காந்தியும் சிறப்புள்ளது; மென்மைத்தன்மையும் ஸர்வோத்தமமானது; உன்னுடைய அழுக்கற்ற முகமானது காந்தியினால் சந்த்ரன்போல விளங்குகிறது. அழகிய புருவங்களையுடையவளே! உன்னுடைய இருகண்களும், அதிக விஸ்தாரமுள்ளவைகளும் தாமரைப்பூவிதழ்களுக்கொப்பானவைகளும் மங்களகரங்களுமாயிருக்கின்றன. அழகிய எல்லா அங்கங்களுமுள்ளவளே! உன்னுடைய வசனமானது கோகிலத்தினுடைய சப்தத்துக்கொப்பாயிருக்கின்றது. அழகிய இடையையுடையவளே! இகழத்தகாதவளே! உன்னைப்போன்ற இவ்வித ரூபமுள்ள வேறொருஸ்த்ரீயைப் பூமண்டலத்தில் நான் இதற்குமுன் பார்த்ததில்லை. அழகிய இடையையுடையவளே! நீ யார்? தாமரையை வாஸஸ்தானமாகக்கொண்ட மஹாலக்ஷ்மியோ? நீ ஐசுவர்யாபிமானி தேவதையோ? ஹ்ரீயோ? ஸ்ரீயோ? கீர்த்தியோ? அல்லது காந்தியோ? சிறந்தமுகமுள்ளவளே! இவர்களுள் நீ யார்? நீ மன்மதனுடைய அங்கத்தில் விளையாடுகின்றவளும் அதிக ரூபமுள்ளவளுமான ரதிதேவியோ? அழகிய புருவங்களையுடையவளே! சந்த்ரனுடைய சிறந்த ஒளிபோல நீ அதிகமாக விளங்குகிறாய். நிலவுபோல மனத்துக்கு ஆஹ்லாதகரமான கொஞ்சம் மலர்த்தப்பட்டிருக்கிற இமைமயிர்களுடன்கூடியதும் மேலும் மங்களகரமானதும் திவ்யமான கிரணங்களால் சூழப்பட்டதும் சிறந்த காந்தியினால் மனத்துக்கின்பமாயிருக்கின்றதும் ஒப்பற்ற ஒளியுள்ளதுமான உன்னுடைய முகசந்த்ரனைக்கண்டு இவ்வுலகமனைத்திலும் எந்த மனிதன்தான் காமனுக்கு வசப்படாமலிருப்பான்? அழகிய புருவங்களையுடையவளே! உன்னுடைய இரண்டு கொங்கைகளும், ஹாரத்தை

அணிவதற்குத் தகுந்தவைகளும் மிக்க மங்களகரங்களும் அழகிய வைகளும் காந்தியுள்ளவைகளும் பருத்தவைகளும் வட்டமானவைக ளும் இடைவெளியற்றவைகளுமாயிருக்கின்றன. அழகிய சிரிப்புள் ளவளே! தாமரைமொட்டுக்கள்போன்ற உன்னுடைய இரண்டுஸ்த னங்களும் மன்மதனுடைய கொறடாக்கள்போல என்னைத் துன்பத் துக்கு ஆளாக்குகின்றன. மெல்லிய இடையையுடையவளே! உன் னுடைய இந்த இடையானது (மூன்று) மடிப்பினால் அழகியதும் ஸ்தனபாரத்தினால் அதிகமாக வளைக்கப்பட்டதும் நுனிக்கையினால் பிடித்து அளக்கத்தக்கதுமாயிருக்கிறது. கோபமுள்ளவளே! நதி யிலுள்ள மணற்குன்றுக்கொப்பான உன்னுடைய அழகிய ஜகனத் தைக்கண்டே அஸாத்யமான காமநோயானது என்னைக் கவருகிறது. உன்னுடன் சேர்க்கைபெறுவதிலுள்ள எண்ணத்தினால் வளர்கின்ற இந்தக் காமாக்னியானது தயையில்லாமல் காட்டுத்தீப்போல ஜ்வலித் துக்கொண்டு என்னை எரிக்கின்றது. உத்தமமான இடையையுடை யவளே! (என்னிடத்தில்) ஜ்வலிக்கின்ற காமத்தீயை உன்னுடைய தேஹத்தைக் கொடுப்பதாகிற மழையுடன்கூடின உன் சேர்க்கையா கிற மேகத்தினால் தணித்துவிடு. சந்த்ரனுக்கொப்பான முகத்தை யுடையவளே! கரியகடைக்கண்களையுடையவளே! என் மனத்துக்கு [1] உன்மாதத்தை உண்டுபண்ணுகின்றவைகளும் உன்னிடம் சேருவதி லுள்ள ஆசையினால் தீட்டப்பட்டவைகளும் வேகமுள்ளவைகளுமான மன்மதனுடைய பாணக்கூட்டங்கள் என்னுடைய இந்தமனத்தைப் பிளந்து உட்செல்லுகின்றவைகளும் தயையற்றவைகளும் வேகமுள் ளவைகளும் உக்ரமும் அதிபயங்கரமும் அளவில்லாத உன்மாதத்தி னுடைய தொடக்கத்துக்குக் காரணமும் எனக்கு ப்ரீதியையும் சித்த ப்ரமத்தையும் உண்டுபண்ணுகிறவைகளுமாயிருக்கின்றன. நீ இப் பொழுது உன்தேஹத்தை எனக்குக் கொடுப்பதினாலும் ஸம்போகங்க ளாலும் என்னை (இந்த ஆபத்தினின்று) கரையேற்றுவதற்குத் தகுந் தவள். விலாஸங்களையுடையவளே! விசித்ரமான மாலைகளை அணிந் தவளும் உடைகளைத் தரித்தவளும் எல்லா ஆபரணங்களாலும் அலங் கரிக்கப்பட்டவளுமாகி என்னுடன் சேர்ந்து வேண்டியவரையில் காம ஸுகத்தை அனுபவி. செருக்கிய நடையுள்ளவளே! ஸுகத்தை யனுபவிப்பதற்கே தகுந்தவளான நீ ஸுகத்தை இழந்து இவ்விடத் தில் கஷ்டத்துடன் வஸிப்பதற்குத் தகுந்தவளல்லை. என்னிடத்தி னின்று நீ சிறந்த ஸுகத்தை அடை. ருசியுள்ளவைகளும் அம்ரு

---

[1] சித்தப்ரமம்.

தம் போன்றவைகளும் பற்பலவகைப்பட்டவைகளும் மனோஜ்ஞங்களுமான குடிக்கத்தக்க வஸ்துக்களைக் குடிக்கின்றவளும் ஸுகமாக ரமிக்கின்றவளுமாயிருந்து பற்பலவிதமான போகோபசாரங்களையும் நிகரற்ற ஸெளபாக்யத்தையும் அநுபவி. மஹாபாக்யமுள்ளவளே! ச்ரேஷ்டமும் மங்களகரமுமான போகங்களோடு பானம்பண்ணக் கூடியதைக் குடி. தோஷமற்றவளே! கோபமுள்ளவளே! ச்ரேஷ்டமான இந்த உன்னுடைய ரூபமானது நாயகனால் அநுபவிக்கப்படாமலிருப்பதனால் இப்பொழுது பயனற்றதாயிருக்கிறது. ஸுந்தரி! மங்களஸ்வரூபிணியும் சிறந்தவளுமான நீ சூட்டிக்கொள்ளப்படாததும் உத்தமமும் சுபமுமான பூமாலைபோல விளங்காமலிருக்கிறாய். அழகிய சிரிப்புடையவளே! எனக்கு இதற்குமுன்னுள்ளவர்களான மனைவிகளைவிட்டுவிடுகிறேன். அவர்கள் உனக்கு அடிமையாகட்டும். ஸுந்தரி! நானும் உனக்கு அடிமைபோலிருக்கிறேன். உத்தமமான முகமுள்ளவளே! நான் எப்பொழுதும் உனக்கு வசப்பட்டவனாக இருப்பேன்” என்று கூறினான்.

பதினேழாவது அத்யாயம்.

கீசகவதபர்வம். (தொடர்ச்சி.)

(த்ரௌபதியானவள் தன்மீது ஆசைவைத்த கீசகனைக் கடுஞ்சொற்களால் மறுத்தது.)

துராத்மாவான கீசகனால் இவ்வாறு சொல்லப்பட்டவளும் தோஷமற்ற அங்கங்களுள்ளவளும் ஸைரந்த்ரீவேஷத்தைத் தரித்தவளுமான த்ரௌபதியானவள், அந்தக் கீசகனைப்பார்த்து, “ஏ! ஸூதபுத்ரரே! வேண்டத்தகாதவளும் ஹீனஜாதியில் பிறந்தவளும் வேலைக்காரியும் அருவருக்கத்தக்கவளும் கூந்தல் பின்னுகிறவளுமான என்னை நீர் ஆசைப்படுகிறீர். நான் பிறருடைய மனைவியாயிருக்கிறேன். உமக்கு மங்களமுண்டாகும். இது உமக்குத் தகாது. மனிதர்களுக்கு மனைவிகள் அன்புக்கு விஷயமாயிருப்பார்கள். தர்மத்தை நன்றாக ஆலோசித்துப் பாரும். பரதாரங்களிடத்தில் புத்தியானது ஒருபொழுதும் எவ்விதத்தாலும் உம்மால் செலுத்தத்தக்கதன்று. அகார்யத்தை விட்டுவிடுவதுதான் ஸத்புருஷர்களுடைய வ்ரதம். வீணான பேராசையுள்ளவனும் பாவத்தில் மனதைச் செலுத்தியவனும் புத்திமயக்கத்தை அடைந்தவனுமான மனிதன் கோரமான

அபகீர்த்தியையும் மிக்க பயத்தையும் அடைவான்" என்று மறு மொழி கூறினாள். ஸைரந்த்ரியினால் இங்ஙனம் சொல்லப்பட்டவனும் காமத்தால் மயக்கமுற்றவனும் மிக்ககெட்டபுத்தியுடையவனும் பொறிகளை அடக்காதவனுமான அந்தக் கீசகன் பரதாரங்களைத் தீண்டும் விஷயத்தில் ஸம்பவிக்கக்கூடியவைகளும் அநேகங்களும் உயிரைப் போக்கக்கூடியவைகளும் எல்லாஉலகத்தாராலும்நிந்திக்கத்தக்கவைகளுமான தோஷங்களை அறிந்தவனாயிருந்தும் மிகவும் கெட்டஎண்ணங்கொண்டு த்ரௌபதியைப்பார்த்து, "ச்ரேஷ்டமான இடையையுடையவளே! சிறந்த முகமுடையவளே! அழகான சிரிப்பையுடையவளே! உன்னிமித்தமாக மன்மதாவேசங்கொண்டிருக்கின்ற என்னை இவ்வாறு நிராகரிப்பதற்கு நீ தகுந்தவளல்லை. பயாதவளே! கறுத்த கடைக்கண்களையுடையவளே! நீ, உன் வசப்பட்டவனும் ப்ரியமான வார்த்தையைச் சொல்லுகின்றவனுமான என்னை நிராகரித்துவிட்டு, பிறகு, நிச்சயமாகப் பச்சாத்தாபத்தை அடையப்போகிறாய். அழகிய புருவங்களையுடையவளே! அழகிய இடையையுடையவளே! நான் இந்தராஜ்யம் அனைத்துக்கும் ப்ரபுவும் (ஜனங்களை) அடக்கி ஆள்பவனும் புவியில் வீர்யத்தில் ஒப்பற்றவனுமாயிருக்கிறேன். ரூபத்தினாலும் யௌவனத்தினாலும் ஸௌபாக்யத்தினாலும் மங்களகரமானவைகளும் சிறந்தவைகளுமாயிருக்கின்ற போகங்களாலும் இப்பூமண்டலத்தில் எனக்கு நிகரானமனிதன் வேறொருவனுமில்லை. கல்யாணி! விரும்பக்கூடிய எல்லாப்பொருள்களாலும் நிறைந்தவைகளும் நிகரில்லாதவைகளுமான போகங்கள் அநுபவிக்கத்தக்கனவாயிருக்கும்போது ஏன் அடிமைத்தொழில்செய்வதில் பற்றுள்ளவளாயிருக்கிறாய்? சுபமான முகத்தையுடையவளே! என்னால் இந்தராஜ்யம் உனக்குக் கொடுக்கப்பட்டது. நீயே தலைவி. ச்ரேஷ்டமான இடையுடையவளே! என்னை நீ பரீதியுடன் அடைவாய்; ச்ரேஷ்டமான போகங்களை அநுபவிப்பாயாக" என்றான். கீசகன் இவ்வாறு அமங்களமான வார்த்தை சொல்லியதைக்கேட்ட அந்தப் பதிவ்ரதையான த்ரௌபதியானவள் அவனுடைய அவ்விதமான வார்த்தையை நிந்தித்து அவனைப்பார்த்துப் பின்வருமாறு உரைக்கலானாள்.

ஓ! ஸூதபுத்ர! மதிமயக்கங்கொள்ளாதே; இப்பொழுது உயிரைவிடாதே. நீ என்னைக் கோரஸ்வரூபமுள்ள ஐந்துபுருஷர்களால் எப்பொழுதும் ரக்ஷிக்கப்பட்டவளாக அறிந்துகொள். நான் உன்னால் அடையத்தக்கவளல்லேன். எனக்குக் கந்தர்வர்கள் ப்ராணநாதர்கள். அந்தக் கந்தர்வர்கள் கோபங்கொண்டால் உன்னைக் கொல்லுவார்கள்.

இவ்விதம் செய்யாதே. வீணாக நாசமடையாதே. நீ புருஷர்களாலே நடப்பதற்கு அரிய வழியில் செல்வதற்கு விரும்புகிறாய். மந்தபுத்தியுள்ள நீ புத்தியில்லாத ஒருசிறுவன் நதியினுடைய ஒருகரையினின்று மற்றொருகரையில் தாண்ட விரும்புவதுபோல இக்கார்யத்தைச் செய்ய விரும்புகிறாய். நீ (இவ்விதமான கெட்டகார்யத்தைச் செய்துவிட்டு) பூமிக்குள் நுழைந்தாலும் ஆகாயத்தில் பறந்தாலும் ஸமுத்ரத்தின் அக்கரைக்கு ஓடினாலும் அந்தக் கந்தர்வர்களிடமிருந்து உனக்கு விடுதலை உண்டாகாது. ஆகாயத்தில் ஸஞ்சரிக்கின்றவர்களான தேவகுமாரர்கள் சத்ருக்களை நாசஞ்செய்யும் தன்மையுடையவர்கள். கீசக! நீ நோயினால் பிடிக்கப்பட்ட ஒருமனிதன், [1]காளராத்ரியை விரும்புவதுபோல என்னை இப்பொழுது பிடிவாதத்துடன் ஏன்வேண்டுகிறாய்? தாயினுடைய மடியில் படுத்திருக்கும் சிசுவானது சந்த்ரனைப்பிடிக்கவேண்டுமென்று விரும்புவதுபோல, நீ ஏன் என்னைக்கைப்பற்றவிரும்புகிறாய்? கீசக! அவர்களுடைய ப்ராணநாயகியான என்னை வேண்டுகிற உனக்குப் பூமண்டலத்திலாவது அல்லது ஸ்வர்க்கத்துக்குப்போனஇடத்திலாவது ரக்ஷிக்கிறமனிதன் ஒருவனும் ஏற்படமாட்டான். சுபத்தைவிரும்பும்புத்தியானது உனக்கு இல்லை. (பாதாரத்தினிடம் பற்றில்லாமலிருப்பதென்னும்) அந்தச்சுபமானபுத்தியிருந்தால் உனக்கு உயிர்வாழ்தல் கூடும்" என்றாள்.

பதினெட்டாவது அத்யாயம்.

கீசகவதபர்வம் (தொடர்ச்சி.)

(கீசகன் த்ரௌபதியைத் தன்னிடம்அனுப்பும்படி ஸுதேஷ்ணையை வேண்டியதும், ஸுதேஷ்ணை த்ரௌபதியைக் கபடமாகக் கீசகனிடம்அனுப்பியதும்.)

பாஞ்சாலியினால் நிராகரிக்கப்பட்டவனும் காமத்தால்மோஹங்கொண்டவனுமான கீசகன் ராஜமாளிகையில் நுழைந்து தன்ஸஹோதரியினுடைய எதிரில்நின்றான். எல்லையைக்கடந்ததும் கோரமுள்ளதுமான காமத்தினால் கவரப்பட்டவனும் காற்றினால்அலைக்கப்பட்ட கடல்போல மோஹத்தினால்கெடுக்கப்பட்டவனும் அதிகதுக்கத்தால் பிடிக்கப்பட்டவனுமான அந்தக்கீசகன், அழகியகூந்தல்நுனியையுடையவளும் ப்ரியஸஹோதரியுமான ஸுதேஷ்ணையைப்பார்த்துத் தன்

---

[1] ப்ரளயகாலத்து இரவு.

தலையில் இருகைகளையும் குவித்துக்கொண்டு அவளுடைய இரண்டுகால்களிலும் (வணங்கி) அடிக்கடி பெருமூச்சுவிட்டுக்கொண்டு ப்ரகாசமில்லாததும் ம்ருதுவுமான நல்வசனத்தை அடிக்கடி குரல்தளர்ச்சியடையச் சொல்லலானன். "ஸுதேஷ்ணையே! ஸைரந்த்ரியானவள் விருப்பத்துடன் என்னைச்சேரத்தக்க உபாயத்தைச் சீக்ரம் செய். நான் இப்பொழுது உயிரைவிடாமலிருக்கவேண்டும். தோஷமற்ற அங்கங்களுள்ள இந்த ஸைரந்த்ரியானவள் தெளிந்தமனத்துடனே இனியாவது என்னைவிரும்பாமல்போவாளானால் நான் யமனுடைய வீட்டை அடைவேன்" என்றுசொன்னன்.

கறுத்தகண்களையுடைய ஸுதேஷ்ணை ப்ரியஸஹோதரனை அந்தக்கீசகனைக் கட்டிக்கொண்டு ப்ராதாவினுடைய உயிரைக்காப்பதற்காக அவனுக்குத் தேறுதல்சொல்லி, "கீசக! அழகிய இடையுடையவளான அந்த ஸைரந்த்ரி என்னைச் சரணமடைந்திருக்கிறாள். நான் அவளுக்கு அபயம் கொடுத்திருக்கிறேன். அவள் நல்லொழுக்கமுள்ளவள். உனக்கு க்ஷேமமுண்டு. நான் அவளை இப்பொழுது (இவ்விதம்) சொல்வதற்குப் போறேன். அவளோ பிறரால் கெட்ட எண்ணத்தோடு ஸ்பர்சிப்பதற்கு முடியாதவள். அவளை ஐந்துகந்தர்வர்கள் ரக்ஷிக்கிறார்களாம்; ஸந்தோஷப்படுத்துகிறார்களாம். அவள், முதலில் (என்னுடன்) சேர்க்கைபெறுங்காலத்தில் இவ்விதமாகச் சொல்லியிருக்கிறாள். யானைத்துதிக்கைபோன்ற துடைகளையுடைய அந்த ஸைரந்த்ரி என்னிடம் உண்மையாக அவ்வாறு சொல்லியிருக்கிறாள். மஹாத்மாக்களான அந்தக் கந்தர்வர்கள் கோபித்துக்கொள்வார்களானால் உன்னுடைய ப்ராணனை நாசஞ்செய்வார்களல்லவோ? ராஜாவும் இவ்விடத்தில் இவளைப்பார்த்து மோஹமடைந்தார். அரசர் என்னால் உண்மைமொழிகளைச்சொல்லி வேண்டிக்கொள்ளப்பட்டார். அவரும் இவளை எப்பொழுதும் பார்த்து மனத்தினால் மாத்ரம் புகழ்கிறார். உயிரைப்போக்குகின்றவர்களும் சிறந்தவர்களுமான கந்தர்வர்களுடைய பயத்தினால் அரசர் மனத்தினாலும் இவளை நினைக்கிறதில்லை. மிக்க மனோதைர்யமுள்ளவர்களும் கருடனுக்கும் வாயுவுக்குமொப்பான தேஜஸுள்ளவர்களுமான அந்தக் கந்தர்வர்கள் கோபித்தால் ஸூர்யன் யுகாந்தகாலங்களில் மூவுலகங்களையும் கொளுத்துவதுபோலக் கொளுத்துவார்கள். ஸைரந்த்ரியினால் அந்தக் கந்தர்வர்களுடைய இந்த மிக்கபலமானது என்னிடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ரஹஸ்யமான இந்த வரலாற்றை நான் பந்துவாகையால் நேசத்தினால் உன்னிடத்திலும் சொல்லுகிறேன்.

த்தாலும் அடையத்தகாத துர்க்கதியை நீ அடையவேண்டாம். பல சாலிகளான அந்தக் கந்தர்வர்கள் உன்னுடைய குலத்துக்கும் தனத்துக்கும் கெடுதியை உண்டுபண்ணுவார்கள். ஆதலால், உனக்குப்ராணன்மீது விருப்பமிருந்தால் இவளிடத்தில் மனத்தைச் செலுத்தாதே; எனக்கு ப்ரியத்தைச்செய்யவிரும்பினால் இவளை நினையாதே. இவளிடம் நீ செல்லாதே" என்று கூறினாள். இவ்வாறு சொல்லப்பட்டவனும் கெட்டஎண்ணமுடையவனுமான கீசகன் ஸஹோதரியைப்பார்த்து, "(ஏ! ஸுதேஷ்ணையே!) நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் பதினாயிரக்கணக்காகவும் கந்தர்வர்களை நான் ஒருவனாகவே கொல்வேன். ஐந்து கந்தர்வர்களைப்பற்றி என்ன ஆலோசனை இருக்கிறது? ஸ்த்ரீகளுக்குரிய முக்யமான ரஹஸ்யத்தை நீ அறியவில்லை. புத்ரனாலும் பௌத்ரனாலும் மனவுறுதியுள்ள ஸஹோதரனாலும் ஏகாந்தத்தில் பலவித வாஸனைகளால் அலங்கரிக்கப்பட்ட ஒருமனிதனைப் பார்த்தால் பதிவ்ரதைகளாயிருந்தாலும் ஸ்த்ரீகளுடைய [1]மனமானது வேறுபடுகின்றதென்று நாம் கேட்டிருக்கிறோம். (ஆதலால்), சந்தனத்தால் பூசப்பட்ட அங்கங்களுடையவனும் எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டவனுமான என்னைபபார்த்து ஸைரந்த்ரியானவள் மன்மதனால் பீடிக்கப்பட்டு என்வசப்படுவாள். நான் உயிரோடிருப்பது உனக்கு விருப்பமானால் அப்படிப்பட்ட நீ இவளைப்பார்த்து இவ்விஷயத்தைச் சொல்" என்று கேட்டுக்கொண்டான். இவ்வாறு சொல்லப்பட்ட ஸுதேஷ்ணையானவள் சோகத்தால் மிகப் பீடிக்கப்பட்டும் அவனுடைய துர்த்தசையைக்கண்டு மிகுந்த மனவருத்தமடைந்தும், "இவன் பாதாளத்தில் விழுகிறான்; பிதற்றிக்கொண்டு வடவாமுகாக்னியில் விழுகிறான். அந்தோ! துக்கம்! அந்தோ! கஷ்டம்! அந்தோ! பாபம்!" என்று அழுதாள். (மறுபடியும் ஸுதேஷ்ணையானவள், கீசகனைப்பார்த்து) "உன்னிமித்தமாக என்னுடைய ஸஹோதரர்களும் ஸ்நேஹிதர்களும் நசிக்கப்போகிறார்கள். நீ இவ்வாறு துன்பப்படுங்காலத்தில் என்னால் எது செய்யத்தக்கது? நீ நன்மையை அறிகிறாயில்லை; காமத்தையே அனுஸரிக்கிறாய். பாபி! இவ்வாறு காமத்தினால் புத்தி மயக்கங்கொண்டிருப்பதால் நிச்சயம் நீ ஆயுள்இழந்தவனே. மனிதர்களுள் இழிவானவனே! செய்யத்தகாத பாபத்தில் என்னை நீ ஏவுகிறாய். மேலும், 'ஒருவன் பாபத்தைச்செய்கிறான். அதனால் அவனுடைய ஜாதியே கெடுக்கப்படுகிறது' என்று நிபுணர்களான உத்தம

[1] மூலத்தில் வேறுமாதிரியாயிருக்கிறது.

புருஷர்களால் முந்தியே இவ்விஷயம் கூறப்பட்டிருக்கிறது. நீ யம தர்மராஜனுடைய தேசத்தை அடைந்துவிட்டாய். இதில் ஐயமில்லை. தோஷமற்ற இந்த உறவினர்களையெல்லாம் நாசஞ்செய்யப்போகிறாய். விஷயங்களை அறிந்தவளான நான், ப்ராதாவினிடத்திலுள்ள அன்பி னால் (தெரியாதவள்போல) செய்யப்போகிறேனென்னும் இதுதான் எனக்கு மிகுந்த துக்ககரமான விஷயம். குலம நாசத்தையடைந்த பிறகு நீ ஸந்தோஷமுள்ளவனாயிரு. நீ இவ்விடத்தினின்று விரை வாக மங்களகரமான உன்னுடைய வீட்டையே அடை. ஏதோ ஒரு கார்யத்தை உத்தேசித்து மத்யத்தையும் அன்னத்தையும் ஆயத்தஞ் செய். அன்னமும் மத்யமும ஸிததஞ்செய்யபபட்டவுடன் எனக் கொருவனை அனுப்பு. மத்யத்தையும அன்னத்தையுங்கொண்டு வருவதற்காக அவளை நான் உன்னிடம் அனுப்புவேன். பிறகு உன் னிடம் அனுப்பப்பட்டவளும் தடையற்றவளுமான அவளை ஜனங்க ளில்லாதஇடத்தில் உன் நல்வார்த்தையைப் பொறுப்பாளானால் க்ர மப்படி நன்மொழிகளால் அவள் மனத்துக்கு ஸமாதானத்தை உண்டு பண்ணு. இவையனைத்தும் தற்காலத்தில் செய்யத்தக்கவை. இவ் விஷயத்தில் இனி ஸம்பவிக்கக்கூடியதைத தொடர்ச்சியாக ஆலோ சனைசெய்" என்று சொன்னாள்.

ஸுதேஷ்ணையினால் இவ்வாறு சொல்லப்பட்ட கீசகன், கால னால் தூண்டப்பட்டு விரைவாக ராஜக்ருஹத்திலிருந்து தன் வீடு நோக்கிச் சென்றான்; தன்வீட்டுக்கு வந்துசேர்ந்து மத்யத்தையும் நேர்த்தியான அன்னத்தையும் வெள்ளாடுசெம்மறியாட்டிறைச்சி களையும் பலவிதமான ம்ருகங்களின் மாம்ஸங்களையும் ஏராளமாக நன்கு பக்வஞ்செய்வித்தான். கீசகன், அப்பொழுது ஸமர்த்தர்க ளான சமையற்காரர்களைக்கொண்டு பற்பலவிதங்களும் அனேகங்க ளும் (ருசியினால்) ஒன்றுக்கொன்று மாறுபட்டவைகளுமான பக்ஷ ணங்களையும் அன்னபானங்களோடு நன்றாகப் பக்வம் செய்வித்தான். மூடாத்மாவான கீசகன், விரைவாகப் பசுப்போலக் காலபாசத்தினால் கழுத்தில் சுற்றப்பட்டு ஸமீபத்தில் வந்திருக்கின்ற மரணத்தைத் தெரிந்துகொள்ளவில்லை. சாராயம் வருவிக்கப்பெற்றும் உணவு நன் றாகப் பக்வம்செய்யப்பட்டும ஸஜ்ஜமானவுடன் கீசகன் மறுபடியும் ஸுதேஷ்ணையிடம்வந்து, "ஸுதேஷ்ணையே! பலவிதமான மத்யமும் மாம்ஸமும பலவிதமான பக்ஷணங்களும் செய்யப்பட்டிருக்கின்றன. அந்த ஸைரந்த்ரியானவள் ஏதாவது ஒருகார்யத்தினால் எவ்வாறு என் வீட்டுக்கு வருவளோ அவ்வாறு அவளிடத்தில் சொல். இப்பொழுது

எனக்கு விருப்பத்தைச் செய்வதற்காக நீ அதிக வேகத்தைப்பாரா ட்டு. நான், 'எனக்கு ஸைரந்த்ரியினுடைய சேர்க்கையையாவது மரணத்தையாவது கொடும்' என்று வ்ருஷபக்கொடியையுடையவ ரான தேவரைச் சரணமடைகிறேன்" என்னும் வசனத்தைச் சொன் ஞன். அந்த ஸுதேஷ்ணையானவள், அவனைப்பார்த்துப் பெருமூச்சு விட்டுக்கொண்டு, "(கீசக!) நீ உன்னுடைய வீட்டுக்குத் திரும்பிப் போ. இதோ நானும ஸைரந்த்ரியை மத்யத்தை வாங்கிவருவதற் காக விரைவாகக் கட்டளையிடுகிறேன்" என்றாள். இவ்வாறு சொல் லப்பட்டவனும் பாபத்தில் மனமுள்ளவனும் அதிக வேகமுள்ளவனு மான கீசகன் ஸைரந்த்ரியை அடைந்திருக்கிற மனத்தையுடையவ ஞகவே மறுபடியும் விரைவாகத் தன்வீடுபோய்ச் சேர்ந்தான். அவன் விரைவாகத் தன்வீடுபோய்ச் சேர்ந்தானென்பதை அறிந்து, ஸுதே ஷ்ணையானவள், பிறகு ஸைரந்த்ரியை அழைத்து, "ஸைரந்த்ரி! என் னுடைய ப்ரீதிக்காக நீ கீசகன் வீட்டுக்குப்போ. அழகிய இடை யுடையவளே! விலாஸமுடையவளே! எனக்குத் தாஹமாயிருக்கி றது. மத்யத்தை வாங்கிவா" என்ற வாக்யத்தைச் சொன்னாள். ஸுதேஷ்ணையினால் இவ்வாறு சொல்லப்பட்ட ராஜகுமாரியான அந்த தரௌபதியானவள் சோகத்தினால் மிகவும் வாட்டமுற்றுப் பெரு மூச்சுவிட்டுக்கொண்டு, "(அம்மா!) நான் அங்கே போகமாட்டேன். கல்யாணி! காமத்தில் மனத்தைச் செலுத்தினவனான ஸூதபுத்ரன் என்னை விரும்புகிறானல்லவோ. ராஜபுத்ரி! நான் அவன்வீட்டுக்குப் போகமாட்டேன். அம்மா! அவன் வெட்கமில்லாமலிருக்கிறானென் பதை நீயே அறிந்திருக்கிறாய். மங்களமுள்ளவளே! நான் இங்கு வஸிக்குங்காலத்தில் வேறுபுருஷனை அடையமாட்டேன் என்கிற சப தமானது (உன்னிடம்) முதலில்வந்து சேருங்காலத்தில் பண்ணப்பட் டிருக்கிறது. அழகிய கூந்தல் நுனியையுடையவளே! கீசகனே மூடன்; மன்மதனால் கர்வமுள்ளவன். அவன், இங்கு இருக்கும்பொ ழுதே என்னைக்கண்டு அவமதிக்க முயல்கிறான். பந்துக்களில்லாமல் அவன் இருப்பிடத்தை அடைந்திருக்கின்ற என்னை எவ்வாறு ஸஹிப் பான்? ஏ! ராஜபுத்ரி! அநேகவேலைக்காரர்கள் உனக்கு ஸ்வாதீனர் களாயிருக்கின்றார்கள். கைகேயி! வேறொருத்தியை அனுப்பு. நீ இந்தஸமயத்தில் என்னை ரக்ஷிக்கவேண்டும். தேவி! பயத்தினால் நடுக்கமுற்றநான் கீசகனுடையஇருப்பிடத்தை அணுகமாட்டேன்; செய்ய மிகக்கடினமான வேறு எந்தஎந்தக்கார்யமிருந்தாலும் அதை அதை நான்செய்கிறேன்" என்று கேட்டுக்கொண்டாள். பாஞ்சாலி

யினுல் இவ்வாறுசொல்லப்பட்டவளும் கேகயராஜகுமாரியுமான் விராடனுடையபத்னியானவள் தெய்வவசத்தால் கோபங்கொண்டு மறுபடியும் அவளைப்பார்த்து, "நான் உன்னை வற்புறுத்துகிறேன். நீயே கீசகனிடம்போ. உன்னைப்போல வேறுவேலைக்காரி எனக்கு இல்லை. நீயே மிகவும்விரைவாகச் செல். அவச்யம் நீயே போக வேண்டும்; எதற்காக என்னோடுவாதாடுகிறுய்; சீக்ரம்போ; விரைவு பண்ணு; எனக்கு ப்ரியமானகார்யத்தைச்செய். என்ப்ராதாவான வன் இவ்வித ஸ்வபாவமுள்ளவனல்லன். நீ ஏன் ஸந்தேஹப்படு கிறுய்?" என்றுசொல்லித் தனக்குள்ள ப்ரபுத்வத்தினுல் அவ ளைப் போகும்படி வலிந்துகட்டளையிட்டு, அவளிடத்தில், "நல்ல வாஸனையுள்ளதும் நன்றாக இறக்கப்பட்டதுமான மத்யத்தைக் கொ ண்டுவா" என்று ஆஜ்ஞைசெய்து, மூடியுள்ளதான ஒருஸ்வர்ணபாத் ரத்தைக்கொடுத்தாள். அந்த த்ருபதகுமாரியானவள் ஸந்தேஹமடை ந்து நடுக்கமுற்று அழுதுகொண்டு தேவதைகளுக்கும் தன்மாமனர் களுக்கும் நமஸ்காரஞ்செய்து, "நான் பார்த்தர்களைத்தவிர வேறொரு புருஷனையும் அறியாமலிருப்பது ஸத்யமாயிருந்தால் அந்தஸத்யத்தி னுல் கீசகன் என்னைக்கண்டு தனக்குவசப்படுத்தாமலிருக்கவேண் டும். நான் பாண்டுபுத்ரர்கள் ஐவர்களையும்தவிர வேறொருபுருஷனை யும் அடையாமலிருப்பது ஸத்யமானுல் அந்தஸத்யத்தினுல் கீசகன் என்னைக்கண்டு தன்வசப்படுத்தாமலிருக்கவேண்டும்" என்று இவ் விதம்கூறினுள்.

பத்தொன்பதாவது அத்யாயம்.

கீசகவதபர்வம். (தொடர்ச்சி.)

(த்ரௌபதி, ஸூர்யன்முதலானதேவர்களை ப்ரார்த்தித்ததும், கீசகன் அவளைவேண்டியதும், அவள்மறுத்ததும், அவன் அவளைஉதைத்ததும், ஸூர்யனுல்அனுப்பப்பட்ட ராக்ஷஸன் கீசகனைக் கீழேதள்ளியதும், கீசகனைக்கொல்லநினைத்தபீமன் யுதிஷ்டிரரால் தடுக்கப்பட்டதும்.)

அழகியஇடையுள்ளத்ரௌபதியானவள், தர்மராஜனையும் இந் த்ரனையும் ஸூர்யனையும் வாயுவையும் அச்வினீதேவர்களையும் குபே ரனையும் வருணனையும் யமனையும் ருத்ரரையும் அக்னியையும் பகனையும் விஷ்ணுவையும் ஸுப்ரம்மண்யரையும் பூஷாவையும் ஸாவித்ரியுடன் கூடின ப்ரம்மதேவரையும் ஸ்தோத்ரஞ்செய்தாள். மான்குட்டியின்

கண்போன்ற கண்ணையுடையவளும் அழகிய இடையையுடையவளும் தர்மத்தைஅநுஷ்டிப்பவளும் மனுஷ்யபலத்தை இழந்தவளுமான அந்தத்ரௌபதியானவள், அப்பொழுது ஒருமுஹூர்த்தகாலம் ஸூர்யனை மந்த்ரங்களால் ஸ்தோத்ரம்செய்தாள். மெல்லியஇடையுடையவளான த்ரௌபதியினுடைய அந்த வ்ருத்தாந்தமனைத்தையும் ஸூர்யன் தெரிந்துகொண்டான்; பிறகு அவளைரக்ஷிப்பதற்காக ஒருராக்ஷஸனை மறைந்திருக்கும்படி ஏவினான். அப்பொழுது அந்தராக்ஷஸனும் புகழ்பெற்றவளான அந்தத்ரௌபதியை எல்லாநிலைமைகளிலும் விட்டுவிலகாமலிருந்தான். அழகிய கூந்தல்நுனியையுடைய அந்த த்ரௌபதியானவள் அடிக்கடி விரைகின்றவளாகவும் பரவசையாகவும் காலவிளம்பம் செய்பவளாகவும் கீசகனுடையவீட்டைக்குறித்துப் புறப்பட்டாள். கீசகன், பெண்மான்போலப்பயந்தவளும் (தனக்குமுன்) வருகின்றவளுமான அந்தக்ருஷ்ணையைக்கண்டு (நதியின்) கரையிலிருக்கிறவன் ஓடத்தைக்கண்டு எழுந்திருப்பதுபோல ஆஸனத்தினின்று விரைவாக எழுந்திருந்தான். காமத்தினால் வ்ருத்தியடைந்தவனும் துராத்மாவும் தன்னைத்தான் புகழ்ந்துகொள்பவனும் மூடனுமான அந்தக்கீசகன், தன்வீட்டில்வந்திருக்கின்றவளும் தாமரை மலர்போன்ற கண்களையுடையவளுமான அந்தத்ரௌபதியைப்பார்த்து, "அழகிய கூந்தல்நுனியையுடையவளே! உனக்கு நல்வரவா? இன்றுஇரவு எனக்கு நல்ல விடிவாகவிடிந்தது. சுபமுடையவளே! நெடுங்காலம்கழித்து என்னுடையவீட்டுக்குத் தலைவியாக நீ வந்து சேர்ந்தாய். என்னிடத்தில் ப்ரீதியைப்பாராட்டு. என்னை உன்வசப்படுத்திக்கொள். உனக்காகவே என்னால் ஸித்தஞ்செய்யப்பட்டிருக்கின்ற போகங்களை நீஏற்றுக்கொள். முற்றிலும் ரத்நமயமாயிருக்கிற மாலையையும் ஸ்வர்ணமயமானகுண்டலங்களையும் ஆடைகளையும் சந்தனத்தையும் மாலையையும் வாஸனைப்புகையினால் சுத்தமாயிருக்கிற மத்யத்தையும் பெற்றுக்கொள். உனக்கு மங்களம். விருப்பப்படி விளையாடிக்கொண்டிரு. தாமரைமலர்போன்ற கண்களையுடையவளே! இனியகாட்சியையுடையவளே! ப்ரீதியினால் என்மீது கருணைபுரிவாயாக. வெண்மையும் மென்மையுமாயிருக்கிற உறையுள்ளசயனம் நன்றாக விரிக்கப்பட்டிருக்கிறது. இதன்மீதேறி என்னோடுசேர்ந்து இவ்விதமான உத்தமமத்யத்தைக்குடி. அகன்றகண்களையுடையவளே! என்னை அன்புடன் அடை. நான் உனக்குத்தகுந்தகணவனாயிருக்கிறேன். உத்தமமான [1]அங்கத்தையுடையவளே! மஹாமேருவை ஸூர்

[1] மூலம் வேறு.

யனுடைய ஒளி அடைவதுபோல நீ என்னைவந்து அடை" என்றான். அந்தவீட்டில்வந்திருக்கின்றவளும் கீசகனால் இவ்வாறு உரைக்கப்பட்டவளும் உத்தம ஸௌந்தர்யமுள்ளவளுமான அந்தத்ரௌபதியானவள் கெட்டஒழுக்கமுள்ளவனான அந்தக்கீசகனைப்பார்த்து, "(ஏ! கீசக!) இவ்விதமானவார்த்தையைச் சொல்வதற்கு நீ தகுந்தவனல்லை. நாய்மாம்ஸத்தைப்பக்வம்செய்து உண்பவனானபுலையனால் ப்ராம்மண ஸ்த்ரீ தொடத்தகாதவள்போல, நான் உன்னால் தொடத்தக்கவளல்லேன். கெட்டபுத்தியுள்ளவனே! பிறர்மனைவியைப் புணருகின்றவர்களும் (உலகத்திலுள்ள) வரம்பைக்கடந்தவர்களும் புழுப்போல அசுபங்களுக்கு ஆதாரமானவர்களுமான அநேகமனிதர்கள் செல்லுகிறதும் யாரும்ப்ரவேசிக்கமுடியாத இடைவெளியுள்ளதுமான நரகத்தைஅடைவதற்கு விரும்புகிறாய். ஸுதேஷ்ணையானவள் என்னை மத்யம்கொண்டுவருவதற்காக உன்னுடையவீட்டுக்கு அனுப்பினாள். உன்னுடைய உடன்பிறந்தாள் தாஹித்திருக்கிறாள். (கொடுத்தால்) அவளுக்கு மத்யத்தைக் கொண்டுபோவேன். கேகயராஜகுமாரியான ஸுதேஷ்ணையானவள் தாஹம்மேலிட்டு என்னை விரைவாக (மத்யம்வாங்கிவரும்படி) கட்டளை இட்டாள். ஸூதபுத்ர! ஆதலால், மத்யம் சீக்ரம் என்னிடம்கொடுக்கப்படலாம்; நான் போகிறேன்" என்றுகூறினாள். கீசகன், "கல்யாணி! ராஜபுத்ரியான (ஸுதேஷ்ணைக்கு) இந்தமத்யத்தை வேறுஸ்த்ரீகள் கொண்டு போவார்கள். கல்யாணி! நீ எதற்காகச்செல்லவேண்டும்? எனக்காக நீ இங்கேவந்திருக்கிறாய்", என்றுசொன்னான். ஸூதபுத்ரன் இவ்வாறுசொல்லிவிட்டு (த்ரௌபதியினுடைய) வலக்கையைப் பிடித்தான். அந்தத்ரௌபதியானவள் கையைஉதறிக்கொண்டு பாத்ரத்தைப் பூமியில்போட்டுவிட்டு ராஜாவானயுதிஷ்டிரரிருக்கிற ஸபையைச் சரணமடைவதற்காக ஓடிவந்தாள். விரைவாகஓடுகின்ற அந்தப்பாஞ்சாலியை ஸூதபுத்ரனானகீசகன் தலைமயிரில்பிடித்துப் பூமியில்தள்ளி ஸபையிலுள்ளமஹாத்மாவான விராடராஜனும் மூத்தோர்களான ப்ராம்மணர்களும் க்ஷத்ரியர்களும் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே காலால்உதைத்தான். காலால்உதைக்கப்பட்ட அந்தத்ரௌபதியினுடையமுகத்தினின்று ரக்தம்பெருகியது. பாரத! பிறகு ஸூர்யனால்ஏவப்பட்ட அந்தராக்ஷஸன் விரைவாகக் காற்றுவேகத்தினால் கீசகனைத் தூரத்தில் விலக்கித்தள்ளினான். ராக்ஷஸனுடைய பலத்தினால் விலக்கித்தள்ளப்பட்ட அந்தக்கீசகன் அப்பொழுது சுழற்சியடைந்து கைகால்அசைவற்று வேரோடுஅறுத்துத் தள்ளப்பட்ட

மரம்போல் பூமியில்விழுந்தான். அவளைக்கண்டு அந்தஸபையிலுள்ளவர்கள் நான்குபக்கத்திலும் கூக்குரலிட்டார்கள். அவர்கள், "ஸூதபுத்ர! கீசக! நீ இளமைப்பருவத்திலிருப்பவளும் எளிமையுடையவளும் பந்துக்களை இழந்தவளுமான இந்தப்பெண்ணை ஏன் கொல்லுகிறாய்? இது அகாதகார்யம்" என்றும் சொன்னார்கள். அந்த ஸபையில் ப்ராதாக்களான அந்தப்பார்த்தர்கள், அவ்வாறு கீசகனால் காலால் உதைக்கப்படுகின்ற க்ருஷ்ணையைப்பார்த்துப் பொறாதவர்களானார்கள். அவளைக்கண்டு பீமஸேனனுக்குக் கோபத்தால் கண்ணீர் பெருகியது; உஷ்ணமான பெருமூச்சுஉண்டாயிற்று; இரண்டுகண்களும் மேலேதூக்கப்பட்ட இமைகளுள்ளனவாயின. வெயர்வையுடையதும் பயங்கரமுமான புருவநெறித்தலானது நெற்றியில்தோன்றியது. மிக்க மனோதைர்யமுள்ளபீமன் துராத்மாவான அந்தக்கீசகனைக் கொல்லவேண்டுமென்கிற எண்ணம்கொண்டு அப்போது கோபத்தால் பற்களால் பற்களைக் கடித்தான். மறுபடியும் கோபத்தினால் தூண்டப்பட்டு ஆஸனத்தினின்று விரைவாகஎழுந்திருந்து (கீசகனைக் கொல்லுவதற்காக) நீண்ட ஒருமரத்தையும்பார்த்து அரசனையும்பார்த்தான். அந்தயுதிஷ்டிரர், துராத்மாவான கீசகனுடையவதத்தில் விருப்பமுற்ற அந்தப்பீமனை முகக்குறியினாலேயே தடுத்துவிட்டார். குந்திபுத்ரரும் ராஜாவுமானயுதிஷ்டிரர், கோபாவேசமுள்ளவனும் புத்திசாலியுமான அந்தப்பீமஸேனனுக்கு மெல்லக் குறிப்பித்தார். அப்பொழுது கங்கரென்னும்பெயர்பெற்ற யுதிஷ்டிரர், "சமையற்கார! நீ ஸாஹஸம்செய்யாதே. இந்தமரமானது கனிகளுடன்கூடி இருக்கிறது. இந்தமரத்தில் உலர்ந்தவிறகுகளில்லை சில உபயோகமில்லாத விறகுகள்இருக்கின்றன. உனக்கு விறகுவேண்டுமானால் நகரத்தைவிட்டு வெளியில்சென்று மரத்தை வேரோடுபிடுங்கித்தள்ளு. உனக்கு ச்ரமமுண்டாகாது. ஒரு பச்சைமரத்தினுடைய குளிர்ந்தநிழலை அடைந்த மனிதன் (அந்தமரத்தினால்) தான் முந்தி அடைந்த உபகாரத்தைநினைத்து அதன் இலைவிஷயத்தில்கூட த்ரோஹம்செய்யக்கூடாது. சமையற்கார! உன்கோபத்திற்கு இதுஸமயமன்று. சபலப்படாதே. இந்த மரமானது பூர்ணமாகவில்லை; இரண்டுபக்ஷங்களால் குறைவுபட்டிருக்கின்றது. பலசாலிகளுக்கு இது பெரிதானகார்யமன்று" என்று அப்பொழுது தடுத்துச்சொல்லினர். பிறகு, தர்மராஜர் அத்தருணத்தில் விராடராஜன் அறிந்துகொள்வானென்கிற பயத்தினால் தம் கைக்கட்டைவிரலால் கால்கட்டைவிரலைஅழுத்தி அந்தப்பீமஸேனனைத் தடுத்தார். பகைவர்களுடையபட்டணங்களை ஜயிப்பவனும்

தைர்யமுள்ளவனுமான பீமஸேனனோ அந்தவாக்யத்தைக்கேட்டு வேகத்துடன்உண்டான கோபத்தை வலிந்து அடக்கினான். ப்ராதாவினுடைய இங்கிதங்களை அறிந்த அந்தவ்ருகோதரன் சும்மாஇருந்துவிட்டான். பீமனுடைய ஆடம்பரத்தையும் அந்தத்தர்மராஜருடைய செய்கையையும்பார்த்து அந்தத்ரௌபதியானவள் கோபத்தினால் அடிக்கடி அதிகமாக அழுதாள். சிவந்தும் நீண்டுமிருக்கின்ற கண்களையுடையவளும் அழகியஇடையையுடையவளும் த்ருபதபுத்ரியுமான க்ருஷ்ணையானவள் கீசகனால் பின்தொடரப்படுவதனால் ஸபையின்வாயிலைநாடி அழுதுகொண்டே பயங்கரமானகண்ணால் எரிக்கிறவள்போல, தைன்யமுற்றமனத்தையுடையவர்களான அந்தப் பார்த்தர்களைப்பார்த்து, தன்னுடையமனத்திலிருக்கிற கோபத்தைக் காட்டக்கூடிய அங்கவிகாரத்தை மறைத்து, தர்மத்துடன்கூடின ப்ரதிஜ்ஞையைப் பாதுகாத்துக்கொண்டு பின்வரும் வாக்யத்தைச் சொல்லலானாள். "ப்ரியர்களிடத்திலும் கொல்லத்தக்கவர்களிடத்திலும் ஸமபுத்தியைப் பாராட்டுகின்றவர்களும் ப்ரஜைகளுடையரக்ஷணத்தையே ஸ்வபாவமாகக்கொண்டவர்களும் அளவற்ற தேஜஸ்ஸையுடையவர்களும் தர்மத்திலும் ஸத்யத்திலும் நிலைபெற்றவர்களும் தம்முடைய குடிகளிடத்திலும் தம்புத்ரர்களிடத்திலும் வேற்றுமைபாராட்டாதவர்களுமான அரசர்களுக்குக் கார்யாக்ஷணமானது எப்பொழுதும் செய்யத்தக்கது. விவாதம்சேர்ந்திருக்கும் ஸமயங்களில் தர்மாஸனத்தில் வீற்றிருக்கின்றவனும் பக்ஷபாதமின்றிக் கார்யத்தைப் பரிசீலனம்செய்பவனுமான அரசனால் இரண்டுஉலகங்களும் ஜயிக்கப்படுகின்றன. அரசரே! தர்மாஸனத்தில் வீற்றிருக்கிறநீர் நிரபராதியான என்னைக் காப்பாற்றும். மஹாராஜரே! நீர் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே நிரபராதியானநான் துராத்மாவானகீசகனால் தாஸிபோல் காலால்உதைக்கப்பட்டேன். ராஜச்ரேஷ்டரே! உமக்குமுன்னாலேயே நான் பூமியில் தேய்க்கப்பட்டேன். குற்றமற்றவளும் இரக்கப்படத்தக்கவளும் ஸ்த்ரீயுமான என்னை நீர் காப்பாற்றும். நரேச்வரரே! கீசகனிடத்தில் பயந்தவளானஎன்னைக் காப்பாற்றும். தர்மத்தைக் கைதவறவிடாதீர். மத்ஸ்யதேசாதிபரே! தகப்பன் தன்வயிற்றில் பிறந்தபிள்ளைகளைக் காப்பதுபோல ப்ரஜைகளைக்காப்பாற்றும். மதிமயக்கங்கொண்டவனும் அதர்மமாகக் கார்யங்களைச்செய்கிறவனும் துராத்மாவுமான அரசனைப் பகைவர்கள் சீக்ரம் தம்வசப்படுத்திக் கொள்ளுகிறார்கள். நீர் மத்ஸ்யராஜாக்களுடைய குலத்தில் பிறந்தவரன்றோ? அவர்களுக்கு ஸத்யமே முக்யமானது. தர்மத்தையே முக்ய

ம்ாகக்கொண்ட குலத்தில்அன்றோ இவ்விதஸ்வபாவமுள்ளநீர் பிறந்திருக்கிறீர்? நராதிபரே! ஆதலால், (எனக்கு) ரக்ஷகராவதற்காக உம்மை நான் கூவி அழைக்கிறேன். ஓ! ராஜேந்த்ரரே! பாபியான கீசகனிடத்தினின்று என்னை இப்பொழுது நீர் பாதுகாக்கவேண்டும். புருஷாதமனனகீசகன் என்னை இந்தஸமயத்தில் நாதனற்றவள் என்றறிந்து உதைக்கிறான். இழிந்தவனான இந்தக்கீசகன் தர்மத்தையே கவனிக்கவில்லை. அகார்யங்களைச்செய்யாமலும் கார்யங்களைத் தவறாமல்செய்துகொண்டும் ப்ரஜைகளிடங்களில் நன்னடக்கையுள்ளவர்களாயிருக்கிற மன்னர்கள் ஸ்வர்க்கத்தை அடைகிறார்கள். கார்யாகார்யவிசேஷங்களை அறிந்திருந்தும் தமதுஇச்சைபபடி குடிகளிடங்களில் பாவத்தைச்செய்கிற மன்னர்கள் தலைகீழாக நரகத்தில் விழுகிறார்கள். அரசர்கள் செய்யவேண்டியகார்யத்தைச் சரியாகச் செய்வதனால் எவ்விதமான தர்மத்தை அடைகிறார்களோ அவ்விதமான தர்மத்தை யஜ்ஞங்களாலும் தானங்களாலும் குருசுச்ரூஷையினாலும் அடைகிறதில்லை. மேலும், முற்காலத்தில் ப்ரம்மதேவர் (தர்மவிஷயமான ஸம்சயநிவ்ருத்திக்காக) வினவிய இந்த்ரனுக்கு உலகத்தில் கார்யம் அகார்யம்இரண்டும் எவ்விதம் ப்ரதானமாயினவென்பதையும் பின்னும் தர்மாதர்மங்கள் இரண்டும் க்ரியைகள் அக்ரியைகள்இரண்டும் புண்யபாபங்களைஅடைவிப்பதில் எவ்வாறு தனித்தனியாகப்பிரிக்கப்பட்டிருக்கின்றனவென்பதையும்உரைத்து (மறுபடியும் மஹேந்த்ரனைப்பார்த்து,) "முற்காலத்தில் ப்ரஜைகளை ஸ்ருஷ்டித்தபொழுது (அந்த ப்ரஜைகளைப்பார்த்து,) 'மனுஷ்யர்களே! (கார்யம் அகார்யம், தர்மம் அதர்மம், க்ரியை அக்ரியைஎன இம்) மூன்று இரட்டைகளும் பூமியில் உங்களால் நன்றாகஅனுஷ்டிக்கத்தக்கவை' என்பது என்னால் கூறப்பட்டிருக்கிறது. இவ்விதமான நல்லொழுக்கத்திலும் தீயொழுக்கத்திலும் மனிதன் கர்மங்களால்உண்டான பலனை அடைகிறான். நல்லகார்யத்தைச்செய்பவன் நன்மையைஅடைகிறான். பாபத்தைச்செய்பவன் பாபத்தைஅடைகிறான். அவ்விதமான நல்வினை தீவினைகளால் ஸ்வர்க்கநரகங்களுடைய ஸம்பந்தத்தைப் பெறுகிறான். ஒருமனிதன் அஜ்ஞானத்தினால் நல்லசெய்கையையோ கெட்டசெய்கையையோ செய்து மரணமடைந்து தன்புத்தியினால் பச்சாத்தாபமுற்று வருத்தமடைகிறான்" என்று மறுமொழிகூறினார். இவ்வாறு சிறந்தவசனத்தைக்கூறி ப்ரம்மதேவர் இந்த்ரனை அனுப்பினார். இந்த்ரனும் பரம்மதேவரிடத்திலிருந்து விடைபெற்றுக்கொண்டு தேவராஜ்யபரிபாலனம் செய்துவந்தான். ராஜேந்த்ரரே!

[1] பாமேஷ்டியானப்ரம்மாவினால் தேவராஜனுக்கு உரைக்கப்பட்டது போல நீரும் கார்யாகார்யங்களில் நிலைபெற்றிரும்" என்றுகூறினாள்.

இருபதாவது அத்யாயம்.

கீசகவதபர்வம். (தொடர்ச்சி.)

(கீசகனைச் சிக்ஷியாமையால், த்ரௌபதீ விராடனை இகழ்ந்ததும், விராடன் த்ரௌபதியை ஸமாதானஞ்செய்ததும், கந்தர்வர்கள் கீசகனைக் கொல்வரென்று த்ரௌபதீ ஸுதேஷ்ணைக்குச் சொல்லியதும்.)

இவ்வாறு பாஞ்சாலி புலம்புகையில், பலத்தினால்கர்வமடைந்திருந்தகீசகனை அவ்விடத்தில் சிக்ஷிப்பதற்குச் சக்தியற்றவனும் மத்ஸ்ய தேசத்தார்களுள் உத்தமனுமான விராடராஜன் கீசகனை நல்வார்த்தையினாலேயே தடுத்தான். இகழத்தகாதவளும் தேவகன்னிகை போன்றவளும் கெட்டகார்யத்தைச்செய்தவனை கீசகன் விஷயத்தில் செலுத்தத்தக்க ராஜநீதிகளுடைய முறைகளை அறிந்தவளுமான பாஞ்சாலராஜகுமாரியானவள் குற்றஞ்செய்தவனும் மத்ஸ்யராஜாவினால் குற்றத்துக்குத்தகுந்த தண்டனையினால் சிக்ஷிக்கப்படாதவனுமான கீசகனைக்கண்டு உத்தமமானதர்மத்தை நினைத்து ராஜாவைப்பார்த்து மறுபடியும் சொல்லத்தொடங்கினாள். சிறந்த இடையையுடைய பாஞ்சாலியானவள் அந்தஸபையில் ராஜான்வஅனுஸரிபபதில் நோக்கமுடைய ஸபையிலுள்ளவர்களனைவர்களையும் அபராதியான கீசகனையும் பார்த்து, துக்கத்தினால் கவரப்பட்டமனத்துடன் விராடனை நோக்கி, "ராஜரே! நீர் கீசகன்விஷயத்தில் அரசன்போல ஒன்றுஞ் செய்யவில்லை. திருடர்களுடைய ஸ்வபாவம்போன்ற உம்முடைய ஸ்வபாவமானது ஸாதுக்களிடங்களில் நிலைபெற்றிராது. கீசகனும் தனக்குரியதர்மத்தில் நிலைபெற்றிருக்கவில்லை. மத்ஸ்யராஜரும் தமக்குரியதர்மத்தில் எவ்விதத்தாலும் நிலைபெற்றிருக்கவில்லை. இவரை உபாஸிப்பவர்களான இந்தஸபையிலுள்ளவர்களும் தர்மத்தைஅறிந்தவர்களல்லர். கீசகன் தர்மத்தைஅறியவில்லை. அவ்வாறே அரசருடைய வேலைக்காரர்களும் தர்மத்தைஅறியவில்லை. அரசரும் நல்லொழுக்கத்தைக் கற்பிக்கிறாரில்லை. மந்த்ரிகளும் அறிகிறார்களில்லை. அரசரே! ராஜஸபையில் விராடரான உம்மை நான் நிந்திக்கவில்லை. மத்ஸ்யதேசத்து அரசரே! உமக்குஅருகில் இந்தக்கீசகனால் நான்

[1] உத்தமமான ஸ்தானத்தில் இருப்பவர்.

உதைக்கத்தக்கவளல்லேன். தர்மத்தை மீறிநடந்தவனான கீசகனை ஸபையிலுள்ளோர்கள் பார்க்கட்டும். விராடராஜரே! குற்றமற்றவளும் நாதனற்றவளுமான என்னைப்பாரும். துஷ்டரிடத்தில் நல்லவார்த்தை பயன்படாது. துஷ்டரிடத்தில் தண்டனையை விதிக்க வேண்டும். தண்டிக்கத்தகாதவர்களைத் தண்டிப்பவனும் தண்டிக்கத் தக்கவர்களைத் தண்டியாதவனுமான அரசன் உலகத்தில் ராஜாஎன்கிற சொல்லுக்கு உரியவனாகமாட்டான். பூமியைஆளுகின்றவன், துயரமுற்றவர்கள் குருடர்கள் தரித்ரர்கள் சக்தியற்றவர்கள் நொண்டிகள் கூனர்கள் புத்தியீனர்கள்முதலான மனுஷ்யர்களையும் நாதனற்றவர்களும் பாலர்களும் முதியவர்களுமான ஸ்த்ரீபுருஷர்களையும் துஷ்டர்களாலும் திருடர்களாலும் அவமதிக்கப்பட்டவர்களையும் ரக்ஷிக்கவேண்டும். அரசன் நாதனற்றவர்களுக்கு நாதனாகவும், தகப்பனில்லாதவர்களுக்குத் தகப்பனாகவும், தாயில்லாதவர்களுக்குத் தாயாகவும், குருவில்லாதவர்களுக்குக் குருவாகவுமிருக்கவேண்டும். கதியற்றவர்களுக்கு அரசனே கதி. மனிதர்களுக்கு அரசனே முக்யமானஆதாரம். உத்தமனான அரசன், துஷ்டர்களான வேறுமனிதர்களால் தொடப்பட்டவளும் பதிவ்ரதையும் நாதனற்றவளுமான ஒரு ஸ்த்ரீயைத் தன்பெண்போல விசேஷமாகப் பாதுகாக்கவேண்டும். ராஜரே! இவ்வளவுகாலம்வரையில் உம்முடைய அரண்மனையில் உமது பெண்ணைக்காட்டிலும் மேலாகவஸித்துவந்த நான் கீசகனால் உதைக்கப்பட்டேன். என்னைப்பாரும்" என்று புலம்பினாள். விராடன், "(ஸைரந்த்ரி!) என்கண்ணுக்குப்புலப்படாதஇடத்தில் உங்களிருவர்களுக்கும் நடந்தசண்டையை நானறியேன். கார்யங்களுடையதத்வத்தை அறியாமலிருக்கிற எனக்கு எவ்வாறு அமங்களம்உண்டாகும்?" என்று கூறினான்.

த்ரௌபதி! "எவர்களுடைய விரோதியானவன் காலால்பூமியைத்தொட்டுக்கொண்டு உறங்குகிறானில்லையோ அவர்களுடைய மஹிமைதங்கியமனைவியானஎன்னை ஸூதபுத்ரன் காலால்உதைத்தான். எவர்கள் (பிறர்களுக்கே) கொடுப்பார்களோ, எவர்கள் (பிறரிடமிருந்து) இரக்கமாட்டார்களோ, எவர்கள் ப்ராம்மணர்களிடங்களிலும் வேதங்களிடங்களிலும் விச்வாஸமுள்ளவர்களோ, எவர்கள் ஸத்யவாதிகளோ, எவர்களுடையநாணொலியானது துந்துபிவாத்தியத்தின் சப்தம்போல அதிகமாகக்கேட்கப்படுமோ அவர்களுடைய ப்ரியமுள்ளமனைவியானஎன்னை ஸூதபுத்ரன் காலால் உதைத்தான். எவர்கள் தேஜஸ்விகளும் பொறுமையுள்ளவர்களும் பலசாலிகளும்

கௌரவமுள்ளவர்களும் பெரிதானவில்லுள்ளவர்களும் யுத்தத்தில் சூரர்களும் கர்வமுள்ளவர்களும் ஆண்மையைச்சிறப்பாகக்கொண்டவர்களுமாயிருக்கிறார்களோ அவர்களுடைய சிறந்தமனைவியான என்னை ஸூதபுத்ரன் காலாலுதைத்தான். மஹாபலசாலிகளான எவர்கள்கோபங்கொண்டால் இவ்வுலகமனைத்தையும் அழிப்பார்களோ அவர்களுடையமனத்துக்கினியமனைவியான என்னை ஸூதபுத்ரன் காலால்உதைத்தான். வீர்யத்திலும் ஸத்யத்திலும் பலத்திலும் இந்த்ரியங்களை அடக்குவதிலும் எவர்களுக்கு நிகரானவன் ஒருவனுமில்லையோ அவர்களுடைய மனத்துக்கினியமனைவியான என்னை ஸூதபுத்ரன் காலால்உதைத்தான். தனமுதலானவைகளால் பூமியில் எவர்களுக்குஒப்பானமனிதன் ஒருவனுமில்லையோ அவர்களுடைய மனத்துக்கினியமனைவியான என்னை ஸூதபுத்ரன் காலாலுதைத்தான். வேந்தரே! பூமிக்குநாதராயிருப்பவரே! ப்ராஜைகளுக்குநன்மையைப்பயப்பதில் விருப்பமுள்ளவரானநீர் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே உம்முடையஎதிரில் அந்தக்கீசகனால் இப்பொழுது அதிகமாக நான்அடிக்கப்பட்டேன். எவர்கள், தம்மைச்சரணமாகவந்து அடைந்தவர்களுக்குச் சரணமாகின்றார்களோ அதிகபலமுள்ள அவர்கள், இப்பொழுது உலகத்தில் எங்கு மறைந்து ஸஞ்சரிக்கின்றார்கள்? பலசாலிகளும் அதிகதேஜஸையுடையவர்களுமான அவர்கள் சக்தியற்றவர்கள்போல, ஸூதபுத்ரனால் துன்பமடைகின்றவளும் கற்புடையவளுமான காதலியைப்பார்த்து எவ்வாறு பொறுக்கின்றார்கள்? அவர்களுடைய கோபமெங்கே? அவர்களுடைய அவ்விதவீர்யமும் பலமுமெங்கே? அவர்கள் துராத்மாவான கீசகனால் ஹிம்ஸிக்கப்படுகின்ற தங்களுடைய.மனைவியை (இந்தஆபத்தினின்று மீட்டுக்) கைப்பற்றுவதற்கு விரும்புகிறார்களில்லையே. குற்றமற்றவளும் துன்பஞ்செய்யப்படுகின்றவளுமான என்னை, எவன் பார்த்துப்பொறுத்துகொண்டிருக்கிறானோ அப்படிப்பட்ட தர்மதூஷகனான விராடன்விஷயத்தில் என்னாலும் என்னசெய்யமுடியும்? எவன் ஸபையில்வீற்றிருக்கும்பொழுது தர்மம அதர்மத்தால் அடிக்கப்படுமோ, அந்தத்தர்மமானது எவர்களால் அவ்விதஅதர்மத்தினிடத்திலிருந்து விலக்கப்படவில்லையோ அவனும் அச்சபையிலுள்ளவர்கள்எல்லாரும் அடிக்கப்படுகிறார்கள். எந்தஸபையில் எல்லாரும் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே, தர்மம் அதர்மத்தினாலும் ஸத்யம் அஸத்யத்தினாலும் அடிக்கப்படுகின்றனவோ அந்தஸபையிலுள்ள எல்லாரும் அடிக்கப்படுகிறார்கள்" என்றுகூறினாள்.

பிறகு, அந்தஸபையிலுள்ளவர்களனைவர்களும் அந்த ஸைரந்த்ரியினுடைய உருக்கமான அந்தப்புலம்பலைக்கேட்டு, அவளைக் கொண்டாடினார்கள்; 'நல்லது! நல்லது!' என்றும் சொன்னார்கள்; கீசகனையும் நிந்தித்தார்கள். சிலர் க்ருஷ்ணையைப் புகழ்ந்தார்கள். சிலர் கீசகனை நிந்தித்தார்கள். சிலர் அரசனை நிந்தித்தார்கள். சிலமனிதர்கள் அந்தஸுதேஷ்ணுதேவியை நிந்தித்தார்கள். ஸபையிலிருந்தவர்கள், "எந்தமனிதனுக்கு அழகிய எல்லா அங்கங்களுமுடையவளும் நீண்டகண்களையுடையவளுமான இவள் பார்யையோ அவனன்றோ பெரும்பேறுபெற்றவன். அவன் ஒருபொழுதும் துன்பத்துக்கு ஆளாகான். எவளுடையசரீரமானது மங்களகரமாகவும் புஷ்டியுள்ளதாகவுமிருக்கிறதோ, எவளுடையமுகம் தாமரைமலரையும் நடை அன்னப்பறவையையும் சிரிப்பு குருக்கத்திப்பூவையும் கீழ்ப்படுத்துகின்றனவோ அப்படிப்பட்டஇவள் காலாலுதைக்கத்தக்கவளல்லள். எவளுடைய முப்பத்திரண்டுபற்களும் வெண்மைநிறமுள்ளவைகளும் சதைப்பற்றுள்ளவைகளுமாயிருக்கின்றனவோ, கூந்தல்கள் பளபளப்பாயும் மெதுவாயுமிருக்கின்றனவோ அப்படிப்பட்டஇவள் காலால் உதைக்கத்தக்கவளல்லள். எவளுடைய உள்ளங்கையில் (ரேகைவடிவங்களான) தாமரைமலரும்சக்ரமும் கொடியும் சங்கும் உப்பரிகையும் சுறுமீனும்இருக்கின்றனவோ அவ்விதமான இவள் காலுதையை அடையத்தகுந்தவளல்லள். எவளுக்கு வலமாகச்சுழன்ற நான்கு [1]ரோமாவர்த்தங்கள் இருக்கின்றனவோ, எவளுக்குச் சரீரமானது (குறுகியும் உயர்ந்துமில்லாமல்) ஸமமாகவும் மங்களகரமாகவும் பளபளப்பாகவுமிருக்கிறதோ அவள் காலுதையைஅடையத்தகுந்தவளல்லள். இடைவெளியில்லாத கைகால்களைஉடையவளும் இடைவெளியில்லாத பற்களையுடையவளுமாக எவள்இருக்கிறாளோ தாமரையிதழ்போன்ற கண்ணையுடையவளான அந்தப்பெண்ணானவள் எவ்வாறு காலுதையை அடையத்தகுந்தவளாவள்? லக்ஷணங்களுள்ளவளும் பூர்ணசந்த்ரனுக்கொப்பான முகமுள்ளவளும் திவ்யஸௌந்தர்யமுடையவளும் அழகியமுகமுள்ளவளுமான அப்படிப்பட்ட இவள் காலாலுதைபடுதற்குத் தகாதவள். தேவஸ்த்ரீபோல அழகில்சிறந்தவளும் இந்த்ரனுடையதேவிபோல மங்களகரியும் ரூபத்தினுடையஒற்றுமையினால் அப்ஸரஸ்த்ரீபோன்றவளுமான இவள் காலால் உதைபடத்தகுந்தவளல்லள்" என்று அங்கு ஸபையிலுள்ளவர்கள் க்ருஷ்ணையைப்பார்த்துப் புகழ்ந்தார்கள். அப்பொழுது ஒருவிஷயத்தைச்சொல்ல எண்ணங்கொண்டி

---

[1] மயிர்ச்சுழிகள்.

ருக்கின்ற யுதிஷ்டிரரைப்பார்த்து அழகியஇடையையுடையவளான அந்தத்ரௌபதியானவள் பெருமூச்சுவிட்டுத் தலைகுனிந்து பூமியைப் பார்த்துக்கொண்டு பேசாமல் நின்றாள். யுதிஷ்டிரருடைய நெற்றியில் கோபத்தால் வேர்வைஉண்டாயிற்று. பிறகு ஸந்யாஸிவேஷந்தரித்த தர்மபுத்ரர் ஸைரந்த்ரிவேஷந்தரித்திருக்கின்ற தமக்கு ப்ரியமஹிஷியான க்ருஷ்ணையைப்பார்த்து அங்கு அரசனுடையபக்கத்தில் (சில வாக்யங்களை) உரைக்கலானார்.

"ஏ! ஸைரந்த்ரீ! நீபயப்படாதே. தர்மசீலரும் பரலோகபயமுள்ளவரும் ஸத்யத்திலும் தர்மமார்க்கத்திலும் நிலைபெற்றவருமான இந்தவிராடராஜர் உன்னைரக்ஷியாததகாரணத்தால், நீஸுதேஷ்ணையினுடையவாஸஸ்தானத்தைக் குறித்துச்செல். வீரபத்னிகள் பர்த்தாவை அனுஸரித்துத் துன்பத்தை அடைவிக்கப்படுகிறார்கள். பதிசுச்ரூஷையினால் துன்பமடைந்திருக்கின்ற ஸ்த்ரீகள் நிச்சயமாகப் பதிலோகத்தை ஜயிக்கிறார்கள். உன் கணவர்கள், கோபத்துக்கு இதுகாலமன்றென நினைக்கிறார்களென்று நான்எண்ணுகிறேன். ஆதலால், ஸூர்யனுடைய தேஜஸ்போன்ற தேஜஸையுடையவர்களான கந்தர்வர்கள் உன்னைப்பாதுகாப்பதற்கு எதிரில் விரைவாகஓடிவருகிறார்களில்லை. அழகிய கூந்தல்நுனியையுடையவளே! தர்மசாஸ்த்ரத்தை அனுஸரித்துக் குலஸ்த்ரீகளுடைய தர்மமானது எவ்வாறு காணப்படுகிறதோ அப்படிப்பட்ட மோக்ஷதர்மங்களை ஆச்ரயித்திருக்கின்ற கதைகளை நீ கேட்டிருக்கலாம். ஸ்த்ரீகளுக்கு ஒருவிதயஜ்ஞமுமில்லை; ச்ராத்தமுமில்லை; உபவாஸமுமில்லை; பர்த்தாவினிடத்தில் செய்யப்படுகிற சுச்ரூஷையே ஸ்வர்க்கத்திற்குக் காரணமாகின்றது. ஸ்த்ரீகளை இளமைப்பருவத்தில் பிதா ரக்ஷிக்கிறான்; யௌவனகாலத்தில் பர்த்தா ரக்ஷிக்கிறான்; மூப்புக்காலத்தில் புத்ரன் பாதுகாக்கிறான். ஸ்த்ரீகள் (ஒருபொழுதும்) ஸ்வாதந்த்ர்யம் பெறுவதற்குத் தகுந்தவர்களல்லர். பயந்தவளே! மனைவிகள் பகைவர்களால் அனேகக்லேசங்களால் அவமதிக்கப்பட்டாலும் பர்த்தாவினிடத்திலிருந்து உண்டாகிற பயத்தினால் ஒருபொழுதும் கோபம்பாராட்டுகிறதில்லை. (பர்த்தாவைத்தவிர) வேறிடத்தில் மனத்தைவைக்காதவர்களும் சுத்தர்களுமானஸ்த்ரீகள் புண்யலோகத்தை நிச்சயம் ஜயிக்கிறார்கள். உன்னுடையபதிகள் நிச்சயமாகக் கோபம்பாராட்டுவதற்குத் தகுந்த காலமென்று நினைக்கவில்லை. கோபங்கொண்டவர்களான உன்னுடையபர்த்தாக்களை இந்த்ரன்கூட எதிர்க்கமாட்டான். ஆதலால், [1]காம

[1] தங்களிஷ்டப்படி ரூபத்தைத்தரிக்கும் ஸ்வபாவமுடையவர்கள்.

ரூபிகளான கந்தர்வர்கள் உன்னை அடையவில்லை. நீண்டகண்ணையுடையவளே! உன்னால் ஏதாவது ஒரு சபதமானது செய்யப்பட்டிருந்தால் அதை நீ நினைத்துக்கொள். பொறுமையை ஸ்வபாவமாகக்கொண்டவளே! பொறுமையானது ஸர்வோத்தமமான தர்மம். பொறுமையே தர்மம். பொறுமையே ஸத்யம். பொறுமையே தானம். பொறுமையே தவம். பொறுமையுள்ளவர்களுக்கு இவ்வுலகம்உண்டு. பொறுமையுள்ளவர்களுக்குப் பரலோகமும்உண்டு. [1]இரண்டுபாகங்களுடையதும் [2]பன்னிரண்டு அங்கங்களையுடையதும் [3]இருபத்துநான்கு பிரிவுகளுடையதும் [4]முன்னூற்றறுபத்தாறு ஆரக்கால்களுடையதுமான (ஸம்வத்ஸரசக்ரமானது) ஒருமாஸத்தினால் குறைவுள்ளதாகஇருக்கையில் எவன்தான் பொறுமையில்லாமல் இருப்பான்? ஓ! ஸைரந்த்ரி! நீ போ. கந்தர்வர்கள் உனக்கு ப்ரியத்தைச்செய்யப்போகிறார்கள். எவனால் உனக்கு அப்ரியமானகார்யஞ்செய்யப்பட்டதோ (அவனை ஸம்ஹரித்து) அவர்கள் உன் துக்கத்தைப் போக்கப்போகின்றார்கள்" என்றார். இவ்வாறு சொல்லியும், நிற்கின்ற அவளைப்பார்த்து, பின்னும் தர்மபுத்ரர், "கல்யாணி! ராஜஸபையில் சொக்கட்டானாடுகின்றவர்களுக்கு நீ இடையூற்றை உண்டுபண்ணுகிறாய். அழகியஇடையையுடையவளே! ஆதலால், நீ எனக்கு நட்டுவஸ்த்ரீபோலத் தோன்றுகிறாய்" என்று கூறினார். பர்த்தாவினால் இவ்வாறுரைக்கப்பட்ட அவள் தர்மபுத்ரரை நன்றாகப் பார்த்து, "கற்றறிந்தவரே! உம்மால் உண்மைகூறப்பட்டது. எவர்களுள் மூத்தவன் சூதாடுவதில் ஸாமர்த்யமுடையவனோ அவர்களுள் ஒருநட்டுவனுடைய நட்டுவச்சியாக என்னை நீர் அறிந்துகொள்ளும்" என்றுசொன்னாள். [5]சிறந்தஇடையுள்ளவளும் யானைத்துதிக்கைபோன்ற துடைகளுள்ளவளும் மான்குட்டியின் கண்கள்போன்ற கண்களுள்ளவளும் இடைவெளியில்லாத கொங்கைகளுள்ளவளும் புழுதியால் பூசப்பட்ட எல்லா அங்கங்களுமுள்ளவளும் கறுத்தமேகங்களால் சூழப்பட்ட சந்த்ரனுடைய ஒளிபோன்றவளுமான த்ரௌபதியானவள் இவ்வாறு சொல்லிவிட்டு, பர்த்தாவின் ஆஜ்ஞையை அறிந்து அழகிய தன்முகத்தைத்துடைத்து ரக்தத்தால்நனைக்கப்பட்டனவும் அவிழ்த்துவிடப்பட்டனவுமான தலைமயிர்களை ஒன்றுசேர்த்துக்கொண்டு (ஸபையினின்றும்) நீங்கிப்

1 தக்ஷிணாயனம்; உத்தராயணம்.

2 பன்னிரண்டுமாஸங்கள். 3 இருபத்துநான்குபக்ஷங்கள்.

4 வேறுபாடம். முன்னூற்று அறுபத்துஆறு அஹோராத்ரங்கள்.

5 மூலம் வேறு.

பெண்யானைபோலப் புறப்பட்டாள். எவள்நிமித்தம் பாண்டவர்கள் உயிரையும் இழப்பார்களோ அந்தக்ருஷ்ணையை அவ்விதநிலைமை யடைந்தவளாகக்கண்டும், தர்மிஷ்டர்களான அவர்கள் பொறுமை யுடன் பெரியகடலானது கரையைக்கடவாததுபோல ப்ரதிஜ்ஞையைக் கடவாதிருந்தார்கள். பிறகு, அழகிய எல்லா அங்கங்களையுமுடையவ ளான அவள் அதிகமாக நடுக்கமுற்று ஸுதேஷ்ணையினுடைய இருப் பிடத்தைஅடைந்து அழுதுகொண்டே அவளுக்கெதிரில் நின்றாள். விராடபத்நியானவள், அவளைப்பார்த்து, கபடமாக, "ஸைரந்த்ரி! தாமரைமலருக்கொப்பானதும் அழகியபற்களும் உதடுகளும் கண்க ளும் மூக்குமுடையதும் பூர்ணசந்த்ரனுக்குஒப்பான ஒளிபொருந்திய தும் கோவைப்பழம்போன்ற உதடுகளையுடையதும் கறுத்த இரண்டு கருவிழிகளால் மிக்கஅழகிய காந்திபொருந்தியதுமான உன்னுடைய முகமானது, அழுகின்ற உன்னால் துடைக்கப்பட்ட கண்ணீரோடு கூடியதாக நேரானகண்களால் ஏன் ஜலத்தைவடிக்கின்றது? அழகிய இடையையுடையவளே! எவன் உன்னைத் துன்பஞ்செய்தான்? கல் யாணி! நீ ஏன்புலம்புகிறாய்? புத்ரர்களோடும்பந்துக்களோடுங்கூடிய மனைவிகளினின்றும் எவன் பிரிவைஅடைகிறான்? அரசர் இப்பொழுது கோபங்கொண்டு எவனுக்கு மரணதண்டனை விதிக்கப்போகிறார்? சொல். உனக்கு எவ்விதமானசெய்கை ப்ரியமானது? யாரை நான் விட வேண்டும்? யாரை நான் கொல்லவேண்டும்?" என்று வினவினாள். க்ருஷ்ணையானவள் அவளைப்பார்த்துப் பெருமூச்சுவிட்டுக்கொண்டு, "தெரிந்திருந்தும் ஏன் என்னைக்கேட்கிறாய்? ப்ராதாவான கீசகனி டம் நீயே என்னை அனுப்பிவிட்டு ஏன் இவ்வாறு பிதற்றுகிறாய்? கீசகன், மத்யத்தை வாங்கிவருவதற்காக இவ்விடமிருந்து போயிருக் கின்றஎன்னை அரசர் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே அந்த ஸபையில், ஜனங்களில்லாதகாட்டில் அடிப்பதுபோல அடித்தான்" என்று கூறினாள். ஸுதேஷ்ணை, "அழகியதந்தங்களும் உதடுகளு முடையவளே! எவன் தர்மத்தையுடையவளானஉன்னை உல்லங்கனஞ் செய்தானோ, எவன், காமத்தினால் கவரப்பட்டமனமுள்ளவனுகக் கிடைக்கத்தகாதவளான உன்னை அவமதிக்கிறானோ அப்படிப்பட்ட அந்தக்கீசகன் எனக்கு ஸஹோதரனாயிருந்தாலும் நீ விரும்பினால் அவனைக் கொல்விப்பேன்; நிச்சயம்" என்றாள். த்ரௌபதி, "(ஓ! ஸுதேஷ்ணையே!) எவர்களுக்கு அந்தக்கீசகன் அபராதத்தைச் செய் தானோ, அவர்கள் இப்பொழுதே அவனைக் கொல்லப்போகிறார்கள். இன்றைக்கோ, அல்லது நாளைக்கோ, அவன் பரலோகத்தை அடை

யப்போகிறனென்று எண்ணுகிறேன். நீ சீக்ரமாக இப்பொழுதே உன்ப்ராதாவான கீசகனுக்கு ஜீவச்ராத்தம்கொடு. அவனை மிக்க களிப்புள்ளவனாகச்செய். அவன் உயிரைத் தரிக்கப்போகிறதில்லை யென்று நான் எண்ணுகிறேன். என்னுடைய கணவர்களும் தார்மிகர்களுமான அந்தஐவர்களுள்ஒருவர் எவராலும் எவ்விதத்திலும் ஜயிக்கமுடியாதவர்; பூமியில் வலிமையில் நிகரில்லாதவர். அவர் கோபித்துக்கொள்வாரானால் இந்த ஓர்இராவிலேயே இவ்வுலகமனைத்தையும் மனுஷ்யர்களற்றதாகச் செய்வார். காமரூபியான அந்தக்கந்தர்வர் இதுவரையில் கோபங்கொள்ளவில்லை. கீசகன் என்னைக் காலால் உதைத்ததை அவர் அறியும்க்ஷணத்திலேயே, கெட்டஎண்ணமுடையவனும் பாபியுமானகீசகன் புத்ரர்களுடனும் ஸஹோதரர்களுடனும் பந்துக்களுடனும்சேர்ந்து, பாபத்தொழிலைச் செய்தவன்போல நிச்சயமாக நாசமடையப்போகிறான். மேலும், ஸமர்த்தர்களான புருஷச்ரேஷ்டர்களால், 'ஒருவன் காலபாசத்துக்கு வசப்பட்டுப் பாபத்தைச்செய்கிறான். இழிவான அவனுடைய அவ்வித அபராதத்தினால் அவனுடையவம்சமே அழிந்துவிடுகிறது' என்று இவ்விஷயம் முந்தியே உரைக்கப்பட்டிருக்கின்றது" எனமொழிந்தாள்.

ஸைரந்த்ரியானவள் ஸுதேஷ்ணையைப்பார்த்து இவ்வாறு சொல்லிவிட்டுத் துக்கத்தால் மதிமயக்கங்கொண்டு, கீசகனைக் கொல்வதற்கு வ்ரததீக்ஷையை அடைந்தாள். த்ரௌபதியானவள் ஸ்த்ரீகளால் வேண்டப்பட்டவளாயிருந்தும் ஸுதேஷ்ணையினால் நன்குமதிக்கப்பட்டவளாயிருந்தும் ஸ்நானமும் செய்யவில்லை; போஜனமும் செய்யவில்லை; புழுதியையும் துடைக்கவில்லை; ரக்தத்தால் நனைக்கப்பட்ட முகத்தையுடையவளாகவும் கசக்கப்பட்டகண்களையுடையவளாகவுமேயிருந்தாள். அவ்வாறு துக்கத்தால் மிகுந்த தாபத்தையடைந்தவளும் மிகஅழுதுகொண்டிருப்பவளுமான அந்தத்ரௌபதியைப்பார்த்து எல்லாஸ்த்ரீகளும் ஸம்பவிக்கப்போகின்ற கீசகனுடைய வதத்தை மனத்தினுள் புகழ்ந்தார்கள்" என்றுசொல்லினர்.

இருபத்தோராவது அத்யாயம்.

கீசகவதபர்வம். (தொடர்ச்சி.)

(கீசகனுடைய உத்பத்திமுதலான வரலாறு.)

ஜனமேஜயர், "(வைசம்பாயனரே!) பதிவ்ரதையும் மஹாபாக்யமுள்ளவளும் ஸ்த்ரீகளுள்உத்தமியுமான த்ரௌபதியானவள் கீசக

ளுல் காலாலுதைக்கப்பட்டு அதிகதுக்கத்தை அடைந்துவிட்டாள். அந்தோ! அவள் முன்பு பலாத்காரமாக அபஹரிக்கப்பட்டபொழுது தன்கணவர்களுடைய ஸஹோதரியும் மங்களகரியுமான துச்சலையை நினைத்து ஸிந்துராஜனைச் சபியாமலிருந்தாள். மஹாபாக்யவதியான க்ருஷ்ணையானவள் துராத்மாவான கீசகனால் பிடிக்கப்பட்டும் காலால் உதைக்கப்பட்டுமிருந்தும் ஏன் அந்தஸமயத்தில் அவனைச் சபியாமலிருந்தாள்? தேஜஸினுடையராசியாயிருப்பவளும் தர்மங்களை அறிந்தவளும் உண்மையைப்பேசுகின்றவளுமான அந்தத்தேவியானவள் கூந்தலில்தொட்டு இழுக்கப்பட்டபோது சக்தியற்றவள்போல ஏன் பொறுத்துக்கொண்டிருந்தாள்? உத்தமரே! இதற்குக்காரணம் சிறிதாயிராது. நான் இதனைக் கேட்கவிரும்புகிறேன். க்ருஷ்ணையினுடைய துயரமானது என்மனத்துக்கு மிக்கவருத்தத்தை உண்டு பண்ணுகின்றது. முனிவரே! அந்தத்துஷ்டனான கீசகன், எவனுடையவம்சத்தில் பிறந்தவன்? மத்ஸ்யராஜனுடைய மைத்துனனான கீசகன் எவ்வாறு பலத்தால் மேன்மைபெற்றவனானான்? ஸூதபுத்ரனான கீசகனால் உதைக்கப்பட்ட அந்த அன்புடையமனைவியைப் பார்த்தும்கூட அந்தவீரர்கள் ஏன் கலங்காமலிருந்தார்கள்? அவனைப்பற்றி என்னசெய்தார்கள்?" என்றுவினவ, வைசம்பாயனர் சொல்லலானார்.

"ராஜரே! உம்மால்வினவப்பட்ட இந்தக்கேள்வியானது குருவம்சத்தில்பிறந்தவர்களுக்குக் கீர்த்தியைப் பெருகச்செய்யக்கூடியது. நான், இவைஎல்லாவற்றையும் இப்பொழுது விரிவாகச் சொல்லப் போகிறேன். ராஜரே! ப்ராம்மணஸ்த்ரீயினிடத்தில் க்ஷத்ரியனுக்குப்பிறந்தவன் ஸூதனென்று சொல்லப்படுகிறான். ப்ரதிலோம ஸாங்கர்யத்தினாலுண்டாகிறவர்களுள் அவன் ஒருவனே த்விஜனென்று சொல்லப்படுகிறான். இருபிறப்புடையவர்களுக்குரிய செய்கையுள்ளவனான அவனை ரதகாரனென்றும் க்ஷத்ரியனைக்காட்டிலும் கீழானவனென்றும் வைச்யனைக்காட்டிலும் மேலானவனென்றும் சொல்லுகிறார்கள். முன்பு ராஜாக்களால் ஸூதனோடு ஸம்பந்தம்செய்யப்பட்டிருக்கின்றது. அவ்விதமான ப்ரதிலோமஸாங்கர்யத்தினால் (ஸூதஜாதியைச்சேர்ந்தவனால்) 'ராஜா' என்கிறபெயரானது அடையப்படவில்லை. அரசரே! முற்காலத்தில் ஸூதவம்சத்தில்பிறந்தவனால் எந்தத்தேசமானது உண்மையாக அடையப்பட்டதோ அந்தத்தேசமானது ஸூதர்களுடையபெயரினால் ஸூததேசமென்று பெயர்பெற்றது. ராஜபுத்ரியினிடத்தில்பிறந்தவனும் கேகயனென்று ப்ரஸித்தி

---

[1] கலப்பு.

பெற்றவனுமான ஓர் அரசன் அந்தஸூதர்களுக்குத் தலைவனானான். அவன் ஸாரத்யத்தில்ஒப்பற்றவனானான். கௌரவர்களுள்சிறந்தவரே! பாரதரே! அவனுக்கு மாலவியினிடத்தில் அப்பொழுது கீசகர்களென்று ப்ரஸித்திபெற்ற நூற்றுறுபுத்ரர்கள்உண்டானார்கள். பாபுவே! பலத்தினால்சிறந்தவனும எல்லாரையும்ஜயித்தவனும் பலத்தினால்அடங்காத மதங்கொண்டவனுமான கீசகனென்பவன் அவர்களுள் மூத்தவன். அந்தக்கீசகனுள்பட நூற்றுறுபிள்ளைகள். குருகுலத்தில்பிறந்தவரே! (அந்த) மாலவிக்கே இளையஸஹோதரி ஒருத்தி இருந்தாள். அவளிடத்தில் கேகயராஜனுக்கு ஸுதேஷ்ணை என்கிற ஒருபெண் உண்டானாள். அவளைக் கேகயராஜன் மத்ஸ்யராஜனான விராடனுக்கு ஸந்தோஷத்தோடு கொடுத்தான். கோஸலராஜகுமாரியும் சுவேதனுக்குத்தாயுமான ஸுரதையானவள் விண்ணுலகமேகியபின் சுவேதனும்காணுமற்போக, சங்கனும மாமனுடையவீட்டை அடையவே, விராடராஜன் ஸுதேஷ்ணையை மனைவியாகஅடைந்து துயரத்தை அகற்றினான். மஹாராஜரே! கேகயராஜகுமாரியான ஸுதேஷ்ணாதேவியும் குலத்தினுடைய அபிவ்ருத்திக்காக விராடராஜனிடத்தினின்று உத்தரனையும உத்தரையையும பெற்றாள். ராஜரே! கீசகன் சிறியதாயின்பெண்ணும இகழத்தகாதவளுமான அந்த ஸுதேஷ்ணைக்கு எப்பொழுதும் அன்புடன் பணிவிடைசெய்துகொண்டு விராடனிடத்தில் ஸுகமாக வஸித்துவந்தான். பராக்ரமசாலிகளான அந்தக்கீசகனுடைய்ஸஹோதரர்களனைவர்களும் அந்தக்கீசகனை அனுஸரித்து மிக்கஸந்தோஷத்தோடு விராடனுடையபடைகளையும் பொக்கசத்தையும வ்ருத்திசெய்தார்கள். ராஜரே! காலேயர்களென்னும் பெயர்பெற்ற அந்ததைத்யர்கள் பூமியில பெருமபான்மையாக ப்ரஸித்திபெற்ற கீசகர்களாகத்தோன்றினார்கள். (அந்த அஸுரர்களுள்) பாணனென்பவன் ஜ்யேஷ்டனாயிருந்தான். அவனே எல்லாஅஸ்த்ரங்களையுமுடையவனும பலசாலியும் பயங்கரமானபராக்ரமமுள்ளவனும் (நீதி) வரம்பைக்கடந்தவனும் மனிதர்களுக்குப் பயத்தைக்கொடுப்பவனுமான கீசகனாகத் தோன்றினான். பலத்தினால் அதிகமதங்கொண்ட அந்தக்கீசகனைத் (துணையாகப்)பெற்று விராடராஜன் முற்காலத்தில் இந்த்ரன் அஸுரர்களைஜயித்ததும்போலப் பகைவர்களனைவர்களையும் ஜயித்தான். அவன் மேகலம், த்ரிகர்த்தம், தசார்ணம், கசேருகம், மாலவம், யவனம், ஸிலிந்தம், காசி, கோஸலம், காதம், நிஷித்தம், சிவம், முசுலகம், புளிந்தம், களிங்கம், தங்கணம், பரதங்கணம்என்கிற நாடுகளையும் ஜயித்தான். பற்பல

தேசாதிபதிகளான மற்றும் அனேகசூரர்களும் கீசகனால் யுத்தத்தில் முறிய அடிக்கப்பட்டுப் பத்துத்திக்குக்களிலும் ஓடிவிட்டார்கள். விராடன் இவ்விதமானவீர்யமுள்ளவனும் பலத்தில் பதினாயிரம்யானைக்கொப்பானவனுமான அந்தக்கீசகனை அந்தத்தருணத்தில் தன்னுடைய ஸேனாபதியாகநியமித்தான். தசரதகுமாரரான ராமருக்கொப்பான விராடராஜனுடைய பத்துஸஹோதரர்களும் அதிகபலசாலிகளான அந்தக்கீசகர்களை அனுஸரித்துவந்தார்கள். பயங்கரனான அந்தக் கீசகன் இவ்விதமான வலிமையுடையவன். மற்றக்கீசகர்களும் அவ்விதமானவலிமையுடையவர்களாகவே யிருந்தார்கள். அரசனுடைய மைத்துனர்களும் மிக்கவலிமையுள்ளவர்களுமான அந்தக்கீசகர்கள் விராடனுக்கு நன்மையைஉண்டாக்குவதில் விருப்பமுள்ளவர்களாயிருந்தார்கள். இவ்விதமாகக் கீசகனுடையபராக்ரமம் முழுதும் உமக்குச் சொன்னேன். த்ரௌபதியானவள், அந்தக்கீசகனைச் சபியாததற்குக் காரணத்தையும் சொல்லுகிறேன்; என்னிடத்தினின்று கேளும். ரிஷிகள் கோபத்தினின்றும் தவத்தைப்பாதுகாக்கிறார்கள்; சபிக்கிறதில்லை. அதை உள்ளபடி அறிந்த த்ரௌபதியானவள், அவனைச் சபிக்கவில்லை. பொறுமையே தர்மம். பொறுமையே தானம். பொறுமையே யஜ்ஞம். பொறுமையே தவம். பொறுமையே ஸத்யம். பொறுமையே நல்லொழுக்கம். எல்லாம் பொறுமையேஎன்று வேதம்கூறுகிறது. பொறுமையுள்ளவர்களுக்கே இவ்வுலகம். பொறுமையுள்ளவர்களுக்கே பரலோகம். இவையனைத்தையும்அறிந்தவளான அந்தத்ரௌபதியானவள் பொறுமையைக்கைக்கொண்டாள். பரதகுலத்திலுதித்தவரே! விசாலமானகண்களையுடையவளும் பதிவ்ரதையுமான அந்தத்ரௌபதியானவள் வல்லமையுள்ளவளாயிருந்தும் பொறுமையுள்ளவர்களும் தர்மத்தைஅனுஷ்டிக்கின்றவர்களுமான தன்கணவர்களுடைய கருத்தைஅறிந்து அந்தக்கீசகனைச் சபியாமலிருந்தாள். அந்தப்பாண்டவர்களனைவர்களும் துக்கமுற்றவளான த்ரௌபதியைக்கண்டு வெட்கமடைந்து அப்பொழுது கோபத்தீயினால் எரிக்கப்பட்டார்கள். பிறகு, கரையினால் மஹாஸமுத்ரம் தடுக்கப்படுவதுபோலத் தர்மபுத்ரரால் தடுக்கப்பட்டவனும் சிறந்த கைகளுள்ளவனுமான பீமன் கீசகனைக் கொல்லக்கருதிக் கோபத்தை மனத்திலடக்கி இடைவிடாமல் பெருமூச்சுவிட்டுக்கொண்டு அப்பொழுது மடைப்பள்ளியில் அன்றிரவு அதிக வருத்தத்தோடு படுத்திருந்தான்.

இருபத்திரண்டாவது அத்யாயம்.

கீசகவதபர்வம். (தொடர்ச்சி.)

(த்ரௌபதி இரவில் பீமனை அடைந்து கீசகனைக்கொல்லும்படி வற்புறுத்தியதும், யுதிஷ்டிரர்முதலானவர்களைக் குறித்துத் துக்கித்ததும்.)

பிறகு, ஸூதபுத்ரனால் உதைக்கப்பட்டவளும் ராஜகுமாரியும் மிகுந்ததுன்பத்தையடைந்தவளும் கோபமுள்ளவளும் த்ருபதராஜ குமாரியுமாகிய அந்தக்ருஷ்ணையானவள், ஸூதபுத்ரனுடைய நாசத்தைச்செய்யவேண்டுமென்று எண்ணங்கொண்டு அப்பொழுது தன் இருப்பிடத்துக்கு வந்துசேர்ந்தாள். மெல்லியஇடையுடையவளான அந்தக்ருஷ்ணையானவள், முறைப்படி சுத்திசெய்துகொண்டும் தன் அங்கங்களையும் இரண்டுஆடைகளையும் ஜலத்தால் நன்றாக அலம்பிக்கொண்டும் அழுதுகொண்டும் அவ்வித துக்கத்தினுடையமுடிவைச் சிந்தித்தாள். அந்தத்ரௌபதியானவள், "நான் என்னசெய்வேன். நான் எவ்விடம்செல்வேன். என்னுடையகார்யம் எவ்வாறுநிறைவேறும். பீமஸேனனைத்தவிர வேறுஒருவர் இப்பொழுது என்மனத்தினால் விரும்பப்பட்டிருக்கிற விருப்பத்தை நிறைவேற்றமாட்டார்" என்று இவ்வாறு ஆலோசித்து மனத்தினால் அந்தப்பீமனை அடைந்தாள். இரவில் ஊரடங்கி நிச்சப்தமாயிருக்கையில், மனத்தில் அதிக துக்கத்தையுடையவளும் நல்லமனத்தையுடையவளும் நாதனுடையவளும் பதிவ்ரதையுமான அந்தத்ரௌபதியானவள் தன்நாதனைவிரும்பிக்கொண்டு தன்படுக்கையைவிட்டுவிட்டு வேகமாகச்சென்றாள். வெண்ணிறமுள்ள சிரிப்புடையவளான அந்தப்பாஞ்சாலியானவள், மடைப்பள்ளியிற்சென்று, பெண்யானையானது பெரிய ஆண்யானையை அடைவதுபோலப் பீமஸேனனை அடைந்தாள். [1]முற்றிலும் வெண்மைநிறமுள்ளதும் காட்டில்வளர்ந்ததும் மூன்றுவயதுள்ளதுமான ஒருபசுவானது கானகத்தில் பெருகிவருகின்ற மலையருவியினருகில் உறங்குகின்ற பெரிதான ஒருவ்ருஷபத்தை விருப்பத்துடன் அடைவதுபோலவும், பெண்சிங்கமானது நன்றாக உறங்கிக்கொண்டிருக்கின்ற ஆண்சிங்கத்தை அடைவதுபோலவும், பாஞ்சாலியானவள் பீமஸேனனை அடைந்து, கோமதிநதிக்கரையில் மிக வளர்ந்திருக்கின்ற ஸாலவ்ருக்ஷத்தைப் பூத்திருக்கின்ற ஒருகொடி சுற்றுவது

1 'ஸர்வச்வேதா' என்பதுமூலம்; 'பெண்கொக்கு' என்பதுபழையஉரை.

போல, தூங்கிக்கொண்டிருக்கின்ற தன்பதியை நீட்டப்பட்டதன் இருகைகளாலும் நன்றாகக்கட்டிக்கொண்டாள். வேறொரு மஹாலக்ஷ்மிபோன்ற த்ரௌபதியானவள் ஸமுத்ரத்தில் யோகநித்ரைசெய்துகொண்டிருக்கிற விஷ்ணுவை எழுப்புவதுபோல நித்ரைசெய்துகொண்டிருக்கிற மஹோத்ஸாஹத்துடன்கூடிய தன்னுடையகணவனை இரண்டுகைகளாலும் தொட்டெழுப்பினாள். இந்த்ராணியானவள் தேவராஜனையும், பார்வதியானவள் சங்கரரையும், ஸாவித்ரியானவள் ப்ரம்மதேவரையும், தேவஸேனையானவள் ஸுப்ரம்மண்யரையும், பெண்யானையானது ஆண்யானையையும், மஹாலக்ஷ்மியானவள் தாமோதரரையும் எழுப்புவதுபோல, ஆசைபடத்தக்க உருவமுடையவளான த்ரௌபதியானவள் வெண்பட்டினால்வெளுத்திருக்கின்றபடுக்கையில்படுத்திருப்பவனும் வ்ருஷபத்தினுடைய கண்போன்றகண்ணையுடையவனும் திக்குயானைபோன்ற வடிவமுள்ளவனுமான பீமனை எழுப்பினாள். வீணைபோன்ற இனிமையானசொல்லையுடைய பாஞ்சாலியானவள் குருகுலத்தில்உதித்தவனான பாண்டுநந்தனனைப்பார்த்துப் (பின்வருமாறு) காந்தாரமென்னும் ஸ்வரத்துடன் வசனிக்கலானாள். "பீமஸேனரே! எழுந்திரும்; எழுந்திரும்; மரித்தவர்போல ஏன் படுத்துறங்குகிறீர்? உம்முடையமனைவியைத்தொட்டும் ஜீவித்திருக்கிற பாபியானகீசகன் சாவவில்லையன்றோ? அப்படிப்பட்டபாபியும் எனக்குப்பகைவனும் ஸேனாபதியுமானகீசகன் அவ்விதமான (கெட்ட) செய்கையைச்செய்து உயிரோடிருக்கையில் இப்பொழுது நீர்எப்படிஉறங்குகிறீர்"? என்றாள்.

ஸுகமாகத்தூங்கிக்கொண்டிருந்த குருசிரேஷ்டனான அந்தவ்ருகோதரன் அந்தச்சப்தத்தைக்கேட்டு அங்குசங்களால் (குத்தப்பட்ட) பெரியயானைபோல உணர்ச்சியையடைந்தான். அளவிடமுடியாத மனோதைர்யத்தையுடையவனான அந்தப்பீமன் எந்தப்படுக்கையில் படுத்துறங்குகையில் எழுப்பப்பட்டானோ மேல்விரிப்புடன்கூடின அந்தக்கட்டிலில் படுக்கையைவிட்டெழுந்திருந்து உட்கார்ந்தான். ஒருவராலும் அவமதிக்கமுடியாதவனும் குருகுலத்திலுதித்தவனுமான பீமன் பாஞ்சாலராஜனுடையகுலத்தை வ்ருத்தியடையச்செய்கின்றவளும் ராஜபுத்ரியும் ப்ரியமஹிஷியுமான அந்தப்பாஞ்சாலியைத் தன்பக்கத்தில் உட்காரச்செய்து, (பின்வருமாறு) வினவினான். "என்னகார்யத்துக்காக அதிவேகத்துடன் என்பக்கத்துக்கு வந்தாய்? இயற்கையான உன் (மேனியிலுள்ள) நிறமானது காணப்படவில்லை. நீ இளைத்தவளாகவும்காணப்படுகிறாய். வெளிப்படையானா

னும், அல்லதுமறைவானாலும், எல்லாவற்றையும் நீ சொல்லவேண்டும். நான் எல்லாவற்றையும்அறியும்படி முழுதும்சொல். ஸுகமோ துக்கமோ, சுபமோ அசுபமோ, செய்யத்தகாதகாரியமாயிருந்தா லும், (அப்படிப்பட்ட) காரியம் என்னால் செய்யப்பட்டுவிட்டதென்றே நீ நிச்சயமாக எண்ணிக்கொள். க்ருஷ்ணையே! எல்லாக்கார்யங்களி லும் நானே உன்னால்நம்பத்தகுந்தவன். நான் ஆபத்துக்களில் உன்னை அடிக்கடி விடுவிக்கிறேன். நீ எந்தக்கார்யம்சொல்லவிரும்புகிறாயோ அதை உன்னிஷ்டப்படி சீக்ரம்சொல்லிவிட்டு வேறொருவருக்கும் தெரியாமல் உன்படுக்கைக்கேசெல்" என்று கூறினன அந்த த்ரௌ பதியானவள் லஜ்ஜையைஅடைந்து பயந்து தலைகுனிந்து கண்ணீரி னால்கெடுக்கப்பட்டகண்களையுடையவளாகி யாதொரு மறுமொழியும் சொல்லாமலிருந்தாள். பிறகு, பயங்கரமானபராக்ரமமுள்ளவனும் சிறந்தபலமுடையவனும் பாண்டவர்களுள் முக்யனென்று எண்ணப் பட்டவனுமான பீமஸேனன், "ஸுந்தரி! அன்புடையவளே! யானை போன்ற நடையுள்ளவளே! யான் உனக்கு என்னப்ரியத்தைச் செய்யவேண்டும்? சொல்" என்றுவினவ, த்ரௌபதியானவள், "பீம ஸேனரே! எவளுக்கு யுதிஷ்டிரர்பர்த்தாவோ அவளுக்குத் துக்கப் படாமலிருப்பது எவ்வாறு ஸம்பவிக்கும்? நீர் துக்கங்களனைத்தையும் அறிந்துகொண்டே ஏன் என்னைக்கேட்கிறீர்? ப்ராதிகாமியானவன் என்னை அக்காலத்தில் தாஸியென்றுசொல்லி ஸபைக்குஅழைத்துவந் தது என்னுடையமர்மஸ்தானங்களைப்பிளக்கிறது. (மேலும்) ஹஸ் தினபட்டணத்தில் நான் வீட்டுக்குவிலக்காயிருக்கும்ஸமயத்தில் துச் சாஸனனால் மயிரில்பிடித்து ராஜஸபையில் (பலாத்காரமாக) இழுக்கப் பட்டேன். சிறந்தகைகளுள்ளவரே! பகைவர்களைவாட்டுகின்றவரே! அந்தஸபையில் கர்ணன்முதலான க்ஷத்ரியர்களாலும் துர்யோதன னாலும் மாமனார்களான பீஷ்மராலும் புத்திசாலியான விதுரராலும் த்ரோணராலும் க்ருபராலும் பார்க்கப்பட்டேன். பாண்டவரே! நீர் உயிரோடிருக்கும்பொழுதே அப்படிப்பட்ட நான் மாமனார்களுடைய மத்தியிலும் ப்ராதாக்களுடையமத்தியிலும் மயிரில்பிடித்து ஸபை யிலிழுக்கப்பட்டேன். பிறகு, விடப்பட்டு, [1]ராஜ்யத்திலிருந்து காட் டையும் அடைந்தேன். அப்படிப்பட்டநான் வழிநடையினால் மெலி ந்து ஆரண்யத்தில் கஷ்டத்துடன்வஸித்தேன்; ஜடாஸுரனால் நேர் ந்ததுன்பத்தினால் மிகவும் அதிகமானபயத்தையும் அடைந்தேன். ப்ரபுவே! த்ரௌபதியைத்தவிர என்னைப்போன்றே வேறு எந்தராஜ

[1] இங்கு ஒருசொல்விடப்பட்டது.

புத்ரி அதிகதுக்கத்தை அனுபவித்துக்கொண்டு ஜீவித்திருப்பாள்? வனவாஸஞ்செய்துகொண்டிருக்குங்காலத்தில் துராத்மாவான ஸைந்தவனால் நான் அபஹரிக்கப்பட்டேன். இரண்டாவதான இந்தவிபத்தை எவள் பொறுப்பதற்குச் சக்தியுள்ளவளாவாள்? பாண்டுகுமாரரானநீர் ஜீவித்திருக்கும்பொழுதே நான், மேடுபள்ளமாயிருக்கின்றவைகளும் ப்ரவேசிக்கமுடியாதவைகளும் துஷ்டம்ருகங்களால் சூழப்பட்டிருக்கின்றவைகளுமான இடங்களில் இரண்டுகால்களாலும் அலைந்துதிரிந்தேன்; அவ்விடங்களில் வனத்திலுண்டான கிழங்குகனிகளை ஆஹாரமாகக்கொண்டு பன்னிரண்டுவர்ஷகாலம் வாஸஞ்செய்து பதின்மூன்றாவதுவர்ஷத்தில் ஸுதேஷ்ணைக்கு ஊழியஞ்செய்பவளாக இந்தநகரத்தை வந்தடைந்தேன். ஸத்யத்தையும் தர்மத்தையும் ப்ரதானமாகக்கொண்டு நான் அன்யஸ்த்ரீயை உபாஸிக்கிறேன். பாண்டவரே! நீர் ஜீவித்திருக்கும்போது, நான் விராடராஜனுக்கு நாள்தோறும் [1]கோசீர்ஷகத்தையும், [2]பத்மகத்தையும் [3]ஹரிச்யாமத்தையும், சந்தனத்தையும் அரைக்கிறேன். அப்படிப்பட்டநான் உம்நிமித்தமாக (அனுபவிக்கும்) அனேகதுக்கங்களை ஆலோசிக்கவில்லை; மத்ஸ்யராஜனுக்குமுன்னிலையில் சூதாடியான அந்தக்கங்கர் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே கீசகனால் காலாலுதைக்கப்பட்டேன். பாண்டவரே! இவ்வாறு பலவிதமான துக்கங்களால் வருத்தப்படுகிற என்னைப்போன்ற எந்தஸ்த்ரீதான் உயிரோடிருப்பாள்? குந்திபுத்ரரே! என்னை நீர் அறியவில்லை. நான் உயிரோடிருப்பதால் யாதுபயன்? நான் த்ருபதராஜனுடையபுத்ரி; த்ருஷ்டத்யும்னனுடைய இளையஸஹோதரி; அக்னிகுண்டத்தினின்றும்பிறந்தவள். பூமியில் ஒருபொழுதும் நான் ஸஞ்சரிக்கமாட்டேன்; கீசகனை நீர் கொல்லாவிட்டால் கழுத்தில்சுருக்கிட்டுக்கொண்டாவது ஜலத்தில்விழுந்தாவது உயிரைஇழப்பேன்; விஷத்தைக் கலக்கிக்குடிப்பேன்; அல்லது நெருப்பிலாவதுவிழுவேன். நான் மரத்தின்மீதேறியாவது கீழே விழுந்து உயிரைஇழப்பேன். கத்தியினாலாவது தேஹத்தைப் பிளந்துகொள்வேன். நான் உயிரோடிருப்பதினால் யாதுபயன்? பாரதரே! புருஷச்ரேஷ்டரே! விராடராஜனுக்கு ஸேனாபதியும் அவனுக்குமைத்துனனும் அதிக கெட்டபுத்தியுடையவனுமானகீசகன், ஸைரந்த்ரீ வேஷத்தோடு ராஜக்ருஹத்தில்வஸிக்கின்றஎன்னைக் கெட்டஎண்ண

1 வாஸனைச்சந்தனம்.

2 தாமரைமலரின்வாஸனைபோன்ற வாஸனையுள்ளசந்தனம்.

3 மாங்கனியின்வாஸனைபோன்றவாஸனையுள்ளசந்தனம்.

த்துடன் நாள்தோறும், 'நீ எனக்கு மனைவியாய்விடு' என்றுசொல்லு கிறான். பகைவர்களை அழிப்பவரே! கொல்லத்தக்கவனான அவனால் இவ்வாறுசொல்லப்படுகின்ற என்னுடையமனமானது பரிபாககாலத் தினால் பழுத்தபழம்போலப் பிளக்கப்படுகிறது. குந்திபுத்ரரே! நீர் எனக்கு ரக்ஷகராகவேண்டும். பகைவர்களைவருத்துகிறவரே! முயற்சியற்றவரும் கோபமில்லாதவரும் வீர்யமற்றவருமான யுதிஷ் டிரரிடம் நான்செல்லமாட்டேன். இப்படிப்பட்டபுத்ரனை ஒருத்தியும் உண்டுபண்ணியிருக்கவேண்டாம். பாண்டவரே! அதிக பலமுள்ள வரே! உம்முடையகோபத்தையும் பலத்தையும் வீர்யத்தையும் நான் நன்றாகஅறிவேன். ஆதலால், உம்முடையமுன்னிலையில் நான் புலம் புகிறேன். புருஷர்களிற்சிறந்தவரே! பாண்டவரே! அறுபதுவயது சென்றதும் மதங்கொண்டதும் யூதபதியுமாகிய ஒருயானையானது பூமியில்தள்ளப்பட்டிருக்கின்ற வில்வமரத்தைக் கால்களால்மிதித்து நாசஞ்செய்வதுபோல அவனுடையதலையைப் பூமியில்தள்ளி இடக் காலினால்துகையும். அந்தக்கீசகன், இரவுவிடிந்து காலையில்எழுந்து, உதிக்கின்ற ஸூர்யனைப்பார்ப்பானாயின், நான் ஜீவித்திருக்கவிரும் பேன். பரதகுலத்தினுதித்தவரே! நீர் இப்பொழுது கீசகனுடையவத த்தை ப்ரதிஜ்ஞைசெய்யாமற்போனால் என்னுடையப்ராணன்மீதும் அர்ஜுனருடையஸுக்ருதத்தின்மீதும் யுதிஷ்டிரருடையபாதங்களி ன்மீதும் நகுலஸஹதேவர்களுடைய உயிர்வாழ்க்கையின்மீதும் ஆணை யிடப்பட்டிருக்கிறீர். எவருடையசெய்கையினால் முடிவற்றதான இவ் விதகுக்கத்தை நான்அடைந்தேனோ அப்படிப்பட்ட கெட்ட சூதா டினவரும் மூத்ததமையனுருமான யுதிஷ்டிரரை நீர் நிந்தனைசெய்யும். எவர்களுக்கு மிகவும்முதன்மையான ஜ்யேஷ்டன்குலத்தைக்கெடுப்ப வனுயிருப்பானோ, பயந்தபுத்தியையுடையஅவர்களும் அந்தமூத்தோ னையேஅனுஸரிப்பார்கள். புத்ரர்களோடும் பசுக்களோடும் பந்துக்க ளோடுங்கூடினராஜ்யத்தை எவன்தான் இழந்துவிட்டு மான்தோல்உடு த்துப் பெருங்காட்டில்புகுவான். எவரிடத்திலுள்ள ஆயிரக்கணக்கான [1]பொருள்களையும் மிகச்சிறந்த மற்றத்தனத்தையும் காலையிலும் மாலை யிலும் (பந்தயம்வைத்துச்) சூதாடினாலும் பதினாயிரம்வர்ஷம் சூதாட லாமோ, தங்கமும் [2]ஹிரண்யமும் வஸ்த்ரங்களும் வாஹனங்களும் கானைகளும் செம்மறியாடுகளும் வெள்ளாடுகளும் குதிரைக்கூட்டங் களும் கோவேறுகழுதைக்கூட்டங்களும் ஒருகாலத்தும்குறைவடை யாவோ அப்படிப்பட்ட அந்தயுதிஷ்டிரர் சூதாட்டத்தின்வாயிலாக

1 'நிஷ்கார்' என்பதுமூலம். 2 பொன்னின்வகை.

ஐச்வர்யத்தினிடத்தினின்று கீழேதள்ளப்பட்டு மூடர்போலத் தம் செய்கைகளை நினைத்துக்கொண்டு பேசாமலிருக்கிறார். முற்காலத்தில் செல்லுகையில், பதினாயிரம்யானைகளும் குதிரைகளும்பின்தொடர்ந்து சென்றுகொண்டிருந்தஅவர் இப்பொழுது சூதாட்டத்தினால் ஜீவிக்கிறார். அவ்வாறே இந்த்ரப்ரஸ்தத்தில் ராஜாவாயிருந்த எந்தயுதிஷ்டிரரை அளவற்றகாந்தியுள்ள லக்ஷ்ம்ஸ்த்ரீகள் உபாஸித்தார்களோ, எவருடையமடைப்பள்ளியில் எப்பொழுதும் அனேக ஆயிரக்கணக்கான வேலைக்காரிகள் பாத்ரங்களைக் கையில்கொண்டு இரவும்பகலும் அதிதிகளுக்குப் போஜனம்செய்வித்தார்களோ, எவர் நாள்தோறும் காலையில் ஆயிரக்கணக்கான ஸ்வர்ணங்களைத் தானம்செய்துகொண்டிருந்தாரோ, அப்படிப்பட்ட இந்தத்தர்மராஜர் சூதாட்டத்தினாலுண்டான பெரியஅனர்த்தத்தினால் கவரப்பட்டுக்கொண்டிருக்கிறார். (கேளீக்ருஹத்தில்) கண்வளர்கின்றஇவரைக் காலையில் நன்கு சுத்தம்பண்ணப்பட்ட ரத்நங்களுள்ள காதணிகளைஅணிந்தவர்களும் நல்லகுரலுள்ளவர்களுமான அனேக [1]ஸூதர்களும் [2]மாகதர்களும் உபாஸித்தார்கள். ஆயிரம் வாலகில்யர்களும், ஜலத்தில்வஸித்துக்கொண்டு (கடும்தவம்புரிகின்றவர்களான) ஆயிரக்கணக்கான ரிஷிகளும், கற்களால் தம்தேஹத்தைக் குட்டிக்கொள்ளுகிற ஆயிரக்கணக்கான ரிஷிகளும், வாயுபக்ஷணமுள்ளவர்களான ஆயிரம் ரிஷிகளும், ஆயிரம் ரிஷிபத்நிகளும், ஆயிரம் ப்ரம்மசாரிகளும், ஆயிரம் மௌனிகளும், ஆயிரம் க்ருஹஸ்தர்களும், [3]ஹம்ஸர்களும், [4]பரமஹம்ஸர்களும், யோகிகளும், ப்ராம்மணர்களும், [5]குடீசகர்களும், [6]பரிவ்ராட்டுக்களும், இன்னும் மற்றவனத்தில் ஸஞ்சரிப்பவர்களும், (பிறர்களுடையஸுகதுக்கங்களில்) ஸமபாவனையுள்ளவர்களும், அனேகர்களான ஊர்த்வரேதஸ்களும், நான்குவேதங்களையும் அறிந்தவர்களும் சிக்ஷை மீமாம்ஸை இவைகளின் கரைகண்டவர்களுமானப்ராம்மணர்களும், [7]க்ரமபாடிகளான விப்ரர்களும், ஸாமங்களை அத்யயனஞ்செய்திருக்கின்ற ஆயிரக்கணக்கான ரிஷிகளும், தவத்தையும் வேதாத்யயனத்தையுமுடையவர்களும் எல்லாவிருப்பங்களுடனும் எவருடையஸபையைவந்தடைந்து எப்பொழுதும் ஸபையோர்களாயிருந்தார்களோ, எந்தயுதிஷ்டிரர் கருணையினால் தம்ராஜ்யத்திலுள்ள எல்லாக்குருடர்களையும் வயது சென்றவர்களையும் நாதனற்றவர்களையும் துக்கமடைந்தவர்களையும்

---

1 பௌராணிகர்கள். 2 வம்சாவளியைக் கீர்த்தனம்செய்பவர்கள்.

3, 4, 5, 6 துறவிகளின்வகைகள்.

7 வேதம்ஓதுவதின் ஒருமுறையைக்கற்றவர்.

அன்னத்தைவிரும்புகின்றவர்களையும் எப்பொழுதும் போஷித்தாரோ அப்படிப்பட்ட யுதிஷ்டிரர் மத்ஸ்யராஜனுடைய வாஸஸ்தானத்தை அடைந்து 'கங்கர்' என்கிற பெயர்பூண்டு (அந்தமாத்ஸ்யனுக்கு) பரிசாரகராக (அவனுடைய) ஸபையில் வணக்கமுள்ளவராயிருக்கிறார். இந்த்ரப்ரஸ்தத்தில் வஸிக்குங்காலத்தில் மற்ற அரசர்களெல்லாரும் எவருக்குக் கப்பமகொடுக்கிறவர்களானார்களோ அவர் அன்யர்களிடத்திலிருந்து (தம்முடைய) ஜீவனத்தை விரும்புகிறார். பூமியில் ப்ரஸித்திபெற்ற அரசர்கள் எவருக்கு வசப்பட்டிருந்தார்களோ அந்த யுதிஷ்டிரர் இப்பொழுது அன்யராஜாக்களுக்கு வசப்பட்டுப பரவசராயிருக்கிறார். எந்தயுதிஷ்டிரர் ஸூர்யன் தேஜஸினால் பூமிமுழுவதையும் ஆக்ரமிப்பதுபோல (தம்முடைய ப்ரதாபத்தினால்) பூமண்டலமுழுவதையும்அடைந்து விளங்கினாரோ அந்தயுதிஷ்டிரர் இப்பொழுது விராடராஜனுடைய ஸபையிலுள்ளவராயிருக்கிறார். பாண்டவரே! எந்தயுதிஷ்டிரராஜரைச் சிறந்தரிஷிகள் ஸபையில் உபாஸித்தார்களோ பாண்டுபுத்ரரான அந்தயுதிஷ்டிரர் இப்பொழுது வேறொருவனை உபாஸிக்கிறார்; பாரும். தோஷமற்றவரும் மஹாபுத்தியுள்ளவரும் ஜீவிப்பதற்காக மறைந்திருக்கின்றவரும் தர்மராஜாவுமான யுதிஷ்டிரரைப்பார்த்து எவனுக்குத்தான் துயரம் உண்டாகாது? பரதருடைய வம்சத்திலுதித்தவரே! ஸபையில்வீற்றிருக்கும் எவரை முன்பு பூமிமுழுதும்உபாஸித்ததோ பரதகுலத்திலுதித்த அவர் இப்பொழுது வேறொருவனை உபாஸித்துக்கொண்டிருக்கிறார்; பாரும். பீமஸேனரே! இவ்வாறு பலவிததுக்கங்களால் பீடிக்கப்படுகின்றவளும் நாதனற்றவள்போலிருப்பவளும் சோகமாகிறஸமுத்ரத்தினுடைய மத்தியிலிருப்பவளுமான என்னை நீர் ஏன் பார்க்கவில்லை? பரதரே! உம்மிடத்தில் நான் சொல்லப்போகிறஇது எனக்கு அதிகதுக்கத்தைக் கொடுக்கிறதாயிருக்கிறது. என்னிடத்தில் உம்மால் அஸூயை பாராட்டத்தக்கதன்று. நான் இந்தவிஷயத்தைத் துக்கத்தால் சொல்லுகிறேன். நீர் (விராடராஜனுடைய) அரண்மனையில் கேகயராஜகுமாரியான ஸுதேஷ்ணை பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே புலிகளோடும் எருமைக்கடாக்களோடும் யானைகளோடும் எப்பொழுதும் யுத்தஞ்செய்கிறீர். அப்பொழுது எனக்கு மோஹமுண்டாகிறது. என்னுடைய நிலைமையைப்பார்த்து அந்தப்புரத்திலுள்ள ஸ்த்ரீகள் நகைக்கிறார்கள். பிறகு, கைகேயியானவள் எழுந்திருந்து மயக்கத்தினால் கவர்ந்துகொள்ளப்பட்டவள்போன்றவளும் தோஷமற்ற அங்கங்களுள்ளவளுமான என்னைப்பார்த்து அப்பொழுது அழ

கிய மந்தஹாஸத்துடன் அங்குள்ள எல்லாஸ்த்ரீகளையும்நோக்கி, 'ஏ! (பரிசாரிகைகளே!) ஸைரந்த்ரியானவள், ஓரிடத்தில் வஸிப்ப தினுலுண்டான ஸ்நேஹத்தினல், யுத்தஞ்செய்கின்றவனும் மஹா வீர்யமுடையவனுமான இந்த வலலனைப்பார்த்து மிகவருந்துகிருள். ஸைரந்த்ரி நல்லரூபமுடையவள். வலலனும் ஸுந்தரன். ஸ்த்ரீக ளுடையமனமானது அறிவதற்குஅரிதானது. இவ்விருவர்களும் (ஒரு வருக்குஒருவர்) இசைந்தவர்களென்று நான் எண்ணுகிறேன். ஸை ரந்த்ரியானவள் ப்ரியஞன வலலன் (ம்ருகங்களோடு சண்டைசெய் துகொண்டு) ஸமீபத்தில்வஸிக்கும்காலத்தில் உருக்கமானவார்த்தை களைச் சொல்லிக்கொண்டிருக்கிருள். இந்தராஜக்ருஹத்தில் இவ் விருவர்களும் ஒரேஸமயத்தில் (வந்துசேர்ந்து) வாஸஞ்செய்துவரு கின்றார்கள்' என்று சொல்லுகிருள். இவ்விதமானசொற்களைச்சொ ல்லி அந்தஸுதேஷ்ணையானவள் என்னைப்பற்றித் தினந்தோறும் பேசுகிருள். கோபித்துக்கொள்வேனையாகில் என்னைப்பார்த்து உமதுவிஷயத்தில் என்னிடத்தில் ஸந்தேஹங்கொள்ளுகிருள்" என்று கூறினள். அவள் அவ்வாறுசொல்லுங்காலத்தில் பயங்கரமானபராக் ரமமுள்ளபீமன் கோபத்தினல் சிவந்தகண்களுடன் ஒருவார்த்தையும் சொல்லவில்லை. த்ரௌபதியானவள், பீமன் கோபங்கொண்டானென் பதை அறிந்து திரும்பவும் (அவனைப்பார்த்து,) "யுதிஷ்டிரரால் உண்டு பண்ணப்பட்ட துக்கத்தில்மூழ்கினவளான நான் இனி பிழைத்திரு ப்பதற்கு விரும்பவில்லை. ஒப்பற்ற ரதிகராயிருந்து எல்லாத்தேவர் களையும் மனிதர்களையும் ஜயித்தவரும் யௌவனமுடையவருமான அந்தஅர்ஜுனர், (நபும்ஸக) வேஷத்தால் மறைந்துகொண்டு விராட ராஜனுடையகன்னிகைகளுக்கு நர்த்தனம் கற்பிக்கின்றவராகவும் அவ ர்களுக்கு ஊழியம்செய்கிறவராகவும் இருக்கிருர். அளவிடமுடியாத பலத்தையுடையவரும் காண்டவவனத்தில் அக்னியை த்ருப்தியடை யச்செய்தவரும் ப்ருதையின்குமாரருமான அர்ஜுனர், கிணற்றி லுள்ளநெருப்புப்போல அந்தப்புரத்தைஅடைந்து ப்ரகாசமற்றிருக்கி ருர். எந்தப்புருஷச்ரேஷ்டரிடத்திலிருந்து எப்பொழுதுமே பகைவர் களுக்குப் பயமுண்டோ அந்தத்தனஞ்சயர் உலகத்தார்களால் இக ழப்பட்ட வேஷத்தோடிருக்கிருர். எவருடையநாணெலியைக்கேட் டுப் பகைவர்கள் நடுக்கமுற்றுர்களோ அந்தஅர்ஜுனர் பேடிவடிவத் தைஅடைந்தவரும் நர்த்தனத்துடன் பாடுகிறவருமா யிருப்பதைக் கண்டு என்மனமானது நல்லநிலைமையை அடையவில்லை. ஸ்த்ரீகள் அவருடையகானஸ்வரத்தினல் ஸந்தோஷமடைந்து (அவரையே) சூற்

புறத்திலும் சூழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். எவருடையமுடியில் ஸூர்யனுக்கொப்பான கிரீடம்விளங்கியதோ அந்தத்தனஞ்சயர் இப்பொழுது பின்னலால் விகாரமாக்கப்பட்டிருக்கின்றநுனிமயிர்களுடன் கூடியவராயிருக்கிறார். திவ்யாஸ்த்ரங்களனைத்தும் நிலைபெற்றிருக்கின்ற மஹாபுருஷரும் எல்லாவித்தைகளுக்கும் ஆதாரமாயிருக்கின்றவருமானஎவர் குண்டலங்களைத்தரித்துவந்தாரோ, பூமியில் தேஜஸினால் ஒப்பற்றவரானஎவரை, வேலைகள் கரையைத்தாண்டாததுபோல, ஆயிரக்கணக்கான அரசர்கள் யுத்தகளத்தில் மீறிநடக்கமாட்டார்களோ, யௌவனமுடையவரான அந்தஅர்ஜுனர் பேடிவடிவத்தால் மறைக்கப்பட்டு, விராடராஜனுடையகன்னிகைகளுக்கு நர்த்தனம்கற்பிக்கின்றவரும் அவர்களுக்கு ஊழியம்செய்கின்றவருமாயிருக்கிறார். பீமஸேனரே! எவருடைய தேரொலியினால் பர்வதங்களோடும் காடுகளோடும் இடைவெளியோடும் ஸ்தாவரங்களோடும் ஜங்கமங்களோடுங் கூடியிருக்கின்றபூமி நடுங்கியதோ, சிறந்தவில்லுள்ளவரானஎவர் பிறந்தவுடனே குந்திதேவிக்கு அன்பானதுபெருகியதோ உம்முடைய இளையஸஹோதரரான அந்தஅர்ஜுனர் இப்பொழுது என்னைக்குறித்துத் துக்கமடையவில்லை. அலங்காரங்களாலும் நாற்புறமும் புரண்டுகொண்டிருக்கின்ற குண்டலங்களாலும் அலங்கரிக்கப்பட்டும் சங்குவளையைக் கையிலணிந்துகொண்டும் வருகின்ற அவரைக்கண்டு என் மனம் வாடுகிறது. பின்னலாகத்திரிக்கப்பட்ட நுனிமயிருள்ளவரும் கன்னிகைகளால்சூழப்பட்டவரும் முன்பு பயங்கரமானவில்லைக் கையிலேந்தியவருமான அர்ஜுனரைக்கண்டு என்மனமானது துக்கத்தை அடைகிறது. தேவதையினுடைய ரூபம்போன்ற ரூபத்தையுடையவரும் பெண்யானைகளால் நாற்புறத்திலும்சூழ்ந்து மறைக்கப்பட்ட ஆண்யானைபோலக் கன்னிகைகளால் நான்குபக்கத்திலும் சூழப்பட்டு ஸங்கீதகோஷ்டியின் மத்தியிலிருந்து அந்தச்சபையில்வந்திருக்கிற மத்ஸ்யதேசாதிபதியான விராடனைக் (கீர்த்தனங்களால்) பாடுகின்றவருமான இந்தப்பார்த்தரை நான் பார்க்கும்பொழுது என்மனமானது மோஹத்தையடைகிறது. சிறந்தவரான குந்திதேவியார், தனஞ்சயர் ஆபத்தடைந்திருப்பதையும் கெட்டசூதாட்டத்தை விளையாட்டாகக் கொண்டவரும் குருகுலத்தில்உதித்தவருமான அஜாதசத்ரு (ஆபத்தில்) முழுகியிருப்பதையும் அறியவில்லையென்பது நிச்சயம். பகைவர்களனைவர்களையும் அழிக்கும் திறமையுள்ளவரும் அளவிடமுடியாதபௌருஷமுள்ளவருமான பார்த்தர் ஒருரதத்தை ஸஹாயமாகக்கொண்டு ஐந்த்ரம், வாருணம், வாயவ்யம், ப்ராம்மம், ஆக்னே

யம், வைஷ்ணவம் என்கிற திவ்யாஸ்த்ரங்களால், அக்னியைத்ருப்தி யடையச்செய்யப் பகைவர்களனைவர்களையும் ஜயித்தார். பாரதரே! வாஸுதேவரைத் துணையாகக்கொண்ட எந்தஅர்ஜுனர் ஒருரதத்தைத் துணையாகக்கொண்டு கௌபேரம், வைஷ்ணவம், சைவம்ஆகிய அஸ்த்ரங்களையும் மற்றஅஸ்த்ரங்களையும் அஸ்த்ரவீர்யத்தையும் காண்பித்துக்கொண்டும் திவ்யமானகாந்தர்வம், வாயவ்யம், வைஷ்ணவம், ப்ராம்மம், பாசுபதம், ஸ்தூணாகர்ணம்என்கிற அஸ்த்ரங்களையும் வெளிப்படுத்திக்கொண்டும் கோரரூபமுடையவர்களும் மஹாபலசாலிகளும் இந்த்ரனுக்குவிரோதிகளுமான பௌலோமர்களையும் காலகேயர்களையும் நிவாதகவசர்களையும் ஜயித்தாரோ அப்படிப்பட்டபார்த்தர் கிணற்றிலிட்டநெருப்புப்போல அந்தபுரத்தை அடைந்து ப்ரகாசமற்றிருக்கிறார். அதிகமானபலமும் பராக்ரமமுமுடையவரும் கடுந்தவம் புரிந்து சூலபாணியானசங்கரரை யுத்தத்தினால் ஸந்தோஷிக்கச்செய்தவரும் பசுக்கொட்டில்களில் பெரியகாளைபோலக் கன்னிமாடத்தை அடைந்திருக்கின்றவரும் ஸ்த்ரீவேஷத்தினால் விகாரத்தையடைந்தவருமான பார்த்தரைக்கண்டு என்மனம் குந்திதேவியைநாடுகிறது. எவர் எப்பொழுதும் ரூபம், அஸ்த்ரம், மேதை இம்மூன்றையுமுடையவரோ அந்தநகுலர் விராடனுடைய குதிரைகளைக்கட்டுகிறார். காலத்தினுடைய வேறுபாட்டைப்பாரும். ராஜகன்னிகைகளும் தாஸிகளும் வைச்யகன்னிகைகளும் சிறப்புள்ள எல்லாஸ்த்ரீகளும் எந்தத் தாமக்ரந்திக்கு வசப்பட்டிருந்தார்களோ, விராடனைஅடைந்து குதிரைகளைக்காண்பித்துக்கொண்டு ஸேவகத்தொழிலில் இருக்கின்றவரும் தர்மராஜர் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே வேகத்தோடு குதிரைகளை நடைகளில்பழக்குகின்றவருமான எந்தத்தாமக்ரந்தியைப்பார்ப்பதற்கு ஜனக்கூட்டங்கள் நான்குபக்கத்திலும் சூழ்ந்திருக்கின்றனவோ அப்படிப்பட்டநகுலரைக்கண்டு நான் துக்கிக்கிறேன்; புலம்பவும்புலம்புகிறேன். பார்த்தரே! பகைவர்களைவாட்டுபவரே! 'அவ்விதமாகவே யுத்தஞ்செய்கிறவர்களுள் உத்தமரும் இளையவருமான ஸஹதேவரைக்கண்டாவது ஸுகமுள்ளவளாயிருக்கிறேன்' என்று நீர் என்னைஎண்ணுகிறீரா? என்ன? பாண்டவரே! பசுக்களிடங்களில் இடையன்வேலைபார்ப்பவரும் கன்றின்தோலிலும் பூமியிலும் படுப்பவருமான அந்தஸஹதேவரைக்கண்டு துக்கத்தாலும் சோகத்தாலும் கவரப்பட்ட அங்கங்களையுடையவளாக நான் வெண்ணிறமடைந்தேன். மஹாபாக்யமுள்ளவரே! உண்மையான பராக்ரமத்தையுடைய ஸஹதேவர் எந்தக்காரணத்தினால் இவ்விதமானதுன்பத்

தை அடைந்தாரோ அப்படிப்பட்டபாபமானது அவருக்குஇருப்பதாக நான் அவருடையசரித்ரங்களை அடிக்கடிஆலோசித்தும் காண்கிறேனில்லை. பாதச்ரேஷ்டரே! பசுக்களின்மத்தியில் பெருங்காளைபோல மத்ஸ்யராஜனால் பசுக்களிடத்தில் (ரக்ஷகராக) ஏற்படுத்தப்பட்டவரும் மிகுந்தகோபமுள்ளவரும் சிவந்தகண்களையுடையவரும் கோபாலர்களுக்கு முன்செல்பவரும் விராடனை ஸந்தோஷிக்கச்செய்கின்றவருமான உம்முடைய ப்ரியமானதம்பியைக்கண்டு நான் துக்கத்தை அடைகிறேன். என்மனத்தில் கொதிப்புண்டாகிறது. மாமியாரான குந்திதேவியானவர் வீரானஸஹதேவரைக்குறித்து, 'பாஞ்சாலி! இந்த ஸஹதேவன் மஹாவம்சத்தில் பிறந்தவன்; நீதிமான்; [1]சீலமுடையவன்; அகார்யத்தில் வெட்கமடைகிறவன்; உத்தமன்; தர்மத்தைஅனுஷ்டிப்பவன்; என்னுடையப்ரீதிக்குப் பாத்ரமாயிருப்பவன். அப்படிப்பட்ட இந்தஸஹதேவன் ஆரண்யங்களில் ராத்ரிகாலங்களிலும் உன்னால் பாதுகாக்கத்தக்கவன்' என்று எப்பொழுதும் என்னிடம் புகழ்ந்திருக்கிறார். மேலும், புத்ரரிடத்தில் அதிகஅன்புள்ளவரான குந்திதேவியார் அங்குநின்று அழுதுகொண்டே, மஹாரண்யவாஸத்தைக்குறித்துப்புறப்பட்ட ஸஹதேவரைக்கட்டிக்கொண்டு, என்னைப்பார்த்து, 'பாஞ்சாலி! இவன், மேன்மையுள்ளவன்; சூரன்; அரசனைஅனுஸரித்திருப்பவன். ஜ்யேஷ்டனைப் பூஜிக்கின்றவனும் வீர்யமுடையவனுமான இந்தஸஹதேவனை நீயே நேராகப் போஜனம்செய்யும்படி செய்' என்று இவ்வாறுசொல்லியிருக்கிறார். பாண்டவரே! பசுக்களிடங்களில் இடையன்வேஷம் பூண்டிருக்கின்றவரும் யுத்தஞ்செய்கிறவர்களுள் உத்தமருமான அப்படிப்பட்ட ஸஹதேவரைப்பார்த்து நான் உயிரோடிருப்பேனா? யுதிஷ்டிரர்நிமித்தம் இவ்வாறு அனேகதுன்பங்களை அடைந்தேன். பரதகுலத்தில் உதித்தவரே! பின்னும் நாள்தோறும் வ்ருத்தியடைந்திருக்கின்ற துக்கங்களைக்கேளும். குந்திபுத்ரரே! அந்தத்துக்கங்கள் என்னிடத்தில் நாள்தோறும் வளர்ந்துகொண்டிருக்கின்றன. மற்றத்துக்கங்களையும்சொல்லுவேன். நீங்கள் ஜீவித்துக்கொண்டிருக்கும்பொழுதே பற்பலதுக்கங்கள் என்சரீரத்தை வறளும்படிசெய்கின்றன. அதைக்காட்டிலும் மிகுந்ததுக்கம் என்னஇருக்கிறது? ஒருபர்த்தாவையுடையஸ்த்ரீ ஸுகமாகவேஇருக்கிறாள். எனக்கு ஐந்துகணவர்களிருக்கிறார்கள்; இருந்தும், என்னுடையதுயரமானது முடிவற்றதாயிருக்கிறது.

---

1 வேறுபாடம்.

இருபத்துமூன்றாவது அத்யாயம்.

கீசகவதபர்வம். (தொடர்ச்சி.)

(த்ரௌபதி, தன்வைபவத்தைநினைக்கும்படிசெய்வித்து, கீசகனைக்கொல்லும்படி பீமனைவற்புறுத்தியது.)

நான், சூதாடியானயுதிஷ்டிரர்நிமித்தம் ஸைரந்த்ரிவேஷத்தோடு அந்தப்புரத்தில்வஸித்துக்கொண்டு ஸுதேஷ்ணைக்கு வசப்பட்டிருக்கிறேன். பகைவர்களைவாட்டுகின்றவரே! ராஜகுமாரியானஎன்னுடைய நிலைமையின் தீவ்ரமானமாறுட்டத்தைப்பாரும். நான் காலத்தைஎதிர்பார்த்து எல்லாத்துக்கங்களையும் பொறுத்துக்கொண்டிருக்கிறேன். மனிதர்களுடைய விபவங்களும் துயரங்களும் நிலையற்றனவென்றெண்ணி மீண்டும் பர்த்தாக்களுக்குநேரக்கூடிய அபிவ்ருத்தியை எதிர்பார்த்திருக்கிறேன். ஐச்வர்யங்களும் வ்யஸனங்களும் சக்ரம்போலச் சுழன்றுகொண்டிருக்கின்றனவென்றுநினைத்து மீண்டும் பர்த்தாக்களுக்கு வரக்கூடியமேம்பாட்டை எதிர்பார்த்திருக்கின்றேன். ஒருமனிதனுக்கு எது தோல்விக்குக்காரணமோ அதுவே வெற்றிக்குக்காரணமாகிறதென்று எண்ணி (வரக்கூடியநன்மையை) எதிர்பார்த்திருக்கின்றேன். 'காலவசத்தால், பிறருக்குக்கொடுத்துவந்தபுருஷர்கள் பிறரிடமிருந்து யாசிக்கின்றவர்களும் (பிறரை) அடித்தவர்கள் பிறரால்அடிக்கப்படுகின்றவர்களும் (பிறரைத்)தள்ளினவர்கள் பிறரால்தள்ளப்படுகின்றவர்களுமாகின்றனர்' என்று கேட்டிருக்கிறேன். [illegible] த்தாண்டிச்செல்வதும் மிக்கஅஸாத்யமே'[1] என்றெண்ணி மறுபடியும் நல்லஅத்ருஷ்டத்தினுடையவரவை எதிர்பார்த்திருக்கிறேன். எந்தஇடத்தில் முந்திஜலமிருந்ததோ அந்தஇடத்தில் மறுபடியும்ஜலம் நிற்கிறதில்லையென்கிறமாறுபாட்டை எண்ணிக்கொண்டு மீண்டும் அபிவ்ருத்தியை எதிர்பார்த்திருக்கிறேன். நன்றாகமுயற்சிக்கப்பட்டிருந்தாலும் எவனுடையப்ரயோஜனம் தெய்வத்தால்அழிக்கப்படுகிறதோ விவேகமுள்ளஅவன் தெய்வம்அனுகூலமாவதற்காக எப்பொழுதும் முயற்சிசெய்யவேண்டும். இப்பொழுது சொல்லிய என்னுடையவசனத்துக்கு யாதுபயனுளது? துக்கமுடையவளான என்னைக் கேளும்: கேளாமலிருந்தாலும் நான் உமக்குச் சொல்லுகிறேன்.

---

1 'என்று தெய்வத்தைப்புகழும்சாஸ்த்ரத்தை நம்புகிறேன்' என்பது பழையஉரை.

நான் பாண்டுபுத்ரர்களுக்குப் பட்டமஹிஷியும் த்ருபதமஹாராஜருக்குப் புத்ரியுமாயிருந்தும் இவ்விதமான நிலைமையை அடைந்திருக்கிறேன். என்னைத்தவிர வேறு எந்தஸ்த்ரீ உயிரோடிருக்கவிரும்புவாள்? பகைவர்களை அடக்குகிறவரே! பாரதரே! என்னுடையசோகமானது கௌரவர்களனைவர்களையும்விட்டுவிட்டுப் பாஞ்சாலர்களையும் பாண்டவர்களையும் வந்து அடைந்திருக்கிறது. நான் ப்ராதாக்களாலும் மாமனர்களாலும் அநேகபுத்ரர்களாலும் சூழப்பட்டிருக்கிறேன். இப்படி [1]பந்துக்களோடுகூடிய எந்தஸ்த்ரீதான் இவ்வாறு துக்கத்தை அனுபவிப்பாள்? பாதச்ரேஷ்டரே! நிச்சயமாக நான் இளமைத்தன்மையினுல் ப்ரம்மதேவருக்கு அப்ரியமானகார்யம் செய்திருக்கவேண்டும். (ஆகையினுல்தான்,) அவருடையப்ரபாவத்தினுல் (இப்படிப்பட்ட) கெட்டநிலைமையை அடைந்திருக்கிறேன். பாண்டவரே! என்னுடையநிறமும் விகாரமும் எவ்விதமாயிருக்கின்றனவென்பதைப் பாரும். இவ்விதமானநிறமும் விகாரமும் முன்நேர்ந்த மிக்க கஷ்டமான அப்படிபபட்டவனவாஸத்திலும் உண்டாகவில்லை. பீமஸேனரே! பார்த்தரே! முற்காலத்தில் நான் எவ்விதமானஸுகத்தை அனுபவித்தேனென்பதை நீரே அறிந்திருக்கிறீர். அவ்விதமானநான் இப்பொழுது அடிமைப்பட்டிருக்கிறேன்; என்மனத்துக்கு ஆறுதலுண்டாகவில்லை. பயங்கரமானவில்லையேந்திய குந்திபுத்ரரான தனஞ்சயர் அந்தமஹாஸபையில் தணிந்தநெருப்புபபோல (வீர்யமற்றவரா)யிருந்தவிஷயத்தையும் தெய்விகமென்றே நான் எண்ணுகிறேன். பார்த்தரே! ப்ராணிகளுடையகதியானது மனிதர்களால்அறிவதற்கு ஸாத்யமாகாது. எதிர்பாராமல் உங்களுக்குநேர்ந்திருக்கின்ற இந்த ஆபத்தைப்பாரும். இந்த்ரனுக்கொப்பானநீங்கள் எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருந்தமுகத்தையுடையவளும் சிறந்தவளும் நல்லவளுமானநான் தாழ்ந்தவர்களானவேறுபெண்களுடையமுகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். பகைவர்களுடையகர்வத்தைஅழிப்பவரே! பாண்டுநந்தனரே! நீங்களும் பாஞ்சாலர்களும் உயிரோடிருக்கும்பொழுது நான்அடையத்தகாததான என்னுடையநிலைமையை நீர் பாரும். ஸமுத்ரம்வரையிலுள்ள பூமண்டலம் எவளுக்குவசப்பட்டிருந்ததோ அப்படிப்பட்டபாஞ்சாலியானவள் இப்பொழுது ஸுதேஷ்ணைக்கு வசப்பட்டிருக்கிறுள். எவளுக்கு முந்திச்செல்லுகின்றவர்களும் பின்தொடர்ந்துவருகின்றவர்களுமிருந்தார்களோ அப்படிப்பட்டநான் இப்பொழுது ஸுதேஷ்ணைக்கு முந்தியும்பிந்தியும் சென்

[1] 'மேன்மைபொருந்திய' என்பது பழையவுரை.

றுகொண்டிருக்கிறேன். குந்திபுத்ரரே! என்னால்பொறுக்கக்கூடாத தான மற்றொருதுக்கத்தையும் கேளும். குந்திதேவிக்கல்லாது என் தேஹத்துக்காகக்கூடச் சந்தனமுதலானவற்றை ஒருகாலமும்அரைத் ததில்லாதநான் இப்பொழுது (ஸுதேஷ்ணைக்குச்) சந்தனத்தை அரைத்துக்கொண்டிருக்கிறேன். உமக்கு மங்களம்உண்டாகட்டும். குந்திபுத்ரரே! என்கைகளைப்பாரும். இதற்குமுன் என்கைகள் இவ் விதமிருந்ததில்லை" என்றுசொல்லிவிட்டு, தழும்பேறியிருக்கிற இரு கரங்களையும் பீமஸேனனுக்குக் காண்பித்தாள். "குந்திதேவிக் காவது உங்களுக்காவது ஒருபொழுதும் பயப்படாதநான், இப் பொழுது, 'சந்தனமானது என்னால் நன்றாகச்சேர்க்கப்பட்டிருக்கிற தோ, இல்லையோ, விராடமஹாராஜன் என்னை என்னசொல்லப்போகி றானோ' என்று நடுங்கிக்கொண்டு அவனுடையமுன்னிலையில் கிங்கரி யாகநிற்கின்றேன். வேறொருவரால் சேர்க்கப்பட்டசந்தனமானது விராடராஜனுக்கு விருப்பமாயில்லையாம்" என்றுசொன்னாள். கோப முள்ளவளான அந்தக்ருஷ்ணையானவள் தன்னுடையதுக்கங்களைப் பீமஸேனனிடத்தில்சொல்லி அவனுடையமார்பைத்தழுவிக்கொண்டு மெதுவாகஅழுதாள். அவள் பீமஸேனனுடைய[1]மார்புடன் (தன் மார்பைச்)சேர்த்துக்கொண்டு அடிக்கடிபெருமூச்சுவிட்டுப் பாஷ்பத் தினால் (தடுக்கப்பட்டதும்) மதுரமுமானவாக்கினால் பின்வருமாறு சொல்லத்தொடங்கினாள். "பாண்டவரே! பீமஸேனரே! பாக்யமற் றவளானநான் மரிக்கவேண்டியதருணத்தில் உயிரோடிருக்கிறகார ணத்தினால் முற்காலத்தில் தேவதைகள்விஷயத்தில் நான் பெரியபாப ம்செய்திருக்கவேண்டும். கீசகனை நீர்கொல்லாவிட்டால் நான் என் சரீரத்தை இழந்துவிடுவேன்; விஷத்தைக்கலக்கிக்குடிப்பேன்; அல் லது நெருப்பில்புகுவேன். நான் பாக்யமற்றவள்; புண்யமற்றவள்; எப்பொழுதுமே துக்கத்தைஅனுபவிப்பவள்; மனத்துக்கு ஆறுதலில் லாதவள். பாபத்தில்முழுகியிருக்கின்றவளானஎனக்கு உயிரால் யாது பயன்?" என்றுசொல்லி, தழும்புபட்டஇரண்டுகைகளையும் அவனுக் குக் காண்பித்தாள். பகைவர்களைக்கொல்லுகிறவனான வ்ருகோதரன் நடுக்கமுற்றிருக்கின்றஅவளுடைய [2]பருத்தனவும் தழும்பேறினவு மான இருகரங்களையும் முகத்தில்ஒத்திக்கொண்டு அழுதான். வீர்ய முடையவனானகுந்திபுத்ரன் அவளுடையஇருகரங்களையும் பிடித்துக் கொண்டு கண்ணீரையும் துடைத்து அதிகதுக்கத்தால்வருந்தி, பின் வருமாறு உரைக்கலானான்.

---

1 'ஹ்ருதயத்வேதநடுக்கமுறச்செய்துகொண்டு' என்பதுபழையஉரை.
2 'இளைத்தனவும்' என்பது வேறுபாடம்.

இருபத்துநான்காவது அத்யாயம்.

கீசகவதபர்வம். (தொடர்ச்சி.)

(த்ரௌபதிக்கும்பீமனுக்கும்ஸம்வாதமும், த்ரௌபதி கீசகனைக்கொல்வதற்குவற்புறுத்தியதும்.)

பீமஸேனன், அந்தப்பாஞ்சாலியைத்தேறுதலடையச்செய்து வசனிக்கலானான். "கல்யாணி! [1]நேர்த்தியானஇடையையுடையவளே! கேள். ஸபையில்வந்திருக்கின்றஉன்னைப்பார்த்து அந்தஸமயத்தில் கோபத்தினால் நான் மத்ஸ்யதேசத்தார்களுக்குப் பெரியநாசத்தைச்செய்யக்கருதி ஆலோசித்தேன். நான் ஒருமரத்தை உற்றுப்பார்த்தேன். உனக்கு மங்களமுண்டாகட்டும். அந்தஸமயத்தில் என்னைத் தர்மராஜர் கடைக்கண்ணால்தடுத்தார். அதனை அறிந்து நான் தலைகுனிந்துகொண்டு சும்மா மடைப்பள்ளிவந்துசேர்ந்தேன். பெண்ணே! இப்பொழுது யான் சொல்லப்போகிறஎன்னுடையவேறொரு ப்ரதிஜ்ஞையைக்கேள். உன்னுடையஇந்தஇரண்டுகைகளும் முன்பு சிவப்புநிறமுடையனவாயிருந்து இப்பொழுது தழும்பேறினவாகச் செய்யப்பட்டிருக்கிறகாரணத்தினால் என்னுடையபாஹுபலத்தையும் பல்குனனுடைய காண்டீவத்தையும் நிந்திக்கவேண்டும். விராடனுடைய ஸபையில் முந்தியே (கீசகன்முதலானபாபிகளுக்கு) பெரிதான துன்பத்தை உண்டுபண்ணாமலிருந்தேனென்பது இப்பொழுது என்னை எரிக்கிறது. அதனை இப்பொழுது செய்கிறேன். அந்தஸமயத்தில் குந்திபுத்ரரான யுதிஷ்டிரர் என்னைப் பார்த்தார். அதற்கு ஒரு காரணம் எனக்குத் தோன்றியது. அவருடைய அவ்விதமானகருத்தை அறிந்து நான் அவருடையஆணையில் கட்டுப்பட்டு நின்றுவிட்டேன். கல்யாணி! ராஜ்யத்தினின்றுவெளிப்பட்டதும் கௌரவர்களைக்கொல்லாமலிருந்ததும் துர்யோதனன் கர்ணன் ஸுபலனுடைய புத்ரனானசகுனி பாபியான துச்சாஸனன் இவர்களுடையதலையையிடறாமலிருந்ததும் மார்பில்அடிக்கப்பட்டமுளைபோல என்னைவருத்துகின்றன. சிறந்தஇடையுடையவளே! மேலும், என்னுடையமற்றொருவார்த்தையை நீ நினைக்கிறாயா? க்ருஷ்ணையே! (முன்பு ஒரு ஸமயத்தில்) பரிசுத்தமானஸரஸ்வதிநதிக்கரையில் நாம் ஒன்றுசேர்ந்து புறப்பட்டுப்போனோம். அப்பொழுது நான் எல்லாத்துயரங்களை

---

1 'வராரோஹே' என்பதுமூலம். இதற்கு, 'கற்புடையவளே!' என்றும் பொருளுண்டு.

யும்நினைத்துக்கொண்டு, 'பாஞ்சாலி! நான் தர்மராஜாவானயுதிஷ்டிர ரையும் தனஞ்சயனையும் மாத்ரிபுத்ரர்களும் ப்ராதாக்களுமான நகுல ஸஹதேவர்களையும் அனுஸரிக்கமாட்டேன்' என்றுசொன்னேன். க்ருஷ்ணையே! இவ்விதமானநிச்சயத்தைச்செய்து யுதிஷ்டிரரையும் நிந்தித்தேன். அப்பொழுது (அகார்யத்தில்) லஜ்ஜையுள்ளவரும் தர்மநந்தனரும் ராஜாவுமானயுதிஷ்டிரர் என்னுடைய கொடியவார்த் தையைக்கேட்டு, சிறந்தபொருளுள்ளவார்த்தையைச்சொல்லி, தௌம்யமுனிவர் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே, ப்ராதாக்களவர்களையும் ஸமாதானமடையச்செய்தார். ஏ! ராஜபத்னி! உலகங்களிலுள்ள எல்லாச்சாஸ்த்ரங்களாலும் ப்ரதிபாதிக்கப்பட்டகுணங்களுள்ளவளான நீ துயரமடையாதே. பூமியில் ஒப்பற்றதானஸத்யம் நம்மால் ஒன்றுசேர்ந்து காப்பாற்றத்தக்கது. நாங்கள் மனத்தேறுதலை அடைவிக்கப்படும்போது நீயும் மனத்தேறுதலையடைவிக்கப்படுவாய். அழகியஇடையுடையவளே! விசாலமானபுத்தியுடையவளே! தர்மத்தைவிடாதே கோபத்தைவிட்டுவிடு. கல்யாணி! யுதிஷ்டிரமஹாராஜர், உன்னிடத்தினின்று இப்படிப்பட்டநிந்தையைமுழுதும் கேட்பாரானால் உயிரைஇழப்பார். அழகியஇடையுடையவளே! தனஞ்சயனாவது நகுலஸஹதேவர்களாவது கேட்பார்களானால், அவர்களும் உயிரைஇழப்பார்கள். அழகியஇடையுடையவளே! இவர்கள் லோகாந்தரத்தைஅடைந்தால் நான் உயிரோடிருப்பதற்குச்சக்தியுள்ளவனாகப்போகிறதில்லை. பாஞ்சாலி! கௌரவமுடையவளே! நான் உனக்குச்சொல்லும்தர்மத்தைக் கேள். வைதேஹியென்கிறஜனகருடையபுத்ரியானஸீதையானவள் பெரியகாட்டில் வஸிக்கின்ற தன்னுடையகணவரைப் பின்தொடர்ந்துசென்றாளென்பதை நீகேட்டிருக்கிறாயன்றோ? பெருங்காட்டில்வஸித்தவளும் ராமருக்குஇனியமனைவியும் அழகியஇடையையுடையவளுமான அந்தஸீதையானவள் ராவணனால்அபஹரிக்கப்பட்டும் ராக்ஷஸிகளால்பயமுறுத்தப்பட்டும் மிகுந்த துயரத்தை அனுபவித்துக்கொண்டு ராமரையே அனுஸரித்திருந்தாள். பயந்தஸ்வபாவமுடையவளே! அவ்வாறே லோபாமுத்ரையும், ரிஷிகளுள்சிறந்தவரும் மஹிமையுள்ளவருமான தன்பர்த்தாவுமான அகஸ்த்யரைப் பின்தொடர்ந்து வனத்தையேஅடைந்தாள். பதிவ்ரதையும் சர்யாதியினுடைய புத்ரியுமான ஸுகன்யையென்கிறஉத்தமஸ்த்ரீயும் புற்றாயிருந்த ப்ருகுவினுடையபுத்ரரானச்யவனரை வனத்தில் அனுஸரித்திருந்தாள். முற்காலத்தில் உலகத்தில் ரூபத்தால் நிகரில்லாத நாளாயனியென்கிற இந்த்ரஸேனையும் ஆயிரம்பிராயமுள்ள கிழவனை

பர்த்தாவை அநுஸரித்திருந்தாள். க்ருஷ்ணையே! முற்காலத்தில் தமயந்தியும் நளமஹாராஜனையே வனமத்தியில் அநுஸரித்துச்சென்றாள். அவ்வாறே நீயும் கணவர்களை அநுஸரித்தாய். கல்யாணி! (முற்கூறப்பட்ட) இந்தஸ்த்ரீகள் ரூபவதிகளென்றும் பதிவ்ரதைகளென்றும் சொல்லப்பட்டிருப்பதுபோலவே நீயும் எல்லாக்குணங்களோடும் சேர்ந்திருக்கிறாய். இகழத்தகாதவளே! நீ வெகுகாலம் பொறுக்கவேண்டாம்; முப்பதுநாள்மாத்ரம் பொறுக்கவேண்டும். பதின்மூன்றுவதுவர்ஷம்நிறைந்தவுடன் நீ அரசர்களுடைய பட்டமஹிஷியாவாய். நான் உண்மையாக உனக்குச் சபதம்செய்கிறேன். அஃது இவ்வாறே ஆகப்போகிறது; வேறுவிதமாகாது. கோபமுள்ளவளே! எல்லாஉத்தமஸ்த்ரீகளுக்கும் ப்ரமாணமாயிருத்தலை நீ செய்யத்தக்கவள். கோபமுள்ளவளே! எல்லாமன்னர்களுடைய தலையிலுமிருக்கப்போகிறாய். பர்த்தாக்களிடத்திலிருக்கிறபக்தியினாலும் நன்னடக்கையினாலும் அடைவதற்கரிதானபோகங்களை அடையப்போகிறாய். நம்முடையப்ரதிஜ்ஞையானது நிறைவேறினபிறகு பெரியபோகங்களை அடைவாய். (பிறகு இவையெல்லாம்) குருபக்தியினால்உண்டுபண்ணப்பட்டனவென்பதை அறிந்து அரசர்களுடைய முடியில் நிலைபெற்றவளாயிருக்கப்போகிறாய்" என்று (தேறுதல்) சொன்னான்.

த்ரௌபதி, "குந்திபுத்ரரே! உருக்கத்துடன்புலம்புகிறநான் அரசரை நிந்திக்கவில்லை. துக்கங்களைப்பொறுக்கச் சக்தியற்றனென்றால் கண்ணீர்சொரியப்பட்டது. கௌந்தேயரே! விராடராஜனுடையமைத்துனனும் ஸூதபுத்ரனும் போஜனென்றுசொல்லப்பட்டவனும் த்ரிகர்த்ததேசத்தில்பிறந்தவனும் தர்மத்தைவிட்டு விலகினவனும் கொடிய தன்மையுடையவனும் எல்லாவிஷயங்களிலும் ஸமர்த்தனும் துஷ்டஎண்ணமுள்ளவனுமான கீசகன், வினயமற்றவனும் மிக்ககெட்டஎண்ணமுள்ளவனுமாகி, என்னை அநாதையென்றெண்ணிக்கொண்டு, 'கல்யாணி! நீ எனக்குமனைவியாவாய்' என்று தினந்தோறும் சொல்லுகிறானென்கிறதுக்கம் எனக்கு ஸகிக்கமுடியாததென்று நீர் அறியும். மஹாபலமுள்ளபீமஸேனரே! போனகார்யத்தைச் சொல்வதினால் யாதுபயன்? இப்பொழுது நேர்ந்திருக்கின்றகார்யத்துக்குத் தகுந்தமுயற்சிசெய்யும். பீமஸேனரே! கைகேயியானவள் என்னுடைய ரூபத்தினின்று உண்டானபயத்தால் ஸந்தேஹமுள்ளவளாகி, 'அரசர் எவ்வாறுஇவளை அடையாமலிருப்பார்' என்று எப்பொழுதுமே மனவருத்தமடைந்துகொண்டிருக்கிறாள். அவளுடைய அந்தஎண்ணத்தை அறிந்தும் கெட்டஎண்ணமுள்ளவனும் பொய்யில்நோக்கமுள்ள

வனுமான கீசகன் திரும்பவும் என்னைவிரும்புகிறான். பீமஸேனரே! அவனைநோக்கிக் கோபங்கொண்டவளானநான் கோபத்தை அடக்கிக் கொண்டு, 'கீசக! காமனால்மதிமயக்கமுற்றஉன்ஸ்வரூபத்தை நீ பாது காத்துக்கொள். நான் ஐந்துகந்தர்வர்களுடையப்ரியமானபார்யை; பட்டமஹிஷி. ஒருவராலும்ஜயிக்கமுடியாதவர்களும் ஸாஹஸகார்யத்தைச்செய்கின்றவர்களுமான அந்தச்சூரர்கள் உன்னைக் கொல்வார்கள்' என்றுகூறினேன். இவ்வாறுசொல்லவும், அவன் கெட்டஎண்ணத்துடன் (என்னைப்பார்த்து,) 'ஸைரந்த்ரி! சுத்தமானமந்தஹாஸத்தையுடையவளே! கந்தர்வர்களுக்கு நான்பயப்படமாட்டேன். யுத்தத்தில் ஒன்றுகூடியிருக்கின்ற நூறுகந்தர்வர்களையும் ஆயிரம்கந்தர்வர்களையும் நான் கொல்வேன். பயந்தவளே! எனக்கு ஸந்தோஷத்தை உண்டுபண்ணு' என்றுமறுமொழிகூறினான். இவ்வாறுசொல்லப்பட்ட நான், காமாதுரனான அந்தஸூதனைப்பார்த்து, மறுபடியும், 'கீசக! கீர்த்திசாலிகளான அந்தக்கந்தர்வர்களுக்கு நீ எதிராளி அல்லை. தர்மத்தில் எப்பொழுதும் நான் நிலைபெற்றிருக்கிறேன். குலமும்சீலமுமுடையநான், கொல்லத்தக்கவனானஉன்னைப்பற்றி யாதொன்றையுஞ் (செய்ய) விரும்புகிறேனில்லை. அதனால், நீ உயிரோடிருக்கிறாய்' என்றேன். இவ்வாறுசொல்லபபட்டவனும் கெட்டஎண்ணமுள்ளவனுமான அந்தக்கீசகன், கலகலவென்றுநகைத்துக்கொண்டு நல்லவழியில் நிற்கவில்லை; தர்மத்தையும் அனுஷ்டிக்கவில்லை. பாபபுத்தியுள்ளவனும் பாபத்தைச்செய்பவனும் காமராஜனுக்குவசப்பட்டவனும் விநயமில்லாதவனும் துஷ்டஸ்வபாவமுடையவனுமான அந்தக்கீசகன் அடிக்கடி என்னால் நிராகரிக்கப்பட்டான். அவன் என்னைப்பார்க்குந்தோறும் என்னை ஹிம்ஸிப்பானானால் அப்பொழுதே உயிரைவிட்டுவிடுவேன். அப்படி நான் உயிரைவிடுவேனானால் தர்மத்தில் முயற்சித்துக்கொண்டிருக்கிற உங்களுடையபெரியதர்மமே அழிந்துபோய்விடும். அஜ்ஞாதவாஸப்ரதிஜ்ஞையைக்காப்பாற்றுகிறஉங்களுக்கு மனைவிஇல்லாமல்போய்விடுவாள். 'மனைவிரக்ஷிக்கப்பட்டால் ஸந்ததிரக்ஷிக்கப்பட்டதாகிறது. ஸந்ததிரக்ஷிக்கப்பட்டால் ஆத்மா ரக்ஷிக்கப்பட்டதாகிறது' என்றுவர்ணாச்ரமதர்மங்களை அறிந்த ப்ராம்மணர்கள்சொல்ல நான்கேட்டிருக்கிறேன். க்ஷத்ரியனுக்குத் திருடர்களைக்கொல்வதைக்காட்டிலும் வேறுதர்மம் எப்பொழுதும்இல்லை. மஹாபலமுடையவரே! பீமஸேனரே! தர்மராஜரும் நீரும் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே கீசகன் என்னைப் பின்தொடர்ந்துஓடிவந்தான். பீமஸேனரே! (முன்பு) அந்த ஜடாஸுரனிடத்தினின்றும் உம்மால் நான்

பாதுகாக்கப்பட்டேன். அவ்வாறே ஜயத்ரதனையும் நீர் ஸஹோதரர்களுடன்சேர்ந்து ஜயித்தீர். பாரதரே! கீசகன் ராஜாவினுடைய ப்ரீதிக்குஉரியவனாயிருப்பதால் எனக்குச் சோகத்தைவிளைவிக்கிறான். (இவ்விதமாக) என்னை அவமதிக்கிற இந்தப்பாபியையும் நீர் ஸம்ஹாரஞ்செய்யும். பாதகுலத்திலுதித்தவரே! என்னுடைய பலதுன்பங்களுக்குநிமித்தமாயிருப்பவனும் காமத்தினால்தாபமடைந்திருப்பவனுமான அந்தக்கீசகனை, கல்லில்குடத்தைப்போட்டு உடைப்பதுபோல நாசஞ்செய்துவிடும். அவன் பிழைத்திருக்கும்பொழுது நாளைக் காலையில் ஸூர்யோதயமாகுமானால் நான் விஷத்தைக்கலந்துகுடிப்பேன். (ஒருபொழுதும்) கீசகனுக்குவசப்படமாட்டேன். பீமஸேனரே! உம்முடையமுன்னிலையில் உயிரைஇழப்பது எனக்கு நன்மையைப்பயக்கக்கூடியது" என்று க்ருஷ்ணையானவள் இவ்வாறுசொல்லிவிட்டுப் பீமனுடையமார்பில்சாய்ந்து மிகஅழுதாள். பீமனும் அவளைக்கட்டிஅணைந்து அதிகநல்வார்த்தையைச்சொல்லி ஸமாதானஞ்செய்து இரண்டுகைகளையும் நாவினால்நக்கிக்கொண்டு மனத்தினால் கீசகனைநாடினான். கோபமுள்ளவனான பீமன் மிக்கதுன்பமுற்றவளும் அழகியஇடையுள்ளவளுமான த்ருபதராஜகுமாரியைத் தகுந்த காரணங்களோடும் உண்மைப்பொருள்களோடும்கூடினவசனங்களால் பலவாறாக ஸமாதானஞ்செய்து, கண்ணீரால்நிறைந்தஅவளுடையமுகத்தைத், தன்கையினால் துடைத்து, துக்கத்தினால்பீடிக்கப்பட்டவளான அவளைநோக்கிச் சொல்லலானான்.

இருபத்தைந்தாவது அத்யாயம்.

கீசகவதபர்வம். (தொடர்ச்சி.)

(த்ரௌபதியானவள், பீமன்சொற்படி, கீசகனை வஞ்சனையால் ஓரிடத்தில் வரும்படிதிட்டஞ்செய்து, அதைப் பீமனிடம்தெரிவித்தது.)

"கல்யாணி! பயந்தவளே! நீ எவ்விதஞ்சொல்லுகிறாயோ அவ்விதமே செய்யப்போகிறேன்; இப்பொழுதே பந்துக்களோடுகூட இந்தக்கீசகனைக்கொல்லப்போகிறேன். யாஜ்ஞஸேனி! சுத்தமானசிரிப்பையுடையவளே! துக்கத்தையும் சோகத்தையும் விலக்கிவிட்டு நாளைக்காலையில், இந்தக்கீசகனுடன் இரவில் (சேருவதாக) ஸங்கேதத்தைச்செய். மத்ஸ்யராஜனால் இந்தஇடத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற நடனசாலையில் பகலில் கன்னிகைகள் நர்த்தனம்செய்கின்

ளுர்கள்; அவ்வாறே இரவில் வீடுபோய்ச்சேருகின்ளுர்கள். பயந்த ஸ்வபாவமுடையவளே! அந்தநடனசாலேயில் நன்ருக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றதும் உறுதியான அங்கமுள்ளதுமான ஒருகட்டில் இருக்கிறது. அதன்மீது உன்னைப்பார்ப்பதிஞலுண்டாயிருக்கின்ற காமத்திஞல் கலங்கினபொறிகளையுடைய அந்தக்கீசகனுக்கு முன்னமே இறந்துபோன (அவனுடைய) [1]பாட்டன்மார்களைக் காட்டப்போகிறேன். மங்களகரமானமுகமுள்ளவளே! அவனேடு ஸங்கேதத்தை ஏற்படுத்துகின்றஉன்னைப் பிறர்பாராவண்ணம் ஸூதபுத்ரனுக்கு ஸங்கேதத்தைஏற்படுத்து. கல்யாணி! அந்தக்கீசகன் (எனக்கு) அருகிவிருப்பவனுகும்படி செய். ஸூதபுத்ரனுடையஸங்கேதத்தை (ஒருவருக்கும்) தெரியாதபடி ஏற்படுத்து. பயந்தவளே! ராஜபுத்ரி! நம்மிருவர்களுடையசேர்க்கையையும் ஒருமனிதனும் அறியாவண்ணம் கீசகனுடையவிநாசத்தின்பொருட்டு (ஸங்கேதஸ்தானத்தை) ஏற்படுத்து" என்றுசொன்னுன். அங்கு அவ்விருவர்களும்பேசிக்கொண்டு துக்கத்திஞல் கண்ணீரைச்சொரிந்து இரவின்மிகுதியில் மிகக்கொடியவனுனகீசகனை மனத்திஞல் நினைத்துக்கொண்டிருந்தார்கள். பீமனுல் அப்பொழுது கீசகவதமானது ப்ரதிஜ்ஞைசெய்யப்பட்டவுடன், த்ரௌபதியானவள் மீண்டும் ஸுதேஷ்ணையின் அந்தப்புரம்சேர்ந்தாள். அந்தஇரவானது விடிந்தவுடன், கீசகன் காலையில் எழுந்திருந்து அரசனுடையஅரண்மனையைவந்துஅடைந்து த்ரௌபதியைப்பார்த்து, "ஸைரந்த்ரி! அரசன்பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே உன்னைக் கீழேதள்ளிக் காலாலுதைத்தேன். அப்பொழுது பலசாலியானஎன்னுல் ஆக்ரமிக்கப்பட்டநீ ரக்ஷகனுக ஒருவனையும் அடைந்தாயில்லை. இந்தவிராடன் பெயரினுல்மாத்ரம் மத்ஸ்யதேசத்தார்களுக்கு அரசனென்று சொல்லப்படுகிறுன். மத்ஸ்யதேசத்தார்களுக்கு ஸேனபதியாயிருக்கின்ற நானல்லவோஅரசன். பயந்தவளே! நீ [2]என்னை ஸுகமாகவந்தடை. நான் உனக்குத் தாஸனுயிருக்கிறேன். பயந்தவளே! நான் உன்னைவிட்டு நெடுங்காலம்ஜீவிப்பதற்கு விரும்பவில்லை; அழகியஇடையையுடையவளே! உனக்கு ஒவ்வொருதினத்திலும் நூறு [3]பொன்னுணயங்களைக்கொடுக்கிறேன்; மேலும் நூறு வேலைக்காரிகளையும் நூறுஅடிமைக்காரர்களையும் உனக்குக்கொடுக்கிறேன்; பெண்கோவேறுகழுதைபூட்டின ரதங்களையும் கொடுக்கி

---

[1] 'கொல்லப்போகிறேன்' என்பதுகருத்து. [2] வேறுபாடம்.

[3] 'நிஷ்கம்' என்பதுமூலம். அது, நூற்றெட்டுப்பலம்நிறையுள்ளஸுவர்ணமென்பர்.

றேன். நம்மிருவர்களுக்கும் சேர்க்கையுண்டாகட்டும். நல்லதிறமையுள்ள ஆயிரம்வேலைக்காரர்களையும் ஆயிரம்கடாமாடுகளையும் ஆயிரம் அந்தப்புரங்களையும் ஆயிரம்ஸ்வர்ணக்குவியல்களையும் அரசர்க்குஉரிய எல்லாஉடைகளையும் உனக்குக்கொடுப்பேன்" என்றுசொன்னான். த்ரௌபதி, "கீசக! நான்சொல்லுகிறவார்த்தையை உண்மையாக நம்பு. என்னுடன் நீசேருவதை உன்னுடையதோழனாவது ஸஹோதரனாவது (ஒருவரும்) அறியக்கூடாது. லோகாபவாதத்தில் நான் பயந்தவள். கீர்த்திபெற்றவர்களான கந்தர்வர்களுக்குத்தெரிந்தால் அனர்த்தம்விளையும். பெரிதான அபகீர்த்தியும்உண்டாகும். இதை நீ ப்ரதிஜ்ஞைசெய். அதற்குப்பிறகு நான் உனக்கு வசப்படுவேன்" என்றுகூறினாள். கீசகன், "அழகியஇடையையுடையவளே! இதை நீ சொல்லுகிறபடியே செய்கிறேன். வாழைமரம்போன்ற துடையையுடையவளே! ஸூர்யனுடையதேஜஸ்போன்றதேஜஸையுடையவர்களானகந்தர்வர்கள் உன்னைப் பாராதபடி உன்னுடன்சேருவதற்காக மன்மதமதமுள்ளநான் ஒருவனாகவே ஒருவருமில்லாதஉன்னுடைய க்ருஹத்துக்குவருகிறேன்" என்றுமொழிந்தான். த்ரௌபதி, "மத்ஸ்யராஜனால்ஏற்படுத்தப்பட்டிருக்கிற இந்தநடனசாலையில் பெண்கள் பகலில் நர்த்தனம்செய்கின்றார்கள்; இரவில் தங்கள்வீட்டுக்குச்செல்லுகின்றார்கள். (இன்று) இரவில் அந்தஇடம்போய்ச்சேர். கந்தர்வர்கள் அதைஅறியார்கள். அவ்விடத்தில் (சென்றுநாம்ஸுகத்தை அனுபவிப்போமானால்) குற்றமுண்டாகாது; ஸம்சயமில்லை. நீ இரவில் தனியே ஸங்கேதஸ்தானமான நாட்யசாலைக்கு வந்துசேரவேண்டும். அவ்விடத்தில் நான் உனக்கு உடன்பட்டவளாவேன். இதில் ஸம்சயமில்லை" என்றுசொன்னாள். கீசகன், "கல்யாணி! பயந்தவளே! நீ சொல்லுகிறபடியேசெய்வேன். பெண்மணே! நான் ஒருவனாகவே நர்த்தனசாலைக்குவருவேன். அழகியஇடையையுடையவளே! (உன்னுடன்) சேருவதின்பொருட்டு என்னுடையபுண்யத்தின்மீது சபதம்செய்கிறேன். உத்தமதேஹகாந்தியையுடையவளே! கந்தர்வர்கள் உன்னைஅறியாவண்ணமே நான்செய்வேன்; ஸத்யமாக உனக்கு ப்ரதிஜ்ஞைசெய்கிறேன். கந்தர்வர்களிடத்திலிருந்து உனக்குப் பயம்வேண்டாம். இன்றையதினத்தில் உன்னுடன்சேருவதற்காக நான் (என்னை) விசித்ரமான அழகியஆடைகளால் அலங்கரித்துக்கொள்வேன்; உன்னையும் அலங்கரிப்பேன்; நீஎன்னைவிடாதபடி உன்னோடு ரமிப்பேன்" என்றுகூறினான். த்ரௌபதி, "ஸூத! கீசக! அவ்விதமானால் பிறந்ததுமுதல் உன்னால் அநுபவிக்கப்பட்டிராதஸுக

த்தை நானும் உனக்குக் காண்பிக்கப்போகிறேன்" என்றுசொன்னாள். வேந்தரே! அந்தவிஷயத்தைப்பற்றி வார்த்தைமட்டும்சொல்லுகிற த்ரௌபதிக்கும் கீசகனுக்கும் க்ஷணமாத்ரகாலமானது ஒரு மாஸத்துக்கு ஸமமாயிற்று. பிறகு, மூடனான கீசகன் தன்வீட்டுக்குச்சென்று மிக்கஆனந்தத்தில்மூழ்கினான். அவன், ஸைரந்த்ரிவேஷந்தரித்திருக்கின்ற அந்தத்ரௌபதியைத் தனக்கு ம்ருத்யுவென்று தெரிந்துகொண்டானில்லை. காமத்தால்மோஹிதனிருக்கின்றஅவன் வாஸனைப்பொருள்களிலும் ஆபரணங்களிலும் மாலைகளிலும் விசேஷப்ரீதியுடன் அப்பொழுது தன்தேஹத்தை விரைவில்அலங்கரித்துக் கொண்டான். நீண்டகண்களையுடையவளான அந்தத்ரௌபதியையே இடைவிடாமல் த்யானம்செய்பவனும் அவ்விதமான (சரீராலங்கார) கார்யத்தைச்செய்துகொள்ளுகிறவனுமான அந்தக்கீசகனுக்குக் காலமானது நீண்டதுபோலாகியது. அவியுங்காலத்தில் திரியை (மிகுதியின்றி) எரிக்கப்போகின்றதீபத்துக்கு அதிகமானகாந்தியுண்டாவதுபோலச் செல்வத்தைஇழக்கப்போகிறவனான கீசகனுக்கு அதிகஒளியானது உண்டாகியது. காமத்தால்மோஹிதனான கீசகன் அந்தத்ரௌபதியினிடத்தில் நம்பிக்கைவைத்து அழகியமுகமுடையவளான அவளைநினைத்துக்கொண்டு தனக்குவருமநாசத்தை அறியவில்லை. கல்யாணியான த்ரௌபதியானவள் பிறகு மடைப்பள்ளியையடைந்து குருகுலத்திலுதித்தவனும் (தனக்குக்) கணவனுமான பீமஸேனனுக்குஸமீபத்தில் வந்துநின்றாள். அழகியகூந்தல்நுனியையுடையவளான அந்தத்ரௌபதியானவள் அவனைப்பார்த்து, "பகைவர்களைத் தவிக்கச்செய்பவரே! நீங்கள்சொல்லியவண்ணமே நடனசாலையில் என்னோடு கீசகன் சேருவதென்பது ஏற்படுத்தப்பட்டுவிட்டது. சிறந்தகைகளையுடையவரே! கீசகன் காலத்தால் நிச்சயமாகக்கட்டப்பட்டவனாகவும் காமத்தினால் பலாத்காரமாகத்தூண்டப்பட்டவனாகவும் இரவில் ஒருவனாகவே ஒருவருமில்லாத நடனசாலையை வந்துஅடையப்போகிறான். அந்தக்கீசகனை நீர் நாசஞ்செய்யும். குந்திபுத்ரரே! பாண்டவரே! நீர் நர்த்தனசாலையையடைந்து ஸூதபுத்ரனும் மதத்தினால் இறுமாப்புடையவனுமான அந்தக்கீசகனை உயிரிழக்கச்செய்யும். காவல்கொண்டவனான அந்தஸூதபுத்ரன் கந்தர்வர்களைஅவமதிக்கிறான். பகைவர்களைக்கொல்பவர்களுள்சிறந்தவரே! நீர், யானையானது தாமரைத்தண்டைக்களைவதுபோல அவனைக்களைந்து எறிந்துவிடும். பாரதரே! துக்கத்தினால்சூழப்பட்ட என்னுடையகண்ணீரைத்துடையும். பாஹுவீர்யத்துக்குத்தக்க பராக்ரமத்தை இப்

பொழுது வெளிப்படுத்தும். உமக்கு மங்களத்தையும் உம்முடைய குலத்துக்குக் கௌரவத்தையும் நீர் உண்டுபண்ணும்" என்று கூறினாள்.

பீமன், "சிறந்தவளே! உனக்கு நலவாவா? நேர்த்தியான காந்தியுடையவளே! நீ எனக்கு ப்ரியத்தைத் தெரிவித்தலால், நான் இந்த விஷயத்தில் வேறு ஒரு துணையையும் எதிர்பார்க்கவில்லை. சுத்தமான சிரிப்புடையவளே! (முற்காலத்தில்) ஹிடிம்பனைக் கொன்றதனால் எவ்விதமான ப்ரீதி எனக்கு உண்டாயிற்றோ அவ்விதமான ப்ரீதியானது கீசகனோடு நேரிடப்போகிற சேர்க்கையில் உன்னால் எனக்கு வெளியிடப்பட்டுவிட்டது. ப்ராதாக்களையும் புத்ரர்களையும் ஸத்யத்தையும் முன்னிட்டு நான் உன்னிடத்தில் சபதம் செய்கிறேன்; வ்ருத்ராஸுரனைத் தேவராஜன் கொன்றதுபோலக் கீசகனைக் கொல்லப்போகிறேன்; கேசவர் கேசியைக் கொன்றதுபோலப் பலாத்காரமாகக் கொல்லப்போகிறேன்; ரஹஸ்யமாகவாவது வெளிப்படையாகவாவது கீசகனை நாசம்பண்ணப்போகிறேன். கல்யாணி! காமத்தினால் ஆக்ரமிக்கப்பட்டிருக்கிற மனத்துடன், அடைவதற்கரிய உன்னை விரும்புகிறவனும் மன்மதவிகாரத்தையுடையவனுமான கீசகனை நான் கொல்வேன். ஒருகால், மத்ஸ்யதேசத்தார்கள் என்னால் கீசகன் கொல்லப்பட்டானென்பதைத் தெரிந்துகொள்வார்களாயின், அப்பொழுது அவர்களுக்கு இருப்பிடமான இந்த இடத்தை மனுஷ்யர்களற்றதாகச் செய்வேன். பெண்ணே! துர்யோதனன், மத்ஸ்யதேசத்தார்கள் என்னால் கொல்லப்பட்டார்களென்பதைத் தெரிந்துகொள்வானானால் அப்பொழுது அவனையும் அவனைச் சேர்ந்தவர்களோடும் பந்துக்களோடும் கொன்று கௌரவர்களுடைய ராஜ்யமனைத்தையும் நான் கைப்பற்றுவேன். நான் குந்திபுத்ரரான யுதிஷ்டிரரை அனுஸரித்திருப்பதற்குச் சக்தியுள்ளவனல்லேன். குந்திபுத்ரரான யுதிஷ்டிரர் ஸத்யத்தை வேண்டியமட்டிலும் உபாஸிக்கட்டும். வணக்கமுள்ளவர்களும் (தர்மத்தை) அனுஷ்டிப்பவர்களுமான மற்றவர்களும் இஷ்டப்படி தர்மத்தை உபாஸிக்கட்டும். இவ்விதமான துன்பத்தையடைந்திருக்கின்ற உன்னை உபேக்ஷிப்பதற்கு நான் பொறேன். பாஞ்சாலி! கீசகனுடைய வதத்தினால் மீண்டும் நீ ஸுகமுடையவளாயிரு" என்றான். த்ரௌபதி, "பீமஸேனரே! சிறந்தகைகளுள்ளவரே! உம்மால் செய்யப்படுகிற கீசகவதத்தை நகரத்திலுள்ளவர்கள் அறிவார்களாகில் நான் ஜீவிப்பதற்கு முடியாது. ப்ரபுவே! என்நிமித்தமாக ராஜாவான யுதிஷ்டிரர், ஸத்யத்தினின்று எவ்வாறு விலகாமலிருப்பரோ அவ்வாறு கீசகனை இரவில் ஒருவருக்குந்தெரியாமல் கொன்றுவிடும். (இவ்விஷயம்)

(கௌரவர்களால்) அறியப்பட்டால், புத்திசாலியும் குந்திபுத்ரரும் தர்மராஜாவுமான யுதிஷ்டிரர் இளையஸஹோதரர்களால்சூழப்பட்டு மறுபடியும் கானகம்செல்லவேண்டியதாகும். பாரதரே! தர்மத்தை ப்ரதானமாகக்கொண்டதமையனை எவன்தான் மீறிநடப்பான்? பீமஸேனரே! (இந்தவரலாறு) அறியப்படுவதில் நான் பயப்படுகிறேன். நீர், உம்முடையபராக்ரமத்தை நன்றாகவெளியிடக்கூடாது குருகுலத்தி லுதித்தவரே! சிறந்தபலமுடையவரே! பகைவர்களை அடிப்பவரே! ஸூதபுத்ரன் உம்மால்கொல்லப்பட்டானென்பதை ஒருவரும் அறியாதபடிசெய்யும். சத்ருக்களைச் சிக்ஷிப்பவரே! நீர் ஒருவருடைய கண்ணுக்கும் புலப்படாமலிருந்துகொண்டு அந்தக்கீசகனுடையஉயிரைப் போக்கும்" என்றுசொன்னாள்.

இருபத்தாறுவது அத்யாயம்.

கீசகவதபர்வம். (தொடர்ச்சி.)

(கீசகன், பீமனை த்ரௌபதியெனநினைந்து அவனுடன்பேசியதும், பீமன்அவனைக்கொன்றதும், உபகீசகர்கள்அங்குவந்ததும்.)

பீமன், "கல்யாணி! பயந்தவளே! நீசொல்லுகிறவிதமேசெய்வேன். நான் இருள்மிகுந்தஇரவில் ஒருவராலும்காணப்படாமல் கிடைத்தற்கரியஉன்னை விரும்புகின்ற துராத்மாவான அந்தக்கீசகனுடைய குண்டலங்களையணிந்த அந்தத்தலையை, யானையானது பில்வத்தைஆக்ரமித்து நாசஞ்செய்வதுபோல நாசஞ்செய்வேன். பாஞ்சாலி! தர்மராஜனுடையபுத்ரரானயுதிஷ்டிரரைப்பற்றி நான்சொல்லியது, கோபத்தினாலன்றிவேறில்லை. எவன் ராஜாவானயுதிஷ்டிரரை அனுஸரியாமலிருப்பான்?" என்றுசொல்லினன். மிக்கதோள்வலியுள்ளவனும் ஆண்மையுள்ளவனும் அச்சந்தரும் வன்மையுள்ளவனும் பாண்டவர்களுக்கு ஆனந்தத்தைஉண்டுபண்ணுகின்றவனுமான பீமஸேனன், அவ்விடத்தில் (த்ரௌபதியைப்பார்த்து) இவ்வாறுரைத்து விட்டு நடுநிசியில்எழுந்திருந்து அப்பொழுதே வெண்ணிறமுள்ளதும் மெல்லியதுமான ஒருவஸ்த்ரத்தைத்தரித்து, த்ரௌபதி தன்னைப்பின்தொடர்ந்துவர, நடனசாலையிருக்கின்றவிடம்சென்றான். அந்தப்பீமன் இருளடர்ந்தஇரவில் முந்தியேசென்று ஸிம்மமானது மறைந்திருந்து மானைஎதிர்பார்ப்பதுபோலக் கீசகனை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். கீசகனோ அன்றிரவில்ஸ்நானஞ்செய்து நன்றாகஅலங்

பக்கபபட்டிருக்கின்ற தலைவாயிலையுடைய ஸங்கேதஸ்தலமும் ஒருவருமில்லாததுமான நடனசாலையை விரைவாகவந்தடைந்தான். காமத்தினால்மதிமயக்கமுற்றகீசகன், அந்தஸைரந்த்ரி ஸங்கேதஸ்தலத்திலிருப்பதாகநினைத்துக்கொண்டு அவள்குறிப்பிட்டுச்சொல்லியஇடமாகிய நர்த்தனசாலையையே விரைவாகவந்தடைந்தான். பிறகு மூடனானகீசகன் நடனசாலையில்புகுந்து அவ்விடத்திலுள்ளகட்டிலில் முந்தியேவந்துபடுத்திருக்கின்றவனும் மதங்கொண்டவனும் நிகரில்லாதப்ரதாபமுள்ளவனும் க்ருஷ்ணையை அவமதித்ததினால் உண்டானகோபத்தினால் அதிகமாகஜ்வலிக்கின்றவனும் புருஷச்ரேஷ்டனும் தனக்கு ம்ருத்யுவுமானஅந்தப்பீமனைக் கையினால் தொட்டான். கீசகன் காலனால்தூண்டப்பட்டு ஏகாந்தத்தில் பீமனை அடைந்து, ஆனந்தத்தால் மனமும்புத்தியும்கலக்கமுற்று, மந்தஹாஸஞ்செய்துகொண்டு, (த்ரௌபதிஎன்கிறபுத்தியினால் பின்வருமாறு) ஸம்பாஷிக்கலானான்.

"கல்யாணி! சுத்தமானபுன்னகையுள்ளவளே! என்னால் உனக்காக ஏராளமானபொருள் அனுப்பப்பட்டிருக்கின்றது. அதெல்லாம் உன்னிடத்திலேயே இருக்கட்டும். நீ தானாகவேவந்தகாரணத்தினால் என் வீட்டிலுள்ளஸ்த்ரீகள் என்னைப்பார்த்து, 'நீ பலசாலி; அழகுடையவன்; உனக்குச் சரியானபுருஷன் வேறொருவனும்இல்லை' என்று எப்பொழுதும் புகழ்கின்றார்கள். தாமரைப்பூப்போன்றகண்களையுடையவளே! நான் அழகுள்ளவன்; (மங்கள) ஸ்நானஞ்செய்திருக்கின்றேன்; அதிகமாகஅலங்கரிக்கப்பட்டிருக்கிறேன். ஸ்த்ரீகளை வசப்படுத்தக்கூடியதன்மை என்னிடமிருப்பதால் நான் எப்பொழுதுமே ஸ்த்ரீகளுக்குப்ரியன்; இனியகாட்சியுடையவன்; ஸௌந்தர்யத்தினுடையபயனை அடைந்தேன்" என்றான். பீமன், "தெய்வாதீனமாக நீஅழகாயிருக்கிறாய். பாக்யத்தினால் உன்னை நீ புகழ்ந்துகொள்ளுகிறாய். இவ்விதகுணமும் ரூபமும் சீலமுமுள்ளஒருபெண் இதற்குமுன் உன்னாலும் பார்க்கப்பட்டிருக்கமாட்டாள். ஸூதபுத்ர! இப்பொழுது நீ என்னைப்பார். நீ அறிந்துகொள்வாய். இந்தப்பெண்ணானவள் எவ்விதகுணங்களோடு கூடியிருக்கிறாளென்பதை ஒருமுஹூர்த்தத்தில் நீயே பார்க்கப்போகிறாய். காமத்தினால் ரமிக்கப்போகிறாய். நீ விரைவாக (என்னைத்) தொடுவாய். இப்படிப்பட்ட ஸ்பர்சமானது இதற்குமுன் ஒருபொழுதும் உன்னால் அனுபவிக்கப்பட்டிராது. சாதுர்யமுடையவனானநீ ஸ்பர்சத்தைஅறிகிறாய். நீ காமசாஸ்த்ரமுறைகளில் ஸமர்த்தன்; இவ்வுலகில் ஸ்த்ரீகளுக்கு ப்ரீதி

யைபுண்டுபண்ணுகின்றவன். உனக்குநிகராக வேறுஒருபுருஷனும் கிடையான்" என்றுகூறினான். சிறந்தகைகளுள்ளவனும் பயங்கர மான பராக்ரமமுள்ளவனும் குந்திபுத்ரனுமானபீமன், அந்தக்கீசக னைப்பார்த்து இவ்வாறுசொல்லி விரைவாகஎழுந்திருந்து அட்டஹா ஸம்செய்து, "உன்ஸஹோதரியானவள், ஸிம்மத்தினால்இழுக்கப்படு கின்ற பெரியயானையைப்போல என்னால் பூமியில் இழுக்கப்படுகின்ற வனும் மலைபோன்றவனும் பாபியுமான உன்னைபபார்க்கப்போகிறாள். நீ கொல்லப்பட்டபிறகு ஸைரந்த்ரியானவள் தடையற்றவளாக ஸஞ்ச ரிக்கபபோகிறாள். ஸைரந்த்ரியினுடையகணவர்களும் எப்பொழுதும் ஸுகமாகவேஸஞ்சரிக்கப்போகிறார்கள்" என்றுகூறி, பிறகு மாலை களையணிந்தனவும் நல்லவாஸனைபொருந்தினவுமான (அவனுடைய) தலைமயிர்களைப் பற்றிஇழுத்தான். கீசகனைப பிடித்துக்கொண்டிருக் கின்றவனும் அதிகபலமுள்ளவனுமான பீமன், மாம்ஸத்தில்விருப்ப முள்ள ஒருஸிம்மமானது அல்ப ம்ருகத்தைபபிடித்துக்கொண்டு விள ங்குவதுபோல விளங்கினான். மயிர்களில்பிடிக்கபபட்டவனும் பல சாலிகளுள்சிறந்தபலவானுமான அந்தக்கீசகன், தன்மயிர்களை வேக மாகவிடுவித்துக்கொண்டு பாண்டவனைக் கைகளில்பிடித்தான். வஸ ந்தகாலத்தில் ஒருபெண்யானைநிமித்தமாகப பலமுள்ள இரண்டுஆண் யானைகளுக்குச் சண்டைநேர்ந்ததுபோல, கோபங்கொண்டவர்களும் ஆண்மையில்சிறந்தவர்களுமான அவ்விருவர்களுக்கும் கைச்சண்டை நடந்தது. முற்காலத்தில் பராதாக்களும் வானரச்ரேஷ்டர்களுமான வாலிஸுக்ரீவர்கள் இருவருக்கும் யுத்தம்நேர்ந்ததுபோல, கீசகர்க ளுள் தலைவனான ப்ரதானகீசகனுக்கும் மனிதர்களுள் உத்தமனானபீம னுக்கும் பாஹுயுத்தம் நடந்தது. பீமனும்கீசகனும் புலிகள்போ லக் கர்ஜிக்கின்றவர்களும் கருடனும் ஸர்ப்பமும்போல முயற்சியுள்ள வர்களும் ஸமமானமுயற்சியுள்ளவர்களும் ஸமமானகோபமுள்ளவர் களுமாகி (சற்றுநேரம் சண்டைசெய்து) கீழேவிழுந்தார்கள். மிக்க மதங்கொண்ட யானைகள்போலவும் புற்றைமுட்டுகின்ற காளைகள் போலவும் கர்ஜிக்கின்றவர்களும் ஒத்தவன்மையுள்ளவர்களுமான அவ் விருவர்களும் (சண்டையிட்டு) பூமியில்விழுந்தார்கள். பலவானான கீசகன் கொஞ்சம் தளர்ச்சியடைந்தவனும் கோபத்தால்தலைகுனிந்து நிற்பவனுமான பீமனை முழங்கால்களால்இடித்துப் பூமியில்தள்ளி னான். பிறகு, பலசாலியானகீசகனால் கீழேதள்ளப்பட்டபீமஸேன னே தடியினால் அடிக்கப்பட்ட ஸர்ப்பம்போல வேகத்தோடு கிளம் பினான். பலத்தினால் மிக்கமதங்கொண்டபீமனும் கீசகனுமாகிய அவ்

விருவர்களும் ஜயிக்கும்விஷயத்தில் மாறுபாடுற்றுச் சப்தமின்றி ஒரு வரையொருவர் பற்றிஇழுத்தார்கள். அதனால், அப்பொழுது சிறந்த அந்தநடனசாலையானது அதிகநடுக்கமுற்றது. அவ்விருவர்களும் கோபத்துக்குடன்பட்டவர்களாக ஒருவரைஒருவர் அடித்துக்கொண்டார்கள். பலசாலியானகீசகன், பீமஸேனனால் இரண்டுஉள்ளங்கைகளாலும் மார்பில்அறையப்பட்டு ரோஷத்தினால் சிவந்த கண்களுள்ளவனாகி ஓரடியினின்று மற்றோர்அடி நகராமலிருந்தான். கீசகன் மஹாத்மாவான அந்தப்பீமஸேனனுடையவேகத்தைச் சிறிதுகாலமே ஸஹிப்பதற்குச் சக்தியுள்ளவனானான். வரவர, அவன் பீமஸேனனால் பலக்குறைவுஅடையும்படிசெய்விக்கப்பட்டான். மஹாபலசாலியான பீமஸேனன், கீசகன் (பலத்தால்) குறைவுபட்டானென்பதைஅறிந்து ப்ரஜ்ஞையற்றவனான அவனை வேகத்தோடு இழுத்து மார்பில்அடித்தான். ஜயசாலிகளுள்சிறந்தவனான வ்ருகோதரன் கோபமூண்டு மறுபடியும் பெருமூச்சுவிட்டுக்கொண்டு அப்பொழுது அந்தக்கீசகனைத் தலைமயிர்களில் தானே கெட்டியாகப்பிடித்தான். புலியானது இறைச்சிக்காக ம்ருகயூதபதியைப் பிடிப்பதுபோல மஹாபலசாலியான பீமன், கீசகனைப்பிடித்துக்கொண்டு விளங்கினான். அதிகபலமுள்ளவனும் பலத்தினால் இறுமாப்புடையவனும் (ஒருவராலும்) அவமதிக்கமுடியாதவனுமான கீசகன் பலசாலியானபாண்டவனோடு அந்த நாட்யசாலையில் மறுபடியும் யுத்தஞ்செய்து பீமஸேனனால் முஷ்டியினால் தலையில் நன்றாகஅடிக்கப்பட்டான். கீசகன், சுழலுகின்றசிவந்த கண்களுடன் உயிரையிழந்து பூமியில்விழுந்தான். பிறகு, பீமன் அந்தக்கீசகனுடைய அங்கங்களனைத்தையும்நசுக்கி அவனுடையமுகத்தையும் இரண்டுகைகளையும் இரண்டுகால்களையும் தலையையும் குண்டலங்களுடன்கூடினகழுத்தையும் அவன்உடலில்புகும்படிசெய்தான். அந்தப்பீமன், ஒடிக்கப்பட்ட ஸர்வாங்கங்களையுமுடைய அந்தக்கீசகனை மாம்ஸபிண்டமாகச்செய்தான். அவ்விடத்தில் மஹாபலசாலியானபீமஸேனன், கைகளை ஒன்றோடொன்று தேய்ப்பதினால் உண்டு பண்ணப்பட்ட அக்நியைத் தானே ஜ்வலிக்கச்செய்து க்ருஷ்ணைக்கு அவனைக் காண்பித்தான். மஹாதேஜஸையுடையவனானபீமஸேனன் ஸ்த்ரீகளுள் உத்தமியானத்ரௌபதியைப்பார்த்து, "பாஞ்சாலி! உன்னிடத்தில் மிக்கஆசைகொண்டவனும் பாபியும் பரதாரகமனம்பண்ணுகின்றவனுமான இவனை வந்துபார். காமுகனான இந்தக்கீசகன் என்னால் கொல்லப்பட்டுவிட்டான். அழகியகூந்தல்நுனியையுடையவளே! பயந்ததன்மையையுடையவளே! கல்யாணி! நல்லொழுக்க

முள்ளவளான உன்னை விரும்புகிறவர்கள், பூமியில் உன்னைத்தள்ளிக் காலால் உதைத்த இந்தக்கீசகன் விழுந்துகிடப்பதுபோலவே விழுந்து கிடப்பார்கள்" என்று கூறினான். சிறந்தகைகளையுடையபீமன், இவ்வாறுசொல்லிவிட்டு அப்பொழுது கந்தர்வனால் கீசகன் கொல்லப்பட்டானென்பதை மற்றவர்களுக்கு அறிவிப்பதின்பொருட்டு மஹாயுத்தத்தினின்று நீங்கினான். அந்தப்பீமன் கீசகனை அவ்வாறு கொன்று ரோஷத்துக்குப்பரிஹாரத்தைத்தேடி த்ரௌபதியினிடத்திலிருந்து விடைபெற்றுக்கொண்டு பிறகு விரைவாக மடைப்பள்ளிக்குச்சென்றான். பயங்கரமானபராக்ரமமுள்ளபீமன் ஸ்நானஞ்செய்து, சந்தனம் பூசிக்கொண்டு மனோரதத்தைநிரப்பிப் படுக்கையில் ஸுகமாகப்படுத்திருந்தான். பிறகு, ஸ்த்ரீகளுள் உத்தமியும் த்ருபதராஜகுமாரியுமான க்ருஷ்ணையானவள் எப்பொழுது பீமன் கீசகனைக்கொன்றுவிட்டு மடைப்பள்ளியைப்போய்ச்சேர்ந்தானென்று எண்ணினாளோ அப்பொழுது ஸந்தோஷத்தைஅடைந்து பயத்தைஇழந்து ஸபாபாலகர்களைப்பார்த்து, "என்னுடையபதிகளானகந்தர்வர்களால் கீசகன்கொல்லப்பட்டுக் கிடக்கிறான். பிறனுடையமனைவியிடத்திலுண்டானகாமத்தினால் மிக்கதாபத்தையடைந்த இந்தக்கீசகனை வந்துபாருங்கள்" என்றுகூறினாள். அவளுடைய அந்தவார்த்தையைக்கேட்டு நாட்யசாலையை ரக்ஷிக்கின்றவர்களனைவர்களும் கொள்ளிக்கட்டையைஎடுத்துக்கொண்டு விரைவாக அவ்விடம் வந்துசேர்ந்தார்கள். கீசகனுடையஸஹோதரர்கள், அந்தக்கீசகன் கொல்லப்பட்டானென்பதை த்ரௌபதியிடமிருந்துகேட்டு, அந்தநடனசாலைக்குச்சென்று, பூமியில் தள்ளப்பட்டிருக்கின்றவனும் உயிரைஇழந்தவனும் ரக்தத்தால்மிகவும்நனைக்கப்பட்டவனுமான கீசகனைக்கண்டார்கள். கால்களும் கைகளும் தலையும்அற்றிருக்கிற அந்தக்கீசகனைக்கண்டு அவர்கள்வியப்புற்றார்கள். அப்பொழுது அந்தஉபகீசகர்கள், "இவனுக்குக்கழுத்து எங்கே? கால்கள் எங்கே? கைகள் எங்கே? தலை எங்கே? கண் எங்கே?" என்று கந்தர்வனால்கொல்லப்பட்டிருக்கின்ற கீசகனைப்பரிசோதித்தார்கள். பிறகு, எல்லாரும் (கந்தர்வர்களால்) செய்யப்பட்டிருக்கிற அமானுஷ்யமானசெய்கையையும் கொல்லப்பட்டிருக்கிற அந்தக்கீசகனையுங்கண்டு அதிகமானஆச்சர்யத்தைஅடைந்தார்கள்.

இருபத்தேழாவது அத்யாயம்.

கீசகவதபர்வம். (தொடர்ச்சி.)

அந்தஸமயத்தில் அந்தக்கீசகனுடைய பந்துக்களனைவர்களும் அங்குவந்து அவனைப்பார்த்துப் புலம்பிக்கொண்டு நாலுபக்கத்திலும் சூழ்ந்துநின்றார்கள். அவர்களனைவர்களும் அவ்வாறுமுறிக்கப்பட்ட எல்லா அங்கங்களுடனுங்கூடியவனும் (ஜலத்தினின்று) கரையிலெடுத்துவிடப்பட்ட ஆமைபோன்றவனுமான கீசகனைக்கண்டு மயிர்க்கூச்சம் உள்ளவர்களும் மிகப்பயந்தவர்களுமானார்கள். அவர்கள், மஹேந்த்ரனால்கொல்லப்பட்ட அஸுரன்போலப் பீமஸேனனால்கொல்லப்பட்டவனும் பலத்தினால் மிகவும்மதங்கொண்டவனும் ஒருவராலும்ஜயிக்கமுடியாதவனும் புருஷச்ரேஷ்டனுமாயிருந்த கீசகனானவன் கந்தர்வனால் கொல்லப்பட்டானென்பதைக்கேட்டு அவனைஸம்ஸ்கரிப்பதில் விருப்பங்கொண்டு, (நகரத்துக்கு) வெளியில்கொண்டுபோகத்தொடங்கினார்கள். பிறகு, அந்தஸூதபுத்ரர்கள் ஒன்றுசேர்ந்து ஸமீபத்தில் ஸ்தம்பத்தைக் கட்டிக்கொண்டிருப்பவளும் தோஷமற்றஅங்கங்களுள்ளவளுமான க்ருஷ்ணையைக்கண்டார்கள். அங்குவந்திருந்தஉபகீசகர்களுள்ஒருவன் மற்றவர்களைப்பார்த்துச் சிரிப்பவன்போலவும் கோபத்தினால் கண்ணால் (பிறர்களைக்) கொளுத்துகின்றவன்போலவும் அப்பொழுது, "எவள்நிமித்தமாகக்கீசகன் கொல்லப்பட்டானோ அப்படிப்பட்ட இந்தத்துஷ்டஸ்த்ரீயானவள் சீக்ரமாகக்கொல்லப்படலாம். இல்லாவிட்டால், இவளைக்கொல்லவேண்டாம்; காமியானஇந்தக்கீசகனுடனே இவள் கொளுத்தப்படட்டும். உயிரைஇழந்தவனாயிருந்தாலும் ஸூதபுத்ரனானகீசகனுக்கு ஸர்வவிதத்திலும் நம்மால் ப்ரியமானகார்யமானது செய்யத்தக்கது. இவளோ கெட்டநடையுள்ளவள்; என்னுடையப்ராதாவுக்குச் சத்ருவாயிருப்பவள். எவள்நிமித்தமாக என்னுடையப்ராதா மரணமடைந்தானோ அப்படிப்பட்டஇவள் ஜீவித்திருக்கத் தக்கவளல்லள். ஸூதர்களே! அரசனிடத்தில்தெரிவித்து அனுமதிபெற்றுக் கீசகனுடன்கூடவே இவள்எரிக்கப்படவேண்டும். கந்தர்வர்களால் கொல்லப்பட்டிருந்தாலும் கீசகனுக்கு இது ப்ரியமாகும்" என்றுசொன்னான். பிறகு, ஸூதர்கள்விராடனிடம்சென்று அஞ்சலிபந்தம்செய்துகொண்டு, "(ராஜரே) கீசகன், காமரூபிகளான கந்தர்வர்களால் கொல்லப்பட்டுவிழுந்துகிடக்கிறான்; ஸைரந்த்ரியினால் இரவில் உயிரைஇழக்கும்படி செய்யப்பட்டான். அவனை இவளோடு

கூடவே எரிக்கப்போகிறோம். வீரரே! உம்மால் நாங்கள் கௌரவப் படுத்தப்பட்டிருக்கிறோம். ஆதலால், (இவ்வாறுசெய்வதற்கு) அனுமதிகொடுக்கவேண்டும்" என்றுசொன்னார்கள். ஜனாதிபனானவிராடராஜன் ஸூதர்களுடையபராக்ரமத்தை அறிந்து ஸைரந்த்ரியை ஸூதபுத்ரனோடுகொளுத்த அனுமதிகொடுத்தான். பிறகு, அரசனுடைய அனுமதியைப்பெற்றவர்களான அந்தக்கீசகனுடைய பந்துக்களெல்லாரும் கீசகனைப்பார்த்து நான்குபக்கத்திலும் நின்றுகொண்டு புலம்பினார்கள். அந்தஸூதர்களும் கீசகனோடு க்ருஷ்ணையை (ஆஸந்தியில்) ஏற்றி மயிர்களிலும் கால்களிலும்கட்டி [1]அவளைஉத்தேசித்து, "மிக்க தைர்யமுள்ள இந்தக்கீசகன் இவள்நிமித்தமாகக்கொல்லப்பட்டதனால் இவள் கீசகனுடைய வழியை அடையட்டும். ஸுந்தரியான இவள் (ஒருவராலும்) தடுக்கமுடியாதபராக்ரமத்துடன் கூடியவனும் உயிரை இழந்தவனுமானகீசகனுடனே ஸ்வர்க்கலோகம்போகட்டும்" என்ற வசனங்களைச்சொன்னார்கள். சிறந்தகீர்த்தியுடையவளும் உதாரமான மனத்தையுடையவளும் மங்களமான அங்கங்களுள்ளவளும் மிகச்சிறந்தஸ்வபாவமுள்ளவளுமான அந்தக்ருஷ்ணையானவள் துஷ்டஸ்வபாவமுள்ளவனும் உயிரை இழந்தவனுமான அந்தக்கீசகனோடுசேர்த்து ஆஸந்தியில் துஷ்டர்களானஉபகீசகர்களால் கட்டப்பட்டுப் பரவசமாய் உறுதியான அந்தஆஸனத்தில் தொங்கிக்கொண்டு அழுதாள். பிறகு, ஸூதபுத்ரர்களால் பலாத்காரமாகக்கட்டிக்கொண்டுபோகப் படுகின்றவளும் அழகியஇடையையுடையவளும் இகழப்படாதவளும் நாதர்களையுடையவளும் பதிவ்ரதையுமான அந்தக்ருஷ்ணையானவள் நாதனைவிரும்பிக்கொண்டு உரக்கஅலறினாள். மரித்தவனோடுசேர்த்துக்கட்டப்பட்ட அங்கத்தையுடையவளும் அப்பொழுதுஉயிரோடிருப்பதில்ஆசையற்றவளுமான அந்தத்ரௌபதியானவள் ச்மசானத்துக்குஎதிரில் கொண்டுபோகப்பட்டவளாகிப் பெண்யானைபோல அலறினாள். த்ரௌபதி, "ஜயன் ஜயேசன் விஜயன் ஜயத்ஸேனன் ஜயத்பலன் என்கிறஇவர்கள் என்னுடைய வாக்யத்தை அறியவேண்டும். ஸூதபுத்ரர்கள் என்னைக்கொண்டுபோகின்றார்கள். எவர்களுடைய பெரிதானநாணொலியானது துந்துபிவாத்யத்தினுடைய கோஷம்போலக்கேட்கப்படுகிறதோ அவர்கள் என்னுடையவார்த்தையை அறியட்டும். ஸூதபுத்ரர்கள் என்னைக்கொண்டுபோகிறார்கள். எவர்களுடைய நாணொலியும் கையுறையின்சப்தமும் இடிமுழக்கம்போலிருக்கின்றவோ, யுத்தத்தில் பலசாலிகளான எவர்களுடைய பயங்கரமானசப்த

[1] ஒருசொல்விடப்பட்டது.

மானது பெரிதாகக்கேட்கப்படுகிறதோ, பலசாலிகளான எந்தக்கந் தர்வர்களுடைய ரதத்தின் ஓசையானது மிகஉரக்கக்கேட்கப்படுகிற தோ அவர்கள் என்னுடையவசனத்தை அறியட்டும். ஸூதபுத்ரர்கள் என்னைக்கொண்டுபோகிறார்கள். எவர்களுடையவீர்யமானது ஒப்பற் றதோ, எவர்களுடையபலமும் கீர்த்தியும்இந்த்ரனுடையபலம்போல வும் கீர்த்திபோலவும் இருக்கின்றனவோ ராஜஸிம்மங்கள்போலச்சிற ப்புற்றவர்களான அவர்கள் என்னை அதிகதுக்கமுள்ளவளென்று அறி யட்டும்" என்றுசொன்னாள்.

இவ்வாறு தீனமானஇந்தக்ருஷ்ணையினுடைய புலம்பல்வார்த் தைகளைக்கேட்டவுடன், பீமன் ஆலோசியாமல் படுக்கையினின்று எழுந்திருந்தான். அவன், "ஸைரந்த்ரீ! உன்னால் சொல்லப்பட்ட வார்த்தைகளை நான் கேட்கிறேன். ஆதலால், உனக்கு ஸூதபுத்ரர்க ளிடத்திலிருந்து பயம் ஒருபொழுதும் உண்டாகவேண்டாம" என்று கூறினான். நீண்டகைகளையுடைய அந்தப்பீமஸேனன் இவ்வாறு சொல்லிவிட்டுக் (கீசகர்களைக்) கொல்லவேண்டுமென்கிற எண்ணத் தினால் வளர்ச்சியடைந்தான். பிறகு, அவன் (சண்டைக்கு) ஆய த்தமாகி வஸ்த்ரத்தைச்சுற்றிக்கட்டிக்கொண்டு வாயில்களில்லாதஇட ங்களில் தாண்டிக்கொண்டு அப்பொழுது வெளியில்சென்றான். அந் தப்பீமன் மதில்களைத்தாண்டி வேகமாக மரங்களின்மீதுஏறி அந்தக் கீசகர்கள் சென்றுகொண்டிருக்கும் இடுகாட்டுக்குஎதிராகச்சென் றான். அப்பொழுது அந்தப்பீமன் ப்ராகாரத்தைத்தாண்டி உத்தம மானபட்டணத்திலிருந்து வெளிப்பட்டு வேகத்தோடு (எல்லாவற்றை யுந்) தாண்டிக்கொண்டே ஸூதர்களுக்குஎதிரில் வந்துசேர்ந்தான். மஹாபலசாலியான அவன் சிதையின்பக்கத்தை அடைந்து அவ்விடத் திலிருக்கின்ற ஒருபனைப்ரமாணமுள்ளதும் பருத்தஅடியினையுடைய தும் மேலேஉலர்ந்திருப்பதுமான ஒருமரத்தைக் கண்டான். பய ங்கரமானபராக்ரமமுள்ளபீமன் யானைபோலஅம்மரத்தினருகில் செ ன்று இரண்டுகைகளாலுந்தழுவி அம்மரத்தை (வேரோடு) பெயர்த் தான்; பிறகு, அம்மரத்தைப்பத்துபாகம்நீளம் இலையில்லாமல்செய் தான். பருத்தஉருவமுள்ள அந்தமரத்தை உயரத்தூக்கிப்பிடித்துச் சுழற்றிக்கொண்டு காலதண்டத்தைக்கையில்கொண்ட யமன்போல வேகத்தோடு ஸூதர்களுக்குஎதிரில் வந்துதோன்றினான். அவனுடை யதுடைகளின் வேகத்தினால் ஆலமரங்களும் அரசமரங்களும் பலாசமர ங்களும் முறிக்கப்பட்டுப் பிறகு பூமியில்வீழ்ந்து கிடந்தன. ஸிம்மம் போலக் கோபங்கொண்டுவந்திருக்கின்ற அந்தக்கந்தர்வனைக்கண்டு

அப்பொழுது ஸூதர்கள் வ்யஸனத்தாலும் பயத்தாலும் பீடிக்கப் பட்டு மிகப்பயந்தார்கள். மூத்தோனாகியகீசகனைத் தஹனம்செய்யக் கருதிய உபகீசகர்கள், யமன்போலக்கோபங்கொண்ட பீமனைக்கண்டு, கந்தர்வனென்கிறபயத்தினால் கவலையடைந்து, துயரத்தாலும்பயத்தா லும் மதிமயங்கி அப்பொழுது ஒருவரையொருவர்பார்த்து, "பலசாலி யானகந்தர்வன் கோபத்துடன்ஒருமரத்தைத் தூக்கிக்கொண்டுவருகி றான். கந்தர்வர்கள் நல்லஊக்கமுடையவர்கள்; மஹாபாக்யசாலிகள், ஸூர்யனுடையகாந்திபோன்ற காந்தியையுடையவர்கள். நமக்குப பெரிதானபயம் வந்துவிட்டது. ஸைரந்த்ரியைச் சீக்ரமாக (அவிழ் த்து) விட்டுவிடுவோம" என்று பேசிக்கொண்டார்கள். பிறகு, அவர்கள் பீமஸேனனால் சுழற்றப்படுகின்றமரத்தைபபார்த்து நடுக்க முற்று த்ரௌபதியைவிட்டுவிட்டு நகரத்தைநோக்கி ஓடினார்கள். பிறகு, பீமன், ஓடுகின்றஅவர்களை வஜ்ராயுததைதையேந்தியஇந்த்ரன் அஸுரர்களைப்பார்ப்பதுபோலப பார்த்து, தாண்டிக்குதித்து ஓடி அவர்களுக்கு எதிரில்நின்றான். அவாகள் அவனைப்பார்த்துப் பயத்தி னால் மனக்கலக்கமுற்று அசைவற்றுநின்றார்கள். அந்தவ்ருகோதரன் நூற்றுக்கணக்கான அநுதக்கீசகர்களைபபார்த்து, வஜ்ராயுதமுள்ள இந் த்ரன் தானவர்களை நாசமசெய்ததுபோல, ஒரேஅடியினால் பத்துப் பேர்களையும் எழுபேர்களையும் இருபதுபேர்களையும பதினெட்டுப் பேர்களையும் ஐம்பதுபேர்களையுமகொன்றான். ராஜேந்த்ரரே! வாயு புத்ரனும் பலசாலியும வாயுவின்வேகத்துக்குஒப்பான வேகமுள்ளவ னும் தைர்யலக்ஷ்மியையுடையவனுமானபீமன் நூற்றைந்துஸூதர் களையும் மிச்சமின்றி மரத்தினாலேயே (அடித்து) யமனுடையவீட் டுக்கு அனுபபினான். சிறந்தகைகளுள்ளவனும் மஹாபலசாலியுமான பீமஸேனன் அவர்களைக்கொன்றுவிட்டு அப்பொழுது க்ருஷ்ணையைக் கட்டிலிருநதுவிடுவித்துத் தேறுதலடையசசெய்தான். பரதச்ரேஷ்ட னை அந்தவ்ருகோதரன் பயந்தவளும் கண்ணீரால்நிறைந்தமுகமுள் ளவளுமான பாஞ்சாலியை (ஆபத்தினின்று) ரக்ஷித்து மென்மையான சொல்லால் வசனிக்கலானான். "யாஜ்ஞஸேனி! பதிவ்ராதாதர்மத்தில் நிலைபெற்றவளானநீ துயரமடையாதே. பாதிவ்ரத்யத்தில்நிலைபெற் றிருக்கின்றஸ்த்ரீயானவள் எப்பொழுதும் தன்னுடையவ்ரதத்தைக் காப்பாற்றவேண்டும். பதிவ்ரதையும் கணவனிடத்தில்அன்புள்ளவ ளும் தேவராதருடையமனைவியுமான சிரோமணிஎன்பவள் முன்னொரு காலத்தில தனகணவனுடையவேஷத்தைத்தரித்த ஒருராக்ஷஸனால் அவரப்பட்டாள். அந்தராக்ஷஸன் ஒருகுளக்கரையில் அவளைக்கீழே

இறக்கிவிட்டு அவள்பர்த்தாவினுடையரூபத்தைவிட்டுவிட்டு அதிபயங்கரனான ராக்ஷஸனாகத்தோன்றி ஸாமதானபேதங்களாலும் உடன்படாதிருந்தபொழுது, அவன் அவளை [1]நிர்ப்பந்தஞ்செய்யத்தொடங்கினான். பிறகு, அவள் அப்பொழுது தைர்யத்தைக்கைக்கொண்டு (அந்தராக்ஷஸனுக்கு) இடங்கொடுக்கவில்லை. பிறகு, அவன் கத்தியைஉருவிக்கொண்டு பதிவ்ரதையான அவளைப் பயமுறுத்தினான். க்ருஷ்ணையே! கற்பையேமுதன்மையாகக்கொண்டவளான அந்தஸாத்வியும் பயத்தைநீக்கி உயிரைஇழப்பதில் நல்லநிச்சயமுடையவளாகி 'என்னுடையபர்த்தா என்னால் பரிதேவதையாக ஆராதிக்கப்பட்டிருப்பாரானால், பெரியோர்கள் என்னால் செய்கையினாலும் மனத்தினாலும் வாக்கினாலும் ஸந்தோஷப்படுத்தப்பட்டிருப்பார்களாகில் அந்தஸத்யத்தினால் என்னுடைய [2]சரீரத்தில் சிலபாகம் இப்பொழுது கற்பாறையாகட்டும்' என்று ப்ரதிஜ்ஞைசெய்தாள். இவ்வாறு, அவளால் ப்ரதிஜ்ஞைசெய்யப்பட்டஉடனே அவளுடைய [3]அங்கமானது அவ்விதமான கற்பாறையாகியது. நாபிக்கும் முழங்காலுக்கும் நடுவிலுள்ளஇடம் முழுவதுமே கல்லாய்விட்டது. பிறகு, அந்தராக்ஷஸன் கத்தியை எடுத்துக்கொண்டு அவளுடையதலையை வேகமாக அறுத்தான். அவள் பார்வதிக்கு நகமும்மாம்ஸமும்போல (இணைபிரியாத) ஜயைஎன்கிற ஸகியாவாள். ஆதலால், கற்புள்ளவளுக்குத் துக்கம் அல்பம்; ஸுகம் அதிகம். பயந்தஸ்வபாவமுடையவளே! உன்னைத்துன்புறுத்துகிறவர்கள் இவ்விதமாகவேகொல்லப்படுவார்கள். க்ருஷ்ணையே! நீ நகரத்துக்குப்போ. உனக்குப் பயம்இல்லை. நீ வேறுவழியினால் ஸுதேஷ்ணையினுடையஇருப்பிடத்திற்கு விரைவாகச்செல். நான் வேறுவழியினால் விராடனுடையமடைப்பள்ளிக்குச் செல்லுகிறேன். இரவில் இவ்வாறு நாம்இருந்தோமென்பதை ஜனங்கள் அறியாவண்ணம் நாம் நடந்துகொள்ளவேண்டும்" என்றுசொன்னான்.

பீமனால் ஸமாதானம்செய்யப்பட்டபதிவ்ரதையான அந்தக்ருஷ்ணையானவள் நகரத்தில்ப்ரவேசித்தாள். நல்லலக்ஷணங்களுள்ள அவள் செய்யவேண்டியகார்யத்தைச்செய்துவிட்டு, நஹுஷன்சபிக்கப்பட்ட பிறகு இந்த்ராணியானவள் ஸ்வர்க்கத்தில்ப்ரவேசித்ததுபோல, ஸுதேஷ்ணையினுடைய அந்தப்புரத்தில் ப்ரவேசித்தாள். அளவுகடந்த வீர்யத்தையுடையவனும் சிறந்தபலமுள்ளவனும் பகைவர்களைத்துளைக்கிறவனும் தர்மநந்தனருக்குஇளையஸஹோதரனும் சத்ருக்களைஜயித்தவனும் கம்பீரஸ்வபாவமுடையவனுமான பீமனும், ராமர் ராக்ஷஸர்

1, 2, 3 மூலம் வேறு.

களைக்கொன்றதுபோல எல்லாக்கீசகர்களையும் அவ்விடத்தில் மிச்சமின்றிக் கொன்றுவிட்டு, பிறகு பட்டணத்தில்ப்ரவேசித்தான். பாரதரே! அந்தப்பீமனால் அவ்விடத்தில் கொல்லப்பட்ட நூற்றைந்துகீசகர்களும் வெட்டப்பட்டுச்சாய்ந்துகிடக்கின்ற மரங்களுள்ள பெரிய காடுபோலச் சாய்ந்துகிடந்தார்கள். ராஜரே! இவ்வாறு அந்தநூற்றைந்து உபகீசகர்களும் ஸேனாபதியான அந்தப்ரதானகீசகனும் கொல்லப்பட்டார்கள். இவ்விதமாக நூற்றாறுகீசகர்களும்மாண்டார்கள். கீசகனுடையபந்துக்கள் கந்தர்வர்களிடத்திலிருந்துஉண்டானபயத்தினால் ஒன்றும்பேசவில்லை. அவ்விடத்தில் பயத்தினால் அந்தஸைரந்த்ரியைப்பார்ப்பதற்கும் சக்தியற்றவர்களானார்கள். விராடநகரத்திலுள்ளஎல்லாஜனங்களும் ஒன்றுகூடி, கொல்லப்பட்டிருக்கிற அந்த நூற்றைந்துஸூதபுத்ரர்களையும் காலையில்கண்டார்கள். பாரதரே! பெரிதானஅந்தஆச்சர்யத்தை நகரத்திலுள்ளபுருஷர்களும் ஸ்த்ரீகளும்பார்த்து அதிகமானஆச்சர்யத்தைஅடைந்து ஒன்றும்சொல்லவில்லை.

இருபத்தேட்டாவது அத்யாயம்.

கீசகவதபர்வம். (தொடர்ச்சி.)

பாரதரே! பீமஸேனனால்கொல்லப்பட்ட ஸூதர்களைக்கண்டு அந்தப்பட்டணத்திலிருக்கிற ஜனங்களெல்லோரும் ஒன்றுசேர்ந்து விராடராஜனிடம்சென்று, "ராஜரே! நூற்றுக்குமேலானஸூதபுத்ரர்களும் கந்தர்வனால் கொல்லப்பட்டார்கள். வஜ்ரத்தினால்பிளக்கப்பட்டமலையினுடைய பெரியகொடுமுடிகள்போல ஸூதபுத்ரர்கள் பூமியில்சிதறிக்கிடக்கின்றவர்களாகக் காணப்படுகிறார்கள். அந்தஸைரந்த்ரியும் விடுபட்டு மறுபடியும் உம்முடையஅரண்மனைக்கு வருகிறாள். ஓ! அரசரே! உம்முடையநகரமுழுவதும் ஸந்தேஹிக்கத்தக்கதாகும். ஸைரந்த்ரியோ அவ்விதமானரூபமுள்ளவள். கந்தர்வர்களும் மிக்கபலசாலிகள். புருஷர்களுக்கு ஸ்த்ரீகளுடன்சேர்வதில் விருப்பமுண்டாவது இயற்கை; ஸம்சயமில்லை. ராஜரே! ஸைரந்த்ரியினுடையதோஷத்தினால் உம்முடைய இந்தப்பட்டணமானது விநாசத்தைஅடையாதபடி விரைவாக நன்குசெய்யப்படவேண்டும். ஸர்வாங்கஸுந்தரியும் ரூபலாவண்யங்களால்விளங்குகின்றவளும் மக்களகரியுமான ஸ்த்ரீயைக் கண்ணால் இமையாமல்பார்க்கின்ற புருஷர்களுடைய மனத்துக்கும் கண்ணுக்கும் தடையிராது. ஆதலால், பூமியில் ரூபத்தால்

ஒப்பற்றவளான அந்தஸைரந்த்ரியை எந்தப்புருஷன் பார்த்துக் காமனுக்குவசப்படுவனே அந்தமூடன் கந்தர்வர்களால்கொல்லப்படுகிறான். இவளை அரண்மனையினின்று வெளியில்ஓட்டிவிடும்; முக்யமாகப் பட்டணத்திலிருந்தே ஓட்டிவிடும். காலன் ஸைரந்த்ரியினிடத்தில் ப்ரவேசித்து இந்தப் பட்டணத்தை அழிக்கிறானென்பது நிச்சயம்'' என்று விஜ்ஞாபனம்செய்தார்கள். அவர்களுடைய அந்தவார்த்தையைக்கேட்டு ஸேனைத்தலைவனானவிராடன், "இந்தக்கீசகர்களுக்கு அபரக்ரியையானது நடத்தப்படட்டும். நன்றாகமூட்டப்பட்டிருக்கிற ஒரே அக்னியில் வாஸனைப்பொருள்களை எங்குஞ்சேர்த்து அந்தக்கீசகர்களனைவர்களும் கொளுத்தப்படலாம்'' என்று ஆஜ்ஞாபித்தான். அரசன் இவ்வாறுசொல்லி அதிகமனக்கவலையுற்று மங்களகரமான அந்தப்புரத்தைஅடைந்து தன்பட்டமஹிஷியான ஸுதேஷ்ணையைப் பார்த்து மிகுந்தபயத்துடன் (பின்வருமாறு) உரைக்கலானான்.

"(ஸுதேஷ்ணையே!) ஸைரந்த்ரி இவ்விடம்வந்தால் அவளைப்பார்த்து நான் கட்டளையிட்டதாகவே நீசொல்லவேண்டும். (எவ்வாறெனில்) 'ஏ! ஸைரந்த்ரீ! உனக்கு மங்களம். இப்பொழுது உன்னிஷ்டப்படி (வெளியில்) சென்றுஸஞ்சாரம்செய். ஸைரந்த்ரி! ராஜாவானவர் கந்தர்வர்களிடத்திலிருந்து நேரக்கூடிய அவமானத்தில் பயப்படுகிறார். கந்தர்வர்களால் பாதுகாக்கபபட்டிருக்கிற உன்னிடத்தில் அவர் நேரில்சொல்வதற்கு விரும்பவில்லை. உன்னிடம் ஸ்த்ரீகள்சொல்லுவதில் குற்றமில்லை. ஆதலால்,'நான் உன்னிடத்தில் (இவ்விஷயத்தைச்) சொல்லலானேன்' என்பது'' என்றான். அந்தராஜகிங்கரர்களெல்லாரும் நன்றாகமூட்டப்பட்டிருக்கிற ஒரேஅக்னியில் எல்லாக்கீசகர்களையும் ஸர்வவிதமான ஸம்ஸ்காரங்களோடும் தஹனஞ்செய்தார்கள். பிறகு, பீமஸேனனால் ஸூதபுத்ரர்களைக்கொன்றுவிடுவிக்கப்பட்ட த்ரௌபதியானவள் பயத்தினின்றுவிடுபட்டவளாகி நகரத்தைநோக்கிச்சென்றாள். புலியினால்பயமுறுத்தப்பட்ட பெண்மான்போலப் பயமுறுத்தப்பட்டவளும் உத்தமமான மனோபாவமுள்ளவளும் யௌவனமுடையவளுமான த்ரௌபதியானவள் (தன்னுடைய) அங்கங்களையும்ஆடையையும் நன்றாக அலம்பிக்கொண்டு நகரத்தில்ப்ரவேசித்தாள். ராஜரே! அவளைக்கண்டு கந்தர்வர்களிடமுள்ளபயத்தினால் (அங்குள்ள) புருஷர்கள் பத்துத்திக்குக்களிலும்ஓடினார்கள். சிலர் கண்ணை மூடிக்கொண்டார்கள். அவ்வாறே மற்றஜனங்கள் மயக்கமடைந்து கைகளால் கண்களைமூடிக்கொண்டு ஓடினார்கள். அவ்வாறே (சில) ஜனங்கள், "அந்தஸைரந்த்ரியைப் பாராதேயுங்கள்'' என்றுசொல்லிக்

கொண்டு தீனஸ்வரூபத்துடன் அலறினார்கள். (மற்றும்சிலர்) "ஸௌந்தர்யத்தினால்விளங்கும் இவளை இப்பொழுது பார்ப்பவன் கீசகர்கள் போல நாசம்செய்யப்பட்டு இந்தஇடத்தில் இறக்கவேண்டிவரும்" என்றுசொல்லிக்கொண்டு பயத்தினால் நிலைதவறியமனத்துடன் கந்தர்வர்களிடத்திலிருந்து உண்டானபயத்தால் மயக்கத்தை அடைந்தார்கள். ராஜரே! பிறகு, பாஞ்சாலியானவள் சமையற்கட்டிடத்தினுடையவாயிலில் மதங்கொண்ட பெரியயானைபோலவீற்றிருக்கும் பீமஸேனனைக்கண்டு பரிஹாஸத்துடன் குறிப்புக்களோடு மெல்லப் பின்வருமாறு சொல்லலானாள். "எவரால் நான் (ஆபத்தினிடமிருந்து) விடுவிக்கப்பட்டேனோ அந்தக கந்தர்வராஜருக்கு வந்தனம். தோஷமற்றவளும் நாதனில்லாதவளாக வீட்டில்வஸித்துக்கொண்டிருக்கின்றவளும் கீசகர்களிடத்திலிருந்துபயந்தவளுமான என்னை ரக்ஷித்த கந்தர்வருக்கு வந்தனம்" என்றாள். பீமன், "எந்தப்புருஷர்கள் [1]உனக்கு ஸ்வாதீனப்பட்டவர்களாக இவ்வுலகில்ஸஞ்சரிக்கிறார்களோ அவர்களுக்கு எப்பொழுதும் நீவசப்பட்டவளாக இஷ்டப்படிஸஞ்சரித்துக்கொண்டிரு. எந்தப்புருஷர்கள் (உனக்கு) ஸ்வாதீனப்பட்டவர்களாக இவ்வுலகில் ஸஞ்சரிக்கிறார்களோ அவர்கள் இனி அப்படிப்பட்ட உன்னுடையவார்த்தையைக்கேட்டுக் கடனில்லாதவர்களாக விளையாடிக்கொண்டிருக்கட்டும்" என்றான். அவ்விருவர்களுடைய அந்தவார்த்தையையும்கேட்டு மற்றஜனங்கள் (அதன் கருத்தை) அறியவில்லை. பிறகு, பாஞ்சாலராஜகுமாரியும் (வேறிடத்திற்குச்) சென்றாள். பிறகு, அவள் நடனசாலையில் விராடராஜனுடைய பெண்களுக்கு நடனம்கற்பிக்கின்றவனும் சிறந்தகைகளுள்ளவனுமான தனஞ்சயனைக் கண்டாள். பிறகு, அந்தக்கன்னியர்கள் அர்ஜுனனுடன் நடனசாலையிலிருந்து வெளியில்வந்து, வருகின்றவளும் துன்பமடைந்தவளும் குற்றமற்றவளுமான த்ரௌபதியைக்கண்டார்கள். கன்னியர்கள், "ஸைரந்த்ரி! நீ பாக்யத்தால் ஆபத்தினின்றுவிடுவிக்கப்பட்டாய்; பாக்யத்தினால் மீண்டு (இங்கு) வந்தாய். குற்றமற்றவளானஉன்னைத் துன்பப்படுத்தினஸூதர்களும் உன்பாக்யத்தால் கொல்லப்பட்டார்கள்" என்றுசொன்னார்கள். ப்ருஹன்னளை, "ஸைரந்த்ரி! எவ்விதம் நீ விடுவிக்கப்பட்டாய்? அந்தப்பாபிகள் எவ்வாறு கொல்லப்பட்டார்கள்? உன்வரலாற்றை நான் கேட்கவிரும்புகிறேன். உள்ளபடி நீ உரைப்பாயாக? என்றுவினவ, ஸைரந்த்ரி, "ப்ருஹன்னளையே! ஸைரந்த்ரியினால் உனக்கு இப்பொழுது என்னகார்யமிருக்

1 'யஸ்யா:' என்பது மூலம்.

கின்றது? கல்யாணி! நீ எப்பொழுதும் ஸுகமாகக் கன்யாமாடத்தில் மகிழ்ந்திருக்கிறாய். ஸைரந்த்ரி அடைகிறதுக்கத்தை நீ அடைகிறாயில்லை. நீ ஸுகமாக இங்கே இருக்கிறாய். அவ்விதமான துக்கம் உன்னால் அடையப்படவில்லை. ஆதலால், துக்கமடைந்திருக்கின்ற என்னைப்பார்த்துச் சிரித்துக்கொண்டு இம்மாதிரியாக வினவுகிறாய்" என்றுசொல்ல, ப்ருஹன்னளை, "கல்யாணி! இந்தப்ருஹன்னளையும் விலங்குஜாதியில்பிறந்த ஒருஜந்துவைப்போல முடிவில்லாததுக்கத்தை அடைந்திருக்கிறாள். இவளை நீ அறியவில்லை. பெண்ணே! உன்னுடன் நான் வாஸம்செய்திருக்கிறேன். நீயும் எல்லோருடனும்சேர்ந்து வாஸஞ்செய்திருக்கிறாய். உன்னைக்காட்டிலும் மிக்ககஷ்டத்துடன் நான்வஸித்துவருகிறேன். அழகியஇடையையுடையவளே! நீ துயரப்பட்டுக்கொண்டிருக்கும்போது எவன்தான் (அப்படிப்பட்ட உன்) துக்கத்தை (மனத்தில்) எண்ணுமலிருப்பான்? ஒருவனாலும் ஒருவனுடையமனமானது முழுதும் ஒருஸமயத்திலும் அறியமுடியாதென்பது நிச்சயம். அதனால் என்னை நீ அறியவில்லை" என்றாள். பிறகு, த்ரௌபதியானவள் பெண்களோடுகூடவே அந்தராஜக்ருஹத்தில் நுழைந்து அஸூயையற்றவளாக ஸுதேஷ்ணையிடம் சென்றாள். அவளைநோக்கி, ராஜபத்நியானவள் விராடனுடைய சொற்படி, "ஸைரந்த்ரி! நீ எங்கேபோகவேண்டுமென்று விரும்புகிறாயோ அவ்விடம் விரைவாகச்செல். ஸைரந்த்ரி! அரசர் கந்தர்வர்களிடத்தினின்று அனர்த்தம்நேரிடுமென்று பயப்படுகிறார். நீயும் யௌவனமுடையவள்; அழகியபுருவங்களுள்ளவள்; ஸௌந்தர்யத்தினால் பூமியில் நிகரில்லாதவள். கல்யாணி! புருஷர்களுடையமனமும் ஸ்பர்சத்தினால் உண்டாகிறஸுகத்தில் பற்றுள்ளது. ஆதலால், உன்னிடத்திலிருந்து எனக்கும் தேசத்துக்கும் நகரத்துக்கும் பயமுண்டாயிருக்கிறது. நீ இஷ்டப்படி ஸுகமாயிருக்கத்தக்க இடத்தைக்குறித்து இப்பொழுதே (இந்த) நகரத்தினின்று போய்விடு. கல்யாணி! உன்நிமித்தமாக என்னுடையபந்துக்கள் அனைவர்களும் கொல்லப்பட்டார்கள். என்னுடைய ப்ராதாக்களை நீகொன்றகாரணத்தால் உன்னுடையபுத்தி கொடிது. ஆகையால், கந்தர்வராஜர்களிடத்திலிருந்து இப்பொழுது பயம்உண்டாகிறது. ஸைரந்த்ரி! (உனக்கு) இவ்வுலகில் எவ்வாறு க்ஷேமமுண்டாகுமோ அவ்வாறு இஷ்டப்படிசெல்" என்றாள். ஸுதேஷ்ணையினுடையவார்த்தையைக்கேட்டு ஸைரந்த்ரியானவள், "கோபமுள்ளவளே! முப்பதுநாள்வரையில் அரசர் பொறுத்துக்கொண்டிருக்கட்டும். (அதற்குள்) அந்தக்கந்தர்வர்கள் கார்யஸித்தி

யடைவார்கள்; ஸம்சயமில்லை; பிறகு, என்னைத் தங்களிடம்அழைத்துக்கொள்வார்கள்; உனக்கு ப்ரியத்தையும்செய்வார்கள். நிச்சயமாகவே அரசர் பந்துக்களோடுகூட நன்மையை அடைவார். கல்யாணி! அந்தக்கந்தர்வர்கள் அரசரால்உதவிசெய்யப்பட்டவர்களும் எப்பொழுதும் நன்றிஅறிவுள்ளவர்களும் நல்லஸ்வபாவமுள்ளவர்களும் பலத்தினால் அதிககர்வமுள்ளவர்களும் ப்ரத்யுபகாரஞ்செய்வதில் விருப்பமுள்ளவர்களுமாயிருக்கின்றார்கள். நான் (நிச்சயமானமுப்பதுநாள்வரையில் இங்குவஸிக்க) விரும்புகிறேன். நீ தடைசொல்லாதே. (நான்இங்கு வஸிப்பதால் சுபமோ அசுபமோ) எதுவருமென்பதை ஆலோசனை செய். அந்த (முப்பது) நாள்வரையில என்னைக்காப்பாற்று. அதனால் உனக்கு நன்மைஉண்டாகும்" என்றுகூறினாள். அந்தஸைரந்த்ரியினுடைய அந்தவார்த்தையைக்கேட்டு, கேகயராஜகுமாரியான ஸுதேஷ்ணையானவள் ப்ராதாக்களுக்குநேர்ந்த விபத்தினால் பீடிக்கப்பட்டுத் துக்கத்தினால் மதிமயங்கித் துன்பத்துடன் த்ரௌபதியைப்பார்த்து, "கல்யாணி! நீ இஷ்டப்படி வாஸம்செய். உன்னை நான் சரணமடைந்தேன். என்னுடையபர்த்தாவையும் விசேஷித்துப்புத்ரர்களையும் நீ காப்பாற்று" என்றுசொன்னாள். ராஜச்ரேஷ்டரே! ஸுதேஷ்ணையானவள் இவ்வாறு சொல்லிவிட்டு (விராடராஜனிடம்வந்து,) "(மஹாராஜரே!) பயந்தவளான இந்தஸைரந்த்ரியானவள் இந்தமுப்பதுநாள் (இவ்விடத்தில்வாஸஞ்செய்து) க்ருதக்ருத்யையாகட்டும். நான் (அதுவரையில் இவ்விடத்தில் இவளை) வஸித்துவரும்படிசெய்கிறேன்" என்று அரசனிடம் எல்லாவிஷயத்தையும் தெரிவித்தாள்.

கீசகவதபர்வம் முற்றிற்று.

இருபத்தோன்பதாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம்.

(பாண்டவர்களைத்தேடி விராடநகரம்சென்றசாரர்கள் ஹஸ்தினபுரம் சென்று துர்யோதனனிடத்தில் தாங்கள் பாண்டவர்களை அறியவில்லையென்பதையும் கீசகவதத்தையும் தெரிவித்தது.)

கீசகன்கொல்லப்பட்டவுடன், சத்ருவீரர்களைக் கொல்லும்திறமையுடைய விராடராஜன் மந்த்ரிகளோடும் புரோஹிதர்களோடும் மிக்கசோகத்தை அடைந்தான். ராஜரே! அந்தநகரத்திலும் தேசத்

திலுமுள்ள ஸாமான்யஜனங்கள், ஸஹோதரர்களோடுகூடின கீசகனுடைய கோரமானவதத்தைக் கேட்டு, இதுமஹாபயங்கரமென்றெண்ணி ஆச்சர்யமடைந்து, " வீர்யமுடையவனும் ராஜாவுக்குநண்பனும் கொழுப்பினால் அதிககர்வம்கொண்டவனும் யுத்தத்தில்அட்டஹாஸம்செய்பவனும் பலசாலியும் யுத்தத்தில் ஒருவராலும் ஜயிக்கமுடியாதவனுமானகீசகனெனவன் பகைவர்களைநாசஞ்செய்கின்றவனும் பெண்போகம்தேடுகிறவனும் கெட்டபுத்தியுள்ளவனுமாயிருந்தான். அவன் ஸைரந்த்ரிநிமித்தம் கந்தர்வர்களால் இரவில்கொல்லப்பட்டானும்" என்று எல்லாவிடங்களிலும் பேசிக்கொண்டார்கள். மஹாராஜரே! கீசகன் கொல்லப்பட்டவுடன் அந்தஅந்தத்தேசங்களிலுள்ள மனிதர்கள் வியப்புற்று இவ்வாறு கீசகனுடையவிநாசத்தைப்பற்றிப் பேசிக்கொண்டார்கள்.

பிறகு, துர்யோதனனால் வெளிநாடுகளில் (பாண்டவர்களைத் தேடுவதற்காக) அனுப்பப்பட்டிருந்தசாரர்களெல்லாரும் (துர்யோதனனுடைய) கட்டளைப்படி ஸங்கேதஞ்செய்துகொண்டு அநேகதேசங்களிலும் க்ராமங்களிலும் நகரங்களிலும்தேடி, பிறகு, தாம்சொல்லிக்கொண்டபடி (ஒருவரைஒருவர்) பார்த்துக்கொண்டு ஹஸ்தினபட்டணத்துக்குத் திரும்பினார்கள். அவர்கள் ஹஸ்தினபட்டணத்தைவந்தடைந்து அங்கு பகைவர்களைஅடக்குபவனும், குருவம்சத்திலுதித்தவனும், த்ருதராஷ்ட்ரகுமாரனும், த்ரோணர் கர்ணன் க்ருபர் மஹாத்மாவானபீஷ்மர் இவர்களோடும் ஸஹோதரர்களோடும் மஹாரதர்களான த்ரிகர்த்தர்களோடும் சேர்ந்திருக்கின்றவனுமான துர்யோதனமஹாராஜனைக்கண்டு தலையால் பூமியில்வணங்கி, 'ஜயமடைவீராக' என்ற ஆசீர்வாதத்தால் (அவனை) மேன்மைப்படுத்தி, பிறகு, ஸௌர்யனுக்குஸமமும் ஸ்வர்ணமயமும் உத்தமமுமான ஆஸனத்தில்வீற்றிருப்பவனும் தேவர்களால் இந்த்ரன்போற்றப்படுவதுபோல மந்த்ரிகளால்போற்றப்படுகிறவனும் கற்றறிந்தவர்களாலும் பாடகர்களாலும் கவிகளாலும் ஸ்துதிபாடகர்களாலும் பரிவாரங்களுடன்கூடின அநேகமன்னர்களாலும் வணங்கப்பட்டவனும் ஸபையின்நடுவில்வீற்றிருப்பவனுமான அவனைப்பார்த்து, " ஓ! மனுஷ்யேந்த்ரரே! ஜனங்களில்லாததும் துஷ்டம்ருகங்களால்சூழப்பட்டதும் பற்பலவண்டுகளால்வ்யாபிக்கப்பட்டதும் கொடிகளாலும் செடிகளாலும் (அடர்ந்ததும்) உள்ளேபுகமுடியாததும் பற்பலபுதர்களால்சூழப்பட்டதுமான அந்தப்பெரியஅரண்யத்தில் அந்தப்பாண்டவர்களைத்தேடுவதின் பொருட்டு எப்போதும் நாங்கள் பெரியமுயற்சியைச்செய்தோம்.

அதிகஉறுதியான வல்லமையுள்ளபாண்டவர்கள் சென்றவழியை நாங்கள் அறியோம். ஆச்ரமங்களிலும் காடுகளிலும் உயர்ந்தமலைகளின் சிகரங்களிலும் பற்பலதேசங்களிலும் ஜனங்கள்நிறைந்திருக்கின்ற தேசங்களிலும் நாற்சந்திகளிலும் பட்டணங்களிலும் நாங்கள் (பார்த்தர்களுடைய) அடிவைப்பைத் தேடினோம். நரேந்த்ரரே! விரைவாக (ஓடி) ஒளிந்தவர்களானபாண்டவர்களை நாங்கள் அறியவில்லை. மனிதரிற்சிறந்தவரே! முற்றிலும்காணுமல்போனதினால் அவர்கள் நாசமடைந்திருக்கவேண்டும். உமக்கு மங்களம். மலைகளின்உச்சியிலிருக்கும் புதர்களிலும் குகைகளினிடையிலும் தாழ்வரைகளிலும் நதிகளிலும் மலையருவிகளிலும் மடுக்களிலும் தடாகங்களிலும் செல்லுதற்கரியகாடுகளிலும் க்ராமங்களிலும் பூந்தோட்டங்களிலும் யானைகளின் அருகிலும் புலிகளின்அருகிலும் ஸிம்மங்களின்ஸமீபத்திலும் சரபங்களின்மத்தியிலும் நாங்கள் தேடினோம். அவர்களுடையகதியானது (எவ்விதத்தினாலும்) அறியமுடியாததாயிருக்கிறது. ரதிகர்களுள்உத்தமரே! மனுஷ்யேந்த்ரரே! வழியில் (பாண்டவர்களின்) ரதங்களின் கதியை (அறியவிரும்பிக்) கொஞ்சகாலம் நாங்கள் அவர்களுடைய தேர்ப்பாகர்களை அநுஸரித்தோம். பகைவர்களைவாட்டுபவரே! நாங்கள் முறைப்படி தேடிப்பார்த்து உண்மையாக விஷயங்களை அறிந்துகொண்டோம். ஸாரதிகள் பார்த்தர்களின்றி த்வாரகைக்குச்சென்றுவிட்டார்கள். ராஜேந்த்ரரே! அந்தத்வாரகையில் க்ருஷ்ணையும் இல்லை; மஹாவ்ரதமுள்ளபாண்டவர்களுமில்லை. நரதேவரே! உண்மையை உரைத்தோம். பாண்டவர்களை இப்புவியில் நாங்கள்காணவில்லை. பகைவர்களைவாட்டுபவரே! நீர் ஸுகமாயிரும். அவர்கள் நசித்துவிட்டார்கள். நீர் ஸ்வஸ்தமாகஇரும் எல்லாவிதத்தினாலும் அவர்கள் நசித்துவிட்டார்கள். பரதர்களிற்சிறந்தவரே! உமக்கு வந்தனம். மலைகள் வனங்கள் காடுகள் தேசங்கள் நகரங்கள் க்ராமங்கள் பட்டணங்கள் இவற்றையுடைய பூமிமுழுவதும் மிச்சமின்றி எல்லாஇடத்திலும் நாங்கள் தேடினோம். பாண்டவர்களைக் காணவில்லை. மனுஷ்யேந்த்ரரே! மறுபடியும் (எங்களுக்குக்) கட்டளையிடும். வேந்தரே! இதற்குமேல் பாண்டவர்களைத்தேடும்விஷயத்தில் மறுபடியும் நாங்கள்என்னசெய்யக்கடவோம். வீரரே! ப்ரியமும் மங்களகரமுமான எங்களுடைய இந்தவார்த்தையையும் கேளும். அரசரே! பாதவம் சத்திலுதித்தவரே! மத்ஸ்யராஜனைச்சேர்ந்தவனும் ஸூதஜாதியில் பிறந்தவனும் மிக்கபலசாலியும் த்ரிகர்த்தர்களைப் பெரும்பாலும் பலத்தினால் நாசம்செய்தவனுமானகீசகன் இரவில் கந்தர்வர்களால் அடித்

துத்தள்ளப்பட்டுக் கிடக்கிறான். நராதிபரே! விராடராஜனுக்குமைத்துனனும் ஸேனாபதியும் கம்பீரமானபுத்தியுடையவனும் ஸுதேஷ்ணைக்குஇளையஸஹோதரனும் கொடியவனும் சூரனும் வீரனும் துன்பமற்றவனும் ஊக்கமுடையவனும் மஹாவீர்யமுள்ளவனும் நீதியும் பலமுமுள்ளவனும் யுத்தம்செய்யுமுறைகளை அறிந்தவனும் பகைவர்களுடையவீர்யத்தைநாசஞ்செய்பவனும் ஸிம்மத்துக்குஒப்பான வன்மையுள்ளவனும் குடிகளைக்காப்பதிலும் பகைவர்களைப்பிடிப்பதிலும் வல்லவனும் பெரும்போரில்பகைவர்களைவென்றவனும் மிகக்கொடியவனும் கௌரவத்தையே முதன்மையாகக்கொண்டவனும் ஸ்த்ரீபுருஷர்களுடையமனங்களை ஆனந்தப்படுத்துகின்றவனும் தைர்யமும் நன்றாகப்பேசும்திறமையும் யுத்தத்தில்விருப்பமும் புண்யச்செய்கைகளுமுள்ளவனும் பொருளின்பங்களுக்குஆதாரமாயிருப்பவனும் மனிதர்களுள்உத்தமனும் (பகைவர்களுடையபெருமையைப்) பொறாதவனும் கொடியநெஞ்சமுள்ளவனுமான அந்தக்கீசகன் ஸஹோதரர்களோடு ஸ்த்ரீநிமித்தமாக நடுநிசியில் கந்தர்வர்களால் கொல்லப்பட்டான்; இவனுடையஸ்நேஹிதர்களும் கொல்லப்பட்டார்கள்; யுத்தவீரர்களும் ஆயுதங்களால் அடிக்கப்பட்டார்கள். கந்தர்வர்களுக்கு மனைவியும் அழகியஇடையுள்ளவளுமான ஸைரந்த்ரிஎன்கிற ஒருஸ்த்ரீ இருக்கிறாள். கொழுப்பும் கெட்டஎண்ணமுமுள்ளவனும் பலசாலியுமான அந்தக்கீசகன் அவளை விரும்பினான். அந்தக்கீசகன் அநேக பந்துக்களுடன் இரவில் கந்தர்வர்களால் கொல்லப்பட்டானென்னும் வ்ருத்தாந்தத்தை நாங்கள் கேட்டோம். ராஜேந்த்ரரே! ஆகையால், இதுமுதல் பாண்டவர்களைத்தேடும்பொருட்டுச் சாரர்களை எங்கும் ஸஞ்சரிப்பதற்காக நீர் அனுப்பவேண்டுமென்பது எங்களுடைய எண்ணம். நராதிபரே! துஷ்டாத்மாவானகீசகன் தம்பிமார்களுடன் இரவில் கந்தர்வர்களால்கொல்லப்பட்டான். இவ்வளவுமட்டில் நாங்கள் கேள்வியுற்றோம். உமக்கு மங்களமுண்டாகட்டும். குருகுலத்தில்உதித்தவரே! செய்யவேண்டியகார்யத்தைச்செய்தநீர், இந்தப்ரியத்தையும் பகைவர்களுடையஅவமானத்தையும் கேட்டு, இனி செய்யத்தக்கதை உடனே செய்யும்” என்றுசொன்னார்கள்.

முப்பதாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(துர்யோதனாதிகள் பாண்டவர்களைத்தேடுவதற்குஆலோசனைசெய்தது.)

பிறகு, துர்யோதனமஹாராஜன் அப்பொழுது அவர்களுடைய வார்த்தையைக்கேட்டு நெடுநேரம் மனத்தில்சிந்தித்து ஸபையிலிருக்கின்றவர்களைப்பார்த்து இவ்விதமானவார்த்தையைச்சொல்லலானான். "(ஸபையோர்களே!) கார்யத்தின்கதியானது உண்மையாக அறிவதற்குமுடியாததன்றோ? ஆதலால், நீங்கள்எல்லாரும் நன்றாகஆராய்ந்துபாருங்கள். பாண்டவர்கள் எங்கேபோயிருப்பார்கள்? அவர்களுக்குஅஜ்ஞாதவாஸகாலமாகஏற்பட்ட இந்தப்பதின்மூன்றாவதுவர்ஷத்தில் அனேகமாகக் காலம்சென்றுவிட்டது; கொஞ்சம்மிகுதி இருக்கிறது. இந்தஸமயத்தில் அந்தப்பாண்டவர்கள் இந்த வர்ஷத்தின்மிகுதியையும் தாண்டிவிடுவார்களானால், ப்ரதிஜ்ஞையைநிறைவேற்றினவர்களும் ஸத்யத்தையும் வ்ரதத்தையும் ப்ரதானமாகக் கொண்டவர்களுமான அவர்களனைவரும் மதப்பெருக்குடையசிறந்த யானைகள்போலவும் ஸர்ப்பங்கள்போலவும் நிச்சயமாகக் கௌரவர்களைக்குறித்து, (தங்களால்முன்புஅனுபவிக்கப்பட்டிருக்கிற) துக்கத்தினால் அதிககோபமுடையவர்களாவார்கள். புருஷர்களிற்சிறந்த பாண்டவர்கள் ஸமர்த்தர்களும் கற்றறிந்தவர்களும் வல்லமையுடையவர்களும் நன்றாகமறைந்திருக்கின்றவர்களுமான சாரர்களால் நன்றாக உபயோகிக்கப்பட்டிருக்கிற (உபாயத்துடன்கூடின) ஊஹத்தினால் அறியத்தக்கவர்கள். கஷ்டமானநிலைமையை அடைந்திருக்கின்ற பாண்டவர்கள் அஜ்ஞாதவாஸகாலத்தில் அறியப்படுவார்களாயின், கோபத்தைஅடக்கிக்கொண்டு ப்ரதிஜ்ஞைசெய்திருக்கிறகாலம் முடிவதற்குள்ளாகவே மறுபடியும் கானகத்தில்செல்லுவார்கள். ஆதலால், (நம்முடைய) ராஜ்யமானது நாசமற்றதும் குறைவற்றதும் இரண்டாவதுஅரசனில்லாததும் கவலையற்றதும் பகைவர்களையிழந்ததுமாக நெடுங்காலம் நிலைபெற்றிருக்கத்தக்கஉபாயத்தை விரைவாகத்தேடுங்கள்" என்றான்.

அதிகவ்யஸனமுற்றவனான துர்யோதனன் இவ்விதமான வார்த்தையைச்சொன்னவுடன், கர்ணன், ஸத்யமும் தர்மமும் அர்த்தமுமுள்ளவாக்யத்தை (பின்வருமாறு) உரைக்கலானான். "பாரதகுலத்திலுதித்தவனே! மறுபடியும் இவர்கள்போகவேண்டாம். வேறு

சாரர்கள்போகட்டும். சுறுசுறுப்புள்ளவர்களும் யோக்யர்களும் ஸாமர்த்தியமுடையவர்களும் மறைந்துஸஞ்சரிக்குந்தன்மையுடையவர்களுமான சாரர்கள் வளப்பமுள்ளவைகளும் க்ராமங்களால்நிறைந்தவைகளுமான பலதேசங்களில் ஸஞ்சரிக்கட்டும். ராஜனே! அவ்விடங்களிலுள்ளனவும் மனத்தைக்கவர்வனவுமான ஸபைகளிலும் ராஜதானிகளிலும் தீர்த்தங்களிலும் பற்பலவிதமான [1]ஆகரங்களிலும் ஸித்தவேஷமும் ப்ராம்மணவேஷமுந்தரித்து, மறைந்துஸஞ்சரிப்பவர்களான பாண்டவர்களைத்தேடவேண்டும். ஓ! மனுஷ்யேந்த்ர! நல்லநிபுணர்களும் அதைஅறிந்தவர்களால் ஒப்புக்கொள்ளப்பட்டவர்களும் அவ்விதமாகத் தேடுகின்றதையே ப்ரதானகார்யமாகக் கொண்டவர்களுமான பற்பலசாரர்களால் நல்லரீதியுடன்கூடின ஊஹத்தால், பாண்டவர்கள் நதிகளுடைய (ஸமீபத்திலுள்ள) புதர்களிலும் தீர்த்தங்களிலும் க்ராமங்களிலும் நகரங்களிலும் ரம்யமானஆச்ரமங்களிலும் மலைகளிலும் குகைகளிலும் தேடத்தக்கவர்கள்" என்று சொன்னான். பிறகு, தமையனான துர்யோதனனுக்கு உடன்தம்பியும் அண்ணனான அவனுக்கு ப்ரியத்தையும் ஹிதத்தையும்செய்வதில் அதிகப்பற்றுள்ளவனும் ப்ராதாவுமான துச்சாஸனன் அந்தஸபையில் தன் தமையனான துர்யோதனனைப்பார்த்துப் பின்வருமாறுசொல்லலானான். "மனுஷ்யர்களுக்குநாதரே! மன்னரே! நமக்குநம்பிக்கையுள்ளசாரர்கள் நாம்கொடுக்கும்வெகுமதியைப்பெற்றுக்கொண்டு மறுபடியும் பாண்டவர்களைத்தேடுவதற்குச் செல்லட்டும். ராஜேந்த்ரரே! கர்ணன்பார்க்கச்சொன்ன இடமனைத்தும் நன்றாகப்பார்க்கப்படவேண்டும். குறிப்பிட்டபடி சாரர்களனைவரும் தேடவேண்டியவிடங்களில் தேடட்டும். பசுக்கள்மூக்குகளால் (முகர்ந்து) அறிகின்றன. ப்ராம்மணோத்தமர்கள் வேதங்களாலேயேஅறிகிறார்கள். மன்னர்கள்சாரர்களால் அறிகிறார்கள். மற்றஜனங்கள் இரண்டுகண்களாலும்பார்க்கிறார்கள். கீழ்ச்சொல்லப்பட்டபடி சாரபுருஷர்கள் மறுபடியும்மறுபடியும் தேடட்டும். இவர்களும்இன்னும்மற்றப்பலரும் தேசங்களிலும் நகரங்களிலும்தேடட்டும். அவர்களுடையகதியாவது வாஸஸ்தலமாவது வரலாறாவது (ஒன்றும்) அறியப்படவில்லை. அவர்கள் நன்றாக மறைந்துகொண்டிருக்கிறார்களோ; அல்லது, ஸமுத்ரத்தின் அக்கரையைஅடைந்திருக்கின்றார்களோ; சூரர்களென்கிறஎண்ணமுள்ளவர்களானஅவர்கள்மஹாரண்யத்தில் துஷ்டம்ருகங்களால் தின்னப்பட்டார்களோ; சிறந்தத்வீபத்தையாவது அடைந்தார்களோ; மதத்தை

[1] ரத்னங்களுண்டாகுமிடம்.

இழந்தவர்களான அவர்கள் ஆசையற்றவர்களாக மலைகளிலும் நுழைதற்கரிய காடுகளிலும் (ஸஞ்சரிக்கையில்) ராக்ஷஸர்களால் பக்ஷிக்கப்பட்டார்களோ; அல்லது அனேகவர்ஷங்கள் ஆபத்தையடைந்து நாசமடைந்துவிட்டார்களோ. அரசரே! ஆதலால், நீர் உம்முடையமனத்தைக் கவலையற்றதாகச்செய்து அடக்கி அதிகஊக்கத்துடன்செய்யக்கருதிய கார்யத்தைச் செய்யும்" என்றான்.

முப்பத்தோராவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(த்ரோணர் துர்யோதனனைநோக்கி, பாண்டவர்கள் அழிந்திராரென்று சொல்லி அவர்களைத்தேடுவதற்கு ஏற்பாட்டைச்செய்ததும், பீஷ்மர், பாண்டவர்கள்வஸிக்கும்இடத்துக்குரியலக்ஷணங்களையும் அவர்கள் எவ்விதத்திலும் ஜயிக்கத்தகாதவர்கள் என்பதையும்கூறி அவர்களோடு ஸந்தியைச்செய்வது அவச்யமென்றதும்.)

பிறகு, ஸூக்ஷ்மார்த்தங்களைக்கண்டறிந்தவரான த்ரோணர் ஸபையின்நடுவில் (துர்யோதனன்முதலானவர்களைப்பார்த்து,) "அவ்விதமானடீஹிமையையுடையவர்கள் நாசத்தையும்அவமானத்தையும் அடையமாட்டார்கள். சூரர்களும் நல்லவித்யாப்யாஸம்செய்தவர்களும் புத்திசாலிகளும் இந்த்ரியங்களை அடக்கினவர்களும் தர்மங்களை அறிந்தவர்களும் ஸத்யஸந்தர்களும் மஹாத்மாக்களும் ப்ராதாக்களுமான அந்தப்பாண்டவர்கள், நீதி தர்மம் அர்த்தம்இவைகளுடையதத்வத்தை அறிந்தவனும் தந்தைபோலவேமனத்தை அடக்கினவனும் தர்மத்திலிருப்பவனும் ஸத்யத்தில் உத்ஸாஹமுள்ளவனும் மூத்தவனும் மேலோர்களைவணங்குகின்றவனும் அன்புள்ளஸ்நேஹாதானும் பெருமையுள்ளவனும் ஸ்நேஹாதானைவரையும் அனுஸரித்திருப்பவனும் அஜாதசத்ருவுமான யுதிஷ்டிரனை அனுஸரித்திருக்கின்றார்கள். அவ்வாறு (தனக்கு) ஸ்வாதீனப்பட்டவர்களும் (தைர்யத்தினால் ஆபத்துக்காலங்களிலும்) அசைவற்றிருப்பவர்களும் மஹாத்மாக்களுமான அவர்களுக்கு நீதியில்சிறப்புற்றவனும் கற்றறிந்தவனுமான யுதிஷ்டிரன் ஏன் நன்மையைஉண்டுபண்ணமாட்டான்? ஆதலால், முயற்சியுடன்கவனித்துப்பாருங்கள். இன்னும் ஸமயம் தாண்டவில்லை. அவர்கள் நாசத்தை அடையமாட்டார்களென்பது என்னுடைய உறுதியானஎண்ணம். செய்யவேண்டியகார்யமானது விளம்பமின்றிச் சீக்ரம் ஆலோசிக்கப்

படலாம்; நன்றாக ஆலோசித்துச் செய்யப்படவேண்டும். இவர்களுடையவாஸஸ்தானமும் நன்கு ஆலோசிக்கப்படவேண்டும். எல்லாக்காரியங்களிலும் தைரியத்தினால் நிலைதவறாதமனத்தையுடையவர்களானபாண்டுபுத்ரர்களுடையவ்ருத்தாந்தத்தை அறியத்தக்க நீதியைச்செலுத்தவேண்டும். எல்லாவிதஉபாயங்களாலும் பாண்டவர்களைப்பார்ப்பதற்கு நீ முயற்சிசெய். தேவதைகளால் எப்பொழுதும்காக்கத்தக்கவர்களான அந்தச்சூரர்கள் (எவ்விதத்தாலும்) அறியமுடியாதவர்கள். சுத்தஸ்வரூபமுள்ளவனும் ஸத்யஸந்தனும் உத்தமமான நீதியையுடையவனும் சுத்தனும் ஒளிக்குவியல்களால்நான்குபக்கங்களிலும் நிறைந்தவனுமான பார்த்தன், மனிதர்களைக் கண்ணால்கொளுத்தினாலும் கொளுத்துவான். ஆதலால், முயற்சிசெய்யவேண்டும். ப்ராம்மணர்களாலும் சாரர்களாலும் ஸித்தர்களாலும் நிபுணர்களானதபஸ்விகளாலும் மறுபடியும் நாம் தேடுவோம். மனுஷ்யேந்த்ர! மறைந்துவாஸஞ்செய்கின்ற பாண்டவர்கள், தேடுவதில் தேர்ச்சியடைந்தவர்களும் பயமில்லாதவர்களும் அதை அறிந்தவர்களாலொப்புக்கொள்ளப்பட்டவர்களும் அந்தத் தேடுகிறகாரியம்ஒன்றையே முக்யமாகவுடையவர்களுமான பற்பலசாரர்களால் தேடத்தக்கவர்கள்" என்றுகூறினார். பிறகு, சிறந்தபுத்தியையுடையவரும் பரதகுலத்தில்உதித்தவர்களுக்குப்பாட்டனாரும் சாஸ்த்ரங்களைநன்குகற்றறிந்தவரும் தேசகாலங்களைஅறிந்தவரும் நீதியையுடையவரும் விசாலமானபுத்தியையுடையவரும் சந்தனுவினுடைய குமாரருமான தேவவ்ரதர், மஹாத்மாவான ஆசார்யருடைய அந்தவாக்யம்சொல்லிமுடிந்தவுடன், காரணங்களோடும்அர்த்தத்துடனும்கூடிய இவ்விதமானவார்த்தையை உரைக்கலானார். அவர், தர்மங்களை அறிந்தவனும் பாண்டுமஹாராஜனுடைய புதல்வனுமானயுதிஷ்டிரன்விஷயத்தில் நன்றாகஇசைந்ததும் தர்மத்துடன்கூடியதும் எக்காலத்திலும்மாற்றமுடியாததும் எப்பொழுதுமே அயோக்யர்களடைவதற்கரியதும் எக்காலத்திலும் ஸாதுக்களால்ஸம்மதித்துப் பூஜிக்கப்பட்டதுமான ஒருவார்த்தையை அந்த ஸபையில்சொல்லத்தொடங்கினார்.

"ஸர்வதர்மங்களையும் அறிந்தவரும் ப்ராம்மணருமான நம்முடையஆசார்யர்சொன்னது (ஸரியே.) சாஸ்த்ரஜ்ஞானமும் நல்லஒழுக்கமுமுள்ளவர்களானபாண்டவர்கள் நாசத்தைஅடையமாட்டார்கள். எல்லா லக்ஷணங்களுமுள்ளவர்களும் நல்லஒழுக்கமுள்ளவர்களும் பெரியோர்களுடைய வரையறையில் கட்டுப்பட்டவர்களும் ஸத்யத்தையும் தர்மத்தையும் முதன்மையாகக்கொண்டவர்களும் ஸமயத்தை

அறிந்தவர்களும் ஸமயத்தைப்பாதுகாக்கின்றவர்களும் நல்லநியமமுள்ளவர்களும் ஸாதுக்களுக்குரிய கார்யபாரத்தை வஹிக்கின்றவர்களுமான அந்தப்பார்த்தர்கள் துன்பமடையமாட்டார்கள். தவத்தினாலும் தம்முடையவீர்யத்தினாலும ரக்ஷிக்கப்பட்ட அந்தப்பாண்டவர்கள் நாசமடையமாட்டார்களென்பது என்னுடைய நிச்சயமானஎண்ணம். அவர்கள் எப்பொழுதும் க்ஷத்ரியதர்மத்தில் நிலைபெற்றவர்கள்; எப்பொழுதுமே கேசவனை அனுஸரித்தவர்கள்; அதிகவீரபுருஷர்கள்; மஹாத்மாக்கள்; மஹாபலசாலிகள். அப்படிப்பட்டபாண்டவர்களைத் தேடும்விஷயத்தில் நான் (உனக்குப்) புத்தியை நன்குசொல்வேன்; கேள். நன்றாகநீதியைச்செலுத்துகிறவனுடைய நீதியானது பிறரால் அறிவதற்குஅருமையானது. அந்தப்பாண்டவர்களைநினைத்து நம்மால் இப்பொழுது செய்யத்தக்கதைப புததியினால்நிச்சயிப்பதற்காக நான் உனக்குச சொல்லப்போகிறேன். அதை நீஅறிந்துகொள். ஐயனே! பெரியோர்களுடையகட்டளையில் கட்டுப்பட்டுநிற்பவனும் ஸத்யத்தைத் தவறவிடாமலிருப்பவனுமான அநதயுதிஷ்டிரனுடைய இந்த நீதியானது எவ்விதத்தினாலும் நன்றாகச் சொல்லத்தக்கதன்று. மேலும், என்னால் அதுசொல்லத்தக்கதன்று. (ஏனென்றால்,) எனக்குக் கௌரவர்களும் பாண்டவர்களும் ஸமானர்கள். பாண்டுபுத்ரர்களுடையஇருப்பிடத்தை ஆலோசிதது நான் சொல்லுகிறேன். வீணான அதிகப்புலம்பலால் யாதுபயன்? எங்குதர்மமோ அங்குஜயம். ஏவப்பட்டு ஸபையின்நடுவில் (விஷயத்தைஎடுத்து) உரைக்கஎண்ணங்கொண்ட (ஒருமனிதன்) இவ்வுலகில் தர்மத்தைஅடையும்விருபபத்துடன் எல்லாவிதத்தினாலும் தக்கமொழியையே சொல்லவேண்டும். மன்னவ! மற்றஜனங்கள் எண்ணினபடி நான் எண்ணவில்லை. பாண்டுபுத்ரர்களுடையஇருப்பிடத்தைக்கேள். வீரர்களான ப்ராதாக்களோடும் க்ருஷ்ணையோடும்கூடியவனும் மிக்ககீர்த்தியையுடையவனுமான அந்தமஹாராஜன் ஏன் தன்னுடையச்ரேயஸைத் தேடிக்கொள்பவனாகமாட்டான்? 'பாண்டவன் ராஜ்யத்தில்விருப்பமுற்றவர்களானஉங்களால் முன்பு பட்டணத்தில்வஞ்சிக்கப்பட்டான்; எப்பொழுதும் துன்பத்திற்கும்உட்படுத்தப்பட்டான்' என்கிறவிஷயம் உள்ளபடி உன்னால்அறியப்பட்டிருக்கிறது. ஆதலால், இயற்கையாகவே நீதியில் மஹாஸமர்த்தனான அந்தயுதிஷ்டிரமஹாராஜன் இப்பொழுது மறைந்துவாஸம்செய்கிறான். இந்தஒருவர்ஷகாலம் நன்றாகமறைந்து ஸர்வோத்தமமான அஜ்ஞாதவாஸத்தைச்செய்துவிட்டு நல்லகாலம்உதிக்கும்தருணத்தில் சீக்ரம் வரப்போகிறான். பகைவர்களைவாட்டுபவனே!

ஸஹோதரர்களோடும் த்ரௌபதியோடும்சேர்ந்திருக்கின்ற பாண்டவ வீரனை நீ பார்க்கப்போகிறாய். சிறந்தகைகளுள்ளவனே! நமக்கு ஸுகமுண்டாகும்படி (கார்யத்தைச்)செய். பலசாலிகளுள் சிறந்த ராஜாவான அந்தயுதிஷ்டிரன் மறைந்துவாஸஞ்செய்கிறவிடத்தில் மனிதர்கள் ஆசையினாலும் மோஹத்தினாலும் விடுபட்டவர்களாயிருப்பார்கள். மஹாராஜனே! க்ஷத்ரியரிற்சிறந்தவனே! பட்டணமோ அல்லது தேசமோ ராஜாவானயுதிஷ்டிரன் வஸிக்கிறவிடத்தில் மனோவ்யாதிகளும் பிணியும் உண்டாகா. தானசீலனும் [1]பெருங்கொடையுடையவனும் அமைதியுள்ளவனும் (அகார்யத்தில்) வெட்கமுள்ளவனும் அன்பும் உண்மையுமானவாக்கையுடையவனும் சூரனும் தர்மசீலனும் புலன்களைவென்றவனும் மனக்களிப்புடையவனும் புஷ்டியுள்ளவனும் பரிசுத்தனும் ஸமர்த்தனும் ராஜாவுமான யுதிஷ்டிரன் இருக்கிறஇடத்தில் ஜனங்கள் அஸூயையும் பொறாமையும் அஹங்காரமும் மாத்ஸர்யமுமுள்ளவர்களாயிரார்கள். தாமாகத் தர்மத்தை அனுஸரிப்பார்கள். அதிகமானவேதஒலிகளும புண்யசப்தங்களும் கேட்கப்படும்; அதிகதக்ஷிணைகளுள்ள அநேகயாகங்களும் நடக்கும். மழைக்கடவுள் எப்பொழுதும் அவ்விடத்தில் மழை நன்றாகப்பொழிந்துகொண்டிருக்கும்; ஸம்சயமில்லை; பூமியானது பயிர்களால்நிறைந்தும் நோயில்லாமலுமிருக்கும்; தான்யங்கள் ரஸமுள்ளவைகளும் பழங்கள் குணமுள்ளவைகளும் பூமாலைகள் வாஸனையுள்ளவைகளும் வாக்கானது மங்களகரமானசப்தத்துடன்கூடியதுமாயிருக்கும். ராஜாவான யுதிஷ்டிரனிருக்கிற இடத்தில் காற்றும் இனிமையுடையதாக வீசும். அங்குள்ள ஜனங்கள் ரோகமற்றவர்களாகஇருப்பார்கள்; கொலையும் சிறையிலடைத்தலும் இரா. ராஜாவானயுதிஷ்டிரன்இருக்கிறஇடத்தில் திருடர்களும் தண்டனைகளும் ஹிம்ஸைகளும் நிச்சயமாகஉண்டாகா; சக்தியற்றவர்களும் துஷ்டர்களுமிருக்கமாட்டார்கள். அந்த இடத்தில் பயமும் வந்துஅணுகாது; நல்லஸித்தாந்தமானது விரோதமின்றி விளங்கும்; அவ்வாறே பசுக்கள் அதிகப்பாலுள்ளவைகளும் நல்லபுஷ்டியுள்ளவைகளும் நல்லகறவையுடையவைகளும் ஆகும்; பாலும் தயிரும் நெய்யும், ரஸமும் ஹிதமுமுள்ளவைகளாகின்றன; தீர்த்தங்களும் தெளிந்திருக்கும்; எல்லாப்பொருள்களும் மங்களகரமாகின்றன. ராஜாவானயுதிஷ்டிரன் இருக்கிறதேசத்தில் சிறந்தகுணமுள்ளபானங்களும் பற்பலவிதஉணவுகளும் கிடைக்கும்.

---

1 'வதாந்ய:' என்பது மூலம்; 'ப்ரியமாய்ப்பேசுகிறவன்' என்பது பழையஉரை.

ராஜாவானயுதிஷ்டிரன் இருக்கிறவிடத்தில் ரஸங்களும் ஸ்பர்சங்களும் கந்தங்களும் சப்தங்களும் குணமுள்ளவைகளாயிருக்கும்; பார்க்கத் தக்கபொருள்கள் இனியகாட்சியுள்ளவைகளாயிருக்கும். ஐயா! இந் தப்பதின்மூன்றாவதுவர்ஷத்தில் பாண்டவர்கள் வஸிக்கிறதேசத்தில் தர்மங்கள் ப்ராம்மக்ஷத்ரியவைச்யர்களனைவர்களாலும் நன்றாக அனுஷ் டிக்கப்பட்டவைகளும் தத்தம் குணங்களோடுகூடியவைகளுமாகும். அந்தஇடத்தில் ஜனங்கள் மிக்க ப்ரீதியுள்ளவர்களும் ஸந்தோஷமுள் ளவர்களும் சுத்தர்களும் குறைவில்லாதவர்களும் தேவதைகளுக்கும் அதிதிகளுக்கும் அதிகமானஸத்காரங்களைச்செய்பவர்களும் எல்லா ப்ராணிகளிடங்களிலும் அன்புடையவர்களுமாயிருப்பார்கள். அப்பா! யுதிஷ்டிரன்இருக்கிறஇடத்தில, ஜனங்கள், இஷ்டமானவஸ்துக்களைத் தானம்செய்வதில் அதிகஉத்ஸாஹமும் எப்பொழுதும் தர்மத்திலே யே பற்றும் வெளிப்படையானபேச்சும் மேன்மேல் அதிகமான மங்களங்களும் நல்லகாந்தியும் நல்லவிருப்பமும் எப்பொழுதும் ஸந் தோஷமும் ஐச்வர்யமுமுள்ளவர்களாயிருப்பார்கள். ராஜாவானயுதி ஷ்டிரன் இருக்கிறஇடமானது நித்யோத்ஸவங்களால் மிகுந்த ஸந் தோஷமுள்ளதும் எப்பொழுதும் மனக்களிப்புற்றதும் செல்வத்தி னால் சூழப்பட்டதுமாயிருக்கும். தர்மங்களை அறிந்தவனான அந்தயுதி ஷ்டிரன், ஸர்வஜ்ஞர்களான த்விஜாதிகளாலும்அறியமுடியாதவன். அப்பா! அவ்வாறிருக்க, அல்பமனிதர்களால் பார்த்தன் ஓரிடத்தில் எவ்வாறு அறியப்படுவான்? யுதிஷ்டிரனிடத்தில் ஸத்யமும் உத்ஸாஹ மும் தானமும் அதிகமானசாந்தியும் நிலையானபொறுமையும் வெட்க மும் செல்வமும் கீர்த்தியும் உத்தமமானதேஜஸும் தயையும் கபட மின்மையும் நிலைபெற்றிருக்கின்றன. ஆதலால், நான் உங்களிடத்தில் சொல்லியபடி பார்த்தர்களுடையவாஸஸ்தானத்தையும் அங்கு அவர் களுடைய உத்தமமானகதியையும் ஆலோசிக்கவேண்டும். வேறுவித மாகச்சொல்வதற்கு நான் சக்தியுள்ளவனல்லேன். குருகுலத்திலுதி த்தவனே! நான்சொன்னவிஷயத்தை நீநம்புவாயாகில் இவ்விதமான இந்தவிஷயத்தை நன்றாகஆலோசித்து நீ நல்லதென்றுஎண்ணுகிற தைக் காலதாமதமின்றிச் செய். ஐயனே! நான் உனக்கு உரைத்தது நம்முடையகுலத்துக்குத் தகுதியுள்ளதன்றோ" என்றார்.

முப்பத்திரண்டாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(துர்யோதனன் ஊஹத்தினால் பாண்டவர்கள் விராடநகரத்தில் இருக்கலா மென்றெண்ணி ஸுசர்மாவை அனுப்பியதும், ஸுசர்மா விராட நகரத்தின் தென்பாகத்திலுள்ள பசுக்களைப்பிடித்ததும்.)

பிறகு, சரத்வானுடையகுமாரரானக்ருபர், அப்பொழுது (துர்யோதனனைப்பார்த்து), "(ராஜனே!) பிராயமுதிர்ந்தவரானபீஷ்மரால் பாண்டவர்களைப்பற்றி யுக்தியுள்ளதும் காலத்திற்குத்தகுந்ததுமான வார்த்தைசொல்லப்பட்டது. தர்மார்த்தங்களோடு கூடியதும் மிக்கநேர்த்தியானதும் முற்றிலும் உண்மையானதும் (தகுந்த) காரணங்களோடு கூடியதுமான பீஷ்மருடையவசனமானது அந்த (ப்பாண்டவர்களைத் தேடிக்கண்டுபிடிக்கும்) விஷயத்தில் பொருத்தமானது. என்னுடையவார்த்தையையும்கேள். அவ்விடத்தில் அவர்களுடையகதியும் இருப்பிடமும் நன்றாக ஆலோசிக்கப்படவேண்டும். இப்பொழுது (நமக்கு) ஹிதமாயிருக்கக்கூடியநீதியானது அவ்விஷயத்தில் செலுத்தப் படவேண்டும். ஐயனே! பகைவன் அல்பனாயிருந்தாலும் மேன்மை யடையஎண்ணுபவனால் உபேக்ஷிக்கத்தக்கவனல்லன். சூரர்களும் கற்றறிந்தவர்களும் பலசாலிகளுமானபாண்டவர்கள் உபேக்ஷைபண்ணத் தகாதவர்களென்பதில் யாதுஸந்தேஹம்? ஆதலால், கானகம்சென்ற மஹாத்மாக்களானபாண்டவர்கள் தங்கள்கருத்தை வெளியிடாமல் மறைந்திருக்கையில் நல்லகாலமும் உண்டாயிருக்கும்பொழுது தம் நாட்டிலும் பிறநாட்டிலும் தன்பலம்அறிந்துகொள்ளத்தக்கது. பாண்டவர்களுக்கு வ்ருத்தியடையுங்காலம் வந்துவிட்டது; ஸம்சயமில்லை. மஹாத்மாக்களானபார்த்தர்கள் ப்ரதிஜ்ஞைசெய்தகாலம்கழிந்தபிறகு மஹாபலசாலிகளும் பெரியஉத்ஸாஹமுள்ளவர்களுமாவார்கள். பாண்டவர்கள் அளவுகடந்த வல்லமையுள்ளவர்களல்லரோ? ஆதலால், அவர்களுக்குஅபிவ்ருத்திகாலமானது வந்திருக்கும்தருணத்தில் நாம் அவர்களோடுசேர்ந்து நன்றாகப் போர்புரியும்படி சேனையும் பொக்கசமும் நீதியும் ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். நீ, மேன்மைக்குக் காரணமாகஎண்ணுவதும் பலசாலிகளும் துர்ப்பலர்களுமானஎல்லா மித்ரர்களிடங்களிலும் நிச்சயமாகஇருப்பதுமான உன்னுடையபலத்தைஅறிந்துகொள். பாரத! பயனுள்ளதும் பயனற்றதும் நடுத்தரமுமானபலத்தைஅறிந்து தன்னாட்டிலும்பிறர்நாடுகளிலும் தன்பலம்

அறியவேண்டும். அவ்வாறே பகைவர்களோடு ஸாமதானபேததண்டங்களாலும் கப்பங்கட்டுதலாலும் அதிகவெறுப்போடாயினும்விருப்போடாயினும் ஸந்திசெய்துகொள்வோம். பலஹீனர்களானபகைவர்களை ந்யாயத்தினால் அடக்கிப் பலத்தினால் (அவர்களை) வணங்கும்படி செய்து மித்ரர்களையும் ஸமாதானப்படுத்தி ஸேனையையும்ஸுகமாக இருக்கிறதாவென்று விசாரிக்கவேண்டும். உன்னுடையபொக்கசத்தினாலும் ஸேனையினாலும் நன்றாகவ்ருத்தியடைந்திருக்கின்ற நீ நல்ல ஸித்தியைப் பெறுவாய். எதிர்த்துவருகிறபலசாலிகளானவேறுபகைவர்களோடும் தமதுபலத்தினாலும் வாஹனத்தினாலும் குறைவுபட்டிருக்கின்றபாண்டவர்களோடும் நீ போர்புரிவாய். மனுஷ்யேந்த்ர! இவ்வாறு எல்லாவற்றையும் நீ நன்குநிச்சயித்து, தகுந்தகாலத்தில் ந்யாயத்தை அனுஸரித்து நடந்துகொள்வாயாக. (இவ்விதம்செய்தால்) வெகுகாலம்ஸுகத்தை அடைவாய்" என்றுகூறினர்.

பீஷ்மரும் த்ரோணரும் க்ருபரும் கர்ணன் துச்சாஸனன்முதலானவர்களும் இவ்வாறுசொல்லியபின் துர்யோதனன் மஹாத்மாக்களான அவர்களுடையவார்த்தையைக்கேட்டு ஒருமுஹூர்த்தகாலம் ஆலோசித்து மந்த்ரிகளைப்பார்த்து, "(ஓ! மந்த்ரிகளே!) ஜனங்களால் நிறைந்தஸபையில் ஸல்லாபங்கள் நடக்கும்தருணத்தில் நான் இதை முன்னம்கேட்டிருக்கிறேன். நீர்களும் சாஸ்த்ரங்களை அறிந்தவர்களுமான ப்ராஜ்ஞர்களுடைய புத்திநிச்சயத்தையும் ஸமர்த்தர்களுடைய ஸாராஸாரங்களையும் நீதியாகிறகண்ணால் நான் அறிந்திருக்கிறேன். தைத்யர்களோடும் மனுஷ்யர்களோடும் ராக்ஷஸர்களோடும்கூடின மண்ணுலகில் இக்காலத்தில் தோள்வலியிலும் ஆண்மையிலும் தைர்யத்திலும் சரீரபலத்திலும் இந்த்ரனுக்கொப்பான நான்குபுருஷச்ரேஷ்டர்கள் பூமியில் பலத்தில் (எல்லா) ப்ராணிகளிலும் சிறப்புடையவர்கள். பலத்தில்அவர்களுக்கு ஒப்பு ஒருவரும்இல்லை. இவர்கள் எப்பொழுதும் ஒத்தமனோபலமும் நிறைந்ததேஹபலமும் ஆண்மையுமுடையவர்கள். (அவர்கள் யாவரெனின்,) பலதேவரும் பீமனும் வீர்யசாலியானமத்ரராஜனும் நாலாமவனானகீசகனுமாவர். அவர்களைக்காட்டிலும் ஐந்தாவதுபுருஷனை நாம்கேட்டதில்லை. இவர்கள், ஒருவருக்கொருவர் வேற்றுமையில்லாதபலமுடையவர்கள்; ஒருவரையொருவர்வெல்வதில் விருப்பமுற்றவர்கள்; மல்லயுத்தத்தில் விருப்பமுள்ளவர்கள்; எப்பொழுதுமே கோபங்கொண்டமனமுள்ளவர்கள். அந்தநம்பிக்கையினால் என்மனத்தில் (எப்பொழுதும்) புகுந்திருக்கின்றவ்ருகோதரனை நானறிவேன். பாண்டவர்கள்உயிருடனிருக்கிறார்

களென்பது வெளிப்படை. அவர்களுள் பீமஸேனனே கீசகனைக்கொன்றவனென்று நான் எண்ணுகிறேன்; ஸைரந்த்ரியை த்ரௌபதியென்று நினைக்கிறேன். இவ்விஷயத்தில் ஆலோசனைசெய்யத்தக்கதில்லை. க்ருஷ்ணையினிமித்தமாகப் பீமஸேனனால் கந்தர்வனென்கிறவ்யாஜத்தினால் மஹாபலசாலியானகீசகன் இரவில் கொல்லப்பட்டிருப்பானென்றுஸந்தேஹிக்கிறேன். பீமஸேனனைத்தவிர வேறுஎவன் ஆயுதமின்றிப் பலத்தினால் கீசகனைக்கொல்வதற்கும் அவ்விதமே கைவன்மையால் (அவனுடைய) எல்லா அங்கங்களையும் பொடியாக்குவதற்கும் அவ்வாறே அடிப்பதற்கும் தோலையும் மாம்ஸத்தையும் எலும்பையும் விரைவாகப்பொடிபண்ணுவதற்கும் சக்தியுள்ளவனுவான்? இது வேறுஉருவத்தைஎடுத்துக்கொண்டு (மறைந்துவாஸஞ்செய்கின்ற) பீமனுடைய செய்கையே. நிச்சயமாக க்ருஷ்ணையினிமித்தம் ஸூததபுத்ரர்கள் கந்தர்வனென்கிறவ்யாஜத்தினால் பீமஸேனனால் இரவில்கொல்லப்பட்டுவிட்டார்கள்; ஐயமில்லை. பிதாமஹரால் தேசத்திற்கும் ஜனங்களுக்கும் உரைக்கப்பட்டகுணங்களை மத்ஸ்யதேசத்தில்பலவாறு நான் கேட்டிருக்கிறேன். மனத்தைக்கவர்வதான விராடநகரமென்னும்பட்டணத்தில் பாண்டவர்கள் மறைந்துவாஸஞ்செய்கிறார்களென்று எண்ணுகிறேன். (ஆதலால்) அந்தப்பட்டணத்தைக்குறித்து யாத்ரையானது செய்யப்படலாம். நாம் மத்ஸ்யதேசத்துக்குச்செல்வோம்; பசுக்கூட்டத்தையும் கைப்பற்றுவோம். பசுக்கூட்டமானது (நம்மால்) கவரப்பட்டால் அந்தப்பாண்டவர்களும் நிச்சயம்போர்புரியவருவார்கள். குறித்தகாலம்முடிவடையுமுன் பாண்டவர்களை நாம் பார்த்தால் மறுபடியும் வேறுபன்னிரண்டுவர்ஷகாலம் கானகத்தில்ப்ரவேசிப்பார்கள். ஆதலால், இவ்விரண்டனுள் ஒன்றுகிடைத்தாலும் நமக்கு லாபமாகும்; இவ்விஷயத்தில் நம்முடையபொக்கசம்வளர்ச்சியடையும்; பகைவர்க்கும் நாசமுண்டாகும். 'முன்பு யுதிஷ்டிரரால்போஷிக்கப்பட்டவன் துர்யோதனனைஎவ்வாறு அடைவான்?' என்கிறஇந்தவார்த்தையையும் இந்தவிராடன் என்விஷயத்தில் அவமதிப்புடன்சொல்லுகிறான். ஆதலால், இஃது அவச்யம்செய்யத்தக்கது. அந்தமத்ஸ்யதேசத்தைக்குறித்துப் படையெடுக்கவேண்டும். உங்களனைவர்களுக்கும் ப்ரியமாயிருக்குமாயின் இதுசரியானஉபாயமென்று நானெண்ணுகிறேன்" என்றுகூறினான்.

பிறகு, த்ரிகர்த்ததேசத்துக்குராஜனும் தேர்க்கூட்டங்களைக் காப்பவனும் பலசாலியுமான ஸுசர்மாவானவன் விரைவாகக்கர்ணனுடனும் துச்சாஸனனுடனும் முந்தியேபேசிக்கொண்டு அந்தஸம

யத்துக்குரியஇவ்விதமானவார்த்தையைச் சொல்லலானான். "ப்ரபுவே! முன்னமே மத்ஸ்யதேசத்தார்களாலும் ஸால்வதேசத்தார்களாலும் கேகயர்களாலும் அடிக்கடிவஞ்சிக்கப்பட்டிருக்கிறேன். மத்ஸ்யராஜனைச்சேர்ந்தவனும் ஸூதஜாதியில்பிறந்தவனும் பலசாலியுமான கீசகனாலும் அடிக்கடி பந்துக்களோடுகூடினநான் பலாத்காரமாக ஹிம்ஸிக்கப்பட்டிருக்கிறேன்" என்றுசொல்லி, அந்தஸுசர்மாவானவன் கர்ணனை நன்றாகப்பார்த்துப் பிறகு துர்யோதனனைநோக்கி, "ராஜனே! மத்ஸ்யராஜனால் என்னுடையதேசமானது அடிக்கடி ஹிம்ஸிக்கப்பட்டிருக்கின்றது. பலத்தினால் அதிககர்வங்கொண்டவனான கீசகன் முன்புஅவனுக்குமுக்யனாயிருந்தான். கோபமுள்ளவனும் (ஒருவராலும்) ஜயிக்கமுடியாதவனும் பகைவர்களைவெல்லுகின்றவனும் ப்ரஸித்தமானபலமும் ஆண்மையுமுள்ளவனும் பாபங்களைச் செய்பவனும் கொடியசெய்கையையுடையவனுமான அந்தக்கீசகன் அந்தவிராடநகரத்தில் கந்தர்வர்களால் கொல்லப்பட்டான். ராஜனே! அவன்கொல்லப்பட்டபிறகு விராடன் கொழுப்புக்குலைந்தவனும் ஆதாரமற்றவனும் உத்ஸாஹத்தையிழந்தவனுமாயிருப்பானென்பது என்னுடைய எண்ணம். தோஷமற்றவனே! உனக்கு விருப்பமிருந்தால்அந்தமத்ஸ்யதேசத்தில படையெடுப்பது எனக்கு ஸம்மதம். எல்லாக்கௌரவர்களுக்கும் மஹாத்மாவான கர்ணனுக்கும் இது பெரிதும் மிகமுக்யமுமான கார்யமாயிருக்கலாமென்று நான் நினைக்கிறேன். தனதான்யங்களால்நிறைந்த அந்தவிராடனுடைய ராஜ்யத்தைக்குறித்து நாம் படையெடுத்துச்செல்வோம். அவனிடத்திலுள்ள பற்பலரத்னங்களையும் பொருள்களையும் நாம் கொள்ளையிடுவோம்; அவனுடைய க்ராமங்களையும் தேசங்களையும் துண்டுதுண்டாகப் பங்கிட்டு ஸ்வாதீனப்படுத்திக்கொள்வோம்; காட்சிக்கினியவனே! அல்லது, பலத்தினால் (அந்தப்) பட்டணத்தைத் துன்பப்படுத்தி அனேகமும் பற்பலவிதமுமான ஆயிரக்கணக்கானபசுக்களைக் கவர்வோம்; ராஜனே! கௌரவர்களோடும் த்ரிகர்த்தர்களோடும் மற்றஎல்லாமஹாரதர்களோடும்சேர்ந்து அவனுடையபசுக்களைக் கவர்வோம்; அல்லது, அவனுடன் ஸந்தியைச்செய்துகொண்டு அவனுடையஆண்மையை அடக்குவோம்; அவனுடைய ஸேனையெல்லாவற்றையுங்கொன்று அவனை வசப்படும்படியாகவே செய்துகொள்வோம். அவனை நீதியினால் வசப்படுத்திக்கொண்டு நாம் ஸுகமாக வஸிப்போம். உங்களுக்கும் பலத்தில்வ்ருத்தியுண்டாகும்; ஸந்தேஹமில்லை" என்றான்.

அவனுடைய அந்தவார்த்தையைக்கேட்டு, கர்ணன், ராஜாவை நோக்கி, "(ராஜனே!) ஸுசர்மாவினால் ஸமயோசிதமான இவ்வித

நல்லவார்த்தைசொல்லப்பட்டது. ஆதலால், ஸேனையைஒன்றுசேர்த்துக்கொண்டு விரைவாகப்புறப்படுவோம். இது உனக்கு விருப்பமாயிருப்பதுபோல எனக்கும் விருப்பமாயிருக்கிறது. நீஎண்ணுகிறவண்ணம் ஸைன்யங்களைப்பகுத்துக்கொண்டு செல்லுவோம். அறிவுள்ளவரும் குலத்திலுள்ளவர்களுள் ப்ராயமுதிர்ந்தவரும் நம்அனைவர்களுக்கும் பிதாமஹருமானபீஷ்மரும் ஆசார்யரானத்ரோணரும் கற்றறிந்தவரான க்ருபரும் ஸுபலனுடைய குமாரனான சகுனியுமாகிய அவர்களனைவரும் எண்ணுகிறபடி படையெடுத்துச்செல்ல விதிக்கலாம். ராஜனே! நாம்ஆலோசித்துக்கார்யத்தைநிறைவேற்றுவதற்காக விரைந்துசெல்வோம். பொருளும் வலியும் ஆண்மையும்குறைந்தபாண்டவர்களால் நமக்கு என்னகார்யம்ஆகவேண்டும்? அவர்கள் முற்றிலுமே காணமற்போய்விட்டார்களோ; அல்லது, எமனுடையவீட்டை அடைந்துவிட்டார்களோ. பாரத! ஆதலால், நீ பெரிதானசதுரங்கபலத்தால்சூழப்பட்டு எல்லாஸைன்யத்துடனும் செல்வாய். அந்த விராடனுடைய பலவிதமானபசுக்களையும் தனங்களையும் கைக்கொள்வோம்" என்றுசொன்னான். பிறகு, துர்யோதனமஹாராஜன் ஸூர்ய குமாரனான அந்தக்கர்ணனுடைய வார்த்தையைக்கேட்டு, உடனே (தன்னுடைய) கட்டளையில்எப்பொழுதும் கட்டுப்பட்டிருப்பவனான துச்சாஸனனைநோக்கி, தானே விரைவாகக் கட்டளையிடலானான். "(துச்சாஸன!) பெரியோர்களோடு நன்றாகஆலோசித்து விரைவில் ஸேனையைத்திரட்டு. நாம் எல்லாக்கௌரவர்களோடும் சேர்ந்து உத்தேசித்தபடி (மத்ஸ்யதேசம்) செல்வோம். மஹாரதனும் முந்தியே (மாத்ஸ்யர்களுடன்போர்புரிவதில்) மிக்கமுயற்சியுள்ளவனுமான ஸுசர்மாவோ ப்ரஸித்திபெற்றபலமும் பௌருஷமுமுள்ள எல்லாத்ரிகர்த்தர்களோடும் உத்தேசித்தபடி விராடநகரமென்னும் தேசத்தைக் குறித்துச்செல்லட்டும். நாம் வேறொருதினத்தில் செல்வத்தினால் அதிகமாகநிறைந்ததும் (தனதான்யங்களோடு) நன்றாகச்சேர்க்கைபெற்றதுமான மத்ஸ்யராஜனுடையதேசத்தைக்குறித்துப் பின்புறத்திலேயே செல்வோம். ஸுசர்மாவினால் மத்ஸ்யராஜனுடைய கோதனமானது அபஹரிக்கப்படும்பொழுது விராடன் படைகளை அழைத்துக்கொண்டு த்ரிகர்த்தர்களோடுபோர்புரிவான். கௌரவர்கள் மறுநாள் அந்த விராடநகரத்தில் பசுக்களைப்பிடிக்கட்டும். அப்பொழுது பசுக்கள் நிமித்தமாகப் பாண்டவர்கள் கௌரவர்களோடுபோர்புரிவார்கள். (ஆதலால்,) உத்தேசித்தபடி த்ரிகர்த்தர்கள் விராடநகரத்தினுடைய ஸமீபத்தில் அவ்வாறு சென்று விரைவாகப் பசுமந்தையையடைந்து

பெரியகோதனத்தை அபஹரிக்கட்டும். நாம் ஸேனையை இரண்டாகப் பகுத்துக்கொண்டு அழகும்குணமுமுள்ள லக்ஷக்கணக்கான இந்த விராடனுடைய பசுக்களைப் பிடிப்போம்" என்றுகூறினன். போர்த் தகுதியும் கொடிகளும் பலத்தால்மேன்மையும் பழிக்குப்பழிதீர்ப்ப தில் விருப்பமும் பசுக்களிடத்தில் பேராசையும் மிக்கபலமுமுள்ள அந்த ரதிகர்களனைவர்களும் உத்தேசித்தபடி மத்ஸ்யராஜனுடைய தேசத்தை அடைந்தார்கள். பிறகு, ஸுசர்மாவானவன் க்ருஷ்ணாஷ் டமிதினத்தில் (விராடனுடைய) பசுக்களைக்கவர்ந்தான். மன்னரே! மறுதினத்தில் மஹாவீர்யமுள்ளவர்களான கௌரவர்களெல்லாரும் [1] ஒருங்குகூடி மாத்ஸ்யர்களுடைய தேசத்தின் ஓரிடத்தில் க்ருஷ்ண பக்ஷம் நவமிதிதியில் ஆயிரக்கணக்கானபசுக்கூட்டங்களைப் பிடித்தார் கள்.

முப்பத்துமூன்றாவது அத்யாயம்.

கோக்ரஹண பர்வம். (தொடர்ச்சி.)

(கோபாலர்கள் ஸுசர்மாபசுக்களைக்கவர்ந்ததை விராடனிடத்தில் தெரி வித்ததும், விராடன்முதலானவர்கள் யுத்தத்துக்குப்புறப்பட்டதும், யுதிஷ்டிரர் தங்கள் யுத்தஸாமர்த்தியத்தைவிராடனுக்குத்தெரி வித்துத் தாமும் ப்ராதாக்களோடு புறப்பட்டதும்.)

மஹாராஜரே! பிறகு, அளவற்றதேஜஸுள்ளவர்களும் கபட மானவேஷங்களைத்தரித்தவர்களும் மஹாத்மாக்களும் விராடநகரத் தில்வாஸஞ்செய்துகொண்டு அந்தவிராடராஜனுக்கு ஊழியங்களைச் செய்பவர்களுமான அந்தப்பாண்டவர்களுக்கு அஜ்ஞாதவாஸகால மானது அவ்விடத்திலேயே நன்றாகக்கழிந்துவிட்டது. கீசகன்கொல் லப்பட்டபிறகு, பகைவீரர்களைக்கொல்பவனான விராடராஜன் குந்தி புத்ரரானயுதிஷ்டிரரிடத்தில்அதிகமானகௌரவத்தைப்பாராட்டினன். பரதகுலத்தில்பிறந்தவரே! பிறகு, அந்தப்பதின்மூன்றாவதுவர்ஷத் தின்முடிவில் ஸுசர்மாவினால் (விராடனுடைய) ஏராளமானகோதன மானது விரைவாகஅபஹரிக்கப்பட்டது. பிறகு, பெரிதானசப்தமுண் டாகியது. புழுதியும் ஆகாயத்தை அளாவியது. சங்கங்களின்சப்த மும் துந்துபிகளின்கோஷமும் பேரிகளுடையபேரொலியும் முழங் கின. பசுக்களுடையதும் குதிரைகளுடையதும் ரதங்களுடையதும்

---

[1] இங்குஒருபதம்விடப்பட்டது.

யானைகளுடையதும் காலாட்களுடையதுமான சப்தமுமுண்டாயிற்று. இவ்வாறு அந்தத்ரிகர்த்தர்கள்படையெடுத்துவந்து மத்ஸ்யராஜனுடையபசுக்கூட்டத்தைக் கவரும்பொழுது கோபாலர்கள் தடுத்தார்கள். பாரதரே! பிறகு, அனேகத்ரிகர்த்தர்கள் பசுக்கூட்டத்தை ஏராளமாகக்கைப்பற்றி விரைவாகச்செல்லுகின்ற குதிரைகளாலும் தேர்க்கூட்டங்களாலும் நாற்புறத்திலும்சூழ்ந்து யுத்தத்தில் (தாங்களே) வெற்றிபெறுவோமென்பதில் தைர்யங்கொண்டு கோபாலர்களை திர்த்துப் போர்புரிந்தார்கள். பசுக்களுடையகூட்டத்தில் பற்றுதலுடையவர்களான அந்தக்கோபாலர்கள் ப்ராஸங்களையும் தோமரங்களையுங் கையில்கொண்டவர்களான அனேகவீரர்களால் ஹிம்ஸிக்கப்பட்டாலும் பலத்தினால் த்ரிகர்த்தவீரர்களை திர்த்துத்தடுத்தார்கள். பசுரக்ஷகர்கள், கோடாலிகளாலும் உலக்கைகளாலும் பிண்டிபாலங்களாலும் முத்கரங்களாலும் பலவிதமான துன்புறுத்தலாலும் நான்குபுறத்திலும் குதிரைகளை வருத்தினார்கள். (கோபலர்களால்) துன்புறுத்தப்படுகின்றவர்களும் மிக்ககோபங்கொண்டவர்களும் தேரின்மீதேறிப் போர்புரிகின்றவர்களுமான அந்தத்ரிகர்த்தர்கள் அம்புமழைகளைப்பொழிந்து பலத்தினால் கோபாலர்களைஓடச்செய்தார்கள். ராஜரே! பிறகு, கோபாலர்கள் ஹிம்ஸிக்கப்பட்டுப் புறங்காட்டிஓடும்பொழுது யௌவனமுடையவர்களும் மிகப்பயந்தவர்களுமான சிலகோபாலர்கள் பெருமூச்செறிந்து புழுதிபடிந்த மேனியையுடையவர்களாய் அதிவேகத்தோடு விராடநகரத்தைவந்தடைந்தார்கள். (அந்தப்)பசுக்காப்பவர்களானமனிதர்கள் விராடநகரத்தைஅடைந்து பாண்டவர்களோடு ஸபையில்வீற்றிருப்பவனும், சூரர்களும் குண்டலங்களையும் தோள்வளைகளையும்அணிந்தவர்களுமான யுத்தவீரர்களால் சூழப்பட்டவனும், ஸாதுக்களோடும் பண்டிதர்களோடும்கூடியவனும்,ராஜச்ரேஷ்டனும், மந்த்ரிகளால் சூழப்பட்டவனுமான விராடராஜனைச் சீக்ரம்கண்டு, "ராஜேந்த்ரரே! பந்துக்களோடுகூடினஎங்களை யுத்தத்தில்ஜயித்து அவமதித்து உம்முடைய அறுபதினாயிரம்பசுக்களை த்ரிகர்த்தர்கள் ஓட்டிக்கொண்டுசெல்லுகின்றார்கள். அவைகளைத் திருப்பும். உமதுபசுக்கள் அழிந்துபோகவேண்டாம்" என்றுசொன்னார்கள்.

அந்தக்கோபாலர்களுடையவார்த்தையைக்கேட்டு, பகைவர்களை அடக்குபவனான அந்தவிராடராஜன் ரதங்களாலும் யானைகளாலும் குதிரைகளாலும் வ்யாபிக்கப்பட்டதும் காலாட்களாலும் கொடிமரங்களாலும்அடர்ந்ததுமான மாத்ஸ்யர்களுடைய பெரியஸேனையை (யுத்தத்துக்காக) ஒருங்குசேர்த்தான். பிறகு, ராஜாக்களும் ராஜபுத்ரர்க

ளும், காந்தியுள்ளவைகளும் காற்றுநுழையவும்இடமில்லாதவைக ளும் நன்றாகத் தரிக்கத்தக்கவைகளுமான கவசங்களைத் தனித்தனி யாகத் தரித்துக்கொண்டார்கள். பொற்கவசமணிந்தகுதிரைகளைத் தனித்தனியாக ரதங்களில்பூட்டினார்கள். சூரர்கள் நாண்கயிறுகளை இழுத்து விற்களில்கட்டினார்கள். விராடனுக்குஅன்புள்ளதம்பியான சதானீகன் உறுதியுள்ளதும் இரும்பினாற்செய்து உள்ளும்புறமும் புடம்போட்ட பொன்னால்மூடப்பட்டதுமான கவசத்தை அணிந்து கொண்டான். சதானீகனுடைய இளையஸஹோதரனான மதிராக்ஷன் எல்லாப்பாரத்தையும்பொறுக்கக்கூடியதும் உறுதியுள்ளதும் பொன் மயமுமான கவசத்தைஅணிந்துகொண்டான். மேற்புறத்தில் நூறு தாமரைப்புஷ்பங்களும், நூறுசெங்கழுநீர்மலர்களும் ப்ராகாசிக்கின்ற தும் மெருகிட்ட தங்கமயமான ஓரமுள்ளதுமான கவசத்தை ஸூர்ய தத்தன் அணிந்துகொண்டான். வீரனும் விராடனுடையமூத்தகுமா ரனுமானசங்கனானவன் உறுதியுள்ளதும் இரும்பினாற்செய்து பொன் னால்மூடி அலங்கரிக்கப்பட்டதும் வெண்ணிறமுள்ளதுமான கவசத் தை அணிந்துகொண்டான். மத்ஸ்யதேசத்துக்குராஜாவான விரா டனும் நூறுஸூர்யப்ரதிமையுள்ளதும் நூறுசுழிகளையுடையதும் நூறுபுள்ளிகளுள்ளதும் நூறுகண்களால்நிறைந்ததும் பிளக்கமுடியா ததுமான கவசத்தைஅணிந்தான். பிறகு, மஹாபலசாலிகளும் தேவ தைகள்போன்றவர்களும் (பகைவர்களை) அடிக்குந்திறமையுள்ளவர் களுமான யுத்தவீரர்கள் போர்புரியஎண்ணங்கொண்டு தங்கள்தங்க ளுக்குரிய பற்பலவிதமானகவசங்களைப்பூட்டிக்கொண்டார்கள். மஹா ரதர்கள் துணைக்கருவிகளோடுகூடியவைகளும் ப்ராகாசமுள்ளவைகளு மான பெரியதேர்களில் பொற்கவசங்களால்மூடப்பட்ட குதிரைகளைத் தனித்தனியாகப் பூட்டினார்கள். ஸூர்யசந்த்ரர்களுக்கொப்பானதும் ரத்னங்களாலும் தங்கத்தாலும் நன்றாகஅலங்கரிக்கப்பட்டிருக்கின் றதுமான மத்ஸ்யராஜனுடையரதத்தில் மிகவும் பெரியகொடியானது தூக்கிக்கட்டப்பட்டது. சூரர்களானக்ஷத்ரியர்கள் பற்பலவடிவமுள் ளவைகளும் ஸ்வர்ணத்தால்செய்யப்பட்டவைகளும் பொன்மயமான மாலைகளுள்ளவைகளுமான கொடிகளை அவரவர்களுக்குத்தக்கபடி ரதங்களில்தூக்கிக்கட்டினார்கள். (இவ்வாறு) ரதங்கள் ஸித்தம்செய் யப்படும்பொழுது, கங்கர் விராடராஜனைப்பார்த்து, "(ராஜரே!) என் னால் தர்மார்த்தகாமமோக்ஷங்களுக்கு ஸாதனமானஅஸ்த்ரமானது ரிஷிச்ரேஷ்டரிடத்தினின்று அடையப்பட்டிருக்கிறது. நான் கவசம் பூண்டு ரதத்தின்மீதேறிப் பசுக்களிருக்கும்இடத்தைக்குறித்துப்

புறப்படுகிறேன். தோஷமற்றவரே! பலசாலியான இந்தவலலனும் சூரனாகக் காணப்படுகிறான். பசுரக்ஷகனான தந்த்ரீபாலனையும் அச்வ ரக்ஷகனான தாமக்ரந்தியையும் ரதங்களில்ஏறும்படிசெய்யும். பசுக்கள் நிமித்தமாக (த்ரிகர்த்தவீரர்கள்) ஒருபொழுதும் இவருடன் போர் புரியமாட்டார்களென்பது என்னுடையஎண்ணம்" என்றார். பிறகு, மத்ஸ்யதேசத்துராஜாவான விராடன், இளையஸஹோதரனான சதாநீ கனைப்பார்த்து, "(சதாநீக!) கங்கர், சமையல்காரனான வலலன், வீர்ய முடையவனான தாமக்ரந்தி, பசுக்களைக்காப்பவனான தந்த்ரீபாலன் இவர்கள் புருஷச்ரேஷ்டர்களும் சூரர்களும் மிக்கவீரபுருஷர்களும் சிறந்தகஜராஜனுக்கு ஒப்பானவர்களுமாயிருத்தலால், இவர்கள் யுத் தஞ்செய்வார்களென்பது என்னுடையஎண்ணம். இவ்விஷயத்தில் ஸம்சயமில்லை. இவர்களுக்கும் த்வஜங்களும் பதாகைகளுமுள்ள தேர்கள்கொடுக்கப்படலாம். (இவர்களும்) விசித்ரமும் உறுதியுள் ளனவும் லேசாயிருக்கின்றனவுமான கவசங்களைச் சரீரங்களில் பூண்டு கொள்ளட்டும். இவர்களுக்கு ஆயுதங்களும் கொடுக்கவேண்டும். இவர்கள் ஒருபொழுதும் யுத்தம்செய்யாமலிருக்கமாட்டார்களென் பது என்னுடையஎண்ணம்" என்றுசொன்னான்.

ராஜரே! அந்தச்சதாநீகன் ராஜாவினுடைய அந்தவார்த்தை யைக்கேட்டு மனத்தில்வேகங்கொண்டு பார்த்தர்களானஸஹதேவ னுக்கும் யுதிஷ்டிரராஜருக்கும் பீமனுக்கும் நகுலனுக்கும ரதங்களைக் கொடுத்தான். அரசனால் விரைவாகக் கட்டளையிடப்பட்டஸாரதிகள் ராஜபக்தியைமுன்னிட்டவர்களாகி ரதங்களைக்கண்டு விரைவாகக் குதி ரைகளைப்பூட்டினார்கள். விராடன் சிறந்தசெய்கையுள்ள அந்தப்பாண் டவர்களுக்குக்கொடுத்தனவும் விசித்ரமானவையும் புதியனவும் உறு தியுள்ளனவுமான கவசங்களை அந்தமஹாரதர்கள் சரீரங்களில்பூட் டிக்கொண்டு கவசமுள்ளவர்களானார்கள். ராஜச்ரேஷ்டரே! வேக முள்ளவர்களும் மறைக்கப்பட்டஉருவமுள்ளவர்களும் எல்லாச்சாஸ்த் ரங்களிலும்ஸமர்த்தர்களும் மஹாரதர்களும் குருபுங்கவர்களும் சூரர் களும் உண்மையானவன்மையுள்ளவர்களும் பாண்டுகுமாரர்களுமான நான்குப்ராதாக்களும் கவசமணிந்து உத்ஸாஹத்துடன் ஸுவர்ணத் தால்அலங்கரிக்கப்பட்ட தேர்களின்மீதேறி ஒருங்குசேர்ந்து விராட னுக்குப் பின்னேசென்றார்கள். அந்தவீரர்கள் நீண்டனவும் உறுதி யுள்ளனவுமான வில்லின்நாண்களைத் தங்கள் வன்மைக்குத்தக்கபடி இழுத்து விற்களில்பூட்டினார்கள். பிறகு, நல்லஆடைகளை உடுத்த வர்களும் சந்தனங்களால்பூசப்பட்டவர்களுமான அந்தவீரர்களெல்

லோரும் அரசனால் ஏவப்பட்டுக் குதிரைகளை விரையவோட்டினார்கள். பொன்னாபரணங்களால் மறைக்கப்பட்டவைகளும் பருத்தவைகளும் (பாரத்தை) நன்குபொறுக்கும் தன்மைபொருந்தியவைகளுமான அந்தக்குதிரைகள் தூண்டப்பட்டுப் பக்ஷிகளுடையவரிசைகள்போலக் காணப்பட்டன. பயங்கரமானவடிவமுள்ளவைகளும் மதப்பெருக்குற்றகன்னத்தையும் முகத்தையுமுடையவைகளும் யுத்தத்தில்ஸமர்த்தர்களான வீரர்களால் நன்குஏறப்பட்டவைகளும் சிறந்தயானைமாவுத்தர்களால் ஏறப்பட்டவைகளும் நல்லதந்தங்களையுடையவைகளும் அறுபதுவயதுசென்றவைகளும் மழைபொழிகின்ற மேகங்கள்போன்றவைகளுமான பெரியயானைகள் நகர்ந்துபோகின்றமலைகள்போலப் பின்புறத்தில் ராஜாவைத் தொடர்ந்துசென்றன. உறுதியானஆயுதங்களையுடையஜனங்களால் சூழப்பட்டதும் ரதங்களாலும் குதிரைகளாலும் யானைகளாலும் சூழப்பட்டதுமான விராடனுடைய அந்தச் [1]சிறந்த ஸேனையானது அப்பொழுதுஇந்த்ரனுடைய ஸேனைபோலவிளங்கியது. மஹாராஜரே! ராஜரே! பசுக்களுடையஸ்தானத்தை அடையவேண்டுமென்கிறஎண்ணத்துடன் செல்லுகின்ற அந்தவிராடனை அப்பொழுது மத்ஸ்யதேசத்தினர்களும் ஸமர்த்தர்களும் மேன்மைபெற்றவர்களுமான இரு[1]பதினாயிரம்வைச்யர்களும் ராஜபுருஷர்களும் எண்ணாயிரம் ரதங்களும் ஆயிரம்யானைகளும் இருபதினாயிரம்குதிரைகளும் விரைவாகப் பின்தொடர்ந்துசென்றார்கள். பரதகுலத்திலுதித்தவரே! விராடனுடைய அந்தஸேனையானது வஸந்தகாலத்தில் அதிகபுஷ்பங்களால்நிறைந்ததும் விசித்ரமுமானகானகம்போல அதிகமாக விளங்கியது.

முப்பத்துநான்காவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(விராடன்ஸேனைக்கும் ஸுசர்மாவின்ஸேனைக்கும் யுத்தமும், யுதிஷ்டிரர்முதலானவர்களால் கொல்லப்பட்டவர்களின் தொகையும், விராடனுக்கும் ஸுசர்மாவுக்கும் யுத்தமும்.)

சூரர்களும் வரிசைப்படுத்தப்பட்டிருக்கின்ற ஸேனையையுடையவர்களும் (பகைவர்களை) வெல்லும் தன்மையுடையவர்களுமான மாத்ஸ்யர்கள் பட்டணத்திலிருந்துவெளிப்பட்டு ஸூர்யாஸ்தமனஸம

1 வேறுபாடம்.

யத்தில த்ரிகார்த்தர்களை அடைந்தார்கள். பசுக்களிடத்தில் அதிக ஆவலுள்ளவர்களும் மிக்க பலமுள்ளவர்களும் நன்ருக அடிப்பவர்களுமான அந்த த்ரிகர்த்தர்களும் மாத்ஸ்யர்களும் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கிற ஸேனையுடன்கூடி ஒருவரையொருவர் எதிர்த்துப் போர்புரிந்தார்கள். பயங்கரமாயிருப்பவைகளும் தோமரங்களாலும் அங்குசங்களாலும் தூண்டப்பட்டவைகளும் ஸாமர்த்தியமும் தலைமையுமுள்ள யானைமாவுத்தர்களால் ஏறப்பட்டவைகளும் மதங்கொண்டவைகளுமானயானைகளும் ஒன்ரோடொன்று எதிர்த்துப் போர்புரிந்தன. ராஜரே! பரஸ்பரம் அடித்துக்கொள்ளுகின்ற அவ்விருதிறத்துவீரர்களுக்கும் ஸூர்யன் அஸ்தமிக்கும்தருணத்தில் கோரமானதும் நெருங்கியதும் மயிர்க்கூச்சம் உண்டுபண்ணுகின்றதும் யமனுடையநாட்டைவ்ருத்திபண்ணுகின்றதும் காலாட்களும் ரதங்களும் சிறந்தயானைகளும் குதிரைவீரர்களும் நிறைந்தஸேனையின் பெருக்கமுள்ளதும் தேவாஸுரர்களின் யுத்தம்போன்றதுமான யுத்தம் உண்டாயிற்று. (அந்தஸேனைகள்) ஒன்றையொன்றெதிர்த்து அடித்துக்கொள்ளுகையில், பூமியிலுள்ளபுழுதியானது உயரக்கிளம்பிற்று; ஒன்றும் அறியப்படவில்லை. பறவைகளும் ஸேனையிலுண்டானபுழுதியால் மூடப்பட்டுப் பூமியில்விழுந்தன. அதிவேகமாகச்செல்லுகின்ற அம்புகளால் ஸூர்யனும் மறைக்கப்பட்டான். ஆகாயமானது மின்மினிப்பூச்சிகளோடு கூடியதுபோலாயிற்று. கர்ஜிக்கின்றவர்களும் இடமாகவும் வலமாகவும் அம்புகளையெய்கின்றவர்களுமான உலகிற்சிறந்த வீரர்களுடைய ஸ்வர்ணமயமானபின்புறத்துடன்கூடினவிற்கள் மின்னல்கள்போல அசைந்துகொண்டிருந்தன. தேர்கள் தேர்களோடு சேர்க்கைபெற்றன. காலாட்கள் காலாட்களோடு சேர்ந்தார்கள். குதிரைக்காரர்கள் குதிரைக்காரர்களோடு சேர்ந்தார்கள். மஹாகஜங்கள் கஜங்களோடு சேர்ந்தன. யுத்தவீரர்கள் ரணகளத்தில் அதிககோபங்கொண்டு கத்திகளாலும் பட்டஸங்களாலும சக்திகளாலும் தோமரங்களாலும் ஒருவரையொருவர் கொன்ருர்கள். பரிகாயுதங்களைக் கையில்கொண்ட சூரர்களான யுத்தவீரர்கள் அதிககோபங்கொண்டவர்களும் உத்ஸாஹமுள்ளவர்களும் ரணகளத்தில் ஒருவரைஒருவர் கொல்லுகிறவர்களுமாகி (பகைவர்களை) புறங்காட்டி ஓடும்படிசெய்வதற்குச் சக்தியற்றவர்களாஞர்கள். (அந்தயுத்தகளத்தில்) அறுக்கப்பட்டதலைகள் சிவந்திருக்கின்ற கீழ்மேல் உதடுகளுள்ளவைகளும் நல்ல மூக்குள்ளவைகளும் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கிற மீசையுள்ளவைகளும் நன்கு அலங்கரிக்கப்பட்டவைகளும் புழுதியினுல் காந்தியற்றனவாகச்செய்

யப்பட்ட குண்டலங்களுள்ளவைகளுமாகக் காணப்பட்டன. அந்த மஹாயுத்தத்தில் நான்குபக்கங்களிலும் வீரர்களால் அறுக்கப்பட்டிருக்கின்ற க்ஷத்ரியர்களுடையசரீரங்கள் ஆச்சாமரங்களுடைய அடிக்கட்டைகள்போலக் காணப்பட்டன. அந்த யுத்தபூமியானது ஸர்ப்பங்களுடைய உடல்போன்றவைகளும் சந்தனங்களால்பூசப்பட்டவைகளுமான கைகளாலும் குண்டலங்களுடன்கூடின தலைகளாலும் நான்குபக்கங்களிலும் வ்யாபிக்கப்பட்டது. அந்தயுத்தபூமியானது மெல்லியதும் பொன்னால் அழகுசெய்யப்பட்டதுமான இரண்டுவஸ்த்ரங்களைத் தரித்துக்கொண்டிருக்கின்ற நல்ல யௌவனமுள்ள ஒருஸ்த்ரீபோலவிளங்கியது. அதிகமாகப்பெருகுகின்ற ரக்தத்தினால் பூமியிலிருந்து உண்டானபுழுதி தணிந்தது. ஸைன்யமானது கோரமான மதிமயக்கத்தை அடைந்து வரம்புகடந்திருந்தது. அப்பொழுது தர்மாத்மாவும் பாண்டுநந்தனருமானயுதிஷ்டிரரும் ஸஹோதரர்களோடு அணிவகுத்துக்கொண்டு விராடனுடன்சேர்ந்து (பகைவர்களோடு) போர்புரிந்தார். யுதிஷ்டிரர் தம்படையை ராசாளிப்பக்ஷிபோலாக்கிக்கொண்டு (அந்தப்பக்ஷிக்குத் தாம்) முகமாயிருந்தார்; நகுலஸஹதேவர்கள் இரண்டுசிறகுகளானார்கள்; வ்ருகோதரன் வாலாயிருந்தான். அந்தயுத்தத்தில் குந்திபுத்ரரான யுதிஷ்டிரர் ஆயிரம்ரதிகர்களைக் கொன்றார். சஸ்த்ரங்களைத்தரித்த எல்லாவீரர்களுள்ளும் சிறந்தவனும் மிக்ககோபங்கொண்டவனும் வீரனுமானபீமஸேனனே இரண்டாயிரம் ரதிகர்களைப் பரலோகத்துக்கு அனுப்பினான். நகுலன் முன்னூறு ரதிகர்களைக் கொன்றான். ஸஹதேவன் நானூறு ரதிகர்களைக் கொன்றான். சதானீகன் நூறுபேர்களைக் கொன்றான். மதிராக்ஷன் நானூறுபேர்களைக் கொன்றான். சிறந்தபலமுள்ள சதானீகனும் மதிராக்ஷனும் அதிகக்களிப்புற்ற த்ரிகர்த்தர்களுடைய பெரும்படையில் நுழைந்து மிக்கபரபரப்புடன் (எதிரிகளோடு) மயிர்பிடித்துச் சண்டைசெய்தார்கள்; தோராளிகளோடுதோராளிகளாகநின்றும் சண்டைசெய்தார்கள். த்ரிகர்த்தர்களுடையபெரும்படையில் நுழைந்தவர்களான அவ்விருவர்களையுங்கண்டு ஸூர்யதத்தனும் வலலனும் (அவர்களைப்) பின்தொடர்ந்துசென்றார்கள். பெரிதான வில்லையேந்தியவனும் மஹாபலசாலியும் விராடபுத்ரனுமான சங்கன யுத்தத்தில் சூரர்களை ஸம்ஹரித்துக்கொண்டு (த்ரிகர்த்தர்களுடைய) பெரும்படையில் புகுந்தான். அந்தயுத்தத்தில் ரதிகர்களுள்சிறந்தவனான அந்தவிராடன் ஐந்நூறு ரதிகர்களையும் நூறு யானைகளையும் அவ்வாறே ஆயிரம் குதிரைகளையுங்கொன்று ஒற்றைத்தேருடன் பற்பலவிதமான யுத்த

க்திகளில் ஸஞ்சரித்துக்கொண்டு ஸ்வர்ணமயமான ரதத்துடன்கூடின த்ரிகர்த்ததேசாதிபதியான ஸுசர்மாவை யுத்தத்தில் எதிர்த்தான். பெரியவில்லுள்ளவர்களும் மஹாபலசாலிகளுமான அவ்விருவர்களும் பசுக்களின்நடுவில் இரண்டுகாளைகள்போல ஒருவரையொருவர் அடித்துக்கொண்டு அந்த ரணகளத்தில் போர்புரிந்தார்கள். மிகுந்தகோபங்கொண்டவர்களும் பொறுமையற்றவர்களும் அஸ்த்ரங்களில் பயிற்சியுள்ளவர்களுமான ராஜச்ரேஷ்டர்களிருவர்களும் கூர்மையுள்ள பாணங்களாலும் கத்திகளாலும் சக்திகளாலும் கோடாலிகளாலும் ப்ரகாசித்தார்கள். பிறகு, ரதிகர்களான இருவர்களும் ரதங்களுடன் (யுத்தத்துக்காக) ஒருவரோடொருவர்சேர்ந்து இரண்டுமேகங்கள் மழைத்தாரைகளைப்பொழிவதுபோல நான்குபக்கத்திலும் விரைவாகப் பாணங்களைப்பொழிந்தார்கள். அஸ்த்ரவித்தையில்பயிற்சியுள்ளவர்களான அவ்விருவர்களும் அதிககோபங்கொண்டு இரண்டுயானைகள் தந்தங்களால் ஒன்றையொன்றுபிளப்பதுபோல, கூர்மையுள்ள பாணங்களால் ஒருவரையொருவர் யுத்தத்தில்பிளந்தார்கள். மத்ஸ்யராஜன் ஸுசர்மாவைக் கூர்மையுள்ளபாணங்களால்அடித்து அவனுடைய நான்குகுதிரைகளையும் ஐவைந்துபாணங்களால் அடித்தான்; இரண்டுபாணங்களால் ஸாரதியையும் மூன்றுபாணங்களால் கொடியையும் அடித்தான். அவ்வாறே யுத்தத்தில் கொடியமதங்கொண்டவனும் உத்தமமான அஸ்த்ரங்களை அறிந்தவனுமான ஸுசர்மாவும் மத்ஸ்யராஜனைக் கூர்மையுள்ள ஐம்பதுபாணங்களால் அடித்தான். ராஜேந்த்ரரே! அப்பொழுது பெரியயுத்தத்தில் அவ்விருவர்களுடைய ஸைன்யங்களனைத்தும், இரவின்முன்னேரத்தில் புழுதியால்சூழப்பட்டமையால் ஒன்றையொன்று அறிந்துகொள்ளவில்லை.

முப்பத்தைந்தாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(ஸுசர்மா விராடனைப்பிடித்ததும், பீமன் விராடனைவிடுவித்து ஸுசர்மாவைப்பிடித்ததும், யுதிஷ்டிரர் கருணையினால் ஸுசர்மாவைவிடுவித்ததும்.)

பரதவம்சத்தில்உதித்தவரே! உலகமனைத்தும்இருளாலும் புழுதியினாலும் மூடப்பட்டிருக்குங்கால் அணிவகுக்கப்பட்டஸேனைகளையுடையவர்களும் பகைவர்களைக்கொல்லுந்தன்மையுள்ளவர்களுமான

அந்த (இருதிறத்துவீரர்களும்) ஒரு [1]முஹூர்த்தகாலம்யுத்தம்செய்யாமல் இருந்தார்கள். பிறகு, இருளை விலக்கிக்கொண்டும் ராத்ரியை நிர்மலமாகச்செய்துகொண்டும க்ஷத்ரியர்களை யுத்தத்தில்காண்பித்துக்கொண்டும் சந்த்ரன் உதித்தான். வெளிச்சமுண்டானபின், அந்த யுத்தவீரர்களுக்கு ஒருவரையொருவர்பார்த்துக்கொண்டுசெய்யும்படியான கொடும்போர் பின்பும் விளைந்தது. அவ்வாறே அந்தவீரர்களுடைய நெருங்கின அந்தஸேனைகள் கோபங்கொண்டு கதாயுதங்களாலும் பட்டாக்கத்திகளாலும் கோடாலிகளாலும் கூரியநுனிகளுள்ளனவும் நன்ருகச்சாணைபிடிக்கப்பட்டிருக்கிறமுனையுள்ளனவுமான ஈட்டிகளாலும் ஒன்றையொன்று எதிர்த்து அடித்துக்கொண்டன. த்ரிகர்த்ததேசாதிபதியும் ராஜாவுமான ஸுசர்மாவானவன் (தன்) ஸேனையினால் மத்ஸ்யராஜனுடைய எல்லாஸேனையையும்அடித்து ஜயித்து மாத்ஸ்யர்களை நசுக்கி, பிறகு, பலசாலியான விராடனை எதிர்த்து ஓடினன். அவ்விருவர்களும், மதங்கொண்ட இரண்டுகாளைகள்போலவும் மதத்தினால்அடங்காத இரண்டுயானைகள்போலவும் யானைகளைப் பற்றிஇழுக்கும்தன்மையுள்ள இரண்டுஸிம்மங்கள்போலவும் அதிக மதங்கொண்டஇந்த்ரனும் வ்ருத்ரனும்போலவும் போர்புரிந்தார்கள். இருவர்களும் ஸமமானபலமும் உத்ஸாஹமுமுள்ளவர்கள். இருவர்களும் ஸமமான பராக்ரமமுடையவர்கள். இருவர்களும் ஸமமாகவே அஸ்த்ரங்களை ப்ரயோகிப்பவர்களா. இருவர்களும் யுத்தத்தில் ஸமர்த்தர்கள். அவ்விருவர்களும் தனியாகத் தேரில்கட்டியிருக்கின்றகுதிரைகளையும் இருவர்களுடையபுறங்காப்பவனையும் ஸாரதியையும் கொன்று ஸமமானவில்லைப்பிடித்துக்கொண்டு அதிகக்கொழுப்புள்ள க்ருஷ்ண கம்ஸர்கள்போல இருந்தார்கள். பிறகு, த்ரிகர்த்ததேசாதிபதியான ஸுசர்மாவானவன் ஸுவர்மா என்கிற ஸஹோதரனுடன் நாற்புறத்திலும் தேர்க்கூட்டத்தோடு மத்ஸ்யராஜனை எதிர்த்துவந்தான். பிறகு, க்ஷத்ரியரிற்சிறந்தவர்களான அவ்விரண்டு ஸஹோதரர்களும் மிகுந்த கோபங்கொண்டு கதாயுதத்தைக்கையில்கொண்டு தேர்களிலிருந்து இறங்கி வேகமாக (விராடனை) எதிர்த்துவந்தார்கள். பிறகு, பகைவீரர்களை நாசஞ்செய்பவனும் பலசாலியும் வீர்யமுள்ளவனும் கதாயுதமுள்ளவனுமான ஸுசர்மாவானவன் தேரிழந்த மத்ஸ்யராஜனை உயிரோடுபிடித்தான். பயத்தைச்செய்யும்வன்மையுள்ள ஸுசர்மாவானவன் ஒரு காமுகன் யுவதியைத்துன்புறுத்துவதுபோல அந்தமத்ஸ்யராஜனைத் துன்புறுத்தித் தன்தேரில் ஏற்றிவைத்துக்கொண்டு சென்

---

[1] 'சந்த்ரன்உதிக்கும்வரையில்' என்பது பழையபடை.

றான். ரதத்தைஇழந்த மிகுந்தபலசாலியான அந்தவிராடன் பிடிக்கப் பட்டவுடனே அந்த ஸைன்யமுழுவதும் தோல்வியடைந்து உத்ஸாஹ த்தையும் ஆசையையும்இழந்ததாகியது. யுத்தத்தில் த்ரிகர்த்தர்க ளால் ஹிம்ஸிக்கப்பட்ட மாத்ஸ்யர்கள் எல்லாத்திசைகளிலும் மூலைத் திசைகளிலும் பயந்து ஓடினார்கள்; நடந்தும்சென்றார்கள். அந்த மாத்ஸ்யர்கள், (த்ரிகர்த்தர்களால் அவ்விதமாக) ஓட்டப்படுமளவில் தர்மாத்மாவும் குந்தியின்புதல்வருமான யுதிஷ்டிரர் சத்ருக்களை அட க்குகிறவரான பீமஸேனனைப்பார்த்து, "சிறந்தகைகளுள்ளவனே! மத்ஸ்யராஜன் த்ரிகர்த்தராஜனான ஸுசர்மாவினால் பிடிக்கப்பட்டு விட்டான். அவனை நீ விடுவிக்கவேண்டும். அவன் சத்ருக்களுக்கு வசப்படவேண்டாம். பீமஸேன! நீண்டகைகளுள்ளவனே! ஸுசர் மாவினால்பிடிக்கப்பட்டிருக்கிறவனும் நமக்கு ப்ரீதியை உண்டுபண் ணுகிறவனுமான விராடராஜனைக் காப்பாற்று. விரைவாக விடுவி. நாம்எல்லாரும் ஸர்வாபீஷ்டங்களாலும் நன்றாகப் பூஜிக்கப்பட்டு (இவ னிடத்தில்) ஸுகமாகவஸித்துவந்தோம். பீமஸேன! அப்படிப்பட்ட வாஸத்துக்குக் கைம்மாறானது உன்னால் செய்யத்தக்கது" என்று சொன்னார். அந்தயுத்தத்தின்மத்தியில் அவ்வாறுசொல்லுகின்ற அந்த யுதிஷ்டிரரைப்பார்த்து, (பகைவர்களால்) அவமதிக்கத்தகாதவனும் மஹாபலசாலியுமானபீமஸேனன், "ராஜரே! உம்முடையகட்டளையி னால் நான் இவனைப் பாதுகாக்கிறேன். யுத்தத்தில் பகைவர்களுடைய பலத்தோடு ஒப்பிடக்கூடாததான என்னுடையதோள்வலியை ஆதார மாகக்கொண்டு எதிராளிகளோடு போர்புரிகிற என்னுடைய மிகப் பெரிதான இந்தச்செய்கையைப் பாரும். ராஜரே! நீர் உடன்பிறந்தார் களோடு ஏகாந்தமான ஸ்தலத்தைஅடைந்திரும். இதோ பெரிய கிளைகளுள்ளதும் மலைபோன்றதும் பூவாமறகாய்ப்பதுமான ஒருமரம் இருக்கிறது. நான் இதைப்பெயர்த்துப் பகைவர்களை நாசம்செய்கி றேன்" என்றுசொன்னான். மதயானைபோல மரதைதபார்க்கின்றவ னும் வீரனுமான அந்த ஸஹோதரனைப்பார்த்து, தர்மராஜாவான யுதி ஷ்டிரர், "பீம! ஸாஹஸம்செய்யாதே. இந்தமரம் இருக்கட்டும். பரத குலத்தில்உதித்தவனே! வ்ருக்ஷத்தை (கையில்எடுத்துக்)கொண்டு அதிமானுஷமானகார்யங்களைச்செய்யும் உன்னை ஜனங்கள், 'இவன் பீமஸேனன்' என்று தெரிந்துகொள்ளவேண்டாம். (ஆதலால்,) நீ இந்தமரத்தை(க்கையில்) எடாதே; ஸிம்மநாதத்தையும் வெளியிடா தே. (இவ்விதமான) செய்கையினாலும் ஸிம்மநாதத்தினாலும் ஜனங்கள் உன்னை நிச்சயமாகஅறிவார்கள். நீ இநதமரத்தை எடுத்துக்கொண்டு

இந்தஸேனையை எதிர்த்து ஓடாதே. மரத்தைப்பிடுங்கும்உன்னை நிச்சயமாக ஜனங்கள் அறிந்துகொள்வார்கள். (ஆதலால்,) நீ வேறு ஆயுதத்தையே எடுத்து மனுஷ்யர்களுக்கு உரியகார்யத்தையே செய். மனிதர்களுக்கு உரித்தானதும பிறர்களால் கண்டுபிடிக்கமுடியாததுமான ஆயுதமானவில்லையாவது சக்தியையாவது கத்தியையாவது கோடாலியையாவது எடுத்துக்கொண்டு விரைவாக விராடராஜனை விடுவிப்பாயாக. மதஸ்யராஜனை ரக்ஷிக்கஎண்ணங்கொண்டு (பகைவர்களோடு) யுத்தரங்கத்தில் போர்புரியும்உனக்கு மஹாபலசாலிகளான நகுலஸஹதேவர்கள் சகரரக்ஷகர்களாவார்கள்" என்றுசொன்னார்.

பாண்டுநந்தனனானபீமன் ஸஹோதரருடையவசனத்தை ஏற்று மரத்தைவிட்டு வில்லையெடுத்துத் தேரின்மீதேறி ஜலத்துடன்கூடின மேகம்போலச் சரமாரிகளைப்பொழிந்துகொண்டு பயங்கரமானசெய்கையுள்ள அந்தஸுசர்மாவைக்குறித்து ஓடிவந்தான். பீமன் விராடனைப்பார்த்தவுடன், ஸுசர்மாவைநோக்கி, 'நில், நில்' என்றும் சொன்னான். ரதிகர்களுள்உத்தமனான ஸுசர்மாவானவன், பின்புறத்தில் 'நில் நில்' என்று சொல்லுகின்றவனும் காலனுக்கும் அந்தகனுக்கும் யமனுக்கும் ஒப்பானவனுமான பீமனைப்பார்த்து மனக்கவலையுற்றான். ஸுசர்மாவானவன், "மஹாயுத்தம்நேர்ந்துவிட்டது. இவன் என்னுடைய மிகச்சிறந்தசெய்கையைப்பார்க்கட்டும். நானும் இவனுடைய மிகச்சிறந்த செய்கையைப்பார்க்கிறேன்" என்றுசொல்லி வில்லையெடுத்துக்கொண்டு ஸஹோதரர்களுடன் திரும்பினான். அந்தரதிகர்கள் நிமிஷத்திற்குள் பீமஸேனனோடு சேர்ந்தார்கள். பீமஸேனனால் வீரர்களுடன்கூடின தேர் யானை குதிரைகளுடையனவும் உக்ரர்களும் வில்லாளிகளுமான சூரர்களுடையனவுமான லக்ஷக்கணக்கானகூட்டங்கள் விராடனுடையஸமீபத்தில் கீழேதள்ளப்பட்டன. மஹாத்மாவானபீமன் கதாயுதத்தைஎடுத்து அவர்களுடையகாலாட்களைக்கொன்றான். யுத்தத்தில் கொடியமதங்கொண்ட ஸுசர்மா அவ்விதமான அந்தயுத்தத்தைப்பார்த்து, 'மஹாபலமுள்ள (நம்முடைய) ஸைன்யத்தில் முந்திமுழுகினஒருசத்ருவீரன் காணப்படுகிறான்; என்னுடைய ஸேனையில் மிகுதி என்னஇருக்கிறது' என்று மனத்தினால்ஆலோசித்து அப்பொழுது காதுவரையில்இழுக்கப்பட்ட நாண்கயிறுள்ளவில்லுடன் தோன்றினான். ஸுசர்மா, கூரியஅம்புகளை அடிக்கடி (பீமஸேனன்மீது) விடுத்தான். பிறகு, அதிககோபமுள்ளவர்களான அந்தப்பாண்டவர்களனைவரும் த்ரிகர்த்தர்களைக்குறிப்பிட்டுத் திவ்யாஸ்த்ரத்தைவிட்டுக்கொண்டு குதிரைகளை எதிரில்நடத்தினார்கள். அப்

படிப்பட்ட பெரியஸேனையைநோக்கித் திருப்பிவிடப்பட்ட ரதங்களு டன்கூடின அந்தப்பாண்டவர்களைக்கண்டு, விராடபுத்ரன் (பகைவரி டம்) அதிககோபம்கொண்டு மிக்கவியப்பைத்தரத்தக்கதாக யுத்தம் செய்தான். த்ரிகர்த்தர்கள் எதிர்த்துவந்து ஜயத்தில்விருப்பத்துடன் போர்புரிந்தார்கள். அவர்கள்மீது அதிககோபங்கொண்டவனும் ஆயு தம்பிடித்தவரனைவருள்ளும் சிறந்தவனும் வீரனுமானபீமஸேனன் இரண்டாயிரம்தோளிகளைப் பரலோகத்தை அடையச்செய்தான். குந்திபுத்ரரும் ராஜாவுமானயுதிஷ்டிரர் (அம்புகளால்) ஆயிரம்வீரர் களைக்கொன்றார். நகுலனும் எழுநூறுபேர்களைப் பாணங்களால் கொன்றான். ப்ரதாபமுள்ளவனும் புருஷச்ரேஷ்டனும் பெரியவன்மை யுள்ளவனுமானஸஹதேவன் யுதிஷ்டிரரால்கட்டளையிடப்பட்டுப் பெரி தான த்ரிகர்த்தர்களுடையஸேனையில்புகுந்து ஸிம்மமானது அல்ப ம்ருகங்களைக் கலக்கமுறச்செய்வதுபோல எல்லாப்ராணிகளையும் கல க்கமுறச்செய்து முந்நூறுசூரர்களைக்கொன்றான். பிறகு, மஹாபல முடைய யுதிஷ்டிரராஜர் விரைவாகஎதிர்த்துச்சென்று ஸுசர்மாவை அம்புகளால் நன்றாகஅடித்தார். ஸுசர்மாவும் மிக்ககோபம்கொண்டு விரைவுள்ளவனாகிப் பத்துப்பாணங்களால்யுதிஷ்டிரரைஅடித்து நான் குபாணங்களால் (அவருடைய) நான்குகுதிரைகளையும் அடித்தான். ராஜரே! பிறகு, சுறுசுறுப்புடன் யுத்தம்செய்பவனும் குந்திபுத்ரனு மான வ்ருகோதரன் ஸுசர்மாவினிடம்சென்று அவனுடையகுதிரை களை (அடித்து) கீழேதள்ளினான்; சிறந்தபாணங்களால் அவனுடைய பின்புறத்திலுள்ள இரண்டுரக்ஷகர்களையுங்கொன்று, பிறகு, கோபங் கொண்டு அவனுடையஸாரதியையும் ரதமத்தியினின்று கீழேதள்ளி னான். சூரனாகவும் சக்ரரக்ஷகனாகவுமிருக்கிற சோணாச்வனென்ப வன் ரதத்தையிழந்தவனான த்ரிகர்த்தராஜனைக்கண்டு அப்பொழுது பயத்தினால் அவனைவிட்டு விலகினான். பிறகு, பலசாலியானவிராடன் ஸுசர்மாவினுடையரதத்தினின்று துள்ளிக்குதித்து அவனுடைய கதாயுதத்தைஎடுத்துக்கொண்டு அவனையே அடித்தான். கதாயுதத் தைக் கையில்கொண்டவனான அவன் பிராயமுதிர்ந்தவனாயிருந்தாலும் தருணன்போல ஸஞ்சரித்தான். பயங்கரமான உருவமும் வீர்யமு முள்ளபீமனோ (தன்) தேரினின்றுதுள்ளி வேகமாய்ச்சென்று அவனுடைய தேரில்குதித்து மறுபடியும் மனத்தேறுதலடைந்து யுத்தம்செய்கின்ற ஸுசர்மாவினுடைய தலையை, ஸிம்மமானது மலை யின்உச்சியிலிருந்துகுதித்துச் சிறிய ம்ருகத்தைப்பிடிப்பதுபோலவும் பூனையானது கோபத்தோடு மேலேபாய்ந்து எலியினுடையதலையைப்

பிடிப்பதுபோலவும் பிடித்துக்கொண்டான். சிறந்தகைகளுள்ளபீமன் கோபத்தினல் அவனைத்தூக்கிப் பூமியில்தேய்த்து, அலறுகின்ற அவனுடையதலையில் நன்றாகஅடித்தான். பீமன், அவன்மீது முழங்காலை வைத்து அவனை முஷ்டியினுல்குத்தினன். அந்த த்ரிகர்த்தராஜன் பலத்தஅடியினல் துன்பமுற்று மயக்கமடைந்தான். த்ரிகர்த்தர்களுள் மஹாரதனை அந்தவீரன் பிடிபட்டவுடன் த்ரிகர்த்தர்களுடைய ஸைன்யமுழுவதும் பயத்தால் துன்பமடைந்து தோல்வியுற்றது. பிறகு, மஹாரதர்களும் தம்முடையதோள்வலியை ஆதாரமாகக்கொண்டவர்களும் (அகார்யத்தில்) வெட்கமுடையவர்களும் உத்தமமான வ்ரதமுள்ளவர்களும் மஹாத்மாக்களும் விராடனுடைய க்லேசத்தைத்தீர்த்தவர்களுமான அந்தப் பாண்டுபுத்ரர்களனைவர்களும் எல்லாப்பசுக்களையும் திருப்பிக்கொண்டு ஸுசர்மாவைஜயித்து (அவனுடைய) தனத்தையும் முற்றிலும்எடுத்துக்கொண்டு (அரசனுக்கு) முன்னிலையில் வந்து நின்றார்கள்.

பிறகு, பீமன், "தீயொழுக்கமுள்ள இந்தஸுசர்மாவானவன் என்னிடத்தினின்று உயிர்பிழைப்பதற்குத் தகுந்தவனல்லன். அரசர் எப்பொழுதும் தயையுள்ளவராக இருப்பதால் என்னல் யாதுசெய்யத்தக்கது?" என்றுசொன்னன். குந்திபுத்ரனை வ்ருகோதரன் தனக்குவசப்பட்டுப் பரவசனயிருக்கிறஅந்த ஸுசர்மாவைக் கழுத்தில்பிடித்து அரசனிடம்கொண்டுவந்து, பிறகு துடித்துக்கொண்டிருக்கின்ற அவனைக்கட்டி, ப்ரஜ்ஞையிழந்தவனும் புழுதிபடர்ந்தவனுமான அவனைத் தேரிலேற்றிவைத்தான். பீமனே, ரணகளத்தின்மத்தியிலிருக்கிற யுதிஷ்டிரரைவந்தடைந்து ராஜாவானஸுசர்மாவை (அவருக்குக்) காண்பித்தான். புருஷரிற்சிறந்தயுதிஷ்டிரமஹாராஜர் அந்தஸுசர்மாவைப்பார்த்து நகைத்து யுத்தத்தில்விளங்குகின்ற பீமனைப்பார்த்து, "(வலல!) இந்தநராதமனை நீ விட்டுவிடு" என்று கட்டளையிட்டார். இவ்வாறுசொல்லப்பட்டபீமன், மஹாபலசாலியான ஸுசர்மாவைப்பார்த்து, "ஏ! மூட! உனக்குப்பிழைத்திருக்க விருப்பமிருக்குமானல் சொல்லுகின்றஎன்னிடமிருந்து அதன்காரணத்தைக்கேள். வீரர்கள்கூட்டங்களிலும் ஸபைகளிலும், 'நான் (உமக்கு) அடிமையாயிருக்கிறேன்' என்று உன்னல் சொல்லத்தக்கது. இப்படிச்சொன்னல் நான் உனக்கு உயிரைக்கொடுப்பேன். இது யுத்தத்தில் ஜயம்பெற்றவனல் அநுஷ்டிக்கத்தக்க முறை" என்று சொன்னன். பிறகு, தமையனான யுதிஷ்டிரர் அந்தப்பீமனைப்பார்த்து, "உனக்கு நாம் ப்ரமாணமாயிருப்போமாகில் இழிவானநடக்கை

யுடையவனான இந்தஸுசர்மாவை விட்டுவிடு; விட்டுவிடு. இவன் விராடராஜனுக்கு அடிமையாய்விட்டான்" என்று அன்புள்ளவார்த்தையைச்சொல்லிவிட்டு, "(ஸுசர்மாவே!) நீ விடுபட்டாய். தாஸனாகாமல் ஓடிப்போ. ஒருபொழுதும் இவ்விதம் செய்யாதே" என்று சொன்னார். (தர்மபுத்ரர்) இவ்வாறுசொல்லியபின் ஸுசர்மாவானவன் வெட்கத்துடன் தலைகுனிந்தான். அவன், விடப்பட்டவுடன் ராஜாவைவந்தடைந்து நமஸ்காரம்செய்து புறப்பட்டான். பகைவர்களைவென்றவர்களும் தங்கள் கைவன்மைகுறையாதவர்களும் (அகார்யத்தில்) வெட்கமுடையவர்களும் வ்ரதங்களை அநுஷ்டித்தவர்களுமான அந்தப்பாண்டவர்கள் ஸுசர்மாவைவிட்டுப் போர்க்களத்தினிடையில் அன்றிரவு ஸுகமாக வஸித்தார்கள்.

முப்பத்தாறுவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(யுதிஷ்டிரநுடையஏவலால் விராடன்அனுப்பியதூதர்கள் நகரத்தில்ஜயத்தைவெளியிட்டது.)

பிறகு, விராடன் ஸந்தோஷமடைந்து மனிதர்களுடையவல்லமையைமீறியிருக்கின்றவல்லமையுள்ளவர்களும் மஹாரதர்களுமான குந்திபுத்ரர்களைத் தனத்தினாலும் வெகுமானத்தினாலும் நல்வார்த்தையினாலும் ஸ்நேஹத்தினாலும் பூஜித்தான். விராடன், "என்னுடைய ரத்னங்கள் உங்களுடையவைகளே. அந்தஎல்லாரத்னங்களாலும் (உங்களுடைய) இஷ்டப்படி கார்யங்களை இனிதுசெய்துகொள்ளுங்கள். பகைவர்களைநாசஞ்செய்பவர்களே! உங்களுக்கு அலங்கரிக்கப்பட்டிருக்கின்ற கன்னிகைகளையும் பலவிதமானதனங்களையும் மற்றும் மனத்தினால்விரும்பப்பட்டவைகளையும் கொடுக்கிறேன். உங்களுடையவல்லமையினால் இப்பொழுது இவ்விடத்தில் நான் க்ஷேமமாக விடுவிக்கப்பட்டேன். ஆதலால், நீங்களெல்லாருமே மத்ஸ்யதேசத்துக்கு அரசர்கள்" என்றுகூறினான். அந்தஸமயத்தில் அவ்விதம் சொல்லிய அந்தவிராடனைநோக்கி, குருகுலத்தில்உதித்தவர்களும் யுதிஷ்டிரரை முதன்மையாகக்கொண்டவர்களுமான பாண்டவர்கள் மிகக்களித்தமனத்துடன் தனித்தனியாக (ப்பின்வருமாறு) உரைக்கலானார்கள். "ராஜனே! எல்லாவிதத்திலும் (உம்முடைய) வார்த்தையை (நாங்கள்) கொண்டாடுகிறோம். நீர் பகைவர்களால் விடப்

பட்டீரென்னும்இவ்வளவினாலேயே (நாங்கள்) இப்பொழுது ப்ரீதி
யுள்ளவர்களாகிறோம். நீர் பகைவரிடமிருந்து விடுபட்டீரென்னும்
இந்தக்கார்யமன்றோ எங்களுக்கு ஹிதமானது. எங்களுக்குவேறொரு
கார்யமுமில்லை. (நாங்கள்) தனத்தைத்தேடவில்லை" என்றனர். பிறகு,
சிறப்புற்றகைகளுள்ளவனும் அரசரிற்சிறந்தவனும் மத்ஸ்யதேசத்து
ராஜாவுமானவிராடன் மனக்களிப்புற்றவனும் அன்பின்பெருக்கால்
நிறைந்தவனும் ஸந்தோஷத்தால்தழுதழுத்த வாக்குள்ளவனுமாகி
யுதிஷ்டிரரைப்பார்த்து மறுபடியும் கூறலானான். "பகைவர்களை
அழிப்பவரே! இங்கு வாரும். உமக்கு நான் பட்டாபிஷேகம்செய்
விக்கிறேன். நீர் நம்முடையமத்ஸ்யதேசத்துக்கு அரசர். நீர்மனத்தி
னால் விரும்புகிறதையும் நான் உமக்குக்கொடுப்பேன். நீர்எங்களுடைய
எல்லாவற்றையும் அடைவதற்குத் தகுந்தவராயிருக்கிறீர். வ்யாக்ர
பாதருடைய கோத்ரத்திலுதித்தவரே! ப்ராம்மணோத்தமரே! ரத்
னங்களையும் பசுக்களையும் ஸ்வர்ணத்தையும் மணிகளையும் முத்துக்களை
யும் நான் உமக்குக்கொடுக்கிறேன். எல்லாவிதத்தினாலும் உமக்கு
வந்தனம். என்னுடையராஜ்யத்தையும் உடலையும் இப்பொழுது உமக்
காகவென்றே நான்எண்ணுகிறேன். நமக்குக் கோபத்தை உண்டாக்
கியபகைவனும் வசப்பட்டுவிட்டான்" என்றான். பிறகு, யுதிஷ்டிரர்
மறுபடியும் மத்ஸ்யராஜனைப்பார்த்து, "ஓ! மத்ஸ்யதேசத்துவேந்தரே!
உம்மால்சொல்லப்பட்டிருக்கின்ற இனியவார்த்தையைப்பற்றி நான்ஸந்
தோஷிக்கிறேன். நீர் எப்பொழுதும் மெல்லியதன்மையுடையவர்;
எப்பொழுதும் ஸுமுகர்" என்றுசொன்னார். விராடராஜனும் மறு
படியும் கங்கரைப்பார்த்து, "(ஓ)! ப்ராம்மணோத்தமரே! சூத்ரனான
வலலனுடையசெய்கைகள் ஆச்சர்யகரமாயிருக்கின்றன. யுத்தத்தில்
நான் சூத்ரனானவலலனால் ரக்ஷிக்கப்பட்டேன். அந்தோ! குற்றமற்றவ
ரே! உம்நிமித்தமாகவே இவை அனைத்தும் என்னால் அடையப்பட்டன.
வேண்டும்வரத்தைப்பெற்றுக்கொள்ளும். உமக்கு மங்களம். உமக்கு
நான் எதைச்செய்யக்கடவேன்? சொல்லும். நான் அதிகப்ரீதியினால்
உமக்குப்பலவிதமான ரத்னங்களையும் சயனங்களையும் ஆஸனங்களை
யும் வாஹனங்களையும் நன்றாக அலங்கரிக்கப்பட்டகன்னிகைகளையும்
யானைக்கூட்டங்களையும் குதிரைக்கூட்டங்களையும் ரதக்கூட்டங்களை
யும் பற்பலதேசங்களையும்கொடுக்கிறேன். என்னிடமிருந்து இவை
களைஎன்னிடமுள்ள அன்பினால் நீர்பெற்றுக்கொள்ளும்" என்றுசொன்
னான். அவ்வாறுசொல்லுகின்ற அவனைப்பார்த்து, அந்தஸமயத்தில்
குருகுலத்திலுதித்தவரான யுதிஷ்டிரர், "ஓ! பகைவரைவாட்டுபவரே!

MAHAMAHOPADHYAYA U. V. SWAMINATHAIYAR LIBRARY TIRUVANMIYUR, MADRAS

நீர் பகைவர்களால் விடப்பட்டீரென்னும் இதுவே எனக்குப் ப்ரீதி. ப்ரஸித்தரான நீர் ஸந்தோஷமுள்ளவராயிருப்பீரானால் இப்பொழுது பட்டணத்தில் ப்ரவேசித்து மனைவிமக்களோடும் சேர்க்கைபெறும். அஃதன்றோ எனக்கு நிகரில்லாதப்ரீதி. ராஜேந்த்ரரே! வேலைக்காரர்களோடும் ஸைந்யத்தோடும் வாஹனங்களோடும்கூடினவனும் மனிதரிற்சிறந்தவனுமான ஸுசர்மாவை விட்டுவிடும். இதைத்தான் நான் வரமாகவரிக்கிறேன்" என்று மறுமொழிகூறினர். இவ்வாறு கங்கர் சொல்லியவுடன், வேந்தரிற்சிறந்த விராடன் பிறகு, கங்கரைப்பார்த்து, "ஸுசர்மா இஷ்டப்படி போகட்டும்" என்று கூறினன். கங்கர், "ராஜரே! ஸுஹ்ருத்துக்களுக்கு ப்ரியத்தைச்சொல்வதற்காகத் தூதர்கள் விரைவாக உமமுடையநகரத்தை அடையட்டும்; உம்முடையஜயத்தை ப்ரஸித்தப்படுத்தட்டும்" என்றுசொன்னர். பிறகு, மத்ஸ்யதேசாதிபதியான விராடராஜன் அவருடையவார்த்தையினல், தூதர்களைப்பார்த்து, "(தூதர்களே) நீங்கள் பட்டணத்தைஅடைந்து யுத்தத்தில் எனக்கு நேர்ந்திருக்கின்ற விஜயத்தைச்சொல்லுங்கள். கன்னிகைகள் நன்றாக அலங்கரித்துக்கொண்டு என்னுடைய பட்டணத்திலிருந்து எதிராக வரட்டும். எல்லாவாத்யங்களும் நன்றாகஅலங்கரிக்கப்பட்டிருக்கிற தாஸிகளும் நகரத்திலுள்ளஎல்லாஜனங்களும் சீக்ரமாக எனக்கு எதிரில்வரட்டும்" என்று ஆஜ்ஞாபித்தான். இவ்வாறு சொல்லப்பட்டவர்களும் விரைவாகச்செல்லுகின்றவர்களுமான அந்தத்தூதர்கள், நடுவழியில்தங்காமல் இரவிலேயேவழிநடந்து நன்றாக ஸூர்யோதயமாகும்ஸமயத்தில் (விராட)நகரத்தில் புகுந்தார்கள். தூதர்கள் விராடநகரத்தில் விரைவாகப்ரவேசித்து, (அந்த) நகரமானது அலங்கரிக்கப்பட்ட கொடிகளாலும் மாலைகளாலும் [illegible]மாகும்படி (அரசனுடைய) மங்களகரமான விஜயத்தைக் கோஷித்தார்கள்.

முப்பத்தேழாவது அத்யாயம்.

கோக்ரஹண பர்வம். (தொடர்ச்சி.)

(துர்யோதனன், பீஷ்மர்முதலியோருடன் விராடநகரத்தின்வடபாகத்தில் பசுக்களைப்பிடித்ததும், பசுக்காப்போன்ஒருவன் உத்தரனிடத்தில் கௌரவர்கள் பசுக்களைக் கவர்கின்றனரென்று முறையிட்டதும்.)

மத்ஸ்யதேசாதிபதியான விராடன் அந்தப்பசுக்களைமீட்கஎண்ணம்கொண்டு த்ரிகர்த்தர்களைநோக்கி (யுத்தத்துக்காகச்) சென்றபொ

பொழுது துர்யோதனன் மந்த்ரிகளுடன் விராடநகரத்தைக்குறித்துச் சென்றான். பீஷ்மர், த்ரோணர், கர்ணன், சிறந்தஅஸ்த்ரங்களைஅறிந்தவரான க்ருபர், த்ரோணருடையகுமாரரான அச்வத்தாமா, ஸுபலனுடையகுமாரனான சகுனி, துச்சாஸனன், சலன், விவிம்சதி, விகர்ணன் வீர்யமுள்ளவனான சித்ரஸேனன், துஸ்ஸஹன், துர்முகன், இவர்களும் மற்றமஹாரதர்களனைவர்களும் மத்ஸ்யதேசத்தைவந்தடைந்து, விராடராஜனுடைய பசுக்காப்பவர்களைஓட்டி, விரைவாகப் பராக்ரமத்தினால் பசுக்கூட்டத்தைக் கவர்ந்தார்கள். கௌரவர்கள் லக்ஷக்கணக்கானபசுக்களைக் கைப்பற்றி நான்குபக்கத்திலும் பெரிய தேர்க்கூட்டத்தால் சூழ்ந்துகொண்டு (அவற்றை) ஓட்டினார்கள். பயங்கரமானயுத்தத்தில் அந்தமஹாரதர்களால் இடைச்சேரிகளில் கொல்லப்படுகின்ற கோபாலர்களுடைய மிக்கபெரியசப்தமானது கிளம்பியது. அப்பொழுது பசுக்களின்தலைவனே மிகப்பயந்து விரைவாக ரதத்தின்மேலேறிப் பீடிக்கப்பட்டவனைப்போல இரைந்துஅழுதுகொண்டு நகரத்திற்குச்சென்றான். பிறகு, அவன் பட்டணத்தில்நுழைந்து அரசனுடைய அரண்மனையைநோக்கிச்சென்று தேரினின்று கீழேஇறங்கி விரைவாக (பசுக்களின்வ்ருத்தாந்தத்தைச்) சொல்வதற்காக உட்புகுந்து பௌருஷமுள்ளவனான பூமிஞ்சயனென்கிற மத்ஸ்யராஜனுடையகுமாரனைப்பார்த்து அவனுக்குத் தேசத்திலுள்ளபசுக்கள் (கௌரவர்களால்) கவரப்படுவதை முற்றிலும் சொல்லத்தொடங்கினான்.

"தேசங்களைப்பெருக்குகின்றவனே! அந்தக்கௌரவர்கள் லக்ஷக்கணக்கானபசுக்களை ஓட்டிக்கொண்டுபோகிறார்கள். (அவர்களை ஜயித்து) பசுக்கூட்டங்களைமீட்பதற்காக எழுந்திரு. ராஜபுத்ரனே! ஹிதத்தைப்பெற விருப்பமுள்ளநீ நேரில் சீக்ரம் புறப்படு. மத்ஸ்யராஜர் உன்னை இப்பொழுது தாமில்லாத பட்டணத்துக்கு ரக்ஷகனாக 'வன்றோ ஏற்படுத்தினார். அந்தஅரசர் உன்னை ஸபையின்மத்தியில் 'என்புத்ரன் எனக்குத் தகுந்தவன்; சூரன்; என்குலத்தை அபிவ்ருத்தியடையச்செய்பவன்; பாணங்களிலும் அஸ்த்ரங்களிலும் ஸமர்த்தன்; நன்றாக யுத்தம்செய்பவன். என்னுடையபுத்ரன் எப்பொழுதுமேவீரன்; அப்படிப்பட்டகௌரவர்களோடு யுத்தரங்கத்தில் போர்புரிவதற்கு வல்லமையுள்ளவன்' என்று புகழுகிறார். அந்தராஜாவினுடைய அவ்விதவார்த்தையானது உண்மையேஆகட்டும். யுத்தத்தில் ஜயம் நிச்சயம். கௌரவர்கள் நிச்சயமாக மாண்டார்கள். நீ கௌரவர்களைஜயித்துப் பசுபதிபோல்ப் பசுக்களைத்திருப்பு. பயங்கரமான

பாணத்தினுடைய ஒளியினால் இவர்களுடையஸைன்யங்களைக் கொளுத்து. நீ வில்லினின்று விடுபட்டவைகளும் தங்கமயமான கட்டுக்களுள்ளவைகளும் விசித்ரமானவைகளும் ஆழ்ந்திருக்கின்ற கணுக்களுள்ளவைகளுமான பாணங்களால் சத்ருக்களுடையபடைகளை, தலைமையானயானை மற்றயானைகளைப் பிளப்பதுபோலப் பிளந்துவிடு. நாண்கயிற்றின்இருபக்கத்திலும் கட்டப்பட்டிருக்கிற இரண்டுகயிறுகளாகிற [1]உபதானங்களுள்ளதும் நாண்கயிறாகிற தந்தியுள்ளதும் விற்கழியாகிற தண்டத்துடன்கூடியதும் அதிகமாகஒலிக்கின்றதும் அம்புகளாகிற அக்ஷரங்களுடன்கூடினதுமான வில்லாகிறவீணையைச் சத்ருக்களுடையமத்தியில் நீ வாசிப்பாயாக. நகரத்திலிருந்து சீக்ரம் வெளியில்புறப்படு. ராஜபுத்ர! ஏன் சும்மாஇருக்கிறாய்? வெண்ணிறமுள்ளவைகளும் ஸ்வர்ணமயமானகவசங்களுள்ளவைகளுமான உன்னுடையகுதிரைகள் ரதத்தில்பூட்டப்படலாம். ப்ரபுவே! அவ்வாறே ஸ்வர்ணமயமான ஸிம்மக்கொடியை நீ தூக்கிக்கட்டு. ஸ்வர்ணமயமான கணுக்களுள்ளவைகளும் கூர்மையானமுனையுடையவைகளும் கைப்பழக்கமுள்ள உன்னால் விடப்பட்டவைகளும் ராஜாக்களுடைய ஆயுளை அபஹரிக்கின்றவைகளுமான அம்புகள் ஸூர்யனைமறைக்கட்டும். நீ வஜ்ரபாணியான இந்த்ரன் அஸுரர்களைஜயிப்பதுபோல எல்லாக்கௌரவர்களையும் யுத்தத்தில் ஜயித்துப் பெரிதானபுகழ்ச்சியைப் பெற்று மீண்டும் இந்தப்பட்டணத்தில்ப்ரவேசிப்பாயாக. மத்ஸ்யராஜருக்குப்புத்ரனாகிய நீயல்லவோ தேசத்துக்கு முக்யமானகதி. தேசவாஸிகளானஜனங்கள் எல்லாரும இப்பொழுது கதியுள்ளவர்களாகட்டும். ஜயசாலிகளுள் சிறந்தவனான அர்ஜுனன் பாண்டுபுத்ரர்களுக்குக் கதியாயிருப்பதுபோலவே நீ தேசத்தில்வஸிக்கின்றஜனங்களுக்குக் கதியென்பது நிச்சயம்" என்றுகூறினான்.

முப்பத்தெட்டாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(ஸாமர்த்யமில்லாமல்வருந்திய உத்தரனுக்கு ப்ருஹன்னளை ஸாரதியானதும், உத்தரன் யுத்தத்துக்குப்புறப்பட்டதும்.)

பசுக்களுக்குத்தலைவன் அப்பொழுது விராடபுத்ரனுக்கு மஹாஜனங்களுக்குளதிரிலும் மேலும்ஸ்த்ரீகளுடையமத்தியிலும் நன்றாகச்சொல்லினன். அந்தஇடையனால் ஸ்த்ரீகளுடையமத்தியில் தைர்யத்

---

1 வீணையில் இருபக்கத்திலும் தந்தியைக்கட்டுவதற்குள்ள இரண்டுமுளைகள்,

தைவ்ருத்திபண்ணக்கூடிய வாக்யத்தைச் சொல்லக்கேட்ட அந்த உத்தரன் அந்தப்புரத்தில் தன்னைப்புகழ்ந்துகொண்டு பின்வரும்வசனத்தைவெளியிடலானான். "குதிரைகளை ஓட்டுவதில் ஸமர்த்தனான ஒரு ஸாரதி எனக்குஇருப்பானானால் உறுதியுள்ளவில்லையென்றி நான் இப்பொழுது பசுக்களிருக்கும்இடத்தைப் பின்தொடர்வேன். எனக்குத் தகுந்தஸாரதியையே நான் அறியவில்லை. (போர்புரிவதற்குப்) புறப்படுகின்ற எனக்குத் தகுந்தஸாரதியை விரைவாகப் பாருங்கள். சற்றேறக்குறையஇருபத்தெட்டுநாள் அல்லது ஒருமாஸம் நிச்சயமாகநடந்தமஹாயுத்தத்தில் என்னுடையஸாரதிகொல்லப்பட்டான். யுத்தத்தில் எனக்குத்தகுந்தஸாரதியை நான் அடைவேனாகில் இப்பொழுது எடுத்துநிறுத்தப்பட்டிருக்கின்ற பெரியகொடியுள்ளவனாகி விரைவில் (யுத்தத்துக்குச்) செல்வேன். யானைகளாலும் குதிரைகளாலும் தேர்களாலும் நிறைந்த அந்தப்பகைவர்களின்படையில் நுழைந்து சஸ்த்ரங்களுடையப்ரதாபத்தினால் வீர்யமற்றவர்களான கௌரவர்களை ஜயித்துப் பசுக்களை மீட்டுக்கொண்டுவருவேன். ஒன்றுசேர்ந்தவர்களும் மஹாவில்லாளிகளுமான துர்யோதனனையும் விகர்ணனையும் [1]வைகர்த்தனனானகர்ணனையும க்ருபரையும் த்ரோணரையும் அவர்புத்ரரையும், இந்த்ரன் அஸுரர்களைஓட்டுவதுபோல யுத்தத்தில்ஓடும்படிசெய்து இந்தமுஹூர்த்தத்திலேயே பசுக்களை மறுபடியும்மீட்டுக்கொண்டு வருவேன். கௌரவர்கள், (இந்தப்பட்டணத்தில்) ஒருவரும்இல்லையென்றறிந்து பசுக்கூட்டத்தைக்கைப்பற்றிச்செல்லுகின்றார்கள். நான் அவ்விடத்தில் இல்லாமலிருப்பதால் எதுதான் அவர்களால் செய்யமுடியாது? ஒருங்குகூடிய அந்தக்கௌரவர்கள் என்னுடைய வீர்யத்தை இப்பொழுது பார்க்கட்டும். பகைவர்கள் என்னை, 'இவன்நேரில்வந்திருக்கின்ற குந்தீபுத்ரனான அர்ஜுனனோ' என்றுஎண்ணப்போகிறார்கள்" என்றான். ஸ்த்ரீகளுடையமத்தியில் தற்புகழ்ச்சியைப்ரதானமாகக்கொண்டதன்னைப், 'பீபத்ஸு என்றுஎண்ணுவார்கள்' என்கிற உத்தரனுடைய அந்தவார்த்தையைக்கேட்டு, பாஞ்சாலியானவள் பொறுக்கவில்லை. எல்லாவிஷயங்களையும்அறிந்தவனான அர்ஜுனன் உத்தரன்சொல்லிய அந்தவசனத்தைக்கேட்டு அந்தஸமயம்போன பிறகு ஒருஸமயத்தில் த்ருபதராஜனுடையபுத்ரியும் ரூபத்தினால் (எல்லோராலும்) கொண்டாடப்பட்டவளும் ஸத்யமும் கபடமின்மையும் நற்குணங்களுமுடையவளும் பர்த்தாவுக்குப்ரியத்தையும் ஹிதத்தையும் செய்வதில் விருப்பமுள்ளவளும் (தனக்கு) ப்ரியமானபார்யையும்

[1] கவசத்தை அறுத்துக்கொடுத்தவன்.

பாஞ்சாலராஜகன்னிகையுமான க்ருஷ்ணையைப்பார்த்து அன்புடன் ரஹஸ்யத்தில் (பின்வருமாறு) கூறலானான். "நிர்மலமானபுன்னகையுள்ளவளே! பாஞ்சாலி! நீ விரைவாக உத்தரையிடம்சென்று, 'இந்த ப்ருஹன்னளையானவள், ஸவ்யஸாசிஎன்றுபெயர்பெற்றவனும் பாண்டுபுத்ரனுமான அர்ஜுனனுக்கு முன்பு காண்டவவனநிமித்தமான சண்டையில் ஸாரதியாயிருந்தாளாம். அந்தப்ருஹன்னளை ஸாரதியாகஏற்படுவளானால் யுத்தத்தில் பெரிதானஜயமுண்டாகும்' என்றுசொல்" என்றுகூறினான். அப்பொழுது அந்தஅர்ஜுனனால் தூண்டப்பட்டவளும் சுத்தமானசிரிப்புள்ளவளும் தாமரைமலர்போன்றகண்களையுடையவளும் பாஞ்சாலராஜகுமாரியுமான அந்தக்ருஷ்ணையானவள் அப்பொழுது உத்தரையினுடையவாஸஸ்தானத்துக்குவந்து, தர்மத்தையே ப்ரதானமாகக்கொண்டவரும் ஸத்யத்திலும் நேரானவழியிலும்நிலைபெற்றவருமான யுதிஷ்டிர ராஜுவினுடையமுகத்தினின்று விடுபட்டசந்த்ரனைப்போல (அந்த) ப்ரதிஜ்ஞையினின்று விடுபட்டாரென்றுதெரிந்துகொண்டு, தோழிகளுடையமத்தியில் அழகியவளான உத்தரையைப்பார்த்து, மிக்கதுக்கத்தைப்பொறுதவளாகிப், (பின்வருமாறு) வசனிக்கலானாள்.

"(ஓ ராஜகுமாரி)! கஜயூதபதிக்கொப்பானவளும் யௌவனமுள்ளவளும் தன்னை ப்ருஹன்னளையென்றுசொல்லிக்கொள்ளுகிறவளுமான இந்தப்ருஹன்னளை, வில்லாளிகளுள் உத்தமனானபார்த்தனுக்குமுற்காலத்தில் அந்த (காண்டவவனநிமித்தம் சண்டைநேர்ந்த) ஸமயத்தில் ஸாரதியாயிருந்தாளென்று நான் எண்ணுகிறேன். இந்த ஸாரதியினாலேயே வீர்யமுடையவனான அந்தஅர்ஜுனன் அப்பொழுது தேவர்களையும் கந்தர்வர்களையும் பெரியஅஸுரர்களையும் ஸர்ப்பங்களையும் (மற்ற) எல்லாப்ராணிகளையும் ஜயித்து அக்நிக்கு த்ருப்தியைஉண்டுபண்ணினான். அவனுடையயுத்தத்தில் இவளுடையநிலைமையையும் சத்ருவீரர்களுடையமத்தியில்ஏற்பட்ட (இவளுடைய) வீர்யத்தையும் நான் அறிவேன். வீர்யமுடையவளான இவள் அந்தஅர்ஜுனனுடைய தேரின்மீதிருந்து கடிவாளங்களையும்பிடிதது வில்லையும்எடுத்துக்கொண்டு (யுத்தத்துக்காகச்) சென்றாள். (இப்படிப்பட்ட) ப்ருஹன்னளையானவள் உத்தரனுக்கு ஸாரதியாயிருப்பளாயின் எல்லாப்ராணிகளும் தேவர்களும் அஸுரர்களும் வில்லாளிகளான எல்லாக் கௌரவர்களும் ஒன்றுசேர்ந்தாலுங்கூட உன்னுடையபசுக்கூட்டத்தை ஒருபோதும் அபஹரிப்பதற்குச் சக்தியுள்ளவர்களாகார்கள். பாண்டவர்களுடைய அரண்மனையில் ஸஞ்சரித்தநான், மஹாத்

மாவான அந்த அர்ஜுனனுக்கு ஸிஷ்யையாகவு மிருந்து இவளை முன்பு நன்றாகப்பார்த்திருக்கிறேன். அந்த அர்ஜுனனும் முன்பு ஸஹாயமான இவளால் காண்டவவனத்தையும்எரித்தான். அப்பொழுது அர்ஜுனனுடைய சிறந்தகுதிரைகள் இவளால் (கடிவாளம்) பிடித்து நடத்தப்பட்டன. பார்த்தன் இந்தஸாரதியினால் எல்லாப்ராணிகளையும் இந்த்ரப்ரஸ்தத்தில் எல்லாவிதத்திலும் ஜயித்தான். இப்படிப்பட்ட ஸாரதி (எங்கும்) இல்லை" என்றாள். பிறகு, உத்தரையானவள் ஸைரந்த்ரியுடன் ஸஹோதரனுடைய (ஸமீபத்தை வந்தடைந்து) "வீரா! ஸாரத்யம்செய்வதில் இந்தப்ருஹன்னளையை நீ விரைவாகவேண்டிக்கொள். இவள் ஸாரத்யம்செய்வதிலும் நர்த்தனம்செய்வதிலும் பாடுவதிலும் வாத்யம்வாசிப்பதிலும் பயிற்சி அடைந்திருக்கிறாள். பெரியஅறிவுள்ளவளான ஸைரந்த்ரியானவள் ப்ருஹன்னளையை (இவ்வாறு) புகழ்ந்துகூறுகிறாள்" என்றுசொல்ல, உத்தரன், "ஏ! ஸைரந்த்ரி! என்னுடையவ்ரதத்தை நீஅறிகிறாயன்றோ? நான் நபும்ஸகனுடஇருக்கும்மனிதனோடு பேசமாட்டேன். கல்யாணி! அவ்விதமானநான் ப்ருஹன்னளையைப்பார்த்து, 'நீஎன்னுடையகுதிரைகளை நடத்து' என்று நேரில்சொல்வதற்குச் சக்தியற்றவனாயிருக்கிறேன்" என்று மறுமொழிசொன்னான். ஸைரந்த்ரீ, "(ராஜபுத்ர)! பயம்நேர்ந்திருக்குங்காலத்தில் வ்ரதமும் வ்ரதமில்லாமையுமில்லை. கற்றறிந்தவன் துக்கத்தைத்தாண்டத்தகுந்தகார்யத்தைச் செய்வதற்கு முயற்சிக்கவேண்டும். இவ்வாறு தர்மத்தை அறிந்தவர்கள் சொல்லுகின்றார்கள். ஆதலால், ப்ருஹன்னளை (உன்னால்) சொல்லத்தக்கவள். ஓ வீர! அழகியஇடையுள்ளவளும் இளமைப்பருவத்திலிருக்கின்றவளுமான உன்னுடைய இந்தஇளையஸஹோதரியினுடைய வார்த்தைப்படி ப்ருஹன்னளை செய்வாள். ஸம்சயமில்லை. உனக்கு அவள் ஸாரதியாயிருப்பாளாகில் நீ கௌரவர்களனைவர்களையும் ஜயித்து நிச்சயமாகப் பசுக்களையும்மீட்டுக்கொண்டு வருவாய்; ஸம்சயமில்லை" என்று கூறினாள். ஸைரந்த்ரி இவ்வாறு உரைக்கக் கேட்ட அந்தஉத்தரன் ஸஹோதரியைப்பார்த்து, "தோஷமற்றஅங்கங்களுள்ளவளே! நீ போ; அந்தப்ருஹன்னளையை அழைத்துவா" என்றான் பொன்மாலைகளை அணிந்தவளும் புகழ்பெற்றவளும் அழகியபுருவங்களுள்ளவளும் மங்களகாமான முகத்தையுடையவளும் ஸ்வர்ணத்தினாலும் வஜ்ரங்களாலும் அலங்கரிக்கப்பட்டவளும் தமையனால்ஏவப்பட்டவளுமான அந்தஉத்தரையானவள் ஸஹோதரனுடைய ஆஜ்ஞையைக்கேட்டு விரைவாக ஓடினாள். ப்ராதாவினால் கட்டளையிடப்பட்டவளும்

வஜ்ரங்களாலும் முத்துக்களாலும் மணிகளாலும் ஸ்வர்ணத்தாலும் இழைக்கப்பட்ட குண்டலங்களையுடையவளும் ம்ருதுவாக அடிவைத்து நடப்பவளும் வலமாகச் சுழன்றிருக்கின்ற மயிர்ச்சுழிகளோடுகூடின சரீரமுள்ளவளும் மயில்தோகையால் அலங்கரிக்கப்பட்டவளும் தாமரைமலர்போன்ற முகமும் தாமரையிதழ்போல அகன்ற கண்களும் மெலிந்ததேஹமும் ஸமமான அங்கங்களும் ம்ருதுவாயும் கம்பீரமாயுமிருக்கின்ற பார்வையும் விலாஸங்களும் வளைந்த இமை மயிர்களுமுள்ளவளுமான அந்த மத்ஸ்யராஜகுமாரியானவள், மின்னலானது மேகத்தை அடைவதுபோல நடனசாலையை வந்தடைந்தாள். யானைத்துதிக்கைபோல இசைந்த துடைகளுடையவளும் தோஷமற்றவளும் [1]வேதிபோல மெலிந்தஇடையுள்ளவளும் சிறந்த மாலைகளை அணிந்தவளும் சுபத்தைச்செய்பவளுமான அந்தஉத்தரையானவள் ஒருபெண்யானையானது ஓர்ஆண்யானையை அடைவதுபோலப் பார்த்தனை அடைந்து நின்றாள். (தன்னருகில்) வந்தவளும் நீண்டும் சிவந்துமிருக்கின்ற கண்களுள்ளவளுமான அந்தஉத்தரையைப்பார்த்து, பார்த்தன், "அழகியசரீரமுள்ளவளே! ஸ்வர்ணமாலைஅணிந்தவளான நீ ஏன் இங்குவந்தாய்? அழகியபுருவமுள்ளவளே! கொஞ்சம் அவஸரப்படுகிறாய். ஸுந்தரீ! ஏன் உன்முகம் தெளிவில்லாமலிருக்கிறது. அழகியசிரிப்புள்ளவளே! சீக்ரமாக எனக்குச்சொல்" என்று வினவினான். வஜ்ரங்களாலும் வைடூர்யங்களாலும் செய்யப்பட்ட குண்டலங்களுள்ளவளும் மலர்ந்ததாமரை கருநெய்தல் இவைகளுடைய இதழ்களின் வாஸனைபோன்ற வாஸனைஉடையவளும் நன்றாய்ப்ப்ரகாசிக்கின்ற சந்த்ரனுக்கொப்பான முகமுள்ளவளுமான அந்தராஜகுமாரியானவள் பார்த்தனைப்பார்த்துச் சொல்லததொடங்கினாள்.

"ப்ருஹன்னளையே! கௌரவர்கள் என்பிதாவினுடையதனத்தையும் லக்ஷம்பசுக்களையும் கவர்ந்துகொண்டுபோகின்றார்கள். நீ என் ஸஹோதரனுடைய குதிரைகளை நடத்து. பகைவர்கள்பசுக்களை வெகுதூரம்கொண்டுபோகின்றார்கள். ப்ருஹன்னளையே! ஸைரந்த்ரியானவள், ரதத்தில்பூட்டிய குதிரைகளை நடத்தும்விஷயத்தில் மிக்க பழக்கமுள்ளவளென்று உன்னைச்சொல்லுகிறாள். அப்படிப்பட்டஸாரத்யத்தில் என்னால் வரிக்கப்பட்டநீ போகாயாகில் நான் ப்ராணனைவிட்டுவிடுவேன். இவ்விஷயத்தில் எனக்கு ஸம்சயமில்லை" என்றுகூறினாள். ராஜபுத்ரியினால் அவ்வாறு ஏவப்பட்டவனும் அன்புநிறைந்தமனமுள்ளவ

[1] வேதி-நடுக்குறுகிய ஒருவகையான மேடை. 'இடைகுறுகிய ஒருவகைக் குளவி' என்பது இங்க்லீஷ் மொழிபெயர்ப்புகளின் கருத்து.

னும் புருஷரிற்சிறந்தவனும் குந்தியினுடையகுமாரனுமாகிய தனஞ்சயன், அழகிய முகமுள்ளவளும் வெண்ணிறமுள்ள பற்களையுடையவளும் சுத்தமானபுன்சிரிப்புள்ளவளுமான உத்தரையைப்பார்த்து, "அழகிய மந்தஹாசமுள்ளவளே! நீ விரும்புமிடத்திற்கு நான் செல்வேன். நன்றாகஜ்வலிக்கின்ற நெருப்பில் நான் பிரவேசிக்கவேண்டுமானாலும் செய்வேன். சிறந்தசரீரமுள்ளவளே! நீபிழைத்திருக்க வேண்டுமென்பதை நான் விரும்புகிறேன். ஓ ஸுந்தரீ! இப்பொழுது நான் உனக்கு எந்தப்ரியத்தைச்செய்யவேண்டும். அன்புள்ளவளே! என்நிமித்தமாக நீ மஹாபயங்கரமான யமனுடைய வைவஸ்வதபட்டணத்தைப் பார்க்கவேண்டாம்" என்று மங்களகரமும் கம்பீரமுமான வாக்கினால் மொழிந்தான். கௌரவவீரர்களுள் சிறந்தவனும் ப்ருஹன்னளையின்ரூபத்தினால் அலங்கரிக்கப்பட்டமுகமுள்ளவனுமான அர்ஜுனன், விலாஸமுடையவளும் வெண்மையானதந்தங்களுள்ளவளும் நிர்மலமான மந்தஹாஸமுள்ளவளுமான உத்தரையைப்பார்த்து இவ்வளவுமட்டும்சொல்லிவிட்டு விராடபுத்ரனுடைய ஸமீபத்துக்குவந்தான். அவ்வாறு நடந்துவருகின்றவனும் சிறந்தஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டவனும் அதிககாந்தியையுடையவனும் கஜயூதபதிக்கொப்பானவனும் கஜராஜனுடையதுதிக்கைபோன்ற கைகளுள்ளவனும் தாமரைமலர்போல அகன்றகண்களும் கதவுபோன்றமார்பும் உயர்ந்த தோள்களுமுள்ளவனும் பகைவர்களை நாசஞ்செய்கின்றவனும் மஹாபலசாலியும் யானைபோல (எல்லாவற்றையும்) அழிப்பவனுமான அந்தப்பார்த்தனை விராடபுத்ரனை உத்தரன் நல்வரவுகூறி, பிறகு, (அந்த) ப்ருஹன்னளையைப் பசுக்களிருக்கும்இடத்தை அடைவிக்க எண்ணங்கொண்டு (அவனுடன்) ஸல்லாபம்செய்தான். விரைந்துவருகின்றவனும் மதங்கொண்ட யானைபோன்றவனுமான அந்த அர்ஜுனனை அகன்றகண்களையுடையவளான உத்தரையானவள் ஆண்யானையை யானைப்பேடு பின்தொடர்வதுபோலப் பின்தொடர்ந்தாள்.

ராஜபுத்ரன், தூரத்திலிருந்தே பார்த்து, "(ஓ! ப்ருஹன்னளையே!) பார்த்தன், ஸாரதியானஉன்னால் காண்டவவனத்தில் அக்னியை த்ருப்திசெய்வித்தானும். குந்திபுத்ரனை தனஞ்சயன் பூமியனைத்தையும் (உன்னுடையஉதவியால்) ஜயித்தானும். ஸைரந்த்ரியானவள் இவ்வாறு என்னிடத்தில் உன்னைப்பற்றிச் சொன்னாள். அவள் பாண்டவர்களை அறிந்திருக்கிறாளாம். 'வீரனும் ப்ரஸித்தமானவன்மையுள்ளவனுமான மாதலியானவன் தேவேந்த்ரனுக்கு ஸாரதி; பரசுராமருக்கு ஸுமஹான் ஸாரதி; தாருகன் (க்ருஷ்ணவதாரம்செய்த) விஷ்ணு

வுக்கு ஸாரதி; ஸுமந்த்ரர் தசரதபுத்ரரான ஸ்ரீராகவருக்கு ஸாரதி; அவ்வாறே அருணன் ஸூர்யனுக்கு ஸாரதி; (இவ்வாறு) ஸாரத்யத்தில் ப்ரஸித்திபெற்றவர்களான எல்லோரும் ப்ருஹன்னளைக் கொப்பானவர்களல்லர்' என்று ஸைரந்த்ரி எனக்குச்சொன்னாள். ஆதலால், உன்னை அழைக்கிறேன். ப்ருஹன்னளையே! அழைக்கப்பட்டவளான நீ என்னுடன்சேர்ந்து யுத்தத்துக்காகப் புறப்படு. பசுக்கள் கௌரவர்களால்கவரப்பட்டு வெகுதூரத்தில்செல்லுகின்றன" என்றான். அவ்வாறுசொல்லக்கேட்ட ப்ருஹன்னளையானவள், ராஜபுத்ரனைப்பார்த்து, (ஓ! ராஜகுமார!) யுத்தமுனையில் ஸாரத்யம்செய்வதற்கு எனக்கு வல்லமைஏது? நாட்யமாடுவேன்; பாட்டைப்பாடுவேன்; பற்பலவிதமான வாத்யங்களையும் வாசிப்பேன். உனக்கு மங்களமுண்டாகட்டும். எனக்கு ஸாரத்யம்செய்வதில் வல்லமையில்லை" என்று மறுமொழி கூறினாள். உத்தரன், "(ப்ருஹன்னளையே!) நீ ஆடுகிறவளாகவாவது பாடுகிறவளாகவாவதுஇரு. நீ ஒளிபொருந்தினகவசத்தை விரைவாகஅணிந்துகொள். இப்பொழுது என்னிடம் உன்னுடையசெய்கையையும் வல்லமையையும் மாதர்கள் அடிக்கடி புகழ்ந்துசொல்லுகிறார்கள்" என்றான். ராஜபுத்ரர்களுள் சிறந்தவனான உத்தரன் இவ்வாறுசொல்லி விட்டு அப்பொழுது புன்னகைசெய்து அர்ஜுனனைக்கொண்டாடினான். பிறகு, விராடபுத்ரனான உத்தரன் பகைவீரர்களை அழிப்பவனான ப்ருஹன்னளையின்பொருட்டு நூறுகண்களுள்ளதும் தங்கத்தால் விசித்ரமாயிருப்பதும் ஒளிபொருந்தியதுமான கவசத்தைஎடுத்து அப்பொழுது நேரில்கொடுத்தான். அப்பொழுது, வீர்யமுடையவனான அர்ஜுனன், மத்ஸ்யராஜகுமாரனான உத்தரனுடையகட்டளையால் அந்தக்கவசத்தை அணிவதற்கு விருப்பமில்லாதவன்போலப்பெற்றுக்கொண்டான். ப்ருஹன்னளை, "ஓ! ராஜபுத்ர! (எனக்கு) யுத்தத்தில்சௌர்யமிருந்து பகைவர்களைக்கொல்வதும் ஸாத்யமானால், நீசெல்லுகிறவிடத்துக்கு நான் உன்னைத்தொடர்ந்துவருகிறேன்" என்றான். பிறகு, எல்லாமறிந்தவனும் சத்ருக்களைச்சிக்ஷிப்பவனுமான அந்தப் பாண்டவன் உத்தரைக்குஎதிரில் பரிஹாஸத்திற்கிடமான அனேக கார்யங்களைச் செய்யலானான். (கவசத்தை) வாங்கிய அந்தஅர்ஜுனனைப்பற்றி (அங்குள்ள) பெண்கள்சிரித்தார்கள். பகைவர்களைஅழிப்பவனும் உத்தமவீரனுமான அர்ஜுனன் கவசத்தைத் தலைகீழாகஅணிந்துகொண்டான். பிறகு, தலைகீழாகஇருக்கிறகவசத்தைக் குறுக்காக இருக்கும்படிசெய்து பிறகு நேராகஇழுத்தான். உண்மையான வன்மையுள்ளவனும் எல்லாக்கௌரவர்களுள்ளும் உத்தமவீரனும் மிக்க

வீர்யமுள்ளவனுமான ஸாரதியானதனஞ்சயன், நன்றாக அறிந்தவனாக இருந்தாலும் அறியாதவன்போலக் கவசத்தை மறுபடியும் உயரத் தூக்கி உதறிப் பூட்டிக்கொண்டான். அந்த அர்ஜுனன் இவ்விதமான அநேககார்யங்களைச்செய்யுங்கால் (அங்குள்ள) அதிக யௌவன மதமுள்ள பெண்கள் பரிஹஸித்தார்கள். அவ்விதம் (பரிஹஸிக்கத் தக்ககார்யங்களை)ச் செய்துகொண்டிருந்தாலும் சத்ருக்களை அழிப்பவனான தனஞ்சயனை உத்தரன் பரிஹாஸம்செய்யவேஇல்லை. ராஜபுத்ரனானஉத்தரன், ஸ்வர்ணத்தால் அழகானதும் மங்களகரமானதும் அக்னியில் காய்ச்சப்பட்டதுபோல ஒளிவீசுவதும் மிக ஜ்வலிக்கின்றதும் ஆயிரம்கிரணங்களுள்ளதுமான கவசத்தை அந்த ப்ருஹன்னளைக்குத் தானே நன்றாகக் கட்டிவிட்டான். பிறகு, அர்ஜுனன் நன்றாகப்பார்த்துப் பொற்கவசங்களால்மூடப்பட்டிருக்கிற குதிரைகளை அந்த உத்தரனுடையதேரில்விரைவாகப்பூட்டினான். பொன்னாலாகியசுட்டிகளை மத்தியில்கொண்ட கழுத்துக்கயிற்றைப் பூஷணமாகக்கொண்டதும் ஸ்வர்ணமயமுமான ஸிம்மத்தையும் ரதத்திலெடுத்துக்கட்டினான். அவன், அந்தத்தேரின்மத்தியில் விசித்ரமானவிற்களையும் அழகிய அநேக பாணங்களையும் ஆயுதங்களையும் (எடுத்து) வைத்தான். வீரனானஉத்தரன் அந்தத்தேரின்மீதேறி ப்ருஹன்னளாஸாரதியுடன் (யுத்தத்துக்காகச்) செல்லத்தொடங்கினான். பிறகு, உத்தரையும் மற்றப்பெண்களும் தோழிகளும் அப்பொழுது (ப்ருஹன்னளையைப்பார்த்து,) "ப்ருஹன்னளையே! யுத்தத்திற்குவந்திருக்கின்ற பீஷ்மரையும் த்ரோணரையும் தலைவராகக்கொண்ட கௌரவர்களைஜயித்து எங்களுக்காக அழகியவஸ்த்ரங்களையும் பாவைகளுக்காக மெல்லியவஸ்த்ரங்களையும் பலவிதரத்னங்களையும் கொண்டுவா" என்றுசொன்னார்கள். பிறகு, குருநந்தனனானபார்த்தன் ஒருங்குசேர்ந்துசொல்லுகின்ற அந்தக்கன்னியர்களைப்பார்த்துச் சிரித்துக்கொண்டு மேகம்போலவும் துந்துபிவாத்யம்போலவும் (கம்பீரமான கண்ட)த்வநியுடன், "(கன்னியர்களே!) இந்தஉத்தரன் யுத்தத்தில் மஹாரதர்களை ஜயிப்பானாகில் அப்பொழுது மெல்லியவஸ்த்ரங்களையும் ஆபரணங்களையும் கொண்டுவருவேன்" என்று மறுமொழிகூறினான். பிறகு, வீரனானஉத்தரன், அதிகமஹிமைபொருந்தியதும் தங்கத்தினாலும் வைடூர்யத்தினாலும் அலங்கரிக்கப்பட்டதும் மங்களகரமுமான கவசத்தைஅணிந்து தனஞ்சயனை ஸாரதியாகக்கொண்டு உத்தமமான ரதத்திலேறிச்சென்றான். அப்பொழுது, சிறந்தரதத்தில்வீற்றிருக்கின்ற அந்தஉத்தரனையும் ப்ருஹன்னளையையும்பார்த்து மஹாஜனங்களும் ஸ்த்ரீகளும் பெண்க

ளும் நல்லவ்ரதமுள்ள ப்ராம்மணர்களும் வலமாகவந்து மங்களம்உண்டாகவேண்டுமென்று தேவதாப்ரார்த்தனையுடன், "ப்ருஹன்னளையே! முன்பு காண்டவவனத்தை எரித்தகாலத்தில், காளைபோலநடக்கிற அர்ஜுனனுக்கு உண்டானதுபோன்ற மங்களமானது, உத்தரனோடு யுத்தகளத்தில் கௌரவர்களை எதிர்க்கிறஉனக்கு இப்பொழுது உண்டாகட்டும்" என்று வாழ்த்தினார்கள்.

முப்பத்தோன்பதாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(உத்தரன் கௌரவஸேனையைக்கண்டுபயந்தோட, அர்ஜுனன் அவனைத்தேற்றித் தேரிலேற்றி, ஆயுதங்களையெடுத்து வருவதற்காக வன்னிமரத்தினிடம் சென்றது.)

அந்த விராடகுமாரன், பயமற்றவனாகப் பட்டணத்திலிருந்து வெளிப்பட்டு, தேர்ப்பாகனைப்பார்த்து, "அந்தக்கௌரவர்கள் சென்றிருக்கிற இடத்தைக்குறித்துப்போ. நான், (நம்மை) ஜயிக்கவிரும்பி ஒன்றுசேர்ந்துவந்திருக்கின்ற எல்லாக்கௌரவர்களையும் தோல்வி அடையச்செய்து இந்தப்பசுக்களையும் சீக்ரமாகத் திருப்பிக்கொண்டு மீண்டும் பட்டணத்துக்கு வருவேன்" என்றுசொன்னான். பிறகு, பாண்டுநந்தனன் அவ்விதமான நல்லகுதிரைகளை ஓட்டினான். மனிதரிற்சிறந்தவனான தனஞ்சயனால் ஓட்டப்பட்டவைகளும் காற்றின்வேகம்போன்ற வேகமுள்ளவைகளும் பொன்மாலைகளை அணிந்தவைகளுமான அந்தக்குதிரைகள் ஆகாயத்தை நாலாபக்கத்திலும் கீறுகின்றவைகள்போல (ரதத்தை) இழுத்துச்சென்றன. பிறகு சிறிதுதூரம் சென்று மத்ஸ்யராஜகுமாரனை உத்தரனும் தனஞ்சயனும் பயமில்லாமல் பலசாலிகளான கௌரவர்களுடையஸேனையைப் பார்த்தார்கள். சூரர்களான அவ்விருவர்களும் ச்மசானத்துக்கு அருகில்சென்று கௌரவர்களையும் நான்குபக்கத்திலும் பரவியதும் ஸமுத்ரம்போன்றதும் ஆகாயத்தில் பறக்கிறதுபோன்றதும் அனேகமரங்களால் அடர்ந்த காடுபோன்றதுமான அந்தக்கௌரவர்களுடைய பெரியஸேனையையும் கண்டார்கள். குருவம்சத்திலுதித்தவர்களுள் உத்தமரே! செல்லுகின்ற அந்தஸேனையினால் உண்டுபண்ணப்பட்டதும் ப்ராணிகளுடைய கண்களைக் கெடுக்கின்றதும் பூமியிலிருந்து உண்டாகின்றதுமான புழுதியானது ஆகாயத்தைஅளாவுகின்றதாகக் காணப்பட்டது. பிறகு,

யானைகளாலும் குதிரைகளாலும் ரதங்களாலும்நெருங்கியதும் கர்ண னாலும் துர்யோதனனாலும் க்ருபராலும் பீஷ்மராலும் த்ரோணராலும் பெரிதானவில்லைப்பிடித்தவரும் புத்திசாலியுமான த்ரோணபுத்ரரா லும் காக்கப்பட்டதுமான அந்த (கௌரவ)ஸேனையைப்பார்த்து மயி ர்க்கூச்சலடைந்தவனும் பயத்தினால் மனத்தளர்ச்சியடைந்தவனும் நடுக்கமுற்ற சரீரமுள்ளவனுமான விராடராஜகுமாரன் அப்பொழுது தன்னுடைய இரண்டுகண்களையும்மூடிக்கொண்டு பார்த்தனைப்பார்த் துச் சொல்லலானான்.

"(ப்ருஹன்னளையே!) கௌரவர்களோடு போர்புரிவதற்கு நான் திறமையுள்ளவனல்லேன். என்மீது உண்டாயிருக்கின்ற மயிர்க்கூச் சலைப் பார். அநேக மஹாவீரர்களுள்ளதும் மிகவும் உக்ரமாயிருக் கின்றதும் தேவர்களாலும் அணுகமுடியாததும் பயங்கரமுமான குரு ஸேனையை எதிர்த்துப்போர்புரிவதற்கு நான் சக்தியற்றவனாயிருக்கி றேன். அச்சத்தைச்செய்யும் விற்களுள்ள பாரதஸேனையில் செல்வ தற்கு நான் விரும்பவில்லை. (இந்தக்கௌரவஸேனையானது) இந்த்ர னுடன்கூடினதேவர்களாலும் அணுகமுடியாதது. மனிதர்களால் அணுகமுடியாதென்பதில் யாதுஸந்தேஹம்? தேர்களாலும் யானைக ளாலும் குதிரைகளாலும் நெருங்கியதும் காலாட்களாலும் கொடிமர ங்களாலும் நான்குபக்கத்திலும் அடர்ந்திருக்கின்றதுமான பகைவர்க ளுடைய படையைப்பார்த்தே என்மனம் மிக்க துன்பமடைந்திருக் கின்றது. எந்தயுத்தத்தில் தைர்யமுள்ளவர்களும் பெரியவில்லையுடை யவர்களும் யுத்தத்தில்ஸமர்த்தர்களும் பருத்த மதயானைபோன்றவர் களும் (ரதத்தில்) கட்டப்பட்டிருக்கின்ற கொடிகளையும் கொடிமரங் களையும் உடையவர்களும் சிறந்த யுத்தமுறையையுடையவர்களும் பெரியவில்லாளிகளும் எல்லாக்கார்யங்களிலும் நிச்சயமுடையவர்க ளுமான த்ரோணரும் பீஷ்மரும் க்ருபரும் கர்ணனும் விவிம்சதியும் அச்வத்தாமாவும் விகர்ணனும் ஸோமதத்தனும் பாஹ்லிகனும் ராஜா வான துர்யோதனனும் உத்தமவீரனான துர்மர்ஷணனுமாகிய அனை வரும்இருக்கிறார்களோ அந்தயுத்தத்தில் அந்தச்சூரர்களை ஜயிப்பதற்கு நான் புத்திகெட்டுவந்தேன். வரிசைப்படுத்தப்பட்டிருக்கின்ற ஸை ன்யமுள்ளவர்களும் (பகைவர்களை) மிகவும் வருத்துகின்றவர்களு மான கௌரவர்களனைவர்களையும்பார்த்தே (எனக்கு) மயிர்கள் சிலி ர்த்தன. (என்) மனம் மயக்கமடைகின்றது" என்றுசொன்னான். உறுதியானவிற்களுள்ள கௌரவர்களுடைய பெரியஸேனையைக்கண்டு மூடனான அவன், திரும்பவும், "(ப்ருஹன்னளையே!) என்னுடைய

பிதாவானவர் ஜனங்களில்லாதபட்டணத்தில் என்னைவைத்துவிட்டு எல்லாஸைன்யத்தையும் திரட்டிக்கொண்டு த்ரிகர்த்தர்களைநோக்கிச் சென்றுவிட்டார். எனக்கு இவ்விடத்தில் படைத்தலைவர்கள் இல்லை. ஸஹாயமில்லாதவனும் பாலனும் அஸ்த்ரவித்தையில் ச்ரமப்படாதவனுமானநான் அஸ்த்ரவித்தையில் தேர்ச்சியடைந்திருக்கின்ற அனேக வீரர்களைஎதிர்த்துப் போர்புரிவதற்குச் சக்தியுள்ளவனாகமாட்டேன். ப்ருஹன்னளையே! (ரதத்தைத்) திருப்பு" என்று புலம்பினான்.

உலகங்களனைத்திலும் மஹாரதனானபீபத்ஸுவானவன் அவ்விடத்தில் அவ்வாறு சொல்லுகின்ற அந்த உத்தரனைப்பார்த்து நன்கு சிரித்து, "(ராஜபுத்ர!) நீ பயத்தினால் இளைத்த உருவமுடையவனாயிருக்கிறாய். எதிரிகளுக்கு ஸந்தோஷத்தை வளரச்செய்கிறாய். போர்க்களத்தில் பகைவர்களால் இப்பொழுது ஒருகார்யமும் செய்யப்படவில்லை. நீ தானாகவே என்னைப்பார்த்து, '(ப்ருஹன்னளையே!) கௌரவர்களிருக்குமிடத்தைக்குறித்து என்னை நீ நடத்திக்கொண்டுபோ' என்று முன்புசொல்லியிருக்கிறாய். (ஆதலால்,) அப்படிப்பட்டநான் அதிகமான இந்தக்கொடிகளிருக்கின்ற விடத்தில் உன்னைக்கொண்டு போய்ச் சேர்ப்பிக்கிறேன். சிறந்தகைகளையுடையவனே! போக்ய வஸ்துவினிடத்தில் ஆசையுள்ளவர்களும் [1]ஆததாயிகளுமான கௌரவர்களுக்கு நடுவில் உன்னைக்கொண்டுபோய்ச்சேர்ப்பேன். சத்ருக்களைச் சிக்ஷிப்பவனே! ஸமுத்ரம்போலக் கம்பீரமாயிருக்கின்ற கௌரவஸைன்யத்தைப்பார்த்து நீ மனவருத்தமடையாதே. புருஷர்கள் கேட்டுக்கொண்டிருக்கும்பொழுது ஸ்த்ரீகளின்பக்கத்தில் சபதஞ்செய்து தற்புகழ்ச்சிசெய்துகொண்டு (நகரத்தினின்று) வெளிப்பட்டு வந்து இவ்விடத்தில் ஏன் யுத்தம்செய்யவில்லை? சொல். அவ்வாறு ஸ்த்ரீகளிடத்திலும் புருஷர்களிடத்திலும் ஆண்மையைப்பற்றி ப்ரதிஜ்ஞைசெய்து தேரின்மீதேறி (நகரத்தைவிட்டு) வெளியில்புறப்பட்டுவந்து (இப்பொழுது) ஏன் யுத்தம்செய்யாமலிருக்கிறாய்? நீ (பகைவர்களைவென்று) பசுக்களைமீட்காமல் நகரத்துக்குத்திரும்பிப் போனால் வீரர்களானபுருஷர்களும் ஸ்த்ரீகளும் ஒன்றுசேர்ந்து உன்னைப்பரிஹாஸஞ்செய்வார்கள். நானும் ஸைரந்த்ரியினால் ஸாரத்யம் செய்வதில் புகழ்ப்பெற்றிருக்கிறேன். (ஆகையால்,) நான் பசுக்களை மீட்காமல் பட்டணத்தைக்குறித்துப்போவதற்குச் சக்தியற்றவனா

---

[1] நெருப்பைவைப்பவன், விஷமிடுபவன், சஸ்த்ரங்களைக் கையில்கொண்டிருப்பவன், தனங்களைக் கொள்ளைஅடிப்பவன், க்ஷேத்ரங்களை அபஹரிப்பவன், மனைவியை அபஹரிப்பவன்.

யிருக்கிறேன். ஸைரந்த்ரியினுடைய ஸ்தோத்ரத்தினாலும் உன்னுடையவசனத்தினாலும் தூண்டப்பட்டிருக்கின்றநான் இந்தக்கௌரவர்களோடு எவ்விதம் போர்புரியாமலிருப்பேன்? நீ உறுதிஉள்ளவனாகஇரு" என்று மறுமொழிகூறினான். உத்தரன், "ப்ருஹன்னளையே! கௌரவர்களனைவர்களும் மாத்ஸ்யர்களுடையபொருள்களை இஷ்டப்படி கொண்டுபோகட்டும். என்னை ஸ்த்ரீகளும் புருஷர்களும் பரிஹாஸஞ்செய்யட்டும். யுத்தத்தினால் எனக்குப் பயனில்லை. என்னுடையபசுக்களும் போகட்டும். ப்ருஹன்னளையே! நீ பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே நகரத்தில் புகுவேன்" என்றான். குண்டலங்களணிந்தவனும் பயந்தவனுமான உத்தரன் இவ்வாறுசொல்லிவிட்டு மிகப்பயந்து மானத்தைஇழந்து அம்பையும்வில்லையும் எறிந்துவிட்டு ரதத்தினின்று கீழேகுதித்தோடினான். அர்ஜுனன், "ஏ! (உத்தர!) யுத்தத்தைவிட்டு ஓடுதலானது க்ஷத்ரியனுக்குரியதர்மமென்று சூரர்கள் எண்ணவில்லை; யுத்தத்தில் மரணம்நேருவது மேன்மை; பயந்தோடுவது மேன்மையன்று" என்றான். குருகுலத்தில் தோன்றிய அந்தத்தனஞ்ஜயன் இவ்வாறுசொல்லிவிட்டு, சிறந்ததேரினின்று கீழே துள்ளிக்குதித்து, நீண்டபின்னலையும் நன்குசிவந்த இரண்டுஆடைகளையும் அசையும்படி செய்துகொண்டு ஓடுகின்ற அந்த ராஜகுமாரனைப் பின்தொடர்ந்து ஓடினான். ஓடுகின்றவனும் காலடிவைப்புக்களால் பூமியை அழுந்தும்படி செய்கின்றவனும் பின்னலை ஆட்டிக்கொண்டு ஓடுகின்றவனும் பெண்வேஷம்பூண்டவனுமான அவனைப்பார்த்து அப்பொழுது அர்ஜுனனென்றுஅறியாத சிலஸைனிகர்கள் நகைத்தார்கள். வேகமாகஓடுகின்ற அவனைக்கண்டு கௌரவர்கள், "தொடக்கத்தில், உத்தமமானரதத்தை விட்டுவிட்டுத் தடையற்றோடுகின்ற இவன் யார்? சாம்பலால் மறைக்கப்பட்ட நெருப்புப்போல வேஷத்தால் மூடப்பட்டிருக்கின்ற இவன் யார்? இவனுடைய ரூபமானது கொஞ்சம் புருஷனுடைய உருவம்போலவும் கொஞ்சம் ஸ்த்ரீயினுடைய உருவம்போலவும் இருக்கிறது" என்று சொல்லிக்கொண்டார்கள். இவ்வாறு ஸைனிகர்களும் சொன்னார்கள். அவர்களைப்பார்த்து, கௌரவபாண்டவர்களுக்கு ஆசார்யரும் புத்தியில் சுக்ரனுக்கும் ப்ருஹஸ்பதிக்கும் ஒப்பானவருமான த்ரோணர் பின்வருமாறு உரைக்கலானார்.

"(இந்த) விசாரத்தினால் உங்களுக்கு என்னபயன்? பின்தொடரப்பட்டிருக்கின்ற இவனால்தான் உங்களுக்கு என்னபயன்? பயந்து ஓடுகின்றவனைப் பின்தொடர்ந்து பின்னல்அசையப் பயமின்றி ஓடுகிற

வன் ஒரு புருஷச்ரேஷ்டனாக விளங்குகிறான். இவனுடையரூபமானது அர்ஜுனனுடையரூபம்போலிருக்கிறது. நபும்ஸகவேஷத்தைத் தரிக்கிறான். ஸ்த்ரீவேஷத்தால் நன்கு அலங்கரிக்கப்பட்டிருக்கின்ற இவன் ரூபத்தினால் பார்த்தனுக்கு ஸமானனாயிருக்கிறான். இவனுடைய தலையும் கழுத்தும் அந்தப்பார்த்தனுடையவே. இவனுடைய பரிகாயுதம்போன்ற இரண்டுகைகளும் அந்த அர்ஜுனனுடையகைகளே. இவனுடையவன்மையும் அந்த அர்ஜுனனுடையதே. ஆதலால், தனஞ்சயனைக்காட்டிலும் இவன் வேறானவனல்லன். தேவர்களுள் தேவேந்த்ரன்போல மனுஷ்யர்களுள் தனஞ்சயன்சிறந்தவன். உலகத்தில், தனஞ்சயனைத்தவிர வேறு எவன் நம்மை ஒருவனாக எதிர்த்துவருவான்?" என்றுசொன்னார். த்ரோணர் இவ்வாறுசொல்லியதைக்கேட்ட புத்திசாலியான கர்ணன் (கௌரவர்களைப்பார்த்து,) "விராடனுடையபுத்ரன் ஒருவன் சூன்யமானபட்டணத்தில் வஸித்திருந்தான். அப்படிப்பட்டஇவன் வாலிபத்தன்மையால் அலியை ஸாரதியாக்கிக்கொண்டு நகரத்தைவிட்டு வெளியில் புறப்பட்டுவிட்டான். ஆண்மையால் வெளிப்பட்டவனல்லன். (அவனைத்தொடர்ந்து) ஓடுகின்றவனை வேறுவேஷத்தினால்மறைக்கப்பட்ட அர்ஜுனனென்றே நீங்கள் நிச்சயமாகத் தெரிந்துகொள்ளுங்கள். அந்தமாத்ஸ்யர்கள் எல்லோருமே யுத்தத்தில் நம்மை எதிர்த்துவருவதற்குச் சக்தியற்றவர்கள். (அவ்வாறிருக்க) அவர்களுள்ஒருவன் எவ்வாறு கௌரவர்களனைவர்களையும் எதிர்த்துப் போர்புரியவருவான்? உத்தரன் ஸாரதியை ஏற்படுத்திக்கொண்டு நகரத்தினின்று வெளியில் புறப்பட்டுவிட்டான். அவன் நம்முடைய த்வஜத்தைப்பார்த்து இப்பொழுது பயந்துஓடுகிறானென்று நான்நினைக்கிறேன்" என்றுசொன்னான். க்ருபர், "ஓடுகின்ற அந்தத்தனஞ்சயன் உத்தரனையே பிடிக்க விரும்புகின்றான்; நிச்சயம். இப்பொழுது இவன் உத்தரனை ஸாரதியாகச்செய்துகொண்டு தான் போர்புரிவதற்கு விரும்புகிறான்" என்று கூறினார். இவ்வாறு வீரர்களான அந்தக்கௌரவர்கள்எல்லோரும் தனித்தனியாகஆலோசித்தும் அர்ஜுனனென்று நிச்சயிப்பதற்குச் சக்தியற்றவர்களானார்கள். துர்யோதனன், ஸேனையிலிருக்கின்ற சிறந்த ரதிகர்களைப்பார்த்து, "அர்ஜுனனோ, வாஸுதேவனோ, ராமனோ, ப்ரத்யும்னனோ, அவர்களே நம்மை யுத்தத்தில் எதிர்த்துவருவதற்குச் சக்தியுள்ளவர்களாவார்கள். (அவ்வாறிருக்க) வேறொருவன் நபும்ஸகவேஷத்தோடு பசுக்களிருக்குமிடத்தைக்குறித்து வருவானால் (அவன்மீது) கூர்மையான அம்புகளைவிடுத்து (அவனைப்) பூமி

யில்தள்ளுவேன். அந்தமத்ஸ்யதேசத்தார்களுள் ஒருவன் எவ்வாறு கௌரவர்களனைவர்களோடும் போர்புரிவான்" என்றுகூறினான்.

அவ்வாறு வேஷத்தால் மறைக்கப்பட்டிருக்கின்ற அந்தப்பாண்டவனைக்கண்டு அந்தஸைன்யத்திலுள்ளவர்கள் அவனை அர்ஜுனனென்றாவது அல்லனென்றாவது நிச்சயிக்கவில்லை. கௌரவர்களனைவர்களும் இவ்வாறு அடிக்கடி ஊஹித்துப்பார்த்துப் பகைவர்களை உறுதியாகஅடிப்பவனும் மஹாபலமுள்ளவனும் இந்த்ரனுக்கொப்பானவன்மையுள்ளவனுமான தனஞ்சயன் இப்பொழுது போர்புரியவரின் நமது ஸைன்யமனைத்தும் (உயிரோடிருப்பது) ஸந்தேஹம்தான்' என்று எண்ணினார்கள். அந்தஸமயத்தில் தனஞ்சயனைக்காட்டிலும் வேறொருவனென்றும் அவனை நிச்சயிக்கவில்லை. அர்ஜுனனோ ஓடுகின்ற உத்தரனை நூறுகாலடிதூரம் பின்தொடர்ந்தோடி விரைவாக (அவனை)க்கூந்தலில் பிடித்தான். "ப்ருஹன்னளையே! என்னைப் பிடியாதே? பிடியாதே. உனக்கு மங்களம். நான் உனக்கு அடிமை" என்று சொல்லிக்கொண்டே விரைவாகஓடுகின்ற விராடபுத்ரனை, பலசாலியும் பகைவர்களைச்சிக்ஷிப்பவனுமான பீபத்ஸுவானவன் விரைவாகப்பிடித்தான். அர்ஜுனனால் பிடிக்கப்பட்ட அவன் துன்பத்தைஅடைந்தவன்போல அதிகஉருக்கமாக மிகவும் புலம்பினான்; மிகுதியானபொருளைக் கொடுப்பதாகவும் சொன்னான். உத்தரன், "ப்ருஹன்னளையே! தங்கம், ரத்னங்கள், முத்துக்கள் இவைகளுள் எவைஎவை நீவிரும்புகிறாயோ அதைஅதையெல்லாம் உனக்கு நான் கொடுக்கிறேன்; யானைகளையும் குதிரைகளையும் தேர்களையும் பசுக்களையும் நன்கு அலங்கரிக்கப்பட்டபெண்களையும் சுத்தமானபொன்னையும் சிறந்தவெள்ளியையும் நூறுபொன்னுணயத்தையும் உனக்குக்கொடுக்கிறேன். என்னை நீவிட்டுவிடு. நன்றாக அலங்கரிக்கப்பட்ட அறுபதுகன்னியர்களையும் ஒருக்ராமத்தையும் உனக்குக் கொடுக்கிறேன். அதிகதைந்யத்தையும் மனத்தளர்ச்சியையும் பயத்தினால் நடுக்கத்தையும் அடைந்தஎன்னை நீவிட்டுவிடு. தங்கக்கட்டுள்ளவைகளும் அதிகமான ஒளிபொருந்தியவைகளுமான எட்டு வைடூர்ய ரத்னங்களையும் ஸ்வர்ணமயமான தண்டங்களால் இசைக்கப்பட்டதும் குதிரைகளோடுகூடியதுமான தேரையும் மதங்கொண்ட பத்துயானைகளையும் உனக்கு நான் கொடுக்கிறேன். ப்ருஹன்னளையே! என்னை நீவிட்டுவிடு. ஓ! அலியே! இப்பொழுது என்தாயாரைப் பார்ப்பதற்கு நான் பட்டணத்தைக்குறித்துச் செல்லுகிறேன். நான் ஒருவனே என்தாயாருக்குப்பிள்ளை; ஆதலால், நான் என்னசொல்

வேன் ? இவ்விதமானகாலத்தில் விதியானது என்னை உன்வசமாக்கு கிறது. நான் மத்ஸ்யராஜாவான விராடனுடைய செல்வக்குமாரன்; சிறுவன்; அவரால் நன்குபோஷிக்கப்பட்டவனுயிருக்கிறேன். நான் தாயின்பக்கத்தில் படுத்திருப்பவன்; காற்றுவெய்யில்களுடைய ஸ்பர் சத்தை அடையாதவன். சிறுவருடையசண்டையையும் பாராதவன். இப்படிப்பட்டநான் எங்கே! அப்படிப்பட்ட கௌரவர்களெங்கே; ப்ருஹன்னளையே! தாயாருடையபக்கத்தில் நான்போய்ச்சேருகி றேன். என்னை நீவிட்டுவிடு. கௌரவர்களுடையஸேனை ஊழிக் காலத்துஸமுத்ரம்போலக் காணப்படுகிறது. யௌவனகர்வமுள்ள நான் ஸ்த்ரீகளுடையமத்தியில் அறிவின்மையால் வீர்யத்தினுலும் சௌர்யத்தினுலும் நிறைந்த வார்த்தையைச்சொன்னேன். எவன் கௌரவர்களைஜயிக்கச் சக்தியுள்ளவனுவான்? நீ என்னைவிடாமல் அங்குகொண்டுபோனுல் உனக்கெதிரில் நான் உயிரைஇழப்பேன்" என்றுபுலம்பினுன்.

புருஷரிற்சிறந்தஅர்ஜுனன், இப்படிசொல்லிப் புலம்புகின்றவ னும் அறிவற்றவனுமான அந்தஉத்தரனைப் பலாத்காரமாக ரதத் துக்கு அருகில்கொண்டுவந்தான். பிறகு, பார்த்தன் பயத்தினுல் பிடிக்கப்பட்டவனும் அறிவற்றவனுமான அவனைப்பார்த்து, "(உத் தர!) 'நான் கௌரவர்களோடு போர்புரியப்போகிறேன். என்னு டையகுதிரைகளை நீ அடக்கி நடத்து' என்று என்னை அழைத்து வந்து (இப்பொழுது) என் ஓடுவதில்நோக்கமுள்ளவனுனாய். கௌரவர் களோடு யுத்தம்செய். உனக்கு ஜயம்உண்டாகும். ராஜாவோ, ராஜ புத்ரனே, நான் ஸாரதியாயிருந்து உத்தமமானகுதிரைகளை அடக்கி நடத்துகிற யுத்தத்தில் அவனுக்கு நிச்சயமாக ஜயம்உண்டாகும். உத் தர! ஸாரதியான என்னுடன்சேர்ந்து எல்லாவிதத்தாலும் கௌரவர் களுடன் சண்டைசெய். வென்று புகழ்பெற்று இந்தப்பூமிமுழுதையும் ஆளுவாய். அல்லது, கொல்லப்பட்டு ஸ்வர்க்கத்தைஅடைவாய். ஓடு வது உனக்கு நன்மையைக்கொடாது. இப்பொழுது எல்லாக்கௌரவர் களையும்வென்று ஜயத்தை அடையும்வண்ணம் நான்முயற்சிக்கப்போகி றேன். இந்தவிஷயத்தில் நான்உனக்கு ஸஹாயனுகஎண்ணத்தக்கவன். பகைவர்களை அழிப்பவனே! பகைவர்களோடு போர்புரிவதற்கு நீ சக் தியற்றவனுயின் இங்கே வா; பகைவர்களோடுபோர்புரிகின்ற என்னு டையகுதிரைகளை நீ நடத்து. நீ என்னுடையதோள்வலியால் காக் கப்பெற்று (ஒருவராலும்) அவமதிக்கத்தகாததும் கோரஸ்வரூப முடையதும் கோரரூபிகளானமஹாரதர்களால் பாதுகாக்கப்பட்டிருக்

கின்றதுமான இந்தத்தேர்ப்படையில்புகுவாயாக. ராஜபுத்ரர்களுள் சிறந்தவனே! நீ பயப்படாதே. பகைவர்களைவாட்டுபவனே! நீ க்ஷத்ரியனல்லனோ? நான் அந்தக்கௌரவர்களோடு போர்புரியப்போகிறேன். உன்னுடையபசுக்களை மீட்டுக்கொண்டுவரப்போகிறேன். மனிதரிற்சிறந்தவனே! பகைவர்களால் அவமதிக்கமுடியாததும் நெருங்கமுடியாததுமான இந்தத்தேர்ப்படையில் நீ நுழையவேண்டும். நீ எனக்கு ஸாரதியாயிரு. நான் கௌரவர்களோடு யுத்தம்செய்யப்போகிறேன்; யுத்தத்தில் உக்ரஸ்வரூபிகளானசூரர்களை யமலோகத்துக்கு அனுப்பப்போகிறேன்" என்றுகூறினன். (மாற்றார்களால்) வெல்லற்கரியவனும் பரதச்ரேஷ்டனுமான பீபத்ஸுவானவன், பயத்தினால்பீடிக்கப்பட்டிருக்கின்ற விராடபுத்ரனை அந்தஉத்தரனை இவ்வாறுசொல்லி ஸமாதானப்படுத்தினன். பகைவர்களுடையபட்டணங்களை ஜயிப்பவனானபார்த்தன், இங்கும்அங்கும் சுற்றிவருகின்றவனும் (யுத்தம்செய்வதில்) விருப்பமில்லாதவனும் பயத்தினால் பீடிக்கப்பட்டவனுமானஉத்தரனை ரதத்தின்மீது ஏற்றிவைத்தான். (எதிரிகளின்) செல்வத்தை ஜயித்தஅர்ஜுனன், அழுகின்ற அந்தஉத்தரனைத் தேற்றித் தேரின்மீதேற்றிவைத்து அவனை ஸாரதியாக ஏற்படுத்திக்கொண்டு காண்டீவமென்கிறவில்லை எடுப்பதற்காக அந்தவன்னிமரத்தை நோக்கிச்சென்றான்.

நாற்பதாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனனுடையஏவலால் உத்தரன் வன்னிமரத்தின் மீதேறி வில்லைஎடுத்தது.)

உத்தரனைத் தேரில் ஏற்றிவைத்துக்கொண்டு வன்னிமரத்துக்கு எதிராகச்செல்லுகின்றவனும் நபும்ஸகவேஷத்தோடு தேரிலிருப்பவனும் தேராளிகளுள்சிறந்தவனுமான அந்தஅர்ஜுனனைக்கண்டு சூரர்களும் ரதிகர்களுள்சிறந்தவர்களுமான கௌரவஸேனையிலுள்ள த்ரோணர் பீஷ்மர்முதலானவர்கள், தனஞ்சயனிடத்திலிருந்து உண்டான பயத்தினால் மனநடுக்கமுற்றார்கள். உத்ஸாஹத்தைஇழந்தவர்களான அவர்களையும் அத்புதமான உத்பாதங்களையும்பார்த்து ஆசார்யரும் சஸ்த்ரதாரிகளுள்சிறந்தவருமான த்ரோணர்சொல்லலானர். "(வீரர்களே!) கொடியவைகளும் கொடியஒலியுள்ளவைகளுமான பேய்க்காற்றுகள் வீசுகின்றன. ஆகாயம் சாம்பல்மழைபோன்ற இரு

ளால் மூடப்பட்டுவிட்டது. மேகங்கள் விகாரமான நிறமுள்ளவைகளும் ஆச்சர்யகரமான காட்சியுள்ளவைகளுமாகக் காணப்படுகின்றன. பல விதமானசஸ்த்ரங்கள் உறைகளினின்றும் (தாமே) வெளியில்நழுவு கின்றன. ஒளியுடன்கூடின திசைகளில் கொடிய உருவமுள்ளனவாக இதோ நரிகள் ஊளையிடுகின்றன. குதிரைகளும் கண்ணீர்வடிக்கின் றன. அசையாதகொடிகளும் அசைகின்றன. இவ்விடத்தில்காணப் படும் பலநிமித்தங்களையும் (ஆலோசிக்குங்கால்) ஸமீபத்தில் யுத்தம் நேரப்போகிறது. நீங்கள் ஸன்னத்தமாயிருங்கள்; ராஜாவையும் காப்பாற்றுங்கள்; ஸேனையையும் வரிசைப்படுத்துங்கள்; அனர்த் தத்தை எதிர்பார்த்திருங்கள்; பசுக்கூட்டத்தையும் ரக்ஷியுங்கள். வீரனும் மஹாவில்லாளியும் எல்லாச்சஸ்த்ரதாரிகளுள்ளும் சிறந்த வனுமானபார்த்தன் இதோ நபும்ஸகவேஷத்தோடு வந்துவிட்டான். இவ்விஷயத்தில் ஸந்தேஹமில்லை" என்று இவ்வளவுமட்டில் சொல்லி விட்டுப் பீஷ்மரைப்பார்த்துவசனிக்கலானார். "ஓ! கங்காபுத்ரரே! லங்கேச்வரனுடையவனத்துக்குச்சத்ருவைக் கொடியாகக்கொண்ட வனும் ஒருமரத்தினுடைய பெயரையுடையவனும் மலைகளுக்கு விரோதியினுடையபுத்ரனும் நடையினால் தேவராஜன்போன்றவனும் ஒருஸமயத்தில் பெண்போன்றவனுமான (இந்தப்புருஷன் பார்க்கப் படலாம்)" என்கிற ஒருவசனத்தை ஆசார்யர் அப்பொழுது சொன் னார். வேந்தரே! த்ரோணர் குறிப்புடன் இவ்விதம்சொல்லிவிட்டுப் பேசாமலிருந்தார். கங்காபுத்ரரானபீஷ்மர், த்ரோணருடையவார்த் தையைக்கேட்டு, குறிப்புடன் (துர்யோதனனைப்பார்த்து,) "மனித ரிற்சிறந்தவனே! நாம் நம்முடையதேசத்தைத்தாண்டி வேறு தேசத் தைவந்தடைந்துவிட்டோம். நம்மால் ஸபையில்சொல்லப்பட்டஸமய மும் சென்றுவிட்டது. சத்ருக்களிடத்திலிருந்து பயம்பாராட்டத் தக்கதன்று. ஸந்தேஹத்தைவிட்டுவிடு" என்றுசொன்னார். ஹிதத் தைச்செய்யும்தன்மையுள்ள தேவவ்ரதரால் இவ்விதமானவார்த்தை சொல்லப்பட்டவுடன் த்ரோணர் துர்யோதனனைப்பார்த்துக் குறிப் புடன் (பின்வருமாறு) உரைக்கலானார்.

"பெரிதான வில்லையுடையவனும் ஆயுதம்பிடித்தவ ரனைவருள் ளும் சிறந்தவனும் வீரனுமான பார்த்தன் இதோ நபும்ஸகரூபத் தோடு வந்துவிட்டான். இவ்விஷயத்தில் ஸம்சயமில்லை. இந்தப் பார்த்தனே வன்மையுமுள்ளவன்; இடக்கையினாலும் பாணங்களை விடுப்பவன்; பகைவர்களை வாட்டுபவன். அரசர்களை ஜயிக்கின்றகௌர வர்கள் இவனால் கொல்லப்பட்டவர்களாவார்கள். ராஜனே! எவன்

பிறந்தவுடன் பூமிமுழுவதும் நிரம்ப ஆறுதலுள்ளதாகியதோ, எவனால் த்ருபதராஜனைப் பராக்ரமத்தால்கட்டி எனக்குத் தக்ஷிணைகொடுக்கப்பட்டதோ, எவனால் முற்காலத்தில் ஸ்வயம்வரஸபையில் ஆகாயத்தில் கட்டப்பட்டிருந்த லக்ஷ்யத்தை அடித்து அரசர்களையும்ஜயித்துப் பாஞ்சாலியானவள் அடையப்பட்டாளோ, எவனால் காண்டவவனத்தில் தேவாஸுரர்களைஜயித்து அக்நிபகவான் நன்கு திருப்தி செய்விக்கப்பட்டாரோ, எவனால் யாதவர்களைஜயித்து ஸுபத்ரையானவள் விவாஹம்செய்யப்பட்டாளோ, எவனால் த்ரிபுரத்திற்குச் சத்ருவும் மன்மதனை நாசம்செய்தவருமான த்ரிபுராரியானவர் யுத்தத்தில்ஜயிக்கப்பட்டாரோ எவனால் தேவலோகத்தை அடைந்து யுத்தத்தில், இந்த்ரனைஜயித்தவர்களும் காற்றும் நுழைதற்கரிய கவசமுள்ளவர்களும் தனுவினுடையகுலத்தில் தோன்றியவர்களுமான மூன்றுகோடி அஸுரர்களும் ஹிரண்யபுரத்தில்வஸித்த காலகேயர்களும் ஜயிக்கப்பட்டார்களோ, எவனால் அந்தக்காட்டில் சித்ரஸேனனால்கட்டப்பட்டிருந்த நீ விடுவிக்கப்பட்டாயோ, எவனால் மேருபர்வதத்தினுடைய வடபாகம்சென்று ஏராளமான பொருளைக்கொண்டு வந்து எல்லா அரசர்களையும்வென்று தர்மபுத்ரர் ராஜஸூயயாகம் செய்விக்கப்பெற்றாரோ, எவனிடத்தில் சௌர்யமும், வீர்யமும், ப்ரதாபமும், தைர்யமும், பராக்ரமமும், ஔதார்யமும், காம்பீர்யமும், ஐச்வர்யமும், (அகார்யத்தில்) வெட்கமும், தர்மமும், ஜீவகாருண்யமும், கபடமின்மையும் இருக்கின்றனவோ அப்படிப்பட்டபார்த்தன் இதோவந்துவிட்டான்; ஸம்சயமில்லை. இவன் எல்லாத்தேவக்கூட்டங்களையும்கூட வெல்லாமல் திரும்பமாட்டான். சூரனான இவன் காட்டில் (உன்னால்) துன்பப்படுத்தப்பட்டான்; இந்த்ரனாலும் (வில்வித்தை) கற்பிக்கப்பட்டிருக்கின்றான். இவன் (இப்பொழுது) ரோஷத்துடன் போர்புரியப்போகிறான். இவ்விஷயத்தில் ஐயமில்லை. குருகுலத்தில்உதித்தவனே! இவனுடன்எதிர்த்து யுத்தம்செய்யத் தக்க மற்றொருவீரனை நான் காணவில்லை. வேடவேஷத்தால் மறைந்தவரும் ப்ரபுவுமான ஸ்ரீ மஹாதேவரும் இமயமலையில் பார்த்தனால் யுத்தத்தில் மனக்களிப்படையும்படி செய்விக்கப்பட்டாரென்று கேள்வி" என்றார். கர்ணன், இவ்வாறுசொல்லுகிற த்ரோணரைப்பார்த்துக் கோபங்கொண்டு, "(ஆசார்யரே!) எப்பொழுதுமே நீர் பல்குனனுடையகுணங்களை எங்களிடம் புகழ்ந்துபேசுகிறீர். அர்ஜுனன் என்னையும் துர்யோதனனையும்விட வித்தையினால் நிறைந்தவனல்லன்" என்று கூறினான். துர்யோதனன், "ராதாபுத்ர! இவன்

பார்த்தனுயிருப்பனுகில் என்னுடையகார்யம் நிறைவேறினதாகும். இந்தப்பாண்டவர்கள் அறியப்பட்டால் மறுபடியும் வேறு பன்னிரண்டுவர்ஷகாலம் காட்டில் ஸஞ்சரிப்பார்கள். அப்படியின்றித் தேவதைகளுள் தலைவனுனவேறொருவன் பேடிவடிவத்துடன் இங்குவந்திருப்பனுயின் நல்ல கூர்மையுள்ளபாணங்களால் இவனைப் பூமியில்வீழ்த்துவேன்" எனமொழிந்தான். பகைவர்களை வாட்டுபவனும் த்ருதராஷ்ட்ரபுத்ரனுமான அந்தத்துர்யோதனன் அவ்விதமான வார்த்தையைச்சொல்லுகையில், பீஷ்மரும் த்ரோணரும் க்ருபரும் த்ரோணபுத்ரரும் (துர்யோதனனுடைய) அவ்விதமான ஆணைமையைக்கொண்டாடினர்கள்.

பார்த்தன் அந்த வன்னிமரத்தினருகில்சென்று பிதாவினுல் ஸுகமாகவளர்க்கப்பட்டவனும் யுத்தங்களை அறியாதவனுமான விராடபுத்ரனைப்பார்த்து, "பூமிஞ்சய! விராடபுத்ர! (இங்கு) வா; நான் உன்னை ஏவுகிறேன். நீ பெரிதான (இந்த) வன்னிமரத்தின்மீதேறி விரைவாகக் காண்டீவம்என்கிற வில்லை எடுத்துக்கொண்டுவா. இங்கு இருக்கின்ற உன்னுடைய இந்தவிற்கள் என்னுடைய பலத்தைத் தாங்குவதற்கு சக்தியுள்ளவைகளல்ல. பெரிதானபாரத்தை [1]வஹிப்பதற்காவது யானையை நன்றாக அடிப்பதற்காவது இந்தயுத்தத்தில் பகைவர்களைவெல்லப்போகின்ற என்னுடையகையினுல் இழுப்பதைத் தாங்குவதற்காவது திறமையுள்ளவையல்ல. அவைகளால் இந்த யுத்தகளத்தில் ஜயத்தைக்கொடுக்கக்கூடிய கார்யத்தைச் செய்வதற்கு நான் விரும்பவில்லை. நீண்டகைகளையுடையவனே! மஹாபலமுள்ளவனே! உன்னுடைய இந்த ஆயுதங்களெல்லாம் மிக மெலிந்தவைகள்; சிறியவைகள்; உறுதியற்றவைகள். பூமிஞ்சய! ஆதலால், இலைகளால் அடர்ந்திருக்கின்ற இந்தவன்னிமரத்தின்மீது ஏறு. இதில் பாண்டுபுத்ரர்களான யுதிஷ்டிரருடையதும் பீமனுடையதும் பீபத்ஸுவினுடையதும் அவ்வாறே நகுலஸஹதேவர்களுடையதுமான விற்களும் கொடிகளும் அம்புகளும் சூரர்களுக்குரிய திவ்யமானகவசங்களும் வைக்கப்பட்டிருக்கின்றன. மஹாவீர்யமுள்ளதும் ஒன்றுகஇருந்தாலும் லக்ஷம்விற்களுக்கு ஒப்பானதும் ராஜ்யங்களை வ்ருத்திபண்ணுகின்றதும் அதிகமாக (யுத்த) ச்ரமத்தைப்பொறுக்கின்றதும் பனைமரம்போன்றதும் பெரிதும் ஆயுதங்களெல்லாவற்றுள்ளும் சிறந்ததும் பகைவரெவரையும் நாசஞ்செய்கின்றதும் பொன்னுல் சித்ரவேலைசெய்யப்பட்டிருக்கின்றதும் தேவலம்

---

1 வேறுபாடம்.

பந்தம் பெற்றதும் பளபளப்புள்ளதும் நீண்டதும் காயமில்லாததும் பெரிதான (யுத்த) பாரத்தைப்பொறுப்பதில் ஸாமர்த்தியமுள்ளதும் நல்லகாட்சியுள்ளதும் [1]வருணனால் தரிக்கப்பட்டிருந்ததுமான பார்த்தனுடைய காண்டீவமென்கிறவில்லும் இவ்விடத்திலேயேயிருக்கின்றது. அதைப்போன்றவைகளும் பலமுள்ளவைகளும் உறுதியுள்ளவைகளும் ப்ரஸித்திபெற்றவைகளும் மேன்மைபெற்றவைகளும் பார்ப்பதற்கு மிகஅரியவைகளுமான யுதிஷ்டிரர், பீமன், அர்ஜுனன், நகுலஸஹதேவர் ஆகிய இவர்களுடைய எல்லா ஆயுதங்களும் இவ்விடத்திலேயேயிருக்கின்றன" என்று கூறினான். உத்தரன், "இந்தவன்னிமாத்தில் முற்காலத்தில் (மரித்தவனுடைய) சரீரமன்றோ கட்டப்பட்டு உலர்ந்திருக்கிறது. ராஜபுத்ரனாகியநான் அதை எவ்வாறு கையினால் தொடுவேன்? ஓ! ப்ருஹன்னளையே! என்னை இவ்விதமானகார்யத்தைச் செய்யும்படி செய்யாதே. எவ்விதம் (இந்தக்கார்யம்) செய்வதற்கு இயலும்? நீ உன்புத்தியினால் எவ்வாறுநினைக்கிறாய்? க்ஷத்ரியஜாதியில் பிறந்தவனும் மஹிமையுடையவனும் ராஜபுத்ரனும் மந்த்ரங்களையும் யஜ்ஞங்களையும் அறிந்தவனுமான என்னால் இவ்விதமான (சவமானது) தொடத்தக்கதன்று. ஓ! ப்ருஹன்னளையே! இந்தச் சரீரத்தைத்தொட்டவனும் சவத்தைத்தூக்கினவன்போல அசுத்தனுமாயிருக்கும் என்னை எவ்வாறு நீ வ்யவஹரிக்கத்தக்கவனாகச்செய்வாய்?" என்று சொன்னான். பிறகு, சத்ருபட்டணங்களைஜயிப்பவனும் சூரனுமானபார்த்தன், [2]மத்ஸ்யராஜாக்களுடையவம்சத்தில்புத்ரனாகஉதித்தவனும் ஸாமர்த்யமுடையவனுமான அவனைப்பார்த்து, "போறினே! நான் உன்னை ஜாதியினாலும் குலத்தினாலும் சிறந்தவனென்றறிவேன். பகைவரைவாட்டுபவனே! (அப்படிப்பட்ட) உன்னைப் பாபத்தொழிலைச்செய்யென்று எவ்வாறு நான் சொல்வேன்? வேந்தரிற்சிறந்தவனே! நீ வ்யவஹரிக்கத்தக்கவனும் சுத்தனுமாவாய். இவைகள் விற்கள். இதில் (மரித்தவனுடைய) சரீரமில்லை. நீ பயப்படாதே. ராஜபுத்ர! மத்ஸ்யராஜாவினுடைய குலத்தில் புத்ரனாகப் பிறந்தவனும் சிறந்த மனமுள்ளவனுமானஉன்னை நான் எவ்வாறு நிந்திக்கத்தக்கதொழிலைச் செய்யும்படிசெய்வேன்?" என்றான். பார்த்தனால் இவ்வாறுசொல்லப்பட்டவனும் குண்டலங்களை அணிந்தவனுமான அந்தவிராடபுத்ரன் அப்பொழுது பரவசனாகி ரதத்தினின்று கீழேகுதித்து வன்னிமரத்தின்மீதேறினான். பகைவரை அழிப்பவ

[1] 'பயங்கரமானதும்' என்பது வேறுபாடம்.
[2] ஒருசொல் விடப்பட்டது.

ஞனதனஞ்சயன் ரதத்திலிருந்துகொண்டு அவனைப்பார்த்து, "(உத்தர!) மரத்தின்உச்சியிலிருந்து இந்தவிற்களைத் தாமதமின்றிக் கீழே இறக்கு" என்று கட்டளையிட்டான். அந்தஉத்தரன் அகன்றமார்புடையவர்களான வீரர்களுடைய மிகச்சிறந்தவிற்களையெடுத்து நான்குபக்கத்திலும்சுற்றப்பட்டிருக்கிற இலைகளையும்எடுத்துவிட்டு அருகில் கொண்டுவந்தான். (அர்ஜுனன்,) "உத்தர! இவைகளுக்கு நாற்புறத்திலும் சுற்றப்பட்டிருப்பதை முற்றிலும் தாமதமின்றி அவிழ்த்துவிடு" என்றுசொன்னான். பகைவரைவாட்டுபவனானஉத்தரன் அவைகளுடைய கட்டுக்களை அவிழ்த்து அவற்றுள் நான்கு வேறுவிற்களோடு காண்டீவத்தைக்கண்டான். அவிழ்த்துவிடப்பட்டவைகளும் ஸூர்யனுடைய ஒளிபோன்ற ஒளியுள்ளவைகளுமான அந்தவிற்களுடைய சிறந்தகாந்திகள் உதயமாகுங்காலங்களில் க்ரஹங்களின்காந்திகள் வெளிப்படுவனபோல வெளிபபட்டன. சீறுகின்ற ஸர்ப்பங்களுடைய ரூபம்போன்ற அவைகளுடையரூபத்தைக்கண்டு அந்தஉத்தரன் அப்பொழுது, மயிர்க்கூச்சலும் பயத்தினால் மனக்கலக்கமும் அதிகநடுக்கமுற்ற தேஹமுமுள்ளவனானான். ராஜபுத்ரனான உத்தரன் அர்ஜுனனால் தேறுதல்செய்யப்பட்டுக் கொஞ்சம்தைர்யத்தை அடைந்தான். அவன் (கண்களை) மூடிப் பிறகுதிறந்தும் (அவ்வாயுதங்களைத்) தொட்டுத்தொட்டும் அடிக்கடி அவைகளைப்பார்க்கவும் தொடவும் பழகினான். அப்பொழுது (அர்ஜுனனால்) நன்மொழிகூறப்பட்டஉத்தரன் க்ஷணத்திற்குள் தேறுதலடைந்தவனானான். மன்னரே! விராடபுத்ரன் காந்தியுள்ளவைகளும் பெரியவைகளுமான அந்த விற்களைத் தொட்டு, அர்ஜுனனைப்பார்த்து, பின்வருமாறு வசனிக்கலானான்.

நாற்பத்தோராவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(உத்தரன், பாண்டவர்களின் ஆயுதங்களைக்கண்டுவியப்புற்று அவைகளைக்குறித்து வினவியது.)

"ஓ! ஸாரதியே! இது தேவஸம்பந்தம்பெற்றதோ? ஸர்ப்பமோ? அல்லது வில்லோ? இதில் தர்ப்பாக்னிபோல ஜ்வலிக்கின்றவைகளும் காந்தியுள்ளவைகளும் பெரியவைகளும் தங்கமயமானவைகளும் நூறுஇதழ்களுள்ளவைகளுமான தாமரைப்புஷ்பங்கள் தனித்தனியாக விளங்குகின்றன. இதில் நான்குபக்கத்திலும் ரத்னங்க

ளோடுசேர்க்கப்பட்ட பொன்மயமானபொட்டுக்களும் ஒளிவிடுகின்றன; பின்புறத்தில் பொன்னால்அலங்கரிக்கப்பட்ட சந்த்ரப்ரபைகளும் ஸூர்யப்ரபைகளும் பொற்றாமரைமலர்களும் தனித்தனியாக விளங்குகின்றன. ஆச்சர்யப்படத்தக்க ரூபமுள்ளதும் பயங்கரமானதும் அச்சந்தரும் தோற்றமுள்ளதும் கருநெய்தலுக்கொப்பானதும் பொன்னால்அலங்கரிக்கப்பட்டதுமான இந்தவில்லானது யாருடையது? ** ***** கொம்புகளுள்ள பொன்மயமானஎருதுகளைப் பின்புறத்திலுடையதும் மணிகளாலும் பொன்னாலும் அலங்கரிக்கப்பட்டதும் ஒரு பனைஉயரமுள்ளதும் நல்லநிறமுள்ள பொன்மயமான பத்துக் குரங்கு (ப்ரதிமை) களுள்ளதுமான இந்தவில்லானது யாருடையது? வளைத்தற்கரியதும் மிகநீண்டதும் நல்லரூபமுள்ளதும் (பிறரால்) அவமதிக்கமுடியாததும் ஆச்சர்யகரமுமான இப்படிப்பட்ட இந்தவில்லானது யாருடையது? ஸாரதியே! முற்றிலும் கவசம்பூட்டப்பட்டவைகளும் சந்த்ரஸூர்யர்கள்போல மாசற்றஒளியும் நல்ல ரூபமும் பார்க்க மிக்கஅழகும் குசாக்னிக்கொப்பான காந்தியுமுள்ளவைகளுமான அன்னப்பறவைகள் பின்புறத்தை அடைந்திருப்பதும் சார்ங்கத்திற்கும் காண்டீவத்திற்கும்ஒப்பானதுமான இந்தவில் யாருடையது? ஸ்வர்ணமயமான சரீரமுள்ளதும் மின்னல்கூட்டத்திற்கு ஒப்பானதும் நீலக்கற்களால் இழைக்கப்பட்டதும் த்வாரமில்லாததும் பொன்மயமும் நான்காவதுமான ஒரு வில் விளங்குகின்றது. ஸ்வர்ணமயமான இந்தவில்லினுடையபின்புறத்தில் கவசத்தால் மூடப்பட்ட மீன்கள்இருக்கின்றன. ஸாரதியே! படமெடுத்த ஸர்ப்பம்போல உயர்ந்திருக்கின்றதும் சிறந்ததும் உறுதியாயிருப்பதினால் வளைக்கமுடியாததும் இந்த்ரதனுஸுக்கொப்பானதும் திவ்யமுமான இந்த வில்லானது யாருடையது? இதில் பொன்மயமான ஆயிரம் சிறிய ம்ருகப்ரதிமைகளும் பதினாறுபுலிகளும் ஸூர்யபிம்பங்கள் போன்ற அநேகஞ்சுட்டிகளால் அலங்கரிக்கப்பட்ட பொன்மயமான மயில்களும் விளங்குகின்றன. ஸ்வர்ணத்தால் விசித்ரமான அங்கத்துடன்கூடின இந்த ஐந்தாவதானவில் யாருடையது? இறகுகள் கட்டப்பட்டவைகளும் கூரியமுகத்தின் நுனியுள்ளவைகளும் பொன்மயமான அம்பறாத்தூணியில் போடப்பட்டவைகளுமான இந்த ஆயிரம் க்ஷுரங்களும் நாராசங்களும் யாருடையன? மஞ்சள்நிறமும் கூர்மையும் ஸர்ப்பங்களுக்குஸமமான ஸ்பர்சமுமுள்ளவைகளும் தீட்டப்பட்டவைகளும் உறுதியாயிருக்கின்றவைகளும் (லக்ஷ்யங்களில்) நேராகப் போகின்றவைகளுமான இந்த ஐந்நூறுபாணங்களும் யாருடையவை?

கழுகிறகுகளின்பாகங்களால் வேகமுள்ளனவாகச் செய்யப்பட்டவைகளும் பெரியவைகளுமான இந்தவிபாடங்கள் யாருடையவை? கூர்மையான முனையுள்ளவைகளும் பன்றியினுடையகாதுகள்போன்ற முட்களுள்ளவைகளும் அழகியவைகளுமான இந்தஅம்புகள் யாருடையவை? வஜ்ராயுதத்துக்கும் இடிக்கும் ஸமமான ஸ்பர்சமுள்ளவைகளும் அக்னிஜ்வாலைபோன்ற தேஜஸுள்ளவைகளும் பொன்மயமான கட்டுக்களுள்ளவைகளும் கூரிய முனையுள்ளவைகளுமான இந்த எழுநூறுபாணங்களும் யாருடையவை? மாட்டுத்தோலால் செய்யப்பட்ட உறையில் போடப்பட்டதும் நீண்டதுமான இந்தப்பாணம் யாருடையது? உறுதியும் பளபளப்பும் அழகுமுள்ள இந்தத்தண்டம் ஒளிவிடுகின்றதே, இது யாருடையது? புலித்தோலால் உறைபோடப்பட்டதும் அதிக ஒளிபொருந்தியதும் திவ்யமுமான இந்தச்சங்கமானது யாருடையது? புலி அடையாளமிட்டிருக்கிற இந்த ஐந்துகத்திகளும் எதற்காக இருக்கின்றன? அழுக்கற்றதும் புலித்தோலால்மூடப்பட்டதுமான இந்தக்கத்தி யாருடையது? கருசெய்தலுக்கொப்பான நிறமுள்ளதும் பெரிதும் மஹிமைபொருந்தியதுமான இந்தக்கத்தி யாருடையது? ஸிம்மத்தோலாலும் காளைத்தோலாலும் உறைபோடப்பட்டதும் கூரிய முனையுள்ளதும் மிக்க பளபளப்புள்ளதும் பெரிதுமான இந்தக்கத்தி யாருடையது? உறையின்மீது அலங்கரிக்கப்பட்டிருக்கின்ற ஐந்து ஸூர்யப்ரதிமைகள் காணப்படுகின்றதும் கொம்பினால் செய்யப்பட்டபிடியினால் மனத்தைக்கவர்வதும் பெரிதுமான இந்தக் கத்தி யாருடையது? புள்ளிமான்தோலால்செய்த உறையில்போடப்பட்டதும் எண்ணெயிட்டுத்தீட்டப்பட்டதும் நன்றாகச்செய்யப்பட்டிருக்கின்றதும் அளவுடனும் நிறத்துடனும் கூடியதும் பெரிதுமான இந்தக்கத்தி யாருடையது? இதனால் ஓர்யானை அடிக்கப்படுமானால் அது உயிரோடிராது. ப்ருஹன்னளையே! நான் உன்னைக் கேட்கிறேன். நீ (எனக்கு இவைகளை) முறையாக உரைப்பாயாக பெரியனவான இவையனைத்தையும்பார்த்து எனக்கு அதிகமான ஆச்சர்யம் உண்டாய்விட்டது" என்று கூறினான்.

நாற்பத்திரண்டாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன், உத்தரனை நோக்கி ஆயுதங்களைத் தனித்தனிதுறிப்பிட்டு அந்தஅந்தஆயுதங்களுக்குரியவர்களைக் கூறியது.)

உத்தரன் இவ்வாறுசொல்லக் கேட்ட பார்த்தனானவன், பயந்தவனும் (பராண) ஸந்தேஹத்தை அடைந்தவனுமான விராடபுத்ரனை

மெல்லியமொழியால் நம்பிக்கையுடையவனுகச்செய்து (பின்வருமாறு) சொல்லலானுன். "(உத்தர!) உன்னுல் முதலில்கேட்கப்பட்டதும் சத்ருஸேனைகளுடைய அங்கங்களை அடிக்கின்றதும் தேவஸம்பந்தம் பெற்றதும் காண்டீவமென்று ப்ரஸித்திபெற்றதுமான இந்தவில்லானது பார்த்தனுடையது. பிளக்கமுடியாததும் அச்சமற்றதும் ஒளியுள்ளதும் ஆச்சர்யகரமானதும் முறிக்கமுடியாததும் வெடிப்பில்லாததும் எல்லாஆயுதங்களுள்ளும் சிறந்ததும் பொன்மயமானதும் நாடுகளைப் பெருகச்செய்கின்றதும் அநேகவர்ஷகாலமாகத் தேவர்களாலும் அஸுரர்களாலும் கந்தர்வர்களாலும் பூஜிக்கப்பட்டிருக்கின்றதுமான இந்தவில்லானது லக்ஷம் ஆயுதங்களுக்குஒப்பானது. இதனுல், பார்த்தன் போர்க்களத்தில் தேவாஸுரர்களனைவரையும் எதிர்த்துத் தாங்கினுன். இதை, முற்காலத்தில் பரம்மதேவர் ஆயிரம்வர்ஷகாலம் வைத்திருநதார்; உமாபதியானவர் அறுபததுநான்குவர்ஷம் வைத்திருந்தார்; இந்த்ரன் எண்பத்தைந்துவர்ஷம் தாங்கியிருந்தான்; சந்த்ரன் ஐயாயிரம்வர்ஷம் தரித்திருநதான்; அவ்வாறே வருணன் நூறுவர்ஷம் தரித்திருந்தான். அநதவருணனிடததினின்று அக்னியானவன் மங்களகரமான அந்தவில்லை அன்புடன்பெற்று (தான்) தரித்துவந்தான். மத்யஸ்தனன அக்னியினுல் (இநதக) காண்டீவமானது பார்த்தனுக்குக் கொடுக்கப்பட்டது. குநதீபுதரனன அர்ஜுனன் அறுபத்தைந்துவர்ஷகாலம் தரிககபபோகிறுன. இவ்விதமான வீர்யமுளளதும் மஹாவேகமுளளதும உத்தமமும் கருநெய்தலபோன்றதுமான இநதவில்லானது மஹாதமாவும் ராஜாவுமான யுதிஷ்டிரருடையது. இதில் புறததில் பொன்மயமான புள்ளிகளும் நன்றாக அமைக்கப்பட்டிருக்கின்றன. ப்ரஸிததிபெறறதும் பொன்கட்டுள்ளதும் உறுதியுள்ளதுமான இந்தவில்லானது பீமஸேனனுடையது. பின்புறத்தில் பொன்மயமான ஆயிரம் சிறிய ம்ருகப்ரதிமைகளும், பதினைந்து புலிகளும, கொம்புள்ளவைகளும பொன்னுல்செய்யப்பட்டவைகளுமான கால்களுமுள்ளதும் பகைவர்களை வாட்டுபவனுன பீமன் கீழ்த்திசை அனைத்தையும் வென்றதும் பின்புறத்தில் குசாக்நிபோலஒளிர்கின்ற தனித்தனியான (ரேகைகள்) ப்ரகாசிக்கின்றதும் தேவர்களிடங்களிலும் மனுஷ்யர்களிடங்களிலும் பூஜிக்கப்பட்டதும் ப்ரஸித்திபெற்றதும் ஒரு பனைமரஅளவுள்ளதும் ரத்னங்களாலும் பொன்னுலும் அலங்கரிக்கப்பட்டதும் உத்தமமுமானஇந்தவில்லானது பீமனுடையது. பொன்மயமும் அனேககண்களால்நிறைந்ததோகைகளை அலங்காரமாகக்கொண்டவைகளுமான மயில்கள் இருக்கின்றதும்

வளைக்கமுடியாததும் பருத்தும் நீண்டுமிருப்பதும் நல்லஉருவமுள்ளதும் (ஒருவராலும்) அவமதிக்கமுடியாததுமான இந்தவில்லானது புத்திசாலியும் மாத்ரீபுத்ரனுமான நகுலனுடையது. இந்தவில்லை ஒத்ததும் வியப்பைத்தருவதுமான மற்றொரு வில்லானது இளைய ஸஹோதரனான ஸஹதேவனுடையது. மஞ்சள்நிறமுள்ள இந்தவில்லானது குருகுலத்தில் உதித்தவரும் மஹாத்மாவுமான யுதிஷ்டிரராஜருடையது. மலைகளையும் பிளக்கின்றவைகளும் நல்லகாந்தியுடையவைகளும் மிகப்பெரிய உடலுள்ளவைகளும் கூர்மையானமுனையுள்ளவைகளும் மிக்கஉறுதியுள்ளவைகளுமான இந்தஅம்புகள் பீமஸேனனுடையவை. பீமனால் இந்தஅம்புகள் யானைகளைத்தடுப்பதற்காகத் தொடுக்கப்படுகின்றன. பொன்மயமானகோல்களால் அலங்கரிக்கப்பெற்று அழகியவைகளும் காலதண்டத்துக்கொப்பானவைகளும் மங்களகரமாயிருப்பவைகளும் வஜ்ராயுதத்திற்கும் இடிக்கும் ஸமமான ஒளிபொருந்தியவைகளுமான இந்தஅம்புகள் நகுலனுடையவை. ஜ்வலிக்கின்றவைகளும் ஒத்தமுனையுள்ளவைகளும் நன்கு செய்யப்பட்டிருக்கின்றவைகளும் நீ கேட்பவைகளும் கூர்மையான முனையுள்ளவைகளுமான வராஹகர்ணங்கள்என்கிற இந்தஅம்புகள் ஸஹதேவனுடையவை. நீண்டதும் பசுவின்தோலால்செய்தஉறையில்போடப்பட்டதும் மஹாகோரமானதும் எல்லாப்பாரங்களையும்பொறுக்கின்றதும் பெரிதுமான இந்தக்கத்தியானது பார்த்தனுடையது. புலித்தோலால்செய்த உறையில்போடப்பட்டதும் மாசற்றதுமான இந்தக்கத்தியானது புத்திசாலியும் குந்திபுத்ரரும் ராஜாவுமான யுதிஷ்டிரருடையது. புலித்தோலால்செய்த உறையில் போடப்பட்டதும் ஐந்து புலிப்ரதிமைகளை அடையாளமாகக்கொண்டதும் மதமிகுந்த யானைகளுடைய கழுத்துக்களைவெட்டுவதில் பழக்கமுடையதுமான இந்தக்கத்தியானது பீமனுடையது. கருநெய்தலுக்கொப்பான ஒளிபொருந்தியதும் ஸிம்மத்தினுடைய தோலால்மூடப்பட்டதும் கூரிய முனையுள்ளதும் மிகஅழுக்கற்றதுமான இந்தக்கத்தியானது புத்திமானான பார்த்தனுடையது. பார்க்கஅழகியதும் மிகக்கூர்மையானமுனையுள்ளதும் பகைவர்களுடையஸேனைகளை எதிரில் நாசஞ்செய்கின்றதுமான இந்தக்கத்தியானது புத்திசாலியும் குந்தீபுத்ரனுமான அர்ஜுனனுடையது. புள்ளிமான்தோலால்செய்த உறையில் போடப்பட்டதும் அழகியபிடியுள்ளதும் நெருப்புப்போன்ற ஒளிபொருந்தியதுமான இந்தக்கத்தியானது நகுலனுடையது. மஞ்சள்நிறமுடையதும் விசித்ரமாயிருக்கின்றதும் மணிகள்இழைக்கப்பட்ட பிடியுள்ள

தும் பாரத்தைப்பொறுக்கக்கூடியதும் நன்றாக உறைபோடப்பட்டது மான இந்தக்கத்தியானது ஸஹதேவனுடையது. பகைவர்களனை வர்களையும்அழிக்கின்ற இந்தப்பெருந்தடியானது பீமனுடையது" என்று கூறினான். அர்ஜுனன், ஆயுதங்களையும் தூணீரங்களையும் ஒப்பற்ற ஒளிபொருந்தியகத்திகளையும் தனித்தனியாகப்பகுத்து உள்ளபடி விரைவாக உத்தரனுக்குக் கூறினான்.

நாற்பத்துமூன்றாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் உத்தரனுக்குத் தான் அர்ஜுனனென்றும் கங்கர்முதலியோர் யுதிஷ்டிரர்முதலான பாண்டவர்களென்றும் கூறியதும், தன்னுடைய பத்துப்பேர்களையும் அவற்றின்பொருளையும் சொல்லியதும்.)

மூடாத்மாவானவிராடபுத்ரன் இந்தஸமயத்திலும் அவனைப் பார்த்தனென்றுதெரிந்துகொள்ளாமல் மறுபடியும் எதிரில் வினவலானான். "மஹாத்மாக்களும் மிக்கசுறுசுறுப்புள்ளவர்களுமான இந்தப்பார்த்தர்களுடைய ஆயுதங்கள் பொன்னால் அழகியவைகளும் மனோஜ்ஞங்களுமாக விளங்குகின்றன. அவர்களுடையஇந்தஆயுதங்கள் ப்ரகாசமுள்ளவைகளாக ஒளியினால் ஜ்வலிக்கின்றனவோ சூரர்களும் யுத்தங்களில் (பகைவர்களால்) ஜயிக்கப்படாதவர்களுமான அந்தப்பாண்டவர்கள் எங்கே? தர்மமறிந்தவர்களும் பந்துக்களிடத்தில்நேசமுள்ளவர்களுமான அவர்கள் எந்தத்தேசத்தில் வஸிக்கின்றனர்? தர்மராஜரும் குந்திபுத்ரரும் தர்மசீலரும் தர்மாத்மாவும் சிறந்த தர்மமுள்ளவரும் தர்மத்தைப்பகுத்துஅறிந்தவரும் நல்ல புத்தியுடையவரும் தர்மத்துக்குத்தலைவராயிருப்பவரும் தர்மத்தை அனுஷ்டிப்பதற்காகவே பிறந்தவரும் தர்மங்களை அறிந்தவரும் தர்மத்தை உருவமாகக்கொண்டவரும் தர்மத்தில் நிலைபெற்றவரும் தர்மத்தைச்செய்பவரும் தர்மத்தைக் காப்பவரும் தர்மத்தை நன்குஅனுஷ்டிப்பவரும் ஸத்யத்திற்கும் கபடமின்மைக்கும் பொறுமைக்கும் ஆதாரமானவரும் தயையுள்ளவரும் தர்மத்தைத் தலைமையாகக்கொண்டவரும் தர்மதேவதையினுடைய புத்ரருமான யுதிஷ்டிரர் எங்கேஇருக்கிறார்? என்னுடைய அம்மான்மார்களான பீமஸேனர் அர்ஜுனர் யுத்தத்தில் எல்லாஅஸ்த்ரங்களிலும் வல்லவர்களான நகுலர் ஸஹதேவர் ஆகிய இவர்கள்எல்லாரும் எங்கிருக்கின்றார்கள்? மஹாத்மாக்களும் எல்

லாச்சத்ருக்களையும் அழிப்பவர்களுமான அந்தப்பாண்டவர்களனைவ ரும் சூதாட்டத்தினால் நாட்டைத்தோற்றுக் கானகம்சென்றார்களெ ன்று நான் கேட்டிருக்கிறேன். பாஞ்சாலராஜகுமாரியான த்ரௌபதி யும் ஸ்த்ரீகளுள் சிறப்புற்றவளென்று நான் கேட்டிருக்கிறேன். அந்த க்ருஷ்ணையும் அப்பொழுது பாச்சிகைகளால்ஜயிக்கப்பட்டு அவர் களையே பின்தொடர்ந்து கானகம்சென்றாள். அவர்கள் தர்மமாகக் கிடைத்த ராஜ்யத்தைஇழந்து கானகம்சென்றார்களென்று நான் கேள் விப்படுகிறேன். ப்ருஹன்னளையே! தர்மத்தைஅநுஷ்டிப்பவர்களான அவர்கள்எங்கே? எந்தஇடத்தில் வஸிக்கின்றார்கள்? பாண்டவர்களை நீ அறிவாயாகில் உண்மையைச்சொல். கல்யாணி! மஹாத்மாக்களான அவர்களுடையசஸ்த்ரங்களும் அஸ்த்ரங்களும் யாதுகாரணம்பற்றி இங்குவந்தன? உன்னால் எவ்வாறுஅறியப்பட்டன? அவ்விதத்தை எனக்குக்கூறுவாயாக" என்று வினவினான்.

பிறகு, வெண்மையானகுதிரைகளையுடையவனும் குந்தீபுத்ரனு மான பீபத்ஸுவானவன் சிரித்து ராஜகுமாரனை அந்தஉத்தரனைப் பார்த்து, "வேந்தரிற்சிறந்தவனே! என்வார்த்தையைக் கேள். நீ பயப்படாதே. நான் உனக்கு எல்லாவற்றையும் சொல்லுகிறேன். ராஜ புத்ர! இவ்விஷயத்தில் இன்னும் நீபயப்படத்தகுந்தவனல்லை. நாங் களே வனவாஸத்தினுடைய கரையைக்கண்டவர்களான அந்தப்பாண் டவர்கள். பன்னிரண்டுவர்ஷகாலம் சென்றபிறகு அஜ்ஞாதவாஸஞ் செய்வதற்காக இங்கு வாஸஞ்செய்துவருகிறோம். உத்தர! ஆதலால், ஸந்தேஹமில்லாதமனத்துடன் ஸாவதானமாகக்கேள். நான் ப்ர ஸித்திபெற்ற அர்ஜுனன். கங்கரென்பவர் யுதிஷ்டிரர். உன்பிதாவுக்கு ருசியான ஆஹாரங்களைப்பக்வம்செய்கின்ற வலலனே பீமஸேனன். குதிரைகளைக்கட்டுகிறவன் நகுலன். பசுக்களைக்காப்பவன் ஸஹதே வன். எவனுக்காகக் கெட்டஒழுக்கமுள்ளகீசகன் யுத்தத்தில் உடன் பிறந்தாரோடு பீமஸேனனால்கொல்லப்பட்டானோ அந்தஸைரந்த்ரியை த்ரௌபதியென்று அறி" என்றான். ஜிஷ்ணுவினுடைய இந்தச்சொல் லைக்கேட்டு, உத்தரன் வியப்பால் மலர்ந்த கண்களையுடையவனாகி இமைகொட்டாமல் பார்த்தனைப் பார்த்துக்கொண்டு மெதுவாக, "பார்த்தனுக்குப்பத்துப்பெயர்கள் உண்டென்று கதைகளில் நான் கேட்டிருக்கிறேன். அவற்றை நீ எனக்குச்சொன்னால் நீ சொன்ன எல்லாவற்றையுமே நம்புவேன்" என்றுசொன்னான். அர்ஜுனன், "விராடபுத்ர! அப்படியானால் என்னுடைய அந்தப் பத்துப்பெயர்களை யும் உனக்குச் சொல்லுகிறேன். முன்பு உன்னால் கேட்கப்பட்டிருக்

கின்ற அந்தப்பெயர்களை நீகேட்பாயாக. பொன்னுலகத்திற்குத் தலைவரும் ஐச்வர்யமுள்ளவருமான மஹேந்த்ரர் எனக்கு விண்ணுலகத்தில் அர்ஜுனன், பல்குனன், ஜிஷ்ணு, கிரீடி, ச்வேதவாஹனன், பீபத்ஸு, விஜயன், பார்த்தன், ஸவ்யஸாசி, தனஞ்சயன்என்கிற இந்தப்பெயர்களை ஏற்படுத்தினர். தேவச்ரேஷ்டர்கள் அவற்றை நிலைபெறச்செய்தனர்" என்றுசொன்னான். உத்தரன், தோஷமற்றவனே! உலகத்தில் ப்ரஸித்திபெற்றுப் பாண்டவனிடத்தில்வழங்கிவருகின்ற பத்துப்பெயர்களும் குணத்தினால் அமைந்திருப்பவைகளாக என்னால் அறியப்பட்டிருக்கின்றன. ஸாரதியே! யாதுகாரணத்தினால் நீ விஜயன்என்று பெயர்பெற்றாய்? எந்தக்காரணத்தினால் ச்வேதவாஹனன்என்று பெயர்பூண்டாய்? எந்த நிமித்தத்தினால் ஸவ்யஸாசி, ஜிஷ்ணு, பீபத்ஸு, அர்ஜுனன், பல்குனன், பார்த்தன், கிரீடி என்று பெயர்பெற்றாய்? ப்ருஹன்னளையே! எக்காரணத்தினால் தனஞ்சயன்என்று ப்ரஸித்திபெற்றாய்? விரைவாகச் சொல்வாயாக. வீரனான அந்தஅர்ஜுனனுடைய பெயர்களுக்குரிய முக்ய காரணங்களை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ப்ருஹன்னளாய்! சஞ்சலமான என்னுடையமனமானது உன்விஷயத்தில் நீ அர்ஜுனனோ அல்லனோஎன்று இங்குமங்குமாகத் தடுமாற்றமுற்றிருக்கிறது. (உண்மையை) விரைவாகச்சொல்" என்றுவினவ, அர்ஜுனன், கூறலானான்.

"(உத்தர!) எல்லாத்தேசங்களையும்ஜயித்து நாலாபக்கங்களிலிருந்தும் தனங்களைக் கொள்ளையிட்டுக்கொண்டுவந்து அந்தத்தனத்தின்நடுவில் நின்றதினால் என்னைத் தனஞ்சயனென்று சொல்லுகிறார்கள். யுத்தத்தில் மிக்க மதங்கொண்டவர்களை யுத்தத்தில் நான் எதிர்த்துவெல்லாமல் திரும்பாதகாரணத்தினால் என்னைவிஜயன்என்று சொல்லுகிறார்கள். சத்ருக்களுடன்போர்புரிகின்ற என்னுடையரதத்தில் பொன்மயமானகவசமுள்ள வெள்ளைக்குதிரைகள் கட்டப்பட்டிருப்பதால் என்னை ச்வேதவாஹனன்என்று ஜனங்கள்சொல்லுகிறார்கள். யுத்தத்தின்மத்தியில் தேரிலிருக்கின்ற என்னுடையதலையில் ஸூர்யனுக்கும் அக்நிக்கும் ஒப்பானதும் (யாராலும்) உடைக்க அருமையானதும் அழகியதும் விசித்ரமாயிருக்கின்றதும் பொன்னால் அலங்கரிக்கப்பட்டதும் இந்த்ரனால் கொடுக்கப்பட்டதும் (ஒருவராலும்) கவரமுடியாததுமான முடியானது ஸூர்யன்போலவிளங்குகிறது. அதனால் என்னைக் கிரீடிஎன்று சொல்லுகிறார்கள். போர்புரிகின்ற யான் ஒருகாலும் அருவருக்கத்தக்க கார்யத்தைச்செய்கிறதில்லை.

அதினால் தேவர்களுள்ளும் மனிதர்களுள்ளும் என்னைப் பீபத்ஸு என்று அறிகிறார்கள். போரில் என்னுடையஇருகைகளும் காண்டீவத்தை இழுக்கும்விஷயத்தில் ஒத்தசெய்கையுள்ளவைகளாகவும் பகைவர்படையை அழிப்பவைகளாகவும் இருக்கின்றன. அவ்விரண்டு கைகளுள் இடக்கையானது (வலக்கையைவிட) மேலாயிருக்கிறது. அதனால் என்னை ஸவ்யஸாசிஎன்று சொல்லுகிறார்கள். என்னுடைய (தேஹத்தின்) நிறமானது கடல்சூழ்ந்தபூமியில் (பிறரால்) அடைவதற்கு அருமையானதும் (எனக்கே) இசைந்ததுமாயிருக்கிறது. அவ்வாறு சுத்தனாகவும் சிறந்தரூபமுள்ளவனாகவுமிருப்பதினால் என்னை அர்ஜுனன்என்று (ஜனங்கள்) அறிகிறார்கள். நான் இமயமலையின் மேற்பக்கத்தில் பகலில் உத்தரபல்குனி பூர்வபல்குனி நக்ஷத்ரங்களின் ஸந்தியில் பிறந்தவனாதலால் என்னைப் பல்குனன்என்று சொல்லுகிறார்கள். என்னுடையதமையனார் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது என்னுடைய உடலில் காயத்தைஉண்டுபண்ணுகிறவனுடைய அல்லது ஒருஸமயம் யுதிஷ்டிருடையதேஹத்தில் உதிரத்தைக் காண்பிக்கிறவனுடையகுலத்தை நான் அவமதிப்பேன்; ஐயமில்லை. அவர்களைவர்களோடும் நான் போர்புரிவேன். எனக்கு அவர்களிடமிருந்து அவமானம்நேரிடாது. அக்காரணத்தினால் தேவர்களுள்ளும் மனிதர்களுள்ளும் நான் ஜிஷ்ணுவென்று ப்ரஸித்திபெற்றிருக்கிறேன். என்னுடையதாயார் ப்ருதைஎன்று பெயருடையவள். ஆதலால், என்னைப் பார்த்தன்என்று சொல்வார்கள். நான் முன்பு காண்டவவனத்தில் தேவர்களையும் அஸுரர்களையும் கந்தர்வர்களையும் பிசாசங்களையும் ஸர்ப்பங்களையும் ராக்ஷஸர்களையும் போரில்வென்று அக்னிக்கு த்ருப்தியைச்செய்தேன். சார்ங்கம்என்னும் வில்லைத்தரித்த ஸ்ரீக்ருஷ்ணனோடுசேர்ந்து நான் அக்நியை த்ருப்தியடையச்செய்து (தேவராஜனோடு போர்புரிந்தச்ரமத்தினால் மூர்ச்சைஅடைந்து பூமியில் விழுந்துவிட்டேன்.) பூமியில் மூர்ச்சையினால்விழுந்திருக்கின்ற என்னைப் பார்த்து விண்ணுலகில்வஸிப்பவர்களும் தேவரில்மேம்பட்டவர்களுமான ப்ரம்மதேவரும் மஹேச்வரரும் வந்தார்கள். வரங்கொடுப்பவர்களான அந்தத்தேவர்களைக்கண்டு திரும்ப அறிவையடைந்து எழுந்திருந்தேன். முடியினால் பூமியில்வணங்கியஎன்னை, சிறப்புற்றவர்களும் வரங்கொடுப்பவர்களுமான அந்தஇரண்டுதேவர்களும் (ஆசீர்வதித்தார்கள்). என்னுடையவீர்யத்தினாலும் செய்கையினாலும் பூஜிக்கப்பட்டவர்களும் ஸந்தோஷமடைந்தவர்களுமான அவ்விருவர்களும் அப்பொழுது ப்ரீதியினால் எனக்கு, 'க்ருஷ்ணன்' என்று பதினோ

ராவதுபெயரையும் வைத்தார்கள். எல்லாத்தேவர்களாலும் சூழப்பட்டவர்களான அவ்விருவர்களும் தாங்களாகவே மறுபடியும் என்னைப்பார்த்து, 'அப்பா'! பாண்டுநந்தன! நீவிரும்பும்வரத்தைப் பெற்றுக்கொள்" என்று சொன்னார்கள். பிறகு, நான் அவர்களிடமிருந்து திவ்யங்களும் உறுதியுள்ளவைகளுமானப்ரம்மாஸ்த்ரம் பாசுபதம் (ஒருவராலும்)ஜயிக்கமுடியாத ஸ்தூணாகர்ணம் ஐந்த்ரம் வாருணம் ஆக்னேயம் வாயவ்யம் வைஷ்ணவம்என்கிற அஸ்த்ரங்களைப்பெற்றேன். பிறகு, நான் மாதலியைப் பாகனாகக்கொண்டு இந்த்ரனுடையதேரிலேறி (ஒருவராலும்) ஜயிக்கமுடியாதவர்களும் தேவர்களாலும்பிளக்கமுடியாத கவசமுள்ளவர்களும் வரத்தினால் கர்வமடைந்தவர்களுமான நிவாதகவசர்கள்என்கிற பெரிய அஸுரர்களை மறுபடியும் போரில் வென்றேன். போரில் புறங்காட்டாதவர்களான மூன்றுகோடி அஸுரர்களை நான்ஒருவனாகவே போரில்வென்று மறுபடியும் தேவர்களை மகிழச்செய்தேன். பிறகு, இந்த்ரபகவான் எனக்குக் கிரீடத்தைத் தாமாகக்கொடுத்தார். தேவர்களும் பகைவர்களுடையபடைகளைத் தடுக்குந்திறமையுள்ள சங்கத்தைக்கொடுத்தார்கள். நான் கடலுக்குஅக்கரையில் ஹிரண்யபுரத்தில்வாஸஞ்செய்கின்ற அறுபதினாயிரம்அஸுரர்களைக்கொன்று போரில்வெற்றிபெற்றேன். நான் பாபப்பில்லாதவனாக நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவுமிருக்கின்ற பகைவர்களினிடையில் தேரில்நின்றுகொண்டு (பகைவர்களால்) அவமதிக்கமுடியாதவனானேன். எனக்கு மயக்கத்தினால் திசைகளில் தடுமாற்றம்உண்டாகிறதில்லை. அப்பனே! கந்தர்வர்களால் சண்டையில்ஜயிக்கப்பட்டுக் கந்தர்வராஜனால் ஸஹோதரர்களுடன் அபஹரிக்கப்பட்ட துர்யோதனனைப் பதினாலாயிரம்கந்தர்வர்களைக்கொன்று நான் விடுவித்தேன். என்னுடைய இந்தப்பெயர்களை நாள்தோறும்சொல்லுபவனை (துஷ்ட) ப்ராணிகள்பார்க்கமாட்டா. பகைவர்கள் அவனைத் துன்பஞ்செய்யமாட்டார்கள். சிறந்தகைகளுள்ளவனே! (பிறரால்) மிகவும்பொறுக்கமுடியாத என்னுடையவீர்யத்தை இப்பொழுது பார். நீ பயப்படாதே. ஒன்றுசேர்ந்திருக்கின்ற இந்தக்கௌரவர்களை நீ பயமில்லாமல் பார். துர்யோதனனும் கர்ணனும் க்ருபரும் பாட்டனானபீஷ்மரும் த்ரோணபுத்ரரும் த்ரோணரும் நேரில் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே எல்லாக்கௌரவர்களையும் வென்று உன்னுடையபசுக்களை மீட்டுக்கொண்டு வருவேன்" என்றுசொன்னான்.

நாற்பத்துநான்காவது அத்யாயம்.

கோக்ரஹண பர்வம். (தொடர்ச்சி.)

(உத்தரன் ப்ருஹன்னளையை அர்ஜுனனென்றறிந்து முன்பு தான்செய்த பிழைகளைப்பொறுக்கவேண்டியதும், அர்ஜுனன் தான் பேடியுருவடைந்தகாரணத்தைக்கூறி அவனை ஸாரதியாக்கிக்கொண்டு போருக்குப்புறப்பட்டதும்.)

பிறகு, அந்தவிராடபுத்ரன் கைகளைக்குவித்துக்கொண்டு பார்த்தனைப்பார்த்து, "தனஞ்சயரே! பூமிஞ்சயனென்றபெயர்கொண்ட நான் உம்மைவணங்கினேன்" என்று அபிவாதனம்செய்து, "பார்த்தரே! உம்மைப் பாக்யத்தால் நான்பார்க்கிறேன். தனஞ்சயரே! உமக்கு நல்வரவா? சிவந்த கண்களையுடையவரே! சிறந்த கைகளுள்ளவரே! மேலான யானையாசுக்கொப்பானவரே! மனிதருள் மேலானவரே! அறியாமையாலும், அஜாக்ரதையினாலும் உம்மைப்பற்றி (இதற்குமுன்) நான்சொல்லிய என்னுடையபிழைஎல்லாவற்றையும் மனத்தில்வைக்காமல் பொறுத்தருள்வீராக. (ஒருவராலும்) செய்யமுடியாத விசித்ரமானசெய்கையானது உம்மால் முன்பு செய்யப்பட்டகாரணத்தால் என்னுடையபயம்விலகிவிட்டது. உம்மிடத்தில் எனக்கு அதிகமானப்ரீதியும் உண்டாயிருக்கிறது. உமக்கு நான் தாஸனாவேன். என்னைக் கருணையுடன் பாரும். முன்பு உமக்குத் தேர்ப்பாகனாயிருப்பதற்காகச் செய்யப்பட்ட என்னுடைய ப்ரதிஜ்ஞை நிரம்பிவிட்டது. அர்ஜுனரே! எனக்கு மகிழ்ச்சியுமுண்டாகிறது. போரில் அடங்காதமதமுள்ளவரே! 'இவ்வுலகில் தேவேந்த்ரகுமாரனுக்கு மஹாயுத்தத்தில் நான் பாகனாவேன்' என்னும்ப்ரதிஜ்ஞையானது முற்காலத்தில் என்னால்செய்யப்பட்டது. என்னுடைய ப்ரதிஜ்ஞையானது உமக்குத் தேரோட்டுவதென்னும்காரணத்தால் நிறைவேறிவிட்டது. என்மனத்துக்கு நல்லநிலைமையும்உண்டாயிற்று. எனக்குப் பெரும்பேறுகிடைத்தது. வீரரே! நீர் பாகனான என்னோடு பெரியதேரின்மீதேறிப் போரில் துர்யோதனனை வென்று என்னுடைய பசுக்களைத்திருப்பும்;" என்று கூறினான்.

அர்ஜுனன், "அரசகுமார! நான் ப்ரீதியடைந்தேன். உனக்கு இப்பொழுது பயமில்லை. போரில் திறமைவாய்ந்தவனே! போர்க்களத்தில், உன்னுடைய பகைவரனைவரையும் நான் துரத்தப்போகிறேன். நீ ஸுகமுள்ளவனும் பெருந்தன்மையுள்ளவனுமாயிரு. யுத்

தத்தில் பகைவர்களோடு போர்புரிகின்றவனும் அச்சந்தரும்ஒலியை வெளியிடுகின்றவனுமான என்னைப்பார். காண்டீவம்என்கிறவில்லையும் தேவதத்தம்என்கிற சங்கத்தையும் பொன்னாலழகுசெய்த அம்புகளையும் இந்த எல்லா அம்பறாத்தூணிகளையும் என்னுடையதேரில் விரைவாகக்கட்டு. பொன்னால்அலங்கரிக்கப்பட்டிருக்கின்ற ஒருபட்டாக்கத்தியையும் கொண்டுவா. நான் கௌரவர்களோடு போர்புரிந்து உன்பசுக்களை விடுவித்து அரசனை ஸந்தோஷப்படுத்தி மீண்டும் பட்டணத்தில்புகுவேன். [1]மனோவ்யாபாரமாகிற ஆழ்ந்த அகழுள்ளதும் (என்) கைகளாகிறமதில்களும் வாயில்களுமுள்ளதும் [2]த்ரிதண்டங்களாலும் அம்பறாத்தூணிகளாலும் நெருங்கியதும் அநேகம்கொடிகளால்நிறைந்ததும் நாணொலியாகிற பெரியஒலியுள்ளதும் வண்டிஉருளையின்ஓசையாகிற துந்துபிவாத்யமுள்ளதும் அம்புக்கூட்டங்களாகிற மேற்கட்டுகளால் நிறைந்ததும் ஸிம்மநாதங்களாகிற பேரொலியுள்ளதும் என்னால்காக்கப்பட்டதுமான (இந்த) தேரின்நடுவானது உனக்கு நகரமாகப்போகிறது. காண்டீவத்தை வில்லாகக்கொண்டநான் வீற்றிருக்கும்தேரானது போரில் பகைவர்படைகளால் வெல்லஇயலாதது. ஓ! விராடபுத்ர! உன்னிடத்தினின்று பயம் விலகிப்போகட்டும்" என்று கூறினான். உத்தரன், "குந்திபுத்ரரே! அநேகமான வீண்புலம்பலால் யாதுபயன்? மேலான என்மொழியைக்கேளும். இந்த்ரன் நேரில்வந்தாலும் நான் பயப்படேன். யமன் வாயு குபேரன் இவர்களிடத்தினின்றும் நூறுத்ரோணர்களிடத்தினின்றும் நூறு பீஷ்மர்களிடத்தினின்றும் நான் பயப்படேன். யுத்தத்தில் உம்மை உறுதியுடையவரென்றும் அறிகிறேன். போரில் ஸாக்ஷாத் கேசவனுக்கும் இந்த்ரனுக்கும் ஒப்பானவரென்றும் அறிகிறேன். ஆனால், நான் இந்தவிஷயத்தைமாத்ரமே ஆலோசித்துப் புத்திமயக்கத்தை அடைகிறேன். நிச்சயத்தை அடையவில்லை. ஒன்றையும் அறியவில்லை. இவ்வாறு சிறந்தஅங்கங்களும் ரூபமுமுள்ளவரும் லக்ஷணங்களால் (எல்லாரினும்மேலானவரென்று) காட்டப்பட்டவருமான உம்மை எந்தவினையின்பயனாக (இவ்விதமான) பேடிஉருவம்வந்தணுகியது? கந்தர்வராஜனுக்கொப்பான உம்மைப் பேடிஉருவத்தோடு (பூமியில்) உலவுகின்றசூலபாணியாகவும் தேவனானமஹேந்த்ரனாகவும் எண்ணுகிறேன்" என்றுகூறினான்.

1 'அங்கங்களைஉறுதியாகச்செய்தல்' என்பது பழையஉரை.

2 'ஏர்க்காலும் அதன் இருபுறத்திலுமுள்ளகட்டைகளும்' என்பதுபழையஉரை.

அர்ஜுனன், "தமையனருடையகட்டளையினல் ஒருவருஷம் இந்தப்ரம்மசர்யவ்ரதத்தை (நான்) அனுஷ்டிக்கிறேன். இந்தஉண்மையை உனக்கு உரைக்கிறேன். சிறந்தகைகளுள்ளவனே! நான் பேடியல்லேன்; பராதீனன்; தர்மானுஷ்டானமுள்ளவன். உர்வசியினுடைய சாபத்தினல் உண்டான (இந்தப்) பேடிவடிவமானது (என்னை) வந்து அடைந்தது. முற்காலத்தில்நான் மூத்ததமையனருடைய கட்டளையினல் தேவலோகம்சென்றேன். அப்பொழுது நான் ஸுதர்மைஎன்கிற தேவஸபையில் உர்வசியைப்பார்த்தேன். இந்த்ரனுக்கெதிரில் நர்த்தனம்செய்கின்றவளும் சிறந்தரூபமுள்ளவளும் என்னுடையவம்சத்துக்குத் தலைவியுமான அவளை நான் இமைகொட்டாமல் பார்த்தேன். அவள் என்னுடன் கூடவிருப்பங்கொண்டு இரவில் என்படுக்கையைவந்தடைந்தாள். நான் அவளைவணங்கித் தாயைப்போல மர்யாதைசெய்தேன். (அப்பொழுது) அவள் சினந்து என்னை, 'நீ பேடியாகக்கடவாய்' என்றுசபித்தாள். அதைஇந்த்ரன்கேட்டு, என்னைப்பார்த்து, 'பார்த்த! நீ பயப்படவேண்டாம். இந்தப் பேடிவடிவமானது உனக்கு வரப்போகிற அஜ்ஞாதவாஸகாலத்தில் உதவியாகும்' என்று சொன்னன். மழைபொழியச்செய்பவனை இந்த்ரன் இவ்வாறு என்னை அனுக்ரஹித்து, பிறகு, (பூலோகத்துக்கு) அனுப்பினன். தோஷமற்றவனே! நான் இந்தவ்ரதத்தைஅடைந்து அனுபவித்துவிட்டேன். ராஜபுத்ர! நீ என்னை வ்ரதத்தைமுடித்தவனென்றும் (பிரதிஜ்ஞையைத்தாண்டிக்) கரையேறினவனென்றும் அறிந்துகொள்" என்றுகூறினன். உத்தரன், "இப்பொழுது என்னுடையஸஹமானது வீணாகவில்லை. ஆதலால், என்விஷயத்தில் மேலானஅனுக்ரஹம் செய்யப்பட்டது. இப்படிப்பட்ட புருஷச்ரேஷ்டர்கள் பேடிரூபமுள்ளவர்களாக இருக்கமாட்டார்கள். நான் யுத்தத்தில்உதவிபெற்றவனகிறேன்; தேவர்களோடும் போர்புரிவேன். எனக்குண்டான அந்தப்பயம் நீங்கிவிட்டது. நான் என்னசெய்யவேண்டும். எனக்குச் சொல்லும். பகைவர்களை அழிப்பவரே! நான் உம்முடையகுதிரைகளை அடக்கி நடத்துவேன். புருஷச்ரேஷ்டரே! நான் ஸாரத்யத்தில் கறபிக்கப்பட்டுத் தேர்ச்சியடைந்திருக்கிறேன். மனிதரிற்சிறந்தவரே! வாஸுதேவருக்குத் தாருகனும் இந்த்ரனுக்கு மாதலியும்போல, ஸாரத்யத்தில் தேர்ந்தவனென்று நீர் என்னை அறிந்துகொள்ளும். சிறந்தகைகளுள்ளவரே! மேன்மையானதேரில் கட்டப்பட்டவைகளும் போரில்வெல்வதற்கருமையானவைகளும் பலமுடையவைகளும் ச்ரமத்தைப்பொறுக்கும்தன்மையுள்ளவைகளுமான இந்தக்குதிரைகள் உமக்கே தகுதியுள்ளவைகள். எந்தக்குதிரை செல்லும்பொழுது பூமியில்வைக்கப்

பட்ட ஒவ்வொருகாலடியையும் (ஜனங்கள்) பார்க்கமாட்டார்களோ எந்தக்குதிரையானது வலப்பக்கத்துநுகத்தடியைச் சுமக்கிறதோ அப்படிப்பட்ட இந்தக்குதிரையானது ஸுக்ரீவமென்கிறகுதிரைக்கு ஒப்பானது. சுமக்குங்குதிரைகளுள் சிறப்புற்றதும் மங்களகரமும் இடப்பக்கத்துநுகத்தடியை வஹிக்கின்றதுமான இந்தக்குதிரையை வேகத்தினால் மேகபுஷ்பத்துக்கு ஸமானமென்றெண்ணுகிறேன். சிறந்தமுயற்சியுள்ளதும் வலப்பக்கத்தைத்தாங்குகிறதுமான இந்தக்குதிரையானது தேஜஸினால் வலாஹகமென்கிறகுதிரையிலும் சிறந்த வீர்யமுள்ளதென்று எண்ணப்படுகிறது. பொன்மயமான கவசமுள்ளதும் மங்களகரமும் இடப்பக்கத்தைத்தாங்குவதுமான இந்தக்குதிரையை வேகத்தினால் சைப்யமென்கிற குதிரையிலும் அதிகபலமுள்ளதென்று நான் எண்ணுகிறேன். இந்தத்தேரானது போரில் வில்லாளியான உம்மையே தாங்குவதற்குத் தகுதியானது. நீரும் இந்தத்தேரின்மீதேறிக்கொண்டு தேவராஜன் அஸுரர்களோடு போர்புரிவதுபோல எல்லாப்பகைவர்களோடும் நெருங்கிப் போர்புரிவதற்குத் தகுந்தவராயிருக்கிறீர் என்பது என்னுடையஎண்ணம்" என்றுசொன்னான். பிறகு, வீர்யமுள்ளவனும் பகைவர்களை அடிப்பவனுமான அர்ஜுனன் தேரினின்றுகீழேகுதித்துத்தேவர்களைவந்தனஞ்செய்து காண்டீவத்தைக்கையிலெடுத்துக் காந்தியோடுவிளங்கினான். பிறகு, மிக்கதோள்வலியுள்ளவனும் பாண்டுநந்தனனுமான அர்ஜுனன் இரண்டுகைகளிலுமிருந்து சங்குவளைகளைக் கழற்றி அக்கைகளில் துந்துபி வாத்யம்போலமுழங்குகின்ற இரண்டு கைஉறைகளைப்பூட்டி, இந்த்ரனால்கொடுக்கப்பட்ட திவ்யமான இரண்டுகுண்டலங்களையும் எடுத்து அணிந்து, மனத்தைக்கவர்கின்றவையும் எண்ணெய்ப்பசையுள்ளவையும் மென்மையுமான தலைமயிர்களை வெண்மையான வஸ்த்ரத்தினால் தூக்கிக்கட்டிக்கொண்டு, பிறகு, கிழக்குமுகமாகநின்று சுத்தனும் அடக்கப்பட்டமனமுள்ளவனுமாகிச் சிறந்ததேரில் எல்லா அஸ்த்ரங்களையும் த்யானஞ்செய்தான். எல்லா அஸ்த்ரங்களும் கைகளைக்குவித்துக்கொண்டு ராஜபுத்ரனைபார்த்தனைப்பார்த்து, "மிக்ககொடையுள்ளவனே! இந்த்ரநந்தன! இதோ நாங்கள் பணிவிடைசெய்பவராயிருக்கிறோம்" என்றுகூறின. பிறகு, பார்த்தன் (அந்த அஸ்த்ரதேவதைகளை) நமஸ்காரஞ்செய்து கையினால்தொட்டு, "நீங்களெல்லோரும் இந்தஸமயத்தில் என்னுடைய [1]மனத்தில்நிலைபெற்றவர்களாவீர்" என்றுசொன்னான். பிறகு, அஸ்த்ரங்களைக்கையிலேந்தி மிகக்களிப்

---

1 'நினைத்தவுடன்வருகின்றவர்களாக' என்பது பழையஉரை.

புற்ற முகமுள்ளவனானான்; விரைவாகத் காண்டீவம்என்கிறவில்லில் நாணேற்றி (நாண்கயிற்றை) இழுத்துவிட்டான். இழுத்துவிடப்பட்ட அந்தவில்லினுடையபேரொலியானது மலைகளைவலிந்து அடிக்கின்றபெரியமலையினுடையஒலிபோலத் தோன்றியது. பூமியானது இடிமுழக்கமுள்ளதாயிற்று. திக்குக்களில் அதிகமாகக் காற்றுவீசியது. ஆகாயத்தில் பக்ஷிகள் அங்குமிங்கும் ஓடித்திரிந்தன. பெரியமரங்கள் நடுக்கமுற்றன. ராஜரே! கௌரவர்கள் இடியின்முழக்கம்போலவும் கருடனுடைய ஒலிபோலவுமிருக்கின்ற அவ்வொலியைக்கேட்டு மனத்தளர்ச்சியடைந்து பயந்தார்கள். பலசாலியான அர்ஜுனன் சிறந்தவில்லை இருகைகளாலும்இழுத்து, இந்த்ரன் பயங்கரமான இடியினுடையஓசையைப் பூமியில் உண்டுபண்ணுவதுபோல, (பெருத்தசப்தத்தைஉண்டுபண்ணினான்). பெரிதான (அந்த) நாணொலியானது பேரிடியினுடைய பேரொலிபோலாகியது. பகைவர்களைக்கொல்லுகின்றவனான அர்ஜுனன் சத்ருவீரர்களைப் பயமுறச்செய்துகொண்டுதேரில்நின்றான். உத்தரன், "பாண்டவரிற்சிறந்தவரே! நீர் ஒருவராயிருந்துகொண்டு எல்லாச் சஸ்த்ரங்களிலும் அஸ்த்ரங்களிலும் கரைகண்டவர்களும் மஹாரதர்களுமான இந்தப்பலவீரர்களையும் போரில் எவ்வாறு வெல்லப்போகிறீர்? குந்திபுத்ரரே! நீர் துணையற்றவராயிருக்கிறீர். கௌரவர்களோ துணையுள்ளவர்களாயிருக்கிறார்கள். சிறந்தகைகளுள்ளவரே! அதனால் நான் உம்முடையமுன்னிலையிலும் பயந்தவனாயிருக்கிறேன்" என்றுசொன்னான். பார்த்தன் அப்பொழுது சப்திக்கும்படி உரக்கச் சிரித்து (உத்தரனைப்பார்த்து), "ஏ! வீர! நீ பயப்படாதே. கோஷயாத்ரைக்காலத்தில் மிக்கபலசாலிகளான கந்தர்வர்களோடு போர்புரிந்தஎனக்கு அப்பொழுது எவன் துணையானான்? அப்படியே பயங்கரமானதும் தேவர்களாலும் தானவர்களாலும் நிறைந்ததுமான அந்தக் காண்டவவனத்தில் போர்புரிந்த எனக்கு அப்பொழுது எவன்உதவியாயிருந்தான்? தேவராஜனுக்காக நிவாதகவசர்களோடும் மஹாபலசாலிகளான பௌலோமர்களோடும் போர்புரிந்தஎனக்கு அப்பொழுது எவன் ஸஹாயனாக இருந்தான்? அப்பனே! பாஞ்சாலியினுடைய ஸ்வயம்வரத்தில் போர்க்களத்தில் அநேகஅரசர்களோடு போர்புரிந்தஎனக்கு அப்பொழுது எவன் ஸஹாயனாகஇருந்தான்? ஆசார்யரான த்ரோணரையும் சக்ரனையும் குபேரனையும் யமனையும் வருணனையும் அக்னியையும் க்ருபரையும் லக்ஷ்மீபதியான ஸ்ரீக்ருஷ்ணனையும் பிநாகம்என்கிறவில்லைக்கையிற்கொண்ட பரமசிவனையும் அடுத்துப் பிழைக்கின்ற நான் இந்தக்கௌரவர்களோடு ஏன் போர்புரியமாட்டேன்? என்தேரை விரைவாக ஓட்டு. உன்னுடையமனக்கவலையானது விலகட்டும்" என்றுகூறினான்.

நாற்பத்தைந்தாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் தேரில் ஸிம்மக்கொடியைவிலக்கி வானரக் கொடியைநாட்டியதும், தன்சங்கமுழக்கத்தால் பயந்த உத்தரனைத் தேற்றியதும்.)

அர்ஜுனன் உத்தரனைத் தேர்ப்பாகனாகச்செய்துகொண்டு வன்னிமரத்தைவலம்வந்து ஆயுதமனைத்தையும் எடுத்துக்கொண்டு, பிறகு, போருக்குச் செல்லத்தொடங்கி மத்ஸ்யராஜனுடைய ஸிம்மக் கொடியையும் ப்ராதாக்களுடைய ஆயுதங்களையும் வன்னிமரத்தின் நடுவில் வைத்துவிட்டுப புறபபட ஆரம்பித்தான். பிறகு, பொன்மயமானவாலுள்ளதும குரங்கினுருவமுள்ளதும தேவஸம்பந்தம்பெற்றதும் மாயாமயமானதும் (தனக்குத்) தகுந்ததும் விச்வகர்மாவினால் அமைக்கபபெற்றதும அக்னியினுடைய அநுக்ரஹத்தினால் கிடைத்ததுமான த்வஜத்தை மனத்தினால் த்யானஞ்செய்தான். அந்த அக்னி பகவானும் அவனுடையஎண்ணத்தை அறிந்து கொடியில் பூதங்களைச் சேர்த்துவைத்தார். (அவனும) தேரில் வானரக்கொடியைத் தூக்கிநிறுத்திக் காண்டீவம்என்கிறவில்லை நாணொலியிடும்படிசெய்தான். (உடனே அந்தத்)தேரின்மீது விசித்ரமான அங்கங்களும் அதிகபலமும் திவ்யரூபமும மனத்துக்கின்பமுமுள்ளவானரமானது கொடியுடனும் அம்பறாத்தூணிகளுடனும் ஆகாயத்தினின்று விரைவாகக்குதித்தது. பிறகு, குந்தீபுத்ரனும வெள்ளைக்குதிரைகளையுடையவனுமான அந்தப் பீபத்ஸுவானவன் தேரின்மீதேறிக் கத்தியைத்தரித்துக் கையுறை பூண்டு விற்பிடித்துச் சிறந்தவானரக்கொடியைபபெற்று வடக்குத் திசையைநோக்கிச்சென்றான் சத்ருக்களை அடக்குபவனும் பீபத்ஸு என்று ப்ரஸித்திபெற்றவனுமான அந்தத்தனஞ்சயன் படையின்பக்கத்தை அடைந்து சிறந்தஒளியுள்ளதும் சந்த்ரன்போன்றஉருவமுள்ளதும் சிறந்ததுமான தேவதத்தமென்கிறசங்கத்தைஎடுத்து உரக்க முழங்கும்படி ஊதினான். பகைவர்களை அடக்குபவனான இந்த்ரகுமாரன், சந்த்ரனையும் குந்தபுஷ்பத்தையும்போன்ற வெண்ணிறமுடைய சங்கத்தை வாயில்வைத்து, காற்றினால்நிறைந்த இரண்டுகன்னங்களும் நரம்புகளுடையவரிசைகளால் எல்லாப்பக்கத்திலும்நிறைந்த நெற்றியும் நன்றாகச்சிவந்து ஆழ்ந்திருக்கின்ற கண்களும் குறுகியும் பருத்துமிருக்கின்ற கழுத்தும் மிக்கசேர்க்கைபெற்றிருக்கின்ற வயிறும் மார்

பும் உள்ளவனுகிக் குறுக்காகஇருக்கும்முகத்தினுல் விளங்கிக்கொண்டு மூவுலகத்தையும்நடுங்கச்செய்கிறவன்போலத் தனக்குள்ளநிறைந்த திறமையுடன் [1]பத்துக்காற்றுக்களாலும் நன்றாகஊதினுன். இவனுடைய அந்தச்சங்கத்தின்ஓசையானது காளமேகத்தினுடையஒலி போல உரக்கக்கேட்கப்பட்டது. இந்த்ரகுமாரனுன அர்ஜுனன் அந்தச்சங்கத்தினுடையஓசையினுலும் வில்லினுடையஒலியினுலும் வானரத்தினுடையசப்தத்தினுலும் தேர்உருளையினெலியாலும் அசையும் பொருள் (எல்லாவற்றிற்கும்) கொடியஅச்சத்தை உண்டுபண்ணினுன். பார்த்தனுடையசங்கத்தின்ஒலியால் குதிரைகள் (பயந்து) தலைகவிழ்ந்து பூமியில்விழுந்தன. உத்தரனும் மிக்கநடுக்கமுற்றுத் தேரினிடையில்உட்கார்ந்தான். பகைவர்களைவாட்டுபவனுன பார்த்தன் பிறகு தேரினிடையில்இருந்துகொண்டே குதிரைகளைக் கடிவாளங்களால் (இழுத்து) உயரத்தூக்கி மஹாமேருவின் உச்சியில் ஸூர்யன்போலவிளங்கினுன். அர்ஜுனன், சங்கினெலியால் நடுக்கமுற்றவனும் நாணெலியினுல் மூர்ச்சைஅடைந்தவனுமான உத்தரனை நன்குகட்டிக்கொண்டு, "ராஜபுத்ரர்களுள்சிறந்தவனே! நீ பயப்படாதே. பகைவர்களைவாட்டுபவனே! நீ க்ஷத்ரியனல்லனே? புருஷரிற் சிறந்தவனே! பகைவரினிடையில் ஏன் வ்யஸனப்படுகிறுய்? அணிவகுக்கப்பட்டிருக்கின்றபடைகளில் நாள்தோறும் சங்கத்வனிகளும் பேரிவாத்யங்களுடையஓசைகளும் யானைகளுடையபிளிறுதல்களும் நான்குபக்கத்திலும் உன்னுல்கேட்கப்பட்டிருக்கின்றன. அப்படிப்பட்டநீ இந்தச்சங்கொலியினுல் எவ்வாறுபயமுறுத்தப்பட்டாய்? நீ அறிவில்லாதமனிதன்போலப் பயந்து துயரமுற்ற ஸ்வரூபமுள்ளவனுக எப்படி ஆகலாம்?" என்றுகூறினுன்.

உத்தரன், "(அர்ஜுனரே!) அணிவகுக்கப்பட்டபடைகளில் நிலைபெற்றவனுன நான் சங்கொலிகளையும் பேரிவாத்யத்தின்ஓசைகளையும் யானைகளுடையமுழக்கங்களையும் நாள்தோறும் கேட்டிருக்கிறேன். இவ்விதசங்கமுழக்கத்தை இதற்குமுன் நான் ஒருபொழுதும் கேட்டதில்லை. இவ்விதமான கொடியினுருவத்தையும் நான் முன்புபார்த்ததில்லை. (இவ்விதமான) வில்லினுடையஓசையையும் நான் ஓரிடத்திலும் முன்புகேட்டதில்லை. இந்தச்சங்கொலியினுலும் வில்லினுடைய ஓசையினுலும் த்வஜத்தில்வஸிக்கின்றஅமானுஷமான பூதங்களுடையசப்தத்தினுலும் தேருருளையினெலியினுலும் என்மனமானது

---

[1] நாகன், கூர்மன், க்ருகரன், தேவதத்தன், தனஞ்சயன், ப்ராணன், அபானன், வ்யானன், உதானன், ஸமானன் என்பன.

அதிகமயக்கமடைகிறது. எல்லாத்திசைகளும் கலக்கமுற்றிருக்கின்றன. என்மனமானது துன்பமடைகின்றது. கொடியினால்மூடப்பட்ட திக்குகளெல்லாம் எனக்கு விளங்கவில்லை. காண்டீவத்தினுடையஒலியினால் என்காதுகள் இரண்டும் செவிடுபட்டன" என்று கூறினான். மதிமயக்கங்கொண்ட அந்தவிராடகுமாரன் கொடியையும் சங்கத்தையும் வில்லையும் அர்ஜுனனையும் மறுபடியும்மறுபடியும் நன்குபார்த்தான். அந்தப்பார்த்தன் யுத்தத்துக்குரித்தானஸமயத்தைஅடைந்திருக்கின்ற விராடபுத்ரனைப்பார்த்து, "சிறந்தகைகளுள்ளவனே! நீ உறுதியாயிரு. மனத்தில் நல்லநினைவுடனிரு. நான் சங்கத்தைமறுபடியும் ஊதப்போகிறேன். நீ தனியே தேரைஅடைந்து இரண்டு கால்களாலும் (தேர்த்தட்டை) மிதித்துக்கொண்டு குதிரைக்கடிவாளங்களை உறுதியாகப் பிடித்து இழுத்துக்கொள்" என்றான். அப்பொழுது சிறந்தகைகளுள்ளவனும் பகைவர்களைத்தபிக்கச்செய்பவனுமான ஸவ்யஸாசியானவன் இவ்வாறுசொல்லிவிட்டு, பிறகு, மலைகளையும் மலைக்குகைகளையும் திக்குக்களிலுள்ளபர்வதங்களையும் பிளக்கிறவன்போலச் சங்கத்தை ஊதினான்; நாணொசையையும் கையுறையின் ஓசையையும் உண்டுபண்ணி ப்ராணிகளை மயக்கினான். உத்தரனும் பதுங்கிக்கொண்டு தேரின்நடுவில் உட்கார்ந்தான். மறுபடியும் தனஞ்சயன் அவனை ஸமாதானப்படுத்தினான். அந்தஅர்ஜுனனுடையசங்கத்வனியாலும் தேருருளையின் ஒலியாலும் காண்டீவத்தினுடைய ஓசையாலும் பூமிநடுங்கிற்று.

நாற்பத்தாறுவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(த்ரோணர், அர்ஜுனனுடையசங்கத்வனிமுதலியவற்றால்அவனை நிச்சயித்து துர்யோதனனுக்கு அவ்விஷயத்தைத்தெரிவித்துத் துர்நிமித்தங்களையுங்காட்டியது.)

பிறகு, எல்லாவில்லாளிகளுள்ளும்சிறந்தவரும் பகைவர்களை அடக்குகிறவரும் பாத்வாஜருடையபுத்ரருமான த்ரோணர், ராஜாவானதுர்யோதனனைப்பார்த்து, "(துர்யோதன!) தேரின்பேரொலி உண்டாகின்றது. சங்கமும் உரக்கஊதப்படுகிறது. பூமியும் நடுங்குகிறது. ஆதலால், இவன் ஸவ்யஸாசியைத்தவிரவேறுஒருவனுமல்லன். அரசனே! இப்பொழுது நமக்குக் கேட்டை விளைவிக்கக்கூடிய இவ்விதமான துர்நிமித்தம் தோன்றுகிறது. பகைவரைவாட்டுபவனே!

நமது ஸேனையில் வெற்றியை நான் காணவில்லை. சஸ்த்ரங்கள் விளங்கவில்லை. வாஹனங்களும் மகிழ்வில்லை. நன்றாகமூட்டப்பட்டிருக்கிற அக்னிகளும் ப்ரகாசிக்கவில்லை. அவைகள் மங்களகரமாகவுமில்லை. நமக்கு (முன்னிலையில்) ம்ருகங்கள் எல்லாம் கொடியஉருவமுள்ளவைகளாக ஸூர்யனுக்கு எதிராகக் கத்துகின்றன. வலப்புறமாகச்செல்லுகின்றபக்ஷிகளும் பெரும்பயத்தைத்தெரிவிக்கின்றன. இதோ நரியானது ஊளையிட்டுக்கொண்டு ஸேனையின்மத்தியில் ஓடுகிறது. காடைகள் பெரியஅச்சத்தைத்தெரிவித்துக்கொண்டு ஆகாசத்தில் கத்துகின்றன. உங்களுடைய (தேஹத்திலிருக்கும்) ரோமங்களைச் சிலிர்த்திருக்கின்றனபோலக் காண்கிறேன். யானைகள் சுறுசுறுப்பில்லாதஅங்கங்களுள்ளவைகளாகவும் அதிகத்துன்பத்தைஅடைந்தவைகளாகவும் அடிக்கடி கொட்டாவிவிடுகின்றன; ஸ்தம்பித்தும்நிற்கின்றன. குதிரைகள் கண்ணீர்களை வடிக்கின்றன. எப்பொழுதும் நீர்விடுவதுடன் அடிக்கடி மலத்தையுங்கழிக்கின்றன. பூமியானது ரக்தத்தால்நனைந்திருக்கிறது. திசைகளெல்லாம் மிகப்புகைவனவாயிருக்கின்றன. ஸூர்யனும் ப்ரகாசிக்கவில்லை; அதிகமானபயத்தைத் தெரிவிக்கிறான். யானைகளும் மிகப்பயப்படுகின்றன. யுத்தவீரர்களும் அதிகமாகப்பயந்துவிட்டார்கள். உங்களுடையபடை அவமானத்தை அடைந்துவிட்டது. ஒருவனுவது யுத்தஞ்செய்வதற்கு விரும்பவில்லை. அந்தயுத்தவீரர்களனைவரும், துக்கம்நிறைந்தமுகமுள்ளவர்களும் ப்ரஜ்ஞையற்றவர்களுமாகி அடிக்கடி தெற்குத்திக்கைப்பார்க்கின்றார்கள். ம்ருகங்களும் பறவைகளும் நமக்கு இடப்பக்கமாகவே செல்லுகின்றன. நன்றாகவாசிக்கப்பட்ட வாத்யமுழக்கங்களும் கம்பீரமாக ஒலிக்கவில்லை. கொடிமரங்களுடையநுனிகளில் காக்கைகள் வந்தடைகின்றன. அது மங்களமன்று. மேகத்தினுடையஒலிபோலக் கம்பீரமானதேரோசையானது விரைவில் நீண்டதாகக் கேட்கப்படுகிறது. தனஞ்சயனைத்தவிர இவன் வேறொருவனுமல்லன். இந்த்ரகுமாரனுன அர்ஜுனனைத் தாங்கிவருகின்றதும் கனைக்கின்றதுமான குதிரைகளின்ஒலியும் தேரிலுள்ளகுரங்கின் திவ்யமான பெரியஓசையும் கேட்கப்படுகின்றன. பார்த்தனுடையசங்கமுழக்கத்தினுல் என்னுடைய இரண்டுகாதுகளும் செவிடாயின. எல்லாப்படைகளும் அதிகப்பயமடைந்துவிட்டன. இவன் தனஞ்சயனைத்தவிர வேறொருவனுமல்லன். நாமனைவரும் பகைவர்களைஅடக்கும்அரசனுன துர்யோதனனை முன்னிட்டுக்கொண்டு பசுக்களை ஓட்டிவிட்டுப் படையை மூன்றாகப்பங்கிட்டுக் கொடிகளையும் உயரத்தூக்கிநிறுத்தி வரிசைப்

படுத்தப்பட்டஸேனையுடன் பகைவர்களை அடிப்பதில் முயற்சியுமுள்ள வர்களாயிருப்போம். இந்தத்தனஞ்சயன் கூர்மையுள்ள அம்புகளால் இந்தஸேனையை வருந்தச்செய்து எல்லா அரசர்களுடையமுடியிலும் இடக்காலைவைக்கப்போகிறான். இந்தப்பீபத்ஸுவானவன் தேவாஸுரர்களாலும் ஜயிக்கமுடியாதவன். திக்குக்களில் [1]குல்மங்கள் ஏற்படுத்தப்படலாம். நாம் முயற்சியுள்ளவர்களாக அர்ஜுனனுடன் போர்புரிவோம்" என்றுகூறினர்.

நாற்பத்தேழாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(துர்யோதனன் த்ரோணரை அவமதித்து ஸேனையை உத்ஸாஹப்படுத்தியது.)

பிறகு, துர்யோதனராஜன் போர்க்களத்தில் பீஷ்மரையும் ரதிகர்களுள்சிறந்தவரான த்ரோணரையும் மிகுந்தபலசாலியான க்ருபரையும்பார்த்து, "ஆசார்யர்களே! இந்தவிஷயமானது என்னாலும் கர்ணனாலும் அடிக்கடி சொல்லப்பட்டிருக்கின்றது. பின்னும்சொல்லுகிறேன். நான் அதைச்சொல்லி த்ருப்தி அடையவில்லை. தோல்வியை அடைவிக்கப்பட்டவர்களான அந்தப்பாண்டவர்கள் காட்டில் பன்னிரண்டுவர்ஷமும் தேசத்தில் (ஒருவராலும்) அறியப்படாமல் (ஒருவர்ஷமும்) வஸிக்கவேண்டுமென்பதே நம்முடையப்ரதிஜ்ஞையன்றோ? அவர்களுக்கு அந்தப்பதின்மூன்றாவதுவர்ஷம் முழுதும் நிறைவேறவில்லை. அஜ்ஞாதவாஸஸமயத்தில் பீபத்ஸுவானவன் நம்மால் தெரிந்துகொள்ளப்பட்டான். அஜ்ஞாதவாஸகாலமானது நிறைவேறாமலிருக்கையில் பீபத்ஸுவானவன் (இங்கு) வருவனேயாகில் மறுபடியும் பாண்டவர்கள் பன்னிரண்டுவர்ஷகாலம் வனவாஸஞ்செய்யவேண்டும். அவர்கள்தாம் பேராசையினால் (அந்தப்ரதிஜ்ஞாகாலத்தை) அறியவில்லையோ, நமக்குத்தான் மோஹம்வந்ததோ. இவர்களுக்கேற்பட்ட (ப்ரதிஜ்ஞாகாலத்தினுடைய) குறைவையும் மிகுதியையும் பீஷ்மர் அறியத்தக்கவர். கார்யங்கள் இரண்டுபடுங்காலத்தில் எப்பொழுதும் ஸந்தேஹமுண்டாகின்றது. ஒருவிதமாக எண்ணப்பட்டிருக்கின்றகார்யம் வேறுவிதமாகமுடிகிறது. [2]உத்தரனைத்தேடுகின்றவர்க

---

[1] பிறர்களால்நுழையமுடியாத படைகளின்கூட்டம்.

[2] 'உத்தரகோக்ரஹணத்தை,' என்பது பழையஉரை.

ரும் மாத்ஸ்யர்களுடையஸேனையோடு யுத்தம்செய்ய விருப்பமுள்ள வர்களுமான நமக்குப் பீபத்ஸுவானவன் வந்துவிடுவனேயாகில் இதைக்காட்டிலும் வேறு என்னகார்யம் இருக்கின்றது? பாண்டவர் களைத்தேடுவதானது த்ரிகர்த்தர்களுடையகார்யமென்று ஏற்படுத்தப் பட்டது. ஏனென்றால், ஸுசர்மாவானவன் மாத்ஸ்யனால் முன்பு அப காரங்களால் துன்பஞ்செய்யப்பட்டிருக்கிறான். பயமடைந்தவர்களும் நடுக்கமுற்றவர்களும் காவலை விரும்புகின்றவர்களும் அபயதானத்தை வேண்டுகின்றவர்களுமான அவர்களுக்கு நம்மால் அப்பொழுது அபய மானது ப்ரதிஜ்ஞைசெய்யப்பட்டிருக்கிறது. அவர்கள் தங்களால் முதலில் மாத்ஸ்யர்களுடைய பெரியபசுக்கூட்டமானது [1]அஷ்டமி தினத்தில் பிற்பகலில் கைப்பற்றத்தக்கதென்று நம்மிடத்தில் நிச்ச யம்செய்திருக்கிறார்கள். மத்ஸ்யராஜன் பசுக்களிருக்குமிடத்தைக் குறித்து (போர்புரிய) ச்சென்றபிறகு [2]நவமிதினத்தில் ஸூர்யோதய காலத்தில் (மற்றொருபக்கத்தில்) இந்தப்பசுக்கள் நம்மால் பிடிக்கத் தக்கவைகளென்று நிச்சயமானஆலோசனையானது, பாண்டவர்களை அறியும்விஷயத்தில் நம்மனைவர்களாலும் ஒருவரோடொருவர் கலந்து ஹஸ்திநபட்டணத்தில் (முந்தியே) செய்யப்பட்டிருக்கிறது. அவர் கள் பசுக்களை ஓட்டிக்கொண்டுபோனாலும் போவார்கள்; அல்லது, தோல்வியடைவிக்கப்படுவார்கள்; அல்லது, நம்மைவஞ்சித்துவிட்டு மாத்ஸ்யனுடன் சேர்க்கைபெற்றாலும் பெறுவார்கள். அல்லது இந்த மத்ஸ்யராஜன் தேசத்துஜனங்களோடு அந்தப்பாண்டவர்களையுங்கூட் டிக்கொண்டு எல்லாவிதத்தினாலும் ஸேனையுடன்சேர்ந்து நம்முடன் போர்புரியவிரும்பினாலும் விரும்புவான். அவர்களுள் மஹாவீர்ய முள்ள தலைவனானஒருவனே நம்மைவெல்வதற்காகத் தனித்து இங்கு வந்திருக்கலாம். அல்லது, மத்ஸ்யராஜனே நேரில்வந்திருக்கலாம். (இங்கு) வந்திருக்குமிவன் மதஸ்யராஜனாயிருந்தாலும் அர்ஜுனனா யிருந்தாலும் நாமனைவரும் போர்புரியவேண்டும். இவ்விதம் நாம் ப்ரதிஜ்ஞைசெய்திருக்கிறோம். அவ்வாறிருக்க இந்தத்தனஞ்சயன் (யுத்தத்திற்கு) வந்திருக்கும்பொழுது சிறந்தரதிகர்களும் பயபரப் புள்ளமனமுள்ளவர்களுமான பீஷ்மர், த்ரோணர், க்ருபர், கர்ணன், விகர்ணன், த்ரோணபுத்ரர் இவர்களெல்லோரும் ஏன் தேர்களில் (சும்மா) நிற்கின்றார்கள். போரைக்காட்டிலும் வேறுகார்யத்தில் பெரு மையில்லை. அவ்விதமாக மனத்தை ஸாவதானமுள்ளதாகச் செய்

1 'ஸப்தமிதினத்தில்' என்பது வேறுபாடம்.

2 'அஷ்டமிதினத்தில்' என்பது வேறுபாடம்.

யுங்கள். எல்லாஉலகத்தாரோடுமாவது இந்த்ரனோடுகூடிய தேவர்களோடாவது வஜ்ராயுதத்தைக்கையிலேந்திய இந்த்ரனோடாவது யமனோடாவது நமக்கு யுத்தம்நேரட்டும். யுத்தத்தில் பசுக்கூட்டத்தை மீட்காமல் எவன் ஹஸ்தினபட்டணம்செல்லுவான்? (என்னுடைய) பாணங்களால் அடித்துத்தூரத்தப்பட்டு நுழையமுடியாதகானகத்தில் முறியடிக்கப்பட்டகாலாட்களுள் குதிரைகள்மீது [1]வீற்றிருந்தாலும் எவன்ஜீவித்திருப்பான்? ஆசார்யனைப்பிற்படுத்தி அவ்விதமாக நீதியானது (உங்களால்) அனுஷ்டிக்கப்படலாம். ஏனெனில், இவர் அந்தப்பாண்டவர்களுடைய கருத்தை [2]அறிவார்; அதனால் நம்மைப்பயமுறுத்துகிறார். மேலும், அர்ஜுனனிடத்தில் (இவருக்கு) மிக்க அன்பிருப்பதாக நான் காண்கிறேன். அவ்வாறிருப்பதால், (இங்கு) வருகின்ற பீபத்ஸுவைப்பார்த்துப் புகழ்கிறார். நம்முடையஸேனை சிதறாதபடி நீதிசெலுத்தவேண்டும். நமது ஸேனையானது காட்டில் இந்தத்துன்பநிலைமையில் தலைவனற்றுப் பகைவருக்குவசப்பட்டுத் தடுமாறுவண்ணம் நீதிசெலுத்தப்படவேண்டும். குதிரைகளுடையகனைத்தலைக்கேட்டுப் பகைவனிடத்தில் என்னபுகழ்ச்சியுண்டாகக்கூடும்? குதிரைகள் நின்றுகொண்டிருந்தாலும் சென்றுகொண்டிருந்தாலும் எப்பொழுதும் கனைக்கின்றன. காற்றுக்கள் எப்பொழுதும் வீசுகின்றன. இந்த்ரன் எப்பொழுதும் மழையைப்பொழிகிறான், அப்படியே மேகத்தினுடைய இடிமுழக்கமானது பலதடவை கேட்கப்படுகிறது. (அவ்வாறிருக்க, எதற்காக) நீர் பாண்டவர்களிடமிருந்து எல்லாஜனங்களையும் பயமடையச்செய்துகொண்டு படையினத்தின்முன்னிலையிலும் பொய்யாகப் பலவாறுபேசுகிறீர்? குதிரைகளைத்தேடுகிறவர்கள், அவற்றையே அடையவிரும்புதலால் எல்லாவொலிகளையும் அக்குதிரையொலியாகவே கேட்பதுபோல, உமது இந்தச்செய்கையும் இருக்கிறது. பார்த்தனுக்கு இவ்விடத்தில் என்னகாரியம்? பகைவரிடத்துள்ளவிருப்பையும் எங்களிடத்துள்ள வெறுப்பையும் கோபத்தையும்தவிர எதனால் அவன்புகழப்படுகிறான்? ஆசார்யர்கள் கருணையுள்ளவர்கள்; கற்றறிந்தவர்கள்; [3]அபாயத்தை ஊஹிப்பவர்கள். இவர்கள் கொடிய பெரியயுத்தத்தில் எவ்விதத்தாலும் கேட்கத்தக்கவர்களல்லர். உப்பரிகைகளிலும் விசித்ரமான அன்னபானங்கள்நடந்துவரும் கோஷ்டிகளிலும் விசித்ரமானகதைகளைச்சொல்லும் பண்டிதர்கள் அப்படிப்பட்டகதைகளைச்சொல்வதி

---

1 வேறுபாடம். 2 வேறுபாடம்.

3 ‘அஹிம்ஸையில் நோக்கமுள்ளவர்கள்’ என்பது வேறுபாடம்.

லேயே ஸமர்த்தர்கள். ஜனங்களுடையஸபையில் வியப்பைத்தரும் அநேககார்யங்களைச்செய்வதிலும் அம்புகளையும் அஸ்த்ரங்களையும் வில்லில்தொடுப்பதிலும் பண்டிதர்கள் அவ்விதமான கார்யங்களி லேயே வல்லமையுடையவர்கள். பிறருடையகுற்றங்களை அறிவதிலும் மனிதர் ஒழுக்கங்களிலுள்ளகுற்றங்களை அறிவதிலும் நன்றாகப் பக் வம்செய்யப்பட்டிருக்கின்ற அன்னங்களில் குற்றம்கூறுவதிலும் பண் டிதர்கள் அந்தக்கார்யங்களிலேயே திறமையுடையவர்கள். பகைவர்க ளுடையகுணங்களைச்சொல்வதையே இயற்கையாகக்கொண்டபண்டி தர்களைப் பின்புறத்தில்வைத்துவிட்டு, பகைவனைக்கொல்வதற்கேற்ற தான நீதியை அனுஷ்டிக்கவேண்டும். இந்தப்பசுக்களும் போகட் டும். தாமதமின்றிப் படையை அணிவகுங்கள். பகைவர்களோடு நாம் போர்புரியுமிடத்தில் தகுந்தரக்ஷகர்கள் ஏற்படுத்தப்படவேண் டும்" என்று கூறினான்.

நாற்பத்தெட்டாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(கர்ணன் தன்னைப்புகழ்ந்து அர்ஜுனனை அவமதித்துப் பொய்யான ப்ரதிஜ்ஞைசெய்தது.)

கர்ணன், "(இங்கிருக்கின்ற) சிரஞ்சீவிகளான அனைவரையும், பயந்தவர்களும் நடுக்கமுற்றவர்களும் போரில் மனத்தைச்செலுத் தாதவர்களும் நிலைதவறினவர்களுமாக நான் காண்கிறேன். (இப் பொழுது இங்கு) வந்திருக்குமிவன் ஜமதக்னியின்குமாரனான பர சுராமனானாலும் அல்லது பகைவர்பட்டணங்களை அழிக்கிறவனான இந்த்ரனானாலும், அல்லது வாஸுதேவனோடுகூடின பீபத்ஸுவானா லும் கரையானது கடலைத்தடுப்பதுபோல நான் இவனைத்தடுப்பேன். பொன்னாலாகியகட்டுகளும் பளபளப்பான முனையுமுள்ளவைகளும் கைதேர்ந்த என்னால்தொடுக்கப்படுமவைகளும் பார்த்தனுடைய உயி ரைவாங்கும் திறமையுடையவைகளுமான அம்புகள் ஸூர்யனைமறைக் கட்டும். என் வில்லினின்றுவிடுபட்டவைகளும் அழுந்திய கணுக் களுள்ளவைகளும் ஸர்ப்பங்கள்போல் சீறிக்கொண்டுசெல்லுகின்ற வைகளுமான பாணங்களுக்கு நிவ்ருத்திகிடையாது. அம்புகளைக் கணுக்களில்வைத்து (இழுத்துவிடுகையில்) நாண்கயிற்றினால் நன்றாக அடிக்கப்படுகிற இருகையுறைகளின்ஒலியும் அடிக்கப்படும் இரண்டு

முரசின் ஒலிபோலக் [1]கேட்கப்படுகிறது. (என்னுடைய) பாணங்களால் ஒவ்வொன்றாகவும் நான்காகவும் ஐந்தாகவும் ஓரிடத்தில் அறுபதாகவும் ஓரிடத்தில் நூறாகவும் [2]அடிக்கப்படப்போகின்ற மாத்ஸ்யர்களுடைய தேர்களைப்பாருங்கள். என்கையினின்று விடுபட்டவைகளும் எண்ணெயிட்டுத்தீட்டப்பட்டவைகளும் இறகுள்ளவைகளுமான அம்புகளால் ஆகாயமானது மின்மினிப்பூச்சிகளோடுகூடியது போல விளங்கட்டும். அந்த அர்ஜுனனுடையவானரமானது என்னால் பல்லம்என்கிறபாணத்தால் அடிக்கப்பட்டுப் பயங்கரமானசப்தங்களை வெளியிட்டுக்கொண்டு கொடியின் நுனியிலிருந்து இப்பொழுதே பூமியில்விழட்டும். பகைவர் தேரிலிருப்பவைகளும் என்னால் எதிர்த்து அடிக்கப்பட்டுத் திக்குக்களில் ஓடுகின்றவைகளுமான பூதங்களுடைய ஒலியானது ஆகாயத்தைஅளாவட்டும். கோபங்கொண்டவனான என்னால் விடப்பட்ட அஸ்த்ரமானது இந்தப்பூமியையும் கொளுத்தும். போர்முகத்தில் ஒருவனாயிருக்கின்ற பார்த்தனைக் கொளுத்துவதில் ஐயமென்ன? பதின்மூன்றுவர்ஷகாலம் மனத்தை அடக்கியிருப்பவனும் யுத்தத்தில் மிக்கபற்றுள்ளவனுமான பீபத்ஸுவானவன் என்னிடத்தில் (தன்வலியைக்) காண்பிக்கப்போகிறான். குந்திபுத்ரனான அர்ஜுனன் குணசாலியான ப்ராம்மணன்போல (பாணதானங்களுக்கு) ப்பாத்ரனாயிருக்கிறான். அவன் என்னால்கொடுக்கப்படும்சாமாலையை ஸ்வதையைப்போலப் பெற்றுக்கொள்ளட்டும். பெரிய வில்லாளியான இந்த அர்ஜுனனும் மூவுலகங்களிலும் ப்ரஸித்திபெற்றவன். நானும் புருஷச்ரேஷ்டனான அர்ஜுனனிலும் ஒருபொழுதும் குறைந்தவனல்லேன். என்னுடைய கையினின்றுவிடப்பட்டவைகளும் அழுந்திய கணுக்களுள்ளவைகளும் அக்னிஜ்வாலைபோன்ற ஒளியுள்ளவைகளும் (பகைவர்களைக்குறித்துச்) செல்லுகின்றவைகளுமான பாணங்களுக்குத் திரும்பிவருதல்இல்லை. இங்குமங்குமாக விடப்பட்டவைகளும் அழுந்தியகணுக்களுள்ளவைகளுமான அம்புகளுடைய நெருங்கின ஒலியானது பாடுகின்ற வண்டுகளுடைய ஒலிபோலக்கேட்கப்படட்டும். வானத்திடையில் உலவுகின்றவைகளும் கழுகிறகுகள் பூட்டப்பட்டவைகளும் சாணையில் தீட்டப்பட்டவைகளுமான அம்புகளால் இப்பொழுது விட்டில்பூச்சிகளுடைய நிழல்போன்றநிழலானது காணப்படட்டும். இப்பொழுது என்னுடையவில்லினால் விடப்பட்டவைகளும் கூர்மையுள்ளவைகளும் உயிர்நிலைகளில் செல்லுகின்றவை

[1] 'கேட்கப்படலாம்' என்பது வேறுபாடம்.

[2] ஒருசொல் விடப்பட்டது.

களுமான அம்புகள் புற்றில் பாம்புகள் நுழைவதுபோல அர்ஜுன னுடையதேஹத்தில் நுழையட்டும். (அடியில்கட்டப்பட்டிருக்கிற) மயில்தோகைகளால் விளங்குகின்றவைகளும் [1]ஒன்றின்பின் ஒன்றாகத் தொடர்ந்துசெல்லுகின்றமயில்கள்போன்றவைகளும் தொடர்ச்சியாக விழுந்துகொண்டிருக்கின்றவைகளுமான அம்புகளுடையஒலியானது (மாலைபோல இடைவெளியில்லாமல்தொடர்ந்து) செல்லுகின்ற பக்ஷி களுடையசப்தம்போல (அனைவராலும் கேட்கப்படலாம்.) 'யுத்தத் தில் அர்ஜுனனைக்கொன்று (உனக்கு ஜயத்தைக் கொடுப்பேன்' என்று) அக்காலத்தில் துர்யோதனனிடத்தில் என்னால் செய்யப்பட்ட ப்ரதிஜ்ஞையாகியகடனிலிருந்து இப்பொழுது நான் விடுபடப்போகி றேன். இந்த்ரனுடைய வஜ்ராயுதம்போன்ற ஸ்பர்சமுள்ளவனும் மஹேந்த்ரனுக்கொப்பான வன்மையுள்ளவனுமான பார்த்தனைக் கொள்ளிக்கட்டைகளால் யானையைத் துன்புறுத்துவதுபோல நான் துன்புறுத்தப்போகிறேன். அம்புக்கூட்டங்களாகிற மிக்க ஜ்வாலை யுள்ளதும் கத்திகளையும் சக்திகளையும் கதாயுதங்களையும் விறகாகக் கொண்டதும் படைகளை எரிக்கின்றதுமான அர்ஜுனனாகிறநெருப் பைத் தணிக்கப்போகிறேன். உலகத்திலுள்ள ரதிகர்களைக் காட்டிலும் அதிரதனும் படையாளிகளான எல்லாவீரர்களுள்ளும் சிறந்தவனும் பரவசனாயிருக்கின்றவனுமான பார்த்தனை, கருடன் பாம்பைப்பிடிப் பதுபோல (நான்) கவர்ந்துகொள்ளப்போகிறேன். (மேனியில்வந்து) விழுகின்றவைகளும் பற்பலவிதமுமான என்னுடையக்ஷுத்ரகங்களா லும் பல்லங்களாலும் மதிமயக்கமுற்ற குந்திபுத்ரன் செய்யவேண்டிய விஷயத்தை அறியாமற்போகட்டும். நான் இப்பொழுது அம்புகளால் பார்த்தனுடையதலையை அறுத்துத் துர்யோதனனுடையமனத்தில் நெடுங்காலமாயிருக்கின்றதுக்கத்தை வேரோடுகளையப்போகிறேன். இப்பொழுது என்வில்லினின்று விடுபட்டவைகளும் அழுந்தியகணு க்களுள்ளவைகளுமான பல்லங்களால் கொல்லப்பட்ட குதிரைகளை யுடையவனும் தேரையிழந்தவனும் ஆண்மையில் நிலைத்திருப்பவனும் பாம்புபோலப் பெருமூச்சுவிடுகிறவனுமான பார்த்தனைக் கௌரவர் கள் பார்க்கட்டும். ரிஷிச்ரேஷ்டரான ஜமதக்னியின்குமாரரிடமிரு ந்து, என்னால் திவ்யாஸ்த்ரம் அடையப்பட்டிருக்கிறது. அதையும் வீர் யத்தையும் ஆதாரமாகக்கொண்டு இந்த்ரனோடும் போர்புரிவேன். கொடிநுனியிலிருக்கும் வானரமானது என்னால் பல்லத்தினால் அடி க்கப்பட்டு அச்சத்தைச்செய்யும்ஓசைகளை வெளியிட்டுக்கொண்டு இப்

[1] சிறகுமூளைத்தமயில்கள்போன்றவைகளும் என்றும் பொருளுண்டு.

பொழுதே பூமியில்விழட்டும். பகைவரைவாட்டுபவர்களான கௌரவர்கள் பசுக்களைப்பிடித்துக்கொண்டு இஷ்டப்படி போகட்டும். அல்லது தேர்களிலிருந்துகொண்டு என்னுடையபோரைப் பார்க்கட்டும்" என்றுகூறினன்.

நாற்பத்தோன்பதாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(க்ருபர், அர்ஜுனனைப்புகழ்ந்து கர்ணனையிகழ்ந்து அர்ஜுனன் ஒருவராலும் தனித்து வெல்லமுடியாதவனுதலின் எல்லோருஞ்சேர்ந்து படையெடுத்துச்செல்லும்படி நிச்சயித்தது.)

அந்தக்கர்ணனுடைய அவ்விதமானவார்த்தையைக்கேட்டு நீதிநூல்களில்வல்லவரும்குருவீரர்களுக்கு ஆசார்யரும் சரத்வானுடைய புத்ரருமான க்ருபர், (கர்ணனைப்பார்த்து,) "ஏ! ராதேய! எப்பொழுதுமே உனக்குப் போரில் மிக்க கொடியபுத்தியிருக்கிறது. அர்த்தங்களுடையஸ்வபாவத்தை நீ அறியவில்லை. (அவற்றின்) பயனையும் நீ கவனிக்கவில்லை. சாஸ்த்ரங்களை ஆதாரமாகக்கொண்டு ஆலோசிக்கப்பட்டநீதிகள் அநேகம்உண்டு. அவற்றுள், யுத்தமானது கொடும்பாவமென்று முற்காலத்துவழக்கத்தை அறிந்தவர்கள் தெரிவிக்கின்றார்கள். தேசகாலத்தோடுகூடியயுத்தம் வெற்றியைக்கொடுக்கும். அதுவே காலவேறுபாட்டோடுகூடியிருந்தால் இவ்வுலகில் கேட்டைவிளைவிக்கும். தகுந்தஇடத்திலும் தகுந்தகாலத்திலும் வெளியிடப்பட்டவிக்ரமமானது மங்களத்தின்பொருட்டாகும். (தேசகாலங்களுடைய) ஒற்றுமையினுல் மேன்மேலும் கார்யம்செய்யப்படவேண்டும். [1]ரதஞ்செய்பவனுடைய அதிகச்ரமத்தினுல் ஸாதிக்கத்தக்ககார்யத்தைப் பண்டிதர்கள், (வெற்றியைக்கொடுக்கக்கூடியதென்று) நம்பமாட்டார்களல்லரோ. (தற்காலநிலைமையை) ஆலோசிக்குங்கால் பார்த்தனோடு போர்புரிவதற்காக நெருங்குவது நமக்குத் தகுந்ததன்று. ஏனெனில், (இந்தஅர்ஜுனன்) ஒருவனுகவேபோரில் பகைவர்களைஎதிர்த்து அடிப்பதற்கு வல்லமைபொருந்தியவன்.

---

1 "பண்டிதர்கள், 'என்னுல்செய்யப்பட்ட இந்தரதம் மிகவும் உறுதியானது. இதனுல் தேவர்களையும் ஜயிக்கலாம்' என்னும் ரதகாரனுடையவார்த்தையைநம்பி, தேசகாலங்களைக்கவனியாமல் போருக்கு முயற்சியார்கள். அதுபோலஉனதுவார்த்தையைநம்பி நாங்கள் எவ்வாறு யுத்தம்செய்யலாம்?" என்பது பழையஉரை.

(இவன்) ஒருவனாகவே (முன்பு) கௌரவர்களைக் காப்பாற்றினான்; ஒருவனாகவே அக்னியை த்ருப்திஅடையும்படிசெய்தான்; ஒருவனாகவே ஐந்துவர்ஷகாலம் ப்ரம்மசர்யத்தை அனுஷ்டித்தான்; ஒருவனாகவே ஸுபத்ரையை (ரதத்தின்) மீதேற்றிவைத்துக்கொண்டு கண்ணனை த்வந்தவயுத்தத்துக்கழைத்தான்; (ஒருவனாகவே) வனவாஸஸமயத்தில் ஸைந்தவனை ஜயித்துப் பிறகு க்ருஷ்ணையை மீட்டுக்கொண்டுவந்தான்; ஒருவனாகவே ஐந்துவர்ஷகாலம் இந்த்ரனிடத்திலிருந்து அஸ்த்ரங்களைக்கற்றுக்கொண்டான்; ஒருவனாகவே பகைவர்களைவென்று கௌரவர்களுக்குப் புகழைஉண்டுபண்ணினான். பகைவரை அடக்குபவனான அர்ஜுனன் ஒருவனாகவே கந்தர்வராஜாவான சித்ரஸேனனையும் எவ்விதத்தாலும் ஜயிக்கமுடியாத அவனுடைய ஸேனையையும் போரில் பலத்தினால் வென்றான். (இந்தப்) பார்த்தன் ஸ்வயம்வரத்தில் க்ஷத்ரியர்களை ஜயித்துச் செல்வமுள்ளபாஞ்சாலியை அடைந்து அவளை எடுத்துக்கொண்டு சென்றான். நீ அப்பொழுது எவ்விடம்சென்றிருந்தாய்? அவ்வாறே, தேவர்களாலும் கொல்லத்தகாதவர்களான நிவாதகவசர்களும் காலகேயர்களென்கிறஅஸுரர்களும் ஒருவனாலேயே யுத்தத்தில் (அடித்துத்) தள்ளப்பட்டார்கள். ஏ! கர்ண! அந்தப்பாண்டவர்களுள் ஒவ்வொருவராலும் மன்னர்கள் ஸ்வாதீனப்படுத்தப்பட்டதுபோல நீஒருவனாக இவ்வுலகில் முன்பு எந்தக்கார்யத்தைச் செய்திருக்கிறாய்? இந்த்ரனும் யுத்தத்தில் பார்த்தனோடு போர்புரிவதற்குத் தகுந்தவனல்லன். அந்தப்பார்த்தனோடு யுத்தம்செய்யவிரும்புகிறவனுக்கு மருந்துசெய்யத்தக்கது. நீ கோபங்கொண்டிருக்கின்ற பாம்பின்பல்லை வலக்கையைத்தூக்கி ஆட்காட்டிவிரலால் பிடுங்கிஎடுப்பதற்கு விரும்புகிறாய்? அல்லது மதங்கொண்டு காட்டில் தனித்துஸஞ்சரிக்கின்ற ஒருயானையின்மீது அங்குசமில்லாமலே ஏறிப் பட்டணம்செல்ல விரும்புகிறாய். நீ நெய்யினால் நனைக்கப்பட்டவனும் மெல்லியஆடையை உடுத்தவனுமாகி, நன்றாகமூட்டப்பட்டு நெய்யினாலும் இறைச்சியினாலும் ஊனீராலும் ஹோமம்செய்யப்பட்ட அக்னியின்நடுவில் செல்லவிரும்புகிறாய். கர்ண! [1]எவன் சரீரத்தைக் (கயிறுகளால்) கட்டிக்கொண்டும் அவ்வாறே கழுத்தில் கல்லைக்கட்டிக்கொண்டும் இருகைகளாலும் ஸமுத்ரத்தைத்தாண்டுவான்? அதில் ஆண்மையேது? கர்ண! அஸ்த்ரப்பயிற்சிஇல்லாதவனும் மிக்கபலமற்றவனுமான எவன் அஸ்த்ரத்தில் பயிற்சியுள்ளவனும் சிறந்த பலசாலியுமான அப்படிப்பட்டபார்

1 வேறுபாடம்.

த்தனுடன் போர்புரியவிரும்புவனே அவன் கெட்டபுத்தியையுடைய வன். நம்மாலேயே இப்புவியில் பதின்மூன்றுவர்ஷகாலம் துன்ப முறும்படி செய்யப்பட்டபார்த்தன் கட்டிவிருந்துவிடப்பட்ட ஸிம்மம் போல நம்மை மிச்சம்வைக்கப்போகிறதில்லை. கிணற்றில்மறைக்கப் பட்ட நெருப்புப்போலத் தனியிடத்தில்வாஸஞ்செய்யும்பார்த்தனை அறியாமையால் எதிர்த்துச்சென்று மிக்க பயத்தைஅடைந்துவிட் டோம். பஞ்சுக்குவியலில்இட்டநெருப்பை ஒருவன் எவ்வாறு அவிப் பான்? போரில் கொடியமதங்கொண்டவனும் (போருக்கு) வந்திருக் கின்றவனுமான பார்த்தனை நாம் (எல்லோருஞ்)சேர்ந்து (எதிர்த்துப்) போர்புரிவோம். நாம் முயற்சியும் வன்மையுமுள்ளவர்களும் படை யை அணிவகுத்துக்கொண்டவர்களும் (பகைவனை)அடிக்கும் தன்மை யுள்ளவர்களுமாகி, யுத்தத்தின்பொருட்டு ஸந்நத்தனாகவந்திருக்கின்ற இந்த்ரகுமாரனுனபார்த்தனை (எதிர்ப்போம்.) வஜ்ரபாணியானமஹே ந்த்ரனை அஸுரர்கள் சூழ்ந்துகொள்வதுபோல, தேராளிகளிற்சிறந்த அர்ஜுனனைத் தேராளிகளாகிய (நாம்)அறுவரும் முயற்சியுடன்தகை ந்து நான்குபக்கத்திலும் சூழ்ந்துகொள்வோம். கர்ண! த்ரோணர், துர்யோதனன், பீஷ்மர், நீ, த்ரோணபுத்ரன், நான் ஆகியஎல்லாரும் பார்த்தனை(எதிர்த்துப்) போர்புரிவோம். நீ ஸாஹஸஞ்செய்யாதே. நாம் ஒன்றுசேராமல் யுத்தத்தில் பார்த்தனை வெல்லப்போகிறதில்லை. போரில் நாமெல்லோரும் ஒன்றுசேர்ந்தே பார்த்தனை வெல்வோம்" என்றுகூறினர்.

ஐம்பதாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(கர்ணன் க்ருபரைநிந்தித்ததும், அச்வத்தாமா கர்ணனையும் துர்யோதனனையும் நிந்தித்ததும்.)

அரசரே! போர்வீரர்களுள் தலைவனான கர்ணன் க்ருபரு டையவார்த்தையைக்கேட்டுக் கோபங்கொண்டு ப்ராம்மணரான க்ரு பரைநிந்தித்து மறுபடியும் (பின்வருமாறு) வசனிக்கலானான். "ஆசார் யர் பயத்தினால் பகைவனிடத்தில் அன்புபாராட்டுகிறாரென்று நான் நினைக்கிறேன். பயந்திருப்பவர் போர்புரியவேண்டாம். நான் போர் புரிகிறேன். ஐயா! பலஹீனரானஉமக்கு, வாருணம் ஆக்னேயம் யாம்யம் வாயவ்யம் என்கிறஅஸ்த்ரங்களும் ப்ரம்மசிரஸ்என்கிறஅஸ்

த்ரமும் வீண். (உம்மாலும்) மஹாரதர்களாயிருக்கின்ற [1]தகப்பன் [2]பிள்ளைகளாலும் மித்ரனுக்குச்செய்யவேண்டியதான இந்தக்கார்யம் செய்யப்பட்டது. எஜமானனுடையசோறும் உங்களால் அனுபவிக்கப்பட்டது. நீங்கள் இஷ்டப்படிபோகலாம். நீர் நாள்தோறும் பிச்சையெடும்; யாகங்கள்நடக்குமிடம்செல்லும்; ச்ராத்தபோஜனங்களைச் சாப்பிடும்; இப்பொழுது யுத்தத்தினால் எங்களைப்பயப்படுத்தாதீர். என்னால்விடப்பட்டதும் பரசுராமரிடமிருந்து அப்யஸித்ததுமான அஸ்த்ரமானது இந்தப்பூமியையும் கொளுத்தும்; பாண்டுபுத்ரர்களுள் ஒருவனான இந்த அர்ஜுனனை யுத்தத்தில்கொளுத்துமென்பதில் ஸம்சயமென்ன? மாத்ஸ்யர்கள் பாண்டவனைச்சார்ந்து பலமுள்ளவர்களும் பகைவர்களுடையபடையை அழிப்பவர்களுமான கீசகர்களுடைய வழியை வந்தடையப்போகிறார்கள். அவர்களை நான் கொல்லப்போகிறேன். நீர் வீட்டுக்குப்போகலாம். வேதமோதுகின்றவர்களும் பிறரிடத்தில் நேசித்துப் பேசுகின்றவர்களுமான (உங்களுக்கு இங்கு) என்னகார்யம்?" என்றுகூறினான். பேசுகிறவர்களுள்சிறந்தவரும் ப்ரதாபமுள்ளவருமான அச்வத்தாமா அவனுடைய அந்தவார்த்தையைக்கேட்டு, துர்யோதனனைப்பார்த்துச் சொல்லலானார்.

கர்ண! நாம் இன்னும் பசுக்களைஜயிக்கவில்லை; வேறுஎல்லையையும் அடையவில்லை; ஹஸ்தினபட்டணத்தையும்அடையவில்லை. நீயோ புகழ்ந்துகொள்ளுகிறாய். ப்ராம்மணோத்தமர்கள் அனேகதர்மசாஸ்த்ரங்களைப் படித்திருக்கிறார்கள். அவைகளில் அரசனைச் சூதாட்டத்தில் ஜயிக்கலாமென்பதைப் பார்த்ததுண்டா? பெரியசண்டைகளைச்செய்து (பகைவர்களை)வென்று மிகுதியாகப் பொருளை அடைந்து பூமிமுழுதையும் ஜயித்தும் இவ்வுலகில் கற்றறிந்தவர்கள் புகழ்ந்துகொள்ளுகிறதில்லை. அக்னி வாயினாற்சொல்லாமலே (பதார்த்தங்களைப்) பக்வம் செய்கிறான். ஸூர்யன் பேசாமலே ப்ரகாசிக்கிறான். பூமி சராசரங்களுள்ள உலகங்களைப் பேசாமலே தாங்குகிறது. செல்வமடையத்தக்கனவும் கேட்டைஅடைவியாதனவும் நான்குவர்ணங்களுக்கும் உரியனவுமானசெய்கைகள் மஹரிஷிகளால் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ப்ராம்மணன் வேதமோதி, தான் யாகம்செய்யலாம்; யாகம் செய்விக்கலாம். க்ஷத்ரியன்பொருளைத்தேடிவந்து, தான் மாத்ரமே யாகம்செய்யலாம்; யாகம்செய்விக்கக்கூடாது. வைச்யன் பொருள்களைப்பெற்று வேளாண்மைத்தொழில்முதலியவற்றைச் செய்யவேண்டும். சூத்ரன் நாள்தோறும் [3]நீர்நொச்சியின்செய்கையை அடைந்து

---

[1], [2] த்ரோணர் அச்வத்தாமாஎன்று கருத்து.

[3] ஜலத்தைக்கண்டவுடன்வணங்குவது நீர்நொச்சியின்செய்கை.

நமஸ்காரஞ்செய்வதாலும் கட்டளையைச்செய்வதாலும் மூன்றுவர்ணங்களுக்கும் பணிவிடைசெய்யவேண்டும். பெரும்பாக்யமுள்ளவர்கள் சாஸ்த்ரத்தில் சொல்லியமுறைப்படி நடந்து இந்தபூமியையும் பெற்று மிக்க பெரியயாகங்களையும் செய்கின்றார்கள். ஓ! ஸூத! கீழ்க்குறித்த ஜாதிகளுள் உன்னுடையது எந்தஜாதி? என்னமந்த்ரங்கள்? எந்தக் கர்மங்கள்? ராஜனுக்கு (நன்மையை)ச்சொல்லுகின்றவன், (அரசனிடத்தினின்று) போகங்களைப் பெறுகின்றவன், (அரசனை) அடக்கியாள்பவனென்னும் ஜாதிகளுள் உன்னுடையது எந்தஜாதி?" என்றார்.

அச்வத்தாமா, கௌரவஸபையில் துர்யோதனனையும் கர்ணனையும்நன்குபார்த்து மிக்ககோபங்கொண்டு துர்யோதனனை அதட்டினார். "எந்தக்ஷத்ரியன் சூதாட்டத்தால் ராஜ்யத்தைப்பெற்று ஸ்தோத்ரம் செய்வதற்குத் தகுந்தவனாவான்? இந்த த்ருதராஷ்ட்ரபுத்ரன் அவ்வாறு கொடுந்தன்மையுள்ளவன்; தயையில்லாதவன். அவ்வாறு பொருள்களைப்பெற்றுப் பக்ஷிவேட்டையாடுகிறவேடன்போலக் கபடத்தோடும் வஞ்சனையுள்ளஉபாயங்களோடும் ஸஞ்சரிப்பவனான எந்தப்புத்திசாலிதான் தற்புகழ்ச்சிசெய்துகொள்ளுவான்? உன்னால்பொருள்கவரப்பட்ட தனஞ்சயனையாவது நகுலனையாவது ஸஹதேவனையாவது நீ எந்த [1]த்வைரதயுத்தத்தில்ஜயித்தாய்? எந்தயுத்தத்தில் யுதிஷ்டிரனும் பலசாலிகளுள்சிறந்தபீமனும் உன்னால் ஜயிக்கப்பட்டார்கள். எந்தயுத்தத்தில் முன்பு இந்த்ரப்ரஸ்தமானது உன்னால் ஜயிக்கப்பட்டது. இழிவானகார்யங்களைச் செய்பவனே! அவ்வாறே ஒற்றை ஆடையுடுத்தவளும் வீட்டுக்கு விலக்காயிருந்தவளும் ஸபையை அடையும்படி செய்விக்கப்பட்டவளுமான க்ருஷ்ணையை நீஜயித்தயுத்தம் எது? பொருளாசைகொண்டநீ, வாஸனையைவிரும்புகிறவன் சந்தனமரத்தைஅறுப்பதுபோல இழிவானசெய்கையைக்கைக்கொண்டு இந்தப்பாண்டவர்களின் பெரியவேரைஅறுத்துவிட்டாய். அதைப் பற்றி விதுரர் என்னசொன்னார்? மனுஷ்யர்களுக்கும் புழு எறும்பு முதலானமற்றப்ராணிகளுக்குங்கூடச் சக்திக்குத்தக்கபடி கோபமிருப்பதைக்காண்கிறோம். (ஆகையால்,) த்ரௌபதியினுடையதுன்பத்தைப் பாண்டவன் பொறுக்கத்தக்கவனல்லன். தார்த்தராஷ்ட்ரர்களுடையநாசத்தின்பொருட்டுத் தனஞ்சயன் தோன்றிவிட்டான். நீ பண்டிதனாயிருந்தும் ஆசார்யரை அவமதிக்கவிரும்புகிறாய். வைரத்தைமுடிக்கவந்தவனான ஜிஷ்ணுவானவன் நம்மில் (ஒருவரையும்) மிச்சம்வைக்கப்போகிறதில்லை. புத்திசாலியானபாண்டுபுத்ரனோடு இவ்

[1] இரண்டுதேராளிகள் எதிர்த்துச்செய்யும் யுத்தம்.

வுலகில் தேவர்களாவது கந்தர்வர்களாவது அஸுரர்களாவது ராக்ஷஸர்களாவது பயத்தினால் போர்புரியமாட்டார்கள். (அர்ஜுனன்) ஒருவனாயிருந்தாலும் கோபங்கொண்டு யுத்தத்தில் எவனெவனை எதிர்ப்பனோ அவனவனைக் கருடன்வேகத்தால் மரத்தையொடிப்பதுபோல நாசஞ்செய்து (வைரத்தினுடைய) முடிவை அடைவான். உன்னைக் காட்டிலும் வீர்யத்தினால் மேலானவனும் வில்லில் தேவராஜனுக்கும் யுத்தத்தில் வாஸுதேவருக்குமொப்பானவனுமான அந்தப்பார்த்தனை எவன் பூஜிக்கமாட்டான்? தேவதையைத் தெய்வசக்தியினாலும் மனுஷ்யனை மனுஷ்யசக்தியினாலும் (எதிர்த்துப்) போர்புரிபவனும் அஸ்த்ரத்தை அஸ்த்ரத்தால் நாசஞ்செய்பவனுமான அர்ஜுனனுக்கு ஒப்பான மனிதன் எவன்? சிஷ்யன் புத்ரனைக்காட்டிலும் குறைந்தவனல்லனென்று தர்மசாஸ்த்ரங்களை அறிந்தவர்கள் சொல்லுகிறார்கள். இந்தக்காரணத்தினாலும் த்ரோணருக்குப் பாண்டவன் அன்புக்குரியவனாயிருக்கிறான். நீ சூதாடினதுபோலவும் இந்த்ரப்ரஸ்தத்தைக் கவர்ந்ததுபோலவும் த்ரௌபதியை ஸபைக்கு இழுத்துவந்ததுபோலவும் பாண்டவனோடு யுத்தஞ்செய். உனக்கு அம்மானும் கற்றறிந்தவனும் க்ஷத்ரியதர்மங்களை நன்கு அறிந்தவனும் கெட்டசூதாட்டத்தை விளையாட்டாகக்கொண்டவனும் காந்தாரதேசாதிபதியுமான இந்தச் சகுனியும் இப்பொழுது போர்புரியட்டும். காண்டீவமானது பாச்சிகைகளை எறியாது; [1]க்ருதத்தையும் [2]த்வாபரத்தையும் எறியாது. ஜ்வலிக்கின்றவைகளும் கூர்மையுள்ளவைகளுமான அந்த அந்த அம்புகளைக் காண்டீவம் ப்ரயோகிக்கிறது. காண்டீவத்தினின்று விடுபட்டவைகளும் கழுகிறகுகட்டியவைகளும் நன்கு சாணைபிடிக்கப்பட்டவைகளும் மலைகளையும் பிளக்கின்றவைகளுமான அம்புகள் (லக்ஷ்யங்களை அடியாமல்) நடுவில்நில்லா. அந்தகன் வாயு ம்ருத்யு அவ்வாறே வடவைத்தீ இவர்கள் ஒருஸமயம் மிகுதிவைத்தாலும் வைப்பார்கள். தனஞ்சயன் கோபங்கொண்டால் மிச்சம்வைக்கமாட்டான். நீ ஸபையில் மாமனுடன்சேர்ந்து சூதாடினதுபோலவே போரில் ஸுபலனுடையபுத்ரனான சகுனியினால் நன்குகாக்கப்பட்டுப் (பார்த்தனோடு) போர்புரிவாயாக. [3]ஆசார்யர் இஷ்டப்படி யுத்தம்செய்யட்டும். நான் தனஞ்சயனோடு போர்புரியேன். பசுக்களிருக்குமிடத்தைக்குறித்து மத்ஸ்யராஜன்வந்தால் அவன் நம்மால் போர்புரியத்தக்கவன்" என்று கூறினார்.

---

1 பாச்சிகையின் நாலு எண்ணுள்ள பக்கம.

2 பாச்சிகையின் இரண்டு எண்ணுள்ள பக்கம்.

3 (உனது) 'யுத்தவீரர்கள்' என்பது வேறுபாடம்.

ஐம்பத்தோராவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர் துர்யோதனனைக்கண்டித்ததும், கோபங்கொண்ட அச்வத்தாமாவை ஸமாதானஞ்செய்ததும், துர்யோதனனும் கர்ணனும் க்ருபரையும் த்ரோணரையும் பொறுக்கும்படி வேண்டியதும்.)

பிறகு, சந்தனுகுமாரரான பீஷ்மர், அந்தக்கௌரவஸபையில் துர்யோதனனைப்பார்த்து அறம்பொருள்களுள்ளதும் க்ஷேமத்தையும் நன்மையையும் பயக்கத்தக்கதுமான இவ்விதவார்த்தையை உரைக்கலானார். "த்ரோணரும், (விஷயங்களை) நன்றாக அறிந்திருக்கிறார். க்ருபரும் (விஷயங்களை) நன்றாக அறிந்திருக்கிறார். ஆசார்யபுத்ரரான அச்வத்தாமாவும் இயற்கையானதும் நிச்சயமுள்ளதுமான (வார்த்தையை) நன்குசொல்லுகிறார். கர்ணனோ க்ஷத்ரியதர்மத்தினால் மாத்ரம் போர்புரிய விரும்புகிறான். அறிவுள்ளமனிதன் ஆசார்யரை அவமதிக்கக்கூடாது. தேசகாலங்களை நன்றாகஆலோசித்து யுத்தஞ்செய்யவேண்டுமென்பது என்னுடையஎண்ணம். எவனுக்கு ஸூர்யன்போன்றவர்களும் (பகைவர்களை) அடிக்கும் தன்மையுள்ளவர்களுமான ஐந்துபகைவர்கள் இருக்கிறார்களோ அறிவுள்ளஅவன் அவர்களுக்கு அபிவ்ருத்திநேர்ந்திருக்குங்காலத்தில் எவ்வாறு புத்திமயக்கம்கொள்ளமாட்டான்? தர்மத்தை அறிந்தவர்களாயிருந்தாலும் தம்கார்யத்தில் எல்லாஜனங்களும் புத்திமயக்கம் கொள்ளுகிறார்கள். ஆகையினால், அரசன் செய்யத்தக்கதின் உண்மையை அறிகிறதில்லை. துர்யோதனனும் துர்ப்புத்தியுடையவனாகி, தனஞ்சயனை நேரில்பார்த்தும் தெரிந்துகொள்ளவில்லை. புத்திஹீனனான அவன் கோபத்துக்கு உடன்பட்டவனாகி (அந்த அர்ஜுனனுடையவாஸனையை) முகரவில்லை" என்றார். புத்திமான்களுள்சிறந்தவரும் பரதகுலத்தில்பிறந்தவர்களுள் மேலானவருமான பீஷ்மர் ராஜாவைப்பார்த்து இவ்வாறு சொல்லிவிட்டுக் கைகூப்பி மறுபடியும் த்ரோணபுத்ரரைப்பார்த்து நல்வார்த்தையுடன் (பின்வருமாறு) சொல்லலானார். "கர்ணன் தேஜஸ்ஸைப்பெருகச்செய்வதற்காக உம்மைப்பற்றிச் சொல்லியவார்த்தையை ஆசார்யபுத்ரரான (நீர்) பொறுத்துக்கொள்ளவேண்டும். பெரிய கார்யம் நேர்ந்திருக்கிறது. குந்திபுத்ரனான அர்ஜுனன் (யுத்தத்துக்கு) வந்திருத்தலால், விரோதம்பாராட்டுவதற்கு இது காலமன்று. உம்மாலும் ஆசார்யராலும் க்ருபராலும் எல்லாம் பொறுக்கத்தக்கது.

ஆதித்யனிடத்தில் ஒளிநிலைபெற்றிருப்பதுபோலவே உங்களிடத்தில் அஸ்த்ரபாண்டித்யம் நிலைபெற்றிருக்கிறது. சந்த்ரனிடத்தில் காந்தி எவ்விதத்தாலும் குறைவற்றதாயிருப்பதுபோல உங்களிடத்தில் ப்ராம் மண்யமும் ப்ரம்மாஸ்த்ரமும் நிலைபெற்றிருக்கின்றன. ஒருவனிடத்தில் நான்குவேதங்கள் காணப்படுகின்றன. ஒருவனிடத்தில் க்ஷத்ரிய தேஜஸ் காணப்படுகிறது. பாரதர்களுக்கு ஆசார்யரும் புத்ரனுடன் கூடினவருமான த்ரோணரைத்தவிர வேறொருவரிடத்திலாவது இந்த இரண்டும் முழுதும்இருப்பதாக நாம் கேட்டதில்லையென்பது என்னுடையஎண்ணம். வேதாந்தங்களும் புராணங்களும் பழமையான இதிஹாஸமும் (த்ரோணரிடத்தில் நிலைபெற்றிருக்கின்றன.) பரசுராமரைத்தவிர வேறுளவன் த்ரோணரைக்காட்டிலும் மேலானவனுயிருக்கிறான்? ப்ரம்மாஸ்த்ரமும் வேதங்களும் இவரைத்தவிர வேறொருவரிடத்திலும் காணப்படவில்லை. ஆசார்யபுத்ரர் பொறுத்துக் கொள்ள வேண்டும். கலஹத்துக்கு இது ஸமயமன்று. (இங்கு) வந்திருக்கின்ற இந்த்ரகுமாரனுடன் நாமெல்லோரும் ஒன்றுசேர்ந்து போர் புரிவோம். வித்வான்களால் இவ்வுலகில் ஸைன்யத்துக்குச்சொல்லப் பட்ட வ்யஸனங்களுள் கலஹமானது முக்யமென்றும் மிகக்கொடியதென்றும் கற்றறிந்தவர்கள் எண்ணுகிறார்கள்" என்றுகூறினர். அச்வத்தாமா, "புருஷரிற்சிறந்தவரே! நீதிதவறாததான எங்களுடைய இந்த (வார்த்தை) இவ்வாறு நிந்திக்கத்தக்கதன்று. ஆனால், கோபத்தினால் ஆக்ரமிக்கப்பட்ட ஆசார்யர் (அர்ஜுனனுடைய) குணங்களைச்சொன்னார். பகைவனுயிருந்தாலும் (அவனிடத்திலிருக்கிற) குணங்கள் கொள்ளத்தக்கன. ஆசார்யனுயிருந்தாலும் (அவனிடத்திலுள்ள) தோஷங்கள் உரைக்கத்தக்கன. எல்லாவிதத்தாலும் எவ்விதமுயற்சியினாலும் புத்ரன்விஷயத்திலும் சிஷ்யன்விஷயத்திலும் ஹிதத்தையே சொல்லவேண்டும். இந்தஆசார்யர் பொறுத்துக்கொள்ளவேண்டும். இவரிடத்தில் பொறுமையைவேண்டுங்கள். ஆசார்யர் பேதிக்கப்படாமலிருந்தால் [1]மிச்சமுள்ளகார்யம் நிறைவேறினதாகும்" என்றார். பாரதகுலத்திற்பிறந்தவரே! பிறகு, துர்யோதனன், கர்ணனோடும் பீஷ்மரோடும்சேர்ந்து த்ரோணரையும் மஹாபலசாலியானக்ருபரையும் (பிழைகளைப்) பொறுக்கும்படி வேண்டினன். த்ரோணர், "முதலில் சந்தனுபுத்ரரான பீஷ்மர்சொல்லிய இந்தவார்த்தையினாலேயே நான் கோபம்தணிந்தேன். இந்தஸமயத்தில் மேல்ஆக வேண்டியகார்யம் செய்யலாம். பார்த்தனுனவன் துர்யோதனனை யுத்

1 வேறுபாடம்.

தத்தில் ஸாஹஸத்தினாலோ மோஹத்தினாலோ அணுகாதபடி (நாம்) செய்யவேண்டும். வனவாஸகாலமானது நிறைவேறாமலிருந்தால் தனஞ்சயன் (தன்னை வெளியில்) காண்பியான். தன்செல்வத்தை அடையாதவனான (இந்த அர்ஜுனன்) இப்பொழுது அப்படிப்பட்ட (நம்முடைய அக்ரமத்தைப்) பொறுக்கவில்லை. இந்த அர்ஜுனன் துர்யோதனனை எவ்விதத்தாலும் அணுகாமலும் (கௌரவ) ஸேனையையும் தோற்கச்செய்யாமலுமிருக்கும்வண்ணம் முறைசெய்யவேண்டும். கங்காபுத்ரரே! துர்யோதனனாலும் முன்பு இவ்விதமானமொழி உரைக்கப்பட்டிருக்கிறது. அதை நினைத்து உள்ளபடி நீர்சொல்லவேண்டும்" என்றுகூறினார்.

ஐம்பத்திரண்டாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(பீஷ்மர், பலகாரணங்களால் பாண்டவர்களுடன் ஸந்திசெய்வது நல்லதென்றதும், துர்யோதனன்மறுத்ததும், யுத்தஞ் செய்யஸித்தமாகிப் படைகளைவகுத்ததும்.)

பீஷ்மர், "[1] கலைகளும் காஷ்டைகளும் முஹூர்த்தங்களும் ஒன்றுசேர்ந்து தினங்களாகின்றன. பக்ஷங்களும் மாஸங்களும் நக்ஷத்ரங்களும் க்ரஹங்களும் ருதுக்களும் சேர்க்கப்பட்டு ஸம்வத்ஸரங்களாகின்றன. இவ்வாறான காலத்தின்பிரிவினால் காலசக்ரம்நடைபெற்றுவருகிறது. அவைகளுடைய காலாதிக்யத்தாலும் ஜ்யோதிக்ரஹங்களுடைய மாறுபாட்டினாலும் ஐந்தாவதுஐந்தாவது வர்ஷத்தில் இரண்டுமாஸகாலங்கள் அதிமாஸங்களாகஏற்படுகின்றன. இந்தப்பதின்மூன்றுவர்ஷங்களுக்கும் ஐந்துமாஸங்களும் பன்னிரண்டு நாட்களும் அதிகமாகின்றனவென்பது என்னுடையஎண்ணம். நேற்றைக்கே (பாண்டவர்களால் ப்ரதிஜ்ஞைபண்ணப்பட்டிருந்த வனவாஸகாலமானது) முடிந்துவிட்டது. அக்காரணத்தினால்தான் பீபத்ஸுவானவன் இங்குவந்தான். இந்தப்பாண்டவர்களால் எவைஎவை ப்ரதிஜ்ஞைசெய்யப்பட்டனவோ அவைஅவையெல்லாம் உள்ளபடி அனுஷ்டிக்கப்பட்டன. இவ்விஷயத்தை இவ்வண்ணம் நிச்சயமாய்த்தெரிந்துகொண்டபிறகு பீபத்ஸுவானவன் (யுத்தத்துக்கு) வந்திருக்கிறான். (பாண்டவர்கள்) இவரும் மஹாத்மாக்கள். எல்லாரும் அறம்பொருள்களை அறிந்தவர்கள். யுதிஷ்டிரமஹாராஜனைத் தலைவனாகக்

---

1 காலத்தின் அளவுகள்.

கொண்டவர்கள் தர்மத்தினின்று எவ்வாறுதவறுவார்கள்? தர்மபுத்ரன் காமத்தினாலாவது க்ரோதத்தினாலாவது பேராசையினாலாவது காமக்ரோதங்களாலுண்டாகும் பயத்தினாலாவது ஸ்நேஹத்தினாலாவது மோஹத்தினாலாவது தர்மத்தைத் தாண்டமாட்டான். குந்திபுத்ரர்கள் ஆசையற்றவர்கள்; ஒருவராலும்செய்யமுடியாத கார்யத்தைச் செய்தவர்கள். அவர்கள் அதர்மத்தினால் அல்பமானநாட்டைவிரும்பமாட்டார்கள். அந்தக்கௌரவநந்தனர்கள் அப்பொழுதே பராக்ரமத்தைவெளிப்படுத்த விரும்பினார்கள்; ஆனால், தர்மபாசத்தில்கட்டுப்பட்டு க்ஷத்ரியவ்ரதத்தினின்றும் தவறாமலிருந்தனர். பொய்யென்றுப்ரஸித்திபெற்றது(அந்தத்தர்மநந்தனனிடத்தில்) அவமானத்தைஅடையும். பார்த்தர்கள் மரணத்தைஅடைந்தாலும் அடைவார்களேயல்லாமல் பொய்யை எவ்விதத்திலும் சொல்லமாட்டார்கள். புருஷரில் மேம்பட்டவர்கள் ஸமயம்நேர்ந்தால் வஜ்ராயுதத்தைக்கையிலேந்திய மஹேந்த்ரனால் பாதுகாக்கப்பட்டிருந்தாலும் தம்பொருள்களைவிடமாட்டார்கள். பாண்டவர்கள் அப்படிப்பட்ட வீர்யமுடையவர்களல்லரோ? நாம், படையாளிகளனைவருள்ளுஞ்சிறந்த அர்ஜுனனைப் போரில்எதிர்த்துச் சண்டைசெய்வோம். ஆதலால், இந்தஸமயத்தில் மங்களத்தைஉண்டுபண்ணுவதும் உலகத்தில் ஸாதுக்களால் அனுஷ்டிக்கப்பட்டதுமானகார்யம் விரைவில் செய்யப்படலாம். உங்களுடையபொருளானது பகைவரைஅடையவேண்டாம். குருகுலத்தில் பிறந்தவனே! போரில் எப்பொழுதும் வெற்றியேஉண்டாகுமென்று நான் ஒருபொழுதும் எண்ணமாட்டேன். ராஜேந்த்ர! தனஞ்சயனும் வந்துவிட்டான். போர்தொடங்கப்படுமாயின், உயிரோடிருப்பதோ மரணமோ வெற்றியோ தோல்வியோ அவச்யம் ஒருவனை அடையும். இஃது ஐயமின்றிக் காணப்படுகிறது. ராஜேந்த்ரனே! ஆகையால், போருக்கேற்றகார்யமாவது [1]தர்மத்துடன்கூடின கார்யமாவது விரைவாகச்செய்யப்படவேண்டும். தனஞ்சயன்வந்துவிட்டான். பார்த்தன் ஒருவனாகவே யுத்தத்தில் அம்புகளால் பூமியைஎரித்துவிடுவான். உடன்பிறந்தவர்களோடுசேர்ந்துகொண்டு யுத்தத்தில் கௌரவர்களை எரித்துவிடுவானென்பதில் யாது ஸந்தேஹம்? கௌரவர்களுள் மேன்மைபெற்றவனே! ஆதலால், நீ விரும்பினால் ஸந்தியைச்செய்துகொள்" என்றுகூறினார். துர்யோதனன், "பிதாமஹரே! ப்ரபுவே! நான்

---

1 'பாண்டவர்களுடன் சண்டைசெய்யாமல் நேசித்து அவர்களுக்கு ராஜ்யத்தைக் கொடுப்பது தர்மத்துடன் கூடினகாரியம்' என்பது பழைய உரை.

நாட்டையோ க்ராமத்தையோ ஸேனையையோ ஏவலாளர்களையோ அல்லது சிறிதுபொருளையோ (எதையும்) பாண்டவர்களுக்குக் கொடுக்கமாட்டேன். போருக்குவேண்டியகார்யமனைத்தும் நன்குஅனுஷ்டிக்கப்படலாம்" என்றுசொன்னான் பீஷ்மருடையசொல்லும் அவ்வாறே துர்யோதனனுடையசொல்லும் ஓய்ந்தவுடன் அந்தணரிற்சிறந்த த்ரோணரும் காலத்துக்கேற்றதும் பொருள்மாறுபடாததும் போருக்குத்தக்கதும் அறத்துடன்சேர்ந்ததுமான சொல்லைச்சொல்லலானார்.

"துர்யோதன! மறுபடியும் நீ சொல்லத்தக்கவனாயிருக்கிறாய். உலகத்தில் உனக்கு நிகர்யார்? உனக்குவிருப்பமிருந்தால் இந்த விஷயத்தில் என்னுடையஆலோசனையையும் கேள். குருநந்தன! எல்லாவிதத்திலும் என்னால் நன்மையே சொல்லத்தக்கது. அரசன் படையில் நாலிலொருபாகத்தை அழைத்துக்கொண்டு விரைவாகச் செல்லட்டும். பிறகு, (படையின்) மற்றொருநாலிலொருபாகமானது பசுக்களைஓட்டிக்கொண்டுபோகட்டும். நாங்கள் பாதிப்படையுடன் பாண்டவனைஎதிர்த்துப் போர்புரிகிறோம். நானும் பீஷ்மரும் கர்ணனும் அச்வத்தாமாவும் க்ருபரும் (யுத்தத்தில்) துணிவுடன் வந்திருக்கின்ற பீபத்ஸுவை எதிர்த்துப் போர்புரிகிறோம். இவ்வாறு செய்தால் அரசன் நன்குபாதுகாக்கப்படுவான்; அதைர்யத்தை அடையத்தகுந்தவனல்லன். மத்ஸ்யராஜன் மீண்டுவந்தாலும் அல்லது இந்த்ரனேவந்தாலும் கரையானது கடலைத்தடுப்பதுபோல நான் தடுப்பேன்" என்றார். மஹாத்மாவானத்ரோணர்சொல்லிய அந்தச்சொல் அவர்களுக்கு விருப்பமாயிருந்தது. கௌரவர்களுக்கரசனான துர்யோதனன் அவ்வாறே உடனே செய்தான். பீஷ்மர் ராஜாவையும் பிறகு பசுக்கூட்டத்தையும் அனுப்பிவிட்டு ஸேனைக்குத்தலைவர்களை ஏற்படுத்தி அணிவகுக்கத்தொடங்கினார். த்ரோணருடையவாக்யம் முடிந்தவுடன் சிறந்தபுத்தியையுடைய பீஷ்மர் சொல்லலானார்.

"ஆசார்யரே! நீர் மத்தியில்நில்லும். அச்வத்தாமா இடப்பக்கத்தில் இருக்கட்டும். சரத்வானுடையகுமாரரும் சிறந்தபுத்தியுடையவருமானக்ருபர் வலப்பக்கத்தைப் பாதுகாக்கட்டும். பகைவர்களால் ஜயிக்கப்படாதவர்களும் சிறந்தவலிமையுடையவர்களுமான மஹாவீர்யமுள்ளவிகர்ணனும் பகைவரைவாட்டுபவனான துர்முகனும் ஸுபலபுத்ரனான சகுனியும் மஹாபலசாலியான துஸ்ஸஹனும் த்ரோணருடைய பக்கத்தைப் பாதுகாக்கட்டும். ஸூதபுத்ரனான கர்ணனே கவசமணிந்து முதலில் நிற்கட்டும். நான் படையனைத்தையும் பாது

காத்துக்கொண்டு பின்புறத்தில்நிற்பேன். சூரர்களும் பெரியவில்லாளிகளும் மிக்கபலசாலிகளுமான எல்லாமஹாரதர்களும் யுத்தத்தில் வந்திருக்கின்ற பாண்டவச்ரேஷ்டனை முயற்சியுடன் (எதிர்த்துப்) போர்புரியட்டும்" என்றுகூறினர். கௌரவர்களுள் சிறந்தவரான பீஷ்மர் பகைவர்களுடையபடைகளால் உடைக்கஅருமையான வஜ்ரகர்ப்பம், வ்ரீஹிமுகம், பத்மம், சந்த்ரார்த்தமண்டலம்என்னும் வ்யூஹங்களை ஏற்படுத்தி அந்தப்படைவகுப்பின் பின்புறத்தில் ஆயுதங்களைக் கையில்எடுத்துக்கொண்டு பொன்மயமான பனைக்கொடியைத் தூக்கிக்கட்டித் தேரில்நின்றுகொண்டு விளங்கினர்.

ஐம்பத்துமூன்றுவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(இந்த்ரன் தேவர்களுடன் விமானமேறி அர்ஜுனனுக்கும் கௌரவர்களுக்கும்நடக்கும் சண்டையைப்பார்க்க வந்தது.)

பிறகு, பச்சைநிறமானகுதிரைகளையுடைய மஹேந்த்ரன் ஸுதர்சனம்என்ற விமானத்தில் எல்லாத்தேவர்களையும் ஏற்றிவைத்துக்கொண்டு பாண்டவனிருக்குமிடம் வந்துசேர்ந்தான். நடுவில் ஆயிரம் தூண்வரிசைகள் நாட்டப்பெற்றதும் ஸூர்யனுடையமார்க்கத்திலிருப்பதுமான அந்தவிமானத்தில் நிர்மலமான (ஒரு) பெரியஸபை நிலைபெற்றிருந்தது. அந்தவிமானத்தில் ஆதித்யர்களும் வஸுக்களும் ருத்ரர்களும் அச்வினீதேவர்களும் மருத்துக்களின்கூட்டங்களும் விளங்கினர்கள். பாரதகுலத்தில் உதித்தவரே! அந்தவிமானத்தில் வெண்ணிறமுள்ளவைகளும் பொன்னாலும் படிகத்தாலும் செய்யப்பட்டவைகளுமான சக்ரங்களும், வியப்பைத்தரத்தக்கவைகளும் சிறந்த உருவமுடையவைகளும் மணிகளாலும் ரத்னங்களாலும் விசித்ரங்களாகஇருக்கின்றவைகளும் தனித்தனியாகப் பற்பலரூபமுள்ளவைகளும் நல்லகாந்தியுடையவைகளும் மங்களத்தைச்செய்பவைகளுமான குடைகளும் ஆகாயத்தில்சேர்ந்து காணப்பட்டன. அக்னி, இந்த்ரன், ஸோமன், யமன், வருணன், தாதா, விதாதா, ஸூர்யன், குபேரன், ருத்ரன், விஷ்ணு, ஸவிதா, அவ்வாறே மற்றத்தேவர்கள் ஆகிய இவர்களுடைய பொன்மயமானமாலைகளும், தேவலோகத்துப் புஷ்பங்களால் அலங்கரிக்கப்பட்ட பலவிதமானசிறந்தமாலைகளும் வியப்பைத்தருவனவாயிருந்தன. ராஜரே! சிறந்தமணிகளால் அலங்கரிக்கப்பட்ட அந்

த்விமானத்தில் திவ்யவாஸனையுள்ள தேவருலகத்துமாலைகள் விளங்கின. திவ்யமானகாற்றும் (புஷ்பங்களுடைய) வாஸனையைக்கவர்ந்து கொண்டு நான்குபக்கத்திலும் வீசியது. பரதகுலத்திற்பிறந்த மஹாராஜரே! அதில் மலர்களைத்தாங்கிக்கொண்டு (ஆறு) ருதுக்களும் ஏழு ஸ்ருஷ்டிகர்த்தர்களும் ஏழுமஹாரிஷிகளும் ஸ்வர்க்கத்தில்வஸிக்கின்ற தேவரிஷிகளும் இந்த்ரனைஉபாஸித்துக்கொண்டிருந்தனர். எல்லாத் தேவர்களும் இந்த்ரனோடுகூடியிருந்தார்கள். அதில் சேறுவது புழுதியாவது எவ்விதத்தாலும் உண்டாகவில்லை. அதில் ஆதித்யனும் கொடுமையில்லாமல் சிறிது ப்ரகாசித்தான். அதில் திவ்யகந்தத்தைஎடுத்துக்கொண்டு காற்று எதிரில்வீசியது. ஆகாசமும் எல்லாத்திக்குக்களும் அழகுடன்காணப்பட்டன. அச்சமயத்தில் தேவர்கள் நாற்புறத்திலும் ஒளிர்கின்றதும் விரும்பியபடி செல்லுந்தன்மையுள்ளதுமான அந்தத் திவ்யவிமானத்தில் ஏறிக்கொண்டு மாசற்றஆகாயத்தில் நின்றார்கள். அந்தவிமானத்தில் தேவலோகவாஸிகளான ராஜரிஷிகளும் ஏறிக்கொண்டிருந்தார்கள். ஜனமேஜயரே! அப்பொழுது அரசனைச்வேதன், வஸுமனஸ், பத்ரன், ப்ரதர்சனன், ந்ருகன், யயாதி, நஹுஷன், மாந்தாதா, பரதன், குரு, அஷ்டகன், சிபி, அப்படிப்பட்ட ராஜாவான புரூரவன், டம்போத்பவன், கார்த்தவீர்யார்ஜுனன், ஸகரன், திலீபன், கோஸளன், பூரு, சர்யாதி, ஸோமகன், ஹரிச்சந்த்ரன், தேஜஸ்வியான ரகு, தசரதன், ராஜரிஷியானபகீரதன், சாமரங்களாலும் விசிறிகளாலும் விளங்குகின்றவனும் தூக்கிப்பிடிக்கப்பட்டகுடையுள்ளவனும் ராஜஸூயயாகத்தாலுண்டான காந்தியினால்சூழப்பட்டவனுமான பாண்டுமஹாராஜன் இவர்களனைவர்களும் புண்யசீலர்களும் சுத்தமானவ்ரதமுள்ளவர்களும் கீர்த்திசாலிகளும் மஹாவீர்யமுள்ளவர்களுமான மற்றும் அனேகராஜரிஷிகளும் அந்தவிமானத்திலேயே ஆகாயத்தில் வீற்றிருந்தார்கள். அப்ஸரஸ்களுடைய எல்லாக்கூட்டங்களும் எல்லாக்கந்தர்வர்களும் அஸுரர்களும் ராக்ஷஸர்களும் யக்ஷர்களும் கருடர்களும் பன்னகர்களும் இந்த்ரனை முதன்மையாகக்கொண்டவர்களும் கணநாதர்களோடுகூடினவர்களுமான எல்லாத்தேவர்களும் அந்தயுத்தத்தைப்பார்க்க விருப்பங்கொண்டு அந்தவிமானத்தில் ஏறிஇருந்தார்கள். இவ்வாறு தேவலோகவாஸிகள் விமானத்திலேறி, ஒருவனான அர்ஜுனனுக்கும் அநேகர்களானகௌரவர்களுக்கும் நடக்கப்போகிற யுத்தத்தைப் பார்க்கவிரும்பி ஆகாயத்தில் ஒழுங்காகநின்றார்கள்.

ஐம்பத்துநான்காவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் உத்தரனைத் துர்யோதனனிருக்குமிடத்துக்குத் தேரைச் செலுத்தச்சொல்லி த்ரோணர்முதலியோரை அம்புகளால்வணங்கியதும், த்ரோணர் அர்ஜுனனைப் புகழ்ந்ததும்.)

மஹாரதர்களான கௌரவவீரர்களால் படைகள் அவ்வாறு அணிவகுக்கப்பட்டிருக்கும்பொழுது அர்ஜுனன் தேரொலியினால் (போர்க்களத்தை) எதிரொலியிடச்செய்து விரைவாக (கௌரவர்களுடைய) ஸமீபத்தில் வந்தான். அந்தக்கௌரவர்கள் (அர்ஜுனனுடைய) கொடியின் நுனியைக்கண்டார்கள்; தேரின்ஒலியையும் அடிக்கடி மிகவும் இழுத்துவிடப்படுகிற காண்டீவத்தின்ஒலியையும் கேட்டார்கள். வெண்ணிறமுள்ளகுதிரைகளையுடையவனும் பாண்டு புத்ரனுமான பார்த்தன் மூன்றுக்ரோசதூரம்சென்று படையின்முன்னணியைக்கண்டு விராடபுத்ரனைநோக்கிச் சொல்லலானான்.

"(உத்தரா!) இந்தத்தேர்ப்படையில் ராஜாவான துர்யோதனன் நிற்கின்றதை நான் காணவில்லை கௌரவர்கள் தென்பக்கத்திலிருக்கின்ற ஸேனையின் ஒருபிரிவை அழைத்துக்கொண்டு வடக்குமுகமாகச் செல்லுகின்றார்கள். பெரியவில்லாளிகளால் காக்கப்பட்ட இந்தத்தேர்ப்படையைவிட்டுவிட்டுப் பசுக்களைவளைந்துகொண்டு எதிரில் செல்லு. என்பகைவனைப் பார்க்கப்போகிறேன். பசுக்களை வளைத்துக்கொண்டு முன்னிலையில்சென்று பசுக்களையும் விரைவாகத் திருப்பு. ப்ரபுவே! இந்தக்கௌரவர்கள் வேகத்துடன் பசுக்களைத் திருப்பிக்கொண்டுபோவதற்குள்ளாகவே உன்னுடையபசுக்கள் எல்லாவற்றையும் நான் திருப்புவேன்" என்றான்.

(பகைவர்களால்) ஜயிக்கப்படாதவனான பார்த்தன் விராடபுத்ரனைப்பார்த்துப் போர்க்களத்தில் இவ்வாறுசொல்லிவிட்டு இடப்பக்கத்திலுள்ள ஸேனையின் ஒருபாகத்தைஅடைந்து குதிரைகளை விரைந்தோட்டினான். பிறகு, பார்த்தன் முதலில் ஆசார்யரானத்ரோணரையும் சந்தனுபுத்ரரானபீஷ்மரையும் க்ருபரையும் முறையே இரண்டிரண்டுபாணங்களால் நமஸ்கரித்தான். த்ரோணரையும் க்ருபரையும் பீஷ்மரையும் பாணங்களால் அபிவாதனம்செய்தான். பிறகு, அவையனைத்தையும்பார்த்து த்ரோணர் (பின்வருமாறு) கூறலானார். "(இங்கு யுத்தத்துக்காக)வந்திருப்பவனும் மஹாரதனும் காண்டீவத்தை வில்லாகக்கொண்டவனுமான அர்ஜுனனைப்பார்த்து ஒருவனாவது யுத்

தஞ்செய்வதற்கு விரும்பமாட்டான். (விரும்பினால்) தன்னுடையவுயி ரானது பாதுகாக்கப்பட்டதாகாது. இவன் யுத்தத்தில் (பகைவர்க ளால்) ஜயிக்கமுடியாதவன்; வீரன்; சூரன். இதோ பார்த்தனு டையகொடிநுனியானது தூரத்தில்காணப்படுகிறது. (அதிலிருக் கின்ற) வானரமும், மின்னலும் இடிமுழக்கமுமுள்ள மேகம்போல அதிகமாகக்கூச்சலிடுகிறது. அர்ஜுனன் காண்டீவமென்கிறவில்லை நாணொலியிடும்படிசெய்து தேரின்மீதேறிவருகின்றான். இந்த்ரகுமார னை அர்ஜுனனைச் சுமக்கின்றவைகளும் கனைக்கின்றவைகளுமான குதிரைகளுடையவொலியும் மேகத்தினுடையமுழக்கம்போன்ற தேரி னொலியும் மிக்கபயங்கரமாகக் கேட்கப்படுகின்றன. தேஜஸுடைய வனும் ரதிகர்களுள்சிறந்தவனும் அனேகரதிகர்களை (அஸ்த்ரசஸ்த்ரங் களால் யுத்தகளத்தைவிட்டு) ஓட்டுகின்றவனுமான இந்த்ரகுமாரன் இதோ ரதத்திலிருந்துகொண்டு பூமியைப்பிளக்கிறவன்போல வரு கின்றான். பகைவர்களைஅடிப்பவனும் செல்வமுள்ளவனும் பெருங் கொடையுடையவனும் தைர்யமுள்ளவனுமான இந்தப்பாண்டவன் நமது தேர்ப்படையைக்கண்டு கௌரவிக்கிறான். இதோ இரண்டு பாணங்கள்வந்து என்னுடையஇரண்டுகால்களையும் அடைந்தன. விசி த்ரமானகட்டுக்களுள்ள இரண்டுபாணங்கள் என்னுடையதேரின்நுனி யில் நாட்டப்பட்டன. இதோ வேறுஇரண்டுபாணங்கள் இருபக்கத் திலும் என்காதோரங்களில் நன்கு க்ஷேமத்தைக்கேட்பதுபோலத் தொட்டுக்கொண்டு சென்றுவிட்டன. நம்மால் வெகுநாளைக்குமுந் திப் பார்க்கப்பட்டவனும் தர்மங்களைஅறிந்தவனும் பந்துக்களிடங் களில்ப்ரியமுள்ளவனும் ப்ரதாபசாலியுமான பாண்டுபுத்ரன் காந்தியி னால் அதிகமாக விளங்குகிறான். பகைவர்களைத் தண்டிப்பவனான பார்த்தன் வனத்தில்வாஸஞ்செய்து (ஒருவராலும்) செய்யமுடியாத கார்யத்தையும்செய்து என்னைப் பூஜித்து அபிவாதனஞ்செய்கிறான். கோபத்தால்நிரம்பினவனும் துக்கத்தால் மிகத்தூண்டப்பட்டவனு மான இந்தப்பார்த்தன் ஒருவனாகவே இப்பொழுது இந்தப்பாரத ஸேனையை நிச்சயமாக நாசஞ்செய்யப்போகிறான். கிரீடியானவன் பன்னிரண்டுவர்ஷகாலம் வனவாஸம்செய்து பந்துக்களால் அறியப் படாமல் பதின்மூன்றாவதுவர்ஷம் அஜ்ஞாதவாஸமும்செய்துவிட்டு ரதத்தின்மீதேறிக்கொண்டு ஸூர்யன் இராவிலுண்டானஇருளைவிலக்கி விளங்குவதுபோல விளங்குகிறான். தேரிலேறினவனும் அம்புகளும் அழகியமாலையும் அம்பறாத்தூணியும் சங்கமும் கொடியும் கவசமும் கத்தியும் வில்லுமுள்ளவனுமான இந்தக்கிரீடியானவன் யஜ்ஞங்களில் நெய்யினால் ஹோமம்பண்ணப்பட்ட அக்னிபோல விளங்குகிறான்" என்றுசொன்னார்.

ஐம்பத்தைந்தாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன், படையில்துர்யோதனனைக்காணுமல் பசுக்களுக்கெதிரில்வந்ததும், பீஷ்மர் தம்படையுடன் அவனைப் பின்தொடர்ந்ததும், அர்ஜுனன் பசுக்களைத் திருப்பியதும்.)

பகைவர்கள், ஸமீபத்தில் வருகின்ற பாண்டுகுமாரனான அர்ஜுனனைப்பார்த்து எரிக்கின்ற ஸூர்யனைப்போன்றஅவனை உற்றுநோக்கத் திறமையற்றவர்களாயினர். அந்தப்பார்த்தன் அந்தத்தேர்ப்படையைக்கண்டு ஸாரதியைப்பார்த்து, "பகைவரை அடக்குபவனே! ஸேனைக்கு ஓரம்புவிழுந்தூரத்தில் குதிரைகளைநிறுத்து. இந்தப்படைவகுப்பில் எனக்குப்பகைவனான துர்யோதனனைப்பார்ப்பேன். செந்நிறமுடையதும் வைடூர்யங்களால் இழைக்கப்பட்டதும் உயர்ந்தரத்னங்களால் அலங்கரிக்கப்பட்டதும் தூரத்தில் உயரத்தூக்கிக்கட்டப்பட்டதுமான அவனுடையகொடியைமட்டும் நான் பார்க்கிறேன். கெட்டபுத்தியுள்ளவனும் அதிககர்வங்கொண்டவனுமான துர்யோதனனை இப்பொழுது நான் பார்த்தால் ஈச்வரன் ஸஹாயமாகஇருந்தாலும் அவனை யமனிடத்தில் அனுப்புவேன். மிக்கஇறுமாப்புள்ளவனான அவனைக்கண்டால் மற்றவரனைவரையும் அலக்ஷ்யம்செய்துவிட்டு ஸிம்மமானது அல்பம்ருகத்தின்மீது குதிப்பதுபோல அவனுடையதலையில் குதிப்பேன். காண்டீவத்தினின்றும் வெளிப்பட்ட அம்புகளால் அவனையே இப்பொழுது கொல்வேன். அவன்கொல்லப்பட்டால் அனைவரும் தோல்விஅடைவிக்கப்பட்டவர்களேயாவார்கள். சொல்லத்தகாதவார்த்தைகளைச் சொல்லுகிறவனும் கௌரவர்களுள் பாபியுமான துர்யோதனனையும் சகுனியையும் நான் அம்புகளால்அடக்கப்போகிறேன். இவ்விடத்தில் அரசனை நான் காணவில்லை. இச்சேனையானது அனுபவிக்கத்தக்கபொருளை இழந்ததாயிருக்கின்றது. இந்த ஸமயத்தில் பயமற்றவனானநான் ராஜாவைக்குறித்தே வெளிப்படையாக எதிர்த்துச்செல்லுகிறேன். ஆசார்யரானத்ரோணரும் ஸேனையின்மத்தியில் இருக்கிறார். அச்வத்தாமாவும் அவரைஅடுத்திருக்கின்றார். பெரியவில்லுள்ளவர்களான க்ருபரும் கர்ணனும் எதிரில் நிற்கின்றார்கள். போரில் திறமையுடையவர்களான பூரிச்ரவஸும் ஸோமதத்தனும் பாஹ்லீகனும் ஜயத்ரதனும் ஸேனையினுடையவலப்பக்கத்தை அடைந்து நிற்கின்றார்கள். ஸால்வராஜனும் த்யுமத்ஸேனனும் வ்ருஷஸேனனும் சகுனியும் தசார்ணனும் காளிங்கனும் இடப்

பக்கத்தில் நிற்கின்றார்கள். கௌரவர்களுள் தலைமைபெற்றவரும் எல்லாவீரர்களுள்ளும் சிறந்தபலமுள்ளவரும் எங்களுக்குப் பாட்டனருமான பீஷ்மர் கவசத்தை அணிந்து (கௌரவஸேனைகளின்) பின் பக்கத்தில் பாதிப்படையுடன் நிற்கின்றார். துர்யோதனனைமாத்ரம் நான் காணவில்லை. ராஜாவான அவன் எங்கேஇருக்கிறானோ? இந்தத் தேர்ப்படையைவிட்டுத் துர்யோதனனிருக்குமிடத்திற்குச்செல். அவனைக்கொன்றுவிட்டுத் திரும்பப்போகிறேன். அவன் பசுக்களை ஓட்டிக்கொண்டு செல்லுகிறான். அரசனிருக்குமிடமாகிய பசுக்களுடைய கூட்டத்தைநோக்கி நான்குபக்கத்திலும் வளைத்துக்கொண்டு செல்" என்றுகூறினான்.

(பகைவர்களால்) வெல்லக்கூடாதபார்த்தன், அப்பொழுது போர்க்களத்தில் விராடபுத்ரனைப்பார்த்து இவ்வாறுசொல்லிவிட்டு, திவ்யமானவில்லை (கையினால்) தொட்டு உருவிக்கொண்டு விரைவாகச்சென்றான். பிறகு, கௌரவர்களினிடையில், பகைவரைவாட்டுபவரான பீஷ்மர், (அவர்களைப்பார்த்து,) "(வீரர்களே!) தர்மங்களை அறிந்தவனும் உறவினர்களிடத்தில் அன்புள்ளவனுமான இந்தஅர்ஜுனன் நெடுங்காலத்துக்குப் பிறகு நம்மால்பார்க்கப்பட்டான். (இங்கு) வந்திருக்கின்ற இந்த்ரகுமாரன் ஒளியினால் அதிகமாக விளங்குகிறான். இந்தப்பார்த்தன், துர்யோதனனை (அவனால் செய்யப்பட்ட) வஞ்சனையைநினைத்துக்கொண்டு தேடுகிறான். இந்த்ரகுமாரனான அர்ஜுனன் படையை நன்றாகப்பார்த்து இந்தத் துர்யோதனனைப் பிடிக்கும்விஷயத்தில் விரைவுபண்ணுகிறான்; ஸிம்மமானது ம்ருகத்தைப்பார்ப்பது போல (துர்யோதனனைக்) கவர்வதற்காகப்பார்க்கிறான். இந்தப்பீபத்ஸுவானவன் அரசனை அடையாமல் நிற்கமாட்டான். வேகத்தோடு (துர்யோதனனை) லக்ஷ்யம்வைத்துக்கொண்டு ஓடுகின்ற இந்தஅர்ஜுனனை (நாமெல்லோரும்) பின்தொடர்வோம். யுத்தத்தில் கோபங்கொண்டவனான இந்தஅர்ஜுனனோடு [1]மஹாதேவரென்னும் தேவரையும் தேவகீபுத்ரரான ஸ்ரீக்ருஷ்ணபகவானையும் பரத்வாஜருடைய குமாரரும் மஹாரதரும் புத்ரரோடுகூடியவருமான ஆசார்யரையும் தவிர வேறுஎவனும் தனித்துநின்று போர்புரியமாட்டான். பசுக்கள் நமக்கு என்னசெய்யப்போகின்றன? அவ்வாறே அதிகமானசெல்வமும் என்னசெய்யப்போகின்றது? துர்யோதனன் பார்த்தனிடத்தில் அகப்பட்டு உயிரைஇழக்கப்போகிறான்" என்றவாக்யத்தைக் கூறினார். குருகுலத்தில்பிறந்தவரான பீஷ்மர் போர்க்களத்தில் இவ்வாறு

1 'இந்த்ரனையும்' என்பது வேறுபாடம்.

சொல்லிவிட்டு அப்பொழுது துர்யோதனனைக் காப்பதற்காக ஸேனை யுடன் பார்த்தனைப் பின்தொடர்ந்தார். பார்த்தன் [1]மூன்றுக்ரோச தூரம்சென்று விராடபுத்ரனைப்பார்த்து, "பகைவர்களை அடக்குபவ னே! இந்தக் கௌரவஸேனைக்கு ஓரம்புவிழும் அளவுள்ள தூரத்தில் குதிரைகளை நிறுத்து. ஸாரதியே! இதோ பசுக்களுடையமுன்பக் கம் என்னால் பார்க்கப்பட்டுவிட்டது. (குதிரைகளை) மெல்லநடத்து. பசுக்களைவிலக்கிக்கொண்டு ஸேனைக்குவடபுறமாகச் செல். பசுக்க ளுடையகூட்டத்தை ஓட்டிக்கொண்டு இப்பொழுது துர்யோதன னோடு போர்புரியப்போகிறேன். பசுக்கள் பாதுகாப்பவர்களுள்ள வைகளாகி, விரைவாகச் செல்லுகின்றன. (அவைகளை) நீ விடுவிக்க வேண்டும். ஓ! வீரனே! அவ்விடத்தில்சென்று இடையர்களுள்ள பசுக்களை நீ விடுவிக்கவேண்டும். உத்தர! ஸேனையைவிட்டுவிலகிக் கிழக்குமுகமாகச் செல். அதிரதர்களான இந்தக்கௌரவர்கள்எல் லாரும், போரில் மஹேந்த்ரனுடையபராக்ரமத்தை அஸுரர்கள்பார்ப் பதுபோல என்னுடையவீர்யத்தையும் பராக்ரமத்தையும் பார்க்கட் டும்" என்றுசொன்னான்.

பிறகு, தோளிகளுட்சிறந்த அந்தஅர்ஜுனன் தன்னுடைய பெயரை (எல்லோரும்) கேட்கும்படிசெய்து கூர்மையுள்ளவைகளும் தீட்டப்பட்டநுனியுள்ளவைகளும் யமனுக்கொப்பானவைகளுமான அம்புகளை(ப் பகைவர்மீது) தொடுத்தான். விட்டிற்பூச்சிகளால் (நிறை ந்த) ஆகாயம்போலவும் மழைத்தாரைகளால்நிறைந்த மலைபோலவும் கிரீடியினால்விடப்பட்ட அம்புகளால் ஆகாயமானது இடைவெளியற் றதாகியது. அம்புகளால் பொழியப்படுகின்றவர்களும் துர்யோதன னைச்சார்ந்தவர்களுமான அந்தப்போர்வீரர்கள் பார்த்தனால்விடப்பட்ட அம்புகளால் பசுக்களைப் பார்க்கவேயில்லை. பார்த்தனுடையஅம்புக ளால் நான்குபக்கத்திலும் வருத்தப்படுகின்ற ஏராளமான அந்தஸேனை யும் (அம்புகளால்) மூடப்படாதபூமியையாவது ஆகாயத்தையாவது திக்குக்களையாவது பார்க்கவில்லை. அர்ஜுனனோ அப்பொழுது ஸந் தோஷத்துடன் தன்னுடைய வீர்யத்தைக்காட்டிக்கொண்டு காண்டீ வத்தினின்று வெளிப்படுகின்றஅம்புகளால் (கௌரவ)ஸேனைகளைத் துன்பமுறும்படிசெய்தான். அவர்களுக்கு ஓடுவதிலாவது எதிர்த்து வருவதிலாவது புத்திஉண்டாகவில்லை. அவர்கள் பார்த்தனுடையசுறு சுறுப்பையே புகழ்ந்து வியப்படைந்தார்கள். பிறகு, பார்த்தன் சந்த் ரன்போலவெளுத்ததும் கடலிலுண்டானதும் கௌரவஸேனைகளுக்

1 வேறுபாடம்.

குப் பயத்தையும் பகைவர்களுக்கு மயிர்க்கூச்சத்தையும் உண்டுபண்ணுகின்றதுமான சங்கத்தை ஊதினான்; நாணொலியையும் கையுறையின் ஓசையையும் உண்டுபண்ணி ப்ராணிகளை மயக்கினான். பசுக்கள், அந்தச்சங்கத்தினுடைய ஓசையினாலும் வில்லினுடையவோசையினாலும் கொடியிலிருக்கின்ற மனிதவியல்பற்ற பூதங்களுடைய ஒலியினாலும் ஆகாயத்திலிருக்கின்ற தேவர்களுடையதும் (பூமியில்இருக்கின்ற) மனிதர்களுடையதுமான சப்தத்தினாலும் பயந்து, கன்றுகளுடன் கதறிக்கொண்டும் வாலை மேலேதூக்கி விசிறிக்கொண்டும் தெற்குத் திக்கைநோக்கித் திரும்பிவிட்டன. பிறகு, சூரனும் பகைவர்கூட்டங்களை அழிப்பவனுமான அந்தப்பீபத்ஸுவானவன் போர்க்களத்தில் இடையர்களைப்பார்த்து, 'பசுக்களைஓட்டிக்கொண்டு செல்லுங்கள்' என்று ஏவினான். பாண்டுநந்தனனான பீபத்ஸுவானவன், உத்தரனைப்பார்த்து, "(உத்தர!) பசுக்களின்முன்பக்கத்தைப்பார். பசுக்களையும் சீக்ரமாகத் திருப்பு. ராஜபுத்ர! இந்தக்கௌரவர்கள் விரைந்து திரும்புவதற்குள்ளாக இந்தப்பசுக்களுக்கும் படைகளுக்கும் வடபுறமாகச்செல். கௌரவர்களெல்லோரும் என்னுடையவீர்யத்தையும் பராக்ரமத்தையும் பார்க்கட்டும்" என்று அவனுக்கு உத்ஸாஹமுண்டாகும்படி கூறினான். அந்தக்கௌரவர்கள், ஸமீபத்தில் வருகின்ற அர்ஜுனனைப்பார்த்து யுத்தத்தில் லாபம்கிடைத்ததுபோல எண்ணித் தேர்களோடு விரைவாக எதிர்த்துவந்தார்கள். நன்குவிளங்குகின்ற பெரியயானைப்படையினாலும் குதிரைப்படையினாலும் ஈட்டிகளையும் கத்திகளையும் கையில்கொண்டவர்களும் தூக்கிப்பிடித்தவிற்களும் பாணங்களும் (மற்ற) ஆயுதங்களுமுள்ளவர்களுமான யுத்தவீரர்களாலும் (நிறைந்திருக்கின்ற) ஆததாயிகளான கௌரவர்களுடைய அந்தப்படைகள், ஆகாயத்தில் மின்னலுடன்கூடின மேகங்கள்ஸஞ்சரிப்பதுபோல ஸஞ்சரித்துக்கொண்டு விளங்கின. திருப்பப்பட்டதேர்களுள்ள அந்தப்படைகளைப்பார்த்ததும், பார்த்தனும் காற்றுப்போல (அதிவேகமுள்ளவனாக) அம்புகளால் கோரமான (அந்தக்கௌரவ)ஸேனாமுகத்தை (அடித்து) நடுக்கமுறும்படிசெய்தான். அந்தப் பகைவர்படையைச் சிறந்தவில்லினால் விரைவாகவிலக்கிவிட்டுப் பசுக்களையும்மீட்டுக்கொண்டு துர்யோதனனைக்குறித்து எதிர்த்துச் செல்லுகின்ற அர்ஜுனனை, சிறந்தகௌரவவீரர்கள் விரைவாக எதிர்த்துவந்தார்கள். பிறகு, பசுக்கள் மத்ஸ்யதேசத்தைக்குறித்து வேகமாக ஓடுகையில், எல்லாஇடையர்களும் கிரீடியை, அன்புள்ளவனாகக் கண்டு பசுக்களைஓட்டிக்கொண்டு திரும்பி மத்ஸ்யதேசத்தைநோக்கிச் சென்றார்கள்.

ஐம்பத்தாறுவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் உத்தரனுக்கு த்ரோணர்முதலியோருடைய கொடிஅடையாளத்தால் அவர்கள்பெயரைக்குறிப்பிட்டு வல்லமையையும் கூறியது.)

பாரதரே! பிறகு, வில்லாளிகளும் கோரரூபிகளும் ரதிகர்களுமான மூவாயிரம்கௌரவவீரர்கள் அர்ஜுனனைநாற்புறத்திலும் சூழ்ந்துகொண்டார்கள். கர்ணன், ஆயிரம்தேர்களோடு தனஞ்சயனை எதிர்த்தான். சந்தனுபுத்ரரும் புத்திசாலியுமான பீஷ்மர் ஆயிரம் ரதிகர்கள் தம்மைத்தொடர்ந்துவர அர்ஜுனனைஎதிர்த்தார். அவ்வாறே ஆயிரம்தேர்களாலும் உடன்பிறந்தவர்களாலும் சூழப்பட்ட துர்யோதனன் புகழினாலும் செல்வத்தினாலும் விளங்கிக்கொண்டு பின்பக்கத்தில்நின்றான். காலாட்படைகள் குதிரைகளோடு இடைவெளிகளில் நின்றன. தோமரங்களாலும் அங்குசங்களாலும் ஏவப்பட்டவைகளும் அச்சந்தரும்வடிவமுள்ளவைகளுமான யானைகளும் இருந்தன. மஹாத்மாக்களுடைய விஸ்தாரமான அந்தப்படைகளைக் கண்டு பாண்டவன் விராடபுத்ரனான அந்தஉத்தரனைப்பார்த்துச் சொல்லலானான்.

"நுனியில் பொன்யாகவேதி காணப்படும் கொடியும் சிவப்புக் குதிரைகள்பூட்டிய ரதமுமுள்ள இவர் த்ரோணர். இவர் ஆசார்யர்; ஸமர்த்தர்; சிறந்தபுத்தியுள்ளவர்; வேதங்களைஅறிந்தவர்; சூரர்களுள் மிகச்சிறந்தவர்; யுத்தத்தில் நிகரில்லாதவர்; தூரத்திலிருந்து லக்ஷ்யத்தைஅடிக்கும் தன்மையுள்ளவர்; மஹாரதர்; (என்விஷயத்தில்) அதிகக்ருபையுடையவர்; மஹாவீரர்; இவரைப்ரதக்ஷிணம் செய். இவரிடத்திலேயே இந்தஸனாதனதர்மமானது விரோதமின்றியிருக்கின்றது. உத்ஸாஹமுள்ளவனான என்னுடையமேனியில் த்ரோணர் (அம்புதொடுத்து) அடிப்பாரானால் பிறகு இவரை நான் அடிப்பேன். வேறுவிதமாக எனக்கு எண்ணமில்லை. ஸாரதியே! பாரதகுலத்தில் பிறந்தவர்களுக்கு முக்யஆசார்யரும் மஹாத்மாவுமான அந்தப்ராம்மணரோடு போர்புரியும்போது என்னுடைய(ரதத்தை) மெல்லநடத்து. எல்லாத்திக்குக்களிலும் ஸிம்மத்தினுடையவால் விளங்குகின்ற த்வஜத்தின் நுனியையுடையவர் பாரதர்களுடைய ஆசார்யருக்குப்புத்ரரான அச்வத்தாமா எவரிடத்தில் பாலஸூர்யனுக்கொப்பான ஒளியுள்ள கொடியின்நுனி காணப்படுகிறதோ அந்தஅச்வத்தாமா எல்லாஸைன்யங்களாலும் இந்த்ரனோடுகூடின தேவர்களா

னும்கூட ஜயிக்கமுடியாதவர். ஸாரதியே! அவருடன் நான்போர் புரியுங்கால் தேரைமெதுவாகநடத்து. எவருடைய கொடியின் நுனியில் ஸ்வர்ணமயமானகாளையானது எதிராகவிளங்குகிறதோ அவர் மஹாரதரும் சிறந்தஆசார்யர்களுள் முக்யருமான க்ருபர். இவர் வீர்யத்தில் த்ரோணருக்குஸமமானவர்; என்னுடையபிதாவுக்குச் சிறந்த நண்பர். ஸாரதியே! இவரோடு நான் போர்புரியுங்காலத்தில் (தேரை) மெதுவாகநடத்து. எவனுடையகொடியானது ஸ்வர்ணமயமானசங்குகளோடுகூடி யானைகட்டும்கச்சையினுல் அலங்கரிக்கப்பட்டு மின்னல்கூட்டங்களுக்கொப்பாக ரதத்தின்மீது தூரத்தில் விளங்குகிறதோ இவன் வைகர்த்தனனுனகர்ணன்; வில்லாளிகளுக்கு உபமானமாயிருப்பவன்; எம்மிடத்தில் எப்பொழுதும் உறுதியானபகைமையுள்ளவன்; எப்பொழுதும் க்ரூரமாகப்பேசுபவன்; எவனுடைய ஆச்ரயபலத்தினுலேயே துர்யோதனன் சகுனியுடன்சேர்ந்துகொண்டு ராஜ்யத்தினின்றும் எம்மைவிலக்கி இப்பொழுதும் மறுபடியும் எம்முடன் போர்புரியப்போகிருனே எவ்விதத்தாலும் ஜயிக்கமுடியாதஇவன் நாள்தோறும் என்னுடன்கூட வைரம்பாராட்டுகிருன். மஹாரதனை இந்தக்கர்ணன், ஜமதக்னியினுடையகுமாரரான பரசுராமருடையசிஷ்யன்; எல்லாஅஸ்த்ரங்களிலும் ஸமர்த்தன்; எல்லாச்சஸ்த்ரதாரிகளுள்ளும் சிறந்தவன்; யுத்தத்தில் ஒப்பற்றவீர்யமுள்ளவன்; (பகைவர்களை) பலமாகஅடிப்பவன்; சிறந்தபராக்ரமமுடையவன்; ஸூதபந்துவானஇவனுடன் நான் இப்பொழுது போர்புரியப்போகிறேன். பலிக்கும் இந்த்ரனுக்கும்நடந்த யுத்தம்போல எங்கள்இருவருக்கும் நடக்கப்போகிறயுத்தத்தை நீபார்ப்பாய். ஸாரதியே! சூரனும் ஸூதபுத்ரனும் வில்லாளியுமான அந்தமஹாரதனேடு போர்புரிகின்ற என்னுடைய (தேரை) விரைவாகநடத்து. எவனுடையரதத்தின் மத்தியில் மணிமயமான அரவக்கொடியானது இருக்கிறதோ இவன் குருகுலத்தில்பிறந்தவனும் கீர்த்தியினுல்சூழப்பட்டவனுமான துர்யோதனன். இவன் லக்ஷ்யத்தைத்தவருதவன்; நன்ருகஅடிப்பவன்; சுறுசுறுப்புள்ளகையுடையவன்; சிறந்தப்ரதாபமுடையவன். ஸாரதியே! இவனுடன்போர்புரிகிற என்னுடைய (தேரை) விரைவாகநடத்து. ஐந்துமட்டைகளோடும் வைடூர்யக்கல்மயமானமரத்தோடும் வெளுத்ததும் பளபளப்புள்ளதுமான பனைமரக்கொடியினுல் விளங்கிக்கொண்டும் கைகளுக்குஉறைபோட்டுக்கொண்டும் பெரியவில்லைப்பிடித்தும் தம்ஸேனையை உத்ஸாஹப்படுத்திநிற்கிருரோ இவர்தாம் முன்னர் பரசுராமரோடு எதிர்நின்று யுத்தஞ்செய்து தோல்வியடையாதவரும் விரை

வாகவும் எளிதாகவும் அடிப்பவரும் கைவேகமும் பராக்ரமமுமுள்ளவரும் சந்தனுபுத்ரரும் எங்களெல்லாருக்கும் பிதாமஹருமானபீஷ்மர்; எல்லாஸைநிகர்களுள்ளும் ஆயுதம்பிடித்தவரனைவருள்ளும் சிறந்தவர்; ஜயலக்ஷ்மியோடுகூடியவர்; துர்யோதனனுக்குவசப்பட்டு (அவனை) அனுஸரித்திருப்பவர். இவர், பிறகு (நம்மால்) எதிர்க்கத்தக்கவர். இவர் எனக்கு இடையூற்றை உண்டுபண்ணமாட்டார்" என்றுசொன்ஞன். பார்த்தன் உத்தரனிடத்தில் இவர்களைப்பற்றி உருவத்தினுலும் அடையாளங்களாலும் இவ்வாறு விரைவுடன்சொல்லி மறுபடியும் யுத்தத்திற்காக வேகம்பாராட்டினன்.

ஐம்பத்தேழாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன், பீஷ்மர்முதலியோருடன் போர்புரிந்து கர்ணனை அவமதித்தது.)

பிறகு வீர்யமுடையவரான அச்வத்தாமா, அவ்விடத்தில் பகைவர்களை அடக்குபவனும் ஸூதபுத்ரனுமான கர்ணனைப்பார்த்துச் சிரித்துக்கொண்டு, "ஏ! கர்ண! நீ ஸபைநடுவில், 'போரில் எனக்கொப்பானவன் ஒருவனுமில்லை' என்று பலவாறு பொருத்தமில்லாமல் புகழ்ந்துகொள்ளுகிறுயே. அதற்கு இதோஸமயம் வந்துவிட்டது. இதோ அர்ஜுனன் யமன்போலக் கோபங்கொண்டு எல்லாப்ராணிகளையும் அழிப்பவனுக யுத்தமுனையின்மத்தியில் சிங்கம்போல வ்ருத்தி அடைகிருன். நீ சூரனுயிருந்தால் போரில் [1]அச்சமின்றி (உன் வல்லமையைக்) காண்பி. வியப்பைத்தரத்தக்க செய்கையுள்ள பார்த்தனேடு போர்க்களத்தில் (போர்புரிவதற்கு) நீ திறமையற்றவனுயிருந்தால் புத்திசாலியான துர்யோதனனேடு மறுபடியும் ஸபையை அடைந்து அம்மானையும்அழைத்துக்கொண்டு விரைந்து ஸுகமாக ஆலோசனைசெய்" என்றுசொன்னுர்.

இவ்வாறுசொல்லியதைக்கேட்ட கர்ணன், கோபத்தினுல் இரண்டுகண்களையும் புரட்டிவிழித்துக் கௌரவர்களுக்கெதிரில் த்ரோணபுத்ரரைப்பார்த்து, "பீபத்ஸுவினிடத்தினின்றும், தேவகீபுத்ரனை க்ருஷ்ணனிடத்தினின்றும் எல்லாப்பாண்டவர்களிடத்தினின்றும் நான் பயப்படமாட்டேன். நான் க்ஷத்ரியதர்மத்தை அனுஸரித்

---

[1] வேறுபாடம்.

தவன். பலத்தினுல் மேலானவர்களும், தனுர்வேதத்தை ஆதாரமாகக் கொண்டு பிழைக்கின்றவர்களும், கர்ஜிக்கின்றவர்களுமான புருஷர்களுக்குக் கர்வம் உண்டாகிறது; ஸ்வரமும் கேட்பப்படாது. அதிகவேகமுள்ள அர்ஜுனனேடுகலந்துபோர்புரிகின்றஎன்னை ஆசார்ய புத்ரர் பார்க்கலாம். ஜயம் என்னிடத்தில்நிலைபெற்றிருக்கிறது" என்றுகூறினுன். குந்திபுத்ரனும் வெண்ணிறமுள்ளகுதிரைகளையுடையவனும் ரதிகர்களுள்சிறந்தவனுமான பீபத்ஸுவானவன், பிறகு, அட்டஹாஸம்செய்து திவ்யாஸ்த்ரத்தை வெளிப்படுத்திக்கொண்டு எதிர்த்துச்சென்றுன். மஹாராஜரே! அப்பொழுது மந்தபுத்தியுள்ளவனும் த்ருதராஷ்ட்ரபுத்ரனும் ராஜாவுமான அந்தத்துர்யோதனன் மனவலிமையுள்ளகர்ணனைப்பார்த்துப் பெருமூச்சுவிட்டுக்கொண்டு, "கர்ண! அந்த மத்ஸ்யராஜனுடைய அரண்மனையில் அர்ஜுனன் வாஸம்செய்துகொண்டிருப்பதாக நாம் அறிவோம். அதனுல், மாத்ஸ்யர்களுடைய பிருதியான இந்தப்பசுக்கூட்டத்தைக் கைப்பற்றினேம். இவ்விதமானுல் ஏராளமான பசுக்கூட்டத்தைவிட்டுவிட்டு (நகரத்துக்குச்) சென்றுவிடுவோம். இம்மையிலும் மறுமையிலும் (நமக்கு) அபகீர்த்திஉண்டாகாமலிருக்கட்டும். இல்லையேல் க்ஷத்ரியர்களுக்கு லாபத்தை உண்டுபண்ணக்கூடியசெய்கையானது யுத்தத்தைத்தவிர வேறென்றுமில்லை. ஆதலால், பார்த்தனேடு சண்டைசெய்வோம். ஓடவேண்டாம்" என்றுசொன்னுன். அந்தத்துர்யோதனராஜன் இவ்வளவுமட்டிலும் சொல்லிவிட்டு (பார்த்தனை) எதிர்த்துச்செல்வதில் விருப்பங்கொண்டான்.

அப்பொழுது வில்லாளிகளான பதினுயிரம்வீரர்கள், விட்டிற்பூச்சிகள் நெருப்பை எதிர்த்துச்செல்வதுபோல அர்ஜுனனைஎதிர்த்துச்சென்றுர்கள். அப்பொழுது கவசம்பூண்டவைகளும் காலாட்களால்நிறைந்தவைகளுமான குதிரைகளும், தோமரங்களையும் அங்குசங்களையும் கையில்கொண்டவர்களும் மிக்கமுயற்சியுள்ளவர்களும் யானைபழக்குவதில் திறமையுள்ளவர்களுமான மாவுத்தர்களால் ஏறப்பட்டவைகளும் பயங்கரமானஉருவத்தையுடையவைகளுமான யானைகளும் எதிர்த்துச்சென்றன. மிக்ககோபங்கொண்டவர்களும் விற்களையும் ஆயுதங்களையும் கையில்எடுத்தவர்களும் ரதிகர்களுள் சிறந்தவர்களுமான த்ரோணரும் பீஷ்மரும் கர்ணனும் வீர்யமுடையவனுன துர்யோதனனும் தோள்வலிமையுள்ளவரும் தனுர்வேதத்தை ப்ரதானமாகக்கொண்டவருமான அச்வத்தாமாவுமாகிய இவரும் வேகத்துடன் பார்த்தனை எதிர்த்துச்சென்று அவனை நான்குபக்கத்திலும்

சூழ்ந்துகொண்டு மழைக்காலத்து மேகங்கள்போல அம்புகளையும் ன்குதொடுத்தார்கள் அவர்கள் தனஞ்சயனை லாபம்போல் எண் ணிப் பத்துத்திசைகளையும் எதிரொலியிடும்படி செய்து அம்புக்கூட் டங்களைப் பொழிந்துகொண்டு எதிர்த்தனர். பிறகு, குந்திபுத்ரனும் வெண்ணிறமுள்ள குதிரைகளையுடையவனுமான பீபத்ஸுவானவன் அட்டஹாஸம்செய்து திவ்யாஸ்த்ரங்களை வெளிப்படுத்திக்கொண்டு திக்ச்ரேஷ்டர்களை எதிர்த்தான்; ஸூர்யன் கிரணங்களால் பூமியை மறைப்பதுபோலக் காண்டீவத்தினின்று விடுபட்ட அம்புகளால் திக் குக்களை மூடினன். ப்ரயோகிக்கப்பட்ட கூர்மையுள்ள அம்புகளால் தேர்கள் குதிரைகள் கொடிகள் கவசமணிந்தவீரர்களாகிய இவர்க ளுடைய (உடலில்) இரண்டுஅங்குலஇடங்கூட (அடிக்கப்படாமல்) இல்லை. பார்த்தனுடைய அத்ருஷ்டவிசேஷத்தாலும் உத்தரனுடைய குதிரைகளின் பழக்கத்திறமையாலும் அஸ்த்ரங்களுடைய தடையற்ற ஸஞ்சாரத்தாலும் கொடி காண்டீவம் இரண்டினுடைய திவ்யமான மாயாசக்தியினாலும் அந்த ரதத்தினுடைய கதியானது, மனோகதி போல இங்குமங்கும் ஸஞ்சரிப்பதில் தூரத்திலோ, அல்லது பக் கத்திலோ, செல்லமுடியாததும் மேடுபள்ளமுமான இடத்திலோ, பள்ளத்திலோ, ஸமமானதரையிலோ (எவ்விடத்திலும்) தடைப்பட வில்லை. யுத்தங்களில் அந்தத்தேரினுடைய அவ்வவ்விதமான கதி விசேஷங்களையும் அவ்வாறே பார்த்தனுடைய மிக்கவியப்பைச்செய் யும் வீர்யத்தையும் அவ்விதமான பலத்தையுங்கண்டு கற்றறிந்தபகை வர்கள் பயந்து நடுங்கி ரதங்களையும் திருப்பிக்கொண்டு ஓட ஆரம்பித் தார்கள். காலாக்னிபோல ப்ராணிகளைக்கொளுத்துகின்ற பீபத்ஸு வை எரிகிறநெருப்பைப்போலப் பகைவர்கள் பார்ப்பதற்குச் சக்தியற் றவர்களானார்கள். அர்ஜுனனுடையபாணங்களால் பிளக்கப்பட்ட அந்தஸைன்யங்கள் ஸூர்யனுடையகிரணங்களால் வ்யாபிக்கப்பட்ட நெருங்கினமேகங்கள்போல விளங்கின. (வஸந்தகாலமானது) நிறை க்கப்பட்ட நல்லபுஷ்பங்களால் அசோகமரங்கள் அடர்ந்த காடுகளைச் சிவக்கச்செய்வதுபோலப் பார்த்தன் நெருங்கியிருக்கின்ற (கௌரவர் களுடைய) படையை ரக்தத்தால் சிவப்பாகச் செய்தான். காற்றானது ஆயிரக்கணக்காக அர்ஜுனனுடைய அம்புகளால் அறுக்கப்பட்ட பற்பலவிதமான குடைகளையும் கொடித்துணிகளையும் ஆகாயத்தில் எடுத்துக்கொண்டு சென்றது. அர்ஜுனனுடையபலத்தைக்கண்டு பயந்து அவனால்அறுக்கப்பட்ட நுகங்களுடன் அவ்விடத்தைவிட்டுத் தேரினின்று பத்துத்திக்குக்களிலும் ஓடியகுதிரைகள் கூர்மையான

அம்புகளால் அறுக்கப்பட்ட முன்கால்களையுடையவைகளாகித் தலைகளால் முதலில் பூமியில் விழுந்தன; (பிறகு) பின்புறங்களால் பூமியை அடைந்தன. அவ்வாறே சிறந்தயானைகள் (மற்ற) யானைகளைக் கண்களிலும் மூக்குகளிலும் தந்தங்களிலும் தந்தக்கட்டுகளிலும் மற்ற மர்மஸ்தானங்களிலும் அடித்துக் கொன்றன. உயிரையிழந்த கௌரவர்களுடையவும் யானைகளுடையவும் சரீரங்களால் போர்க்களமானது மேகங்களால் ஆகாயம்மூடப்படுவதுபோல க்ஷணத்துக்குள் மூடப்பட்டது. சிறந்தகைகளுள்ள அர்ஜுனன் அட்டஹாஸஞ்செய்துகொண்டு வடவைத்தீயினின்று உண்டாயிருக்கின்ற காலாக்னிபோலத் திவ்யாஸ்த்ரங்களால் சூழப்பட்டு ஜ்வலித்தான். யுகாந்தகாலத்தில் உக்ரமான ஜ்வாலைகளுள்ளநெருப்பானது காலத்தினால் பக்வமாயிருக்கின்ற ஸ்தாவரஜங்கமவடிவமான உலகமனைத்தையும் மிச்சமின்றி எரிப்பதுபோலப் பார்த்தன் (கௌரவஸேனையை) எரித்தான். அந்தஅர்ஜுனன் அஸ்த்ரதேஜஸ்களினாலும் வில்லினுடையஒலியினாலும் அத்ருஷ்டத்தினாலும் வீர்யத்தினாலும் துர்யோதனனுடைய அந்தஸேனையிலுள்ள பகைவர்களுடைய யுத்தத்திலுள்ளவல்லமையை இராக்காலமானது பெரும்பான்மையாக உயிருள்ளவைகளுடைய செய்கையை ஒடுக்குவதுபோல ஒடுக்கி அடக்கினான். அவன் பகைவர்களை விரைவாக மீறிச்சென்றான். அவர்களும் (அவனை) விரைவாக எதிர்த்தார்கள். ஸமீபத்தில் விரைந்துவருகின்றதும் உறுதியுள்ளதும் வீணாகாததும் மனிதர்களுடையஅஸ்த்ரத்தினும் மேற்பட்டிருக்கின்றதுமான இவனுடையஅஸ்த்ரத்தையும் மனிதவியற்கைக்குமேம்பட்ட விக்ரமத்தையுங் கண்ணுற்று அந்தக்கௌரவர்கள் பயந்தார்கள். பக்ஷிகளுடைய இறகுகளால் நான்குபக்கத்திலும் கட்டப்பட்டவைகளும் ஆகாயத்தில்பறக்கின்ற பறவைகள் போன்றவைகளும் (பகைவர்களுடைய) உதிரத்தையும் உயிரையும் உறிஞ்சுகின்றவைகளுமான அர்ஜுனனுடையஅம்புகளால் ஆகாயம் நாற்புறத்திலும்மூடப்பட்டது. காண்டீவத்தைவில்லாகக்கொண்ட அர்ஜுனனால்விடப்பட்ட அம்புகள் ஆகாயத்தில் கருடனுடையவேகம்போன்ற வேகத்தையுடையவைகளாக(ப் பறந்துசென்று) பகைவர்களுடைய மர்மஸ்தானங்களில் பாய்ந்தன. பிறகு, கவசங்களும் ஸாரதியும் குதிரைகளுடையஸ்வர்ணாலங்காரங்களும் ஸூர்யனுக்கொப்பானகிரீடமும் (ரதத்தின்மீதுள்ள) புலித்தோலும் ரதத்தினுடையஎல்லாஅவயவங்களும் பனியினால் ப்ராணிகள்மூடப்படுவதுபோலப் பகைவர்களுடையஅம்புகளால் மூடப்பட்டவைகளாக விளங்கின. ஒருதடவைகூட அந்த ரதத்தைப் பகைவர்

கள் (எதிர்த்துத்தாக்க) சக்தியுள்ளவர்களாகவில்லை; (அதோடு)பழ குவதற்கு எவ்விதம் சக்தியுள்ளவர்களாவார்கள்? கௌரவர்களால் பழகப்படாத அந்தத்தேரானது அவர்களைஎதிர்த்துவந்தது. அந்த அர்ஜுனனுடையபாணங்கள் சத்ருக்களுடையசரீரங்களில் தடைப் படாததுபோல, [1]இரண்டுவிதமாகவகுக்கப்பட்டிருக்கின்றபடைகளில் அவனுடையதேரும் தடைப்படவில்லை. தோளியான அந்தஅர்ஜுனன் பெருங்கடலில் மிக்கவேகத்தோடு விளையாடுகின்றபாம்புபோல அந்தப்பகைவர் படையில்நுழைந்து அதைக்கலக்கினான். எப்பொழு தும் அளவுக்குமீறி (அம்புகளைத்)தொடுக்கின்ற கிரீடியினுடைய எல்லாஒலியையுங்காட்டிலும் அதிகமான வில்லினுடையஒலியானது ப்ராணிகளால் கேட்கப்பட்டது. அந்தப்போர்க்களத்தில் அப்பொ ழுது வெளியற்றஅம்புகளால் நனறாகஅறுக்கப்பட்டயானைகள் ஸூர்ய கிரணங்களால் [2]சூழப்பட்ட மேகங்கள்போலக் காணப்பட்டன. எல் லாத்திசைகளிலும் சுழன்றுவருகின்றவனும் இடமாகவும் வலமாக வும் (அம்புகளைத்) தொடுக்கின்றவனுமான அர்ஜுனனுடையவில்லா னது போர்க்களத்தில் எப்பொழுதும் வட்டமாகவேகாணப்பட்டது. உருவமில்லாதவஸ்துக்களில் கண்கள் ஒருபொழுதும் செல்லாதது போலக் காண்டீவத்தை வில்லாகக்கொண்ட அந்தஅர்ஜுனனுடைய பாணங்கள் லக்ஷ்யமல்லாதவைகளில் விழவில்லை. யுத்தகளத்தில் அர் ஜுனனுடையதேரின்வழியானது ஒரேஸமயத்தில் காட்டைஅழிக் கும் ஆயிரம் பெரியயானைகளின்(வழிபோல) மிகவும் கோரமாயிருந் தது. பார்த்தனாலேயே துன்பமடைந்த பகைவர்கள், 'பார்த்தனுக்கு ஜயத்தைவிரும்புவதால் இந்த்ரனே எல்லாத்தேவர்களுடனும் சேர் ந்து நம்மைக்கொல்லுகிறானென்பது நிச்சயம்' என்றுஎண்ணினார்கள். போரில்பகைவர்களை அதிகமாகக்கொல்லுகின்ற ஸவ்யஸாசியை(கௌ ரவர்கள்) அர்ஜுனஉருவத்தோடு ப்ரஜைகளைப்பக்ஷிக்கின்ற கால னைப்போல எண்ணினார்கள். கௌரவஸேனாவீரர்களுடைய சரீரங்கள் பார்த்தனால் அடிக்கப்படாமலிருந்தாலும் பார்த்தனுடையசெய்கை யைக் கண்டமாத்ரத்தில் பார்த்தனால் அடிக்கப்பட்டவைகள்போலக் கீழேவிழுந்தன. கௌரவர்களுடையதலைகள், காலவேறுபாட்டினால் ஓஷதிகளுடையசிரங்கள் வணங்குவதுபோல அர்ஜுனனிடத்திலிரு ந்து உண்டானபயத்தினால் வணங்கின. அர்ஜுனன் கோபத்தினால் (பகைவர்படைகளைப் போரினின்று) புறங்காட்டிஓடுகின்றவைகளும் கோபமுள்ளவைகளுமாகச் செய்தான். ஓரிடத்தில் பிளக்கப்பட்ட

---

[1] 'பகைவர்களின் படைகளில்' என்பது வேறுபாடம். [2] வேறுபாடம்.

கௌரவஸேனையின் முன்னணிகள் உதிரப்பெருக்கினால் பூமியை மிகச் சிவந்தநிறமுடையதாகச்செய்தன. ரக்தத்தோடுகூடியவைகளும் காற்றினால் தூற்றப்பட்டவைகளுமான புழுதிகளாலும் அந்தக்காற்றினாலேயே தூற்றிவிடப்பட்ட ஸூக்ஷ்மமான ரக்தத்துளிகளாலும் (பூசப்பட்டவர்களும்) ரக்தத்தால்நனைந்திருக்கின்ற ஆயுதங்களாலடிக்கப்பட்டவர்களும் ரக்தத்தால் நனைக்கப்பட்டவர்களும் ரக்தங்களில் அமிழ்ந்தவர்களுமான அந்தவீரர்கள் கிரீடியினால் கொல்லப்பட்டார்கள். அந்தஸமயத்தில் ஸூர்யனுடையகிரணங்கள் மிகவும் சிவந்தவைகளாயின. அந்தக்ஷணத்தில் ஆகாசமானது ஸந்த்யாகாலத்துமேகம் போலச் சிவந்ததாயிற்று. ஸூர்யன்கூட அஸ்தகிரியைஅடைந்து திரும்பினாலும் திரும்புவான். பாண்டவன் பகைவனைவெல்லாமல் திரும்பமாட்டான். எப்பொழுதும் வீண்பேச்சுக்களைப்பேசுவதில் ஸமர்த்தர்கள், பகைவனைவெல்லாமல் திரும்புவார்கள். ஸபலமான ஆண்மையுள்ளஅர்ஜுனன் யுத்தத்தில் சௌர்யமுடையவர்களும் ஆண்மையில்நிலைபெற்றவர்களும் விற்களைப்பிடித்தவர்களுமான அவர்களனைவர்களையும் திவ்யாஸ்த்ரங்களால் எதிர்த்தான். அந்தஅர்ஜுனனே த்ரோணர்மீது எழுபத்துமூன்றுநாராசங்களை விடுத்தான்; சகுனியை எண்பதுபாணங்களாலும் அச்வத்தாமாவை ஏழுபாணங்களாலும் துஸ்ஸஹனைப் பத்துப்பாணங்களாலும் அடித்தான்; துச்சாஸனனைப் பன்னிரண்டுபாணங்களாலும் சரத்வானுடையகுமாரரான க்ருபரை மூன்றுபாணங்களாலும் சந்தனுபுத்ரரான பீஷ்மரை அறுபதுபாணங்களாலும் நடுமார்பிலடித்தான். இந்த்ரகுமாரனான அந்த அர்ஜுனன் பகைவரினிடையில் கர்ணனை, துவைந்ததும் கூர்மையுள்ளதுமான கர்ணிஎன்கிற சிறந்தபாணத்தினால் அடித்தான். உறுதியானவில்லுள்ளஅர்ஜுனனால் விடப்பட்ட கூரிய அந்தஅம்பானது கவசத்தையணிந்த கர்ணனை நன்றாகப் பிளந்துவிட்டுப் பூமியையும் பிளந்துகொண்டு சென்றது. பிறகு, பகைவர்களைஅடக்குபவனான அர்ஜுனன் அவனுடைய நான்குகுதிரைகளையும் நான்குக்ஷுராங்களால்கொன்று ஸாரதியினுடையதலையையும் சரீரத்தினின்று அறுத்துத்தள்ளினான். அர்த்தசந்த்ரபாணத்தினால் அவன்கையிலிருந்தவில்லையும் வெட்டினான். சிறந்தபாக்யமுள்ளவனும் எல்லாஅஸ்த்ரங்களிலும் கரைகண்டவனுமான அந்தக்கர்ணன் குதிரைகளும் ஸாரதியும் கொல்லப்பட்டு ரதத்தைஇழந்து அடிக்கப்பட்டபொழுது படையானது தோல்வியடைந்தது.

ஐம்பத்தெட்டாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன், விகர்ணன்முதலானவர்களை வென்று கர்ணனுடைய இளைய ஸஹோதரனைக்கொன்றதும், கர்ணன்தோற்று ஓடியதும்.)

(அர்ஜுனனால்) நன்றாக அடிக்கப்பட்ட அந்தப்படைமுழுவதும அவ்வாறு (பெருகுகின்ற) பெருவெள்ளம்போல ஆவாரித்து, பெருங்கடலானது கரையை அடைந்துநிற்பதுபோலப் பீஷ்மரை அடைந்துநின்றது. பகைவர்களைவாட்டுபவரும் தோள்வலியுள்ளவரும் யுத்தங்களில் (பகைவர்களால்) வெல்லப்படாதவரும் யுத்தஞ்செய்யும்விதத்தை நன்றாகஅறிந்தவருமான காங்கேயர் அப்படைகள் எல்லாவற்றையும் ஸமாதானப்படுத்திப் பிறகு அணிவகுத்துத் தேர்களாலும் யானைகளாலும் குதிரைகளாலும் நிறைந்ததும் பகைவர்படைகளால் உடைக்கமுடியாததும் சூரர்களால் நன்றாகப் பாதுகாக்கப்பட்டதுமான (அந்தக்கௌரவஸேனையை யுத்தத்துக்காக) ஒன்றுசேர்த்தார். ஆசார்யராலும் துர்யோதனனாலும் ஸூதபுத்ரனாலும் க்ருபராலும் பீஷ்மராலும் ரக்ஷிக்கப்பட்டவைகளும் கொல்லத்தகாதவைபோலிருப்பவைகளும் (பகைவர்களால்) நெருங்கமுடியாதவைகளும் தேர்களாலும் குதிரைகளாலும் யானைகளாலும் வ்யாபிக்கப்பட்டவைகளும் வரிசைப்படுத்தப்பட்டவைகளும் பெரியகொடிகளுள்ளவைகளுமான அந்தக்கௌரவர்களுடைய படைகளைக்கண்டு பகைவரையழிப்பவனும் கிரீடம்தரித்தவனும் காண்டீவத்தை வில்லாகக்கொண்டவனுமான அர்ஜுனன் பிறகு விராடபுத்ரனை அழைத்து, "உத்தர! நீ முயற்சியுடன் கடிவாளங்களை நன்றாக இழுத்துப்பிடித்துக் குதிரைகளை அடக்கி நன்குகவனித்து வேகமாக நடத்து. பகைவனான இந்தக்கர்ணனைப் போர்புரிவதற்காக வரிக்கிறேன். தேரின்மீது (நாட்டப்பட்டிருக்கின்ற) ஸ்தம்பத்தில் பார்க்க அழகியதும் பலவாறு விசித்ரமானதும் புரளுகின்றதும் நெருப்பைப்போல ஒளிருகின்றதுமான யானைகட்டும்சங்கிலி காணப்படுகிற இதுதான் கர்ணனுடைய சிறந்த படை. பொன்னால்செய்யப்பட்ட மேல்விரிப்பும் வார்களுமுள்ள இந்தவெள்ளைக்குதிரைகளை இந்தப்படையோடு விரைவில் சேரும்படி செய். அவ்விடத்தில் (என்னுடைய) வேகத்தைமுழுதும் காண்பிப்பேன். இந்தத்தேர்வீரர்களுடையகூட்டத்தை அடைவாயாக. ஸூதபுத்ரன், யானையானது யானையுடன் சண்டைசெய்வதற்குவிரும்புவது

போல என்னுடன் சண்டைசெய்ய எப்பொழுதும் விரும்புகிறான். நீ என்னை, துர்யோதனனை அடுத்திருத்தலாலுண்டான இறுமாப்புடைய அந்த ஸூதபுத்ரனையே அடையும்படிசெய். இந்த்ரன் வஜ்ராயுதத்தினால் வ்ருத்ரனைத்தள்ளியதுபோல நான் அவனைத் தேரின் நடுவில்தள்ளுவேன்" என்றுகூறினான். பிறகு, அந்தவிராடகுமாரன் அதிவேகமுள்ளவைகளும் பெரியவைகளும் பொன்னால்செய்தவார்களுள்ளவைகளுமான அந்தக்குதிரைகளால் தேராளிகளுடைய அந்தப் படையை நாசஞ்செய்துகொண்டு யுத்தபூமியின்மத்தியில் பாண்டவனை நடத்தினான். அதிகதேஜஸுடன்வருகின்ற அந்தஅர்ஜுனனைக்கண்டு அந்தத் தேர்வீரர்களுடையகூட்டங்கள் எதிர்த்து ஓடிவந்து புலியினால்கவரப்பட்ட காளையைப்போன்ற ஸூர்யகுமாரனைப் போரில் பாதுகாத்தன. யௌவனமுள்ளவர்களான சித்ராங்கதன், வீரனான சித்ரரதன், ஸங்க்ராமஜித், துஸ்ஸஹன், சித்ரஸேனன், விவிம்சதி, துர்முகன், துர்ஜயன், விகர்ணன், துச்சாஸனன், சகுனி, சோணன், நிஷேதன்ஆகியஇவர்கள் அதிவேகமாக அந்தக்கர்ணனை அநுஸரித்தார்கள். மிக்கபலமுள்ள அந்தராஜபுத்ரர்களும் ஸஹோதரர்களோடுகூடி, கர்ணன் பார்த்தனை அடைந்துவிட்டானென்பதைக்கண்ணுற்று, விற்களைஎடுத்துக்கொண்டுசென்று அம்புகளுடைய ஜ்வாலைகளைப் போர்க்களத்தில் தனஞ்சயன்மீது நான்குபக்கத்திலும் இறைத்தார்கள். பார்த்தன் வில்லில் நாண்கயிறுகளாகிற அநேகதந்திகளுள்ளதும் [1]ப்ராஸங்களாகிற உபவீணைகளுள்ளதும் அம்புக்கூட்டங்களாகிற வீணைவாசிக்குங்கோலுள்ளதும் கைநுனியாகிற யந்த்ரமுள்ளதும் உறுதியுள்ள வில்லாகிறதண்டமுள்ளதுமான வீணையை அந்தப்பகைவருடைய ஸமீபத்தில் விரைவாக வாசித்தான். அவ்விதமான நெருங்கினயுத்தம் தொடங்கியிருக்குங்காலத்தில் கௌரவர்களுள் அதிகரூரனானவிகர்ணன் தேரின்மீதிருந்து பயங்கரமான [2]விபாடங்களை வர்ஷித்துக்கொண்டுவந்து பீமனுடைய இளையஸஹோதரனும் அதிரதனுமான அர்ஜுனனைத் தாக்கினான். பிறகு, அர்ஜுனன் பொன்னால் அலங்கரிக்கப்பட்டதும் உறுதியான நாண்பூட்டியதுமான விகர்ணனுடையவில்லைஅறுத்து அவன்கொடியையும்அடித்துக் கீழே தள்ளினான். அறுக்கப்பட்டகொடியுள்ள அந்தவிகர்ணனும் (போர்க்களத்தைவிட்டு) விரைவாக ஓடிவிட்டான். பகைவர்களுடையகூட்டத்தைத் துன்புறுத்துகின்றவனும் மனிதரால்செய்யமுடியாத செய்கைகளைச்செய்கின்றவனுமான அந்தப்பார்த்தனைப் பகையைப்பொறு

[1] ஈட்டிகள். [2] 'ஸ்தூலதண்டம்என்கிறபாணம்' என்பது பழையஉரை.

தவனான சத்ருந்தபன், கூர்மநகமென்கிற பாணத்தால் அடித்தான். அதிரதனும் ராஜாவுமான அந்தச்சத்ருந்தபனால் அடிக்கப்பட்ட அந்தத்தனஞ்சயன் பகைவர்களுடையபடையில்புகுந்து சத்ருந்தபனை ஐந்துபாணங்களால் விரைவாகஅடித்துப் பிறகு அவனுடையஸாரதியைப் பத்துப்பாணங்களால் கொன்றான். வேந்தரே! பிறகு, பரதச்ரேஷ்டனான அர்ஜுனனால் சரீரத்திலுள்ள கவசத்தைப்பிளந்துகொண்டு செல்லுகின்றஅம்பினால் அடிக்கப்பட்ட அந்தச்சத்ருந்தபன் உயிரை இழந்து காற்றினால்முறிக்கப்பட்ட மரமானது மலையுச்சியினின்று விழுவதுபோலப் போர்க்களத்தில் விழுந்தான். தேராளிகளுள் சிறந்தவனும் உத்தமவீரனுமான அர்ஜுனனால் போரில்தோல்வியடைந்த தேராளிகளிற்சிறந்த அந்தவீரர்கள் காற்றடிக்கும்போது காற்றிலகப்பட்டு மிகவும்நடுக்கமுற்ற பெருங்காடுகள்போல நடுங்கினார்கள். புருஷச்ரேஷ்டர்களும் யௌவனமுள்ளவர்களும் நல்லவேஷமுள்ளவர்களும் தனங்களை (பிறருக்கு)கொடுக்கும் தன்மையுள்ளவர்களும் இந்த்ரனுக்கொப்பான வீர்யமுள்ளவர்களும் யுத்தத்தில் இந்த்ரகுமாரனால் தோல்வி அடைவிக்கப்பட்டவர்களும் பொன்னாலும் எஃகினாலும் செய்யப்பட்டகவசத்தால் கட்டப்பட்டவர்களும் இமயமலையைச்சேர்ந்தகாட்டில் நன்றாகவளர்ந்த யானைகள்போன்றவர்களுமான போர்வீரர்கள் பார்த்தனால் அடிக்கப்பட்டு யுத்தபூமியில் படுத்துத் [1]தீர்க்கநித்ரைசெய்தார்கள். புருஷரிற்சிறந்தவனும் காண்டீவத்தை வில்லாகக்கொண்டவனுமான அந்தஅர்ஜுனன் அவ்விதம் போரில் பகைவர்களைக்கொன்று முதிர்வேனிற்காலத்தின்முடிவில் காட்டைஎரிக்கின்றநெருப்புப்போலப் போர்க்களத்தில் திசைகளிலும் மூலைத்திசைகளிலும் ஸஞ்சரித்தான். (காற்றானது) வஸந்தகாலத்தில் சருகுகளைக் கீழேஉதிர்த்துவிட்டுப் புழுதியை ஆகாயத்தில் இறைத்துக்கொண்டு உலாவுவதுபோல அதிரதனானகிரீடியானவன் பகைவர்மீது (அம்புகளை) இறைத்துக்கொண்டு ஒருதேருடன் போர்க்களத்தில் ஸஞ்சாரஞ்செய்தான். பிறகு கிரீடத்தைத்தரித்தவனும் தீரத்தன்மையுள்ளவனுமான அர்ஜுனன் கர்ணனுக்கு உடன்பிறந்தவனும் தேரில் (பூட்டப்பட்ட) சிவப்புக்குதிரைகளுள்ளவனுமான ஸங்க்ராமஜித்தினுடைய குதிரைகளைக்கொன்று ஓரம்பினால் (அவனுடைய) தலையையும் அறுத்தான். ப்ராதா கொல்லப்பட்டவுடனே, வீர்யமும் மதமும் ப்ரதாபமுமுள்ளவனும் ஸூதபுத்ரனுமானகர்ணன் இரண்டுதந்தங்களையும் ஆயுதமாகக்கொண்டு மஹாபலமுள்ள கஜராஜாவானது

1 இறந்தனர் என்பது பொருள்,

ஸிம்மத்தை எதிர்ப்பதுபோல (அர்ஜுனனை) எதிர்த்துவந்தான். ஸூர்யகுமாரனான அந்தக்கர்ணன் பாண்டுபுத்ரனான பார்த்தனைப் பன்னிரண்டுபாணங்களால் அடித்து (அவனுடைய) குதிரைகளையெல்லாம் அங்கங்களில் அம்புகளாலடித்து (அவனுடைய ஸாரதியான) விராடபுத்ரனையும் அடித்தான். எல்லாவிதத்திலும் நிறைந்திருக்கின்ற தேஜஸுள்ளவனும் பெரியவில்லாளியும் வீரனுமான கிரீடியானவன் போரில் எதிர்த்துவருகின்ற அந்த வைகர்த்தனனை (அம்புகளால்) மூடிப் பகைவர்களுடையகூட்டங்களையும் தடுத்தான். பிறகு, மனத்தினாலெண்ணமுடியாத மஹிமையுள்ள கிரீடியானவன், கர்ணனுடைய முன்னிலையில் ஸஞ்சரிப்பவர்களையும் பின்புறத்தைக் காப்பவர்களையும் கொன்று சிறகுகளைவிரித்துக்கொண்டு கருடன் ஸர்ப்பத்தை எதிர்த்து அருகில்வருவதுபோல (கர்ணனை) அருகில் எதிர்த்துவந்தான். கௌரவர்கள், எல்லாவில்லாளிகளுள்ளும் சிறந்தவர்களும் மஹாபலசாலிகளும் பகைவரெல்லாருடைய (பராக்ரமத்தையும்) நேர்நின்றுதாங்கும் திறமையுடையவர்களுமான அந்தக்கர்ணனையும் பார்த்தனையும் யுத்தத்தில்பார்க்க விருப்பமுற்று யுத்தத்தை நிறுத்திவிட்டு நின்றார்கள். பாண்டவன் வெளிப்படையாக வ்ருத்தியடைந்த கோபமுள்ளவனும் குற்றவாளியுமானகர்ணனைக் கோபத்துடன்பார்த்து மேகமானது பெருமழையால் (பூமியை) மறைப்பதுபோல ஒருநொடியில் அவனைக் குதிரையோடும் தேரோடும் ஸாரதியோடும் பாணங்களால் மூடினான். பிறகு, கிரீடியினால் பாணங்களால்மூடப்பட்ட கர்ணனுடைய தேரைப்பார்த்து, குதிரைகளையும் தேர்களையும் யானைகளையுமுடையவர்களும், பீஷ்மரை முதன்மையாகக்கொண்டவர்களுமான பரதச்ரேஷ்டர்களைச்சேர்ந்த யுத்தவீரர்கள் ஆரவாரஞ்செய்தார்கள். பிறகு, மஹாத்மாவான அந்தக்கர்ணனும் அர்ஜுனனுடையகைகளால்விடப்பட்ட அந்த அம்புகளை அம்புக்கூட்டங்களால் விரைவாகத் திருப்பி அடித்துவிட்டு வில்லுடனும் பாணத்துடனும்கூடி, பொறிகளுடன்கூடின நெருப்புப்போல விளங்கினான். பிறகு கர்ஜனைகளாலும் தோள்தட்டுதல்களாலும் ஸிம்மநாதங்களாலும் கர்ணனைக் கொண்டாடுகின்ற கௌரவர்களுடைய கைகளுடன்கைகள்கொட்டுகிற ஒலியானது சங்கங்களாலும் பேரிகளாலும் பணவங்களாலும் நெருங்கியதாகத்தோன்றியது. பிறகு, கர்ணன், நான்குபக்கத்திலும் வாலைச்சுழற்றுகின்ற பெருங்கொடியையுடையவனும் ரதிகர்களுள் சிறந்தவனும் கௌரவர்களுள் மிகச்சிறப்புற்றவனும் காண்டீவத்தினால் மிக்கவோசையையுண்டுபண்ணுகிறவனுமான கிரீடியைப்பார்த்துக்

கர்ஜித்தான். குந்திபுத்ரனுனகிரீடியும் கர்ணனைக் குதிரைகளோடும் கொடியோடும் ரதத்தோடும் ஸாரதியோடும்கூடத் துன்பமுறும்படி செய்து ஸந்தோஷத்தினால் விரைவாகப் பிதாமஹரையும் த்ரோண க்ருபர்களையும்பார்த்து ஸிம்மநாதஞ்செய்தான். கர்ணன் வேகமுள்ள கூர்மையான அனேக அம்புக்கூட்டங்களை யுத்தத்தில் பார்த்தன்மேல் பொழிந்தான். அர்ஜுனனும் கர்ணனைக் கூர்மையுள்ள அம்புக்கூட்டங்களால் நன்றாகமூடினான். பழுதுபடாத சாமாரிகளைப்பொழிகின்றவர்களும் அஸ்த்ரங்களை அறிந்தவர்களுமான அவ்விருவர்களுக்கும் பெரும்போர் நடந்தது. ஜனங்கள் ஒருநொடிப்பொழுதில் (அவ்விருவரையும்) ராஹுவினிடத்தினின்றுவிடுபட்ட சந்த்ர ஸூர்யர்களைப் போல (சரக்கூட்டினின்றும்விடுபட்டவர்களாக)க் கண்டார்கள். பார்த்தனால் கொல்லப்பட்டவர்களும் யௌவனமுள்ளவர்களும் அழகிய தலைமயிர்களையுடையவர்களும் தங்கத்தினாலும் எஃகினாலும்செய்யப்பட்ட கவசமணிந்த சரீரமுள்ளவர்களுமான தேர்வீரர்கள் இமயமலைச்சாரலில் வெட்டப்பட்டமரங்கள்போல யுத்தபூமியில் (விழுந்து) மரித்தார்கள். காண்டீவத்தை வில்லாகக்கொண்ட அந்தஅர்ஜுனன் யுத்தத்தில் அவ்விதமாகப் பகைவர்களைக்கொன்று அவர்களை ஊதினான்; வெய்யில்காலத்துமுடிவில் அக்நியானது காட்டைக்கொளுத்துவதுபோல யுத்தத்தில் (பகைவர்களை எரித்துக்கொண்டு) மூலைத்திசைகளிலும் திசைகளிலும் ஸஞ்சரித்தான். காற்றானது வஸந்தகாலத்தில் உலர்ந்தஇலைகளை இறைப்பதுபோல, அதிரதனுனகிரீடியானவன், பகைவர்களை ஊதிக்கொண்டு போர்க்களத்தில் தேரோடு ஸஞ்சரித்தான். அழகியகிரீடத்தைஅணிந்த அர்ஜுனன், இந்த்ரன் யுத்தத்தில் சத்ருக்களைஓட்டுவதுபோல அந்தவீரர்களான ரதிகர்களுடையகூட்டத்தை ஓடும்படிசெய்து சிறந்தபாணங்களால் அனேக சத்ருக்கூட்டங்களை மூடினான். சூரனும் கௌரவர்களுள்சிறந்தவனுமான கிரீடியானவன், அப்பொழுது கர்ணனைப்பார்த்துக் கர்ஜித்துக் கொண்டு சொல்லலானான்.

"கர்ண! 'யுத்தத்தில் எனக்குஸமானன் ஒருவனும்இல்லை' என்று ஸபையின்நடுவில் பலவாறாகப் பொருத்தமில்லாமல் நீ பேசுகிறாயல்லவோ? அதற்கு (ஸமயம்) இப்பொழுது வந்துவிட்டது. ஸபையில் ஆண்மையை அதிகமாகப்பேசி முக்யமானதர்மத்தைவிட்டுவிட்டு, நீ செய்யவிரும்புகிறகார்யம் உன்னால் செய்யத்தகாததென்று நினைக்கிறேன். ராதாபுத்ர! உன்னால் முன்பு 'எனக்குஸமானன் ஒருவனும்இல்லை' என்று சொல்லப்பட்டவார்த்தையைக் கௌரவர்க

னுடையமத்தியில் என்னுடன்எதிர்த்து உண்மையாகச்செய். உன்னால் அப்பொழுது ஸபையில் துன்பப்படுத்தப்பட்டவளான பாஞ்சாலியைப்பார்த்திருந்த (என்னிடத்தினின்று) இப்பொழுது அந்தச் செய்கையின்பலனைத் தனியே அநுபவிப்பாயாக. கெட்டபுத்தியுடையவனே! ராதாபுத்ர! தர்மபாசத்தால் கட்டுப்பட்டிருந்தஎன்னால் உன்னுடைய எந்தப்பாபச்செய்கையானது பொறுக்கப்பட்டதோ அந்தப் பாபச்செய்கையினுடையபலனை அநுபவிப்பாயாக. கர்ண! இங்கே வா. இப்பொழுது என்னோடு இவ்விடத்தில் யுத்தஞ்செய். அந்தக் கௌரவரனைவரும் ஸைனிகர்களுடன்கூட (நம்மிருவருடையயுத்தத்தையும்) பார்த்துக்கொண்டிருக்கட்டும். ராதாபுத்ர! இப்பொழுதுதான் நீ என்னுடையயுத்தத்தினின்றும் ஓடினாய். உன்னுடைய இளையஸஹோதரனே கொல்லப்பட்டுவிட்டான். நீ என்னகாரணத்தினால் உயிரோடிருக்கிறாய்? உன்னைத்தவிர வேறு எந்தமனிதன் உடன்பிறந்தவனைப் பறிகொடுத்துப் போர்க்களத்தையும்விட்டோடி ஸாதுக்களிடங்களில் (தன்னை ஆண்மையில்) நிலைபெற்றவனென்று இவ்விதம் சொல்லிக்கொள்வான்" என்றான்.

கர்ணன், "பார்த்த! வாக்கினால்சொல்லுகிறதை நீ செய்கையினால் அநுஷ்டித்துக்காட்டு. பூமியில் செய்கையினால் ஒப்பில்லாத என்னைகாட்டிலும் நீ வாக்கினால்மாத்ரம் விசேஷித்தவன். பார்த்த! உன்னுடைய அவ்விதமான பராக்ரமத்தைக் காணாததினால், முன்பு நீ பொறுமையுடனிருந்தது திறமையில்லாமையாலென்று எண்ணினோம். தர்மபாசத்தால் கட்டுப்பட்டு முன்பு நீ பொறுத்திருந்தது போலவே இப்பொழுதும் கட்டுப்பட்டிருக்கையில் கட்டுப்படாதவன் என்று எண்ணுகிறாய். நீ ப்ரதிஜ்ஞைசெய்தபடி வனத்தில் வாஸம்செய்யவில்லை. துன்பமுற்றவனானநீ பொருளிலுள்ளபேராசையினால் ப்ரதிஜ்ஞாகாலத்தைக் குறைப்பதற்கு விரும்புகிறாய். பார்த்த! இந்த்ரன் நேரில்வந்து உனக்காகப் போர்புரிந்தாலும் பராக்ரமத்தைக் காண்பிக்கப்போகின்ற எனக்குக் கொஞ்சமேனும் வருத்தம் கிடையாது. ஓ! அர்ஜுனா! நீவிரும்பியது இதோவிரைவில்வந்துவிட்டது. என்னுடன் நீ போர்புரிவாயாகில் இந்தச்சண்டையில் உன்னுடையபலத்தை நான்பார்ப்பேன்" என்றுகூறினான். கர்ணன் இவ்வாறுசொல்லிக்கொண்டும் கவசங்களைப்பிளக்கின்ற அம்புகளை எய்துகொண்டும் (பகைவர்களால்) ஜயிக்கப்படாதவனான பீபத்ஸுவை எதிர்த்துச்சென்றான். மஹாரதனானபார்த்தன் விருப்பத்துடன் அந்தப்பாணங்களை ஏற்றுக்கொண்டான். பீபத்ஸுவான

வன் காண்டீவம்என்கிறவில்லை நாணேற்றிசெய்து மழையைப்பொழி கின்றமேகம்போலப் பெரிதானசராமாரியோடு எதிர்த்துச் சென்று யுத்தத்தில் கர்ணனைக்கொல்லவிரும்பி (அவன்மீது) அனேகபாணங் களை விடுத்தான். வாயுவின்வேகத்தை மலைதாங்குவதுபோல அந் தப்பாணங்களைக் கர்ணன் ஏற்றுக்கொண்டு தாங்கினான். அம்புக் கூட்டங்களை இடைவெளியில்லாமல் ஆகாயமுழுமையும் சொரிகின் றவர்களான அவ்விருவர்களுக்கும் தேவாஸுரர்களுடைய யுத்தம் போலப் பெரிதானயுத்தம் நடந்தது. பயங்கரமானவடிவமுள்ள மேகமண்டலங்கள் நான்குபக்கங்களிலும் உயரக்கிளம்பின. கர்ண னுக்கும் பார்த்தனுக்கும் யுத்தம்நேர்ந்திருக்கும்போது பூமியி லுள்ளபுழுதியானது பறந்தது; ஸூர்யன் ப்ரகாசிக்கவில்லை; காற் றும் வீசவில்லை; அம்புகளால் நன்குமூடப்பட்ட ஆகாயமானது ஒரேநிழல்போலாகியது; காண்டீவத்தினுடைய ஒலியும் அவ்வா றே கர்ணனுடைய வில்லின்ஒலியும் எரிக்கப்படுகின்ற மூங்கில்களு டைய ஒலிபோல அதிபயங்கரமாகத்தோன்றின. அர்ஜுனனே குதிரைகளையும் யானைகளையும் தேர்களையும் நாசம்செய்துகொண்டு அந்தஸைன்யத்தைக் கொந்தளிக்கச்செய்தான். பலமுறை கர்ணனை யும் அடித்தான். பிறகு, சிறந்தகைகளுள்ளபார்த்தன் கர்ணனுடைய வில்லை அறுத்தான். அறுக்கப்பட்டவில்லையுடையவனான கர்ணன், பிறகு வேகத்துடன் சக்திஆயுதத்தைஎறிந்தான். பார்த்தன் போர்க் களத்தில் அந்தச்சக்திஆயுதத்தைக் கூர்மையுள்ள அம்புகளால் துணித்தான். பிறகு, பார்த்தன், கர்ணனைப்பின்தொடர்ந்துவந்தவர் களையெல்லாம் காண்டீவத்தினின்றுவிடுபட்ட பாணங்களால் யம னுடையவீட்டுக்கு அனுப்பினான். பார்த்தனுடைய பாணங்கள் போகிறவழியில் அடிக்கப்பட்டவைகளும் பொன்மயமான கச்சை களுள்ளவைகளும் அம்புக்கூட்டங்களால் ஆச்சர்யகாமானவைகளும் அக்னித்திரளால் வ்யாபிக்கப்பட்ட மலைகள்போன்றவைகளுமான யானைஅரசுகள் பூமிமுழுதையும் மறைத்துக்கொண்டு விழுந்தன. ஸூர்யகுமாரனான கர்ணன், முதலில், சத்ருக்களுடையஸேனைகளை நாசஞ்செய்பவைகளும் அமானுஷங்களுமான கார்யங்களைச்செய் கின்ற அந்தப்பார்த்தனைப் பொறுமல் (பாணங்களுக்கு) இலக்காகச் செய்தான். பிறகு, கர்ணன் (நாண்கயிற்றினின்று) இழுத்துவிடப் பட்ட நான்குபாணங்களால் தனஞ்சயனுடையகுதிரைகளையும் ஆறு பாணங்களால்ஸாரதியையும்பத்துப்பாணங்களால் (மறுபடியும்) குதி ரைகளையும் அறுபதுபாணங்களால் பார்த்தனையும் மூன்றுபாணங்க

ளால் அவனுடையகொடியையும் அடித்தான். பொறிகளால் ப்ரகாசிக்கின்றதும் பயங்கரமானசப்தமுள்ளதும் கோபமாகிற விறகுள்ளதும் கொடியாகிற நுனியுள்ளதும் பாணங்களாகிற ஜ்வாலைகளுள்ளதும் அஸ்த்ரங்களின்காற்றாகிற பயங்கரமான காற்றுள்ளதுமான கர்ணனாகியநெருப்பானது பார்த்தனாகிற உலர்ந்தகாட்டைக் கொளுத்த எண்ணங்கொண்டதுபோல ப்ரகாசித்தது. தன்னுடைய தேருருளைகள் சங்கம் இவைகளுடையசப்தமாகிற பயங்கரமான இடிமுழக்கமுள்ளதும் அசைந்துகொண்டிருக்கிற கொடித்துணிகளாகிற ப்ரகாசிக்கின்ற பயங்கரமான மின்னல்களுள்ளதும் சஸ்த்ரங்களும் பாணங்களுமாகிற நீர்த்தாரைகளுள்ளதுமான பார்த்தனாகிறமேகமானது கர்ணனாகிறநெருப்பை நன்றாகத் தணித்தது. அந்தக்கர்ணனால் யுத்தத்தில் மிகவும்அடிக்கப்பட்டவனும் கௌரவர்களுள் சிறந்தவனும் ஜயசீலனும் காண்டீவத்தை வில்லாகக்கொண்டவனுமான கிரீடியானவன் தூங்கும்போது எழுப்பப்பட்ட ஸிம்மம்போல (கோபங்கொண்டு) கர்ணனைக் கொல்வதின்பொருட்டு அதிக விரைவை அடைந்தான். ஆச்சர்யகரமானவீர்யமும்செய்கையுமுள்ள அந்தக்கிரீடியானவன் கிரணஸமூஹங்களுள்ள ஸூர்யன் இவ்வுலகங்களைத் தபிக்கச்செய்வதுபோலப் பாணஸமூஹங்களால் கர்ணனுடையரதத்தை நன்றாகத் தபிக்கச்செய்துகொண்டு போர்க்களத்தில் ப்ரம்மாஸ்த்ரத்தை ப்ரயோகித்தான். யானையால்அடிக்கப்பட்ட யானைத்தலைவன்போன்ற அந்தஅர்ஜுனன் கூர்மையுள்ளஅம்புகளைத் தூணீரத்தினின்றெடுத்து வில்லைக் காதுவரையில்இழுத்துப் பிறகு பாணங்களால் ஸூதபுத்ரனை அடித்தான். பிறகு, அந்தப்பார்த்தன் பகவானானமஹேந்த்ரன் வஜ்ராயுதங்களால் பர்வதத்தைப்பிளப்பதுபோல அந்தக்கர்ணனுடைய இரண்டுகைகளையும் தலையையும் நெற்றியையும் கழுத்தையும் மார்பையும் தோள்களையும் கைகளுடையநடுவையும் யுத்தத்தில் (பாணங்களால்) பிளந்தான். பலசாலியான அந்தவைகர்த்தனன் பார்த்தனால்விடப்பட்ட பாணங்களைப் பொறாமல் யானையினால்ஜயிக்கப்பட்ட யானைபோலப் பார்த்தனுடையபாணங்களால் தபிக்கச்செய்து வெல்லப்பட்டு யுத்தகளத்தைவிட்டு ஓடினான்.

ஐம்பத்தோன்பதாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் த்ரோணருடன்யுத்தம்செய்ததும், இடையில் அச்வத்தாமா வந்ததும், த்ரோணர் தோற்றோடியதும்.)

பார்த்தன், ஸூர்யகுமாரனானகர்ணன் ஜயிக்கப்பட்டதைக் கண்டு விராடபுத்ரனைப்பார்த்து, "ராஜகுமார! நீ உறுதியாயிரு. யுத்தத்தில் நமக்கு ஜயம். சத்ருக்களுக்கு மயிர்க்கூச்சலுண்டாக்கக்கூடிய தான சங்கத்தைத் தைர்யத்துடனும் பரபரப்பில்லாமலும் மார்பும் கண்களும் கலங்காமலிருக்கும்படியும் ஊதப்போகிறேன். நீ யுத்த களத்தில் என்னுடைய ஆசார்யரானத்ரோணரிருக்கிற இடத்துக்கு விரைவாகச்செல்." என்றுகூறினான். அவ்வாறு போர்க்களத்தில் விளையாடுகின்ற அர்ஜுனனுக்குப் பலமும் ஆண்மையும் தேஜஸும் சுறுசுறுப்பும் பெருகின. அந்தஆச்சர்யத்தைப்பார்த்து உத்தரனைப் பயம் அணுகியது. உத்தரன், "கூர்மையுள்ள அம்புக்கூட்டங்களை விடுகின்ற உம்முடைய திவ்யாஸ்த்ரங்களையும் உமதுபராக்ரமத்தையுங் கண்டு என்மனம் மிக்கமயக்கமுற்றிருக்கிறது. பரதச்ரேஷ்டரே! என்மனமானது பயத்தால் இரண்டுபட்டிருக்கிறது. முன்பார்த்திராத உம்முடையகாண்டீவத்தின் சப்தத்தையும் வில்லைமிகஇழுக்கின்ற உம்முடைய பாஹுபலத்தையும் த்ரிவிக்ரமாவதாரகாலத்தில் விஷ்ணுவினுடையதேஜஸ்போன்ற (ஒருவராலும்) அவமதிக்கமுடியாத உம்முடையதேஜஸையும் பார்க்கிறேன்" என்றான். உத்தரன், ஆச்சர்யகரமான அந்தக்காண்டீவத்தையும் கிரீடியினால்விரைவாகவிடப் படுகின்ற பாணங்களையும் பார்த்துப் பயந்து போரினிடையில் அர்ஜுனனைப்பார்த்து, "நான் உம்முடையகுதிரைகளை நடத்தச் சக்தியற்றவனாயிருக்கிறேன்" என்றுகூறினான். பகைவர்களைக் கொல்லுபவனும் காண்டீவத்தை வில்லாகக்கொண்டவனுமான அர்ஜுனன், அந்தஉத்தரனைப்பார்த்துக் கொஞ்சம்சிரித்து, "உத்தர! நான் துணைவனாகஇருக்கும்பொழுது உனக்கு எங்கிருந்து பயமுண்டாகும்? (தைர்யத்துடன்) போ. குதிரைகளைத்தட்டிக்கொடுத்து நடத்து" என்றுசொன்னான். அந்தத் தனஞ்சயனால் தேற்றப்பட்ட விராடபுத்ரன் குதிரைகளை விரைவாக நடத்தினான். மஹேந்த்ரனுக்கொப்பான தனஞ்சயனும் வில்லைஇழுத்து நாணொலிஉண்டாக்கினான். இழிவான கார்யத்தைச் செய்யாதவனான அர்ஜுனன், மறுபடியும், உத்தரனைப்

1 'அவ்யக்ர' என்றபாடம் கொள்ளப்பட்டது.

பார்த்தா, "அப்பனே! என்னை அடுத்திருக்கும் நீ போர்முனையில் பயப்படவேண்டாம். நீ ராஜபுத்ரனாயிருக்கிறாய். உனக்கு மங்கள முண்டாகவேண்டும். பெரிதான மாத்ஸ்யராஜகுலத்தில் பிறந்தவனான நீ (இந்த) அரசர்களின்கூட்டத்தில் வ்யஸனமடையத்தக்கவனல்லை. ராஜபுத்ர! நீ அதிகதைர்யத்தை உண்டுபண்ணிக்கொண்டு போர்க்களத்தில் அரசர்களோடு போர்புரிகின்ற என்னுடையதேரை நடத்து" என்றுசொன்னான். ஒப்பற்றஒளிபொருந்தியவனும் ரதிகர்களுள் சிறந்தவனும் பாண்டுவின்மைந்தனுமான பீபத்ஸு அந்த உத்தரனைப்பார்த்து இவ்வாறு சொல்லிவிட்டுப் பாரத்வாஜரைக்குறித்து மறுபடியும் கூறலானன்.

"அக்னிஜ்வாலைக்கொப்பானதும் ஸ்வர்ணமயமான தண்டத்தின் மீது தூக்கிநிறுத்தப்பட்டதும் கொடித்துணிகளால் அலங்கரிக்கப்பட்டதுமான பொன்மயமான இந்தவேதியானது காணப்படுகிறவிடத்தில் என்னை நடத்திக்கொண்டுபோ. உனக்கு மங்களம். உத்தமரான த்ரோணரை எதிர்த்துப் போர்புரியப்போகிறேன். பாரத்வாஜருடையபுத்ரரும் ஆசார்யரும் மஹாத்மாவுமான த்ரோணரோடு நான் யுத்தம்செய்யப்போகிறேன். செந்நிறமுள்ளவைகளும் நன்ருக (பாரத்தை) சுமக்குந் தன்மைபொருந்தியவைகளும் எல்லாப்பழக்கங்களிலும் மிக்கதேர்ச்சியடைந்தவைகளும் ப்ரகாசிக்கின்றவைகளுமான குதிரைகள்கட்டப்பட்ட சிறந்தரதத்தில் வீற்றிருப்பவரும், சூரரும், ஆயுதம்பிடித்தவரனைவருள்ளும் சிறந்தவரும், ப்ரகாசிக்கின்ற வைடூர்யத்துக்கொப்பானவரும், சிவந்தகண்களும் இனியகாட்சியும் ஸூர்யனைப்போன்ற தேஜஸுமுள்ளவரும், பலமும் வீர்யமும்பொருந்தியவரும், உலகங்களிலுள்ள எல்லாவில்லாளிகளுள்ளும்சிறந்தவரும், எல்லாஉலகங்களிலும் பூஜிக்கப்பட்டவரும், நீதியில் ப்ருஹஸ்பதிக்கும் சுக்ரனுக்குமொப்பானவரும், புத்திசாலிகளுள் சிறந்தவரும், லக்ஷணங்களுடனும் [1] அங்கங்களுடனும் உபாங்கங்களுடனும்கூடின நான்குவேதங்களையும் தனுர்வேதத்தையும் ப்ரம்மாஸ்த்ரத்தையும் புராணத்தையும் இதிஹாஸத்தையும் தண்டநீதியையும் மனுநூலையும் முற்றிலும் நன்குகற்றுத் தம்மிடம் நிலைபெறச்செய்தவரும், பொறுமையும் இந்த்ரியநிக்ரஹமும் ஸத்யமும் தேஜஸும் மென்மையும் கபடமின்மையுமான பலகுணங்கள்நிலைபெற்றவரும், ப்ராம்மணர்களுள்சிறந்தவரும், எப்பொழுதும் என்னிடம் ப்ரியமுள்ளவரும், எனக்கு எப்பொழுதும் இஷ்டருமான இந்தத்ரோணருடன் நான் இப்பொ

[1] விவரம், ஆதிபர்வம் ருசு-ம் பக்கம் குறிப்பிற்காண்க.

ழுது க்ஷத்ரியதர்மத்தைமுன்னிட்டு யுத்தஞ்செய்யப்போகிறேன். உத்தர! ஆகையால், இப்பொழுது என்னுடையசிறந்தரதத்தை ஆசார்யரிடம் கொண்டுபோ. எனக்கும் அவருக்கும் (நடக்கப்போகிற) அத்புதமான மற்றொரு யுத்தத்தையும் பார்" என்றுசொன்னான். இவ்வாறுசொல்லக்கேட்ட உத்தரன், அந்தத்ரோணரைக்குறித்துக் குதிரைகளைத் தூண்டினான். அர்ஜுனனுடையரதமானது த்ரோணருடைய ரதத்தைநோக்கி வந்தது. போர்க்களத்தில் தேருடன் வேகமாகவருகின்ற பாண்டுகுமாரனை அந்தப்பார்த்தனை த்ரோணரும் மதங்கொண்ட ஓர்யானையை மதங்கொண்ட மற்றொருயானை எதிர்ப்பதுபோல எதிர்த்தார். சிறந்தகைகளுள்ளவனான அந்தக் குந்தீபுத்ரன் பொன்மயமானதேருள்ளவரும் வேகமாயெதிர்த்துவருகின்றவருமான அந்தஆசார்யரைக்கண்டு இருகைகளையும் குவித்துக்கொண்டு பின்வருமாறு சொல்லலானான்.

"நாங்கள், செய்ததற்கு ப்ரதிசெய்யஎண்ணி, வனத்தில் வாஸஞ்செய்தோம். யுத்தத்தில் (ஒருவராலும்) ஜயிக்கமுடியாதவரே! எங்கள்விஷயத்தில் எப்பொழுதும் நீர் கோபஞ்செய்யத்தக்கவரல்லீர். தோஷமற்றவரே! நான் முதலில் உம்மால்அடிக்கப்பட்டுப் பிறகு உம்மைஅடிக்க விரும்புகிறேன். அதை நீர் பொறுத்துக்கொள்ளவேண்டும்" என்றுசொன்னான். பிறகு, பேரிகளும் படஹங்களும் முழங்கின. அர்ஜுனன் சங்கத்தை ஊதினான். படைமுழுவதும் பொங்குகிறகடல்போலக் கலக்கமுற்றது. பிறகு, அந்தத்ரோணர் (அர்ஜுனன்மீது) இருபதுபாணங்களைவிடுத்தார். கைச்சுறுசுறுப்புள்ளபார்த்தன் அவைகளைத் தன்னிடம்வருவதற்குள்ளாகவே துண்டித்தான். பிறகு, வீர்யசாலியானத்ரோணர் ஹஸ்தலாகவத்தைக்காட்டிப் பார்த்தனுடையதேரின்மீது ஆயிரம்பாணங்களைத் தொடுத்தார். இவ்வாறு த்ரோணருக்கும் அர்ஜுனனுக்கும் யுத்தம்நடந்தது. போரில் அன்னப்பறவைகளின் நிறம்போன்ற நிறமுடைய குதிரைகளோடுசேர்ந்திருக்கிற மிக்கவேகமுள்ள சிவப்புக்குதிரைகளைக்கண்டு பாமரஜனங்கள் வியப்புற்றார்கள். பகைவர்களைவாட்டுகிறவரான அந்தத்ரோணாசார்யர் பார்த்தனுடையதேரைத் தேரினால்தாக்கி ஸந்தோஷத்துடன் அப்பொழுது பாண்டவனை எதிர்த்தார். த்ரோணர் பாண்டவன்இவர்களுடைய கொடிகள் ஒன்றோடொன்று சேர்க்கைபெற்றதுபோலிருப்பதைப்பார்த்துக் கௌரவர்களுடைய பெரியஸேனையானது அடிக்கடி மிக்கநடுக்கமுற்றது. கொடியவைகளும் கூர்மையான முனையுள்ளவைகளும் மிக்கஒளியுள்ளவைகளுமான பாணங்களைத் தொடுக்கின்ற

ஆசார்யருக்கும் அர்ஜுனனுக்கும் அவ்விதமானயுத்தம் நடந்தது. வீர்யத்தால்நிறைந்தவர்களும் ரதிகர்களும் வீர்யத்தைவெளிப்படுத்தினவர்களும் பலசாலிகளும் ப்ரஸித்தமானசெய்கைகளுள்ளவர்களும் ஜயமடைவதற்காக ச்ரமத்தை அடைந்தவர்களும் உலகத்தில் அதிரதர்களும் பகைவர்பட்டணத்தைஜயிக்கின்றவர்களும் அம்புக்கூட்டங்களைத் தொடுக்கின்றவர்களும் ஆசார்யசிஷ்யர்களுமான அவ்விருவீரர்களையும்பார்த்து க்ஷத்ரியர்கள் மயக்கமடைந்தார்கள். த்ரோணருக்கும் அர்ஜுனனுக்கும்நேர்ந்த த்வந்த்வயுத்தத்தில் மனிதர்களெல்லோரும் ஆச்சர்யமடைந்தார்கள். (இவ்விஷயமான) வார்த்தையைச் சொல்லுகின்ற மனிதர்களுடைய அவ்விதமான பெரியசப்தமானது கேட்கப்பட்டது. அந்தயுத்தமுனையில்நிற்கின்றஜனங்கள், கோபங்கொண்டுநெருங்கிப்போர்புரிகின்ற மஹாரதர்களான அவ்விருவர்களையும் நன்றாகப்பார்த்து, "போர்க்களத்தில் த்ரோணருடன் அர்ஜுனனைத் தவிர வேறுஎவன் யுத்தம்செய்யத் தகுந்தவன்? அர்ஜுனன் ஆசார்யரோடுபோர்புரிவதால் இந்தக்ஷத்ரியதர்மம் பயங்கரமானது" என்று சொல்லிக்கொண்டார்கள். (பகைவர்களால்) ஜயிக்கப்படாதவர்களான அவ்விருவர்களும் ஒருவரையொருவர் அம்புக்கூட்டங்களால் மூடினார்கள்; போர்க்களத்தில் உதித்திருக்கின்ற இரண்டு ப்ரளயகாலஸூர்யர்கள்போல விளங்கினார்கள். த்ரோணர் அப்பொழுது அதிகமானகோபங்கொண்டு ஸ்வர்ணமயமான பின்புறமுள்ளதும் (பகைவர்களால்) நெருங்கமுடியாததுமான பெரியவில்லை நாணொலியிடும்படிசெய்து பல்குனனைஎதிர்த்துப் போர்புரிந்தார். அவர் அர்ஜுனனுடையதேரைப் பாணமயமானவலைகளால்மூடி ஒளியுள்ளவைகளும் சாணையில்தீட்டப்பட்டவைகளுமான அம்புகளால்திசைகளை நன்றாகமூடினார். அப்பொழுது, மஹாரதனான அர்ஜுனன் மிக்கவேகமுள்ள அநேகபாணங்களால் த்ரோணரை அடித்தான். மழைக்காலத்தில் நீருண்டமேகமானது மலையின்மேல் மழைத்தாரைகளைப் பொழிவதுபோலப் பல்குனன் (பாணங்களை த்ரோணர்மீது) பொழிந்தான். பரத்வாஜருடைய புத்ரரான த்ரோணாசார்யர் பொன்மயமானவைகளும் பற்பலவகைப்பட்டவைகளும் வில்லினின்று விடுபட்டவைகளுமான அம்புகளால் அந்த அர்ஜுனனுடைய உத்தமமானரதத்தை நன்றாகமூடினார். புஜபலமுள்ளவனும் அளவிடமுடியாத தைர்யமுள்ளவனுமான அர்ஜுனனும் அவ்வாறே திவ்யமானதும் சத்ருக்களைக்கொல்லுகின்றதும் சிறந்தவேகமுள்ளதாகப் படைக்கப்பட்டதும் (சத்ருஸம்ஹாரகார்ய) பாரத்துக்கு ஸாதனமாயிருக்கின்றதும் உத்தமமுமான காண்டீவம்என்

கிறவில்லை வளைத்து அதனை நாணைச்செவியிடும்படிசெய்து பற்பலவிதங்களும் ஸ்வர்ணத்தால்செய்யப்பட்டவைகளுமான அனேகபாணங்களை ப்ரயோகித்து த்ரோணருடையரதத்தைமூடி விளங்கினான்; அவருடையவில்லினின்று விடுபட்டபாணங்களைத் தன்பாணங்களால் தடுத்தான். பார்க்கஅழகியவனும் மஹாரதனுமான பார்த்தன் எல்லாத்திக்குக்களிலும் ஒரேஸமயத்தில் அஸ்த்ரங்களை ப்ரயோகித்துக்கொண்டு ரதத்துடனே எல்லாப்பக்கத்திலும் ஸஞ்சரித்தான். குந்திபுத்ரனான பாண்டவன் கைப்பழக்கத்தால் கொடியபாணங்களை எடுப்பதையும் தொடுப்பதையும் விடுப்பதையும் ஜனங்கள் பார்க்கமுடியவில்லை. அவன் நான்குபக்கத்திலும் ஆகாயத்தைப் பாணங்களால் ஒரேநிழலுள்ளது போலச் செய்தான். பிறகு, பனியினால் (மூடப்பட்ட) மலைபோல (பாணங்களால்மூடப்பட்ட) த்ரோணர் கண்ணுக்குத்தோன்றவில்லை. ராஜரே! அனேகஅம்புகளால் அர்ச்சிக்கப்பட்டமிகச்சிறந்த பார்த்தனுடைய சரீரமானது கிரணங்களால்மலர்ந்திருக்கும் ஸூர்யனுடைய சரீரம்போலிருந்தது. அம்புக்கூட்டங்களைத் தொடுக்கின்றவனும் மஹாத்மாவுமான அர்ஜுனனுடைய அப்படிப்பட்டகோரமானபாணங்களை யுத்தத்தில் (சத்ருக்களை) ஜயிப்பவரானத்ரோணரும் சிதறஅடித்து, ஆகாயத்தில் இருளைவிலக்கி ப்ரகாசிக்கின்றஸூர்யன்போல விளங்கினார். அக்னிசக்ரத்துக்கொப்பானதும் பயங்கரமானதும் யுத்தத்தில் வட்டவடிவமாகச்செய்யப்பட்டதும் மிகப்பெரிதும் மேகத்தினுடைய இடிமுழக்கம்போன்ற முழக்கமுள்ளதுமான வில்லையிழுத்துப் போர்க்களத்தில் அடிக்கடி பாணங்களைஎய்கின்ற (அர்ஜுனனை) கௌரவர்கள் கண்டார்கள். பிறகு, இடிமுழக்கத்துக்கொப்பான த்ரோணருடைய வில்லின்பெரியஒலியும் அப்பொழுது ஜனங்களால் எல்லாத்திக்குக்களிலும் கேட்கப்பட்டது. பரதச்ரேஷ்டரே! அது ஸைன்யங்களுக்கு ஆச்சர்யகரமாகஇருந்தது. அளவிடமுடியாத பலமுள்ள த்ரோணர் புடம்போட்டதங்கத்தால் செய்யப்பட்டவைகளும் ப்ரகாசிக்கின்றவைகளும் அக்னிபோன்றவைகளுமான அம்புகளால் திக்குக்களையும் ஸூர்யனுடையஒளியையும் மூடினார். பிறகு, பொன்மயமான கட்டுக்களுள்ளவைகளும் அழுந்திய கணுக்களுள்ளவைகளும் ஆகாயத்தைஅடைந்து ஸஞ்சாரம்செய்கின்றவைகளுமான பாணங்களுடைய அனேககூட்டங்கள் காணப்பட்டன. த்ரோணருடைய வில்லினின்று பாணங்கள் தோன்றின. ஒன்றுபோலத் தொடர்ச்சியாகவிளங்குகின்ற பெரியபாணங்கள் ஆகாயத்தில் அன்னப்பறவைகளுடையவரிசைகள்போலக் காணப்பட்டன. இவ்வாறு

பொன்னால் அழகுசெய்யப்பட்டிருக்கின்ற அனேகஅம்புகளை விடுகின்ற அவ்விருவீரர்களும், ஆகாயத்தை எரிநக்ஷத்ரங்களால் சூழப்பட்டதுபோலச் செய்தார்கள். கழுகிறகுகளும் மயில்தோகைகளும் பூண்ட அவ்விருவருடையபாணங்களும் சரத்காலத்தில் ஆகாயத்தில் (ஸஞ்சரிக்கின்ற) மதங்கொண்ட ஸாரஸபக்ஷிகளுடைய வரிசைகள் போலக் காணப்பட்டன. மிகுந்தகோபங்கொண்ட அவ்விருவருக்கும் மிகக்கொடுமையானதும் வியப்பைத்தரத்தக்கதும் மனத்தினுலெண்ணமுடியாததுமான அந்தயுத்தமானது, வ்ருத்ரனுக்கும் இந்த்ரனுக்கும் நடந்ததுபோல நடந்தது. இரண்டுபெரியயானைகள் ஒன்றையொன்றுஎதிர்த்துக் கொம்புகளுடைய நுனிகளால் அடித்துக்கொள்வதுபோல அவர்கள் (காதுவரையிலும்) பூர்த்தியாக இழுத்துவிடப்படும் அம்புகளால் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டார்கள். பிறகு ஜயசாலிகளுள்உத்தமனுன அர்ஜுனன் ஆசார்யமுக்யரால் விடப்பட்டவைகளும் சாணையில் தீட்டப்பட்டவைகளுமான அம்புகளைக் கூர்மையானபாணங்களால் தடுத்தான். கொடியபராக்ரமமுள்ள தனஞ்சயன் தன்னை உக்ரஸ்வரூபியாகவும் இந்த்ரஸம்பந்தம்பெற்றவனுகவும் வெளிக்காட்டிக்கொண்டு அனேகஅம்புகளால் ஆகாயத்தை விரைவாக மூடினுன். (பகைவர்களைக்) கொல்லவிருப்பமுள்ளவனும் புருஷரிற்சிறந்தவனும் பயங்கரமானகாட்சியுள்ளவனுமான அர்ஜுனனை த்ரோணர் கூர்மையும் அழுந்தியகணுக்களுமுள்ள அம்புகளால் அடித்தார். யுத்தத்தில் திறமையுள்ளவரும் ப்ரதாபசாலியுமான த்ரோணர் அழுந்தினகணுக்களுள்ள அம்புகளால் அர்ஜுனனேடு விளையாடிக்கொண்டு ஸந்தோஷமுள்ளவரானுர். சூரர்களும் ஸந்நத்தர்களும் போரில்விளங்குகின்றவர்களுமான அவ்விருவர்களும் வகைவகையாக ப்ரம்மாஸ்த்ரமுதலான திவ்யாஸ்த்ரங்களை ப்ரயோகித்துக்கொண்டு (ஒருவரையொருவர்) பிளந்தார்கள். யுத்தத்தில் சூரனுன அந்தப்பார்த்தன் தன்னுடையவீர்யத்தைக் காட்டிக்கொண்டு மஹாஸ்த்ரங்களாலும் பாணங்களாலும் மஹாத்மாவானத்ரோணரை மூடினுன். பார்த்தன் அஸ்த்ரங்களால் அஸ்த்ரங்களைத்தடுத்து த்ரோணரை மூடினுன். கோபங்கொண்டவர்களும் புருஷச்ரேஷ்டர்களும் (ஒருவர் ஒருவருடையபராக்ரமத்தை) பொறுதவர்களுமான அவ்விருவர்களுக்கும், மஹாபலிக்கும் இந்த்ரனுக்கும் நடந்ததுபோல ரணகளத்தில் யுத்தம்நடந்தது. பாரத்வாஜரும் அர்ஜுனனும் யுத்தத்தில் மஹாஸ்த்ரங்களை வெளிப்படுத்தினுர்கள். பாண்டவன் த்ரோணருடையவில்லினின்று அடிக்கடிவிடுபட்ட ஐந்த்ராஸ்த்ரத்தையும் வாயவ்

யாஸ்த்ரத்தையும் ஆக்நேயாஸ்த்ரத்தையும் அந்த அந்த அஸ்த்ரத்தால் அடிக்கடி விலக்கினான். இவ்விதம் சூரர்களும் மஹாவில்லாளிகளும் சாணையில் தீட்டப்பட்ட சரங்களைத்தொடுக்கின்றவர்களுமான அவ்விருவர்களும் ஆகாயத்தைச் சரமாரிகளால் ஒரேநிழலுள்ளதாகச் செய்தார்கள். பிறகு, அர்ஜுனனால் விடப்பட்டு ப்ராணிகள்மீது விழுகின்ற பாணங்களுடையசப்தமானது பர்வதங்களின்மீதுவிழுகின்ற வஜ்ராயுதங்களுடைய சப்தம்போலக் கேட்கப்பட்டது. வேந்தரே! பிறகு, ரக்தத்தால் நனைக்கப்பட்டயானைகளும் தேர்களும் குதிரைகளும் குதிரைக்காரர்களும் பூத்திருக்கின்ற பலாசமரங்கள்போலக் காணப்பட்டார்கள். த்ரோணருக்கும் அர்ஜுனனுக்கும் நேர்ந்த அந்தத்வந்த்வயுத்தத்தில் ஸைன்யமானது தோள்வளைகளுடன் அறுத்துத்தள்ளப்பட்ட கைகளாலும், பெரியதேர்களாலும், உடைத்துத் தள்ளப்பட்டவைகளும் பொன்னால்அலங்கரிக்கப்பட்டவைகளுமான கவசங்களாலும், த்வஜங்களாலும், பார்த்தனுடையபாணங்களால் நான்குபக்கத்திலும் பீடிக்கப்பட்டவர்களும் கொல்லப்பட்டவர்களுமான யுத்தவீரர்களாலும் மிகமயங்கியதாகியது. பெரியகார்யங்களுக்கு ஸாதனங்களாயிருக்கின்ற இரண்டுவிற்களையும் (அம்புதொடுப்பதால்) அதிக அசைவுள்ளனவாகச்செய்கின்ற வீரர்களான அவ்விருவரும் ஒருவரையொருவர் எரிக்கவிரும்பிச் சிறந்தஅம்புகளால் மூடினார்கள். பிறகு, 'த்ரோணர் (பகைவர்களை) நன்குஅடிப்பவனும் மஹாவீர்யமுடையவனும் உறுதியானமுஷ்டியையுடையவனும் (பகைவர்களால்) அணுகமுடியாதவனும் எல்லாத்தைத்யர்களையும் ஜயித்தவனும் எல்லாவீரர்களுள்ளும் மஹாரதனுமான அர்ஜுனனை எதிர்த்துப் போர்புரியும் காரணத்தால் செய்யமுடியாத கார்யத்தைச் செய்கிறார்' என்று அந்தயுத்தத்தில் அவரைப் புகழ்கின்றவர்களுடையசப்தமானது ஆகாயத்தில் தோன்றியது. அர்ஜுனனுடைய மதிமயக்கமில்லாமையையும், அஸ்த்ரவித்தையினுடைய அப்யாஸத்தையும், லாகவத்தையும், தூரத்திலிருப்பதையும்வீழ்த்தும்தன்மையையும யுத்தத்தில்கண்டு த்ரோணருக்கு ஆச்சர்யமுண்டாயிற்று. மஹாத்மாக்களான அவ்விருவருக்கும் மஹாபயங்கரமானதும் உலகத்துக்குக் குழப்பத்தைஉண்டுபண்ணுகின்றதும் கோரமுமான அவ்விதயுத்தமானது தொடங்கப்பட்டு நெடுநேரம்நடந்தது. பிறகு, கோபமுள்ளவனும் பரதச்ரேஷ்டனுமானபார்த்தன் திவ்யமானகாண்டீவமென்கிற வில்லையெடுத்துப் போர்க்களத்தில் இரண்டுகைகளாலும் இழுத்தான். அந்த அர்ஜுனனால் விடப்பட்டசரமாரியானது விட்டில்பூச்சிகளுடையகூட்

டம்போல இருந்தது. அவனுடைய அம்புகளினிடையில் காற்றும் ஸஞ்சரிப்பதற்குச் சக்தியற்றதாகியது. அடிக்கடி அம்புகளையெடுப்பது தொடுப்பது விடுப்பதாகிய அர்ஜுனனுடையசெய்கைகளில் (ஜனங்களால்) சிறிதும் அவகாசம் காணப்படவில்லை. சுறுசுறுப்புடன் ப்ரயோகிக்கப்பட்ட அஸ்த்ரங்களுள்ளதும்மிக்கபயங்கரமுமான யுத்தம்நடந்துவரும்போது பார்த்தன் மேன்மேலும் அதிசீக்ரமாக வேறுபாணங்களையும் விடுத்தான். பிறகு, அந்தப்போர்க்களத்தில் அழுந்தியகணுக்களுள்ள ஆயிரம்அம்புகள் ஒரேஸமயத்தில் த்ரோணருடைய தேருக்கருகில் விழுந்தன. பரதரேறே! காண்டீவத்தைவில்லாகக்கொண்ட அர்ஜுனன் பாணங்களை த்ரோணர்மீது இறைக்கவே ஸேனையிலுள்ளவர்களுக்குப் பெரிதான ஹாஹாகாரம்உண்டாயிற்று. பாண்டவனுடைய அஸ்த்ரலாகவத்தை இந்த்ரனும் கந்தர்வர்களும் அப்ஸரஸுகளும் அங்குவந்திருந்த மற்றவர்களும் புகழ்ந்தார்கள். பிறகு, ப்ரதாபசாலியும் தேர்ப்படைத்தலைவரும் ஆசார்யபுத்ரருமான அச்வத்தாமா, த்ரோணரை யுத்தஸமுத்ரத்தில் மூழ்கினவராகக்கண்டு [1] பெரிதான ரதிகர்களுடையகூட்டத்தோடுசேர்ந்து பாண்டவனை அம்புகளால் எதிர்த்துத்தடுத்தார். அவர் மஹாத்மாவான அர்ஜுனனுடைய அவ்விதமானசெய்கையை மனத்திஞல்புகழ்ந்தார்; அப்பொழுது அவன்மீது கோபத்தையும் செய்தார். கோபங்கொண்ட அந்த அச்வத்தாமாவானவர் மழைபொழிகின்ற மேகம்போலப் போரில் ஆயிரம்பாணங்களை இறைத்துக்கொண்டு பார்த்தனை எதிர்த்துச்சென்றார். மஹாபாஹுவான அவர் திரும்பி த்ரோணரிருக்குமிடத்துக்கும் வந்தார். பார்த்தன், த்ரோணர் விலகிப்போவதற்கு இடம்கொடுத்தான். உத்தமமானபாணங்களால் உடைக்கப்பட்டகவசமும் த்வஜமும் ரதமுமுள்ளவரும் அடிக்கப்பட்டவருமான அந்தத்ரோணர் வேகமுள்ளகுதிரைகளோடு ஸமயத்தைப்பெற்று விரைவாகச் சென்றார். அப்பொழுது, த்ரோணர் தோல்விஅடைவிக்கப்பட்டிருக்கையில் த்ரோணபுத்ரர்வந்து காலதண்டத்தையேந்தியவனும் சிவந்தகண்களையுடையவனுமான யமன்போல யுத்தகளத்தில் நின்றார்.

---

[1] ஒருசொல் விடப்பட்டது.

அறுபதாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் அச்வத்தாமாவைக்காட்டிலும் மேலானவனனது.)

வர்ஷிக்கின்ற மேகம்போலப் பெரிய அம்புக்கூட்டங்களைப் பொழிகின்ற பார்த்தன், வாயுவேகத்தை மலைதாங்குவதுபோல அந்த அச்வத்தாமாவை எதிர்த்துத்தாங்கினன். வ்ருத்ரனும் இந்த்ரனும்போல, அம்புக்கூட்டங்களைப் பொழிகின்ற அவ்விருவருக்கும் தேவாஸுர யுத்தத்துக்கொப்பான பெரியயுத்தம்நடந்தது. அப்பொழுது ஸூர்யன் ப்ரகாசிக்கவில்லை; காற்றும் வீசவில்லை; ஆகாயமுழுதும் அம்புகளால் நெருங்கியதாகச்செய்யப்பட்டு நிழலுள்ளதுபோலாகியது. இரண்டுயுத்தவீரர்களும் போர்புரியும்பொழுது எரிகின்றமூங்கில்களுடையசப்தம்போல அதிபயங்கரமான பெரிய சடசடஎன்னும் ஒலி உண்டாகியது. அரசரே! அர்ஜுனன் யுத்தத்தில் அந்தஅச்வத்தாமாவினுடையகுதிரைகளை வலிமையற்றவையாகச் செய்தான். அந்தக்குதிரைகள் மயக்கமடைந்து ஒருதிசையையும்அறியவில்லை. பிறகு, மஹாவீர்யமுள்ள அந்தத்ரோணபுத்ரர் ஸஞ்சரிக்கப்போகின்ற பார்த்தனுடைய நாண்கயிற்றைச் சிறிதுஇடைவெளிகண்டபொழுது க்ஷுரத்தாலறுத்தார். தேவர்கள் மனிதஇயற்கைக்குமேலான அவருடைய அச்செய்கையைக்கண்டு, "த்ரோணபுத்ரரைத்தவிர வேறுமனிதன் தனஞ்சயனை எதிர்த்துநிற்பதற்குத் திறமையுள்ளவனுகான்" என்று புகழ்ந்தார்கள். பிறகு, புருஷச்ரேஷ்டரான த்ரோணபுத்ரர் சற்றுவிலகி மறுபடியும் வில்லைஇழுத்துப் பார்த்தனைக் கழுகிறகுகள் பூண்டஅம்புகளால் மார்பிலடித்தார். பிறகு, சிறந்தகைகளுள்ளபார்த்தன் அப்பொழுது உரக்கச்சிரித்துக்கொண்டு பராக்ரமத்தினல் காண்டீவத்தில் நாண்கயிற்றைப் பூட்டினன். பரதகுலத்தில்பிறந்தவரே! கோபங்கொண்டவனும் மதயானைபோலவருகின்றவனுமான அந்தஅர்ஜுனனைக்கண்டு த்ரோணபுத்ரர் கோபங்கொண்டு யுத்தத்துக்காக அழைத்தார். பிறகு, அவரால் அர்த்தசந்த்ரபாணத்தைஎடுத்து அடிக்கப்பட்டபார்த்தன் பராக்ரமத்தினல் கூர்மையுள்ளவைகளும் ஸர்ப்பங்களையொத்தவைகளுமான அம்புகளால் அவருடையவில்லையும் ஸாரதியையும் குதிரையையும் வெட்டிவிட்டு அவரையும் அடித்தான். தேரோளிகளுட்சிறந்த அந்தஅச்வத்தாமா வேறுதேரிலேறிக்கொண்டு மதங்கொண்டயானையோடு மதங்கொண்ட [1]கஜயூதபதியானது எதிர்த்து

[1] கூட்டத்துக்குத் தலைமையானது.

வருவதுபோல எதிர்த்துவந்தார். பிறகு, பூமியில்ஒப்பற்றவீரர்களான அவ்விருவருக்குமே போர்க்களத்தினிடையில் மிகப்பெரியதும் மயிர் சிலிர்க்கக்கூடியதுமான போர்நேர்ந்தது. மஹாத்மாக்களும் யானைகள் போலச் சேர்ந்து போர்புரிகின்றவர்களுமான அவ்விருவீரர்களையும் எல்லாக்கௌரவர்களும் ஆச்சர்யத்தோடு பார்த்தார்கள். வீரர்களும் ஒருவரையொருவர் ஜயிப்பதில் விருப்பமுற்றவர்களுமான அவ்விருவரும் ஸர்ப்பத்தையும் ஜ்வலிக்கின்ற நெருப்பையும்போன்ற அம்புகளாலடித்துக்கொண்டார்கள். மஹாத்மாவான பாண்டவனுடைய அம்பறாத்தூணிகள் இரண்டும் எடுக்கஎடுக்கக் குறையாமலிருப்பவைகள்; தேவஸம்பந்தம்பெற்றவைகள். ஆதலால், சூரனான பார்த்தன் யுத்தகளத்தில் மலைபோலஅசைவற்றுநின்றான். போரில் (அம்புகளை) விரைவாக எய்கின்ற அச்வத்தாமாவினுடைய பாணங்களோ விரைவில் குறைந்தன. அதனால், அர்ஜுனன் (அச்வத்தாமாவைக்காட்டிலும்) மேலானவனானான்.

அறுபத்தோராவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் ஒரேஸமயத்தில் த்ரோணர்முதலானவர்களோடு போர்புரிந்தது.)

இந்தஸமயத்தில் அதிகவீர்யமும்பராக்ரமமுமுள்ளவரும் சிறந்தகைகளுள்ளவரும் சஸ்த்ரதாரிகளுள்சிறந்தவரும் மஹாரதரும் யுத்தத்தில் விருப்பமுள்ளவருமான க்ருபர் அர்ஜுனனை எதிர்த்துப் போர புரிய அவ்விடம்வந்தனர். பிறகு, அர்ஜுனன் த்ரோணபுத்ரருடைய ரதத்தைவிட்டு ஸூர்யனுக்கும் அக்நிக்கும் ஒப்பானஒளிபொருந்திய க்ருபருடைய உத்தமமானரதத்தைக்குறித்து விரைவாகவந்தான். ஸூர்யனுக்கு ஒப்பானவர்களும் யுத்தம்செய்யப்போகின்றவர்களும் மஹாரதர்களுமான அவ்விருவீரர்களும் (மழைபொழிவதற்கு) ஸன்னத்தமாயிருக்கின்ற இரண்டுவர்ஷாகாலமேகங்கள்பே

கள். பரதச்ரேஷ்டனை அர்ஜுனனே உலகத்தில் பா

காண்டீவத்தைஎடுத்துச் சாமாலையினால் அடித்துக்கொண்டு எதிர்த்துச்சென்றான். அவ்வாறே க்ருபரும் வில்லைஎடுத்துக்கொண்டு அர்ஜுனனை எதிர்த்துச்சென்றார். பிறகு, க்ருபர் உறுதியானவில்லை எடுத்து (வைரிகளுடைய) ரக்தத்தைக் குடிக்கின்றவைகளான நாரா

சங்களை நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் பார்த்தன்மீது விடுத்தார். அவர் கார்காலத்தில் மேகம்போலச் சாமாரியைப்பொழிந்து எல்லாஸ்நேஹிதர்களையும் ஆனந்தப்படுத்திக்கொண்டு பல்குனனோடெதிர்த்துச் சண்டைசெய்தார். அளவற்றபராக்ரமமுள்ளவனும் பாண்டுவின்புத்ரனுமான பார்த்தன், மிக்கஉறுதியுள்ளவில்லை நன்றாக இழுத்துப் பலவகையான யுத்தமார்க்கங்களைக்காட்டிக்கொண்டு போர்க்களத்தில் ஸஞ்சரித்தான். மஹாபலசாலியும்ப்ரபுவுமான அர்ஜுனன் எல்லாத்திக்குகளையும் மூலைத்திசைகளையும் ஆகாயத்தையும் அம்புகளால் எப்பக்கத்திலும் ஒரேநிழலுள்ளனபோலச்செய்தான். அளவிடமுடியாத பலமுள்ள அர்ஜுனன், மேலேஸஞ்சரிக்கின்ற மேகமானது மழைத்தாரைகளால் பர்வதத்தைமூடுவதுபோல யுத்தத்தில் க்ருபரை அநேகஅம்புகளால் மூடினான். யுத்தத்தில் கூர்மையுள்ளவைகளும் அக்நிஜ்வாலைக்கு ஒப்பானவைகளுமான அம்புகளால் அடிக்கப்பட்டவரும் கோபம்கொண்டவருமான அந்தக்ருபர் புகையில்லாதநெருப்புப்போல ஜ்வலித்துக்கொண்டிருந்தார். பிறகு, மஹாபாஹுவான அவர் நிகரில்லாத பராக்ரமமுள்ளபார்த்தனை ஆயிரம்அம்புகளாலடித்துப் போர்க்களத்தில் ஸிம்மநாதம்செய்தார். பிறகு, பார்த்தன் தங்கமயமான கட்டுக்களுள்ளதும் அழுந்தினகணுக்களுள்ளதுமான அம்பினால் யுத்தத்தில் க்ருபருடையஉத்தமமான த்வஜத்தைப் பிளந்தான். அதற்குப்பிறகு, சிறந்ததேஜஸுள்ளபார்த்தன் யுத்தத்தில் ஸூர்யனுக்குஒப்பான நாராசங்களையும் மறுபடியும் அநேகபாணங்களையும் எடுத்தான். சிறந்தகைகளுள்ளவனும் க்ஷத்ரியரிற்சிறந்தவனுமானஅவன் அவைகளால் அப்பொழுது க்ருபருடையதேர் காப்பவர்களையும் யுத்தம்செய்கின்ற மஹாரதர்களையும் அடித்தான். அப்பொழுது படையுடன்கூடினவர்களான சந்த்ரகேது, ஸுகேது, சித்ராச்வன், மணிமான், முஞ்சமௌளி, விக்ராந்தன், ஹேமவர்ணன், பயாவஹன், ஸுரதன், அதிரதன், ஸுஷேணன், அரிஷ்டன், ந்ருகேதுஆகிய இவர்கள் உயிரைஇழந்து விழுந்தார்கள். பரதகுலத்தில்பிறந்தவரே! பார்த்தன் நிமிஷத்தில் அவர்களைக்கொன்று மறுபடியும் வேறு பதின்மூன்றுபாணங்களை (வில்லில்) பூட்டினான். பிறகு, மஹாபலசாலியும் சிறந்தமஹிமையுள்ளவனும் இந்த்ரனுக்கு ஒப்பானவனுமான பல்குனன் யுத்தத்தில் ஒருபாணத்தினால் இந்தக்ருபருடைய (ரதத்தின்) நுகத்தையும் நான்குபாணங்களால் நான்குகுதிரைகளையும் ஆறாவது பாணத்தினால் ரதத்திலிருந்த ஸாரதியின்தலையையும் மூன்றுபாணங்களால் த்ரிவேணுவையும் இரண்டுபாணங்க

ளால் அச்சுக்கட்டையையும் பன்னிரண்டாவதான வஜ்ராயுதத்துக்கு
ஒப்பான பல்லத்தினால் அம்புகளையுடைய அவருடையவில்லையும் அறு
த்து அட்டஹாஸம்செய்து பதின்மூன்றாவதுபாணத்தினால் (அவரு
டைய) நடுமார்பிலடித்தான். அறுக்கப்பட்டவில்லையுடையவரும் ரத
த்தைஇழந்தவரும் கொல்லப்பட்டகுதிரைகளையுடையவரும் ஸாரதி
யைஇழந்தவருமான அந்தக்ருபர் பிறகு கோபங்கொண்டு ஸூர்ய
னைப்போலவும் அக்னியைப்போலவும் ப்ரகாசிக்கின்ற சக்தியைஎடு
த்து அற்புதமானசெய்கையுள்ளபார்த்தன்மீது விரைவாகவிடுத்தார்.
அர்ஜுனன் அவ்விதமான உருவமுள்ளதும் தங்கத்தினால் அலங்
கரிக்கப்பட்டதுமான அந்தச்சக்தியைக் கூர்மையான அம்புகளா
லும் அர்த்தசந்த்ரபாணங்களாலும் தடுத்தான்; (அவன் தன்னை
நோக்கி) வருகின்றதும் பெரியஎரிநக்ஷத்ரம்போலப் ப்ரகாசிக்கின்
றதுமான அந்தச்சக்தியைப் பத்துப்பாணங்களால் துண்டித்தான்.
பார்த்தனால் அம்புகொண்டு துண்டிக்கப்பட்ட அந்தச் சக்தியா
னது பத்துத்துண்டங்களாகப் பூமியில்விழுந்தது. சக்தியானது
அறுக்கப்பட்டவுடன் ரதத்தைஇழந்தவரும் அம்புகளால் துன்ப
மடைந்தவரும் பகைவர்களைக்கொல்லுகின்றவருமான க்ருபர் கதா
யுதத்தைக் கையில்எடுத்துக்கொண்டு ரதத்தினின்றுவேகமாகத் துள்
ளிக்குதித்து அளவற்றபலமுள்ளபார்த்தன்மீது அதை விரைவாக
ப்ரயோகித்தார். (அவரால்) விடப்பட்டதும் பெரிதும் அவருடைய
ரூபத்தால் அலங்கரிக்கப்பட்டதுமான அந்தக்கதாயுதமும் அர்ஜுன
னுடையபாணங்களால் அடிக்கப்பட்டு வேறுவழியைக்குறித்துச்
சென்றது. பிறகு, வேகமும் பராக்ரமமுமுள்ளக்ருபர் கத்தியையும்
ஒளிபொருந்தினகேடயத்தையும் எடுத்துக்கொண்டு பாண்டவனைக்
கொல்வதற்கு விரும்பினார். சிறந்தஆசார்யரும் நன்றாகக்கற்பிக்கப்
பட்டவரும் சரத்வானுடையகுமாரருமான அந்தக்ருபர் கத்தியையும்
கேடயத்தையும் எடுத்துக்கொண்டு ஒருவராகஆகாயத்தில் ஸஞ்சரிக்
கும்தேவன்போல வேகத்துடன் க்ரமமாக யுத்தபூமியில்ஸஞ்சரித்
தார். பிறகு, குந்திபுத்ரனான அர்ஜுனன் பத்துக்ஷுரப்ரங்களால்
(அவருடைய) கத்தியையும் கேடயத்தையும் ஒருநிமிஷத்துக்குள்
துண்டாக்கினான். அது ஆச்சர்யமாயிருந்தது. அப்பொழுது அதிக
தேஜஸுள்ள அந்தக்ருபர் கத்தியும் கேடயமும்அழிந்ததால் வ்ய
ஸனமடைந்தமுகத்துடன் பற்களால் உதடுகளைக்கடித்து மனத்தில்
பெருங்கோபத்தைஅடைந்து மறுபடியும் 'இருக்கட்டும்' என்று
சொல்லிவிட்டு யுத்தத்தைவிட்டுவிலகுவதில் முயற்சியுள்ளவராக (தம்)

ஸஹோதரிபுத்ரரான அச்வத்தாமாவினுடைய ரதத்தின்மீது விரைந்து ஏறிக்கொண்டு மறுபடியும் வில்லையெடுத்தார்.

இந்தஸமயத்தில், பீஷ்மர், பலசாலியானக்ருபர் பல்குனனால் துன்பமடைந்திருப்பதைக்கண்டு கோபங்கொண்டு, பிறகு, த்ரோணரைப்பார்த்து, "(ஆசார்யரே!) பல்குனன் யுத்தத்தில் ஒவ்வொருவரோய் (சண்டைசெய்தால்) நம்மை ஜயித்துவிடுகிறான். (ஆகையால்,) நானும் [1] நீரும் கர்ணனும் அச்வத்தாமாவும் க்ருபரும் மற்றுமுள்ள அனேக சூரர்களும் (ஒன்றுகூடி) இந்த்ரகுமாரனை ஜயிப்போம்" என்றுசொன்னார். பாரதரே! பிறகு, பீஷ்மர் த்ரோணர்முதலான எல்லாரதிகர்களும் ஒன்றுசேர்ந்துவந்து விரைவாக அர்ஜுனனை எதிர்த்துப் போர் புரிந்தார்கள். [2]அளவற்றதைர்யமுள்ள அந்த அர்ஜுனன், பனியானது மலைகளைமூடுவதுபோல, பாணமயமானவலைகளால் சுற்றிலுமிருக்கின்ற அந்தமஹாரதர்களை மூடினான். (அப்பொழுது) கர்ஜிக்கின்ற பெரியயானைகளாலும் கனைக்கின்றகுதிரைகளாலும் பேரி சங்கங்களுடையகோஷங்களாலும் நெருங்கிய சப்தமுண்டாயிற்று. நூற்றுக்கணக்காகப் பார்த்தனால் விடப்பட்ட சரமாரிகள் யானைகளின்சரீரங்களையும் குதிரைகளின்சரீரங்களையும் இருப்புக்கவசங்களையும் பிளந்துவிட்டுப் பூமியில்விழுந்தன. விரைவாக அம்புகளைத்தொடுக்கின்ற பாண்டவனே சரத்காலத்தில் நடுப்பகலை அடைந்திருக்கின்ற நல்லகாந்தியையுடைய ஸூர்யன்போல ப்ரகாசித்தான். அப்பொழுது எல்லா ரதிகர்களும் யுத்தத்தில் பார்த்தனுடையவில்லிலிருந்து கிளம்பின அம்புகளைப்பொறுமல் நன்றாக த்வம்ஸம்செய்யப்பட்டு ரதங்களைஇழந்து வடக்குமுகமாக ஓடினார்கள். குதிரைவீரர்களும் குதிரையின் மீதேறி ஓடினார்கள். காலாட்கள் பூமியில்ஓடினார்கள். பாணங்களாலடிக்கப்படுகின்றவைகளும் தாம்ரத்தாலும் வெள்ளியாலும் இரும்பினாலும்செய்தவைகளுமான மஹாத்மாக்களான கௌரவர்களுடைய கவசங்களிலிருந்து பெரியசப்தம்தோன்றியது. ப்ரஜ்ஞையைஇழந்து ச்ரமத்தினால் சஸ்த்ரங்களை நழுவவிட்டுக் கீழேவீழ்கின்ற குதிரைவீரர்களுடைய சரீரங்களால் யுத்தபூமியானது மூடப்பட்டதாகியது. அர்ஜுனன் ரதத்தின்நடுவிடங்களைச் சூன்யமாகச்செய்து மனிதர்களால் யுத்தபூமியைமூடினான். வில்லைக்கையில்கொண்டவனும் புருஷச்ரேஷ்டனுமான தனஞ்சயன் நடனம்செய்கின்றவன்போல (அங்குமிங்குமாகஸஞ்சரித்துக்கொண்டு) யுத்தத்தில் க்ஷத்ரியர்களுடையசிரங்களை வீழ்த்தினான். இடிமுழக்கம்போன்ற காண்டீவசப்தத்தைக்கேட்டு

[1] 'த்ரோணரும்' என்பது மூலம். [2] வேறுபாடம்.

எல்லாஸைன்யங்களும் நடுக்கமுற்றுத் தனித்தனியே பதுங்கின. குண்டலங்களையும் தலைப்பாகைகளையும் தரித்தவைகளும் ஸ்வர்ணமயமான மாலைகளை அணிந்தவைகளுமான (வீரர்களுடைய) தலைகள் போர்முகத்தில் விழுந்தவைகளாகக்காணப்பட்டன. யுத்தபூமியானது பாணங்களால் அடித்துத்தள்ளப்பட்ட சரீரங்களாலும், விற்களைப்பிடித்தவைகளும் ஹஸ்தாபரணங்களை அணிந்தவைகளுமானகைகளாலும் நன்குமூடப்பட்டு விளங்கியது. பரதச்ரேஷ்டரே! யுத்தத்தில் கூர்மையுள்ளபாணங்களால் தள்ளப்படுகின்றதலைகள் ஆகாயத்தினின்று கல்மாரிவிழுவதுபோல விழுந்தன. பயங்கரமான பராக்ரமமுள்ள அர்ஜுனன் அப்பொழுது தன்னை ரௌத்ரஸ்வரூபமுள்ளவனாகக் காண்பித்துக்கொண்டு யுத்தத்தில் நூறுநூறாகவும் ஆயிரம்ஆயிரமாகவும் சூரர்களைக் கொன்றான். அரண்யத்தில் பதின்மூன்றுவர்ஷகாலம் அவ்வாறு தடுக்கப்பட்டிருந்தபாண்டவன் யுத்தத்தில் த்ருதராஷ்ட்ரகுமாரர்கள்மீது கோபாக்னியைக் கக்கினான். ஓ! பரதகுலத்தில்உதித்தவரே! அர்தக்கௌரவஸேனையைஎரிக்கின்ற அந்தப்பாண்டவனுடைய பராக்ரமத்தைக்கண்டு துர்யோதனனுடைய யுத்தவீரர்கள் எல்லோரும் பொறுமையைக் கைப்பற்றினார்கள். அறுபது வயதுள்ள மதங்கொண்டயானையானது கோரைக்காட்டை அழிப்பதுபோல அர்ஜுனன் சஸ்த்ரதேஜஸினால் எல்லாவீரர்களையும் அடித்தான். பரதகுலததில்பிறந்தவரே! பிறகு, ஜயசாலிகளுள்சிறந்த அர்ஜுனன் ஸேனையைத்துரத்தி மஹாரதர்களையும் பயப்படும்படிசெய்து நான்குபக்கத்திலும் ஸஞ்சரித்தான். அந்த அர்ஜுனன் போர்க்களத்தில் (பலவிதமான) கதிகளோடு ஸஞ்சரித்துக்கொண்டு (பகைவர்களைக்) கொல்லுகையில் ரக்தத்தாலும் நரம்புகளாலும் நிறைந்த அலைகளுள்ள கோரமான ஒருநதி தோன்றியது. அர்ஜுனன் யுத்தத்தில் எலும்புகளாகிற பாசிக்கொத்துகளால் நெருங்கியதும், [1]காலனால் படைக்கப்பட்டதும், பாணங்களும் விற்களுமாகிற தெப்பங்களுள்ளதும், பயங்கரமானதும், மாம்ஸத்துடன்கூடின ரக்தமாகிறசேறுள்ளதும், ரதங்களாகிற தெப்பங்களுள்ளதும், நரம்புகளாகிற ஸர்ப்பங்களையுடையதும்,தலைமயிர்களாகிற பாசிக்கொத்துகளும் புல்தரைகளுமுள்ளதும்,சிறுகத்திகளும் பெருங்கத்திகளுமாகிற மீன்களுள்ளதும்,சாமரங்களும் தலைப்பாகைகளுமாகிற நுரைகளுள்ளதும், குதிரைக்கழுத்துக்களாகிற பெரியசுழல்களுள்ளதும், தலையில்லாமுண்டங்களாகிற நீர் மனுஷ்யர்களைஉடையதும், காக்கைகழுகுகளின் சப்தங்களுள்ள

1 வேறுபாடம்.

தும், வேகமுள்ளதும், ஸாரஸபக்ஷிகளாலும் அன்றில்பக்ஷிகளாலும் சப்தமுள்ளதாகச்செய்யப்பட்டதும், ஸிம்மநாதங்களாகிற பெரியசப்தங்களுள்ளதும், சங்கத்வனிகளாகிற பெரியத்வனிகளுள்ளதும், வீரர்களுடையதலைகளாகிற தாமரைகளால் நிறைந்ததும், பாணங்களும் விற்களுமாகிற பெருங்கோரைகளுள்ளதும், காலாட்களாகிற மத்ஸ்யங்களால்கலங்கியதும், யானைத்தலைகளாகிற ஆமைகளுள்ளதும், நரிகளாகிற ம்ருகங்களுடையசப்தத்தால் நிறைந்ததும், மாம்ஸமும் மஜ்ஜையுமாகிற எங்கும்நிறைந்த சேறுள்ளதும், கோரஸ்வரூபமாயிருக்கின்றதும், பிசாசங்களுடையகூட்டங்களால் அடையப்பட்டதும், கரையில்லாததும், தடுக்கமுடியாததும், ரக்தத்தைஜலமாகக்கொண்டதும், நான்குபக்கத்திலும்பரவியதுமான ஒருநதியை உண்டுபண்ணினன். அரசரே! பார்த்தன் யானைகளுடையசரீரங்களாகிற பெரிய திட்டுக்களுள்ளதும் குதிரைகளுடையசரீரங்களாகிற பெரியகற்களுள்ளதும் பதாதிகளுடைய தேஹங்களாகிற கட்டுமரங்களையுடையதும் ரதங்களுடைய கூட்டங்களாகிற பெரியமரங்களையுடையதும் தலைமயிர்களாகிற புல்தரைகளால் மூடப்பட்டதும் மனிதர்களுக்கு மிக்கபயத்தைக்கொடுக்கக்கூடியதும் ஆழ்ந்திருக்கின்ற ரக்தமாகிற ஜலத்தையுடையதும் யமனுகிற கடலைக்குறித்துச்செல்லுகின்றதும் பயப்படும் மனிதர்களால் தாண்டமுடியாததும் சூரர்களால் எளிதில் தாண்டக்கூடியதுமான ரக்தம்நிரம்பியநதியை அடிக்கடி உண்டுபண்ணினன். இந்த்ரகுமாரன் இவ்விதம் பயங்கரமான ரக்தநதியைஉண்டாக்கினன். பாணங்களைஎடுப்பதும் வில்லில்பூட்டுவதும் (லக்ஷ்யங்களில்) ப்ரயோகிப்பதும் காண்டீவத்தைஇழுப்பதுமான அந்தஅர்ஜுனனுடைய (செய்கைகளில்) கொஞ்சமேனும் இடைவெளியானது காணப்படவில்லை.

அறுபத்திரண்டாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(பீஷ்மரும் அர்ஜுனனும் யுத்தத்திற்காக ஸந்தித்ததும், தேவர்கள் அவ்விருவரையும் புகழ்ந்ததும்.)

பார்த்தன் இவ்வாறு அந்தஸைன்யத்தை ஓடும்படிசெய்துவிட்டுப் பீஷ்மருக்கருகில்வந்தான். இந்த்ரகுமாரனை அர்ஜுனன், மிக்க தைர்யமுள்ள துர்யோதனனுடைய எல்லாஸைன்யங்களும் பயந்திருக்கும்பொழுது நான்குபாணங்களை வில்லில்பூட்டிப் பீஷ்மரைக்

குறித்துப் பயத்துடன் விடுத்தான்; (அவற்றுள்) இரண்டுபாணங்களால் அவரை அபிவாதனஞ்செய்தான். இரண்டுபாணங்கள் அவருடைய காதுகளின்ஸமீபம்சென்று குசலப்ரச்னம்செய்தன. அவரும், 'குந்தீபுத்ரன் ஜயமடையட்டும்' என்று ஆசீர்வாதம்செய்தார். போரில் பகைவரைவெல்ல எண்ணங்கொண்டு ஸமீபத்தில்வருகின்ற புருஷச்ரேஷ்டனான தனஞ்சயனை, யுத்தத்தில் (ஸமர்த்தனென்று) உலகத்தில் ப்ரஸித்திபெற்றவனும் சௌர்யம் வீர்யமுதலியவற்றால் பிம்பத்தினின்று எடுக்கப்பட்ட பரதிபிம்பம்போலக் கர்ணனிடத்தினின்று உண்டானவனும் வைகர்த்தனனுடையபுத்ரனும் வீரனுமான வ்ருஷஸேனன் யுத்தம்செய்யவிரும்பி விரைவாகஎதிர்த்தான். பிறகு, பாண்டுகுமாரனானபார்த்தன், தன்னோடு யுத்தம்செய்கின்ற அந்தவ்ருஷஸேனனுடைய கைப்பழக்கத்தையும் ஆண்மையையும் ஒருமுஹூர்த்தகாலம்பார்த்து அந்தவ்ருஷஸேனனுடைய பராக்ரமத்தைப்பற்றி ஸந்தோஷித்தான். பார்த்தன் அப்பொழுது கழுகிறகுபூண்டதான ஒருபாணத்தினுடைய நுனியினால், பொன்னால்அலங்கரிக்கப்பட்ட அந்த வ்ருஷஸேனனுடையவில்லை விரைவாக அறுத்தான்; பிறகு, ஐந்துபாணங்களால் திரும்பவும் அவனை நடுமார்பில்அடித்தான். பார்த்தனுடையபாணங்களால் அடிக்கப்பட்ட அந்தவ்ருஷஸேனன் தேரினின்று துள்ளிக்குதித்து ஓடினான். (பகைவர்களைநோக்கி) வருகின்றவனும் பயங்கரமானவில்லுள்ளவனுமான பாண்டவனைத் துச்சாஸனனும் விகர்ணனும் சகுனியும் விவிம்சதியும் எல்லாப்பக்கத்திலும் சூழ்ந்துகொண்டார்கள். பார்த்தன், யுத்தரங்கத்தில் கோபங்கொண்டு அழுந்தியகணுக்களுள்ள அம்புகளால் அவர்களுடைய (தேரிலுள்ள) நுகத்தையும் கொடியையும் வில்லையும் யுத்தத்தில் விரைவாகத்துண்டித்தான். அவர்களெல்லாரும், பார்த்தனுடையபாணங்களால் கொடியறுபட்டும் வில்லும்கவசமும்வெட்டுண்டும் பிடிக்கப்பட்டுப் போர்க்களத்தின்மத்தியினின்று ஓடினார்கள்.

பிறகு, பீபத்ஸுவானவன், உரக்கச்சிரித்து விராடபுத்ரனைப்பார்த்து, "பகைவரைவருத்துபவனே! பொன்மயமானதும் உயரத்தூக்கிக்கட்டப்பட்டதுமான இந்தப்பனைமரக்கொடியை இப்பொழுது என்னை அடையும்படிசெய். இது மேகத்தினிடையிலுள்ள மின்னலைப்போல அடிக்கடி நன்றாகப்ப்ரகாசிக்கின்றது. சந்தனுவின்குமாரரான இந்தப்பீஷ்மரிருக்குமிடத்துக்குப் போ. தெய்வத்தன்மையுள்ளவைகளும் கோரரூபமுள்ளவைகளும் ஆச்சர்யத்தைஉண்டாக்கத்தக்கவைகளும் சிறியவைகளும் பெரியவைகளுமான அஸ்த்ரங்களைப்போரில்

காண்பிக்கப்போகிறேன். மத்ஸ்யராஜனே! இவர் எங்களுக்குப் பால்யம்தொடங்கி எப்பொழுதும் போஷகராயிருப்பவர்; எப்பொழுதும் எங்களுடையச்ரேயஸில் விருப்பமுள்ளவர்; எப்பொழுதும் எங்களுக்கு யோகக்ஷேமங்களைச்செய்பவர். இவர்மடியில் பால்யத்தில் நான் வளர்ந்தேன். ஆதலால், இவருடன் ஒழுங்காகப் போர்புரியப்போகிறேன். இவர் இரவும்பகலும் எங்களுக்கும் த்ருதராஷ்ட்ரகுமாரர்களுக்கும் (உண்டானவிரோதத்தைத்) தணிப்பதில் விருப்பமுற்றவர்" என்றுகூறினன். அந்த அர்ஜுனனுடைய அந்தவார்த்தையைக்கேட்டு அவனுடைய ஸாரதியான விராடபுத்ரன் அவனால்ஏவப்பட்டுப் பீஷ்மருடைய ரதத்தைநோக்கி ரதத்தைநடத்தினன். காற்றினால் விரைவாக எதிர்த்துத்தள்ளப்பட்ட மஹாமேகம்போன்றதும் (உத்தரனால்) தூண்டப்பட்டதும் ரதங்களில்சிறந்ததுமான அர்ஜுனனுடைய அந்தரதத்தைக்கண்டு கங்கையின்புதல்வரான பீஷ்மர் ஸூர்யன்போல ஒளியுள்ள ரதத்தோடு அந்தரதத்தை எதிர்த்துச்சென்றார். (தம்மைஎதிர்த்து) வருகின்ற அர்ஜுனனைக்கண்டு பகைவர்பட்டணங்களைஜயிப்பவரும் இந்தக்கௌரவர்களால் அவ்வாறு நன்குகாக்கப்பட்டவரும் (ஒருவராலும்) ஜயிக்கமுடியாதவரும் பிதாமஹருமான பீஷ்மர், போர்வீரர்கள் கொல்லப்படுங்கால் ஸ்வர்ணத்தால் அலங்கரிக்கப்பட்ட சிறந்தவில்லையும் கூர்மையானமுனையுள்ளவைகளும் மர்மஸ்தானங்களையும் தேஹங்களையும் பிளக்கின்றவைகளுமான அம்புகளையும் எடுத்துக்கொண்டு யுத்தஞ்செய்வதில் விருப்பமுற்று, ஒரு வ்ருஷபமானது மற்றொருபெரியவ்ருஷபத்தை எதிர்ப்பதுபோல அர்ஜுனனைஎதிர்த்துச்சென்றார். புருஷச்ரேஷ்டரான அந்தப்பீஷ்மர், தலையின்மேல் தூக்கிப்பிடிக்கப்பட்ட வெள்ளைக்குடையினால் ஸூர்யனைச் சிகரத்தில்வைத்துக்கொண்டிருக்கின்ற மலைபோல ப்ரகாசித்தார். காங்கேயர் சங்கத்தைஊதி த்ருதராஷ்ட்ரகுமாரர்களை ஸந்தோஷிக்கச்செய்துகொண்டு பீபத்ஸுவை வலப்பக்கமாகநெருங்கிவந்து எதிர்த்தார். பகைவீரர்களைக்கொல்லுகின்றவனும் அளவிடமுடியாத வல்லமைபொருந்தியவனுமான அர்ஜுனன் (தன்னைநோக்கி) வருகின்ற அந்தப்பீஷ்மரைப்பார்த்து (தன்வீட்டிற்கு) வந்திருக்கின்ற ப்ரியமான விருந்தினரைப்போல வரவேற்றான். வீர்யமுள்ளவனான அர்ஜுனன், யுத்தத்தில் தேவதத்தமென்கிற மஹாசங்கத்தை உரக்கஊதினன். அப்பொழுது பீஷ்மபாண்டவர்களுடைய அந்தச்சங்கநாதங்கள் ஸ்வர்க்கத்தையும் ஆகாயத்தையும் பூமியையும் எல்லாப்பக்கத்திலும் மிகவும் எதிரொலியிடும்படிசெய்தன. பரதகுலத்தில்உதித்தவரே!

ஆகாயத்தில் (யுத்தத்தைப்பார்க்க) வந்திருக்கின்ற இந்த்ரனுடன் கூடினதேவர்களெல்லோரும், "அர்ஜுனன் கௌரவர்களெல்லோரையும் சஸ்த்ரதேஜஸினால் துண்டாக்கிவிட்டான். யுத்தத்தில் வீரர்களும் குருச்ரேஷ்டர்களுமான இந்தப்பீஷ்மரும் அர்ஜுனனும் எல்லா அஸ்த்ரங்களிலும் ஸமர்த்தர்கள்; யுத்தத்தில் எப்பொழுதும் ஜாக்ரதையுள்ளவர்கள்; வீரர்கள். இருவரும் தேவமனுஷ்யர்களுள் தம்பராக்ரமங்களால் ப்ரஸித்திபெற்றவர்கள். இருவரும் அதிகப்பராபப்புள்ளவர்கள். இருவரும் விளங்குகின்ற வில்லைத்தரித்தவர்கள். மனிதருட்சிறந்தவர்களும் அதிகவேகமுள்ள இரண்டுபுலிபோன்றவர்களும் ஸூர்யனுக்கும் அக்னிக்கும் ஸமமானசெய்கையுள்ளவர்களுமான இருவரும் (யுத்தத்துக்காக) நெருங்கிவிட்டார்கள். இருவரும் வாஸுதேவருக்கும் கார்த்தவீர்யனுக்கும் ஒப்பானவர்கள். இருவரும் ப்ரஸித்தமானசெய்கையுள்ளவர்கள். இருவரும் சூரர்கள்; மஹாபலசாலிகள்; எல்லா அஸ்த்ரங்களையும் அறிந்தவர்களுள்ளும் எல்லாச்சஸ்த்ரதாரிகளுள்ளும் சிறந்தவர்கள்; இவர்களின் வீர்யமானது அக்னிக்கும் இந்த்ரனுக்கும் [1]ஸோமனுக்கும் யமனுக்கும் குபேரனுக்கும் ஸூர்யனுக்கும் வருணனுக்கும் ஸமமானது. எவன்தான் குந்திபுத்ரனை யுத்தத்தில் த்வந்த்வயுத்தஞ்செய்வதற்காக நெருங்குவன். பீஷ்மரைத்தவிர (அவனைஎதிர்க்கத்தக்க) க்ஷத்ரியன் பூமியில் வேறொருவனுமில்லை" என்று சொல்லிக்கொண்டார்கள். இவ்வாறு இந்த்ரனுடன்கூடினதேவர்கள் யுத்தகளத்தில் அர்ஜுனனை அடைந்திருக்கின்ற பீஷ்மரையும் அதிகஉத்ஸாஹமுள்ள அர்ஜுனனையுங்கண்டு பூஜித்தார்கள். பிறகு, இந்த்ரனுடையஸேனைக்கொப்பான காந்தியுள்ள கௌரவர்களின்ஸேனையானது பலவிதமான தூர்யவாத்யங்கள் சங்கங்கள் இவைகளுடையசப்தங்களாலும் ஸிம்மநாதத்துடன் கூடின பற்பலவிதமானசப்தங்களாலும் குருச்ரேஷ்டரானபீஷ்மரைப் பூஜித்தது.

அறுபத்துமூன்றுவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் பீஷ்மரைத் தோற்கச்செய்தது.)

பிறகு, வீர்யசாலியானபீஷ்மர் ஜ்வலிக்கின்ற ஸர்ப்பங்கள்போன்ற அதிகவேகமுள்ள எழுபப்பாணங்களைப் பார்த்தனுடைய த்வ

---

1 சிவன், சந்த்ரன்.

ஜத்தின்மீது விடுத்தார். அந்தப்பாணங்கள் பாண்டுபுத்ரனுடைய த்வஜத்தைஅடைந்து த்வஜத்திலிருக்கிறகுரங்கையும் த்வஜத்தினுடைய நுனியில்வஸிக்கின்ற அந்தப்ராணிகளையும் அடித்தன. அவர் பத்துப்பாணங்களால் அவனுடையஸாரதியையும் குதிரைகளையும் அடித்தார். இரும்புமயமான மூன்றுபாணங்களாலேயே பார்த்தனை மார்பில்அடித்தார். பிறகு, அர்ஜுனன் கௌரவர்களுக்குப் பிதாமஹரான பீஷ்மரைக் கூர்மையுள்ளபாணங்களால் அடித்துப் பத்துப் பாணங்களால் (அவருடைய) கொடியையும் ஸாரதியையும் அடித்தான். பலிக்கும் இந்த்ரனுக்கும்நடந்த யுத்தம்போலக் கோரமானதும் மயிர்க்கூச்சத்தைஉண்டுபண்ணுகின்றதும் ஆச்சர்யகரமுமான அப்படிப்பட்டயுத்தமானது பீஷ்மருக்குப் பார்த்தனோடு நடந்தது. மேகத்தினின்றுபுறப்படுகிற நீர்த்தாரைகள்போல அவ்விருவருடைய வில்லினின்றும் வெளிப்படுகின்றபாணக்கூட்டங்களால்ஆகாசமானது இடைவெளிஅற்றதாகியது. கௌரவபாண்டவர்களுடைய யுத்தத்தில் பல்லங்கள் பல்லங்களோடுஅடித்துக்கொண்டு வர்ஷாகாலத்தில் மின்மினிப்பூச்சிகள்போல ஆகாயத்தில் விளங்கின. இடமாகவும் வலமாகவும் (சரங்களைத்) தொடுக்கின்ற ஜிஷ்ணுவினுடைய காண்டீவமானது யுத்தத்தில் மண்டலாகாரமாகச்செய்யப்பட்டு அக்னிசக்ரம் போலக் கோரமாகஇருந்தது. மேகமானது ஜலதாரைகளால் பர்வதத்தைமூடுவதுபோல அர்ஜுனன் அனேகமானசரமாரிகளால் பீஷ்மரைமூடினன். கொந்தளிக்கின்ற ஸமுத்ரம்போலக் கிளம்புகின்ற அந்தச்சரமாரியை அந்தப்பீஷ்மர் அம்புகளால்நாசம்செய்து அர்ஜுனனையும்தடுத்தார். பிறகு, அர்ஜுனனுடைய ரதத்தைக்குறித்துக் கூட்டம்கூட்டமாக விடப்பட்ட அவ்விதமான அம்புக்கூட்டங்கள் (பார்த்தனால்) அடிக்கப்பட்டுச் சிதறிவிழுந்தன. பிறகு, ஸ்வர்ணமயமான கட்டுக்களும் முனைகளுமுள்ளவைகளும் கூர்மையுள்ளவைகளும் அழுந்தினகணுக்களுள்ளவைகளும் (வந்து) விழுகின்றவைகளும் பக்ஷிகளின் இறகுகளுள்ளவைகளுமான அம்புகளால் ஆகாயமானது மூடப்பட்டது. பிறகு, பாண்டவன் கொடியஅம்புக்கூட்டங்களை விடுத்தான். பீஷ்மரும் பார்த்தன்மீது அவ்வளவு சரக்கூட்டங்களை விடுத்தார். பரதகுலத்தில்உதித்தவரான அந்தப்பீஷ்மர், பார்த்தனைக் குதிரைகளோடும் ஸாரதியோடும் தேரோடும்கூட வத்ஸதந்தங்களால்நிரப்பிப் பொன்மயமான கணுக்களுள்ளபாணங்களால் எல்லாத்திக்குக்களையும் ஆகாயத்தையும் மூடினர். பிறகு, தேவர்களும் ரிஷிகளும் கந்தர்வர்களும், "பீஷ்மர் அர்ஜுனனைத்தடுத்ததால் (ஒரு

வாலும்) செய்யமுடியாத கார்யத்தைச்செய்தவராகிறூர். பாண்டு புத்ரனை அர்ஜுனன் பலசாலி; ஸாமர்த்தியமுடையவன்; விரைவாகக் கார்யங்களைச்செய்பவன். சந்தனுபுத்ரரான பீஷ்மரையும் தேவகீபுத்ரரான ஸ்ரீக்ருஷ்ணனையும் ஆசார்யர்களுள்மிகச்சிறந்தவரும் மஹாபலசாலியுமான த்ரோணரையும்தவிர வேறுள்வன் யுத்தத்தில் பார்த்தனுடைய வேகத்தைத் தாங்கச்சக்தியுள்ளவன்?" என்று (அவ்விருவரையும்,) 'நல்லது, நல்லது' என்றுபுகழ்ந்தார்கள். மஹாபலசாலிகளும் புருஷச்ரேஷ்டர்களுமான அவ்விருவரும் எல்லாப்ராணிகளுடையகண்களையும் களிக்கச்செய்துகொண்டு அஸ்த்ரங்களால் அஸ்த்ரங்களைத்தடுத்து விளையாடினார்கள். மஹாத்மாக்களான அவ்விருவரும் யுத்தத்தில் ப்ராம்மாஸ்த்ரத்தையும் ஐந்த்ராஸ்ரத்தையும் அதிக்ரூரமான ஆக்னேயாஸ்த்ரத்தையும் கௌபேராஸ்த்ரத்தையும் வாருணாஸ்த்ரத்தையும் யாம்யாஸ்த்ரத்தையும் வாயவ்யாஸ்த்ரத்தையும் ப்ரயோகித்துக்கொண்டு விளங்கினார்கள். பிறகு, அப்பொழுது யுத்தத்தில் அவ்விருவரையும்கண்டு ஜனங்கள் ஆச்சர்யமடைந்தார்கள். 'சிறந்த கைகளுள்ள பார்த்த! நல்லது; பீஷ்மரே! நல்லது' என்றும்சொன்னார்கள். யுத்தத்தில் பீஷ்மரும்பார்த்தனும்செய்த இவ்விதமான மஹாஸ்த்ரங்களுடைய ப்ரயோகத்தை மனிதர்களுள் மற்றவன் யுத்தத்தில் வெளிப்படுத்துவதற்குச் சக்தியுள்ளவனுகான். எல்லா அஸ்த்ரங்களையும்அறிந்தவர்களான அவ்விருவருக்கும் இவ்விதமாக அஸ்த்ரயுத்தம் நடந்தது. பிறகு, ஜிஷ்ணுவானவன் அருகில்வந்து கூரியமுனையுள்ளதும் கழுகிறகுகள்பூண்டதுமான ஓரம்பினால் ஸ்வர்ணத்தினால்அலங்கரிக்கப்பட்ட (பீஷ்மருடைய) வில்லை அறுத்தான். மஹாபலசாலியும் புருஷரிற்சிறந்தவருமான பீஷ்மர் போர்க்களத்தில் அடுத்தநிமிஷத்திலேயே வேறுவில்லைஎடுத்து நாணேற்றிக் கோபத்துடன் தனஞ்சயன்மீது விரைவாக அனேகபாணங்களை ப்ரயோகித்தார். அர்ஜுனனும் பீஷ்மரின்மீது கூர்மையுள்ளவைகளும் நன்குதீட்டப்பட்டவைகளுமான அனேகபாணங்களை விடுத்தான். மிக்ககாந்தியுள்ள பீஷ்மரும் பாண்டவன்மீது அவ்வாறே அம்புகளைவிடுத்தார். மன்னரே! திவ்யாஸ்த்ரங்களை அறிந்தவர்களும் ஓயாமல் சரங்களைத்தொடுக்கின்றவர்களும் மிக்கதைர்யசாலிகளுமான அவ்விருவர்களுள் அப்பொழுது வேற்றுமைகாணப்படவில்லை. பிறகு, அதிரதனும் கிரீடமணிந்தவனுமான குந்திபுத்ரன் அப்பொழுது பாணங்களால் பத்துத்திக்குக்களையும் அப்படியே சூரரான பீஷ்மரையும் மறைத்தான். அந்தவீரகோஷ்டியில் பாண்டவன் பீஷ்மரையும் பீஷ்மர் பாண்ட

வனையும் அதிகமாக (அடித்தார்கள்.) வேந்தரே! இவ்வுலகத்தில் அது ஆச்சர்யமாக இருந்தது. சிறந்தகைகளுள்ளவரே! பீஷ்மருடைய ரதத்தைக் காக்கின்றவர்களான சூரர்கள் பாண்டவனால் கொல்லப்பட்டு அர்ஜுனனுடைய ரதத்துக்கு நான்குபக்கத்திலும் விழுந்தார்கள். பிறகு, காண்டீவத்தினின்று விடுபட்டவைகளும் சத்ருநாசத்தைச் செய்யவிருப்பம்கொண்டவைகளும் தடையற்றவைகளும் கட்டுக்களுள்ளவைகளும் அந்தப் பார்த்தனுடைய ரதத்தினின்று வெளிப்புறப்படுகின்றவைகளும் தீட்டப்பட்டவைகளும் பொன்மயமான வஸ்த்ரங்களுள்ளவைகளுமான அர்ஜுனனுடைய பாணங்கள் ஆகாயத்தில் அன்னப்பறவைகளுடைய வரிசைகள் போலக்காணப்பட்டன. பலமாகவும் ஆச்சர்யகரமாகவும் ப்ரயோகிக்கின்ற அந்த அர்ஜுனனுடைய அவ்விதிவ்யாஸ்த்ரத்தை இந்த்ரனோடு கூடின தேவர்களெல்லோரும் ஆகாயத்தில் நின்றுகொண்டு பார்த்தார்கள். பலவிதமும் ஆச்சர்யகரமுமான அந்த அஸ்த்ரயுத்தத்தைப் பார்த்து அதிகப்ரீதியுள்ளவனும் ப்ரதாபசாலியுமான சித்ரஸேனனென்கிற கந்தர்வன் தேவராஜனைப்பார்த்து, "(தேவராஜரே!) பகைவர்களைப் பிளக்கின்றவைகளும் (ஒன்றோடொன்று) சேர்க்கப்பட்டது போல (தொடர்ச்சியாக)ச் செல்லுகின்றவைகளுமான இந்த அம்புகளைப் பாரும். திவ்யாஸ்த்ரத்தை ப்ரயோகிக்கின்ற ஜிஷ்ணுவினுடைய ஆச்சர்யகரமான இந்தரூபத்தைப்பாரும். இதை மனுஷ்யர்கள் நம்பமாட்டார்கள். ஏனெனில், அவர்களிடத்தில் இவ்விதமான அஸ்த்ரம் இல்லை. தேவஸம்பந்தமுள்ள மஹாஸ்த்ரங்களுடைய இந்தச்சேர்க்கை ஆச்சர்யகரமானது. கௌரவஸைன்யங்கள், நடுப்பகலை அடைந்து ஆகாயத்தில் மிகத்தபிக்கின்ற ஸூர்யனைப்போலப் பாண்டவனைப் பார்ப்பதற்கும் சக்தியற்றவைகளாயிருக்கின்றன. இருவரும் ப்ரஸித்தமானசெய்கையையுடையவர்கள். இருவருமே அரசர்களுள் சூரர்கள். இருவரும் விசித்ரமானசெய்கையுள்ளவர்கள். இருவரும் போரில் (ஒருவராலும்) நெருங்கமுடியாதவர்கள்" என்று புகழ்ந்தான். பரதகுலத்திலுதித்தவரே! இவ்வாறுசொல்லக்கேட்ட தேவராஜனே பார்த்தனுக்கும் பீஷ்மருக்கும்நேர்ந்த யுத்தத்தைத் தேவலோகத்திலுண்டான புஷ்பவர்ஷத்தால் பூஜித்தான்.

பிறகு, அச்வத்தாமாவானவர் விரைவாகவந்து கர்ணனைப்பார்த்து, "கர்ண! 'நான் ஒருவனாகவே ஒன்றுசேர்ந்திருக்கின்ற எல்லாப் பாண்டவர்களையும் கொல்லுவேன்' என்று ஸபாமத்தியில் என்முன்னிலையில் நீசொன்னாய். அதை நீ செய்தாயில்லை. ஓ! ஸூதபுத்ர! ஒரு

வனிடமிருந்து பயந்தோடுகிறாய். விசித்ரவீர்யனுடையபேரன்மார்க ளான துர்யோதனன்முதலானவர்களெல்லோரும் உன்னை ஆச்ரயித் துக் குந்தீபுத்ரர்களைப் போரில்வெல்ல விரும்புகிறார்கள். (ஆதலால்) நீ பல்குனனேடு போர்புரிவாயாக" என்றுசொன்னார். அச்வத்தாமா சொல்லிய வார்த்தையைக்கேட்டு அப்பொழுது துர்யோதனன் கர்ண னுக்கு ப்ரியத்தைச்செய்யக்கருதிக் கோபத்துடன் த்ரோணபுத்ரரைப் பார்த்து, "ப்ராம்மணேத்தமரே! ப்ரஸித்தமானசெய்கையுள்ளவனை கர்ணனுடைய மானத்தைப் பங்கம்செய்யாதீர். மானபங்கம்செய்வதி ஞலோ அரசர்களுக்குப் பலக்குறைவுண்டாகும். சூரர்கள் தங்கள் வீர்யத்துக்குத்தக்கபடி போரில் வாயினாலும் பேசுவார்கள்; கார்யங் களையும் செய்வார்கள்; பராக்ரமத்தையும் காண்பிப்பார்கள். ஆதலால், சூரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அந்தக்கர்ணனை நீர் நிந்திப்பது தகுதியன்று" என்று மறுமொழிகூறினான். அரசனால் இவ்வாறு சொல்லப்பட்ட அந்தத்ரோணபுத்ரர் அப்பொழுது ரோஷத்தைஇழந் தவரானார். பிறகு, சந்தனுகுமாரரானபீஷ்மர், (பாணங்களை) நாண் கயிற்றிற்பூட்டி வெளிப்படையாகத்தொடுக்கின்ற ஸவ்யஸாசியினிடம் பாணங்களைஎய்தார். பிறகு, பீபத்ஸுவானவன் அளவற்றபராக்ரம முள்ள பீஷ்மருடையவில்லைப் பெரிதானமுனையுள்ளதும் கழுகிறகு கள் கட்டியிருக்கின்றதுமான ஓர்அம்பினால் பலாத்காரமாக அறுத் தான். அதற்குப்பிறகு, குந்தீபுத்ரனான தனஞ்சயன் (யுத்தம்செய்வ தற்காக) முயற்சிக்கின்றவரும் பராக்ரமசாலியுமான அந்தப்பீஷ்மரைப் பத்துப்பாணங்களால் நடுமார்பில்அடித்தான். சிறந்தகைகளுள்ளவ ரும் யுத்தத்தில் (ஒருவராலும்) ஜயிக்கமுடியாதவரும் கங்காபுத்ரரு மான அந்தப்பீஷ்மர் (அர்ஜுனனுடையபாணங்களால்) துன்பப்படுத் தப்பட்டு ரதத்திலுள்ளஏர்க்காலைப் பிடித்துக்கொண்டு [1]நெடுநேரம் நின்றார். தேர்க்குதிரைகளைநடத்துகின்ற ஸாரதியானவன் சாஸ்த் ரத்தைநினைத்து மஹாரதரும் ப்ரஜ்ஞையற்றவருமான அந்தப்பீஷ் மரை ரக்ஷித்துக்கொண்டு (தேரை) வேறிடம் நடத்திச்சென்றான். பராக்ரமத்திலும் சௌர்யத்திலும் வீர்யத்திலும் ஸத்வத்திலும் பல த்திலும் யுத்தத்திலும் எல்லாஅஸ்த்ரசஸ்த்ரங்களிலும் லாகவத்தி லும் தூரத்தினின்று (லக்ஷ்யங்களை) அடிக்கும்விஷயத்திலும் உலகத் தில்ஒப்பற்றவரும் பிதாவினால்அளிக்கப்பட்ட வரமுள்ளவரும் ச்ரமத் தைவென்றவரும் பகைவர்களைஜயித்தவரும் ஆலஸ்யமற்றவரும் இளைப் பில்லாதவரும் தம்மிஷ்டப்படி மரணமடையத்தக்கவரும் சூரரும்

---

1 வேறுபாடம்.

பிதாவினுடையபணிவிடையில் பற்றுள்ளவருமான பீஷ்மர் துர்யோதனனுடையநன்மைக்காக யுத்தகளத்தில் பார்த்தனோடு போர்புரிந்து குந்திபுத்ரனுக்கு ஹிதத்தைச்செய்வதற்காகத் தோல்வி அடைந்தவர் போலானார்.

அறுபத்துநான்காவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன், த்ரோணர்முதலான ஐந்துமஹாரதர்களை எதிர்த்துப் போர்செய்தது.)

பார்த்தன், போர்க்களத்தில் கௌரவர்கள் பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே யுத்தத்தில் பீஷ்மரைஜயித்து மறுபடியும் போர்புரியக்கருதி ஐந்துமஹாரதர்களைக் குறித்துச் சென்றான். அவன் இரண்டு தூணீரங்களையும்ஆராய்ந்து நாராசங்களைஎடுத்துக்கொண்டு காண்டீவத்தைஉருவுகின்றவனாகி மறுபடியும் கர்ணனை எதிர்த்துச் சென்றான். த்ரோணபுத்ரர் (கர்ணனைப்பார்த்து,) "கர்ண! 'யுத்தத்தில் எனக்கு நிகரானவனில்லை' என்று ஸபையின்மத்தியில் பொருத்தமில்லாத அனேகவார்த்தையைச் சொல்லிக்கொண்டிருக்கிறாய். அதற்கு இதோ ஸமயம்வந்துவிட்டது. இதோ அர்ஜுனன் ஸர்வப்ராணிகளையும் நாசஞ்செய்கின்ற அந்தகன்போலக் கோபங்கொண்டு ஸமீபத்தில் எதிர்த்துவந்து ஸிம்மம்போலக் கொட்டாவிவிடுகிறான். நீ சூரனாகஇருந்தால் ஓடாதே; நின்று பல்குனனோடு யுத்தம்செய்" என்றுசொல்ல, கர்ணன், "க்ஷத்ரியர்களுக்குரியதர்மத்தை அனுஸரித்திருக்கின்றயான் பீபத்ஸுவினிடத்தினின்றாவது தேவகீபுத்ரரான க்ருஷ்ணனிடத்தினின்றாவது (இன்னும்) மற்ற எல்லாப்பாண்டவர்களிடத்திலுநின்றாவது பயப்படவில்லை. பலத்தினால் அதிகரித்தவர்களும் தனுர்வேதத்தைக்கொண்டு பிழைக்கின்றவர்களுமான சூரர்களுக்கு(ப் பகைவர்களை)ப்பார்த்தவுடன் இறுமாப்புண்டாகிறது; ஸ்வரூபம்உள்ளடங்காது. அர்ஜுனனோடு போர்க்களத்தில் நன்றாக எதிர்த்துப் போர்புரிகின்றஎன்னை ஆசார்யபுத்ரர் பார்க்கட்டும். விதியோ (ஒருவராலும்) தாண்டமுடியாதது" என்றுசொன்னான். அச்வத்தாமா, "கர்ண! என்னதோஷம்? சூரர்களுக்கு வாக்குடன் பௌருஷமும்இருக்குமாகில் அது இந்தஉலகத்தில் குணங்களால் மேலானதென்று சொல்லப்படுகிறது. நீ பயமில்லாமல் பார்த்தனோ(

யுத்தம்செய். கர்ண! 'யுத்தத்தில் பார்த்தனிடத்திலிருந்து நான் பயப்படமாட்டேன்' என்பது முதலாக நீசொன்னவார்த்தையை நினைத்துக்கொண்டு யுத்தத்தினின்று ஓடாதே" என்றுகூறினர். அந்தத்தனஞ்சயனை அந்தஇந்துரதிகர்களும் நான்குபக்கத்திலும்சூழ்ந்துகொண்டு அம்புகளை மிகவர்ஷிக்கின்றவர்களும் பகைவர்களின் உயிரைப்போக்கக் கருதியவர்களும்(யுத்தத்தை)லாபம்போல எண்ணுகின்றவர்களும் வர்ஷாகாலமேகங்கள்போலச் சரக்கூட்டங்களை மிக இறைக்கின்றவர்களுமாகித் தனஞ்சயனை விரைவாக எதிர்த்தார்கள். அவர்கள் விரைவாகச்சென்று எதிர்த்துநின்று கூர்மையுள்ளவைகளும் பற்பலவகைப்பட்டவைகளும் இறகுகளுள்ளவைகளுமான அநேகபாணங்களால் தனஞ்சயனை அடித்தார்கள். பிறகு, எல்லாச் சஸ்த்ரதாரிகளுள்ளும் உத்தமனை பீபத்ஸுவானவன் அட்டஹாஸம்செய்து திவ்யாஸ்த்ரத்தை ப்ரயோகித்துக்கொண்டு ரதிகச்ரேஷ்டர்களை எதிர்த்தான்; ஸூர்யன் பூமியைக் கிரணங்களால் மூடுவதுபோலத் திசைகளைக் காண்டீவத்தினின்றுவிடுபட்ட அம்புகளால் மூடினன். ரதங்கள் யானைகள் கொடிமரங்கள் குதிரைகள் இவைகளுடைய (தேஹத்தில்) கூர்மையுள்ளபாணங்களால் அடிக்கப்படாத இடம் இரண்டு அங்குலங்கூட இல்லை. பாதகுலத்தில்உதித்தவரே! அமைதியை முதன்மையாகக்கொண்ட போர்வீரனைவரும் தங்களுடைய மனநிலைமையை அறியவில்லை. யானைகளும் குதிரைகளும் பயந்துஓடுங்கின. மதப்பெருக்குற்றதும் அறுபதுவர்ஷம்சென்றதுமான ஒருயானையானது கோரைக்காட்டைஅழிப்பதுபோல அர்ஜுனன் சஸ்த்ரங்களுடையதேஜஸினல் எல்லாவீரர்களையும்அழித்தான். காண்டீவத்தினுடையசப்தத்தினல் பூமியானது நடுங்கியது. தனஞ்சயன் தார்த்தராஷ்ட்ரர்களுடைய மனங்களையும் துன்பமடையும்படி செய்தான். ஆயுதம்பிடித்தவர்களுள் மேலானவனும் வீர்யமுள்ளவனும் சூரனுமான அந்தஅர்ஜுனன் பிறகு ஸைன்யங்களுடையமத்தியில் நுழைந்து யுத்தத்தில் ஸாரதியைநோக்கி, "ஸாரதியே! இந்தக்குதிரைகளை இழுத்துப்பிடித்து மெல்லநடத்து. போரில் (ஒருவராலும்) ஜயிக்கமுடியாதவரான ஆசார்யபுத்ரருடன் நான் போர்புரியப்போகிறேன். முந்தியே அவர் என்னேடு சண்டைசெய்திருக்கிறார். அவர் எனக்குப்பின்புறத்திலிருக்கிறார்" என்றுகூறினன். இவ்வாறு அர்ஜுனனல் சொல்லப்பட்டவுடன் அந்தவிராடபுத்ரன் வேகமுள்ள குதிரைகளை அச்வத்தாமாவினுடைய ரதத்தைக்குறித்து மிக்கவிரைவுடன் ஓட்டினன்.

கர்ணன், "துன்பமுற்றவனும் அதிகவேதனையுள்ளவனுமான பீபத்ஸுவானவன் இதோஓடுகிறான். அவனை அவ்விடத்திலேயே நான் பின்தொடர்வேன். 'அவன் உயிரோடு விடப்படமாட்டான்" என்றுசொன்னான். த்ரோணர் "மஹாத்மாவான இந்தஇந்த்ரகுமாரன் பயத்தினால் விலகவில்லை. பயந்தவர்கள் இவ்வாறு திரும்பமாட்டார்கள். அதிகமான வேதனையுடையவர்களும் இவ்வாறு திரும்ப மாட்டார்கள். அதிகப்பரபரப்புள்ள இவனை மறுபடியும் நீ எதிர்த்துப்போவாயாகில், மீண்டு விடுபடமாட்டாய். அவன் பலஅஸ்த்ரங்களை அறிந்திருக்கிறான். தெய்வாதீனமாகத் துர்யோதனன் விடுபட்டான். தெய்வாதீனமாகப் பசுக்களும் ஓடிவிட்டன. நீயும் தெய்வாதீனமாக விடுபட்டாய். யுத்தத்தால் என்னசெய்யப்போகிறாய்? ஒருக்ரோசதூரம் விலகிச்சென்று ஸைன்யத்தை நல்வார்த்தைசொல்வோம். அழைத்துவந்தஸைன்யத்தோடு மறுபடியும் பார்த்தனை எதிர்த்துச்செல்லுங்கள்" என்றுகூறினார்.

அறுபத்தைந்தாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன், உத்தரனைப் பீஷ்மர்முதலானவர்களின்பக்கத்தில் ரதத்தைநடத்தும்படிஏவி, அவனுக்குத் தன்பராக்ரமத்தைக்கூறி, துச்சாஸனன்முதலானவர்களை அவமானப்படுத்துவதற்காகப் பீஷ்மர்முதலியோருடன் போர்புரிந்தது.)

கர்ணன் தோல்விஅடைந்தானென்பதைக்கண்டு பார்த்தன் விராடபுத்ரனைநோக்கி, "(உத்தர!) இப்பொழுது என்னை(ப் பகைவர்களை) அடிக்கும்திறமையுள்ள வீரர்களுடைய தேர்க்கூட்டத்தை அடையும்படிசெய். எங்களனைவருக்கும் பிதாமஹரும் சந்தனுவின்புத்ரருமானபீஷ்மர் நல்லயுத்தத்தைவிரும்பிக் கவசம்பூண்டு ரதத்திலிருப்பதும், வஜ்ரங்களாலும் வைடூர்யங்களாலும் அலங்கரிக்கப்பட்டதும் ஸ்வர்ணமயமுமானபனைமரக்கொடியானது போர்க்களத்தில் காற்றினால்அசைவுற்று நன்கு ப்ரகாசிக்கின்றதுமானஇடத்தில் (சென்று) வில்லாளிகளுடைய தேர்க்கூட்டங்களைப் பயங்கரமாகஅடிப்பேன். இவர்களுடையவிற்களையும் நாண்கயிறுகளையும் கவசங்களையும் நான் அபஹரிப்பேன். உத்தர! திவ்யாஸ்த்ரங்களை அற்புதமாக ப்ரயோகிக்கின்றஎன்னை நீ பார். வர்ஷாகாலத்தில் மேகத்திலிருந்து ப்ரகாசிக்

ின்றமின்னல்போன்றஸ்வர்ணமயமான பின்புறமுள்ள என்னுடைய காண்டீவத்தைக் கௌரவர்கள்பார்க்கட்டும். ஸாரதியே! '(இவன்) வலப்பக்கத்தாலோ இடப்பக்கத்தாலோ எந்தப்பக்கத்தினால் (எய்கி றான்)' என்று பகைவர்களனைவரும் என்னைப் பகுத்தறியப்போகிற தில்லை. [1]அஸ்த்ரங்களாகிற ஜலமும் குதிரைகளாகிற சுழல்களும், யானைகளாகிற முதலைகளும் ரதங்களாகிற மடுக்களுமுள்ளதும் பர லோகத்துக்கு (எல்லாரையும்) இழுத்துக்கொண்டுபோகின்றதுமான நதியை நான் பெருகும்படிசெய்யப்போகிறேன்; கைகளும் கால்க ளும் தலைகளும் முதுகுகளும் புஜங்களும் சங்கங்களுமாகிற சராசரங் களுள்ளதான கௌரவர்களுடைய கூட்டமாகிறகாட்டை அழுந்தின கணுக்களுள்ள பாணங்களால் வெட்டுவேன். அம்பறாத்தூணியிலிரு ப்பவைகளும் அழகியகட்டுக்களும் முனைகளுமுள்ளவைகளும் துந் துபிவாத்யம்போலச் சப்திக்கின்றவைகளுமான அம்புகள் என்னால் தொடுக்கப்பட்டுப் போரில் கௌரவர்களை எரிக்கப்போகின்றன. கொ டிகளாகிறமரங்களும் அம்புகளாகிற புல்லுகளுமுள்ளதும் யானைகுதி ரைகளாகிற துஷ்டம்ருகங்களால்நிறைந்ததும் ரதங்களாகிறசிங்கக் கூட்டங்களோடு கூடியதும் விற்களாகிறகொடிகளால்அடர்ந்ததுமான கௌரவர்களுடையகூட்டமாகிறகாட்டை அஸ்த்ரதேஜஸினால் கொளு த்துவேன். ஒருவனாகஇருந்துகொண்டு பாரதஸேனையை யுத்தத்தில் ஜயிக்கின்றஎனக்கு, நெருப்புக்குக் காட்டில் வழிகள் ஏற்படுவது போல அனேகவழிகள் ஏற்படும். என்னால் சக்ரம்போலச்சுழற்றி அடிக்கப்பட்ட கௌரவஸேனையை நீஒருவனே பார்ப்பாய். சக்ரபா ணியான ஸ்ரீமந்நாராயணன் அஸுரர்களை ஓடும்படிசெய்வதுபோல, நான் ஒருவனாகவேயிருந்துகொண்டு அந்தப்பகைவர்களை ரதங்க ளுடையமத்தியினின்று பரலோகத்தின்பொருட்டு ஓடும்படிசெய் வேன். ஸமதரைகளிலும் மேடுபள்ளமுள்ளதரைகளிலும் நான் பர பரப்பில்லாமல் ரதத்திலிருந்துகொண்டு வழியைமறைத்துநிற்கும் மலை யையும் பிளப்பேன். நான் இந்த்ரனுடையயுத்தத்தில் மாதலியை ஸாரதியாகக்கொண்டு, பலத்தினால் இறுமாப்புள்ளவர்களும் பகைவர் களும் நான்குபக்கத்திலும் ஓடுகின்றவர்களும் போர்புரிகின்றவர்களு மான எல்லா நிவாதகவசர்களையும் யுத்தத்தில் கொன்றேன்; ஆயிரக் கணக்காகக் காண்டீவத்தினின்று விடுபட்டஅஸ்த்ரங்களால் நிவா தகவசர்களைக்கொன்றுவிட்டு ஸமுத்ரத்துக்குஅக்கரையிலிருக்கின்ற சிறந்ததான ஹிரண்யபுரத்தையும் நாசஞ்செய்தேன். ஸாரதியே!

[1] 'ரக்தமாகிற' என்பது வேறுபாடம்.

உக்ரமானவில்லாளிகளான அறுபதினாயிரம்ரதிகர்களைக்கொன்றுவிட்டு யுத்தத்தில் அதிக உக்ரஸ்வரூபிகளும் கோரரூபிகளுமான பௌலோமர்கள் காலகேயர்கள்என்கிற அஸுரர்களையும் நான் பாசுபதாஸ்த்ரத்தினால் கொன்றேன். நான் இந்த்ரனிடத்தினின்று உறுதியாக (சஸ்த்ரங்களைப்பிடிக்கும்) முஷ்டியையும் ப்ரம்மதேவரிடத்தினின்று ஹஸ்தலாகவத்தையும் மனுவினிடத்தினின்று அதிகஸாமர்த்தியமுள்ளதும் ஆச்சர்யகரமுமான [1]மஹாயுத்தத்தையும் கற்றிருக்கிறேன். நான் ருத்ரரிடத்தினின்று ரௌத்ராஸ்த்ரத்தையும் வருணனிடத்தினின்று வாருணாஸ்த்ரத்தையும் ஸூர்யனிடத்தினின்று ஸௌர்யாஸ்த்ரத்தையும் யமனிடத்தினின்று யாம்யாஸ்த்ரத்தையும் அக்னியினிடத்தினின்று ஆக்னேயாஸ்த்ரத்தையும் வாயுவினிடத்தினின்று வாயவ்யாஸ்த்ரத்தையும் மற்றத்தேவர்களிடங்களிலிருந்து (அனேக அஸ்த்ரங்களையும்) பெற்றிருக்கிறேன். எந்தமனிதன் என்னுடையயுத்தத்தைப்பொறுப்பான்? இப்பொழுது காண்டீவத்தினின்றுவிடுபட்டவைகளும் மயிர்க்கூச்சலையுண்டுபண்ணுகின்றவைகளுமான சரக்கூட்டங்களால் வில்லாளிகளான கௌரவர்களுடையதேர்க்கூட்டங்களை நாசம்பண்ணப்போகிறேன்" என்றுகூறினான்.

அந்த ஸவ்யஸாசியினால் இவ்வாறு தேறுதல்செய்யப்பட்ட விராடபுத்ரன் பயங்கரமான பீஷ்மருடையதேர்ப்படையில் குதிரைகளால் ப்ரவேசித்தான். உக்ரனானதனஞ்சயன் அப்பொழுதே நாண்கயிற்றை இழுத்து ஒலிக்கச்செய்துகொண்டு ரதிகர்களுள்சிறந்தவரும் (ஒருவராலும்) ஜயிக்கமுடியாதவரும் யுத்தத்தில் பகைவர்களைஜயிக்க எண்ணங்கொண்டவருமான பீஷ்மரை எதிர்த்துச்சென்றான். பாரதச்ரேஷ்டரே! (அந்த) அர்ஜுனனைத் துச்சாஸனன் விரைவாக எதிர்த்துச்சென்றான். விசித்ரமான ஆபரணங்களை அணிந்தவர்களும் யௌவனமுடையவர்களும் அழகியகுண்டலங்களை அணிந்தவர்களும் பயங்கரமானவில்லைத்தாங்கினவர்களுமான மற்றவீரர்களும் கைகளால் நாண்கயிற்றைஇழுத்து ஒலியையுண்டுபண்ணிக்கொண்டு அர்ஜுனனைஎதிர்த்தார்கள். துச்சாஸனனும் விகர்ணனும் வ்ருஷஸேனனும் விவிம்சதியும் பயமற்றவர்களாகிப் பயங்கரமானவில்லைத்தாங்கியபாண்டவனைச் சூழ்ந்துகொண்டார்கள். (வில்லில் பாணங்களைப்)பூட்டிவிடுக்கின்றவனும் புத்திசாலியும் குந்திபுத்ரனுமான அந்தஅர்ஜுனனுடைய இடவிலாப்புறத்தில் துச்சாஸனன் அறுபதுபாணங்களை ப்ரயோகித்தான். மறுபடியும், அந்தத்துச்சாஸனன் விராடபுத்ரனை

---

[1] வேறுபாடம்.

உத்தரனை ஒருபல்லத்தால்அடித்து இரண்டாவதுபல்லத்தினால் வீரனை அர்ஜுனனை நடுமார்பில் அடித்தான். ஜிஷ்ணுவானவன் அருகில்வந்து கழுகிறகுபூண்ட க்ஷுரமென்னும்பாணத்தினுடையநுனியினால், ஸ்வர்ணத்தால்அலங்கரிக்கப்பட்ட அந்தத்துச்சாஸனனுடைய வில்லை வெட்டினான். பிறகு, அந்தத்துச்சாஸனனை ஐந்துபாணங்களால் நடுமார்பில்அடித்தான். பார்த்தனுடையஅம்புகளால் நன்றாகப்பிடிக்கப்பட்ட அந்தத்துச்சாஸனன் ரதத்தின்மத்தியைவிட்டு ஓடினான். (பகைவர்களால்) ஜயிக்கப்படாத பீபத்ஸுவானவன் எல்லாத்திசைகளிலும் ஸஞ்சரித்தான். த்ருதராஷ்ட்ரபுத்ரனை விகர்ணன், பகைவீரர்களை அழிப்பவனான அந்தஅர்ஜுனனைக் கூர்மையுள்ளவைகளும் கழுகிறகுகட்டப்பட்டவைகளும் சாணைக்கல்லில்தீட்டப்பட்டவைகளுமான அம்புகளால் அடித்தான். பிறகு, குந்திபுத்ரன் அழுந்தியகணுக்களுள்ள ஓர்அம்பினால் அந்தவிகர்ணனையும் நெற்றியில் உளையஅடித்தான். அடிக்கப்பட்டஅந்தவிகர்ணன் பயந்து ஓடிவிட்டான். பிறகு, துஸ்ஸஹன் விவிம்சதியுடன் பார்த்தனருகில்ஓடிவந்து போரில் (தன்) உடன்பிறந்தவனைக்காக்கக்கருதிக் கூர்மையான அம்புகளை இறைத்தான். தனஞ்சயன் பரபரப்புடன் கழுகிறகுகள் பூண்ட கூர்மையுள்ள இரண்டுபாணங்களால் ஒரேஸமயத்தில் அவ்விருவரையும்அடித்து அவ்விருவருடையகுதிரையையும் நாசஞ்செய்தான். கொல்லப்பட்டகுதிரைகளையுடையவர்களும் அடிக்கப்பட்ட அங்கங்களையுடையவர்களுமான அந்தத்ருதராஷ்ட்ரபுத்ரரிருவரையும் அனுசரர்கள் எதிரில்ஓடிவந்து வேறுதேர்களில்ஏற்றி வேறுஇடத்துக்குக் கொண்டுபோனார்கள். அப்பொழுது, பார்த்தன் யுத்தத்தில் த்ருதராஷ்ட்ரகுமாரர்களனைவரையும் (அவ்வாறு) ஓட்டினான்; ஓட்டிவிட்டு யுத்தபூமியை ப்ரகாசிக்கச்செய்தான். கிரீடத்தை அணிந்தவனும் குந்தீபுத்ரனும் லக்ஷ்யங்களில்தவறாமல் பாணங்களைப்ரயோகிப்பவனும் ப்ரதாபசாலியுமான பார்த்தன் (பகைவர்களுடைய) முடிகளையும் பரிகாயுதம்போன்றகைகளையும் அறுத்துத்தள்ளினான். மஹாவீரர்கள் ஸ்வர்ணமாலைகளுடன் நூற்றுக்கணக்காகப் பூமியில் விழுந்தார்கள். பிறகு, யுத்தபூமியானது, தாமரைப்புஷ்பங்களுக்கும் ஸூரியனுக்கும் சந்த்ரனுக்கும் ஒப்பானவைகளும் வெண்ணிறமுள்ள பற்களுள்ளவைகளும் அழகிய முகமும் கண்களும் மூக்குமுள்ளவைகளும் அழகிய மகரகுண்டலங்களணிந்தவைகளுமான புருஷருடையதலைகளால் மறைக்கப்பட்டதாக விளங்கிற்று. அழகியமூக்குள்ளவைகளும், அழகியவைகளும் ஒளிர்கின்றவைகளுமான கண்களுள்ளவைகளும்,

ஒழுங்குபடுத்தப்பட்டமீசையுள்ளவைகளும், நன்றாக அலங்கரிக்கப் பட்டவைகளும், பொன்மயமானகுண்டலங்களணிந்தவைகளும், அறுத்துத்தள்ளப்பட்டவைகளுமான தலைகள் அநேகங்கள் காணப்பட்டன. இவ்வாறு அந்தக்கௌரவஸேனையானது நன்கு அடிக்கப்பட்டு நாற்புறங்களிலும் பயந்து ஓடிவிட்டது. பிறகு, மஹாரதர்களும் மஹாபலசாலிகளுமான துர்யோதனனும் கர்ணனும் ஸுபலனுடையபுத்ரனான சகுனியும் த்ரோணரும் அவர்குமாரரும் அதிரதரானக்ருபரும் அப்பொழுது ஒன்றுகூடி உறுதியானவிற்களை நாணொலியிடும்படிசெய்துகொண்டு அந்தப்போர்க்களத்தில் விஜயனோடு போர்புரியவந்தார்கள்; பிறகு, அசைகின்றகொடித்துணியுள்ளதும் ஸூர்யன்போல ப்ரகாசிக்கின்றதுமான தேருடன் மீண்டும் திரும்பிவந்து வழியிலிருக்கின்ற வானரக்கொடியோனைக்கண்டார்கள். மஹாவில்லாளிகளான அவர்கள், மிகுந்தகோபங்கொண்டு தனஞ்சயனைச்சூழ்ந்துநின்று மஹாமேகங்கள் மலையின்மீது பொழிவதுபோல (அவன்மீது) மஹாஸ்த்ரங்களை நான்குபக்கத்திலும் பொழிந்தார்கள். மஹாவீர்யமுடையவர்களானஅவர்கள் சரத்காலமேகங்கள்போல அம்புக்கூட்டங்களை மிகப்பொழிந்து கிரீடியை மிகத்தபிக்கச்செய்துகொண்டு போரில்நின்றார்கள்; ஸமீபத்திலெதிர்த்துநின்று கூர்மையுள்ளவைகளும் கழுகிறகுகள் கட்டியவைகளுமான அநேக அம்புகளால் பாண்டவனை எதிர்த்து விரைவாகப் போர்புரிந்தார்கள். பிறகு, பீபத்ஸுவானவன் அட்டஹாஸஞ்செய்துகொண்டு ஐந்துவர்ஷகாலம் அப்யஸித்ததும் ஸூர்யனுக்கொப்பானதுமான அவ்வித ஐந்த்ராஸ்த்ரத்தைக் காண்டீவத்தில்பூட்டினான். அச்சுக்கட்டைகளிலும் சக்ரங்களிலும் ரதங்களிலும் குதிரைகளிலும் இரண்டோரங்குலங்கூட அர்ஜுனனுடைய அஸ்த்ரத்தினால் மூடப்படாமல் காணப்படவில்லை. ஸூர்யன் கிரணங்களால் எல்லாத்திக்குக்களையும் மூடுவதுபோலக் கிரீடியினால் விடப்பட்டஅஸ்த்ரமானது உலகமனைத்தையும்மூடியது. சக்ராயுதம் போல வளைக்கப்பட்டகாண்டீவமானது மேகத்தின்மீது மின்னல் போலவும் மலையின்மீது அக்னிபோலவும்இருந்தது. மேகம்வர்ஷிக்கும்பொழுது மலையில்விழும்மின்னல்போல ஜ்வலிக்கின்றகாண்டீவமானது, இடிமுழக்கமுள்ளனவாகச்செய்யப்பட்ட எல்லாத்திசைகளையும் (அஸ்த்ரதேஜஸினால்) மூடிற்று. அர்ஜுனன், ஐந்த்ராஸ்த்ரத்தைவெளிப்படுத்துகையில் எல்லாரதிகர்களும் பயந்தார்கள். போர்வீரர்களனைவரும் ஓய்வடைந்து நினைவொழிந்தார்கள்; த்ரோணரோடும் பீஷ்மரோடும்கூடி மயக்கத்தினால் ப்ரஜ்ஞையையிழந்தார்கள்,

பாதச்ரேஷ்டரே! அந்த எல்லாஸைன்யங்களும் தோல்வியடைந்து ஸவ்யஸாசியினிடத்திலின்று உண்டானபயத்திலுல் எல்லாத்திக்குக்களிலும்ஓடின.

அறுபத்தாறுவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன், உத்தானைத்தேற்றித் துர்யோதனனிடம் தேரைச்செலுத்தஏவியதும், தனக்காற்றமல்ஓடுகின்ற துர்யோதனனைப் பரிஹஸித்துப் போருக்கழைத்ததும்.)

அர்ஜுனன், "உத்தா! தெற்குத்திக்கைநோக்கியே குதிரைகளைநடத்து. இங்கேநிற்கின்ற இந்தவீரர்களுடைய இவ்விதசப்தமானது இனி அதிகமாகப்போகின்றது. ஸாரதியே! அச்வத்தாமாவினுடைய ரதத்தைக்குறித்துக் கிழக்குமுகமாகச் செல். புகழையுடைய குருபுத்ராரை விரைவாகப்பார்க்க விரும்புகிறேன்" என்றுகூறினன். அப்பொழுது, பாண்டவன் வில்லினுடையஓசையினுல் அவர்களனைவரையும் மோஹிக்கச்செய்துவிட்டு (அந்தக்கௌரவஸேனையை) ப்ரதக்ஷிணமாகச் சுற்றிக்கொண்டு அரைக்ரோசதூரம் விரைவாகஓடினன். காற்றானது எப்பொழுதும் சென்றுகொண்டிருப்பதுபோலவும் கருடன் வேகமாகச்செல்லுகிறதுபோலவும் பார்த்தனுடையதேரானது ஆகாயத்தில் எல்லாப்பக்கத்திலும் சீக்ரமாகச்சுழன்றது ஒலியானது ஒருமுஹுர்த்தகாலத்தில் ஓய்ந்தது. தனஞ்சயனும்(வேறுஇடத்துக்கு) செல்லவே பாணங்களால் மிகவும் காயப்படுத்தப்பட்ட த்ரோணர் பீஷ்மர்முதலான மஹாரதர்களெல்லோரும் ஒன்றுசேர்ந்து பார்த்தனைக்காணமல் முயற்சியுள்ளவர்களாகி யானைகளையும் குதிரைகளையும் ரதங்களையும் காலாட்களையும் முன்னிட்டுக்கொண்டு ஸைன்யங்களுக்குப்பின்புறத்தில் சென்றார்கள். ஸைனிகர்கள், "பாக்யவசத்திலுல் துர்யோதனன் விடுபட்டான். ஸைன்யம் பெரும்பான்மையாக(த்திரும்பி) வந்துவிட்டது. ஒருக்ரோசதூரந்தாண்டி ஸைன்யத்தைப்பின்தொடர்ந்து அழைத்துவருவோம். அச்மகைஎன்கிறநதிக்கருகில் நுழையமுடியாத அரண்யமிருக்கின்றவிடத்தில் செல்லுங்கள்" என்றுகூறினர்கள். ஓ! குருச்ரேஷ்டரே! பிறகு, துர்யோதனன் போரில்தோல்வியடைந்த தன்னுடையஸேனையைக்கண்டு பொறுதவனுகி (ஒருவராலும்) ஜயிக்கமுடியாதவர்களான பீஷ்மர், த்ரோணர், க்ருபர் இவர்களால் மிகவும் தடுக்கப்பட்டும் தன்னுடைய

ஸேனையினால்சூழப்பட்டுக் கோபத்துடன் தனஞ்சயனைத்தேடிக்கொண்டு திரும்பினான். பிறகு, அர்ஜுனன், விசித்ரமும் மிக்கவேகமுள்ளதும் நாகராஜனுக்கொப்பானதும் உலகங்களில்ப்ரஸித்திபெற்றதும் யுத்தத்தில் (பகைவர்களால்) ஒடிக்கத்தகாததும் வெட்டத்தகாததும் எரிக்கத்தகாததுமான காண்டீவத்தைப்பார்த்துப் பின்வருமாறு உரைக்கலானான்.

"இந்தவில்லானது இப்பொழுது கௌரவர்களுடையஅநீதியை (அடக்குகின்றது;) மங்களகரமானது; பகைவர்களை நாசஞ்செய்யும் திறமையுடையது; காற்றைவிடமேலான சிறந்தவேகமுள்ளது; சீக்ரமாக (சத்ருஸம்ஹாரத்தை)ச்செய்யக்கூடியது; பெரும்போரில் ஒருவராலும் தடுக்கமுடியாதது; பகைவர்படைகளைப்போக்கும் திறமையுள்ளது; யுத்தத்தில் (சத்ருக்களுடைய)படையை ஜயிக்கக்கூடியது; வஜ்ராயுதத்துக்கொப்பானது; பகைவர்மனைவிகளுக்கு வைதவ்யத்தை விளைவிக்கக்கூடியது; குருவம்சத்திற்பிறந்தவர்களுக்கு ஸுகத்தைக் கொடுக்கக்கூடியது. அந்தத்துர்யோதனனிருக்கிறஇடத்துக்குச்செல். மிக்ககூர்மையுள்ளஅம்புகளால் அவனைக்கீழே தள்ளுவேன். ஆசார்யபுத்ரர், துர்யோதனன், பிதாமஹரானபீஷ்மர், ஸூதபுத்ரனானகர்ணன், த்ரோணர், க்ருபர் ஆகியஅனைவரையும் போரில்தடுத்துத் துர்யோதனனுடையதலையைஅறுப்பேன்" என்றுகூறினான். உத்தரன் விசித்ரமும் மிக்கவேகமுள்ளதுமான அந்தவில்லையும் கூர்மையானஅம்புகளையுங்கண்டு பயந்து போரினிடையில் அர்ஜுனனைப்பார்த்து, "நான் உம்முடையகுதிரைகளைஅடக்கி நடத்துவதற்குச் சக்தியற்றவனாயிருக்கிறேன்" என்றுகூறினான். சத்ருக்களைக்கொல்பவனும் காண்டீவத்தை வில்லாகக்கொண்டவனுமான அர்ஜுனன், அந்த மத்ஸ்யராஜகுமாரனைப்பார்த்து, உரக்கச்சிரித்து, "உத்தர! துணைவனான என்னுடனிருக்கின்ற உனக்குப் பயமேது? குதிரைகளை வசப்படுத்தி நடத்து" என்றுசொன்னான். அந்தத்தனஞ்சயனால் ஸமாதானஞ்செய்யப்பட்டவிராடபுத்ரன் வேகமாகக் குதிரைகளைநடத்தினான். ஜிஷ்ணுவானவன் மறுபடியும் போர்புரியக்கருதிக் கொடியவேகமுள்ள அந்தவில்லை நாணொலியிடும்படிசெய்தான். காண்டீவசப்தத்தினாலும் சங்கத்தினுடைய ஒலியினாலும் வானரத்தினுடைய சப்தத்தினாலும் எல்லாப்பக்கத்திலும் அங்குள்ள சிறந்தயுத்தவீரர்களனேகர் பூமியில் ஆங்காங்கு மிகப்பதுங்கினார்கள். அர்ஜுனன், "(ஸாரதியே!) மிக்க கர்வங்கொண்டவனும் எல்லாவிதத்தினாலும்நிறைந்த தேஜஸையுடையவனும் த்ருதராஷ்ட்ரபுத்ரனுமான இந்தத்துர்யோதனன் தனக்கு

நேர்ந்திருக்கின்றதோல்வியை எப்பொழுதும் பொறுதவனாகிப் போர் புரியவெண்ணிப் படைமுகத்தில் நிற்கிறான். இளைய ஸஹோதரனுடன் கூடின அந்தத்துர்யோதனனையே பார்த்துக்கொண்டு ஜாக்ரதையுடன் அவ்விடம்செல்" என்றுகூறினான்.

வருகின்ற அந்தஅர்ஜுனனைப்பார்த்து எல்லாக்கௌரவவீரர்களும் விரைவாக எதிர்த்துச்சென்றார்கள். வீரனான அந்தஅர்ஜுனனோ உரக்கச்சிரித்துக்கொண்டு அவர்களைத்தாண்டித் துர்யோதனன் மீது இரண்டுபாணங்களை நாட்டினான். பிடிக்கப்பட்ட மதங்கொண்ட யானைபோல அதிரதனானபார்த்தனால் யுத்தத்தில்அடிக்கப்பட்ட த்ருதராஷ்ட்ரபுத்ரன் அவனோடு யுத்தம்செய்யவெண்ணித் தானாகவே விரோதித்துக்கொண்டு அவனைவந்தடைந்தான். அதிவேகமுள்ள அந்தத்துர்யோதனன் பயங்கரமானவில்லையுடையவனும் அனேகம் பகைவராலும் ஜயிக்கமுடியாதவனுமான தனஞ்சயனைக் காதுவரையில்நன்றாகஇழுத்துவிடப்பட்ட ஒருபாணத்தினால் நெற்றியின்நடுவில் அடித்தான். நன்குஸந்தானம்செய்து ப்ரயோகிக்கப்பட்டதும் ஸ்வர்ணத்தினுடைய காந்திபோன்ற காந்தியுடையதுமான அந்தப் பாணத்தினால் அடிக்கப்பட்டு ரக்தத்தைப்பெருக்குகின்றபார்த்தன் ஒற்றைக்கிரணமுள்ளஸூர்யபகவான் பகலில்விளங்குவதுபோல விளங்கினான். பிறகு, பாணத்தால்பிளக்கப்பட்ட அந்தஅர்ஜுனனுடைய (நெற்றியில்) சுடுகையுள்ளரக்தமானது தொடர்ச்சியாகத்தோன்றியது. அந்தரக்ததாரையானது அவனுக்குப் பொன்மலர்களால் விசித்ரமாகச்செய்யப்பட்ட மாலைபோல விளங்கியது. பலமுள்ளவனும் அதிககோபவேகமுள்ளவனும் கம்பீரஸ்வபாவமுள்ளவனுமான அந்த அர்ஜுனன், அந்தத்துர்யோதனனால் பாணத்தால் அடிக்கப்பட்டு விஷத்துக்கும் நெருப்புக்கும்ஒப்பான பாணங்களையெடுத்து ராஜாவானதுர்யோதனனை அடித்தான். உக்ரமானதேஜஸுள்ள துர்யோதனனும் அந்தஅர்ஜுனனை அடித்தான். ஒப்பற்றவீரனானபார்த்தனும் துர்யோதனனை அடித்தான். (இவ்விதம்) அஜமீடனுடைய குலத்தில்உதித்தவர்களும் புருஷர்களுள்சிறந்தவீரர்களுமான அவ்விருவர்களும் யுத்தத்தில் ஒருவரையொருவர் அடித்தார்கள். பிறகு, விகர்ணன் மதப்பெருக்குள்ளதும் மலைபோலவிளங்குகின்றதுமான ஒரு பெரியயானையின்மீதேறிக்கொண்டு (தானேறிய) யானையின்பாதங்களை ரக்ஷிக்கின்றவர்களான நான்கு ரதிகர்களோடுசேர்ந்து குந்தீபுத்ரனானபாண்டவனை எதிர்த்துச்சென்றான். வருகின்றதும் வேகமுள்ளதுமான அந்தக்கஜராஜனை வீரனானதனஞ்சயன் காதுவரை

யில்இழுத்துவிடப்பட்டதும் உறுதியுள்ளதும் இரும்புமயமுமான அம்பினால் கும்பஸ்தலத்திற்கும் நெற்றிக்கும்நடுவில் அடித்தான். பார்த்தனால்விடப்பட்டதும் கழுகிறகுகள்பூண்டதுமான அந்தபாணமோ இந்திரனால்விடப்பட்ட வஜ்ராயுதமானது மலையைப்பிளப்பது போலப் பெரியமலைபோன்ற (அந்த) யானையைப்பிளந்து மூலப்ரதேசம்வரையில் நுழைந்தது. பாணத்தினால் நன்றாகத்தபிக்கச்செய்யப்பட்ட அந்தயானையரசானது மிக்கநடுக்கமுற்ற அங்கமுள்ளதும் துன்பமடைந்தமனத்தையுடையதும் நன்றாகவாட்டமுற்றதுமாகி வஜ்ராயுதத்தினால் அடிக்கப்பட்ட மலையின்கொடுமுடிபோலப் பூமியில் விழுந்தது. கஜராஜாவானது பூமியில்வீழ்த்தப்பட்டவுடன், விகர்ணன் பயத்தினால் உடனே இறங்கி விரைவாக நூற்றெட்டடிதூரம் சென்று விவிம்சதியினுடையரதத்தின்மீது ஏறிக்கொண்டான். பார்த்தன் வஜ்ரத்துக்கொப்பான அந்தஅம்பினால் பெரியமலைக்கொப்பான (அந்த) யானையைக்கொன்று அவ்விதமானபாணத்தினாலேயே துர்யோதனனை மார்பில் பிளந்தான். யானையும்கொல்லப்பட்டு அரசனும்பிளக்கப்பட்டு விகர்ணனும் பாதரக்ஷகர்களோடு தோல்வியடைந்தபோது காண்டீவத்தினின்றுவிடுபட்டஅம்புகளால் அத்தகைய சிறந்தயுத்தவீரர்கள் பிளக்கப்பட்டு விரைவாக ஓடிவிட்டார்கள். பாணத்தால்கொல்லப்பட்டயானையையும் (தோல்வியுற்ற) எல்லாயுத்தவீரர்களையும் பார்த்துக் கௌரவர்களுள்சிறந்தவீரனும் அரசனுமான துர்யோதனன், ரதத்தைத்திருப்பிக்கொண்டு யுத்தபூமியினின்று பார்த்தனில்லாதஇடத்துக்கு ஓடினான். பகைவர்கூட்டங்களை அடிக்கின்ற கிரீடியானவன் மிகப்பயந்தவனும் வேகமாகச்செல்லுகின்றவனும் அம்பினால் அடிக்கப்பட்டவனும் ரக்தத்தைக்கக்குகின்றவனுமான அந்தத்துர்யோதனனை யுத்தஞ்செய்யமனமுள்ளவனாக அழைத்தான். பெரியவில்லாளிகளுள்சிறந்தவனான அந்தத்துர்யோதனன் ஒப்பற்றதனஞ்சயனால் யுத்தத்தில் மிகவும்அடிக்கப்படவே, அந்தக்கௌரவஸைன்யங்களனைத்தும் பார்த்தனைக்கண்டு பயத்தால் துன்பமடைந்து நடுக்கமுற்றன. பிறகு, மதப்பெருக்குற்ற யானைபோல உரக்கக்கர்ஜிக்கின்றவனும் யுத்தத்தில் பலத்தால்கர்வமுடையவனும் காளைகளுடையநடுவில் ஸிம்மம்போல (கௌரவர்களுடைய) மத்தியிலிருக்கின்றவனுமான அர்ஜுனனைக்கண்டு அந்தப் போர்வீரரனைவரும் ஓய்வடைந்தார்கள். பாண்டவனுடையகாண்டீவத்தின்சப்தத்தினால் யுத்தவீரர்கள் ஸிம்மத்தால் ஆக்ரமிக்கப்பட்டயானையரசுகள்போலப் பயத்தால்பீடிக்கப்பட்டவர்களும் அவனுடைய

அம்புகளால் நன்றாகத்தபிக்கச்செய்யப்பட்டவர்களுமாகி ரதங்களி லிருந்து உடனே விழுந்தார்கள். மிகச்சிவந்தகண்களையுடையவனும் இந்த்ரனுடையசெய்கைபோன்ற செய்கையுடையவனுமான பார்த்தன், மறுபடியும் பன்னிரண்டுபாணங்களால் கர்ணனையும் ஒரு ரதத் தோடிருக்கின்ற துச்சாஸனனையும் நடுக்கமடையச்செய்து, ஓடுகின்ற அவர்களைப்பார்த்தான். பார்த்தனுடைய அம்புகளால் மிகுந்ததாபத் தையடைந்தகர்ணன், துர்யோதனனையும் துஷ்ப்ரஸஹனையும்பார்த்து, "அர்ஜுனன் இதோ காணப்பட்டுவிட்டான். நாம் விரைவாகத்திரு ம்பிச்செல்வோம். இவ்விடத்தினின்றும்போய் நாம் நன்மையைத் தேடிக்கொள்வோம். ஐயா! நம்மால் இவ்விடத்தில் அர்ஜுனன் இப்பொழுது காணப்பட்டான். ஆதலால், உன்னால்செய்யத்தக்க கார்யம் நிறைவேற்றப்பட்டதென்றே நான் எண்ணுகிறேன். ஸவ்ய ஸாசியானவன் மறுபடியும் கானகம் செல்லவேண்டும். அவர்க ளுடைய ப்ரதிஜ்ஞாகாலமானது நிறைவேறவில்லையென்று நான் எண் ணுகிறேன்" என்றுகூறினன். யுத்தத்தில் பாண்டவனால் பாணங்க ளால்பீடிக்கப்பட்டவர்களான அந்தக்கௌரவவீரர்கள் பிறகு ஒரு வரைஒருவர் அழைத்துக்கொண்டு ஓடினார்கள். கர்ணன், "இதோ ஜிஷ்ணு வருகிறான். துர்யோதனனை எல்லாப்பக்கத்திலும் சூழ்ந்து கொண்டு செல்வோம். எல்லா அஸ்த்ரங்களையும் அறிந்தவனும் கஜ யூதபதிபோல ப்ரகாசிக்கின்றவனும் தகுந்தஸமயத்தில் பகைவரைப் போரில்அடிப்பவனுமான இந்தப்பார்த்தன் மறுபடியும் நம்மிடம் வந்துவிட்டான். பரதச்ரேஷ்டர்களுக்குஆதாரமான துர்யோதனனை ரக்ஷிக்கவேண்டும்" என்றுகூறினன். காலனைப்போலச் சஸ்த்ரங்க ளை(க்கையில்)எடுத்து விரைவாகவருகின்ற பார்த்தனைக்கண்டு துர் யோதனன் பயத்தினால் மிகவும்பீடிக்கப்பட்டு த்ரோணரையும் கர் ணனையும் க்ருபரையும் பீஷ்மரையும் சரணமடைந்தான். மிகவும்பய ந்து (த்ரோணர்முதலானவர்களை) சரணமடைகின்றவனும் பாணத்தி னால்அடிக்கப்பட்டு ரக்தத்தைக்கக்குகின்றவனுமான அந்தத்துர்யோ தனனைப்பார்த்து, பகைவர்களுடையபோரையேற்பவனும் அம்பறாத் தூணிகளுள்ளவனுமான கிரீடியானவன், ப்ரீதியுள்ளமனத்துடன் பின்வருமாறு கூறலானான்.

"(துர்யோதன!) உலகத்தில் (பரவியிருக்கின்ற) பெயரையும் புகழையும்இழந்து யுத்தத்தினின்றுதிரும்பி ஏன் ஓடுகிறாய்? அடிக் கப்பட்ட உன்னுடைய வாத்யங்கள் யுத்தத்தினின்று ஓடினஉன்னை ஆனந்தப்படுத்தமாட்டா. இப்பொழுது அவ்விதமானநீ அகண்ட

மானபூமியையும் வாஹனங்களையும் வஸ்த்ரங்களையும் போஜனங்களையும் நல்லவர்ஸனையுள்ள சந்தனங்களையும் அனுபவிக்கப்போகிற தில்லை. நீ யுத்தத்தினின்று திரும்பிஓடினால் பொன்மாலைகளையும் குண்டலங்களையும் வைடூர்யத்தினால்செய்யப்பட்ட ஹாரங்களையும் அனுபவிப்பாயா? ஏ! பாபி! போரினின்றுநழுவினஉனக்குச் சங்கத்தின் த்வனிகளும் இப்பொழுது ஆனந்தத்தை உண்டுபண்ணுகின்றவையாகா. ராஜபுத்ர! யுத்தத்தைவிட்டு ஓடுகின்றஉனக்கு உத்தமமான சந்தனமும் இனியசொற்களுள்ளஉத்தமஸ்த்ரீகளும் இம்மையிலும் மறுமையிலும் போகத்தின்பொருட்டுப் பயன்படார்கள். நான் யுதிஷ்டிரருடைய ஆஜ்ஞையைச்செய்பவன்; குந்தியினுடைய மூன்றாவது புத்ரன்; போரில் உறுதியாகநிற்பவன். த்ருதராஷ்ட்ரகுமார! அதற்காக நீ திரும்பி முகத்தைக்காட்டு. அரசர்களுடையநடக்கையை நினைத்துப்பார். இந்தப்பூமியில் உனக்குத் [1]துர்யோதனன் என்னும் இந்தப்பெயர் பொருளில்லாததாக முதலிலே இடப்பட்டது. மோசத்தையே தலைமையாகப்பற்றியநீ [2]ஸுயோதனனாயிருந்தும் பெயரினால் மட்டும் துர்யோதனனென்று ப்ரஸித்திபெற்றிருக்கிறாய். இப்போது சண்டையைவிட்டுஓடுகிறஉனக்குத் துர்யோதனனாயிருக்குந்தன்மை இல்லையே? துர்யோதன! உனக்கு முன்புறத்திலாவது பின்புறத்திலாவது ரக்ஷகனை நான்காணவில்லை. குருகுலத்தில்பிறந்தவர்களுள் சிறப்புற்றவீரனே! என்னால் அம்பின்வலிமையினால் தபிக்கச்செய்யப்பட்ட ப்ராணனைப் போரினால் அடையவிரும்பு" என்றுகூறினான்.

அறுபத்தேழாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(துர்யோதனன் பீஷ்மர்முதலியோரால் காக்கப்பெற்று மறுபடியும் போருக்குவந்ததும், அர்ஜுனன் அவர்களோடு நெடுநேரம் போர்புரிந்து ஸம்மோஹனாஸ்த்ரப்ரயோகஞ்செய்து அவர்களாடைகளைக் கவர்ந்துகொண்டு பீஷ்மர்முதலியோரை அம்புகளால் வணங்கியதும்.)

மஹாத்மாவான அந்தஅர்ஜுனனாலே யுத்தத்திற்காகஅழைக்கப்பட்ட அந்தத்துர்யோதனனே அதிகமதங்கொண்டயானை அங்குசத்தினால் திருப்பப்படுவதுபோலக் கூர்மையுள்ளவாக்கினால் திருப்பப்பட்டான். பிறகு, அதிரதனும் அதிகபலமுள்ளவனுமான அந்

---

1 பிறரால்எதிர்த்துப்போர்செய்வதற்கு அரியவன்.
2 பிறரால்எதிர்த்துப்போர்செய்யஎளியவன்.

தத்துர்யோதனன் மஹாரதனான அர்ஜுனனால் வாக்கினால் தூண்டப்பட்டு (அதைப்)பொறாமல் உள்ளங்காலால் மிதிக்கப்பட்ட ஸர்ப்பம் போலத் தேருடன் திரும்பினான். பிறகு, துர்யோதனன் கோபமுற்று உத்தமமான வில்லை நாணொலிசெய்துகொண்டு அதிகயான தைர்யத்தை அடைந்து தனஞ்சயனைப்பார்த்து, "பாதகுலத்தில் உதித்தவனே! அப்படிப்பட்டநான் கோபங்கொண்ட இந்த்ரனிடத்தினின்றும்கூட இவ்விதமான யுத்தத்தில் பயப்படமாட்டேன். ஓ! நரச்ரேஷ்ட! மிக்கவிசாலமானராஜ்யத்தையும் தனங்களையும் ஸுகங்களையும் அனுபவித்துவிட்டு யுத்தஸமயத்தில் ஏன் நான்ஓடவேண்டும்?" என்று மறுமொழிகூறினான். பாதகுலத்தில்உதித்தவரே! துர்யோதனமஹாராஜன் இவ்வாறுசொல்லிவிட்டு அங்குசத்தினால் குத்தப்பட்ட யானைபோல வேகமுள்ளகுதிரைகளுடன் திரும்பி எதிர்த்துப் போர்புரிந்தான். உடலில்மிதிக்கப்பட்டதும் பொறாமையுள்ளதும் வில்லைப்போலவளைந்ததுமான ஸர்ப்பம்போன்ற துர்யோதனன் ரதத்தோடுரதத்தைச்சேர்த்துப் பாண்டவனோடு போர்புரிந்தான். புஜபலமுள்ளவனும் நாணேற்றப்பட்டவில்லுள்ளவனுமான கர்ணன், திரும்பிவருகின்ற துர்யோதனனைக்கண்டு திரும்பிவந்து வலப்பக்கத்தில்நின்றுகொண்டு அசைவற்றிருக்கின்ற எல்லா அங்கங்களுமுள்ள அவனைப் பார்த்தனிடத்தினின்று பாதுகாத்தான். காந்தாரராஜனான சகுனியும் எல்லாஅஸ்த்ரங்களையும் அறிந்தவர்களுள் உத்தமனான அச்வத்தாமாவும் ஆகியஇரண்டுவீரபுருஷர்களும் திரும்பிவந்து துர்யோதனனைஅடைந்து இடப்பக்கத்தில்நின்று யுத்தத்தில் அவனைப் பார்த்தனிடமிருந்து பாதுகாத்தார்கள். பிறகு சிறந்தகைகளுள்ளவரும் நாணேற்றப்பட்டவில்லுள்ளவரும் சந்தனுபுத்ரருமான பீஷ்மர் பொற்கச்சைகளகட்டிய குதிரைகளை விரைவாக (நடத்திக்கொண்டு) திரும்பிவந்து மேற்பக்கத்தினின்று துர்யோதனனைப் பார்த்தனிடத்தினின்றும் பாதுகாத்தார். த்ரோணர், க்ருபர், விவிம்சதி, துச்சாஸனன் ஆகிய எல்லாரும் விரைவாகத் திரும்பி முன்னிலையில்நின்று அம்புகளைத்தொடுத்துத் துர்யோதனனிமித்தமாக (அர்ஜுனனை) விரைவாகஎதிர்த்தார்கள். குந்தீபுத்ரனும் மிக்கவன்மையுள்ளவனுமானதனஞ்சயன் (யுத்தத்துக்காகத்) திருப்பப்பட்டவைகளும் பூர்ணப்ரவாஹங்கள்போன்றவைகளுமான எல்லாஸைன்யங்களையுங்கண்டு, ஸூர்யன் எதிரில்வருகின்றமஹாமேகத்தைத் [1] தபிக்கச்செய்வதுபோல (அவற்றைத்) தபிக்கச்செய்தான். அவர்

[1] வேறுபாடம்.

கள் பார்த்தனை நான்குபுறங்களிலும் சூழ்ந்துகொண்டு திவ்யாஸ்த்ரங் களைஎடுத்து எதிர்த்துவந்து மேகங்கள் [1]ஜலக்கூட்டங்களை மலையின் மீது பொழிவதுபோல அம்புகளனைத்தையும் (அவன்மீது) பொழிந் தார்கள். பிறகு, காண்டீவத்தை வில்லாகஉடையவனும் பகைவரைப் போரில்எதிர்ப்பவனுமான அர்ஜுனன் அந்தக்கௌரவச்ரேஷ்டர்க ளுடைய அஸ்த்ரத்தை அஸ்த்ரத்தால்தடுத்து இந்த்ரனால்கொடுக்கப் பட்டதும் (பகைவரால்) தடுக்கமுடியாததுமான ஸம்மோஹனமென் கிற வேறொருஅஸ்த்ரத்தை ப்ரயோகித்தான். பிறகு, பார்த்தன், மஹாகோரமும் கூர்மையுமுள்ளவைகளும் உறுதியானஅடியுள்ள வைகளுமான அம்புகளால் திசைகளையும் மூலைத்திசைகளையும் மறை த்துவிட்டுக் காண்டீவத்தினுடையசப்தத்தினால் அவர்களுடையமனங் களையும் பெரும்படையையும் மிக்கதுன்பமடையும்படி செய்தான். பிறகு, பகைவர்களைக்கொல்பவனான பார்த்தன் மறுபடியும் பயங்கர மும் கம்பீரமுமானசப்தமுள்ள மஹாசங்கத்தை இருகைகளாலும் பிடித்து மூலைத்திசைகளும் திசைகளும் ஆகாயமும் பூமியும் எதி ரொலியிடும்படி ஊதினான். துர்யோதனனுடையஸைன்யத்திலுள்ள போர்வீரர்கள், ஸம்மோஹனாஸ்த்ரத்திலிருந்துஉண்டான அம்புக் கூட்டங்களால் தேஹமழிந்து கீழேவிழுந்து பலமும் வேகமுமொழி ந்து சுவர்போலக் கைகாலசைவற்று நின்றார்கள். பார்த்தனால்உண் டுபண்ணப்பட்ட சங்கநாதத்தினால் மிகுந்தமதிமயக்கத்தைஅடை விக்கப்பட்ட அந்தக்கௌரவவீரரனைவரும் அப்பொழுது (பகைவர்க ளால்) அணுகமுடியாதனவான விற்களைப்போட்டுவிட்டு மதிமயக்கத் தைஅடைந்தார்கள். பிறகு, பார்த்தன் பகைவர்கள் ப்ரஜ்ஞையை இழந்திருக்கும்பொழுது உத்தரையினுடையவார்த்தையைநினைத்து விராடபுத்ரனைப்பார்த்து, "(உத்தர)! கௌரவர்கள் ப்ரஜ்ஞையை இழந்திருக்கிறகாலத்தில் நீ ரதத்தினின்று (இறங்கி அவர்களிடம்) போ. மனிதர்களுள்சிறந்தவீரனே! த்ரோணாசார்யருடையதும் க்ருப ருடையதுமான மிக்கவெண்ணிறமுள்ள வஸ்த்ரங்களையும் மஞ்சள் நிறமுள்ளதும் அழகியதுமான கர்ணனுடையவஸ்த்ரத்தையும் அவ் வாறே த்ரோணபுத்ரருடையதும் துர்யோதனனுடையதுமான நீல வஸ்த்ரங்களையும் உரிந்துகொள். பீஷ்மருக்கு (மாத்ரம்) ப்ரஜ்ஞை யானது அவ்விதமாகவேஇருக்கிறதென்று நான் நினைக்கிறேன். இவர் என்னால்விடப்பட்ட (இந்த) ஸம்மோஹனாஸ்த்ரத்தைத் தடுக்கும்வித த்தை அறிந்தவர். நீ இவருக்கு இடப்புறமாகக் குதிரைகளை நடத்து.

[1] வேறுபாடம்.

மயக்கமில்லாத ப்ராஜ்ஞையையுடையவர்களான நம்மால் இவ்வாறே செல்லத்தக்கது" என்றுசொன்னான். ஐயா! பிறகு மஹாத்மாவான விராடபுத்ரன் கடிவாளங்களைவிட்டுவிட்டுத் தேரினின்று கீழேகுதித்து மஹாரதர்களுடைய பற்பலவிதமானவைகளும் ஆச்சர்யகரமான நிறமுள்ளவைகளுமான வஸ்த்ரங்களையும் எடுத்துக்கொண்டு பெரியவையும் மெல்லியவையுமான வெண்பட்டுக்களையும் பலவகையான மனத்துக்கின்பந்தரத்தக்க பட்டுவஸ்த்ரங்களையும் ஹாரங்களையும் ராஜாக்களுடைய மணிமயமான பூஷணங்களையும் ஸ்வர்ணமயமான கண்டாபரணங்களையும் மாணிக்கத்தினால்செய்யப்பட்ட தோள்வளைகளையும் கங்கணங்களையும் அரசர்களுடைய மற்ற மணிமயமானபூஷணங்களையும் மஹாரதர்களுடையவஸ்த்ரங்களையும் கவர்ந்துகொண்டு விரைவாக மீண்டும் தன்ரதத்தின்மீதேறினான். ப்ரதிமைகள்போல (கைகால்அசைவற்றவர்களும்) ஸம்மோஹனாஸ்த்ரத்தினால் ப்ராஜ்ஞையிழந்தவர்களையொத்தவர்களுமான அரசர்களனைவரையுங்கண்டு பார்த்தன் மூக்கினுனியில் கைவிரலைவைத்துக்கொண்டு வியப்புற்றமனத்துடன் சிரித்தான். பிறகு, விராடபுத்ரன் ஸ்வர்ணமயமானவார்களுள்ள அந்தநான்கு சிறந்தகுதிரைகளையும் ஓட்டினான். அந்தவெண்மையானகுதிரைகள் போர்க்களத்தினிடையினின்று அர்ஜுனனைத் தாங்கிக்கொண்டு அந்தப்பகைவர்படையைத் தாண்டிச் சென்றன. அவ்வாறுசெல்லுகின்ற புருஷர்களுள்சிறந்தவீரனான அர்ஜுனனைப் பலசாலியானபீஷ்மர் பாணங்களால் அடித்தார். அந்தஅர்ஜுனனும் பீஷ்மருடையகுதிரைகளைக்கொன்று பத்துப்பாணங்களால் பீஷ்மரையும்அடித்தான். பிறகு, மங்களகரமானவில்லைத்தாங்கிய அர்ஜுனன், யுத்தத்தில் பீஷ்மரைவிட்டுவிட்டு அவருடையஸாரதியை அடித்துத் தேர்க்கூட்டங்களினிடையிலிருந்து விடுபட்டு ராஹுவைப்பிளந்து (ப்ரகாசிக்கின்ற) ஸூர்யன்போல நின்றான்.

பிறகு, புருஷர்களுள்சிறந்தவீரனான அந்தத்துர்யோதனன், ப்ராஜ்ஞையையடைந்து மஹேந்த்ரனுக்கொப்பானவனும் புருஷர்களுள்சிறந்தவீரனுமான பார்த்தனை யுத்தத்தினின்று விடுபட்டவனாக்கண்டு விரைவுடன் (பீஷ்மரைப்பார்த்து,) [1]"இந்தஅர்ஜுனன் உம்மிடத்தினின்று மிகுந்தப்ரயாஸத்தால் விடுபட்டான். விடுபடாவண்ணம் அவனை(ப்பிடித்து) நன்றாகக்கட்டுங்கள்" என்றுசொல்ல, பீஷ்மர் அவனைப்பார்த்து உரக்கச்சிரித்துக்கொண்டு, "(துர்யோ

1 'இந்தஅர்ஜுனன் எவ்விதம் உங்களைவிட்டான்?· விடாமல்கொன்றுவிடுவேனே என்று சொன்னான்' என்பது வேறுபாடம்.

தன !) அதிகமாக அய்வடைந்து அம்புகளேயும் ஆச்சர்யகாமான வில்லையும் (கிழே) விட்டுவிட்டு நீ பேசாமலிருந்தாயல்லேயோ? உன் புத்தி எங்கேபோய்விட்டது? உன்னுடையவீர்யம் எங்கேபோய் விட்டது? பீபத்ஸுவானவன் கொடியசெய்கையைச்செய்வதற்கு ஒருபோதும் ஸமர்த்தனல்லன்? இவனுடையமனமானது பாபத்தில் பற்றில்லாதது. இவன் [1]ஸ்வர்க்கலோகம் கிடைப்பதாயிருந்தாலும் தர்மத்தைவிடமாட்டான். ஆதலால், நாமனைவரும் இந்தயுத்தத்தில் இவனால் கொல்லப்படவில்லை. கௌரவர்களுள்சிறந்தவீரனே! சிக்ரம் குருதேசத்தைக்குறித்துச்செல். பார்த்தன் பசுக்களை ஓட்டிக் கொண்டு (மத்ஸ்யதேசம்) போகட்டும். நீங்கள் ஸம்மோஹனாஸ்த்ரத்தினால் மதிமயக்கமுற்றிருந்தீர்கள். (ஆதலால், அர்ஜுனன்) பொருளை அபஹரித்ததை நீங்கள் அறியவில்லை. ராஜனே! விராடபுத்ரனால் வஸ்த்ரங்களும் ஆபரணங்களும் அபஹரிக்கப்பட்டனவென்று அறிகிறேன். வேந்தர்களனைவரும் மதிமயக்கமுற்றிருக்குங்காலத்தில் அந்தஅர்ஜுனன் (ராஜாக்களைக்) கொல்லவிரும்பினால் கொன்றேயிருப்பான். புருஷர்களுள்வீரனும் இந்த்ரகுமாரனுமான அர்ஜுனன் தர்மபுத்தியுள்ளவனாதலால் உங்களை அப்பொழுது கொல்லவில்லை. பார்த்தன் கௌரவர்களோடு ஸந்தியைச்செய்யவிரும்பி உங்கள்புண்யவிசேஷத்தால் உங்களைக்கொல்லவில்லை. ஆகையால், நீங்கள் கொல்லப்பட்டவர்கள்போக மிகுதியிருக்கும் இந்தஸைனிகர்களோடு ஹஸ்தினபட்டணத்துக்குப் போய்ச்சேருங்கள்" என்று சொன்னார். துர்யோதனராஜன் தனக்கு ஹிதமாயிருக்கும் அந்தப் பிதாமஹருடையவாக்யத்தைக்கேட்டுப் புகழ்ந்து யுத்தத்தில் விருப்பமற்று அதிககோபங்கொண்டு பெருமூச்சுவிட்டுப் பேசாமலிருந்தான். (கௌரவர்கள்) அனைவரும் பீஷ்மருடைய அந்தவாக்யத்தைக்கேட்டுத் தனஞ்சயனாகிற நெருப்பை அதிகமாக வ்ருத்தியடைகிறதாக(க்கண்டு) அந்தத்துர்யோதனனைப் பாதுகாத்துக்கொண்டு (ஹஸ்தினபட்டணம்) செல்லுவதற்கே புத்தியைச்செலுத்தினார்கள். புறப்பட்ட அவர்களைப்பார்த்து ப்ரீதியுள்ளமனமுடையவனும் ஸமர்த்தனும் எல்லாக்கௌரவர்களுள்ளும் மிகச்சிறந்தவனும் வீரனுமான தனஞ்சயன் (யுத்தத்துக்கு) அழைத்துக்கொண்டே காண்டீவத்தினுடையசப்தத்தினால் உலகத்தை எதிரொலியிடும்படிசெய்துகொண்டு ஒருமுஹூர்த்தகாலம் பின்தொடர்ந்தான். பலசாலியும் காண்டீவத்தை வில்லாகக்கொண்டவனுமான பார்த்தன் சிதறிப்போன

[1] 'மூன்றுலகங்களும் கிடைப்பதாகவிருந்தாலும்' என்பது வேறுபாடம்.

வாஹனங்களும் கொடிகளும் விற்களுமுள்ள அந்தக்கௌரவர்களுடைய ஸேனைகளைப்பார்த்து அட்டஹாஸஞ்செய்துகொண்டு சங்கத்தைப் பலத்துடன் உரக்க ஊதினான்.' பிறகு, அவர்கள் நெருங்கின சங்கத்வனியையும் ஆகாயத்திலுள்ள த்வஜத்தினுடைய சப்தத்தையும் காண்டீவத்தின் சப்தத்தையும் அடிக்கடிகேட்டுப் பயந்தவர்களாகி எல்லாத்தனத்தையும் இழந்துவிட்டுச் சென்றார்கள். மஹாத்மாவும் நிகரற்றகாந்தியுள்ளவனும் சிறந்தமனமுள்ளவனுமான தனஞ்சயன், அப்பொழுது அந்தக்கௌரவர்களை மிகவும் தோல்வியடையச்செய்துவிட்டுப் பசுக்கூட்டத்தையெல்லாம் முழுதும் திருப்பிக்கொண்டு (வெகு)தூரம் அவர்களைப் பின்தொடர்ந்து (அவர்களிடம்) விடைபெற்றுக்கொண்டு பாணங்களால் எல்லா ஆசார்யர்களையும் அபிவாதனம்பண்ணி அம்புகளோடு திரும்பினான். மஹாத்மாவும் வீரனுமான அர்ஜுனன் பிதாமஹரும் சந்தனுவின்குமாரருமான பீஷ்மரை இரண்டுபாணங்களால் அபிவாதனஞ்செய்து த்ரோணரையும் க்ருபரையும் பூஜிக்கத்தக்கவர்களான கௌரவர்களனைவரையும் போர்க்களத்தில் பாணங்களால் அபிவாதனஞ்செய்து, "ராஜவம்சத்தில் பிறவாதவனான (உனக்கு) இந்தக்கிரீடத்தால் யாதுபயன்? உன்னால் இந்தக்கிரீடம் எப்பொழுதும் தரிக்கத்தக்கதன்று" என்று சொல்லி, துர்யோதனனுடைய சிறந்தரத்னமிழைக்கப்பட்ட கிரீடத்தையும் அம்புக்கூட்டங்களால் பிளந்தான். பிறகு, பூமியில் தள்ளப்பட்டதும் ரத்னமிழைத்ததுமான அந்தக்கிரீடத்தை(க்கண்டு) மத்ஸ்யராஜகுமாரனான உத்தரன் மனக்களிப்புற்றவனானான். மதப்பெருக்குள்ள யானைபோன்றவனும் சத்ருக்களைஜயித்துத் திரும்பி வருகின்றவனும் அந்தப்பசுக்களைஜயித்துக்கொண்டு எதிராகவருகின்றவனுமான தனஞ்சயனைக் கௌரவர்கள் (பார்ப்பதற்கும்) சக்தியற்றவர்களாகிச் சென்றார்கள். ஸிம்மம்போன்றவனும் சஸ்த்ரங்களைப் பிடித்தவனும் பசுக்களைஜயித்து எதிராகச்செல்லுகின்றவனுமான தனஞ்சயனை அந்தஅரசர்கள் நடுப்பகலை அடைந்திருக்கின்றஸூர்யனைப்போலப் பார்ப்பதற்கும் சக்தியற்றவர்களானார்கள். யுத்தத்தில் அதிகபலமுள்ளவனும் மதப்பெருக்குள்ளயானைபோன்றவனும் மிகுந்தஸந்தோஷமுள்ளவனும் தோளிகளுள்சிறந்தவனுமானபார்த்தன், (கௌரவர்களை) ஜயித்துச் செந்நிறமான அந்தவஸ்த்ரங்களையும் அபஹரித்துக்கொண்டு விராடபுத்ரனைப்பார்த்து, "(உத்தர!) குதிரைகளைத் திருப்பு. உன்னுடையபசுக்கள் ஜயிக்கப்பட்டன. பகைவர்கள் ஓடிவிட்டார்கள். ஸந்தோஷமுடையவனாக நீ பட்டணத்

தில் புகுவாய். உன்னுடையவிஜயமானது இப்பொழுது (பட்டணத்தில்) சீக்ரமாகக் கோஷிக்கப்படட்டும். உன்னுடையசரீரத்தில் சந்தனம்பூசிக்கொள்; புஷ்பமாலைகள் அணிந்துகொள். மிக்கஸந்தோஷமுள்ளஉன்னைப்பார்த்து இப்பொழுது உன்தாயாரும் பந்துக்களும் ஸந்தோஷமடையட்டும்" என்றுகூறினன்.

அறுபத்தெட்டாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் உத்தரனைப் பாண்டவரின் உண்மையை வெளியிடவேண்டாமென்றுசொல்லி ப்ருஹந்நளைவேஷத்துடன் அவனுக்குஸாரத்யஞ்செய்ததும், உத்தரன் அர்ஜுனனேவலால் தன்வெற்றியைஅறிவிக்கும்படி நகரத்துக்குத் தூதனுப்பியதும்.)

காளையின்கண்போன்ற கண்ணையுடையவனான அந்தஅர்ஜுனன், பிறகு, போரில் [1]கௌரவர்களைஜயித்து விராடனுடையபெரிய பசுமந்தையை அப்பொழுது மீட்டுக்கொண்டுவந்தான். த்ருதராஷ்ட்ரகுமாரர்களனைவரும் முழுதும் தோற்றுப்போனபிறகு அனேக கௌரவஸைனிகர்கள் நுழையமுடியாத காட்டினின்று வெளிப்பட்டுப் பயத்தினால் மிகநடுக்கமுற்றமனத்துடன் ஆங்காங்கு (பார்த்தனுக்கு) அருகில்வந்தார்கள். அப்பொழுது அவர்கள், அவிழ்ந்ததலைமயிருடையவர்களும் அஞ்சலிபந்தம்செய்துகொண்டுநிற்கின்றவர்களுமாகக் காணப்பட்டார்கள். பசியினாலும் தாஹத்தாலும் களைப்புற்றவர்களும் வேறுதேசத்தை அடைந்தவர்களும் ப்ரஜ்ஞையையிழந்தவர்களுமான அவர்களனைவர்களும் இருகரங்களையுங்குவித்துக்கொண்டு, "பார்த்த! நாங்கள் என்னசெய்யக்கடவோம்? நாங்கள் மனத்தினுள் அடங்கியிருக்கின்ற ப்ராணனை யாசிக்கிறோம். அர்ஜுன! நாங்கள் உனக்குஅடிமைகள்; உன்னால் ரக்ஷிக்கத்தக்கவர்கள்; அநாதர்கள்" என்றுசொன்னார்கள். அர்ஜுனன், "நாதனற்றவர்களையும் துக்கித்தவர்களையும் தைன்யமுற்றவர்களையும் இளைத்தவர்களையும் பிராயமுதிர்ந்தவர்களையும் தோல்விஅடைந்தவர்களையும் சஸ்த்ரங்களை (க்கீழே) வைத்தவர்களையும் ஆசையற்றவர்களையும் அஞ்சலிசெய்தவர்களையும் நான்கொல்லேன். நீங்கள் (என்னிடத்தில்) நம்பிக்கையுள்ளவர்களும் பயமற்றவர்களுமாகி மரணமற்றவர்கள்போ

---

1 வேறுபாடம்.

லச் செல்லுங்கள். என்னுடைய பாததூளியினுடைய ஸம்பந்தத்தினால் நீங்கள் நெடுங்காலம் பூமியில் ஜீவித்திருங்கள்" என்றுசொன்னான். அந்தப்போர்வீரர்கள் ஒன்றுசேர்ந்து அந்தஅர்ஜுனனுடைய அபயவார்த்தையைக்கேட்டு, அவனை ஆயுளையும் பெயரையும் புகழையும் [1]கொடுக்கக்கூடிய ஆசீர்வாதங்களால் ஸந்தோஷப்படுத்தினார்கள். பிறகு, கௌரவர்கள் (தங்கள்தேசத்துக்குத்) திரும்பினார்கள். (போரில்) கொல்லப்பட்டவர்கள் ஸ்வர்க்கத்தை அடைந்தார்கள். இவ்வாறு அவ்விடத்தில் அந்தஅர்ஜுனனால் அபயங்கொடுக்கப்பட்டவர்கள் பிறகு தனஞ்சயனை நமஸ்கரித்துக் குருதேசத்தைக்குறித்து எல்லாப்பக்கத்தாலும் சென்றார்கள்.

சிறந்தகாரியங்களைச்செய்கின்றவனும் பகைவர்களைக்கொல்லுகின்றவனுமான அந்தப்பார்த்தன் ஒருவனாகவே (அவ்விதமான) சிறந்த காரியத்தைச்செய்து பகைவர்களைக்கொன்று கௌரவஸைன்யத்தைத் துரத்திவிட்டு வர்ஷாகாலத்தில் மஹாமேகம்போல (விராடநகரத்தைக குறித்துச்) சென்றான். மன்னரே! சத்ருக்களைக்கொல்பவனான அர்ஜுனன் மத்ஸ்யராஜனுடையகுமாரனை நன்குபிடித்துக்கொண்டு, "அப்பனே! உன்பிதாவினுடையஸமீபத்தில் பார்த்தர்களனைவரும் வஸிக்கிறார்களென்பது உனக்குத்தெரியுமன்றோ? நீ நகரத்திலப்ரவேசித்து, அவர்களைக்குறித்து (உன்பிதாவினிடம்) சொல்லாதே. (சொன்னால்) அந்தமத்ஸ்யராஜர் பயந்து உயிரைஇழந்தாலும் இழப்பர். நீ நகரத்திலபுகுந்து, 'என்னாலேயே அந்தக்கௌரவஸேனை ஜயிக்கப்பட்டது. என்னாலேயே பசுக்கள் சத்ருக்களிடமிருந்து திருப்பப்பட்டன' என்று இவ்விதமானகாரியம் உன்னாலேயேசெய்யப்பட்டதாகச் சொல்லிக்கொள்" என்றுசொன்னான். உத்தரன், "ஸவ்யஸாசியே! உம்மால்செய்யப்பட்டகாரியம் மறைக்கமுடியாதது. அந்தக்காரியத்தைச்செய்வதற்கு எனக்குச்சக்தியில்லை. நீர், சொல்லும்படி என்னைக்கட்டளையிடாமலிருக்கிறவரையில் என்பிதாவினிடத்தில் உம்மைப்பற்றி நான்சொல்லப்போகிறதில்லை" என்று மறுமொழி கூறினான். பாணங்களால்காயப்படுத்தப்பட்ட அங்கங்களுள்ள அந்த அர்ஜுனன் பகைவர்களுடையஸேனையை விரைவாகஜயித்துக் கௌரவர்களுடைய எல்லாப்பொருளையும் அபஹரித்துக்கொண்டு மறுபடியும் ச்மசானம்சென்று அந்த வன்னிமரத்தருகில்வந்து நின்றான். பிறகு, நெருப்புக்கொப்பான அந்தப்பெரியவானரமானது பூதங்களோடும் ஆகாயத்தில் கிளம்பியது. அவ்விதமாகஏற்படுத்தப்பட்ட

---

1 வேறுபாடம்.

அந்தமாயையும் அந்தர்த்தானமடைந்தது. மறுபடியும் ரதத்தில் ஸிம்மக்கொடியைக்கட்டினன். போரில் (பகைவரை) அடிப்பவனும் மஹாத்மாவும் மத்ஸ்யராஜனுடைய குமாரனுமான அந்தஉத்தரன் குருச்ரேஷ்டர்களானபாண்டவர்களுடைய அவ்விதமான ஆயுதங்களையும் தூணீரங்களையும் த்வஜங்களையும் (அந்தவன்னிமரத்தில்) வைத்துவிட்டு நகரத்தில்புகுவதற்காக ஸாரதியானகிரீடியுடன் புறப்பட்டான். பகைவர்களைக்கொல்லுகிறவனை பார்த்தன் மிகஉத்தமமான கார்யத்தைச்செய்து பகைவரைக்கொன்றுவிட்டு மறுபடியும் அவ்வாறே ப்ருஹன்னளைவேஷம்பூண்டு உத்தரனுடைய (குதிரைகளின்) கடிவாளங்களைப்பிடித்தான். (இவ்வாறு) அந்தப்பார்த்தன், ப்ருஹன்னளைவேஷத்தைத் தரித்துக்கொண்டு, பிறகு மத்ஸ்யராஜனுடையநகரத்தில் ப்ரவேசிப்பதற்காகச் சென்றான். பிறகு, அந்தக்கௌரவர்கள் தோல்வியடைந்து ஓய்ந்தவர்களும் துணியைஇழந்தவர்களும் (யுத்தத்தினின்று) திரும்பினவர்களுமாகி ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டே (ஹஸ்தினபட்டணத்தைநோக்கிச்) சென்றார்கள்.

அர்ஜுனன் (விராடநகரத்தின்) வழியையடைந்து (உத்தரனைப் பார்த்து), "ராஜபுத்ர! இந்தத்தனங்கள்முழுமையையும் நீ பெற்றுக்கொள். சிறந்தகைகளுள்ளவனே! வீரர்களானகோபாலர்களுடன் பசுக்கூட்டங்களையும் பெற்றுக்கொள். குதிரைகளைத் தண்ணீர்குடிக்கச்செய்து குளிப்பாட்டித் தேறுதலடையச்செய்துவிட்டு, பிறகு, பிற்பகலில் விராடநகரத்தைக்குறித்துச் செல்வோம். தூதர்களையும் கோபாலர்களையும் ப்ரியத்தைச்சொல்வதின்பொருட்டு நீ விரைவாக அனுப்பு. அவர்கள் உன்னுடையஜயத்தை நகரத்தில் பறையறையச்செய்யட்டும்" என்றுசொன்னன். பிறகு, உத்தரன் அர்ஜுனன் சொற்படியே விரைந்து தூதர்களைப்பார்த்து, "(தூதர்களே!) என்னுடையஜயத்தைச்சொல்லுங்கள். என்னால் அப்படிப்பட்ட கௌரவஸேனையானது ஜயிக்கப்பட்டது. என்னால் பகைவரிடமிருந்து பசுக்கள் திருப்பப்பட்டனவென்று இவ்வாறு நீங்கள் இஷ்டப்படி நகரத்தில்சென்று இக்கார்யம் என்னால் செய்யப்பட்டதாகச் சொல்லுங்கள்" என்று கட்டளையிட்டான்.

அறுபத்தொன்பதாவது அத்யாயம்.

கோக்ரஹண பர்வம். (தொடர்ச்சி.)

(விராடன் த்ரிகர்த்தர்களைவென்று திரும்பிவந்து, உத்தரனைக் காப்பதற்காக ஸேனையைஏவியதும், தூதர்கள் விராடனிடம்வந்து உத்தரனதுவெற்றியைக்கூறியதும்.)

ஸேனைகளுக்குநாதனான அந்தவிராடன் (த்ரிகர்த்தவீரர்களிடத்திலிருந்து) பொருளைஜயித்து ஸந்தோஷமுடையவனாகி நான்கு பாண்டவர்களோடும் நகரத்தில் ப்ரவேசித்தான். மஹாராஜன் யுத்தத்தில் த்ரிகர்த்தர்களைஜயித்துத் தனித்திருக்கிறபசுக்களையும் திருப்பிக்கொண்டு பார்த்தர்களோடு ஜயலக்ஷ்மியினால்வரிக்கப்பட்டு விளங்கினான். ஆஸனத்தில்வீற்றிருப்பவனும் வீரனும் நண்பர்களுக்கு ப்ரீதியைவ்ருத்திபண்ணுகின்றவனுமான அந்தவிராடனை ஜனங்கள் ப்ராம்மணர்களோடு (காண்பதற்கு) வந்தார்கள். அந்தமத்ஸ்யராஜனானவன் அப்பொழுது ஸபையிலிருப்பவர்களால்பூஜிக்கப்பட்டு (அந்த) ப்ராம்மணர்களையும் அவ்வாறே ப்ரஜைகளையும் ஸந்தோஷிக்கச்செய்து அனுப்பினான். பிறகு, ஸேனைகளுக்குத்தலைவனும் மத்ஸ்யதேசத்துக்குஅரசனுமான அந்தவிராடன், அநேகஸ்த்ரீகளால்விளங்குகின்ற அழகான அந்தப்புரத்தில்ப்ரவேசித்து உத்தரனை அவ்விடத்தில்காணமல், 'உத்தரன் எங்கேபோயிருக்கிறான்?' என்று (அங்குள்ளவர்களைக்) கேட்டான். அந்தஅரண்மனையில் அந்தப்புரத்தில்ஸஞ்சரிக்கின்ற ஸ்த்ரீகளும் கன்னிகைகளும் மிக்கமனக்களிப்புற்று, "கௌரவர்களால் பசுக்கூட்டம் கவரப்பட்டது. (பசுமந்தையைக்கவர்வதற்கு) வந்தஅதிரதர்களான த்ரோணர், பீஷ்மர், க்ருபர், கர்ணன், துர்யோதனன், அச்வத்தாமா ஆகிய இந்தஆறுரதிகர்களையும் ஜயிப்பதற்காக மிகுந்தரோஷத்துடன் பூமிஞ்சயன், ப்ருஹன்னளையைத் துணையாகக்கொண்டு அதிஸாஹஸத்தோடு ஒருவனாகவே புறப்பட்டுப்போயிருக்கிறான்" என்றுகூறினார்கள். பிறகு, விராடன் போரில் (பகைவர்களை) அடிக்கின்றவனான புத்ரன் ஒருரதத்தோடு ப்ருஹன்னளையை ஸாரதியாகக்கொண்டு (யுத்தத்திற்காகச்) சென்றிருக்கிறானென்பதைக்கேட்டு மிகுந்தமனவருத்தமுற்றுச் சிறந்தவர்களான மந்த்ரிகளையெல்லாம்பார்த்து, "(மந்த்ரிகளே!) யுத்தத்தில் ஸாமர்த்தியமுள்ளவர்களான கௌரவர்களெல்லோரும் என்னுடையபுத்ரனை, அவமதித்துவிட்டு லக்ஷம்பசுக்களையும் ஓட்டிக்கொண்டுபோய்விட்

டார்கள். ஆதலால், த்ரிகர்த்தர்களால் காயப்படுத்தப்படாத என்னுடையபோர்வீரர்கள் உத்தரனைப் பாதுகாப்பதின்பொருட்டுப் பெரிதானஸேனையினால் சூழப்பட்டுச் செல்லட்டும்" என்றுசொன்னான். பிறகு, விராடமஹாராஜன் தன்புத்ரனுடையஉதவிக்காக விசித்ரமும் ஆச்சர்யகரமுமான ஆபரணங்களோடுகூடின கணக்கிலடங்காத குதிரைகளையும் யானைகளையும் ரதங்களையும் வாத்யஸமூஹங்களையும் விரைவாகஅனுப்பினான். ஸேனைகளுக்குநாதனும் மத்ஸ்யதேசத்தார்களுள் சிறந்தவனுமான அந்தவிராடராஜன் (தேர் யானை குதிரை காலாள் என்னும்) நான்குஅங்கங்களுள்ள ஸேனையைப்பார்த்து, "எவனுக்கு நபும்ஸகன் ஸாரதியாகச்சென்றிருக்கிறானோ அவன் உயிரோடிருக்கமாட்டானென்று நானெண்ணுகிறேன். நீங்கள் விரைவாக(ச்சென்று) குமாரன் உயிரோடிருக்கிறானா இல்லையாவென்று தெரிந்துகொள்ளுங்கள்" என்று விரைந்து கட்டளையிட்டான். தர்மநந்தனர், விராடன் கௌரவர்களால் நன்றாகத்தப்பிக்கும்படிசெய்யப்பட்டு மனவருத்தமுற்றிருப்பதை அறிந்து அவனைநோக்கிச் சொல்லலானார்.

"அரசரே! இப்பொழுது ப்ருஹன்னளை ஸாரதியாயிருப்பாளாகில் உம்முடையபசுக்களைப் பகைவர்கள் கவரமாட்டார்கள். அந்த (ப்ருஹன்னளைஎன்கிற) ஸாரதியினால் ரதம்நடத்தப்பட்ட உம்முடைய குமாரன் யுத்தத்தில் எல்லாராஜாக்களையும் ஒன்றுசேர்ந்த எல்லாக் கௌரவர்களையும் அவ்வாறே தேவர்களையும் அஸுரர்களையும் ஸர்ப்பங்களையும் யக்ஷர்களையும் ஜயிப்பதற்கு ஸாமர்த்தியமுள்ளவன். கௌரவர்களும் மற்றஅரசர்களும் த்ரிகர்த்தர்கள்ஜயிக்கப்பட்டார்களென்பதைக்கேட்டு ஸர்வவிதத்தினாலும் (யுத்தத்தில்) நிற்கமாட்டார்கள்" என்றுசொன்னார். பிறகு, உத்தரனால்அனுப்பப்பட்ட அந்தத் தூதர்கள் அப்பொழுது சீக்ரமாகச்சென்று விராடநகரத்தைஅடைந்து ஜயத்தைத் தெரிவித்தார்கள். மந்த்ரிகளால்சூழப்பட்ட ராஜாவைப்பார்த்து (புத்ரனுடைய) மேலானவெற்றியையும் கௌரவர்களுடைய தோல்வியையும் அவ்வாறே உத்தரன் ஸமீபத்தில்வந்து கொண்டிருப்பதையும் சொல்லி, "எல்லாப்பசுக்களும் ஜயிக்கப்பட்டன. கௌரவர்களும் தோல்விஅடைவிக்கப்பட்டார்கள். பகைவர்களைத் தபிக்கச்செய்பவனான உத்தரன், ஸாரதியோடு க்ஷேமமாயிருக்கிறான்" என்றும்சொன்னார்கள். கங்கர், "அரசரிற்சிறந்தவரே! பாக்யத்தால் உமதுபசுக்கள் ஜயிக்கப்பட்டன. கௌரவர்களும் தோல்வி அடைவிக்கப்பட்டார்கள். பாக்யத்தால் உம்முடையகுமாரன் விஜயமுள்ளவனாகக் கேட்கப்படுகிறான். உம்முடையகுமாரன் கௌரவர்

களைஜயித்தானென்பதை நான் ஆச்சர்யமாக இப்பொழுது எண்ணவில்லை. எவனுக்கு ப்ருஹன்னளை ஸாரதியோ அவனுக்கு ஜயம்நிச்சயமே. தேவேந்த்ரனுடைய ஸாரதியான மாதலியும் ப்ரஸித்தமான பராக்ரமமுள்ளக்ருஷ்ணனுடைய ஸாரதியான தாருகனும் ப்ருஹன்னளைக்கு நிகராகார்" என்றுகூறினர். பிறகு, விராடராஜன் நன்றாக மயிர்க்கூச்சலுற்று அதிகபராக்ரமமுள்ள அந்தஉத்தரனுடைய விஜயத்தைக்கேட்டுத் தனங்களாலும் ரத்னங்களாலும் அந்தத்தூதர்களையெல்லாம் ஸந்தோஷப்படுத்தினன். அந்தப்பரிஜனங்கள் விலகினவுடன் தூதவாக்யத்தைக்கேட்டு உத்தரனுடையஜயத்தினல் ஸந்தோஷம்அடைந்தவிராடன் (கிங்கரர்களைப்பார்த்து) சொல்லலானன்.

"ராஜமார்க்கங்கள் கொடிமரங்களால்அலங்கரிக்கப்பட்டனவாகச் செய்யப்படட்டும். எங்கும் தேவதைகளும் புஷ்பங்களால்அர்ச்சிக்கப்படட்டும். போர்வீரர்களுள்முக்யர்களான குமாரர்களும் நன்றாகஅலங்கரிக்கப்பட்டதாஸிகளும் எல்லாவாத்யங்களும் என்குமாரனை எதிர்கொண்டுபோகட்டும். என்புத்ரன் ஜயத்தைஅடைந்திருக்குங்கால் பட்டணத்துஜனங்களும் மற்றமனிதர்களும் [1]ஸ்த்ரீகளும் சுத்தவஸ்த்ரம்தரித்துக்கொண்டும் நல்லவாஸனைபொருந்தினசந்தனங்களையும் மாலைகளையும் ஆபரணங்களையும் அணிந்துகொண்டும் மார்க்கத்தில்நிற்கட்டும். எல்லாத்தாஸிகளும் என்புத்ரனுக்கு வழிபாடு செய்யட்டும். நன்குஅலங்கரிக்கப்பட்டவர்களும் நல்லபாக்யமுடையவர்களும் நல்லவேஷமுள்ளவர்களுமான ஸ்த்ரீகளும் கன்னிகைகளும் ஸைனிகர்களோடுகூடி என்புத்ரனுடைய வழியைக்குறித்துச் செல்லட்டும். கிங்கரர்கள் சீக்ரமாக மதயானையின்மீதுஏறிக்கொண்டும் மணிகளையும் பணவங்களையும் ஒலிக்கச்செய்துகொண்டும் எல்லாநாற்சந்திகளிலும் என்னுடையஜயத்தை நன்றாகச்சொல்லட்டும். உத்தரையும் அனேகஆபரணங்களாலலங்கரிக்கப்பட்டவளாகிக் குமாரிகளோடு, யுத்தத்தில் விஜயம்பெற்று (வருகின்ற) ஸகியானப்ருஹன்னளையை எதிர்கொண்டுபோகட்டும்" என்றுசொன்னன். மஹாத்மாவான அந்தவிராடராஜனுடைய வார்த்தையைக்கேட்டுப் பட்டணத்துஜனங்கள் மிகவும் ஸந்தோஷத்துடன் மங்களத்ரவ்யங்களைக் கையில்கொண்டு அவ்விதமே செய்தார்கள். மாகதர்களும் எல்லா ஸூதர்களும் விராடனுடையநகரத்திலிருக்கின்ற எல்லாஜனக்கூட்டங்களும் ஸந்தோஷமுள்ளவர்களாகி விராடபுத்ரனை எதிர்கொண்டார்கள். பேரிவாத்யங்களும் தூர்யவாத்யங்களும் சங்கவாத்யங்க

[1] ஒருசொல்விடப்பட்டது.

ளும் முழங்கின. சிறந்தவேஷங்களுள்ள ஸ்த்ரீஜனங்களும் எதிர்கொண்டார்கள். ஸ்துதிபாடகர்களுடைய ஸ்தோத்ரசப்தங்களும் பணவமுதலான வாத்யங்களுடையகோஷங்களும் அவ்வாறே மற்ற வாத்யங்களின்சப்தங்களும் புல்லாங்குழல்களுடையத்வனிகளும் தோன்றின. ஸ்த்ரீகள் வெண்கலத்தாளத்துடன் மதுரமாகப்பாடிக்கொண்டு நகரத்தினின்று புறப்பட்டார்கள். பொறுமையை ப்ரதானமாகக் கைக்கொண்டவர்களும் தலைமைபெற்றவர்களும் தமக்குரியவேதத்தையும் மற்றவேதங்களையும் முறைப்படி அறிந்தவர்களுமான அப்படிப்பட்ட ப்ராம்மணர்கள் மங்களகார்யத்தையும் மங்களகானத்தையும் ஜபத்தையும் ப்ரதானமாகக்கொண்டு அளவற்றவீர்யமுடையவனான விராடபுத்ரனை எதிர்கொண்டுசென்றார்கள்.

எழுபதாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(விராடன் உத்தரனைப்புகழ்ந்ததும், யுதிஷ்டிரர், கௌரவர் ப்ருஹன்னளையால் தோல்வியடைவிக்கப்பட்டனரென்றதும், அவன் அவரைப் பாச்சிகையாலடித்ததும், அவர்காயத்திற்பெருகிய ரக்தத்தை ஸைரந்த்ரி தன்முன்றானையிலேந்தியதும், விராடன் ரக்தமேந்தியகாரணத்தைவினவ அவள்விடையளித்ததும்.)

மத்ஸ்யதேசத்துக்கரசனான விராடமஹாராஜன் ஸேனையையும் நன்றாக அலங்கரிக்கப்பட்ட கன்னியர்களையும் தாஸிகளையும் அனுப்பிவிட்டு ஸந்தோஷமுடையவனாகப் பின்வருமாறு வசனிக்கலானான்.

"ப்ராம்மணரே! த்ரிகர்த்தர்களும் கௌரவர்களுமாகியஎல்லோரும் யுத்தத்தில் என்னால் ஜயிக்கப்பட்டார்கள். ஸந்தோஷமடைந்திருக்கின்றநாம் அந்தப்புரத்தை அடைந்து சூதுவிளையாடுவோம்" (என்றுசொல்லி, ஸைரந்த்ரியைப்பார்த்து,) "ஸைரந்த்ரி! பாச்சிகைகளைக்கொண்டுவா; ஆஸனத்தையும் எடுத்துப்போடு. நீ விசிறியைஎடுத்துக்கொண்டு என்பக்கத்தில் ஸமீபத்திலிரு" என்றுசொன்னான். அவ்வாறு சொல்லுகின்ற அந்தவிராடமஹாராஜனைப்பார்த்து, பாண்டுநந்தனரான தர்மபுத்ரர், "(வேந்தரே!) ஸந்தோஷமடைந்திருக்கின்ற சூதாடியோடு சூதாடக்கூடாதென்று நாம்கேட்டிருக்கிறோம். (ஆதலால்) இப்பொழுது ஸந்தோஷத்தோடுகூடினஉம்முடன் சூதாடுவதற்கு நான்உத்ஸாஹமுடையவனாகஇருக்கவில்லை. உமக்கு விருப்ப

மிருந்தால் ப்ரியமான (வேறுகார்யத்தை) நான்செய்யவிரும்புகிறேன். அரசரே! ஜனங்கள்நிறைந்தஸபையில் சூதாடுவதற்கு நான் ப்ரியப்படவில்லை" என்று மறுமொழிகூறினர். விராடன், "ஸ்த்ரீகளும் பசுக்களும் ஸ்வர்ணமும் மற்றுமுள்ளதனமும் எனக்குத் தேவையில்லை. நீர் சூதாடுவதைத்தவிர மற்றொன்றும் எனக்குச் செய்யவேண்டாம்" என்றுசொன்னன். கங்கர், "ராஜேந்த்ரரே! வெகுமானத்தைக்கொடுப்பவரே! அநேகதோஷங்களுள்ள சூதாட்டத்தால் உமக்கு யாது பயன்? சூதாட்டத்தில் அநேகதோஷங்கள் இருக்கின்றன. ஆதலால், அதைவிலக்கவேண்டும். தர்மராஜாவானயுதிஷ்டிரரை நீர் கேட்டிருக்கலாம்; அல்லது பார்த்துமிருக்கலாம். அவர் ராஜ்யத்தையும் குறைவற்றதனத்தையும் தமக்குஅன்புள்ளமனைவியான க்ருஷ்ணையையும் தேவர்களுக்கொப்பான தம்பிகளையும் ஒருபந்தயமாகத் தீர்மானித்தார். பற்பலரத்னங்களும் தனங்களும் தோற்கப்படவே சூதாடியான அந்தப்பாண்டவர் ஸம்சயமில்லாமல் பச்சாத்தாபத்தை அடைந்திருக்கிறார். சூதாட்டமானது அபீஷ்டங்களை நாசஞ்செய்யக்கூடியது; ஓயாமல் கடுஞ்சொல்லை உண்டுபண்ணக்கூடியது; கற்றறிந்தவர்களால் எப்பொழுதும் விச்வாஸம்வைக்கத்தகாதது; ஒரேதினத்தில் (எல்லாப்)பொருள்களையும் நாசஞ்செய்யக்கூடியது. சூதாட்டத்தில் தர்மநந்தனர் எல்லாவற்றையும் இழந்தார். ஆதலால், சூதாட்டத்தை நான் விரும்பவில்லை. வேந்தரே! இல்லையேல், நீர் (சூதாட)எண்ணுவீரானல் (அது உமக்குப்) பிடித்திருக்குமானல் நாம் சூதுவிளையாடுவோம்" என்றுகூறினர்.

மனிதரிற்சிறந்தஅவ்விருவரும் இவ்விதமானவாக்யங்களால் ஸம்பாஷித்துக்கொண்டு சூதாட ஆரம்பித்தார்கள். சூதாட்டமானது நடந்துவரும்காலத்தில் மத்ஸ்யராஜன் பாண்டவரைப்பார்த்து, "(கங்கரே!) நீர் பாரும். என்னுடையபுத்ரனால் யுத்தத்தில் அப்படிப்பட்ட கௌரவர்கள் ஜயிக்கப்பட்டார்கள். கௌரவர்களெல்லோரும், அதிரதர்கள்; தேவர்களாலும் எளிதில் ஜயிக்கமுடியாதவர்கள்" என்று கூறினன். பிறகு, தர்மராஜாவானயுதிஷ்டிரர், சூதாடுகையில், மத்ஸ்யராஜனைப்பார்த்து, "(ராஜரே!) பாக்யவிசேஷத்தால் உம்முடைய பசுக்கள் மீட்கப்பட்டன; கௌரவர்களும் ஜயிக்கப்பட்டார்கள். உத்தரன் கௌரவர்களை ஜயிப்பானுயின் அது மிக்கஆச்சர்யமென்று எண்ணுகிறேன். எவனுக்கு ப்ருஹன்னளை ஸாரதியோ அவன் எவ்விதத்திலும் பகைவரை ஜயிப்பான்" என்றுகூறினர். பிறகு, விராடன் மனக்கலக்கமுற்றுச் சோகத்தாலும் வ்யாபிக்கப்பட்டுக் கோபத்து

டன் ஸமீபத்தில்இருக்கிற ஸந்யாஸியைப்பார்த்து, "ப்ராம்மணரே! மஹாவில்லாளியும் புத்திசாலியுமான அப்படிப்பட்ட போர்வீரனால் யுத்தத்தில் கௌரவர்கள் ஜயிக்கப்பட்டார்கள். அதில் என்ன ஆச்சர்யம்?" என்றுசொன்னான். யுதிஷ்டிரர், "வீர்யமுடையவனான அந்த ஸாரதியானவன் எவனுடையரதத்திலிருக்கிறானோ அவன் (ஒருவராலும்) செய்யமுடியாதகார்யத்தைச்செய்வானானால் அந்தவிஷயத்தில் ஆச்சர்யமில்லையா?" என்றுகூறினார். விராடன், "ப்ராம்மணர்களுள் இழிந்தவனே! என்புத்ரனை நபும்ஸகனோடு ஒப்பாகப்பேசுகிறாய். சொல்லத்தகுந்ததையும் சொல்லத்தகாததையும் நீ தெரிந்துகொள்ளவில்லை; நிச்சயமாகவே என்னை அவமதிக்கிறாய். அனேகவீரபுருஷர்களையும் அனேகஸாரதிகளையும் நான் பார்த்திருக்கிறேன். பராக்ரமத்தோடு போர்புரிகின்றஸாரதியை நான் ஒருபொழுதும் பார்த்ததில்லை. அரசர்களுக்கு அப்ரியமானகார்யத்தைச் செய்யலாகாது; அனுகூலமாயும் ப்ரியமாயுமிருக்கிறகார்யத்தையே பேசவேண்டும். அரசர்களுக்கு அப்ரியத்தைச்செய்பவன் ஒருகாலும் ஸுகமாக வ்ருத்தி அடையமாட்டான். ஸ்நேஹிதனாயிருப்பதினால் இப்படிப்பட்ட உன்னுடையகுற்றம் எல்லாவற்றையும் பொறுக்கிறேன். நீ உயிரோடிருக்கவிரும்புவாயானால் இப்படிப்பட்டவார்த்தையைப் பேசாதே" என்றுகூறினான். பிறகு, குருவம்சத்தை வ்ருத்திபண்ணுகிறவரான கங்கர் உரக்கச்சிரித்து மறுபடியும் (அரசனைப்பார்த்து,) "ஓ! ராஜேந்த்ரரே! ப்ருஹன்னளையினுடையஜயத்தை நகரத்தில்பறையறைந்து தெரிவிக்கலாம். உத்தரனோ கட்டாயமாக ஸாரத்யம்செய்திருக்க வேண்டும். (இவ்விஷயத்தில்) ஒரு நிமித்தமுண்டாயிருக்கிறது; எனக்கு உறுதியான ஊஹமும் உண்டாயிருக்கிறது. ராஜேந்த்ரரே! நான் எப்படி எண்ணுகிறேனோ அது (அப்படியே இருக்கும்;) வேறுவிதமாயிராது. மஹாவீர்யசாலிகளான கௌரவர்களோ சந்த்ரன், வருணன், ஆதித்யன், குபேரன், அக்னி இவர்களோடுகூடினதேவர்களாலும் ஜயிக்கமுடியாதவர்கள். சந்தனுகுமாரரான பீஷ்மரும், (ஒருவராலும்) எவ்விதத்தாலும் ஜயிக்கமுடியாதவர்களான த்ரோணரும், கர்ணனும், அச்வத்தாமாவும், விகர்ணனும், ஸோமதத்தனும், ஜயத்ரதனும், பூரிச்ரவஸ்ஸும், சலனும், பூரியும், வீர்யமுடையவனான ஜலஸந்தியும், துர்யோதனனும், துஷ்ப்ரஸஹனும், துச்சாஸனனும், விவிம்சதியும், வ்ருஷஸேனனும், அச்வவேகனும், வாயுவேகனும், ஸுவர்ச்சஸ்ஸும், பாஹ்லீகனும், சூரஸேனனும், பகைவரைவாட்டுபவனான யுயுத்ஸுவும், ஸுபலனுடையகுமாரனான சகுனியும், ஸால்

வராஜனுன த்யுமத்ஸேனனும், பற்பலதேசாதிபதிகளான அனேக சூரர்களும், ஆசார்யர்களுள்சிறந்தவரான க்ருபரோடுசேர்ந்த கௌர வமன்னர்களும், ஆயத்தமாயிருக்கும் வில்லும் கத்தியுமுள்ள ரத யூதபதிகளானரதிகர்களும், சிறந்தவீர்யமுள்ளவர்களும் மஹாரதர் களுமான மற்றராஜகுமாரர்களும் எந்தஸேனையில் இருக்கிறார்களோ ா பீஷ்மர் த்ரோணர் முதலானவர்களால்சூழப்பட்ட அந்தப்படையை, தேவர்களுடையகூட்டங்களால் சூழப்பட்ட இந்த்ரன் கோபங்கொ ண்டு நேரில்வந்தாலும் ஜயிக்கமாட்டான். அந்தபபடையை ப்ரு ஹன்னளையைத்தவிர வேறுஎந்தமனிதன் எதிர்த்துப் போர்புரிவான்? பாஹுபலத்தில்ஒப்பற்றவனும் உலகில் போரைக்கண்டவுடன் மிக்க ஸந்தோஷம் வ்ருத்தியடைகிறவனுமான இப்படிப்பட்டபுருஷன் ஸ்வ ர்க்கத்திலாவது பூமியிலாவது உண்டா?" என்றுசொன்னுர். அந் தவார்த்தையினுல் மிகக்கலக்கமுற்றஅரசன் பிளக்கப்படுகின்றமனத் துடன் அவரை யுதிஷ்டிரரென்றுஅறியாமல், "ஓ! கங்க! ப்ரா ம்மணேத்தம! எனக்கு ப்ரதிகூலமானவார்த்தையை நீ சொல்லாதே. நீ பலவாறு தடுக்கப்பட்டும் வாக்கை அடக்குகிறுயில்லை. அடக்கி ஆள்பவன் இல்லாவிடில் ஒருவனுவது தர்மத்தை அனுஷ்டிக்கமாட் டான்' என்று க்ரூரமானவார்த்தையைச்சொன்னுன். இவ்வாறு மிகக்கலக்கமுற்ற அந்தஅரசனுனவன் பாச்சிகையினுல் (அவரை) பல மாக அடிக்கஆரம்பித்தான். கோபங்கொண்டவிராடன் தக்ஷகனு டையஉடல்போலவிளங்குகின்ற வலக்கையைத்தூக்கி அவருடைய வலக்காதிலடித்தான். அவன் கோபத்தினுல், 'இனி இவ்வாறுசொல் லாதே' என்று அதட்டிக்கொண்டு யுதிஷ்டிரரை முகத்தில்அடித் தான். பலமாகஅடிக்கப்பட்ட யுதிஷ்டிரருடையமூக்கிலிருந்து ரக் தம்பெருகியது. விராடனுல் பாச்சிகையினுலடிக்கப்பட்டவரும் சிற ந்தகைகளுள்ளவருமான யுதிஷ்டிரராஜர் மிக்கமனவருத்தமுற்றவ ளான த்ரௌபதியைப்பார்த்துக்கொண்டே பேசாமலிருந்தார். சிற ந்தகைகளுள்ளவரும் மஹாத்மாவுமான அந்தத் தர்மபுத்ரருடைய சிரஸிலிருந்து (பாச்சிகையினுல்) அடித்ததினுல் செந்தாமரைமலருக் கொப்பானரக்தமானது அப்பொழுது பெருகியது. தர்மாத்மாவான பார்த்தர் அந்தரக்தத்தைப் பூமியில்விழுவதற்குள்ளாகவே இருகைக ளாலும் பிடித்துக்கொண்டு பக்கத்திலிருக்கின்ற த்ரௌபதியைப்பார் த்தார். பர்த்தாவினுடையமனத்தை அனுஸரித்துநடப்பவளான அந்த த்ருபதராஜகுமாரியானவள் பர்த்தாவினுடையவேதனையைஅறிந்து துக்கமும் பயமும் கோபமுமுள்ளவளாகி (பெருகஆரம்பிக்கின்ற)

கண்ணீரை அதிகப்ரயாஸத்தாலடக்கிக்கொண்டு பார்த்தாவினுடைய நன்மையைக்கருதி மெல்லியதானமேலாடையினால் விரைவாக (அந்த) ரக்தத்தை ஏந்தினாள். ராஜேந்த்ரரே! துக்கத்தினால் மதிமயக்கமுற்றவளும் த்ருபதராஜனுடையபுத்ரியுமான ஸைரந்த்ரியானவள் அப்பொழுது யுதிஷ்டிரருடையரக்தத்தை வஸ்த்ரத்தால்பிடித்து ஸ்வர்ணமயமான ஒருபாத்ரத்தையெடுத்து அந்தரக்தத்தை அதில்பிழிந்தாள். விராடன், "விசாலமானகண்ணையுடையவளே! ஸைரந்த்ரி! ஏன் இந்தரக்தமானது உத்தரீயத்தால் பிடிக்கப்படுகிறது? இந்தவிஷயத்தில் காரணம்யாது? அதை எனக்கு உண்மையாக உரைப்பாயாக" என்றுவினவ, ஸைரந்த்ரி, "மத்ஸ்யதேசத்தரசரே! கங்கருடையரக்தபிந்துக்கள் பூமியில் எவ்வளவுவிழுகின்றனவோ அவ்வளவுவர்ஷகாலம் உம்முடையதேசத்தில் மழையில்லாமல்போய்விடும்; உமக்குக் கேடுண்டாகவேண்டாமென்கிற இந்தக்காரணத்தைக்கருதிக் கங்கருடைய ரக்தமானது என்னால் உத்தரீயத்தால் பிடிக்கப்பட்டது. எவன் [1] யதீந்த்ரரைத் துன்பஞ்செய்வனோ அவனுக்கு ஆயுள் நாசமடைந்துவிடும். எவன் யதீந்த்ரரைப்பார்த்து ஆஜ்ஞைசெய்வனோ அவன் யமலோகத்தில் ஆயிரம்யாதனைகளை அனுபவிப்பான். யதியினுடைய (தேஹத்தினின்று) உண்டான ரக்தமானது எவ்வளவுபுழுதியை நனைக்கிறதோ பித்ருலோகவாஸிகளான அவ்வளவு பித்ருக்கள் கீழே விழுகின்றார்கள். விராடராஜரே! இதைஅறிந்து உம்மிடத்திலுள்ள ப்ரீதியினால் உமக்கு நன்மைசெய்வதின்பொருட்டு நான் உத்தரீயத்தினால் ரக்தத்தை ஏந்தினேன்" என்று கூறினாள்" என்றார்.

எழுபத்தோராவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(யுத்தத்தைப்பார்க்கவந்ததேவர்கள் அர்ஜுனனைப்புகழ்ந்து தேவலோகம்சென்றதும், உத்தரன்தன்நகரம்வந்ததும்.)

ஜனமேஜயர், "தோஷமற்றவரே! மனுஷ்யயுத்தத்தைப்பார்ப்பதற்காக முன்புவந்திருந்தஅந்தத்தேவர்கள் பிறகு என்னசெய்தார்கள். அதை எனக்குச் சொல்வீராக" என்றுவினவ, வைசம்பாயனர், சொல்லத்தொடங்கினார்.

---

1 யதி=ஸந்யாஸி.

"(ஜனமேஜயமஹாராஜரே!) ஸ்வர்க்கத்தில் வஸிப்பவர்களும் இந்த்ரனை முதன்மையாகக்கொண்டவர்களும் ரிஷிகளை முன்னிட்டவர்களுமான எல்லாத்தேவர்களும் யக்ஷகந்தர்வர்களுடைய கூட்டங்களும் அவ்வாறே அப்ஸரஸுகளுடைய கூட்டங்களும் ஒருவனான அர்ஜுனனுக்கும் அநேககௌரவர்களுக்கும்நடந்த பயங்கரமும் அத்யுக்ரமான காட்சியுள்ளதுமான மனுஷ்யயுத்தத்தையும் திவ்யாஸ்த்ரங்களின் ப்ரயோகங்களையும் உபஸம்ஹாரங்களையும் சுறுசுறுப்பாகவும் நேர்த்தியாகவும் ஆச்சர்யமாகவும் முயற்சியுடன் செய்யப்படும் செய்கைகளையும் பார்த்துவிட்டும், காண்டீவத்தை வில்லாகக்கொண்ட அர்ஜுனனால் ஜயிக்கப்பட்டவர்களான பீஷ்மரையும் க்ருபரையும் த்ரோணரையும் கர்ணனையும் மற்றஅரசர்களையும் பார்த்துவிட்டும், பிறகு, (ஸ்வர்க்கலோகத்தைக்குறித்து) சென்றார்கள். அந்தத்தேவர்களனைவரும் ஸந்தோஷமடைந்து அடிக்கடி (அர்ஜுனனைப்) புகழ்ந்து தடையற்றகதியுள்ளதும் விரைவாகச் செல்லுகிறஸ்வபாவமுள்ளதுமான அந்தவிமானத்தோடு தடையற்றவர்களாகத் தேவலோகம் சென்றார்கள். 'இந்த்ரனோடுகூடின எல்லாத்தேவர்களாலும் எல்லா அஸுரர்களாலும் ஜயிக்கமுடியாதவர்களான பீஷ்மர், த்ரோணர், க்ருபர்முதலான எல்லாக்கௌரவர்களும் பார்த்தனொருவனால் யுத்தத்தில் ஜயிக்கப்பட்டார்கள். அந்தோ! நமக்கு அதிகமான வியப்புண்டாய்விட்டது. இந்தஅர்ஜுனன் எந்தமுஹூர்த்தத்தில் பிறந்தானோ? எந்தத் தர்மத்தினுடைய பலனோ? ருத்ரரோடெதிர்த்துப் போர்புரிந்த இந்தப்பல்குனனிடத்தில் (இது) என்னஆச்சர்யம்? முப்பதுகோடிஎன்றுகணக்கிடப்பட்ட நிவாதகவசர்களை யுத்தத்தில்கொன்ற அர்ஜுனனுக்கு இதுஎன்னஆச்சர்யம்?' என்று அந்தத்தேவர்கள் ஸ்தோத்ரம்செய்துகொண்டு ஸந்தோஷத்துடன் ஆச்சர்யத்தினால் கவரப்பட்டமனத்துடன் ஸ்வர்க்கலோகம் சென்றார்கள். கௌரவர்கள் அர்ஜுனனுடைய பாணங்களால் அடிக்கப்பட்டவர்களும், அம்புகளால் நன்றாகக்காயப்படுத்தப்பட்டவர்களும், ஸம்பூர்ணமான ஸைன்யமும் வாஹனமுமுள்ளவர்களும், யானைகளாலும் குதிரைகளாலும் ரதங்களாலும் வ்யாபிக்கப்பட்டவர்களும், பலசாலிகளும் க்ஷத்ரியபுத்ரர்களுமான யுத்தவீரர்களால் அடையப்பட்டவர்களுமாகி விராடநகரத்தினின்று குருதேசத்தைநோக்கிச் சென்றார்கள்.

விராடனால் ஏவப்பட்டஸேனையானது நகரத்தினின்று சீக்ரமாகச் சென்று பகைவரைஅடக்குகின்றவனும் ஸாரதியுடன் சேர்ந்திருக்கின்றவனுமான அந்தஉத்தரனை எதிர்கொண்டுவந்தது. அநேகவாத்ய

முழக்கங்களால் நிரம்பியதும் யானைகளாலும் குதிரைகளாலும் ரதங்களாலும் சூழப்பட்டதுமான அந்தவிராடஸேனையிலிருக்கும் ஸ்த்ரீகளுக்கும் குமாரர்களுக்கும் அதிகஸந்தோஷம் உண்டாகியது. பிறகு, அர்ஜுனனே நன்றாக உயரக்கிளம்பினதும் ஸைன்யத்தினுலுண்டு பண்ணப்பட்டதுமான புழுதியைப்பார்த்து ஸேனையிலுள்ள த்வஜத்தையும் அறிந்து, பிறகு, விராடபுத்ரனைநோக்கி, "(உத்தர!) நகரத்தில் நெருங்கினசப்தமுண்டாகிறது. புழுதியும் ஆகாயத்தை அளாவுகிறது. நம்மால்ஜயிக்கப்பட்டு ஓடினவர்களும் பெரிதானவில்லையுடையவர்களும் நல்லதேஜஸையுடையவர்களுமான அந்தக்கௌரவர்கள் மீண்டும் உன்னுடையநகரத்தை அடைந்துவிட்டார்களோ? ஏ! வீர! கவசத்தைப்பூண்டுகொள். குதிரைகளையோட்டு. விராடநகரத்தை விரைவாகஅடை. கையுறையின்ஒலியையாவது காண்டீவத்தினுடைய சப்தத்தையாவது கொடியையாவது நான் காண்பிக்கமாட்டேன். ஒருஸமயம், (இங்குகாணப்படுகிறவர்கள்) ஸ்வஜனங்களாயிருக்கலாம்" என்றுகூறினன். உத்தரன், "இது மாத்ஸ்யர்களுடைய ஸேனமுகம். நன்றாகஅலங்கரிக்கப்பட்ட தாஸிகளும் கன்னிகைகளும் காணப்படுகிறார்கள். பற்பலஉடைகளைத்தரித்த போர்வீரர்களும் தேர்களில் காணப்படுகின்றார்கள். தோழிகளால் நான்குபக்கத்திலும் சூழப்பெற்ற உத்தரையை இந்தஸைன்யத்தில் காண்கிறேன். ஸேனைகளும் காணப்படுகின்றன. யானைகளும் கவசம்பூட்டப்பட்ட குதிரைகளும் தேராளிகளும் அநேகம்காலாட்களும் காணப்படுகின்றனர். (இவர்கள்) சஸ்த்ரங்களைத்தரிக்கவில்லை. விராடருடையவார்த்தையினால் எல்லோரும் அதிகஸந்தோஷமுள்ளவர்களாக (வருகிறார்களென்று) எனக்குத்தோன்றுகிறது. இந்தக்கூட்டத்தில் பந்துவினிடத்தில்உண்டாகாததுபோல என்மனத்துக்குக் குழப்பம்உண்டாகவில்லை" என்றான்.

பிறகு, ஸ்வஜனங்களெல்லோரும் உத்தரனை விரைவாகவந்தடைந்து பகைவர்களைவென்று வந்திருக்கின்ற அவனை ஒவ்வொருவரும் கட்டிக்கொண்டார்கள். ஜனங்கள், "(உத்தர!) நீ ப்ரீதியுடையவன்; புருஷரிற்சிறந்தவன்; ஸந்தோஷத்தோடுகூடியவன்; பாக்யத்தினால் அடிக்கடி ஜயிக்கிறாய். உனக்குமங்களம். பாக்யத்தால் ப்ருஹன்னளை உனக்கு ஸாரதியாகவாய்த்தாள். யுத்தத்தைஅடைந்த உனக்குத் தெய்வாதீனமாக யாதொருவிதமானபயமும் உண்டாகவில்லை" என்றுசொன்னார்கள். உத்தரன், "(ஜனங்களே!) இந்தஜிஷ்ணுவானவன் ஒருதேருள்ளவனாகி யுத்தத்தில் அந்தக்கௌரவர்களைஜயி

த்தான். எதைலாதனமாகக்கொண்டு பசுக்கள் என்னால் மீட்டுக் கொண்டு வரப்பட்டனவோ, எதையாச்ரயித்து அளவற்றபராக்ரமமுள்ளவர்களான கௌரவர்கள் யுத்தத்தில் ஜயிக்கப்பட்டார்களோ அது இவனுடைய பாஹுக்களின்வீர்யம். தேவகுமாரன்போன்ற யௌவனமுள்ள இவன் அந்தக்கார்யத்தைச்செய்தான். இந்தப்புருஷ ச்ரேஷ்டன் அப்படிப்பட்ட கௌரவமண்டலத்தைக் கலக்கமுறச்செய்து பலாத்காரமாகப் பசுக்களையும் யுத்தத்தில்மீட்டு என்னையும் பாதுகாத்தான்" என்றுசொன்னான். அர்ஜுனனைப்புகழ்கின்ற உத்தரனுடைய வார்த்தையைக்கேட்டு மங்களத்தை எடுத்துரைக்கின்ற கிங்கரர்கள் ராஜபுத்ரனால் தூண்டப்பட்டு ஜயத்தைக்கோஷித்தார்கள். கன்னிகைகள் சத்ருக்களைஸம்ஹரித்தவனான பார்த்தனைச் சந்தனங்களாலும் மாலைகளாலும் தூபங்களாலும் பூர்ணமானஸ்வர்ணங்களாலும் பொழிந்து நன்குபூஜித்தார்கள். அர்ஜுனன் மாலைகளாலும் பற்பலவிதமான நல்லசந்தனங்களாலும் நிரப்பப்படுகின்றவனும் ஜனங்களால் நன்கு பூஜிக்கப்படுகின்றவனுமாகி நகரத்தின் வாயிலைவந்து அடைந்தான். பேரிவாத்யங்களும் தூர்யவாத்யங்களும் புல்லாங்குழல்களும் முழங்கின. விசித்ரவேஷங்களுள்ள ஸ்த்ரீஜனங்களும் சிறந்தபலமுள்ளவிராடனுடைய பட்டணத்திலிருந்து வெளிக்கிளம்பிப் பூமிஞ்சயனைக்கொண்டாடினார்கள். அந்தநகரத்தில் ஜயத்தினால் புகழப்படுகின்றவனும், 'ஜயமுண்டாயிற்று' என்று (ஜனங்களால்) கேட்கப்படுகின்றவனுமான அந்தவிராடபுத்ரன் மனவருத்தமுற்றுப் பாண்டவனை நன்றாகப்பார்த்துக்கொண்டு ஸந்தோஷிக்கவில்லை. [1] பிறகு, பாண்டுபுத்ரனான அர்ஜுனன் விராடனுடைய புத்ரியான உத்தரைக்கும் (அவளுடைய) தோழிகளுக்கும் சிறந்தவஸ்த்ரங்களைக் கொடுத்தான். அங்குவந்திருந்த அந்தப்பெண்களும் அந்தஸைன்யமும் ஜயத்தைக்கண்டு (உத்தரனையும் ப்ருஹன்னளையையும்) மர்யாதை செய்தார்கள்.

---

[1] இது இங்கு பொருத்தமில்லை; அடுத்த அத்யாயத்தின் இறுதியில்காண்க.

எழுபத்திரண்டாவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(உத்தரன் அந்தப்புரத்தை அடைந்து விராடனை வணங்கி யுதிஷ்டிரரின்காயத்தைக்கண்டு பயந்ததும், விராடன் யுதிஷ்டிரரை க்ஷமிக்கும்படிவேண்டியதும், அர்ஜுனன் விராடனிடம்வந்ததும், விராடன் உத்தரனைப்புகழ்ந்ததும், உத்தரன் கௌரவர்களை ஒருதேவகுமாரன் ஜயித்தானென்றதும், அர்ஜுனன் கௌரவராடைகளை உத்தரைமுதலியோருக்குக் கொடுத்ததும்.)

பட்டணத்துஜனங்களாலும் ஸ்த்ரீகளாலும் தேசத்தில்வஸிக்கின்றஜனங்களாலும் பூஜிக்கப்படுகின்ற உத்தரன், அந்தப்புரவாயிலை அடைந்து பிதாவுக்கு (தன்வரவை)த்தெரிவித்தனன். பிறகு, வாயில்காப்போன் (அரசனிடம்)வந்து நமஸ்காரம்செய்து இருகரங்களையும் குவித்துக்கொண்டு ஜயத்தைத்தரக்கூடிய ஆசீர்வசனங்களால் (அரசனை) மேன்மைப்படுத்தி, "வேந்தரே! பெரியகீர்த்தியையுடையவரே! (உம்முடைய) குமாரனை உத்தரன் பகைவரைவென்று உமக்கு (ப்ரியத்தைத்தெரிவிப்பதற்காக) ப்ரதானயுத்தவீரர்களாலும் தாஸிகளாலும்சூழப்பட்டவனும் பட்டணத்துஜனங்களோடும் தேசவாஸிகளோடும் கூடினவனும் (ப்ரஜைகளால்) ஜயசப்தத்துடன்கூடின ஆசீர்வசனத்தால் பூஜிக்கப்படுகின்றவனுமாகி ஸாரதியுடன்வந்து வாயிலில் [1] நிற்கிறான்" என்றுகூறினான். பிறகு, அரசன் மகிழ்ந்து வாயில்காப்பவனைப்பார்த்து, "(த்வாரபாலக!) அவ்விருவரையும் விரைவாக (இங்கே) வரச்செய். நான் அவ்விருவரையும்பார்ப்பதில் விருப்பமுள்ளவனாயிருக்கிறேன்" என்றுசொன்னான். கௌரவர்களுக்கரசரும் தர்மாத்மாவும் கம்பீரபுத்தியுள்ளவருமான யுதிஷ்டிரர் த்வாரபாலகனைப்பார்த்து, "உத்தரன் ஒருவனாக (இங்கே)வரட்டும். ப்ருஹன்னளை வரவேண்டாம். ஏனெனில், யுத்தத்தைத்தவிர மற்றஸமயத்தில் எவன் என்னுடைய அங்கத்தில் காயத்தைஉண்டுபண்ணுவனோ, ரக்தத்தையாவது காட்டுவனோ அவன் எவ்விதத்தினாலும் ஜீவித்திருக்கமுடியாதென்பது, சிறந்தகைகளுள்ளவளும் மஹாத்மாவுமான இவளுடையநித்யமான வ்ரதம். (ஆகையால்,) ரக்தத்துடனிருக்கிற என்னைப்பார்த்ததினாலேயே (ப்ருஹன்னளையானவள்) அதிககோபங்கொண்டு மந்த்ரிகளுடனும் ஸேனையுடனும் வாஹனங்களுடனும்

---

[1] 'வாரித:' என்பது விடப்பட்டது.

கூடின விராடனை இந்தஸமயத்தில் நிச்சயமாய்க் கொன்றுவிடுவாள். இந்தப்ருஹன்னளையானவள் 'என்மீது ரக்தத்தைஉண்டுபண்ணின வன் இந்த்ரனாயிருந்தாலும் குபேரனாயிருந்தாலும் யமனாயிருந்தாலும் வருணனாயிருந்தாலும் அவனைக்கொன்றுவிடுவள். மனிதனைப்பற்றிச் சொல்லவேண்டுமா? ஆகையால், வீர்யசாலியான ப்ருஹன்னளையான வள் க்ஷணநேரம் அவ்விடத்திலேயே வாயிலில்நிற்கட்டும்" என்று காதில் மெள்ள ரஹஸ்யமாகச்சொன்னார். தயையுள்ளவரானதர்ம ராஜர் இவ்வாறு சொல்லிவிட்டுப் பொறுமையுடன் ஸபையில் மத்ஸ்ய ராஜனுடன்கூடப் பேசாமல் உட்கார்ந்திருந்தார்.

பிறகு, விராடராஜனுடைய மூத்தகுமாரனானபூமிஞ்சயன் (அரச னிருக்கும் அந்தப்புரத்தில்) நுழைந்து பிதாவினுடையசரணங்களில் நமஸ்காரஞ்செய்தான்; கங்கரையும் அணுகினான். உத்தரன் வக்ர மானபார்வையினால் யுதிஷ்டிரரைப்பார்த்துக்கொண்டு பிதாவினுடைய சரணங்களில் அபிவாதனம்செய்து, பிறகு, கங்கருடைய (மேனியில்) ரக்தப்பெருக்கைக் கண்ணுற்று அப்பொழுது ம்ருத்யுவினால் பிடிக் கப்பட்டவன்போல மனத்தில் எரிக்கப்பட்டான். பிறகு, உத்தரன் ரக்தத்தால் நனைக்கப்பட்ட அங்கங்களுடையவரும் மனோவ்யாகுல த்தை அடைந்தவரும் நிரபராதியும் பூமியில் ஏகாந்தஸ்தலத்தில் உட் கார்ந்திருப்பவரும் ஸைரந்த்ரியினால் நன்றாகப்பணிவிடைசெய்யப்பட் டவருமான கங்கரைக்கண்டு விரைவுடன் அரசனைப்பார்த்து, "(மஹா ராஜரே!) இந்தக்கங்கர் யாரால்அடிக்கப்பட்டார்? எந்தமனிதனால் இந்தப்பாபம் செய்யப்பட்டது? எவன் ம்ருத்யுவைஅடைய விருப்ப முற்றிருக்கிறான்? எவனால் ஸர்ப்பம் காலால்மிதிக்கப்பட்டது? வேதா த்யயனம்செய்தவரும் இந்த்ரனுடையஆஸனத்தை விரும்பத்தகுந்த வருமான இப்படிப்பட்ட இந்தப்ராம்மணோத்தமர் பூஜிக்கத்தக்கவர்; அபிவாதனம்செய்யத்தக்கவர்; ஹிம்ஸிக்கத்தக்கவரல்லரே?" என்று வினவினான். ராஜ்யங்களைவ்ருத்திசெய்கிறவனான அந்தவிராடன், புத்ர னுடைய வார்த்தையைக்கேட்டுப் பயத்தினால்மனமழிந்து அவனைப் பார்த்து, "புத்ர! உன்விஜயத்தைக்கேட்டு (முன்னமே) ஸந்தோஷ முள்ளவனானநான் மிகுந்தஸந்தோஷத்தைஅடைந்து இவருடன் சூதாட்டத்தினால் காலத்தைக்கழிக்கலானேன். அக்காலத்தில், 'ராஜ் யத்தை வ்ருத்திபண்ணுகிறவனானஉத்தரன் எல்லாக்கௌரவர்களையும் ஜயித்தான்' என்று நான்சொன்னேன். புத்ர! 'இல்லை. அந்தப்ருஹன் னளையே எல்லாக்கௌரவர்களையும் ஜயித்தாள்' என்று கங்கர் அடிக் கடி என்னைப்பார்த்துச் சொன்னார். புத்ர! ப்ரஸித்தமான உன்னு

டையவிஜயமானது என்னால் புகழப்படும்பொழுது கங்கர் ரோஷத்தோடு ப்ருஹன்னளையினுடையவிஜயத்தை ஸ்தோத்ரம்செய்தார். என்னால் நீ புகழப்படும்காலத்தில் கங்கர் அலியைப்புகழ்ந்தார். (அவ்வாறு) ப்ருஹன்னளையினுடையபுகழ்ச்சிகளால் அப்பொழுது நான் (கங்கரிடத்தில்) அஸூயையை அடைந்தேன். புத்ர! கெட்ட எண்ணமுள்ளவரும் பகைவனிடத்தில் அன்புபாராட்டுகின்றவருமான இவர் என்னால் அடிக்கப்பட்டார்" என்று மறுமொழிகூறினன். இவ்வாறு 'இந்தக்கங்கரென்னும் ஸந்யாஸியானவர் என்னால் அடிக்கப்பட்டார்' என்றுசொல்லிய பிதாவினுடைய அந்தவார்த்தையைக்கேட்டு உத்தரன் மிக்ககோபங்கொண்டு பிதாவைப்பார்த்து, "மன்னரே! உம்மால் அகார்யம்செய்யப்பட்டது. நீர், இவரைக் கோபம்தணியும்படி விரைவில் வேண்டிக்கொள்ளும். கோரமானப்ராம்மணவிஷமானது உம்மை வேரோடெரிக்கவேண்டாம். ஐச்வர்யத்தால்நிறைந்தும் (மேன்மேல்) வ்ருத்திஅடைந்திருக்கின்றதுமான மாத்ஸ்யர்களுடைய குலமானது சிறிதும் மிச்சமின்றி நாசமடையாமலிருப்பதற்குள்ளாக இவர் மனத்தெளிவுள்ளவராகச் செய்யப்படவேண்டும். இவருடைய கால்களில் தண்டம்போலப் பூமியில்(விழுந்து) நமஸ்கரித்து இருகைகளாலும் (இவருடைய) இருகால்களையும் பிடித்துக்கொண்டு இப்பொழுது இவர் மனந்தெளிந்தவராகச் செய்யப்படவேண்டும். இந்தக்கங்கரானவர் வலக்கையினால் உம்மைத்தொட்டு, '(எல்லாக்குற்றமும்) என்னால் பொறுத்துக்கொள்ளப்பட்டது. சபதம்செய்கிறேன்' என்று சொல்லுகிறவரையில் இந்தக்கங்கரை க்ஷமிக்கும்படி கேட்டுக்கொள்ளவேண்டும்" என்றுகூறினன்.

புத்ரனுடையவார்த்தையைக்கேட்டு அந்தவிராடன் பயத்தினால் மனக்குழப்பமுற்று ப்ராம்மணதேஜஸினால் மறைக்கப்பட்டிருக்கின்ற குந்திபுத்ரரை (தன்குற்றத்தை)ப் பொறுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொண்டான். (அவ்வாறு) பொறுத்துக்கொள்ளும்படி வேண்டுகின்ற விராடராஜனைப்பார்த்துத் தர்மநந்தனர், "வேந்தரே! என்னால் நெடுங்காலமாகப் பொறுமை கைப்பற்றப்பட்டிருக்கின்றது. எனக்குக் கோபமேஇல்லை. ராஜரே! மனிதரிற்சிறந்தவரே! என்னுடைய அந்தரக்தமானது பூமியில்விழுந்தால் ராஜ்யத்துடன்கூட நீர் இந்த க்ஷணத்தில் நாசமடைவீர். ராஜேந்த்ரரே! (ஒருவனுக்கும்) தீங்கு செய்யாதவனை என்னை எவன் துன்பஞ்செய்வனே அவனையும் நான்கெடுக்கிறதில்லை. மஹாராஜரே! அச்செய்கைக்குத்தக்க க்ரூரமானபலனை அவன் சீக்ரமாக அடைவான்" என்று மறுமொழிகூறினர்.

ரக்தமானது முழுதும் ஓய்ந்தபிறகு ப்ருஹன்னளை (அவ்விடம்) வந்து மஹாராஜனையும் கங்கரையும்வணங்கி அருகில்நின்றாள். பிறகு, விராட ராஜன் குருகுலத்தில் உதித்தவரான தர்மபுத்ரரை (க்குற்றத்தைப்) பொறுத்துக்கொள்ளும்படிசெய்துவிட்டு உத்தமமான அரண்மனை சென்று யுத்தத்தினின்றுவந்திருக்கின்றஉத்தரனை இறுகத்தழுவி ஸவ்யஸாசியானவன் கேட்டுக்கொண்டிருக்கும்பொழுது (பின்வருமாறு) புகழலானான்.

“ ஸுதேஷ்ணைக்கு ஆனந்தத்தை வளரச்செய்கின்றவனே! உன்னால் நான் புத்ரனுள்ளவனாகிறேன். உனக்குநிகரானபுத்ரன் எனக்கு இருந்ததுமில்லை; இனி உண்டாகப்போகிறதுமில்லை. அப்பனே! எவன் (ஒரேஸமயத்தில்) ஆயிரம்லக்ஷ்யங்களை அடிப்பதற்காக (ரணகளத்தில்) ஸஞ்சரித்துக்கொண்டு ஒருபாணங்கூட லக்ஷ்யம்தவறாமல் எய்வனோ அப்படிப்பட்டகர்ணனோடு உனக்கு எவ்விதம் போர்நடந்தது. அப்பனே! யுத்தத்தில் எவரைப்பார்த்தவுடன் (சத்ருக்கள்) வீர்யத்தையும் பராக்ரமத்தையும் இழந்து வாட்டமடைகிறார்களோ அப்படிப்பட்டக்ருபரோடு உனக்கு எவ்வாறு யுத்தம்நடந்தது? புருஷரிற்சிறந்தவனே! பெருமையுள்ளதும் ஸர்வோத்தமமுமான எவருடைய அவ்விதஒழுக்கமானது உலகத்தில் ப்ரஸித்திபெற்றிருக்கிறதோ, எவரால் பிதாவின்நிமித்தம் கோரமும் ஸர்வோத்தமமுமான ப்ரம்மசர்யம் அனுஷ்டிக்கப்பட்டதோ, எவர் சிறந்தப்ரதாபமுள்ளவரும் ஜமதக்னியின்குமாரருமான பரசுராமரோடு போர்க்களத்தில் போர்புரிந்தாரோ அப்படிப்பட்ட பீஷ்மர், யுத்தத்தில் (ஒருவராலும்) ஜயிக்கப்படாதவர்; பராக்ரமமுள்ளவர்; (ஒருவராலும்) அவமதிக்கமுடியாதவர்; கற்றறிந்தவர்; சூரர்; இந்த்ரியங்களைவென்றவர்; (லக்ஷ்யங்களை) உறுதியாகஅடிப்பவர்; (கார்யங்களை) விரைவாகச்செய்பவர்; எல்லாக்கார்யங்களிலும் ப்ரஸித்திபெற்றவர். ஐயனே! குருகுலத்தில்பிறந்தவரும் பிராயமுதிர்ந்தவருமான அந்தப்பீஷ்மரோடு உனக்கு ரணகளத்தில் எவ்வாறு போர்நடந்தது? இவையெல்லாவற்றையும் எனக்கு நீ உரைப்பாயாக. அப்பனே! ராஜபுத்ரனை எவன் சிறந்தஅம்புகளால் மலையையும் பிளப்பனோ அப்படிப்பட்டதுர்யோதனனோடு உனக்கு எவ்வாறு யுத்தம்உண்டாகியது? அப்பனே! வ்ருஷ்ணிவீரர்களுக்கும் பாஞ்சாலர்களுக்கும் ஆசார்யரும், கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் மற்றஎல்லாக்ஷத்ரியர்களுக்கும் குருவும், எல்லாச்சஸ்த்ரதாரிகளுள்ளுஞ்சிறந்தவரும் எல்லாஉலகங்களிலும் ப்ரஸித்திபெற்றவரும் ப்ரபுவுமான த்ரோணரோடு உனக்கு

எவ்வாறு போர்நடந்தது? அப்பனே! ஆசார்யபுத்ரரும் சூரரும் போரில் த்ரோணாசார்யருக்குக் குறையாதவரும் வீரருமான அச்வத்தாமாவோடு உனக்கு யுத்தம் எவ்வாறு நடந்தது? த்ருதராஷ்ட்ர புத்ரர்களனைவரும் மஹாவீர்யமுடையவர்கள்; மஹாரதர்கள். ஐயனே! அந்தந்தவீரர்களோடு உனக்கு எவ்வாறு போர்உண்டாகியது?" என்றுவினவினான்.

உத்தரன், "(மஹாராஜரே!) என்னால் பசுக்கள் ஜயிக்கப்படவில்லை. என்னால் கௌரவர்களும் ஜயிக்கப்படவில்லை. அக்கார்யமனைத்தும் ஒருதேவகுமாரரால் செய்யப்பட்டது. யுத்தகளத்தில் பீஷ்மரையும் த்ரோணரையும் தலைமையாகக்கொண்ட கௌரவர்களைக்கண்டு பயந்து வ்யஸனமுற்று ஓடுகின்றஎன்னை அந்தத்தேவகுமாரர்தாம் தடுத்தார். வஜ்ராயுதத்தைக்கையில்கொண்ட இந்த்ரனுக்கொப்பானவரும் யௌவனமுள்ளவருமான அவர்தாம் தேரினிடையிலிருந்துகொண்டு (கௌரவர்களோடுபோர்புரிந்தார்.) உமதுபசுக்களும் அவரால் மீட்கப்பட்டன. அந்தக்கௌரவர்களும் அவரால் ஜயிக்கப்பட்டார்கள். ஐயா! அவையெல்லாம் அந்தவீரருடைய செய்கையே. அவை என்னால் செய்யப்பட்டனவல்ல. வீர்யமுடையவரான அந்தத்தேவகுமாரர்தாம் பாணங்களால் க்ருபரையும் த்ரோணரையும் த்ரோணபுத்ரரையும் ஸூதபுத்ரனானகர்ணனையும் பீஷ்மரையும் (யுத்தத்தினின்று) புறங்காட்டி ஓடச்செய்தார். மஹாபலசாலியும் ராஜபுத்ரனும் மதங்கொண்டயானைபோன்றவனுமான துர்யோதனனையும் யுத்தத்தில் தோல்விஅடையச்செய்து பயமடைந்த அவனைப்பார்த்து, '(துர்யோதன!) உனக்கு ஹஸ்தினாபட்டணத்திலும் ஒருவிதமான ரக்ஷணத்தையும் நான் காணவில்லை. (யுத்தத்தினின்று) ஓடுகின்றஉன்னால் ஹஸ்தினாபட்டணத்தில் போகங்கள் அனுபவிக்கமுடியா. ஓ! கௌரவநந்தன! போரினால் நீ உயிரைஅடையவிரும்பு. [1]ராஜனே! நீ ஓடினால் விடப்படமாட்டாய்; (ஆகையால்,) போர்செய்வதில் மனத்தையுடையவனாகி நில்; ஜயித்தால் பூமியைஅனுபவிப்பாய்; கொல்லப்பட்டால் ஸ்வர்க்கத்தைஅடைவாய்' என்றுசொன்னார். புருஷச்ரேஷ்டனும் அரசனுமான அந்தத்துர்யோதனன் (யுத்தத்துக்காகத்) திரும்பி, பீஷ்மர் த்ரோணர் க்ருபர்முதலான மந்த்ரிகளால்சூழப்பட்டு வஜ்ராயுதத்துக்கொப்பான பாணங்களைப்ரயோகித்துக்கொண்டு (போர்செய்யஆரம்பித்தான்.) பிறகு, எனக்கு மயிர்க்கூச்சலுண்டாயிற்று. என்னுடைய துடைகளும் அசைவற்றிருந்தன. அரசரே!

---

1 வேறுபாடம்.

ஸிம்மத்தினுடைய கர்வம்போன்ற கர்வத்தையுடையவரும் யௌவனமுள்ளவருமான அந்தத்தேவகுமாரர் போரில் மேகத்துக்கொப்பான (கௌரவர்களுடைய) படையை அம்புகளால் நாசஞ்செய்து அந்தத்தேர்ப்படையையும் தூரத்திவிட்டு ஸர்ப்பம்போலச் சீறிக்கொண்டு அந்தக்கௌரவர்களை (போர்க்களத்தினின்று) ஓட்டினார். கொழுத்தபுலியினால் புறக்கணித்தின்னுகின்ற மான்கள்போல அந்தஒருசூரரால் ஆறுரதிகர்கள் ஜயிக்கப்பட்டார்கள்; ஆயிரக்கணக்கானகுதிரைகளும் யானைகளும் வில்லாளிகளானசூரர்களும் கொல்லப்பட்டார்கள்; கௌரவஸேனையும் தோல்வியடைந்தது. மஹாரதரான தேவகுமாரர் ஸூதபுத்ரனுனகர்ணனை அனேகபாணங்களாலடித்துக் குதிரைகளைக்கொன்று அஸ்த்ரத்தினால் அவனை மோஹிக்கச்செய்து (அவன் அணிந்திருந்த) சிவப்புவஸ்த்ரத்தையும் உரிந்துகொண்டார். சந்தனுவின்குமாரரான பீஷ்மரையோ நான்குஅம்புகளால் பூஜித்தார். அவர் அவரையும் அவருடையகுதிரைகளையும் விரைவாகஅடித்து அவர் அணிந்துகொண்டிருந்த வஸ்த்ரத்தைமாத்ரம் அபஹரிக்கவில்லை. பலசாலியான அவர் துர்யோதனனையும் ஏழுபாணங்களாலடித்தார்; அந்தத்துர்யோதனனையும் அவனுடையகுதிரைகளையும் அடித்து அவன் அணிந்திருந்த மஞ்சள்வஸ்த்ரத்தையும் உரிந்துகொண்டார். பலசாலியான அந்தத்தேவகுமாரர் த்ரோணரையும் க்ருபரையும் ஸோமதத்தனையும் ஜயத்ரதனையும் இந்த்ரன்போலப்ரகாசிக்கின்ற பூரிச்ரவஸையும் மஹாரதனுனசகுனியையும் துச்சாஸனன்முதலானவர்களையும் மும்மூன்றுபாணங்களாலடித்துப் பற்பலவிதமான மிகச்சிறந்த (அவர்களுடைய) வஸ்த்ரங்களையும் அபஹரித்தார். அவர் யுத்தத்தில் ஆசார்யபுத்ரரான அச்வத்தாமாவை அவ்வாறு இரண்டுபாணங்களாலடித்து, பிறகு, விகர்ணனுடையவில்லையும் துணித்து (அவர்களுடைய) நீலமான இரண்டுவஸ்த்ரங்களையும் உரிந்துகொண்டார்" என்றுசொன்னான். விராடன், "(உத்தர!) யுத்தத்தில் கௌரவர்களால் விழுங்கப்பட்ட என்னுடையபுத்ரனைவிடுவித்தவனும் வீரனும் சிறந்தகைகளுள்ளவனும் பெரும்புகழுள்ளவனுமான அந்தத்தேவகுமாரன் எங்கே? பகைவரைஅழிப்பவனுன அவனை நான் பார்க்கவும் பூஜிக்கவும் விரும்புகிறேன். உன்னையும் என்னுடையபசுக்களையும் விடுவித்த அந்தத்தேவகுமாரனுக்கு (என்னுடைய) புத்ரியையும் க்ராமங்களையும் ஸ்வர்ணங்களையும் ப்ரகாசிக்கின்ற அலங்காரங்களையும் லக்ஷம் ஸ்த்ரீகளையும் நான் கொடுக்கப்போகிறேன்" என்றுகூற, உத்தரன், "ஐயா! ப்ரதாபசாலியான (அந்தத்)தேவகுமாரர் மறைந்துவிட்டார்;

இன்றைக்கோ, நாளைக்கோ, அடுத்தநாளோ வெளிப்படுவாரென்று நான் எண்ணுகிறேன்" எனமறுமொழிகூறினான்.

இவ்வாறுசொல்லியதைக்கேட்டவிராடன், வேறுவேஷத்தால் மறைந்துவஸிக்கின்ற குந்திபுத்ரனும் பாண்டுவின்குமாரனுமான அந்த அர்ஜுனனை அறிந்துகொள்ளவில்லை. பிறகு, மஹாத்மாவானவிராடனால் அநுமதிகொடுக்கப்பட்ட குந்திபுத்ரனானதனஞ்சயன் மத்ஸ்ய ராஜகுமாரனான உத்தரனோடு ஆலோசித்து, "(உன்) அருகில்வருகின்ற விராடராஜனை நோக்கி இவ்வாறுசொல்" என்றுசொல்லிவிட்டு விரைவாக [1]மங்களகரமான அந்தப்புரத்தில் ப்ரவேசித்து விராடபுத்ரியான உத்தரைக்கு, தானே வஸ்த்ரங்களையும் ரத்னங்களையும் கொடுத்தான். உத்தரையோ அப்படிப்பட்ட மிகவுயர்ந்த எல்லாவஸ்த்ரங்களையும் ஆபரணங்களையும் பெற்றுக்கொண்டு பரிவாரங்களுடன் ப்ரீதியுள்ளவளானாள்.

எழுபத்துமூன்றுவது அத்யாயம்.

கோக்ரஹணபர்வம். (தொடர்ச்சி.)

(பீமன்முதலியோர் யுதிஷ்டிரரிடம்வந்து அவரை விராடன் பாச்சிகையாலடித்தது தெரிந்து அவனைக் கொல்லயத்தனித்ததும், யுதிஷ்டிரர் அதைத்தடுத்ததும்.)

அந்த அர்ஜுனன், போரினிடையில் பெரிதானகார்யத்தைச் செய்துவிட்டு (விராடநகரம்வந்து) அப்பொழுது ஸந்தோஷத்துடன் விராடனுடைய அரண்மனையிலுள்ள தோழிகளின்பொருட்டு வஸ்த்ரங்களைக்கொடுத்துவிட்டு ப்ருதையின்குமாரரான யுதிஷ்டிரரைப் பார்க்க விரும்பி (அவரிடம்) சென்றான். அந்த அர்ஜுனன், அந்தத்தர்மராஜரைப்பார்த்துவிட்டுப் பிறகு பீமஸேனனைப்பார்த்து, "(பீம!) தர்மராஜர் ஏன் (இப்பொழுது) முகத்தைமூடிக்கொண்டு முன்போல என்னுடன் ஒன்றும் பேசாமலிருக்கிறார்?" என்று வினவினான். அரசரே! அந்தப்பீமஸேனனைப்பார்த்து இவ்வாறுசொல்லி ஸந்தேஹப்படுகின்ற அர்ஜுனன் பீமஸேனன் இவ்விருவரையும்பார்த்து யுதிஷ்டிரராஜர் அப்பொழுது அந்த ரக்தத்தைத்துடைத்துவிட்டு, "பார்த்த! நீ (என்னால்) புகழப்படுங்கால் துராத்மாவானவிராடராஜனால் நான் அடிக்கப்பட்டேன். அதன்பிறகு, நான் அந்தஅடியினு

---

[1] இரட்டித்திருப்பதால் 'பார்த்த:' என்னும்சொல் விடப்பட்டது.

னுண்டான ரக்தபிந்துக்களைப்பார்த்து, 'இவைகள் பூமியில்படவேண்டாம்' என்றுஎண்ணி முகத்தைமூடிக் கோபத்தை அடக்கிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறேன். மங்களங்களுக்குத்தகுந்தவனே! எந்தத்தேசத்தில் நாம் ஸுகமாகவாஸம்செய்தோமோ அந்தத்தேசத்திற்குத் துன்பம்வரவேண்டாம். வீரனுனநீ கோபித்துக்கொண்டு ஸந்தோஷமற்றவனுயிருந்தால் விராடராஜன் ஸுகத்தைஅடையான். பார்த்த! வேறுவேஷத்தினுல் மறைந்திருக்கின்றஉனக்கு யுத்தத்திலிருக்கின்றசௌர்யத்தையும் பலத்தையும் அறியாதவனுன அந்தவிராடனுல் இவ்விதகார்யம் என்னிடத்தில் செய்யப்பட்டது. (அதனுல்) உன்னைப்பார்த்து ஸந்தோஷமற்றவனுனேன்" என்றுகூறினுர். எண்ணமுடியாதமஹிமையையுடையவரும் மஹாபலசாலியும் பொறுமையுள்ளவருமான அந்தயுதிஷ்டிரரால் அந்தஅர்ஜுனன் அவ்விதமாகச்சொல்லப்பட்டபொழுது, அவன் அதிககோபம்கொண்டதைப் பார்த்து, அதிகப்லமும் கோபமுமுள்ளபீமஸேனன், "பார்த்த! ஞானவான்களுள்சிறந்த ப்ருஹஸ்பதியானவர், பொறுமையானது, எப்பொழுதுமே கைக்கொள்ளத்தக்கதன்றென்று சொல்லுகிறுர். பொறுமையுள்ளவன் விஷவீர்யமில்லாதஸர்ப்பம்போல இவ்வுலகில் எல்லோராலும் அவமதிக்கப்படுகிறுன். (ஆதலால்) இப்பொழுதே, விராடனைப் புத்ரபௌத்ரர்களோடும் வம்சத்தோடும் ஸைன்யத்தோடும் விரைவாக நாசம்செய்துவிட்டு, தர்மபுத்ரரை (இந்த) ராஜ்யத்தில் (ராஜாவாக) இப்பொழுதே சீக்ரம் ஏற்படுத்துவோம். இந்தமாத்ஸ்யன் நமக்குப் பகைவன். கீசகனுல்துன்பமடைந்த பாஞ்சாலராஜகுமாரியான க்ருஷ்ணையானவள் இவனுல் உபேக்ஷிக்கப்பட்டாள். ஆதலால், இவன், 'ராஜா' என்கிறபெயரை ஏற்றுக்கொள்வதற்குத் தகுதியுள்ளவனல்லன். அரசரே! பார்த்தனுடையவீர்யத்தினுல் நீர் அரசராவீர். கௌரவர்களுக்குஅரசரும் உத்தமவீரருமான இந்த யுதிஷ்டிரர் மத்ஸ்யதேசத்தில் ராஜாவாகஇருக்கட்டும். ஜலம்நிறைந்த குடத்தைக் கல்லில்போட்டு உடைப்பதுபோல அந்தவிராடனுடைய தேஹத்தை இப்பொழுது நூறுதுண்டாகப் பிளக்கிறேன்" என்று சொன்னுன். அர்ஜுனன், "ராஜரே! உம்முடையபொறுமையினுல் நமக்கு எல்லாத்தீங்குகளும் விளைந்தன. அப்படிப்பட்டமாத்ஸ்யனை ஸைன்யத்துடனும் புத்ரர்களுடனும் ஞாதிகளுடனும் பந்துக்களுடனும் கொன்றுவிட்டு, பிறகு, எல்லாக்கௌரவர்களையும் கொல்வேன்; ஸம்சயமில்லை" என்றுசொன்னுன். பீமஸேனனும் மற்றவர்களும் அவனைப்பார்த்து, 'அப்படியே' என்றுசொன்னுர்கள். மஹாத்மா

வும் . பொறுமையுள்ளவரும் பெருங்கொடையாளியுமான தர்மநந்தனர் கோபங்கொண்ட அந்த அர்ஜுனனையும் பீமனையும்பார்த்து, "மத்ஸ்யராஜன் மனைவியுடன் மன்னிப்புக்கேட்டுக்கொள்வதற்கு வாராமல் போனால், பிறகு, கெட்ட எண்ணமுள்ள இவன் நன்றாகக்கொல்லத் தக்கவனாகட்டும் அர்ஜுன! (இப்பொழுது)இவன் உன்னால்கொல்லத்தக்கவனல்லன். பார்த்த! நாளைக்காலையில் நாம் ஸபையில்ப்ரவேசித்து ராஜவேஷத்தோடு நன்கு அலங்கரித்துக்கொண்டு இந்த அரசன்வீற்றிருக்கத்தக்க ஸிம்மாஸனங்களில் வீற்றிருப்போம். அவ்விடத்தில் வீற்றிருப்பவர்களும் அரசர்களுக்குத்தகுதியான அலங்காரங்களால் விளங்குகின்றவர்களும் ராஜலக்ஷணங்களுள்ளவர்களுமான நம்மை விராடன் கௌரவியாமலிருந்தால், பிறகு, விராடனைப் பந்துக்களோடுகொல்வோம்" என்று சொன்னார். இவ்வாறு தர்மங்களை அறிந்தவர்களும் தர்மத்தில் பற்றுள்ளவர்களுமான பாண்டவர்கள்எல்லோரும் செய்யவேண்டியதைப்பற்றி ஆலோசனைசெய்துகொண்டு அன்றிரவுவஸித்தார்கள். மிகக்களிப்புற்ற அந்தமத்ஸ்யராஜன் புத்ரனோடு ப்ரீதியுள்ளவனாக மிக்கஸந்தோஷமுள்ளமனத்துடன் அன்றிரவு வாஸம்செய்தான்.

கோக்ரஹணபர்வம் முற்றிற்று.

எழுபத்துநான்காவது அத்யாயம்.

வைவாஹிகபர்வம்.

(யுதிஷ்டிரர்முதலியோர் ஸிம்மாஸனமுதலியவற்றில்உட்கார்ந்ததும், விராடன் அது தகாதேன்றதும், அர்ஜுனன் அஃது அவருக்குத்தக்கதுதானேன்றதும்.)

பிறகு, [1]இரண்டாவதுநாளில், நன்றாக வ்ரதத்தை அனுஷ்டித்தவர்களும் பெரும்பாக்யமுள்ளவர்களும் ப்ரகாசிக்கின்றவர்களும் மஹாரதர்களும் அக்நிபோன்றவர்களும் ப்ராதாக்களுமான அந்தஐந்து பாண்டவர்களும், எல்லோரும்ஒன்றுசேர்ந்து ஸ்நானம்செய்து வெண்மையானவஸ்த்ரங்களைத்தரித்து ஸர்வாலங்காரங்களாலும் அலங்கரிக்கப்பட்டவர்களாகி யுதிஷ்டிரரைமுன்னிட்டுக்கொண்டு விராடனுடைய ஸபையில் ப்ரவேசித்து அரசர்களுக்குரியஆஸனங்களில், யாக

1 'மூன்றாவதுநாளில்' என்பது வேறுபாடம்.

வேதிகளில் அக்நிகள்வஸிப்பதுபோல உட்கார்ந்தார்கள். ப்ரபுவே! அவர்கள் அங்குஉட்கார்ந்திருக்கையில், பூபதியான விராடராஜன், அன்றிரவுகழிந்தபிறகு, காலையில்செய்யவேண்டிய கார்யத்தைச்செய்துமுடித்து முறைப்படி பசு ஸ்வர்ணமுதலியவற்றை ப்ராம்மணர்களுக்குக் கொடுத்துவிட்டு உத்தரனோடு ஸபையைவந்துஅடைந்தான். அந்த அரசன் மஹாபலசாலிகளும் ராஜவேஷங்களைத்தரித்து அக்னிபோல ப்ரகாசிக்கின்றவர்களுமான அந்தப்பாண்டவர்களைப்பார்த்து வியப்படைந்தான். மனிதர்களைப் பரிபாலிக்கும் (அந்த) அரசன் புருஷர்களுள்மிகச்சிறந்தவர்களான பாண்டவர்களைக்கண்டு, 'இஃதுஎன்ன! இஃதுஎன்னகார்யம்!' என்று ஆலோசித்துப் பயத்தால்பிடிக்கப்பட்டவன்போல வ்யஸனமடைந்தான். பிறகு, மத்ஸ்யராஜன், தேவர்களுடையகூட்டங்களால் உபாஸிக்கப்பட்டவனும் தேவர்களுக்கு நாதனுமான மஹேந்த்ரனைப்போலிருக்கின்ற கங்கரைப்பார்த்து, "பாச்சிகைஉருட்டுகிறவனுன நீ என்னால் ஸபையிலிருப்பவனுகச் செய்யப்பட்டாய். அப்படிப்பட்டநீ பிறகு, அலங்கரித்துக்கொண்டு, ராஜாஸனத்தில் யாதுகாரணத்தால் உட்கார்ந்தாய்?" என்றுவினவினன். பகைவீரர்களைக்கொல்லுகின்றவனன அர்ஜுனன் விராடராஜனுடைய அந்தவார்த்தையைக்கேட்டு (அவனைப்) பரிஹஸிக்கவிரும்பிப் புன்சிரிப்புடன் (பின்வருமாறு) உரைக்கலானன்.

"அரசரே! ப்ராம்மணர்களுக்கு நன்மையைச்செய்பவரும் சாஸ்த்ரங்களைக்கற்றவரும் த்யாகமுடையவரும் எல்லாலோகங்களாலும் பூஜிக்கப்பட்டவருமான இவர், இந்த்ரனுடைய அர்த்தாஸனத்தில் ஏறுவதற்குத் தகுதியுள்ளவர். இவர், மூர்த்திகரித்திருக்கின்ற தர்மம். இவர், வீர்யசாலிகளுள்சிறந்தவர். இவர், உலகத்தில் புத்தியினால் மேலானவர். இவர், தபஸுகளுக்கெல்லாம் முக்யகதியாயிருப்பவர். இவர், சராசரங்களுடன்கூடின மூவுலகங்களிலுமுள்ள பலவிதமான அஸ்த்ரத்தையும் அறிந்திருக்கிறார். (இவர் அறிந்திருப்பதை) வேறொருவரும் அறியவுமில்லை; ஒருபொழுதும் அறியப்போகிறதுமில்லை; தேவர்களும் அஸுரர்களும் மனுஷ்யர்களும் ராக்ஷஸர்களும் கந்தர்வர்களும் சிறந்தயக்ஷர்களும் கின்னரர்களும் மஹிமைபொருந்தின உரகர்களுமாகிய எவரும்அறியவில்லை. இவர் நீண்ட ஆலோசனையுள்ளவர்; மிக்கதேஜஸுடையவர்; பட்டணத்துஜனங்களுக்கும் தேசவாஸிகளானஜனங்களுக்கும் ப்ரியர்; பாண்டவர்களுள் அதிரதர்; யஜ்ஞத்தையும் தர்மத்தையும் ப்ரதானமாகக்கொண்டவர்; மனத்தை அடக்கினவர்; மஹரிஷிகளுக்கொப்பானவர்; ராஜரிஷி; எல்லாஉல

கங்களிலும் ப்ரஸித்திபெற்றவர்; சிறந்தபலமுள்ளவர்; தைர்யமுள்ளவர்; ஸமர்த்தர்; ஸத்யவாதி; இந்த்ரியங்களைவென்றவர்; தனங்களாலும் (மற்றப் பொருள்)குவியல்களாலும் இந்த்ரனுக்கும் குபேரனுக்கும்ஒப்பானவர். மஹாதேஜஸ்வியான மனுவானவர் எவ்வாறு உலகங்களுக்கு ரக்ஷகரோ அவ்வாறே மஹாதேஜஸ்வியானஇவர் ப்ரஜைகளுக்கு நன்மையையுண்டுபண்ணுகிறவர். இவர், கௌரவர்களுள் சிறந்தவரும் குந்தியின்புத்ரருமான யுதிஷ்டிரர். இவருடையகீர்த்தியானது உதிக்கின்ற ஸூர்யனுடையஒளிபோல உலகத்தில் நிலைபெற்றிருக்கிறது. இவருடைய யசஸின்கிரணங்கள் உதித்திருக்கின்ற ஸூர்யனுடைய தேஜஸின்கிரணங்கள்போல எல்லாத்திக்குகளிலும் பரவுகின்றன. மன்னரே! இவர், குருதேசத்தில்வஸிக்கும்காலத்தில் சிறந்தபலமுள்ள முப்பதினாயிரம்யானைகள் இவரைப்பின்தொடர்ந்தன. வேந்தரே! ரதிகர்களுள்சிறந்தவரான இவரை நல்லகுதிரைகள் பூட்டின முப்பதினாயிரம்ரதங்களும் நூற்றுக்கணக்கும் ஆயிரக்கணக்கும் பதினாயிரக்கணக்குமான குதிரைகளும் அக்காலத்தில் பின்தொடர்ந்துசென்றன. முற்காலத்தில் இவரை மிக்கபரிசுத்தமான ரத்னங்களிழைத்த குண்டலங்களணிந்த எண்ணூறுஸூதர்களும் மாகதர்களும் இந்த்ரனை ரிஷிகள் ஸ்தோத்ரம்செய்வதுபோல ஸ்தோத்ரம் செய்தார்கள். ஓ! அரசரே! இந்தமன்னரை அக்காலத்தில் குபேரனைத் தேவர்கள்அடைவதுபோல எல்லாக்கௌரவர்களும் எப்பொழுதும் கிங்கரர்களாகி அடைந்தார்கள். மஹாராஜரே! இவர் அப்பொழுது தமக்குடன்பட்டவர்களும் உடன்படாதவர்களுமான எல்லா அரசர்களையும் வைச்யர்களைப்போல(த் தமக்குக்) கப்பம்கொடுக்கும்படி செய்தார். நன்கு வ்ரதத்தைஅநுஷ்டித்தவர்களும் மஹாத்மாக்களுமான எண்பத்தெண்ணாயிரம் ஸ்நாதகர்கள் இந்தவேந்தரை அண்டிப் பிழைக்கின்றார்கள். (பகைவர்களை) அவமதிப்பவரான இவர் பிராயமுதிர்ந்தவர்களையும் நாதனற்றவர்களையும்அங்கஹீனர்களையும் நொண்டிகளையும் குள்ளர்களையும் புத்ரர்களைப்போலப் பாதுகாத்தனர்; ப்ரஜைகளை முறைப்படி பாதுகாத்தனர். இந்தஅரசர் தர்மத்திலும் இந்த்ரியநிக்ரஹத்திலும் தானத்திலும் ஸத்யத்திலும் எப்பொழுதும் பற்றுள்ளவர்; மிகுந்தஅருளுடையவர்; ப்ராம்மணர்களுக்கு நன்மையைச்செய்பவர்; யதார்த்தவாதி. மன்னரே! எவருடைய சிறப்புற்ற ஐச்வர்யத்தினாலும் ப்ரபாவத்தினாலும், குருகுலத்திலுதித்தவனும் வீர்யமுடையவனுமான துர்யோதனன் (தன்தம்பியர்களுடைய) கூட்டத்தோடும் கர்ணனோடும் சகுனியோடும் தபிக்கிறானோ அப்படிப்

பட்ட இவருடையகுணங்கள் எண்ணமுடியாதவை. இவர் எப் பொழுதும் தர்மத்தைப் ப்ரதானமாகக்கொண்டவர்; க்ரூரஸ்வபாவமில் லாதவர்; நல்லொழுக்கமுள்ளவர். இப்படிப்பட்ட (சிறந்தகுணங்க ளுடன்) கூடியவரும் ராஜாதிராஜரும் பாண்டுவின்குமாரரும் புருஷ ச்ரேஷ்டருமான இந்தயுதிஷ்டிரராஜர் வேந்தர்களுக்குரிய ஆஸனத் தை ஏன் அடையத்தகுந்தவராகார்!" என்றுசொன்னான்.

எழுபத்தைந்தாவது அத்யாயம்.

வைவாஹிகபர்வம். (தொடர்ச்சி.)

(அர்ஜுனன் விராடனுக்கு வலலன்முதலியோர் பீமன்முதலியோரென்று தும், உத்தரன் பாண்டவர்களை லக்ஷணங்களுடனும் பெயருடனும்தறி ப்பிட்டு அர்ஜுனனுடையபராக்ரமத்தைப்புகழ்ந்ததும், விரா டன் பாண்டவர்களைவணங்கி மனத்தெளிவுறச்செய்ததும்.)

விராடன், "இவர் குருகுலத்திலுதித்தவரும் குந்தீபுத்ரருமான யுதிஷ்டிரராஜரானால் (இவர்களுள்) இவருடையப்ராதாவான அர்ஜு னன் யார்? பலவானான பீமன் யார்? நகுலன் யார்? ஸஹதேவன் யார்? புகழ்பெற்றவளான த்ரௌபதி யார்? இவர்கள் பாச்சிகைகளால் ஜயிக்கப்பட்டது (முதல் இதுவரையில்) இடையில்நடந்தவரலாற்றை நான்கேட்கவில்லை" என்றுகூற, அர்ஜுனன், "ராஜரே! மஹாபாக்ய முள்ளவரே! உம்மிடம் சமையல்காரனாயிருந்த வலலனென்னும் இவன் பயங்கரமானவேகமும் பராக்ரமமுமுள்ள பீமஸேனன். இவன் கந்த மாதனபர்வதத்தில் க்ரோதவசர்களைக்கொன்று த்ரௌபதியின்நிமித் தம் செங்கழுநீர்ப்புஷ்பங்களைக் கொண்டுவந்தான். துராத்மாக்களான கீசகர்களைக்கொன்ற கந்தர்வன் இவனே. இவன் உம்முடையபட்ட ணத்தில் புலிகளையும் கரடிகளையும் யானைகளையுங்கொன்றான். இவன் ஹிடிம்பனையும் பகனையும் கிர்மீரனையும் ஜடாஸுரனையும்கொன்று காடுமுழுதும் பகைவரற்றதும் மங்களகரமுமாகச் செய்தான். பகை வரைவாட்டுபவரே! உம்முடையகுதிரைகளைக் கட்டுகிறவனாயிருந்தவ னும் பசுக்களைரக்ஷிக்கிறவனாயிருந்தவனும், அதிகபலமும் அழகிய வேஷமும் ஆபரணமும் சிறந்தரூபமும் சிறந்தமனமுமுள்ளவர்களும் பற்பலவிதங்களாகவும் ஆயிரக்கணக்காகவுமிருக்கின்ற ரதிகர்களை (அடக்குவதில்) ஸமர்த்தர்களும் பரதகுலத்திலபிறந்தவர்களுள் சிற ந்தவர்களும் மாத்ரீபுத்ரர்களுமான நகுலஸஹதேவர்கள். அரசரே!

கீசகர்கள்கொல்லப்பட்டதற்குக் காரணமானவளும் தாமரையிதழ் போன்ற கண்களையுடையவளும் அழகிய்இடையுடையவளும் அழகிய புன்சிரிப்புள்ளவளுமான இந்தஸைரந்த்ரியானவள் த்ருபதனுக்கு ப்ரியமானபுத்ரியும் த்ருஷ்டத்யும்னனுடைய இளையஸஹோதரியும் அக்னிகுண்டத்திலிருந்து உண்டானவளுமான [1]த்ரௌபதியென்று எண்ணும்" என்றுசொன்னான்.

பீமன், "(விராடராஜரே!) இவன் வில்லாளிகளுள் மிகமேன்மை பெற்றவனும் குந்திபுத்ரனுமான தனஞ்சயன். பூமண்டலத்தில் (இவனைப்போல) அஸ்த்ரங்களை அறிந்த ஒருவன் கிடைப்பது அரிது. மன்னரே! (அக்நிக்குக்கொடுக்க) ப்ரியமில்லாதவனான அந்த இந்த்ரனுடைய காண்டவவனமும் நாகங்களோடுகூட நாகவனமும் இவனால் எரிக்கப்பட்டன. (ஒருவராலும்) ஜயிக்கமுடியாதஇவனால் மழையானது அம்புமழையினால் தடுக்கப்பட்டது; பூமண்டலத்திலுள்ள எல்லா அரசர்களும் கப்பங்கொடுக்கும்படி செய்யப்பட்டார்கள். வேந்தரே! இவன் உம்முடைய அரண்மனையில் ஸ்த்ரீவேஷத்தைத் தரித்திருந்தான். ஜயிப்பவர்களுள் உத்தமனான இந்த அர்ஜுனனைத்தான் (ஜனங்கள்) ப்ருஹன்னளையென்று சொன்னார்கள். அரசரே! உம்முடையஅரண்மனையில் அஜ்ஞாதவாஸகாலத்தில் சிசுக்கள் கர்ப்பத்தில் வஸிப்பதுபோல நாங்களெல்லோரும் ஒருவருக்கும்தெரியாமல் ஸுகமாக வஸித்துவந்தோம்" என்றுகூறினான். அர்ஜுனனால் வீரர்களான அந்த ஐந்துபாண்டவர்களும் சொல்லப்பட்டவுடன் உத்தரனும் மறுபடியும் அந்தப்பார்த்தர்களை (விராடனுக்குக்) காண்பிக்க ஆரம்பித்தான்.

உத்தரன், "அரசரே! ஸ்வர்ணம்போல் சுத்தமாயும் மஞ்சள் நிறமாயுமிருக்கின்ற சரீரமுள்ளவரும் பெரியஸிம்மம்போல நன்கு வ்ருத்தியடைந்தவரும் நீண்டமூக்கையுடையவரும் நீண்டும் சிவந்தும் அகன்றுமிருக்கின்றகண்களையுடையவருமான இவர், குருதேசங்களுக்கு ராஜாவானயுதிஷ்டிரர். மதயானைபோல நடப்பவரும் புடம் போடப்பட்ட தங்கம்போலச் சுத்தமான மஞ்சள்நிறமுள்ளவரும் பருத்தும் அகன்றுமிருக்கின்ற தோள்களையுடையவரும் பருத்தும் நீண்டுமிருக்கின்ற கைகளுள்ளவருமான இவரோ பீமஸேனர். இவரைப் பாருங்கள்; பாருங்கள். இவருக்குப்பக்கத்தில் நிற்பவரும் பெரிதான வில்லைத்தாங்கியவரும் கறுத்தநிறமுடையவரும் யௌவனமுள்ளவரும் கஜயூதபதிபோன்றவரும் ஸிம்மத்தினுடைய தோள்கள்போல

[1] இரட்டித்திருப்பதால் 'த்ரௌபதீ' என்னும் ஒருசொல்விடப்பட்டது.

உன்னதமான தோள்களுள்ளவரும் கஜராஜன்போலச் செல்லுகின்றவரும் தாமரைமலர்போல அகன்றகண்களையுடையவருமான இவர் வீரரான அர்ஜுனர். ராஜாவினுடைய ஸமீபத்திலிருப்பவர்களும் புருஷச்ரேஷ்டர்களும் விஷ்ணுவுக்கும் மஹேந்த்ரனுக்குமொப்பானவர்களுமான இவ்விருவர்களும் (மாத்ரீகுமாரர்களான) இரட்டையர்கள். ரூபத்திலும் பலத்திலும் சீலத்திலும் இவர்களுக்கு நிகரானவன் அகண்டமான பூமண்டலத்திலுமில்லை. ஸ்வர்ணம்போலச் சிறந்த மேனியையுடையவளும் மூர்த்திகரித்திருக்கின்ற பார்வதிபோல ஒளிபொருந்தியவளும் நீலோத்பலத்தின்காந்திபோன்ற காந்தியுள்ளவளும் தேவர்களால் (ஆராதிக்கத்தக்க) தேவதைபோன்றவளும் மனிதவடிவத்துடன் வந்தலக்ஷ்மிபோன்றவளும் இவ்விருவர்க்கும்பக்கத்தில்நிற்கின்றவளுமான இவள் க்ருஷ்ணை" என்றுசொன்னான். விராடகுமாரன் இவ்விதம் குந்தியின்புத்ரர்களான அந்த ஐந்துபாண்டவர்களையும் அரசனுக்குத் தெரிவித்தபிறகு, அர்ஜுனனுடைய பராக்ரமத்தைத்தெரிவிக்கலானான்.

"(அரசரே!) இந்த அர்ஜுனர் மான்களினிடையில் ஒருஸிம்மம்போல அந்தப்பகைவரினிடையில் (பலத்தில்) சிறந்தவர்களையும் கீழானவர்களையும் நாசம்செய்துகொண்டு தேராளிகளுடைய கூட்டங்களில் ஸஞ்சாரம்செய்தார். இவரால் அப்பொழுது பெரியமேகம்போன்றவைகளும் பொன்னாலாகியகச்சைகளுள்ளவைகளுமான யானைகள் யுத்தத்தில் அடிக்கப்பட்டு இரண்டுதந்தங்களாலும் பூமியை (முட்டிக்கொண்டு) விழுந்தன. இவரால் பசுக்கள் மீட்கப்பட்டன; கௌரவர்கள் யுத்தத்தில் ஜயிக்கப்பட்டார்கள். இவருடையசங்கத்தின் ஒலியினால் என்னுடையஇருகாதுகளும் செவிடுபட்டன. இவருடைய வில்லின்ஒலியையும் கூடஸஞ்சரிக்கின்றபூதங்களுடன்சேர்ந்து கர்ஜிக்கின்ற கொடியிலுள்ளவானரத்தையும் நினைத்து எனக்கு மயிர்க்கூச்சமுண்டாகிறது. யுத்தத்தில் கோரமான அம்புகளைஎடுப்பவரும் அம்புகளின்கூட்டங்களை விடுப்பவரும் வில்லையிழுப்பவருமான இவரை நான் பார்க்கவும் கூடவில்லை. யுத்தத்தில் புங்கானுபுங்கமாக இவருடையவில்லினின்று விடப்பட்டவைகளும் (பகைவர்களுடைய) ரக்தத்தைப் புஜிக்கின்றவைகளுமான பாணங்களும் நாராசங்களும் குறிதப்பிவிழுந்ததில்லை. குதிரைவீரர்களுடையனவும் மற்றவீரர்களுடையனவுமான சரீரங்கள், இவருடைய கூரியபாணங்களால் நன்றாக அறுக்கப்பட்டுத் தலையும் கையும் துடையும் மார்பும்அற்றனவாகக் காணப்பட்டன. இவரால் அந்தப்போர்க்களத்தில் ரக்தமாகிறஜலத்

துடன் பெருகுகின்றதும் பயங்கரமான ஸ்வரூபமுள்ளதுமான ஒரு நதியானது உண்டுபண்ணப்பட்டது. அதைநினைத்து என்மனமானது இன்னும்கூடப் பெருங்காற்றினுல் அசைக்கப்பட்ட வாழைமரம்போல மிகவும் நடுங்குகிறது. மன்னரே! பயங்கரமான செய்கையுள்ள இந்த வீரரால் பீஷ்மரையும் த்ரோணரையும் முதன்மையாகக்கொண்டவர்களும் துர்யோதனனுடன்கூடினவர்களுமான ரதிகர்கள் ஜயிக்கப்பட்டார்கள். பயந்துஓடுகின்ற என்னை இந்தத் தேவகுமாரர் தடுத்தார். இவருடைய பாஹுபலத்தினுல் நான் உயிரோடு மீண்டும் பட்டணத்துக்கு வந்தேன்" என்றுகூறினுன்.

ப்ரதாபசாலியான மத்ஸ்யராஜன் அந்தஉத்தரனுடைய அவ்வித வார்த்தையைக்கேட்டு, பிறகு, தனஞ்சயனையும் (மற்ற) எல்லாப்பாண்டவர்களையும் ஆலிங்கனஞ்செய்து தர்மராஜரை நமஸ்கரித்து (அவரைத்தன்) ராஜ்யத்தில் ராஜாவாகப் பட்டாபிஷேகம்செய்தான். ஸேனுபதியானவிராடன், அவர்களைப்பார்ப்பதில் (போதுமென்னும்) த்ருப்தி அடையவில்லை; பிறகு, மிக்கஅன்புள்ளவனுகி யுதிஷ்டிரராஜரைப் பார்த்து, "தெய்வாதீனமாக நீங்களெல்லோரும் வனத்தினின்று க்ஷேமமாக (இந்தராஜ்யம்) வந்துசேர்ந்தீர்கள்; கெட்டஎண்ணமுள்ள துர்யோதனுதிகளால் அறியப்படாமல் பாக்யவிசேஷத்தினுல் அஜ்ஞாதவாஸகஷ்டத்தை விலக்கினீர்கள். இந்தராஜ்யமும் மற்றுமுள்ள பொருளனைத்தும் உங்களுடையவை. இவை உங்களுக்குக் கொடுக்கப்பட்டுவிட்டன. [1]அரசர்களே! உங்களாலும் என்னுலும் இந்த ராஜ்யமானது பேதமின்றி அனுபவிக்கத்தக்கது. ஸந்தேஹம்வேண்டாம்" என்றுகூறினுன்.

எழுபத்தாறுவது அத்யாயம்.

வைவாஹிகபர்வம். (தொடர்ச்சி.)

(உத்தரன் உத்தரையைக்கொடுத்துப் பாண்டவர்களைமனத்தெளிவடையச் செய்யும்படி விராடனுக்குச்சொல்லியதும், விராடன் உத்தரையுடன் பாண்டவர்களை நமஸ்கரித்துக் குற்றங்களைப்பொறுக்கவேண்டியதும், யுதிஷ்டிரர் அவனுக்கு அபயமளித்ததும்.)

நல்லஎண்ணமுடையவனுன விராடராஜனுடைய வார்த்தையைக்கேட்டு [2]உத்தரன் (பிதாவைப்பார்த்துப்) பின்வருமாறு வசனிக்கலானுன்.

---

1 இங்கு அதிகபாடமான அரைச்லோகம்விடப்பட்டது.
2 இங்கு இரண்டுசொற்கள் விடப்பட்டன.

"பாண்டுபுத்ரரான யுதிஷ்டிரருடைய மனக்கலக்கத்தைத் தெளியச்செய்வதற்கு இதுதான் தகுந்தஸமயமென்று நான் எண்ணுகிறேன். இந்தயுதிஷ்டிரர் ராஜாதிராஜர்களுக்கும் தலைவர்; அதிகதேஜஸையுடையவர்; அதிகபலமுள்ளவர்; சூரர்; ப்ரபு. பகைவர்களை அழிப்பவரே! என்னுடையஸஹோதரியான உத்தரையைப் பார்த்தருக்கு நமஸ்காரஞ்செய்து கொடுப்போம். அதனால், 'அவர்கள் ஸந்துஷ்டர்களாகட்டும். மன்னரே! நாமும் எல்லோரும் மந்த்ரிகளுடன் குந்தீபுத்ரரான யுதிஷ்டிரரை மனத்தெளிவடையும்படிசெய்து ஸ்தோத்ரம் செய்வோம். நாம் (வேறு) எதைச்செய்யக்கடவோம். அரசரே! போரில் (பகைவனால்) பிடிக்கப்பட்டநீர் அவரால் விடுவிக்கப்பட்டீர். இவர்களுடைய பாஹுவீர்யத்தினால் நீர் பசுக்களைமீட்டீர். மிக்க வலிமையுடையவர்களான கௌரவர்களும் யுத்தத்தில் (இவர்களுடைய) பாஹுவீர்யத்தால் ஜயிக்கப்பட்டார்கள். குந்திபுத்ரரான இந்தயுதிஷ்டிரர் கீழ்ச்சொல்லப்பட்ட கார்யம்அனைத்தையும் செய்தார். பாண்டவர்கள் அர்ச்சிக்கத்தக்கவர்கள்; பூஜிக்கத்தக்கவர்கள்; ஸம்மானம்பெறத்தக்கவர்கள்; எதிர்கொண்டு அழைக்கத்தக்கவர்கள்; பூஜையை(ஏற்றுக்கொள்ளத்) தகுந்தவர்கள்; அபிவாதனம் செய்யத் தக்கவர்கள். (இவற்றிற்கு) இதுஸமயமென்று என்னுடையஎண்ணம். பூஜிக்கத்தக்கவர்களும் மஹாபாக்யசாலிகளுமான பாண்டவர்கள் பூஜிக்கப்படலாம். ஸர்ப்பங்களுக்கொப்பானஇவர்கள் கோபம் கொண்டால் மிச்சம்வைக்கமாட்டார்கள். ஆதலால், சீக்ரம் குந்திபுத்ரரான யுதிஷ்டிரரைச் சரணமடைவோம். நான் சிரஸ்நானம்செய்தவளான [1]உத்தரையைமுன்னிட்டுக்கொண்டு அவ்விடம்(சென்று) இருகால்களையும்குவித்துக்கொண்டு மஹாத்மாக்களான (மற்றப்) பார்த்தர்களோடுகூடின யுதிஷ்டிரரை மனக்கலக்கமற்றவராகச்செய்கிறேன். நான் இவர்களுடைய இவ்விதமானமுழுபலத்தையும்ஆண்மையையும் உயர்குடிப்பிறப்பையும் பல்குனருடையபராக்ரமத்தையும்அறிவேன்" என்றுசொன்னான். சத்ருக்களை அழிப்பவனான விராடன் உத்தரனிடத்தினின்று பாண்டவர்களுடைய ப்ரதாபத்தைக்கேட்டு உத்தரனையும் நன்றாகப்பார்த்து அந்தஸமயத்துக்குத்தக்கபடி ஆலோசித்தான். பிறகு, விராடன் மந்த்ரிகளோடும் புத்ரர்களோடும் பந்துக்களோடும் சிரஸ்நானம்செய்தவளான உத்தரையைமுன்னிட்டு அஞ்சலிசெய்து கொண்டு பாண்டவருக்கு ஸமீபத்தில்வந்து விரைவாகப் பூமியில் விழுந்து (நமஸ்கரித்து), "தர்மபுத்ரரான யுதிஷ்டிரமஹாராஜர் மனத்

---

1 வேறுபாடம்.

தெளிவு அடையவேண்டும்; ரூபத்தையும் வேஷத்தையும் மறைத்துக் கொண்டிருந்ததினால் புற்களால்மூடப்பட்ட அக்னிபோல என்னால் காணப்படவில்லை. நான் புத்ரர்களோடும் பரிசாரகர்களோடும் முடியினால் (உம்மைச்) சரணமடைகிறேன். அறியாதவர்களானஎங்களால் அரசரான (நீர்) அவமதித்து நிந்திக்கப்பட்டீரென்பதனைத்தும் அற்பனிடத்தில்செய்வதுபோல அஜ்ஞானத்தினால் (உம்மிடத்தில்) செய்யப்பட்டது. தர்மத்தைவிரும்புகிறவரே! தர்மத்தை அறிந்தவரான நீர் அவையனைத்தையும் பொறுத்துக்கொள்ளவேண்டும். வேந்தரே! ஸைன்யத்துடனும் பொக்கசத்துடனும்கூடின என்னுடைய ராஜ்யத்தையும் பட்டணத்தையும் அரசாட்சியையும் உமக்குக்கொடுக்கிறேன். அரசரே! உமக்கு ஸ்வாதீனப்பட்டவனுயிருக்கிறேன். நாங்களெல்லோரும் மந்த்ரிகளோடு உம்மைச் சரணமடைந்தோம்" என்றுகூறினான். பரலோகத்தைக்கருதிய தர்மராஜர், பந்துவர்க்கங்களோடு பூமியில்விழுந்திருக்கும் அந்தவிராடராஜனைப்பார்த்துக் கோபத்தையும் சோகத்தையும் மாத்ஸர்யத்தையும்விட்டு (பின்வருமாறு) சொல்லலானார்.

"அரசரே! என்னிடத்திலிருந்து உமக்குப் பயம்இல்லை. உம்முடைய மனோபாவத்தைஆலோசித்து நான் மிக்கஸந்தோஷமுள்ளவனாக இருக்கிறேன். உம்மாலும் தகுந்தவர்களும் பண்டிதர்களும் ப்ராம்மணர்களுமான மந்த்ரிகளாலும் இந்தஸமயத்தில் இந்தக்காரியம் நன்குசெய்யப்பட்டது. ராஜச்ரேஷ்டரே! நன்கு அலங்கரிக்கப்பட்ட இந்தப்பெண்ணைப்பார்த்தும் நான் மிகுந்தஸந்தோஷமுள்ளவனுயிருக்கிறேன். சிறந்தகைகளுள்ளவரே! மன்னரே! நீர் என்னிடத்தில் (இவ்வாறு) சொல்லுவதினால் இவை(எல்லாம்) என்னால் பொறுத்துக்கொள்ளப்பட்டன. வேந்தரே! உம்மிடத்தில் ஒருவிதமானகுற்றத்தையும் நான் காணவேயில்லை" என்றுசொன்னார். பிறகு, மஹாத்மாவானவிராடன் அதிகஸந்தோஷமடைந்து யுதிஷ்டிரராஜருடன்சேர்ந்து நிச்சயம்செய்துகொண்டு, செங்கோலையும் பொக்கசத்தையும் நகரத்தையும் ராஜ்யமனைத்தையும் அவருக்குக் கொடுத்தான்.

எழுபத்தேழாவது அத்யாயம்.

வைவாஹிகபர்வம். (தொடர்ச்சி.)

(விராடன் அர்ஜுனனை உத்தரையை மனைவியாகஅடையும்படிவேண்டினதும், அர்ஜுனன் உத்தரையை மருமகளாக்கிக்கொள்ள அங்கீகரித்ததும், துர்யோதனன் மறுபடியும் வனவாஸஞ்செய்யும்படி யுதிஷ்டிரருக்குத் தூதனுப்பியதும், யுதிஷ்டிரர் பீஷ்மரிடம் தெளிந்துகொள்ளும்படி மறுமொழியனுப்பியதும், பீஷ்மர் பாண்டவர்களின் ப்ரதிஜ்ஞாகாலம் நிறைவேறியதென்றதும்.)

விராடன், "யுதிஷ்டிரரே! நான் உம்மிடத்தில் இப்பொழுது சொல்லப்போகிறவிஷயத்தில் நீர் ஸந்தேஹப்படவேண்டாம். நகரங்களும் ஜனங்களும் ஸ்த்ரீகளுமுள்ள இந்தராஜ்யத்தை உங்களுக்கு நான் கொடுக்கப்போகிறேன். (உங்களால் அனுபவிக்கப்பட்டதின்) மிச்சத்தையே நான் அனுபவிப்பேன். அரசரே! நான் மிக்கபிராயம் சென்றவன்; நெடுங்காலம் போகங்களை ஸுகமாக அனுபவித்தவன். உங்களுக்கு ராஜ்யத்தைக்கொடுத்துவிட்டு நான் கானகம்செல்லப்போகிறேன் ஸவ்யஸாசியானதனஞ்சயன் உத்தரையை (மனைவியாக) ஏற்றுக்கொள்ளட்டும். புருஷச்ரேஷ்டனை இவன்தான் அவளுக்குத் தகுந்தபர்த்தா" என்றுகூறினன். இவ்வாறுசொல்லக்கேட்ட தர்மராஜர், குந்திபுத்ரனை தனஞ்சயனைப் பார்த்தார். அர்ஜுனனும் (தன்னை யுதிஷ்டிரர்)பார்த்த அபிப்ராயத்தைஅறிந்து மத்ஸ்யராஜனைப் பார்த்து, "(ராஜரே!) நாங்கள் வனத்திடையினின்று (இங்கு)வந்திருக்கின்றோம்; உம்முடையராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளோம். ஆனல், துர்யோதனுதிகளான அரசர்களுடையராஜ்யத்தைக் கைப்பற்றிக்கொள்ளப்போகிறோம். அரசரே! உம்முடையபெண்ணை மருமகளாக நான் அங்கீகரிக்கிறேன். மத்ஸ்யராஜவம்சத்திலும் பரதவம்சத்திலும் தோன்றினவர்களான நம்மிருவருக்கும் ஸம்பந்தமானது தகுந்ததன்றோ" என்றுசொன்னன். விராடன், "பாண்டவச்ரேஷ்ட! என்னால்கொடுக்கப்பட்ட என்னுடைய இந்தப்பெண்ணை நீ ஏன் பார்யையாக ஏற்றுக்கொள்வதற்கு விரும்பவில்லை?" என்று வினவ, அர்ஜுனன், "(அரசரே!) நான் ரஹஸ்யமாகவும் வெளிப்படையாகவும் உம்முடையபெண்ணைப்பார்த்துக்கொண்டு எப்பொழுதும் அந்தப்புரத்தில் வஸித்துவந்தேன். அவள் என்னிடத்தில் பிதாவினிடத்தில்போல விச்வாஸம்வைத்திருக்கிறாள். நான் (அவளுடைய) ப்ரீதிக்கும் நன்குமதிப்புக்கும் பாத்ரனுயிருப்பவன். நாட்யத்திலும்

பாடுவதிலும் வாத்யம்வாசிப்பதிலும் என்னை எப்பொழுதும் உம்முடையகுமாரியானவள் ஆசார்யனைப்போல எண்ணுகிறாள். மன்னரே! தோழியான அவளுடன்கூட ஒருவர்ஷம் வாஸம்செய்திருக்கிறேன். ப்ரபுவே! ஆதலால், உமக்கும் உலகத்தாருக்கும் ஸந்தேஹிக்கவேண்டாதவிஷயத்தில் அதிகஸந்தேஹம்உண்டாகும். அரசரே! ஆதலால், என்புத்ரனுக்காக (உம்முடைய குமாரியைப்பற்றி) உம்மைக்கேட்டுக்கொள்ளுகிறேன். (அப்படிச்செய்வதால் என்னை) சுத்தனாகவும் ஜிதேந்த்ரியனாகவும் எண்ணுகிறேன். என்றால் அந்தஉத்தரைக்கும் சுத்தியானது ஏற்படுத்தப்பட்டதாகும். உமதுபெண்ணை நான் மருமகளாக ஏற்றுக்கொண்டால் அவளிடத்திலும் என்னிடத்திலும் (என்)புத்ரனிடத்திலும் (ஜனங்களுக்கு) ஸந்தேஹம்உண்டாகாதென்று எண்ணுகிறேன். அதனால், சுத்தியும் உண்டாகும். பகைவரைவாட்டுபவரே! நான் லோகாபவாதத்தினின்றும் கபடமான ஆசாரத்தினின்றும் பயந்தவன். அரசரே! (ஆகையால்) உம்முடையகுமாரியான உத்தரையை நான் மருமகளாக ஏற்றுக்கொள்ளுகிறேன். மன்னவரே! வாஸுதேவருக்கு ஸஹோதரிபுத்ரனும் ஸாக்ஷாத் தேவகுமாரன்போன்றவனும் சக்ரபாணியான ஸ்ரீவாஸுதேவருடைய அன்புக்கு விஷயமாயிருப்பவனும் பலசாலியும் அஸ்த்ரங்களில் மிகுந்ததேர்ச்சியுடையவனும் சிறந்தகைகளுள்ளவனும் எனக்குப்புத்ரனுமான அபிமன்யுவானவன் உமக்குத் தகுந்தமருமகன். உம்முடையபெண்ணுக்கும் தகுந்த கணவன்" என்று மறுமொழிகூறினான். விராடன், "கௌரவர்களுள் சிறப்புற்றவனும் குந்தீபுத்ரனுமான தனஞ்சயனிடத்தில் இது பொருத்தமாயிருக்கிறது. பாண்டவன் எப்பொழுதுமே தர்மத்தில் நிலைபெற்றவன்; அறியவேண்டிய விஷயத்தை அறிந்தவன். பார்த்த! நீ செய்யத்தகுந்ததென்று எண்ணுகிறதை உடனே நீசெய்யலாம். அர்ஜுனனை ஸம்பந்தியாகஅடைந்த எனக்கு எல்லாவிருப்பங்களும் நிறைவேறிவிட்டன" என்றுகூறினான்.

அரசரிற்சிறந்தவிராடன் இவ்வாறு சொல்லும்பொழுது, குந்தீபுத்ரரான யுதிஷ்டிரர், அர்ஜுனனுக்கும் மத்ஸ்யராஜனுக்கும் ஏற்படும் ஸம்பந்தத்தைப்பற்றி அந்தஸமயத்தில் அனுமதிகொடுத்தார். பரதகுலத்தில் உதித்தவரே! குந்திபுத்ரனான அர்ஜுனனும் விராடராஜனும் எல்லாமித்ரர்களுக்கும் வாஸுதேவருக்கும் தூதர்களை அனுப்பினார்கள். பகைவரைவாட்டுபவனான அந்தப்பல்குனன் அப்பொழுது (உத்தரையைத்தனக்கு) மருமகளாக ஏற்றுக்கொண்டு தன்னுடைய வ்ரதக்கைவெளிப்படுத்தி உலகத்தாருக்கு (த் தன்னுடைய) சீலத்தை

யும் சுத்தியையும் நல்லொழுக்கத்தையும் தெரிவித்து உலகத்தில் (தன்னுடைய) பெருமையையும் யசஸையும் விளங்கச்செய்து க்ருதார்த்தனும் சுத்தனும் மனக்கவலையற்றவனும் ஸந்தோஷமுள்ளவனுமானேன். யுதிஷ்டிரர், "அரசரே! நான் ப்ரீதியுள்ளவனாகிறேன். உமக்கு மங்களம். பகைவரைவாட்டுபவரே! நீர் எனக்கு நண்பர். வேந்தரே! நாங்கள்எல்லோரும் (பகைவர்களால்) அறியப்படாதவர்களாக உம்மிடத்தில் ஸுகமாகவஸித்தோம்" என்றுகூறினார்.

தர்மாத்மாவும் கடுமையான வ்ரதமுடையவருமான யுதிஷ்டிரராஜர் (விராடனால்) பூஜிக்கப்பட்டும் விராடநகரத்தில் அபிஷேகஞ்செய்யப்பட்டும் ரத்னங்களால் பலவாறு அர்ச்சிக்கப்பட்டும் விளங்கினார். அவ்வாறுசொல்லுகின்ற யுதிஷ்டிரரை விராடராஜன் நன்றாகப்பார்த்து அங்கிருக்கும் உறவினருடன் மிகுந்தஸந்தோஷமடைந்து இரண்டுகைகளாலும் ஸ்நேஹத்தினால் கட்டிக்கொண்டு குருகுலத்தில் உதித்தவர்களான பாண்டவர்களுக்கு ஏராளமான தனத்தைக்கொடுத்தான். போரினின்று ஓடினகௌரவர்களோ மார்க்கத்தில் எல்லோரும் ஒன்றுசேர்ந்தார்கள். அரசரே! ஸமர்த்தர்களான ஆசார்யபுத்ரர், சகுனி, துர்யோதனராஜன், ஸூதபுத்ரனான கர்ணன் ஆகிய அனைவரும் அவ்விடத்தில் ஒருங்குசேர்ந்து ஹிதத்தையே நன்கு ஆலோசித்து, பிறகு, தூதனை (யுதிஷ்டிரரிடம்செல்லக்) கட்டளையிட்டார்கள். மிக்கஸந்தோஷமுள்ளவரான யுதிஷ்டிரரும் துர்யோதனனிடத்திலிருந்து வந்த தூதனைப்பார்த்தார். அந்தத் தூதனும், தர்மத்தினால் விளங்குகின்றவரும் உக்ரமான வீர்யமுடையவரும் பாண்டுபுத்ரருமான யுதிஷ்டிரரிடம்சென்று, "ஓ! குந்தீபுத்ரரே! தனஞ்சயரால் மறுபடியும் நீர் காட்டுக்குப்போகும்படி செய்யப்பட்டீர்; ப்ரதிஜ்ஞையைநிறைவேற்றும். ஏனெனில், இப்பொழுது, பதின்மூன்றாவது வர்ஷத்திலேயே பாண்டுவின்புத்ரரான கிரீடியானவர் பார்க்கப்பட்டார்" என்றுசொன்னான். பிறகு, தர்மநந்தனர் சிரித்து, "(தூத!) நீ விரைவாகச்சென்று அந்தத்துர்யோதனனிடத்தில், 'எங்களுக்கு இப்பொழுது பதின்மூன்றாவதுவர்ஷம் நிரம்பியது நிரம்பவில்லையென்பதைச் சந்தனுவின்குமாரரான பாட்டனார் சொல்லட்டும். (பதின்மூன்றாவது) ஸம்வத்ஸரத்தின் முடிவில்தான் தனஞ்சயன் போரினிடையில் காண்டீவத்தை நாணொலியிடும்படிசெய்தான். எங்களுடைய (ப்ரதிஜ்ஞாகாலமானது) நிறைவேறியதென்றும் நிறைவேறவில்லையென்றும் இதனுடைய உண்மையைப் பீஷ்மர் சொல்லட்டும். எனக்கு அவருடைய வாக்யமே ப்ரமாணம்' என்றுசொல்" என்று

கூறினர். அவரால் இவ்வாறுசொல்லப்பட்ட அந்தத்தூதன் திரும்பித் துர்யோதனனை அடைந்து அங்குநடந்ததைச்சொன்னன்.

அப்பொழுது, ராஜபுத்ரனை அந்தத்துர்யோதனன் தூதனுடன் சேர்ந்து பீஷ்மரோடும் கர்ணனோடும் க்ருபரோடும் த்ரோணரோடும் பூரிச்ரவஸோடும் ஆலோசனைசெய்தான். மஹாத்மாவானபீஷ்மர் அநேக ஸுஹ்ருத்துக்களுடன் இரவில் நன்குஆலோசித்துத் துர்யோதனனைப்பார்த்து, "(துர்யோதன!) ப்ரதிஜ்ஞையைநிறைவேற்றினபிறகே தனஞ்சயனுல் போரினிடையில் காண்டீவமானது நாணொலிசெய்யப்பட்டது. பாண்டுவின்புத்ரர்கள் தேவேந்த்ரனுடைய உலகமாயிருந்தாலும் ப்ரம்மாவினுடைய உலகமாயிருந்தாலும் அஸத்யத்தால் அடையவிரும்பமாட்டார்கள். உனக்கு நான் உண்மையும் நல்வழியைவிட்டுவிலகாததும் ஸ்வர்க்கத்தைக்கொடுக்கக்கூடியதும் கீர்த்தியை உண்டுபண்ணக்கூடியதும் பரலோகத்துக்குஹிதமுமான வார்த்தையை உரைக்கிறேன். நீ குந்திபுத்ரர்களோடு ஸந்தியைச் செய்துகொள். பாண்டவர்களோடுகூட உன்னுடையராஜ்யத்தை அனுபவி. அப்படியல்லாமல் நீ ராஜ்யத்தைவிரும்புவாயாகில், உறுதியுள்ள புத்தியுடன் போர்க்களத்தில் குந்திபுத்ரர்களோடு போர்புரி. மஹிமைதங்கியவர்களும் பலசாலிகளுமான பகைவர்களுடைய ராஜ்யமானது கபடத்தினுல் கடைசிவரையில் அனுபவிப்பதற்கு ஸாத்யப்படாது. பகைவர்களைஜயித்து அகண்டமான ராஜ்யத்தை அனுபவி; (அல்லது) நீ (அவர்களால்) கொல்லப்பட்டு இந்த்ரலோகத்தை அனுபவி" என்றுகூறினர்.

பிறகு, காந்தாரியின்புத்ரனை அந்தத்துர்யோதனராஜன் பாகீரதிபுத்ரரான பீஷ்மருடைய வார்த்தையைக்கேட்டு மாதாபிதாக்களுடைய முன்னிலையில் பீஷ்மரைப்பார்த்து, "(பிதாமஹரே!) அணுமாத்ரமும் பூமியை நான் (பாண்டவர்களுக்குக்) கொடேன். பாண்டுபுத்ரர்களையாவது நான்கொல்வேன்; அல்லது அவர்களாலாவது கொல்லப்பட்டு ஸ்வர்க்கலோகம் செல்வேன்," என்றுசொன்னன். அந்த த்ருதராஷ்ட்ரகுமாரர்கள் ப்ரதிஜ்ஞையைநிறைவேற்றியவனை தனஞ்சயனுடைய ப்ரதிஜ்ஞையைக்கேட்டு எல்லோரும் ஸுஹ்ருத்துக்களோடுசேர்ந்து நன்றாகஆலோசித்து ராஜாக்களுடன் தங்கள்க்ருஹங்களை அடைந்தார்கள்.

எழுபத்தெட்டாவது அத்யாயம்.

வைவாஹிகபர்வம். (தொடர்ச்சி.)

(பாண்டவர்கள் உபப்லாவ்யநகரம்சேர்ந்து க்ருஷ்ணன்முதலியோருக்குத் தூதனுப்பியதும், க்ருஷ்ணன் ஸுபத்ரை அபிமந்யு த்ருபதன் ப்ரதிவிந்த்யன்முதலியோர் உபப்லாவ்யநகரம் வந்ததும்.)

பிறகு, பதின்மூன்றுவது வர்ஷம் முடிந்தவுடன், ஐந்துபாண்டவர்களும் விராடனுடைய உபப்லாவ்யமென்கிற உத்தமமானபட்டணத்தில் வாஸஞ்செய்தார்கள். குந்திபுத்ரரான யுதிஷ்டிரரும் விராடராஜனும் எல்லாமித்ரர்களுக்கும் ஞாதிகளுக்கும் ஸம்பந்திகளுக்கும் தூதர்களை அனுப்பினார்கள். அப்பொழுது அந்தப்பாண்டவர்கள் அந்த நரத்தில் வாஸஞ்செய்துகொண்டு (தூதர்களை) ஆங்காங்கு அனுப்பினவுடன், சிறந்தகைகளுள்ளவரும் வனமாலையை அணிந்தவரும் பலராமருக்கு இளையவரும் சத்ருவீரர்களை ஸம்ஹரிப்பவருமான ஸ்ரீக்ருஷ்ணபகவான், அந்தஸமயத்தில் தூதர்களுடைய வாக்யத்தைக்கேட்டு, பிறகு, (தம்) அன்புக்குப்பாத்ரனும் மருகனும் ஸுபத்ரையினுடைய புத்ரனும் மிகஅபிமானிக்கப்பட்டவனுமான அபிமன்யுவை அழைத்துக்கொண்டு பலராமரோடு தலைவர்களான எல்லாயாதவர்களாலுஞ் சூழப்பெற்றுச் சங்கவாத்யங்கள் துந்துபிவாத்யங்கள் இவைகளுடைய கோஷங்களோடு விராடநகரத்தை அடைந்தார். பகைவரைவாட்டுகிறவர்களான ஹ்ருதிகனுடைய குமாரனான க்ருதவர்மா, ஸத்யகனுடையகுமாரனான யுயுதானன், அனாத்ருஷ்டி, அக்ரூரர், ஸாம்பன், நிசடன், சிறந்தகைகளுள்ள ப்ரத்யும்னன், மஹாபலசாலியான உல்முகன் ஆகிய இவர்களெல்லாரும் அபிமன்யுவைத் தாயாருடன் அழைத்துக்கொண்டு க்ருஷ்ணனோடு பாண்டவர்களைப் பார்க்கவந்தார்கள். ஒருவர்ஷம் (பாண்டவர்களை) விட்டு விலகிவஸித்தவர்களான இந்த்ரஸேனன்முதலானவர்கள்எல்லாரும் ஒன்றுசேர்ந்து நன்கு அலங்கரிக்கப்பட்ட ரதங்களோடு (உபப்லாவ்யநகரத்தை) அடைந்தார்கள். பதினாயிரம்யானைகளும் இருபதினாயிரம்குதிரைகளும் நிறைந்த லக்ஷம்தேர்களும் பதினாயிரம்கோடி காலாட்களும் மஹாபராக்ரமசாலிகளான வ்ருஷ்ணிகளும் அந்தகர்களும் நூற்றுக்கணக்கான போஜர்களும் வ்ருஷ்ணிகளுள்சிறந்தவரும் மஹாபலசாலியுமான வாஸுதேவரைப் பின்தொடர்ந்தார்கள். அப்பொழுது பாண்டுபுத்ரர்களெல்லாரும் அவ்வாறு ஸ்ரீவாஸுதேவர்வருகிறதைக்கேட்டு மத்

ஸ்யராஜனுடன்சேர்ந்து சங்கமுழக்கங்களுடனும் துந்துபிகோஷங்களுடனும் மங்களத்ரவ்யங்களுடனும் ஸ்ரீஜனார்த்தனரை எதிர்கொண்டார்கள். பாண்டவர்களனைவரும் மத்ஸ்யராஜனோடு ஸ்ரீஜனார்த்தனரை (க்கண்டு) மனக்களிப்புற்று ஆனந்தக்கண்ணீரால் நனைக்கப்பட்டவர்களாகி அவருடைய சரணங்களில் நமஸ்கரித்து, "ஓ! க்ருஷ்ண! தாசார்ஹரே! தேவரீருடைய அனுக்ரஹத்தினால் இந்த (ப்பன்னிரண்டு) வர்ஷங்களும் பதின்மூன்றாவதுவர்ஷமுழுவதும் ப்ரதிஜ்ஞைபண்ணினபடி வாஸஞ்செய்துவந்தோம். ஜகந்நாதரே! ஜனார்த்தனரே! தேவரீர் எங்களுக்கு நாதர். தேவதேவர்களுக்கெல்லாம் ப்ரபுவாயிருப்பவரே! நீர் எங்களைக் காபபாற்றும். சிறப்புற்றவரே! உம்மை நாங்கள் சரணமடைந்தோம்" என்றுகூறினார்கள்.

யாதவர்களனைவராலும்சூழப்பட்ட ஸ்ரீஜனார்த்தனர் (தம்மை) நமஸ்கரிக்கின்றவர்களும் விராடனுக்கு ஸஹாயர்களுமான அந்தப் பாண்டவர்களை விரைவாகக்கட்டிக்கொண்டு அதிகஸந்தோஷத்துடன் அவரவர்களுக்குத்தக்கபடி அவர்களைப்பூஜித்தார். வ்ருஷ்ணிவீரர்களும் அவர்களனைவரையும் அவரவர்களுக்குத்தக்கபடி மர்யாதைசெய்தார்கள். அவ்வாறே க்ருஷ்ணையும் தேவகீபுத்ரரைச் சரணங்களில் நமஸ்காரஞ்செய்தாள். தேவர்களுக்கீச்வரரான ஸ்ரீக்ருஷ்ணன் அழகியகூந்தல்நுனியையுடையவளான அவளை எடுத்துநிறுத்திக் கண்களைத்துடைத்து எல்லாயாதவர்களின் முன்னிலையிலும், "கல்யாணி! நீ வ்யஸனமடையாதே. நான் அர்ஜுனனோடுசேர்ந்து, அதிகஅஹங்காரமுள்ளவர்களான த்ருதராஷ்ட்ரகுமாரர்களைச் சீக்ரத்தில் கொன்று பூமியை யுதிஷ்டிரருக்குக் கொடுக்கப்போகிறேன். உன்னுடையமனத்திலுள்ளதாபமானது விலகட்டும். (இவ்விஷயத்தில்) உன்னிடம் அபிமன்யுவின்மீதும் அர்ஜுனன்மீதும் ருக்மிணீபுத்ரனை ப்ரத்யும்னன்மீதும் ஆணையிடுகிறேன். தோஷமற்றவளே! என்னுடைய இந்த வார்த்தையை ஸத்யமென்று நீ எண்ணு" என்றுசொன்னார். விருஷ்ணிகளுள்உத்தமரான ஸ்ரீக்ருஷ்ணபகவான் இவ்வாறுசொல்லி அவளை விட்டுவிட்டு, பிறகு, அன்புள்ளவராகி வ்ருஷ்ணிகளோடும் அந்தகர்களோடும் யுதிஷ்டிரரை(அடைந்து அவருடன்) வாஸஞ்செய்தார். பூபதிகளானகாசிராஜனும் சைப்யனும் இரண்டுஅக்ஷௌஹிணிகளுடன் (உபப்லாவ்யநகரத்துக்கு) வந்து யுதிஷ்டிரரை அடைந்தார்கள். மூன்றுஅக்ஷௌஹிணிகளுடன்கூட மஹாபலசாலியான பாஞ்சாலராஜனும் மஹாபலசாலிகளும் வீரர்களுமான த்ரௌபதீபுத்ரர்களும் (பகைவர்களால்) ஜயிக்கப்படாதவனான சிகண்டியும் (பகைவர்களால்)

ஜயிக்கமுடியாதவனும் எல்லாச்சஸ்த்ரதாரிகளுள்ளும் சிறப்புற்றவனுமான த்ருஷ்டத்யும்னனும் பாண்டவர்களுக்கு உதவிசெய்வதற்காக விரைவாக உபப்லாவ்யநகரத்தை அடைந்தார்கள். பிறகு, யுதிஷ்டிருடையஸேனையின்பக்கத்தில் லக்ஷக்கணக்கும் பத்துலக்ஷக்கணக்கும் பத்துக்கோடிக்கணக்குமான போர்வீரர்கள்நின்றார்கள். வர்ஷாகாலத்தில் சிறந்தப்ரவாஹங்கள் தனித்தனியாகவந்து ஸமுத்ரத்தை நிரம்பச்செய்வதுபோல விதிப்படி யாகம்செய்து நிரம்பதக்ஷிணையளித்தவர்களும் வேதாத்யயனம்செய்து அவப்ருதத்தைநிறைவேற்றினவர்களும் சூரர்களும் (யுத்தத்தில்) சரீரத்தைவிடத் துணிந்தவர்களுமான எல்லா அரசர்களும் யுதிஷ்டிருடையஸேனையை நிரப்பினார்கள்.[1] ஞானவான்களுள் சிறந்தபார்த்தன், வந்திருக்கின்ற அந்தராஜச்ரேஷ்டர்களைக்கண்டு அவரவர்களுக்குத்தக்கபடி விதிப்படி பூஜித்தான். ஸ்ரீக்ருஷ்ணன் மஹாத்மாக்களானபாண்டவர்களுக்கு அனேகஸ்த்ரீகளையும் பற்பலவிதவஸ்த்ரங்களையும் ரத்னங்களையும் வெகுமதியாகக்கொடுத்தார். அரசர்களும் ராஜகுமாரர்களும் ப்ரதிஜ்ஞாகாலமான (பதின்மூன்றுவர்ஷமும்) அவ்வாறு கழிந்தபிறகு, பாண்டவச்ரேஷ்டர்களால் தம்தமக்குத்தக்கபடி பூஜிக்கப்பெற்றார்கள்; ஸந்தோஷமுள்ள மனத்தையுடையவர்களானார்கள்; அப்பொழுது காணிக்கையையும் செலுத்தினார்கள். அரசரே! மன்னர்களோடும் வ்ருஷ்ணிகளோடும் எல்லோரும்ஒன்றுசேர்ந்திருக்கையில் குருகுலத்தில்பிறந்த அபிமன்யுவுக்கும் மத்ஸ்யராஜகுமாரியான உத்தரைக்கும் சாஸ்த்ரமுறைப்படி விவாஹமானதுநிறைவேறியது. பிறகு, அப்பொழுது அபிமன்யுவினுடைய விவாஹகாலத்தில் மத்ஸ்யராஜனுடைய அரண்மனையில் சங்கங்களும் ம்ருதங்கங்களும் கோமுகங்களும் டிண்டிமங்களும் முழங்கின. (பரிசாரகர்கள்) பரிசுத்தமான பலவகை ம்ருகங்களை நூற்றுக்கணக்காகக் கொன்றார்கள்; அவ்வாறே மிகுதியான பக்ஷ்யங்களையும் அன்னங்களையும் போஜ்யங்களையும் பானங்களையும் (அதிதிகளைப்) புஜிக்கும்படி செய்தார்கள். பாடுகிறவர்களும் பழையகதைகளைச்சொல்லுகிற ஸ்வபாவமுடையவர்களும் நட்டுவர்களும் அவ்வாறே வைதாளிகர்களும் மாகதர்களும் பௌராணிகர்களும் ஸ்தோத்ரம்செய்துகொண்டு அந்தப்பாண்டவர்களை அடைந்தார்கள். அந்த அபிமன்யுவினுடைய மங்களகாமான விவாஹோத்ஸவத்தில் த்ரௌபதியினுடைய அந்தப்புரத்திலும் விராடனுடைய அரண்மனையிலுமுள்ள பிராயமுதிர்ந்தஸ்த்ரீகளும் யுவதிகளானஸ்த்ரீகளும் மாத்ஸ்யர்களுடையஸ்த்ரீகளும் ஸுதேஷ்

[1] ஸபாபர்வம் 11 - ம் பக்கம் 3 - ம் குறிப்பிற்காண்க.

ணையமுன்னிட்டுக்கொண்டு (விவாஹமண்டபத்திற்கு) வந்தார்கள். அந்தஸ்த்ரீகள் அழகிய பருத்தஅங்கங்களுள்ளவர்களும் மெருகிடப் பட்ட ரத்னகுண்டலங்களணிந்தவர்களும் சிறந்தகாந்தியுள்ளவர்களும் சிறந்தரூபமுடையவர்களும் நன்கு அலங்கரிக்கப்பட்டவர்களுமாயிருந்தார்கள். எல்லாஸ்த்ரீகளுள்ளும் க்ருஷ்ணையானவள் ரூபத்தாலும் தேஹத்தாலும் சிறந்து விளங்கினாள். (அந்தஸ்த்ரீகளனைவரும்) புகழதக்கவளும் அலங்கரிக்கப்பட்டவளும் ராஜபுத்ரியும் மஹேந்த்ரனுடையபுத்ரிபோன்றவளுமான உத்தரையைமுன்னிட்டுச் சூழ்ந்துகொண்டு (விவாஹமண்டபத்தில்) நின்றார்கள். ஸேனாபதியான விராடன் ஜலம்நிறைந்த பொற்குண்டிகையையெடுத்து, கருநெய்தல் போன்ற கண்ணையுடையவளான புத்ரியை அர்ஜுனனுடையகையில் மருமகளாகவேற்றுக்கொள்வதற்காக விரைவாகத் தாரைவார்த்தான். சிறந்தமனமுள்ள குந்தீபுத்ரன் (தன்)புத்ரனுக்காக அந்தப்பெண்ணைப் பெற்றுக்கொண்டான். தோஷமற்றஅங்கங்களுள்ளவனும் ஸுபத்ரையின்குமாரனுமான அபிமன்யுவும் அப்பொழுது இந்த்ரனுடைய ரூபத்தைத்தரித்து விராடனுடையபுத்ரியான உத்தரையைப் பாணிக்ரஹணம்செய்துகொண்டு அந்தவிவாஹமண்டபத்தில்நின்றான். குந்தீபுத்ரரானயுதிஷ்டிரர் அந்தஉத்தரையை மருமகளாகஅங்கீகரித்தார். விதிப்படி யாகம்செய்தவர்களும் ஏராளமாக (ப்ராம்மணர்களுக்குத்) தக்ஷிணைகொடுத்தவர்களுமான த்ருபதன், விராடன், மஹாபலசாலியான சிகண்டி, யுயுதானன், சைபயன், த்ருஷ்டத்யும்னன், ஸாத்யகி இந்த ஏழு அக்ஷௌஹிணீபாலர்களும் பாண்டுபுத்ரரான யுதிஷ்டிரரைச் சூழ்ந்துகொண்டு அப்பொழுது விவாஹத்தைநடத்தினார்கள். ஸேனையும் அந்தவிவாஹமண்டபத்தில் (ஸந்நத்தமாக) இருக்கும்ஸமயத்தில் தார்மிகர்களுள் உத்தமனானமத்ஸ்யராஜன் ப்ரீதியுள்ளவனாகி(த் தன்)பெண்ணைப்பிடித்து அபிமன்யுவுக்குக் கொடுத்தான். பார்த்தன், உத்தரையைப்பெற்றுக்கொண்டு ஜனார்த்தனரைமுன்னிட்டு மஹாத்மாவான ஸுபத்ராபுத்ரனுக்கு விவாஹத்தைச்செய்வித்தான். பிறகு, எல்லாச்சிறப்புகளுடனும் மிக்கவைபவத்துடனும்கூடிய விவாஹமானது வ்ருத்தியடைந்தது. அப்பொழுது உம்முடையபிதாவுக்குப்பிதாவும் ஸுபத்ரையினுடையபுத்ரனுமான அபிமன்யுவுக்குநடந்தவிவாஹகார்யமானது, ஆச்சர்யமாகஇருந்தது. தௌம்யர், சிஷ்யர்களால்சூழப்பெற்றுச் சாஸ்த்ரமுறைப்படி அக்னியில் ஹோமம் செய்தார். ஸுபத்ராபுத்ரன் அக்னியைப்ரதக்ஷிணம்செய்து (உத்தரையைப்) பாணிக்ரஹணம்செய்தான். பிறகு, மாத்ஸ்யர்களுக்குப் பதி

யான விராடராஜன் ஸந்தோஷமடைந்து [1]பார்த்தனுடையபுத்ரனை அந்தஅபிமன்யுவின்பொருட்டு அப்பொழுது ஏராளமான தனத்தையும் காற்றுப்போன்ற வேகமுள்ள லக்ஷம்குதிரைகளையும் முக்யமான இருநூறுயானைகளையும் பலவிதமான பொருள்களையும் ஸந்தோஷத்துடன் சிறந்தவரிசையாகக் கொடுத்தான். மத்ஸ்யராஜன் குந்திபுத்ரர்களின்பொருட்டுக் காணிக்கையையும் கொடுத்தான். குந்திபுத்ரர் க்ருஷ்ணனோடு ஏராளமான (பொருள்களைப்) பெற்றுக்கொண்டார். தர்மபுத்ரரான அவர், அப்பொழுது விவாஹமானவுடன் ஸ்ரீக்ருஷ்ணன்கொண்டுவந்த தனத்தையும் ஆயிரம்பசுக்களையும் வஸ்த்ரங்களையும் பற்பலவிதமான ரத்னங்களையும் எல்லாப்பூஷணங்களையும் வாஹனங்களையும் படுக்கைகளையும் ப்ராம்மணர்களுக்குக் கொடுத்தார். அவர் நகரவாஸிகளான ஜனங்களை ப்ரீதியடையக்கூடிய சிறந்தபொருள்களால் த்ருப்தியடையச்செய்தார். ஓ! பரதச்ரேஷ்டரே! (எல்லா) மஹோத்ஸவங்களுக்கும் உபமானமாயிருக்கின்ற அந்தமத்ஸ்யராஜனுடைய நகரமானது ஸந்தோஷமுள்ளவர்களும் புஷ்டியுள்ளவர்களுமான ஜனங்களால் நிறைந்துவிளங்கியது. நிறைந்த செல்வமுள்ள விராடராஜன், தன்புத்ரியான அந்த உத்தரையை ஸுபத்ராபுத்ரனை அபிமன்யுவுக்குக்கொடுத்து, புரோஹிதர்களோடும் மந்த்ரிகளோடும் பட்டணத்துஜனங்களோடும் தேசவாஸிகளான ஜனங்களுடனும், அப்பொழுது பரமானந்தத்தை அனுபவித்தான்" என்றுகூறினர்.

ஜனமேஜயர், "(வைசம்பாயனரே!) விவாஹம்நிறைவேறியவுடன் ஸந்தோஷமுள்ள மனத்தையுடையவரான யுதிஷ்டிரர் என்ன சொன்னரென்பதையும் பார்த்தர்கள் அதற்குமேல் என்னசெய்தார்களென்பதையும் முழுதும் (எனக்கு) இப்பொழுது உரைப்பீராக" என்றுவினவினர்.

வைவாஹிகபர்வம் முற்றிற்று.

விராடபர்வம் முற்றிற்று.

---

[1] மூலத்தில், 'பார்த்தாய' என்றிருக்கிறது.